௳

கணபதி துணை

திருச்சிற்றம்பலம்.

# சிறப்புப்பாயிரம்.

---

இப்புராணிகர் அரங்கேற்றுங் காலையிலுடனிருந்த மிதிலைப்பட்டி

## அழகியசிற்றம்பலக்கவிராயரவர்கள்

இயற்றியது.

கும்பமுனி மருந்தவனும் புலத்தியனும் பலவுருவாக்
கொளுங்கோ ளோச
நம்பனுயர் மான்மியத்தைக் கவிப்புலவர் செவிக்கமுதா
நல்க வென்ன
வெம்பந்த மகற்றருணைச் சாமிநா தவன்மொழிய
வெழிற்றென் கூடற்
சம்பந்த சாமிகளா கியமேலா யுதகுரவன்
சாற்றி னானே

---

திருவண்ணாமலையாதீனம் தேவஸ்தானமாபீசின் லேட் சிரஸ்தேதார்

## அ. சாமிநாதபிள்ளையவர்களியற்றியது.

கார்முகி றவழுங் கடிகமழ் பூம்பொழிற்
சூர்முக முசுக்கலைத் துழனிக் கொதுங்கி
யயலுறும் வயற்குள முகழிவாழ் [illegible]
வியப்புறச் சிந்தை வெருவி [illegible]
யம்முசுக் கலைக்கண மம்மருற் றயர
வான்முக டணவுங் கான்முதிர் தெங்கின்
மூப்புடைக் கனிகளைத் தூப்புடைத் துவரை
யெண்ணில் சீர்த்திக் கண்ண மூர்த்திமுன்
கோக்குலம் புரப்பான் குடங்கையிற் றூங்குகோ

# சிறப்புப்பாயிரம்.

வர்த்தன மென்னுஞ் சத்திர மீமிசை
யுடலக் கண்ண னுடன்று முன் பொழிந்த
கன்மழை யேய்ப்பப் பன்னுறு மிரவி
வயப்பகைக் கரணு மாவினங் குருகா
ருடைவேன் மீமிசை யிடையறா ததிர்க்குந்
திருவ நீண்ட திருக்ககோ ளக்குடி
மின்னிடை யெழுவர்வாழ் கன்னி மால்வரை
வானொடு வந்து வழுத்துநா னொடென்
றுவமையற் றிலகுஞ் சிவதன்ம புரத்தி
லாரணம் பரவு வாரண முகத்தனுந்
தாரணி தழுவிய நாரணக் கடவுளுங்
குருகுவெற் பெறிந்த முருக மூர்த்தியுந்
தந்திக ரில்லாக் கன்னிய ரெழுவரு
மிதஞ்சலி யாத பதஞ்சலி முனிவனு
மின்றமிழ்க் குரவனுந் தென்றிசை முனிவனுஞ்
சலத்தியல் கடந்த புலத்திய நாமனு
மலக்க ணொழிக்கு மிலக்குமி தேவியு
நீடிருஞ் சீர்த்திக் ககோள விருடியு
நித்திய முணர்ந்த சத்யவா சகனுங்
கான்முகக் கமல நான்முகத் தேவு
நீணிலம் புகழும் வாணியுஞ் சசியுந்
செயிரவ மகற்றும் வயிரவத் தோன்றலும்
ஏழு முனிவர ரிந்திர னிருசுடர்
மலிபுகழ் படைத்த திலீப வேந்தனு
மன்பொடு மிறைஞ்சி யனாவின வெய்தி
யின்பமார்ந் திருக்க வின்னருள் புரிந்த
பொய்யார் மொழியார் புன்மனத் தறுகா
மெய்யார் மொழிச்சிவன் மேவிய நிலமும்
பொன்மலி சடைச்சிவ தன்ம மூர்த்தியா
ரிற்றிருந் தருளும் விமலவந் தரமுங்
ககோள முனிவர் கதிபெற நல்குங்
ககோளேச் சுரர்வாழ் கயிலையா முச்சியு

# சிறப்புப்பாயிரம்.

பிம்மூன் றிடத்து மினிதிருந் தருளு
மேன்மை விளம்பு மான்மிய மாய
வாரியு மொழியைச் சீரிய தமிழி
லியற்றுக வெனவவ் விருந்தலத் தமர்ந்த
மோனமெய்த் தவருந் தானிகர் பலருங்
கருவண் ணாமலை கலந்து தவாதருள்
திருவண் ணாமலைத் தெய்வ சிகாமணி
மாமர பினராய் வருந்தவக் குழாத்திற்
றன்னிகர் சபாபதித் தனிப்பெயர் முனிவனு
முலகுய வுரைத்த வுறுதிக் கட்டுரை
கடைப்பிடித் தம்ம மடைத்தலைச் சங்கந்
தரளஞ் சொரியுந் தண்புன லுடுத்த
வாட லமைந்த கூடலம் பதியி
னந்திரு ஞானசம் பந்த மூர்த்தி
தெய்வவா தீனத் திருந்துபா லாழியின்
மான்முதற் பல்லோர் வருந்தா துவந்த
விற்பன மளிக்குங் கற்பக மனையான்
வழுக்கில் சீர்த்தி யொழுக்க நற்குண
மாண்கலை ஞைகத் தாங்கிய மேலோன்
றன்னடி யடைந்தார் தாமெனத் திகழ
விரசற நோக்குந் தேசிக மூர்த்தி
காலா யுதக்கைக் கடவுளை யிறைஞ்சும்
வேலா யுதப்பெயர் மேவிய குரவன்
சொன்னலங் கெழுமிப் பொருணலம் பொதிந்தீ
ரைந்தெனு மழகு மமைந்தாறு மரீஇ
மற்றத் தொகையாங் குற்றமு மொரீஇ
யிம்பரிற் புலவரும் பம்பி மாந்துபு
இருமைப் பிணியு மொருவி யின்புறச்
சாலி வாகன சகாத்த மாயிரத்
தெழுநூற்று நாற்பத் தேழி னுவன்றன
னன்னமான் மியத்தைத் துன்னிய சிறப்பாற்
திருவண் ணாமலையெனச் செப்புமா தீனத்

# சிறப்புப்பாயிரம்.

தொருவருஞ் சிறப்பி னுயர்கொடுங் குன்றம்
விருப்பிற் பொலிதரு திருப்புத் தூரு
மயின்மலை கரத்தார் மயின்மலை நகரு
நாதமார் தருசதுர் வேதமங் கலமுங்
கானாட்சி கொள்பொழிற் றேனாட்சி நகரும்
பொன்னிலம் புகழுங் கன்னிமா மலையு
மாயமூ விரண்டு தூயநற் றலத்தி
விறுதியிற் புகன்ற மறுவில் சீர்த்தித்
திருக்கோ ளக்குடித் தெய்வ வைப்பின்
விசாரணைத் தலைமை மேவிய சிறப்பின
னறமெவற் றினுமுயர் துறவற நிலையோ
டென்னதா னத்தினு மேற்றமீ தென்றே
யன்ன தானமிக் கன்புட னளிப்போன்
முதிர்விவ காரமுயற்சியின் பகுப்பிற்
சதுரனென் றெவருஞ் சாற்று விரகன்
நவவடி வகன்ற சிவவடி வைத்தன்
சிந்தையி லிருத்தி வந்தனை புரிவோன்
மங்கலில் சீர்த்திச் சங்கர லிங்க
வழுவறு முனிவன் மகிழ்ந்தே
யெழுதா வெழுத்தி னியைவித் தனனே.

---

இராமநாதபுரம் சிவகங்கை யென்கின்ற உபயசமஸ்தான
வித்துவானும், வேம்பத்தூர் சங்கவித்துவான்களிலொருவருமாகிய
சிலேடைப்புலியென்னும்
பிச்சுவையரவர்களியற்றியது.

பொற்றிருக் ககோள புரேசர்மான் மியத்தை
யற்றிருக் கண்ட நகங்களிப் பேற
வோங்கிய வேலா யுதமெனு முயர் பெயர்
தாங்கிய தேசிகன் றாரணி புகழக்

கணப்பா லுதரங் கனிவா யுமைதருங்
கிணப்பா லருந்திக் கிளர்தமிழ் மொழியா
லாவலாய்ப் பாடி யரும்பே றடைந்தனன்
பாவலர் சிரகம் பனஞ்செய மன்றே

## வெண்பா.

கற்பகமே ராஞ்சங் கரலிங்க மாமுனிவன்
பொற்புகழ்சேர் கோளகிரி மான்மியத்தை—விற்பனர்கள்
பாராட்ட வச்சிற் பதிப்பித்தான் சேடனுங்கண்
டோராட்டங் கொள்ள வுளம்.

---

இது
இவ்வாசிரியார் மாணாக்கருளொருவரும் திருவண்ணாமலையாதீனத்து
வித்துவானுமாகிய

## வீரபத்திரக்கவிஞரியற்றியது.

திருமருவு கோளகிரிக் கடவுண்மான் மியந்தமிழிற்
றெரியச் செய்தான்
உருமருவு தெய்வசிகா மணிமரபிற் சபாபதிப்பே
ருரவோன் வேண்டத்
தருமருவு தென்கூடற் றிருஞான சம்பந்த
சாமி ஞானப்
பெருமரபில் வருவேலா யுததேசி கோத்தமனும்
பெரியோன் மன்றே.

---

இது
செவ்வூரில் நாகூர்

## சிற்றம்பலக்கவிராயரவர்களியற்றியது.

கற்றுணர்ந்தா வலர்செவிக்கின் னமுதெனச்சென் மக்கடற்கோர்
கலனு மென்ன

## சிறப்புப்பாயிரம்.

ற்றிருக்கோ ளேசர்மான் மியமகனை யருந்தமிழா
னவின்றான் மேனாட்
சொற்றமிழ்ச் சுருதிகளா கமங்களின்றன் விரித்துரைப்பான்
றோன்றிப் போது
மற்றுதென்கூ டலின்வேலா யுதஞான சம்பந்த
மூர்த்தி தாமே.

---

இது

### காரைச்சூரான்பட்டிக் கவிராயரியற்றியது.

அந்தரங்க கயிலாய மெனுங்கன்னி மலைப்பரம
னரிய காதை
செந்தமிழாற் றெரித்திடுகென் றருணகிரித் தெய்வசிகா
மணிப்பே ராசான்
முந்துமர பினிற்சபா பதிமுனிவன் வேண்டவுங்கன்
மொழிந்தா னற்சம்
பந்ததே சிகன்மரபின் வந்தவே லாயுதப்பேர்
படைத்துள் ளோனே.

---

### மதுரை விவேகபாநுப் பத்திராதிபர்

### மு. ரா. கந்தசாமிக்கவிராயரியற்றியது.

தழையிருக்குங் கரச்சமணர் கழுவிருக்கத் தமிழ்வேதந்
தன்னைச் சங்கக்
குழையிருக்குந் திருச்செவியிற் குடியிருக்கும் படிகூறிக்
கொடியே னெஞ்சி
னுழையிருக்குந் திருஞான சம்பந்த ராதீனத்
துதித்த மேலோன்
கழையிருக்கு மிரதமொழி யுறுவேலா யுதகுரவன்
கருணை யாளன். (க)

அருண்மலிந்த திருவாக்கூற் ஸ்ரீகோளபுரி மான்மியத்தை
யணிமீக் கொண்ட
பொருண்மலிந்த தமிழ்ப்பாவிற் புகன்றுவைத்தா னதையெடுத்துப்
புதுக்கி யுள்ளத்
திருண்மலிந்த வென்போல்வார் களுமுணர்ந்து கொள்ளவச்சி
லேற்றி யிந்தான்
தெருண்மலிந்த கல்வியறி வொழுக்கமுதற் பன்னலமுஞ்
செழிப்பப் பெற்றோன் (௨)

மருக்கோலும் பொழிலருணை யாதீன முனிவர்சிகா
மணியாய் வந்து
திருக்கோள புரத்தேவத் தானவிசா ரணைத்தலைமை
செழிப்பப் பெற்றோன்
இருக்கோல மிட்டறியாப் பரமனைத்தன் னுளக்குகையி
லிருத்தி வாழ்வோன்
தருக்கோடுங் கரதலத்துச் சங்கரலிங் கப்பெயர்மா
தவன்றான் மன்னோ. (௩)


சிறப்புப்பாயிரம் முற்றும்.

# சருக்க அட்டவணை


| | சருக்கம். | பக்கம். |
|---|---|---|
| 1. | பாயிரம் | [illegible] |
| 2. | கடவுள் வாழ்த்து | 2 |
| 3. | அவையடக்கம் | 6 |
| 4. | திருநாட்டுச்சிறப்பு | 8 |
| 5. | திருநகரச்சிறப்பு | 11 |
| 6. | நைமிசாரணியச்சருக்கம் | 21 |
| 7. | திருக்கைலாயச் சிறப்புச்சருக்கம் | 23 |
| 8. | புராணவரலாற்றுச்சருக்கம் | 26 |
| 9. | தலவிசேடச்சருக்கம் | 37 |
| 10. | தீர்த்தவிசேடச்சருக்கம் | 43 |
| 11. | மூர்த்திவிசேடச்சருக்கம் | 47 |
| 12. | கணபதிபூசைசெய்சருக்கம் | 53 |
| 13. | மாதவன் சாபந்தீர்த்த சருக்கம். | 65 |
| 14. | முருகன்றவம்புரி சருக்கம். | 70 |
| 15. | சத்தகன்னியர் மதுவுருவான சருககம். | 75 |
| 16. | பதஞ்சலி முனிவரருள்பெற்ற சருக்கம். | 80 |
| 17. | அகத்தியர் புலத்தியர் பலவுருவான சருக்கம். | 83 |
| 18. | இலக்குமிதவம்புரி சருக்கம் | 87 |
| 19. | ககோளவிருடி முத்தியடைந்த சருக்கம். | 90 |
| 20. | சத்தியவாசக முனிவர் சாயுச்சியம்பெற்ற சருக்கம் | 93 |
| 21. | பிரமனுக்குச் சிவதருமமுபதேசித்த சருக்கம். | 96 |
| 22. | வாணியும்சசியும் வரம்பெறு சருக்கம். | 102 |
| 23. | வயிரவருக்குப் பிரமகத்திதீர்த்த சருக்கம். | 107 |
| 24. | எழுமுனிவரும் மகவானும் இருசுடரும் வரம்பெற்ற சருக்கம். | 110 |
| 25. | திலீபன் சேய்பெறு சருக்கம். | 113 |

உ

சிவமயம்



திருச்சிற்றம்பலம்.

# திருக்கோள்புரப்புராணம்

## பாயிரம்.

### விநாயகர் காப்பு.

கங்கைதிங்க டரித்தலினா லங்குசபா சங்கை காணுதலாற் கோ
டொன்று கைதாங்கு தலினாற், செங்குமுத நால்வாய்முன் றோன்றலி
னாற் சுரும்பார் செங்கரும்பைங் கணைதரிக்குஞ் செய்கையதனானுஞ்,
சங்கரன்சங் கரிமுகுந்தன் சயமடுமதனிவரோர் தனுவாகி வையமதிற்
சார்ந்தவுர்கொ லெனாப்பூ, வெங்கணுமியா வருந்துதிக்கத் திருக்கோ
ளக்குடிவா ழேகதந்தச் சிந்துரத்தி னிருசரண்போற் றுதுமே. (க)

## வேறு.
## வீரகத்தீர்த்த விநாயகர்.

மஞ்சனைய வுருவாகி வசுதேவர்க்கோர் மகவாகி யாயர்குல மனை யின் மேவிப், பஞ்சவர்க்காத் தூதேகிப் பார்த்தன் றேர்க்குப் பாகனெனப் பரிதூண்டும் பகவற் கந்நாள், வஞ்சனையாற் றனதுமன வன்மந் தோன்ற வகைதொடங்கி யிகல்புரிந்த மாமனான, கஞ்சனைக்கொன் றிடுவீர கத்தி தீர்த்த கணபதிதாட் டாமரைநங் கருத்துள் வைப்பாம்.

## வேறு.
## வலம்புரி விநாயகர்.

சிலைமூர்த்தி வெள்ளிசெம்பாற் செயுமூர்த்தி மணிமூர்த்தி செம் பொன் மூர்த்தி, கலைமூர்த்தி காண்பதற்கும் விக்கினங்காட் டாமுனிற் கும் கருணை மூர்த்தி, மலைமூர்த்தி யாழியைக்கொண் டவன்விகடக் கூத்தினைக்கண் டந்நா ளீந்த, மலைமூர்த்தி யானவலம் புரிவிநா யகனைநித மனத்துள் வைப்பாம். (௩)

## வாழ்த்து வேறு.

திங்கண்மும் மாரி பெய்க செழுமறை முனிவர் வாழ்க
வெங்கணுஞ் சைவம் பல்க வீசன்வெண் டிருநீ றோங்க
வங்கண்மா ஞாலங் காக்கு மரசர்செங் கோலு நீட
பொங்குபே ரறங்கண் மல்க பூதலம் பொலிக மாதோ. (௪)

## பயன் வேறு.

சீதளசந் திரமவுலித் திருக்கோளேச் சுரன்சரிதை செப்புகின் றோ, ரோதுகின்றோர் படிக்கின்றோ ருரைபகர்வோர் கேட்கின்றோ ருவக்கு மேலோர், பூதலமெல் லாம்புரக்கும் புரவலராய்ப் பல்லாண்டு புவிமேல் வாழ்ந்து, சூதளவோ டியகருங்கட் கவுரிபங்கன் றிருக்கயிலை காணி கொள்வார். (௫)

# கடவுள்வாழ்த்து.

## சிவதருமபுரேசர்.

நித்தியமாய் நிரர்லம்ப சச்சிதா னந்தநிரா மயசொ ரூப
வத்துவித வகண்டிதபூ ரணசுகோ தயவடிவர் யமர்ந்த சோதி

சத்தியமா யாதியந்த மருவாம லாமலக மரத்தின் கீழான் [ள்வாம். ()
மூதந்திர முளைத்தெழுந்த சிவக்கொழுந்தி னடிக்கமல முடிமேற்கொ

## இதுவுமது

அரத்தானை வாகியசக் கரத்தானை மேருவிலுக் கணியாக் கொண்ட, சரத்தானைத் திரிபுரமற் சரத்தானை யெனக்கபயந் தந்து காக்குங், கரத்தானை யைந்தெனுமக் கரத்தானைக் கோளகிரி யான கன்னி, புரத்தானைச் சிவதரும புரத்தானை யனுதினமும் போற்றல் செய்வாம். (எ)

## சிவகாமவல்லி

உன்னிமலை வேனெனவக் கயிலையினை யரக்கனெடுத் துலுக்குஞான்று, வன்னிமலை யாயிருந்தார் தமைத்தழுவிப் பயந்தசெயன் முதித்தாள் போல, வந்திமலை யானபரா பரையிராக் கதர்தீண்டற் கரிதா மேன்மைக், கன்னிமலை மீதிருக்குங் கவுரிசிவ காமியைநங் கருத்துள் வைப்பாம். (அ)

## மலைக்கொழுந்தீசர்.

தருக்கொள்வா னுலகாள்வோர் தண்ணந்தா மரைவாழ்வோர் தண்டுழாயோர், மருக்கொள்பூங் கடுக்கையணி கோடீர ரெண்ணிறந்த வானோர் போற்ற, வருக்கரோர் கோடியெனக் கன்னிவரை மீதுதித்தா வுடைத்தாய்க் கன்பாந், திருக்கோளக் குடிவாழுஞ் சிவக்கொழுந்தா மலைக்கொழுந்தைச் சிந்திப்பாமால். (௯)

## ஆவுடைநாயகி.

ஆவுடைநா யகிகள்பலர் கடவுளர்நா யகிகள்பலர் கனிந்தசெஞ்சொ, லாவுடைநா யகிகள்பலர் நளினமலர் மாதர்பலர் நயந்து போற்றுஞ், சேவுடைநா யகிகள்பலர் பணிதிருக் கோளேசரிடஞ் சேர்ந்து வாழு, மாவுடைநா யகித்தாய்பொன் னடிக்கமல முடிக்கணியா வணிகுவோமால். (௰)

## சத்தியவாகீசுரர்.

அழியானை யன்பர்தமக் களியானை மதியலரி யங்கி யென்னும், விழியானைக் கயவர்தம்பால் விழியானைச் செழுமுருகு விரியும் பூவி,

தழியானைச் சிறந்ததிருத் தளியானைக்கன்னிவரை தனிற்பொய்யாத, மொழியானை யுமைபாக மொழியானைப் பணிந்தன்மை முதிர்விப், பாமால். (௰௩)

## மரகதவல்லி.

ஆமேவு திரைக்கடல்சூழகிலமெலா மரைக்கணத்தி னுக்குவோ ன்வே, தாமேவு திருவுந்தித் தாமரைத்தண் டுளவணியுஞ் சங்க பூ ணிச், சேமேவு சிவதரும புரப்பொய்யா மொழிநாதன் றேவி யாகிப், பூமேவு மவர்க் கரசாய்ப் பூமேவு பசுங்கொடியைப் போற்றல் செய் வாம். (கஉ)

## சபாநாயகர்.

அம்புரா சிகளேழு முழுந்தமிழ்ந்து நீராயா சமிக்குஞ் செங்கைக், கும்பமா முனிமுதனற் பானெண்ணு யிரமுனிவர் குழாங்கொண் டா டக், கம்பமா கரியுரித்த கண்ணுதலார் கன்னிவரைக் கயிலைமீதிற், செம்பொன்மா மணிமன்று ணடம்புரிசிற் சபைநாதன் றிருத்தாள் போற்றி. (கங)

வேறு.

## தக்ஷிணாமூர்த்தி.

மாலி னேன்மல ரோன்மைந்தர் நால்வர்க்குஞ்
சீல மாமத் துவிதந் தெளித்திடப்
பாலி னெய்யென வெங்கும் பரந்துங்கல்
லாலின் மேவு மடிகளை வாழ்த்துவாம். (கச)

வேறு.

## வயிரவர்.

முன்னிவரைப் பரமெனவெண் ணுமுகுந்த னுடம்பின்றோன் முழுதும் வாங்கிப், பின்னிவரை யெண்ணாத பிரமனொரு சிரங்கொய்து பிழைக டீர்த்தென், சென்னிவரை தீமையெழுத் தழித்துமலக் கோணீக்கித் திருத்தி யாண்ட, கன்னிவரை வயிரவரைக் கனிவினொ டும் பணிவதுநங் கடனதாமால். (கரு)

வேறு.

## வலம்புரிவிநாயகர்.

சிலம்பின் மேன்மைத் திருக்ககோ ளேசூர்பொற்
கலம்பெய் பூண்முலைக் கன்னிப் பிடிதழீஇ

நலம்பு னைந்தத கூற்றறர் வந்தருள்
வலம்புரிக்களிற் றண்ணலை வாழ்த்துவாம். (௧௬)

## முருகக்கடவுள்.

அலையின் மாவுரு வானவெஞ் சூருட
லிலைகொள் வேலி னிருபிள வாக்கியெ
தலையி னூறர்க்குச் சற்குரு வாய்க்கன்னி
மலையின் வாழ்சண்மு கேசனை வாழ்த்துவாம். (௧௭)

## கலைமகள்.

பூம டந்தையும் பொன்மலர்க் கற்பகக்
காம டந்தையுங் காமுறு கற்பினெண்
கோம டந்தை வெண் கோகன கத்துவாழ்
நாம டந்தையை நாமற வாமரோ. (௧௮)

## திருநந்திதேவர்.

அந்தி வண்ண னருளிய வாகமஞ்
சிந்தை செய்து தெளிந்தெம்ம னோர்கடம்
புந்தி தேறப் புகட்டிக் கயிலைவாழ்
நந்தி தேவனை நாம்பணி வாமரோ. (௧௯)

## வேறு. பதஞ்சலிமுனிவர்.

சதஞ்சலி யாததிச் சடல மென்றெணுங்
கதஞ்சலித் திடவருள் கலந்து கண்டகண்
ணிதஞ்சலி யாமலே நிருத்தங் கண்டநம்
பதஞ்சலி யாமுனி பதத்தைப் போற்றுவாம். (௨௰)

## வேறு. திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

கந்த மூர்த்திசீ காழிப் பதியினில்
வந்த மூர்த்தியம் மாறன்வெப் போடுகூன்
சிந்து மூர்த்தி திருவால வாயிற்சம்
பந்த மூர்த்தி பதம்பணி வாமரோ. (௨௧)

# திருக்கோளபுரப்புராணம்.

## திருநாவுக்கரசு நாயனார்.

தப்பு ளாரமண் சார்த்துங் கருங்கலே
தெப்ப மாகத் திருப்பதி கத்தமிழ்
மூடபு ரஞ்செற்ற மூர்த்தியைப் பாடிய
வப்பர் பாததனுக கன்புவைப பாமரோ. (௨௨)

## சுந்தரமூர்த்திநாயனார்.

அண்ட வாணருக் காக விடமுண்ட
கண்ட நாதரைத தூதனுப பிக்கரா
வுண்ட பாலற் குயிரினை நலகிய
தொண்ட ரைக்கண்டு தோத்திரிப பாமரோ. (௨௩)

## திருவாதவூரடிகள்.

துண்ட வெண்பிறை சூடியைக கண்டுகற்
கண்டெ னச்சர்க் கரையெனத் தேனென
வண்ட மிழ்த்திரு வாசக மோதிய
தொண்டர் நாதன் றுணையடி போற்றுவாம். (௨௪)

## சண்டேசுர நாயனார்.

அன்ன மாடை யணிதொடை யன்பர்க
டன்னை நோக்கிச் சமைகதவேண் டாவென
முன்ன மேமுதல் வனறரப பெற்றருண்
மன்னு சண்டே சுரனடி வாழ்த்துவாம. (௨௫)

கடவுள்வாழ்த்து முற்றிற்று.

---

# அவையடக்கம்.

---

ஆதியி லீசன் வெள்ளி யடுக்கலி னமரீ ரோடுக்
தீதிலா முனிவர் கேட்பச் செப்புபன் னெண்பு ராணைத்
தோதிய காந்தத் தாறு சங்கிதை யுண்ட வற்று
ணீதியாஞ் சனற்கு மார [illegible]தை யிகரோர் மைத்தே. (௧)

ஆங்கதிற் சயில கண்ட மதிநட்ப மதில்வி சேடந்
தீங்கிலாக் கேத்திர கண்டஞ் சிவதர்ம புரதத்தின் மேன்மை
தாங்கருஞ் சிறப்ப தாமத் தலபுரா ணத்தை மேலா
வோங்கிய தமிழி னாலே யுரைக்கவென் றறிஞர் கூற. (உ)

## வேறு.

கடவுள்வாழ்த் தவையடக்க மூர்த்திதலந் தீர்த்தத்தின் கனத்த மேன்மை, நடநவிலம் மூர்த்திசரித் திரமீரேட் டவைசருக்க நடைய தாகத், திடமுடன்சொன் னேனறிவித் தாலறியு முயிரெனுநூற் றெளிவி னாலுங், கடலவிடமு மமுதாக்குங் கயோளபுரக் கடவுளென் னுங் கருத்தி னாலும். (ந)

## வேறு.

தேவர்க ளமுதுங் கைபபத் திருந்தியா லருந்திப் பின்ன
ராவதா முகமன்கூற லவனியின் வழக்கா முப்பு
மேவலாப் புற்கை கைமே விட்டவன் மேலோர்க் கன்பு
நாவினாற் புகலல் சால நகையென நாணுற் றேனால். (ச)

ஆருவ தாக முன்னோ ராய்ந்தநூல் வழியே யாமும்
போர்குதல் கட னென்னப் புநதியை நிறுவி மங்கை
பாகனுஞ் சிவதர் மேசன் சரித்திரம் பகர்ந்தேன் மேலோர்
மூகையின் மொழியுங் கேட்டு முகமலர்ந் தருள்வா ரென்றே. (ரு)

## வேறு.

வழுவின மேலவர் பூசனைக் காங்கவர் மலர்த்தா
டொழுசி ளூர்கொயு நால்வகை மலரினைத் தொகுத்துப்
பழுது நீக்கியே பரன்முடிக் கணிந்திடு வதுபோ
லிழிவி னேன் சொலுந் தொடைகோ ளசீர்பா விசைப்பார். (சு)

வருக்கி னேடிள மந்தமென் பொடுசிகை மீனின்
றிருக்கி னேடுரு கரவெயி றுமைசெஞ் சடையிற்
றரிக்கு நான்குநாட் டீசர்சற் றெனுநலந் தழுவா
திருக்கு மென்கவி மாலையும் புனைவரென் றிசைத்தேன். (எ)

வேறு.

வேதங்க ளீசன் றன்மை விளம்பொ ணா தெனவும் வேத
நீதங்கொ ளறிவிற் சான்றோர் நிருமலன் சரிதைதன்னை
யோதுக வென்ன வாணை யுறுத்தலாற் றிசெய் சூதன்
பாதங்கள் பரவி நாயேன் பணிவுட னுரைக்கப் புக்கேன். (அ)

அவையடக்கம் முற்றிற்று.

ஆக விருத்தம் ௩௩.

---

# திருநாட்டுச்சிறப்பு.

---

திருவால வாயுடைய தம்பிரான் றிருவிளையாட் டறுபா னான்கும்
விரிவாக வுலகறிய விளக்கமதி குலதீப மின்னை வேட்டற்
கருவாகி யுருவாகி யருவுருவா யல்லதுமா மாகி தானே [ம்.
யுருவாகிப் புரந்திடுதென் பாண்டிநாட் டணிசிறிதின் குரைக்க லுற்று

வெண்டிருநீ றணிந்தபிரான் மேனியென் வெளுத்துமிடை மேக
மெல்லாந், தெண்டிரைநீ ரருந்தியவன் மணிமிடறு போற்கறுத்துச்
சேணின் மீண்டாங், கண்டர்செறி கன்னிவரை யணைந்தவன்வே ணி
யின்மின்னி யமலன் கையிற், கொண்டதுடி போன்முழங்கி யெம்பி
ரான் கருணையெனக் குலவிப் பெய்யும். (உ)

குறியமுனி நெடுங்கடலை யுண்டதெனத் தாமும்போய்க் குடித்து
மீண்டு, நறியசந்த நசலத்தின் வந்ததெனத் திருக்கன்னி நகமே
னண்ணி, *யறிவுடையர் பலவுருவாய்ப பலமரனுக் காக்கினரங் கது
போ னமு, மறிவிறு மஞ்சனங்கொண் டபிடேகம் புரிவமென
மஞ்சு பெய்யும். (௩)

---

* அறிவுடையர்—அகத்தியர், புலத்தியர், பலவுரு-பலாமர வடிவம்.

வேறு.

கன்னி மால்வரை முடிமிசைக் கனைகுரன் மேக
மின்னி யூற்றுவ கன்னிமா ரெழுவரு மேவி
வன்னி சூடிய மலைங்கொழுந் திசர்பான் மருவிச்
சென்னி மீதினிற் கங்கைநீ ராட்டுத றெரிக்கும். (௪)

ஒன்ப தாகிய மணிகளம் மழைக்கணின் றுதிரல
வன்ப தாகிய வகத்தியன் புலத்திய னனைமார்
முன்ப தாகப்பன் மலர்கடுப்ப் பூசனை முடித்தா
ரன்ப காட்டல்போ லிருந்தன சிலம்பின்மா டெங்கும் (௫)

முன்பு பன்னிரு பன்றியின் பறழ்கட்கு முலைப்பா
லன்பி னீந்தன னுலவா யன்னாலாங் கதுபோ
லின்ப மெவ்வுயிர் களுமெளி தியைந்திடக் கன்னிப்
பொன்பி றங்கமே னருவிநீ ருட்டுறும் பொலிந்து. (௬)

வேறு.

கலைபல கற்போர் முன்னர்க் கலங்கிப் பின் றெளிதன் மான
வலைபுனற் கன்னிநீத்தந் தானு மவ் வாற தாகித்
தலைமையாஞ் சிவமொன்றாகி யிருபத்தைந் துருவர் தானு
நிலையினைக் காட்டல் போலுந் நீத்தம்பல் பேர்பெற் றன்றே. (௭)

வேறு.

அவ்வனகையா கியதென்ணீ ரமுதினைக்கா லா றியக்கிச்
செவ்வைபெற நிறைத்துழவு திருத்துபுதெய் வம்பழிச்சி
யெவ்வயினும விதைவித்தி யேருழவர் வினைபுரியக்
கவ்வையிலாப் பயிர்களுயிர் களிப்பவயல் விளைந்தனவால். (௮)

வளைந்தகரும் பொற்படைகை வாங்கிமள்ளர் நிரைநிரையாய்
விளைந்தசெந்நெ லரிந்தடுத்து விலங்கலெனப் போர்வேய்ந்து
தளைந்திகரும் பகடுதனற் சாலிவைவே றுய்ப்பபிடித்துக்
களைந்துநவ மணிக்குவைபோற் களமுழுவ தினுங்குவித்து. (௯)

மன்னவனுக் காறிலொன்று வழங்கிமற்ற வளங்கொண்டு
கன்னிவரை நாதருக்குங் கனிவுளவன் பர்கடமக்கும்
பன்னுறுசுற் றத்தினுக்கும் பகர்தருதென் புலத்தோர்க்கு
முன்னுதவித் தாமுண்பார் *நாஞட்டு முதற்குடியோர். (ய)

கான்காட்டும் பொழிலனைத்துங் கனிகாய்பூத் தளிர்காட்டு
மீன்காட்டும் வயலனைத்து மின்காட்டும் புயலனைத்தும்
வான்காட்டுங் கன்னல் செந்நெல் வளம்பலவும மலைகாட்டுந்
தேன்காட்டும் பங்கயப்பூச் செறிதடமெண் டிசைகாட்டும். (கக)

மந்தமா ருதத்தசையு மலர்க்கொம்ப ரிடைகாட்ட
நந்துகளங் காட்டமுல்லை நகைகாட்டத் தெங்கிளநீர்
சந்தமுலை காட்டமுகந தண்ணந்தா மரைகாட்டக்
கந்தமலி கருங்குழலார் கவின்காட்டுங் காஞடு. (கஉ)

அன்றிரவின் முனிவாரி யன்னமிட்ட திருக்குலத்தோ
ரென்று மதியுளவரையு மிருக்குமெனு மிருக்குரைததோர்
நின்றறியுங் காண்பரிய நிமலர்தரு மேசரெனக்
குன்றரியு மாயிரங்கோக் கோஞடுங் கோஞடு. (கங)

பெரும்புகழை வேளாளர் பெருக்கியறம் பிழையாது
துரும்பெனினும் பிறர் பொருளைத்துவ்வாது சத்தியமே
விரும்புமறி வுளராகி விளைநிலங்க டிருத்துதலாற்
கரும்புகழை யிணைவணக்குங் கல்வாசற் றிருநாடு. (கச)

கோங்கொன்றுங் குவிமுலைமேற் குங்குமங்கள் கரைபுனலான்
மாங்கன்று கரும்பலவும் வாழையுமவ் வாசனையா
மாங்கொன்றச் சடையாதே யனுதினமு மன்பர்பணி
பூங்கொன்றைச் சடையார்வாழ் பூங்கொன்றைத் திருநாடு (கரு)

இந்நாட்டுக் கன்னிவரை யிறைவர்தரு மேசருக்குக்
கன்ஞட்டி முன்ஞேர்கள் கவிஞட்டி டீசரெனப்
பொன்ஞட்டோர் களுமியம்பப் புவிமிசைநாட் டினர்நாம
மந்நாட்டுக் கிணையாநா டவனியின்கட் கண்டிலமால் (கசு)

---

* நாஞட்டின் பெயரை, யஉ, யங, யச, யகு-ம் பாடல்களிற் காண்க.

வேறு.

குறிஞ்சியந் திணைவளங் குறைந்த தில்லைநீர்
செறிந்திடு மருதத்தின் வளமுந் தேங்கின
நறுங்கொடி முல்லைநல் வளமு மல்கின
வுறிந்தநெய் தற்றிணை வளனு மார்ந்தவே. (கஎ)

இத்திணை மயக்க மீங்கியைந்து சாருமா
லத்தனார் பூரியந் தரஞ்சு வர்க்கமா
வைத்திவண் வதிந்தனர் மண்ணின் மேலொன்றுங்
குத்திரந் திரண்டுமாக் குறிக்கற் பாலவே. (கஅ)

ஆட்டினுட் சிறந்தது தில்லை யம்பலம்
பாட்டினுட் சிறந்தது பதிகச் செந்தமிழ்
காட்டினுட் சிறந்தது கவின்கொ ணைமிச
நாட்டினுட் சிறந்தது பாண்டி நாடதே. (கக)

வேறு.

உத்தமமா கியமலயத் துவசபாண் டியன்மகத்தி லுமையென் றோதுஞ்
சத்தியே யவதரித்து முடிக்கவித்துப் பாராண்டு சகலலோக
கர்த்தனாகியசோம சுந்தரரே சனைமணந்தக் கடவு ளோடு[லாமால் (உ0)
நித்தியமா யிற்றிருக்கும் பாண்டிநாட்டணி யெவரா னிகழ்த்த

திருநாட்டுச்சிறப்பு முற்றிற்று.

ஆகவிருத்தம் உ0

---

# திருநகரச்சிறப்பு.

---

சென்னி மான்மதி புனைந்தவர் திருவரு ளதனாற்
பொன்னிமாநதி பொதியின்மேற் பொருந்துதாம் பிரமா
பன்னி மாநதி கொணர்முனி பலவுரு வாகுங்
கன்னி மாநகர் வளத்தினைச் சிறிதுகட் டுரைப்பாம். (க)

வேறு.

நாமடந்தை கேள்வனென நான்மறையின் வழியொழுகி
யாமடந்தை வராத செங்கோ லரசர்தமை விண்ணூட்டுக்
காமடந்தை விரும்புதிருக் கோளமா நகர்கமலப்
பூமடந்தை முகத்தணிந்த பொற்றிலத மெனப்பொலியும் (உ)

வேறு.

வண்டு கிண்டிட மலர்ந்தசெந் தாமரை குவளை
முண்ட கந்தட மெங்கணுஞ் செறிந்தன முன்னரி
னண்டர் போற்றுமா மடந்தைபா மடந்தைய ரநேகர்
மண்டி யிந்நக ரிருப்பவ ராசன மாணும் (௩)

முத்து திர்த் திடுஞ்சாலி செங் கரும்பினை நோக்கு
நத்து தீஞ்சுவைக் கரும்புநா ளிளங்கமு கமுக்கும்
பைத்த பூகநெட் டிலைக்குலைத் தெங்கின் மேற் பரவு
மத்த ருக்குலமைந்தருக் குலங்களை யடுக்கும். (ச)

ஆழியே ழுமொன்று னது போலுமா லகழி
யோழு லோகமீ தேறவைத் திட்டவே ணியதாய்ச்
சூழு மேழர ணொன்றினொன் றுயர்ந்தன துன்னார்
வீழு மாறுசெய் மதிலுறுப் பனந்தமாய் விளங்கும். (ரு)

நீராழி யன்றகழி நேமியுங்குன் றன்றரணு
மோராழி யானுதைய வத்தமன வோங்கலல
*தேராழி யேசெழும்பொற் சிகரியன்று சிகரியதா
மாராயா திருந்தோமென் றறிஞர்களு மருளுவரால். (சா)

வேறு.

தெண்டிரை யகழாய் நேமியங் கிரியே தினகரற் றொடுதிரு மதிலாய்த், துண்டவெண் பிறைச்சென் னியன்கையிற் றனுவே துலங்குபொற் கோபுர மாக, வண்டகோ ளகைகளையத் தொடமுன்னூ லீண்டவரிகொடிக் கம்பம தாகக், கொண்டிரு மாறி யிந்நகர்க் கணியாய்க் குழுமிய கொள்கையை மாணும். (எ)

* தேராழி-ஆழித்தேர்

### வேறு.

இந்தி ராதிய ரெண்பர்முப் பான்றிரி கோடி
யநந்தவா னவ ரிராப்பக லிடைவிடா தாங்கு
வந்து மீடலின் வாயில்க ளனைத்துந்தாம் மாட்டா
தெந்த வேளையு மெயிற்கபா டந்திறந் திருக்கும். (அ)

மாட மாளிகை சூளிகை மண்டப மதின்மே
லோடு மேடைக ளொன்றின்மே லொன்றுதா வுயர்ந்தாங்
கேட விழ்ந்தநற் பகஞ்செறி புலகொமக் கிணைகொ
ண்டோடு வா னெனப் படப்பது போன்றதிந் நகரம். (கூ)

வீதி யெங்கணும் விழவறா திருத்தலின் மலரா
ளோது மத்தலை யொருவுறா துறைதலி னும்பர்
வேதர் மாதவ ரிருடிகள் சரித்தலின் விளங்கு
மாது பாதியன் கயிலையின் மறுகிணை மலையும். (ய)

வண்டிருப்பன மலர்களின் மடந்தையர் கரத்திற்
கண்டிருப்பது கணிகையர் மொழியிற் கட்கடையிற்
செண்டிருப்பன வவர்தனத் தினுந் தெருவினிலுந்
தொண்டிருப்ப பூந் தோட்டத்து மடியவர் சொலினும். (யக)

தானங் காட்டுவ தருமத்தோர் கரமுஞ்சிந் துரமுங்
கானங் காட்டுவ மாடமு மதுமலர்க்காவும்
வானங் காட்டுவ மடந்தையர் மருங்குமெம் மருங்கு
மீனுங் காட்டுவ மின்னனார் விழிகளுங் கொடியும். (யஉ)

### வேறு

கன்னிவளை கசோளபுரக் காரிகையார் தனங்காட்டு
மன்னவளை விழுருஷி யசைதரள வடங்காட்டு
மின்னினொடு மேகங்கள் மெல்லிடைபூங் குழல்காட்டு
மன்னநடை காட்டுமயி லவர்சாயல் காட்டுமால். (யங)

மீன்போலு மான்போலும் வேல்போலும் விழிகளென
வான்போலுந் துடிபோலுங் கொடிபோலு மருங்குலெனக்
கான்போலுந் தேன்போலுங் கனம்போலுங் கூந்தலெனத்
தேன்போலு மொழியாரைச் சிந்துரம்போல் வாரணைப்பார். ()

ஐந்துவித இலக்கணங்க ளாராய்வோ ரொருபாலாஞ்
சந்தவிசை நூல்படிக்குந் தகைமையோ ரொருபாலா
மந்தவட மொழித்தருக்க மாராய்வோ ரொருபாலாஞ்
செந்தமிழ்வே தம்பயில்வோர் திருக்கூட்ட மொருபாலாம். (மரு)

வேதவொலி யொருபாலாம் விளங்கிய வேழிசையாஞ் சங்
கீதவொலி யொருபாலாங் கின்னரம்யாழ் வீணைகுழ
லூதவொலி யொருபாலா நாட்டி மாந்தர்கள் சொற்
பேதவொலி யொருபாலாம் பிறங்கியவந் நகரெங்கும். (மசு)

மந்திரங்கள் பயிலுகின்ற மணிமாடம் பற்பலவாந்
தந்திரங்கள் பயிற்றுகின்ற சாலைகள்பற் பலவாகு
மெந்தையரு ளாகமங்க ளிசைக்குமிட மெண்ணிலவா
மந்தமறை முடிவுணர்த்து மிடங்கள்பல வந்நகரின். (மஎ)

சரியைபுரிவோர்கள் பலர் சங்கரர்க்கர்ச் சனைபுரியுங்
கிரியைபுரி வோர்கள்பலர் கிளர்தருசா லூபமருள்
பெரியயோ கம்புரியும் பேரறிவா ளரும்பலரா
மரியசிவ ஞானநெறி யாராய்வோ ரும்பலரே. (மஅ)

வேறு.

பலவுறுவாத் தமிழுரைத்த குறுமுனிவ னிந்நகரிற் பதித லாலே, கலைமுழுதுங் கோகிலமும் பூவையும்பைங் கிள்ளைகளுங் கற்றுக் கேட்குங், குலவுருவப் பறவைகட்கும் விலங்குகட்கும் பயிற்றுமெனிற் கோதி லாத, புலனுடைய மாந்தர்தமிழ்ப் புலமைதெரி வதுமுரிதோ புகலுங் காலே. (மக)

வேறு.

## கணிகையர்வீதி.

இழிஞராயினு முயர்ந்தவ ராயினு மின்பம்
விழைவி லாதவ ராயினும் வேந்தரே யெனினு
மிழைவி கார்த்தவண் கையரே லவர்களை மருவிக்
குழையு நாடகக் கணிகையர் மறுகு கூறுதுமால். (உய)

கன்னல் வாழைக டோரணங் கமுகுகள் கதிர்க்கு
முன்னு தெங்கின்பூம் பழக்குலை மாலைகள் முகப்பிற்
றுன்ன லாலிது மருத நன் னிலமெனத் தோன்றி
மன்னு மாடவர் மறுகுமம் மடந்தையர் மறுகு. (உக)

பணைக டோறு மாங் காங்கொளிர் தீபங்கள் வகுத்து
நனைய வார் குழற் கற்றை தாழ்ந் திடமெல நடந்து
சுனையிற் செங்குமு தம்விரிந் தாலெனத் தோன்றப்
புனையும் வெண்டுகிற் கணிகைமா ரோதிமம் போன்றார். (உஉ)

தெண்ணி லாமதி மிலேச்சகோ ளேசர்முன் சென்று
பண்ணு லாமொழிப் பாவையர் குழாநடம் பயில
நண்ணு போதிலா னனங்குவி யாவகை நாடில்
விண்ணி லாப்பகை யிலாதபங் கயமென விளங்கும். (உங)

வேறு.

மஞ்சுதவழ் மணிமாடம் வரைபோலு மதின்மதியப்
பிஞ்சுதவழ் நுதலார்கள் பேடைமயி லினம்போல்வார்
கொஞ்சுகிளி பேசுவதுங் கோகிலங் கள்கூவுவது
மஞ்சொன்மட வார்மொழியென் றுடவர்க ளுடுவரால். (உச)

வேறு.

மதனநூற்பொருள் கிள்ளைக்கு நாகணவாய்க்கும்
பிதனுறும்படி யிலக்கணச் சொற்களாற் பயிற்றி
முதனை யாமல்வா ணிகஞ்செயுந் தங்கட முறைமை
யதனை யுந்தம சிறுமியர்க் கறிவிப்பா ரனையார். (உரு)

வேறு.

திங்கள்வெண் கவிகைச் செல்வன் செருக்கையு முருக்குஞ் செய்ய
பங்கய முகத்தர் கொம்பர் பன்மணிக்கலன் பூண்டன்னார்
சங்கையில் பரதநூலுஞ் சாரமா மதனநூலு
மிங்கித முறக் கற்குங் கணிகை யரிடங்க ளெங்கும். (உசா)

அங்கமாம் பலவற் றுள்ளு மரவமா மங்கத்தாலே
கொங்கணர் தெலுங்கர் வங்கர் குர்சரர் குடகர் மச்சர்
சிங்களர் முதலா மைம்பா னுறுதே யத்து மன்னர்
*தங்களே வரிய வந்து தனங்களைக் குவிக்கச் செய்வார். (உஎ)

வேறு

அந்தணர்வீ திகளனந்த மரசர்வீ திகளனந்தங்
கந்தமுல்லைத் தார்வணிகர் காவணவீ திகளனந்த
மந்திரசை வாகமத்தோர் மறுகனந்த மவைநிற்க
செந்திருவாழ் வேளாளர் திருவீதிச் சிறப்புரைப்பாம். (உஅ)

வேறு.

வேளாளர்வீதி

ஏர்த்தொழிலின் வளம்பெருக்கி யிமையவரந் தணரரச ரிணையி லாமற், கூர்த்தவறி வுளவணிகர் முதலாநதொண் ணூற்றாறு குலத் தோர் கட்கு, மார்த்தவறி வுடையோர்க்கு மருந்தவத்தி னடைவோர் க்கு மருத்தி கூரச், சீர்த்தவன மருத்தியத ஞன்மகிழ்வர் கங்கைகுல திலகர் மாதோ. (உகூ)

வேறு.

காராளர் வருவோர்க்குக் கற்றுவின் பாலனந்த
டாராள மாக்கொடுப்பர் சாலிவிளை திரளங்க
ளேராளர் படிக்களப்ப ரியாசகர்க்கு மத்தரளம்
பாராம லிருகையும் பாய்ச்சியெடுத் தளிப்பார்கள். (௩௰)

வேறு. வணிகர்வீதி.

மலையிலுள பெருவளனு மருதநிலத் திருவளனு மாயோன் வாழு
முலையிலுள திருவளனுந் தீவினுள பெருவளங்கண் முழுதுநல்கு
மலையிலுள பெருவளனு மன்னுந்தலா லளகையினு மதிகங் காட்டும்
விலைபின்வரம் பகன்றநவ மணிவெயிலா விரவகற்றி விளங்கும் வீதி.

---

* உஎ. தாங்கள்-குறுக்கல்.

## வேறு.

தனவசியர் வீதிகளிற் சந்தனங்கா ழகிற்றுறடோ
டினபலவாங் குறிஞ்சிவள மிக்குதிர்க்கும் வெண்டரளஞ்
செநெற்றருமுத் தேமுதலா மருதவளந் தெண்கடலூற்
றென்பவள முதலான பலவளனு நெருங்கினவால். (௩௨)

## அரசர்வீதி.

காவலர்க டிறையளக்குங் கனகக்குப் பைகளொருபா
லாவலுட னுறினிலொன் றளகதுஞ்சா லிகளொருபாற்
றேவருல கமுமருள செம்பொன்னு நவமணியுந்
தாவுபரி மானிரதந் தந்திநிரை களுமொருபால். (௩௩)

## வேறு.

கொடிஞ்சிமான் றேர்நிரைவெண் கோட்டானைத் திரள்கள்குர கதத்தின் கூட்டங், கடுஞ்சினத்த பதாதிகளின் பெருக்கமத்ர சாலைநிரை கணிகைமாதர், நடஞ்செயுஞ்சிக திரகூட மாடரங்கு மணிமேடை நலமகொ டெற்றி, யடங்கிநெருங் கவினயன மாயிரத்தோ ணகர்நாளு மரசர்வீதி. (௩௪)

## வேறு. வேதியர்வீதி.

வேதியர்வீ திகடோறும் விதிப்படி செய் வேள்விகளி
னாதிமறை நான்கொலியு மாகுதிசெய் பேரொலியு
நீதிநூல் கேள்வியொலியு நித்தியமை மிதிபங்க
ளோதுசிவா கமவொலியு மோதவொலி யடக்கியவால்.

## வேறு.

இருக்கொலியொருபுறமா மெசுர்வேத மொருபுறமா மிறைவற் கின்பம், பெருக்கியசா மத்தினொலி யொருபுறமா மதர்வணமும் பேசு மோர்பாற், சுருக்கினொடு சுருவத்தான் முதத்தீயின் வினைமுடிக்குந் தூய்மையோர்பால், மருக்கொள்கம லாசனத்தா னுலகமென விளங்கியது மறையோர் வீதி. (௩௫)

## வேறு.

சுருதி மிருதி யிதிகாசந் துலங்கு புராண மீமாஞ்சை
கருது தருக்கம் வியாகரணங் கலையில் வேதாந் தமபாட்டம்
பெரிய பாதஞ் சலமுதலாப் பேசு நூலின் வகைபலவுந்
தெரிய வல்ல போறிஞர் சிறந்த கூட்டந் தெருத்தோறும. (௫௭)

திருவெண் ணீறு மைந்தெழுத்துஞ் சீராரு ருத்தி ராக்கமுமே
கருவண் ணுது முத்திவழி காட்டு மருந்தெ னுளத்தெண்ணிப
பெருவெண் ணுருவே சிவலிங்கப் பெருமா னென்று பிறழாது
மருவெண் மலரா லருச்சிப்போர் மடங்கள் பலவு மலிந்தனவால். ()

இடைபிங் கலைபின் வரும்வளியை யிரித்து நடுநா டியினிறுத்தி, மடைவாய்ப் பகமோப பாகக்குளிர்வெண் மதிமண் டலத்தின் வழியமுதைத், திடமா வுண்டு சிவயோகஞ் சேர்ந்தா னந்தந் திளைப்போர்கண், மடமே வனந்த மாங் குறைவோர் மகிமை யெவர்க்கு மதிப்பரிதே()

## வேறு.

சகலகலை ஞானமெலாங் கழன்று மேலாந் தத்துவமாய்த் தற்பரமாய்ச் சான்றுதானு, யகளவடி வாய்ச்சச்சி தானந் தமமா யத்துவித சுத்தநிரா லம்பமாகி, யிகபரமுங் கான்றிட்ட வுணவென்றெண்ணி யானெனதென் றற்றவிடத் திருக்குமேலோர், செகமதனில் வாழ்பவர்போ லிருப்பார் வாழுந் திருமடங்கள் பற்பலவாத் திகழ்ந்தவங்கண். (௬௰)

## வேறு.

விண்ணுலகோ ராடுமலர்ப் புண்டரிகத் தடக்கரையில் விளங்குமன்றே, புண்ணிலவு சோதிவிருக் கத்தினின்று மெழுஞ்சுடரை யொத்தே யன்பர், கண்ணிலவு சுகோளேசர் பொய்யாமொ ழீசரெனக் கருத்துட் காண, மண்ணுலகின் மரகதப்பூங் கொம்பினொடு வீற்றிருந்து மகிழ்பூங்கோயில். (௬௧)

தேனாட்டுத் தவளைபடாச் சுனையென்னுஞ் சிவகங்கைத் திருத்[illegible]கூவக், கானாட்டு மாமலகத் தேங்கமழ்ப்பூந் தருநிழற்கட் கவினு[illegible]ன்றே, [illegible]னாட்டு[illegible]தனெனுஞ் சிவதருமே சன்பலவா நாமங்காட்டி[illegible]நாட்டிற் சிவகாம சுந்தரிப்பெண் ணுடன்கூடி வாழுங் கோயில். ()

பூவுடையோன் மலர்க்கையொன்றின் வைத்திருந்த சங்கதீர்த் தத்தின் மாடாங், கோவுடைய பனசவிருக் கத்தினிலக் கினிக்கொழு ந்தாய்க் கோடி பானுத், தேவுடைய சோதிதிருக் ககோளேச னென்ன வொருபேர் சிறப்பக் கன்னி, யாவுடைய நாயகிப்பெ ணுடன்கூடி மகிழ்ந்துவிளை யாடுங் கோயில். (௪௩)

இம்மூன்று திருக்கோயில் களிலுமே மிசைநரம்பி னெழூற்ப ணோர்ப்பு, மம்மூன்று நாயன்மார் தமிழ்வேத நான்குமறை யங்கத் தாரப்பு, மும்மூன்று காலத்தை யிரட்டித்த காலமெலா மொலித்த லாலே, கம்மூன்றி மடிக்குமெழு கடலுமொருங் கார்க்குமொலி கடுக் கு மாலோ. (௪௪)

வேறு.

அன்ன கன்னிவெற் பமருமும் மூர்த்திகட் காட்டு
மன்னு பாறயிர் நெய்மதுக் கன்னனீர் மடுத்த
வன்ன வேகட லாறெனு முலகர தனப்பூண்
பன்னு சித்திர வத்திரங் களையெவர் பகர்வார். (௪௫)

ஐய னங்கணு ளூட்டுமும் மூர்த்திகட் கடைக்குந்
துய்ய வோதன வருக்கநற் சிற்றுண்டிச் சுவைகண்
டுய்ய வாரமு துண்பவ ருவக்குமூ ணளிக்குஞ்
செய்ய தேனுவும் வேட்டிறும் பூதினுற் சிறக்கும். (௪௬)

இண்டை வார்சடை யெம்பிரான் கன்னிமால் வரையிற்
றொண்டி னீடிய வைவகைச் சைவருந் துவன்றி
யண்டு திங்களான் மார்த்தபூ சனைத்தலை யதிர்க்குங்
கண்டை யோசையப் புறக்கட லொலியினுங் கலிக்கும். (௪௭)

வேறு.

காலங்க டொறுமோமங் காலங்க டொறுந்தபன கனக கும்பங், காலங்க டொறும்பலிகீ ளீரெட்டு முகமனொடு கதித்து மேவுங், காலங்க டொறுநித்த விழாவினொடு வாரவிழாக் கவின வோங்குங், காலங் க டொறும்பதினெண் வாத்தியமு மிடையின்றிக் கறங்கு மாங்கண்

யாதவிழா வாட்டைவிழா நித்தியமை மித்தியத்தின் வழுவாங்
குற்றத், தீதுதவிர்க் கின்றசரு வப்பிரா யச்சித்தந் திருக்கேர்'வாக;
ஞ்தியா மகுடாதி யாபரணஞ் செம்பொற்றா சாதி யாவு, நீதியாய்ப
பொலிவெய்தித் தொன்றுதொடுத் தெஞ்ஞான்று நிலவு மாகோ(சகூ)

வேறு.

மன்னுமெழிற் கைலைவரை மீதினின்று மாவிர வாருமுதல் வர்
ஞோர் சேனை, துன்னிவரச் சூரனுயிர் படுத்த வைவேற் றோன்றலு
ம்மை குழுமில்வண்டாய்த் துவன்றிமீச னன்னவருக குரைத்தமனு
வுணர்ந்த தோட்க கனலைமகார் பிணிதகு மருந தருந்து மாபோற்,
கன்னிவரைப் பரசிவனைப் பரவி யாங்கட் கன்னியர்க ளிருவரோ
ங் கவினுமன்றே. (ருய)

வேறு.

ஈதன்றி யொருகோட்டன் றிருக்கோயில் கரும்பலவா மிலே
வேற் கநதர், நீசங்கொ டிருககோயில கருமபலவாஞ சாத்தனார் தெ
டும லோடு, மாதலகி சாமுண்டி மாதரெழு வர்கள்வடுகர் மருவுங்
கோயி, லோதுங்கா லனந்தமுள வணங்கினோ ரபீட்டமெலா மொரு
ங்கு வாய்ப்பர். (ருக)

மடங்களெலா மனதான மனைகளெலாஞ் சொனதானம் வாவி
கண்ட, விடங்களெலா நீர்ப்பந்த ரெங்குஞுசித் திமதெற்றி யிமை
யோ ரூர்க்கெண், மடங்கதிக மெனச்செறியும வளம்பலகண் டிசயி
த்தல் வானு ளோர்க, ளடங்கலுங்கண் ணிமையார்க ளிதன்சீர்மை த
ரிசிக்கு மருத்தி யாலே- (ருஉ)

பலவுருவ மாமிரண்டு முனிவருறை தருமேன்மை படைத்த
மூதூர், நிலவுருவ மானமுக முடையகன்னி மாரெழுவர் நிற்கு மூதூ
ர், வலமுடைய சூரடர்த்தோன் வீந்துவழி படுமூதூர் வடுகே சர்க்கு
த், தலமளித்தான் றலையழித்த பழிதொலைத்த திருநகரந் தானு
மாகோ. (ருங)

வேறு.

பழைய மும்மல வெப்பமேற் கொண்டபல் லுயிர்க
டழைய வேயருண் மழைபெய்து தாணிழல் கொடுக்கும்

குழைப வார்செவிக் கூத்தர்க்குந் தன்னிழல் கொடுக்கு
மிழைகொ ணெல்லியின் மகிமையை யாங்கனம் வகுப்போம். (ருச)

வேறு.

அந்தணர் குடியு மரசர்தங் குடியு மறம்புரி வணிகர்தங் குடியு, முந்திமேய ருழுங்கோக் குடிகளு மன்றி மூவறு குடிகளு மகிழ்கூர்ந், திந்திர னகரு மளகைமா நகரு மெகினமூர் பவனெழி னகருஞ், சந்தியா வந்தத் தவந்திரமே வியபோற் றழைத்தன யாவரும் வியப்ப.

வேறு

அகிலமெலா மேடாக வாடகப்பொன் மேருவெழுத் தாணியாக சீர்சகலநதி பதியேமைக் குழம்பாகப் புவனமெலாந் தனிப்ப டாமாப், பகர்தருக்கள் வரைகோலாச் செய்துமா லயன்றவத்தின் பாண்மை வாய்ந்தாந், தொகைவைத லிரிதென்றாற் கன்னிநகர்ப் பெருமையெம்மாற் சொல்லற் பாற்றே. •(ருரு)

வேறு.

அகரமெழுத் தினுளாதிக மாழியினுட் பாலாழி
சிகரமஞ்சக் கரத்ததிகஞ் சிகரியிற்செம் பொற்கிரியே
புகரின்மறை யினிற்சாமம் புத்தேளிர் களிற்சிவன்போ
னகரமதிற் றிருக்கோளக் குடியாமிந் நகரதிகம். (ருஎ)

திருநகரச் சிறப்பு முற்றிற்று.

ஆக விருத்தம். ருய

## நைமிசாரணியச் சருக்கம்.

முன்னொர் காலையிற் சத்திய வுலகத்தின் முனிவோ
ரன்ன வூர்தியோன் றனையணிடந் தருந்தவம் புரிவா
னின்ன *தாலமீ தொருதலமியம்புக வென்னப்
பன்ன வோங்குமேம் பாட்டது நைமிசப் பழுவம். *(க)

மங்கி டாதவெண் பொடியிற்றி மணிமறி மான்வெஞ்
சிங்கி யூடர வம்புலி யம்புலி தெளிரீர்

தங்கி மாதங்க மும்பெறீஇச் சிவமெனுந் தங்கத்தா
லங்கி மூன்றுமாங் காங்கொளிர் நைமிசா ரணியம். (உ)

வார ணங்கள்கோட் டாமபலும் வாவியி னொலிப்பத்
தோர ணங்கள்கா லசைவினாற் றனித்தனி தொனிப்பக்
கார ணங்கண்மூன் றையுமுணர்ந் தோர்குழாங் கழறு
மார ணங்கண்மிக் கொலிப்பது நைமிசா ரணியம். (௩)

காம மாதிமுக குற்றமுங் களைந்துகண் ணுதலோ
னாம மாகுமைந் தெழுத்தையு நவின்றுநா ளுன
வோம மானதே பலந்தரு மென்றுநா லுரைகளுஞ்
சாம கானர்கள் சார்வது நைமிசா ரணியம். (௪)

அச்சி றப்பினை யுடையநை மிசவனந் தான்றோ
ரிச்சை யாகவெட் டாண்டினி லியற்றுமோ ரியாக
நிச்சயித் ததற் காவலன் யாவையு நிரப்ப
முச்ச கத்துள முனிவரு மாங்கண்முன் னினரால். (௫)

வந்த மாமுனி வரர்களை யிருந்தமா தவர்கள்
சிந்தை யார்வமோ டெழுந்தெதிர் சென்றுதாழ்ந் தவர்கள்
அந்தண் மாமலர்ச் சேவடி விளக்கியாங் கவரைச்
சந்த வாசனத் திருத்திபா சமனமுந் தந்தார். (௬)

ஆய காலையி லந்தணர் குழாம்புடை யணைய
மாய னாகிய வியாசன்மா ணாக்கனு மகிமை
மேய சூதமா விருடிவந் ததுகண்டு விரைந்து
தூய மாதவ ரனைவரு மெதிர்கொடு தோன்றி. (௭)

வேறு.

அம்புவியில் வீழ்ந்திறைஞ்சி யடியேங்கள் செய்தவமே யமல மான, சம்புவின்கா தைகணிறைந்த சாகரமே சூகரத்தின் றந்தம் பூண்ட, வும்பர்பிராற் கிருப்பிடமே சிவனடியார் சிகாமணியே யுணர்வின் வாழ்வே, யிம்பரிலெந் தவப்பயனே வருகவென வாசனத்தி னிருத்திப் பின்னர். (௮)

அகமகிழ்ந்து பாத்திபவா சமனமருக் கியமுதலா வன்பி னாற்றி முகமனுரை யாமமுதஞ் செவிநிரப்பிக் கரஞ்சிரமேன் முகிழ்த்து மேலாஞ், சுகமெனுஞ்சி வானந்தத் துவிதபரி பூரணவான் சுதைய தாமெய்ப், பகவனது சரித்திரமாங் கைலாசபுர மான்மியத்தைப் பகர் வா யென்றார். (௯)

உளங்கனிந்தவ் வாறுமுனி வரரனைவோ ருங்கேட்ப வுவகை பொங்கி, யளந்திமையோர் களுமறியாக் கைலாசபுர மான்மியத்தை யறைமி னென்னும, வளநகருஞ்சொல் லமுதினைத்தன் செவியின் மடுத்தானந்த மகிழ்ச்சி கூர்ந்தோன், குளந்தருஞ்செங் கனல்விழியார் கைலாசபுர மகிமையினைக் கூறலுற்றார். (௧௦)

நங்குரவன் கடலருந்து கும்பமுனி வரன்வசிட்ட னாரதாதி, புங்கமுனி வரர்யாரு முன்பொருகாற் றிருக்கயிலைப் பொருப்பிற் சென்று, கங்கையணி சடிலர்திருத் தாளிறைஞ்சி யடியேங்கள் கருத்தி னுற்ற, சங்கையினைத் தெருட்டவென நந்தியைப் பார்த்தவர் தெளியச் சாற்று கென்றார். (௧௧)

அன்னவுரை சிரமேற்கொண் டருணிறைநந் தியங்கடவு ளன்பு கூர்ந்து, முன்னமெங்க ளுளத்தையந் தெளித்தாக சியப்பொருளாய் முளைத்த தானஞ், சொன்னவரை நிகர்கொடுங்குன் றத்தினுக்கு மூல மதாய்த் தோற்று மன்ன, கன்னிவரை யதன் சரிதை கேண்மினெ னச் சூதமுனி கழற லுற்றான். (௧௨)

நைமிசாரணியச் சருக்க முற்றிற்று.
ஆகவிருத்தம் ௧௨௨,

---

# திருக்கைலாயச் சிறப்புச்சருக்கம்.

---

சீவர் நாயக னாகிய திசைமுகச் செல்வன்
மாவி னாயகன் வெண்ணிற மாவினா யகனா
மூவர் நாயக னானுமுப் பத்துமுக் கோடி
தேவர் நாயக னிருப்பது திருக்கயிலாயம். (௧)

அருட்ட தும்பிய வானவ ரசுரரோ டணையா
வுருட்டு மந்தரத் தராப்பிணித் தீர்த்துமுன் னுழக்கிச்
சுருட்டு வார்திரைப் பாற்கடல் கடைந்தநாட் சுதையைத்
திரட்டி வைத்தது போன்றது கபிலைபஞ் சிலம்பு. (௨)

விடையு யர்த்தலா னறுங்கொன்றை மேவலால் விண்ணிற்
படரும் வெண்மதி கங்கையுந் தவழ்தலாற் பசும்பொற்
கொடிம ருங்குற வரவங்கள் செறிதலாற் கோலத்
தடநெ டுங்கிரி பரசிவக் கடவுளைத் தகையும். (௨)

தொண்டன் மேற்படிந் திடுதலா னான்முகன் கூடிப்
புண்ட ரீகமேற் காட்டலாற் றிருப்பொருந் துதலா
லண்ட கோளமேற் சேர்தலா லடியநன் றிடலாற்
றண்டு ழாய்முடிப் பகவனை நிகர்க்குமச் சயிலம். (௪)

வேறு.

கானெலாங் குழலாய்க் கதிர்மதி முகமாய்க் கமுகெலாங் கண்டமாய்க் கொம்பிற், றேனெலா மொழியாய்க் கற்பெலா நகையாய்ச் செவ்விய காந்தளங் கரமாய்; மானெலாங் கண்ணாய்க் கொடியெலா மிடையாய் மாந்தளி ரெலாமல ரடியா, பூனெலாந் தாங்கு முடலுயிர்க் குயிரா மொருத்தியைப் போன்றநவ் வோங்கல் (௫)

வேறு.

வெண்க ரிக்குழாங் கரியசிந் துரக்குழாம் வேங்கை
செங்கை தூங்குமா ளிக்குழா மெண்குமான் சேதா
வங்க மேவிய புலவர்க ளருந்தவம் புரிந்து
திங்கள் வார்சடை யரனுரு வெய்துவான் றிரிவார். (௬)

தேவர் கின்னரர் சித்தர்விச் சாதரர் திசையின்
மேவு பாலகர் விரிஞ்சன்மான் முனிவரர் கருடர்
பாவு காந்தரு வப்படி வத்தர்கிம் புருட
ரோவி லாதரன் றரிசனஞ் செய்தவ முஞற்றுவார். (௭)

சுத்த மத்தள முதலிய தோற்கரு விகளுங்
கத்து காகள முதலிய துளைக்கரு விகளுந்

சத்த தாளமும் வீணையின் கானமுந் தந்தி
யொத்த ரம்பையர் பாடலு மொருபுடை யொலிக்கும். (அ)

வேத வோசையு மாகம வோசையு மிருதிப்
பேத வோசையும் புராணத்தி னோசையுஞ் பெருஞ்சங்
கீதவோசையு மரம்பையர் நடித்திடக் கிளரும்
பாத வோசையும் பரிபுர வொலியுமோர் பாங்காம். (௯)

வேறு.

சடைகொண் டவர்சிலர் சிகைகொண் டவர்சிலர் சகலாங் கமுமயிர் களையாத, நடைகொண் டவர்சிலர்முடிகொண் டவர்சிலர் நரைமுண் டிதர்சிலர் செங்காவி, யுடைகொண் டவர்சிலர் குடைகொண் டவர்சில ரொருதண் டினர்சில ரொருபோதே, மடைகொண் டவர்சில ரண்டகொண் டவர்சிலர் மடைவிண் டவர்சிலர் முனிவோர்கள். (௰)

கனியுண் பவர்சிலர் சருகுண் பவர்சிலர் கன்னற் றடியொடு காய்கந்த, நனியுண் பவர்சிலர் நறையுண் பவர்சிலர் நாரங் கொள்பவர் சிற்சில்லோர் பனியுண் பவர்சிலர் காலுண் பவர்சிலர் பைம்புற் களை நுகர் பவர்சில்லோர், முனிவொன் றிலர்சிலர் முனியுண் பவர்சிலர் மொழிகின் றிலர்சிலர் முனிவோர்கள். (௧௧)

வேறு

மலையின் மீதி லிருப்பவர் சிற்சிலர் மலைமு ழைஞ்சி லிருப்பவர் சிற்சிலர், அலைநி லாம லிருப்பவர் சிற்சிலர் கனல்க ளூந்தி லிருப்பவர் சிற்சில, ரலைபு னற்கு ளிருப்பவர் சிற்சில ராத வத்தி னிருப்பவர் சிற்சிலர், தலைநி லத்தி னிறுத்திமெ டுத்திடு சரண்மு லர்த்து தவத்தினர் சிற்சிலர். (௧௨)

வேறு

ஆல முண்டவர் கோயிலை யலகிட்டு மெழுகிக்
கால மூன்றினுந் திருவிளக் கேற்றிப்பூங் காச்சென்
றேலு நால்வகை மலரினா லலங்கல்க ளியற்றிப்
பால லோசனற் பணிந்தவ ணிருப்பவர் பல்லோர். (௧௩)

சந்த மாமலர் புகையொளி மஞ்சனஞ் சருக்கொண்
டெந்தை யார்தமக் கினியவா முகமனீ ரெட்டுஞ்
சிந்தை யன்பொடு செய்தனற் கிரியையுந் திருத்திப்
பந்த நீக்கியப் பரனரு கிருபபவர் பல்லோர். (கச)

துட்ட வைம்புலக் குறும்படக் கிச்சுடர் மூன்றை
யொட்டு மாறிடத் தொளியுங்கண் டமுதமுண் டுணர்வா
யெட்ட தாகிய வங்கயோ கத்தினை யியற்றி
யட்ட மூர்த்தியார் வடிவம்பெற் றிருப்பவ ரநேகர் (கரு)

நான்கு பாதமு நவிற்றுநா லேழுதந் திரத்தி
னோங்கு ஞானபா தத்தின்முப் பொருளையு முணர்ந்து
தேங்க ரும்பெனத் தித்திகருந் திருவருண் மூழ்கித்
தாங்கள் வேறற நிற்பவ ரெண்ணிலா தவரே. (கசா)

திருக்கைலாயச் சிறப்புச் சருக்க முற்றிற்று
ஆகவிருத்தம் கருஅ.

# புராணவரலாற்றுச்சருக்கம்.

ஆய வெள்ளியங் கிரியினி லாயிரங் காலின்
மேய மண்டபங் கோடிசூ ரியரென விளங்குந்
தூய மாதவ ரதினிறைந் திருப்பது சோமன்
காயும் வெங்கதி ரிடத்தொடுங் குஞ்செயல் காட்டும். (க)

அத்தி ருப்பெரு மண்டபத் தெதிரொர்பா லாழி
யொத்தி ருப்பதா யொருசிவ தீர்த்தமுண் டதன்பரின்
முத்தி ஞலியல் படிகளி லனந்தமா முனிவர்
சித்தர் மாதவர் போகுசெய் திருப்பரெண் டிசையும். (உ)

அந்த வாவியி னகலமு நீட்சியு மைம்பான்
றந்த வாயிரம் யோசனை சலிலமா ரமுதங்
கந்த மேவுநீ லோற்பலங் கமலமங் குமுத
மெந்த வேலையு மலர்ந்தறு பதங்குடி யிருக்கும். (௩)

சூற்று நான்கினு பைந்தருக் குலமெலாஞ் சுலவும்
பொற்ற வஞ்சிறை யன்னங்க ளெங்கணும் பொலியு.
மெற்று தும்பிய சங்கமுத் துயிர்த்திளைப் பாறுங்
கற்றை யஞ்சடைச் சிவபிரான் றளியவண் கவினும். (ச)

அன்ன வாவியங் கரையினி லத்திரி வசிட்டன்
பின்னு செஞ்சடைச் சவுனகன் பிருங்கிமா விருடி
பன்ன கநதிரு முனிவரன் வியாக்கிர பாதன்
முன்ன ராகிய சனகனே முதலிய நால்வர். (ரு)

விச்சு வாமித்தி ரன்சுகன் வியாசன்வான் மீக
னச்ச தானந்தன் காசிப ஞரதன் சூத
னிச்ச மார்க்கண்டன் பராசரன் கோதம னிமல
னச்ச தாவறி யங்கிரா வுபமன்யனு ஞேன். (சா)

சம்பு பத்தன்க கோளகன் கற்கன்சா பாலி
யம்பு லத்திய னுக்கிர வீரிய னுபத்
தம்பன் காத்தியா யனன்போதா யனன்சிலா தரனக்
கும்ப யோனிமாண் டவியன்முற் கலன்குலப் பிருகு. (எ)

வாம தேவன்றார் வாசனே முதலிய மாண்பார்
நாம தேயமா தவர்களு மவர்கண்மா ணுக்க
ராமு னீச்சுர ரனைவரு மன்புட னணைந்தாங்
கோமெ னும்பொரு ளுறைதிருக் கயிலையை யுற்றே. (அ)

வேறு.

சங்கரம காதேவ சாம்பசிவ நீலகண்ட தத்வாதீத
பொங்கரவ பூடண புராந்தக சுராக்கிரேச பூத நாத
கங்கரக்ரு பாகரத்ரி யம்பகநி ராதார கைலை வாச
துங்கமணி மகுடகுண பணகங்க ணுவெனத்தோத் திரங்கள் செய்து

வேறு.

எய்து மாதவ ரனைவருஞ் சங்கற்ப மியம்பிக்
கொய்த பைங்குசைப் பவித்திர மணிவிரற் கூட்டி

மைய கண்டனை மனத்திடை நாட்டிநீ ராடிச்
செய்ய வேண்டிய கடனெலாந் திருந்துற வியற்றி. (௰)

அன்பு மீக்கொளத் தரையில்வீழ்ந் தடிக்கடி பணிந்துள்
ளென்பு நெக்கிட வாநந்த பாட்பங்க ளிறைத்து
முன்பு வாயிலி னின்றநந் தீசனை முடிதாழ்ந்
தின்ப மேவியாங் கவன்றரு மருள்விடை யேற்றே. (௰௧)

ஆர ணங்களுன் கின்னமுந் தேடியு மறியாப்
பூர ணன்றனைத் தரிசிக்கும் பொருட்டுள்ளே புகுங்கா
லார ணன்மறை நான்முக னவ்வயினுற் கோட்டு
வார ணன்முதற் றேவர்கள் புடைநின்று வாழ்த்த. (௰௨)

ஆட கேசர்கா லாக்கினி யுருத்திரங் கூர்மங்
கூடு மண்டத்தர் பத்திரர் பன்னொரு கோடி
சேடு கொண்டருத் திரர்சத வுருத்திரர் திசைமே
லோடு கின்றவர் பூதநா யகர்கண நாதர். (௰௩)

வசுக்கள் பன்னிரண் டருக்கர்வெண் டிங்களேழ் மடவார்
பசுக்க ளாகராம் பணமணி மகுடர்கள் பரந்து
சுசிக்கொ ளட்டமூர்த் திகள்திசை யெங்கணுந் துன்னிப்
பசிக்க லந்தவ ரமுதநேர் கண்டெனப் பரவ. (௰௪)

பரவு வார்களிற் சிலர்க்கருள் வாக்கினாற் பிகர்ந்தா
னருள்வி ழிக்கடை வழங்கினன் சிலருக்கா னனத்தின்
விரவு மூரலால் விரித்தனன் சிலர்க்குக்கம் விதிர்ந்தனன்
கரத லத்தமைத் தருளினன் சிலர்க்கந்தக் காலே. (௰௫)

வேறு.

எண்ணிறந்த பரிதிகள்பொன் மலைமீதிற் றோன்றுதல்போ லில
ங்கு மேனிக், கண்ணிறைந்த கவினொழுகக் கண்மூன்றுங் கறைக்கள
முங் கரங்க ளான்கும், பண்ணிறைந்த மொழியுமையோர் பாற்பொரு
ந்தப் பாலிரு பாலு மோங்க, விண்ணிறைந்த கங்கைமுடி விமலனார்
திருக்காட்சி விளங்கக் கண்டார். (௰௬)

முன்புவந்து பணிந்தபெருந் தேவரெல்லா மவரவர்கண் முறையிற் போதப், பின்புவந்த மாதவர்க ளனைவோரும் பணிந்தெழுந்து பிறங்கு மார்பி, னன்புகொண்டா யெருக்கணிந்தா யாமையோட்டினையணிந்தா யிதுபோன் றியாஞ்சொ, லன்புதுன்றுச் சொற்றுதியுங் கேட்டருள வேண்டுமென வறைவா ராணர். (யஎ)

வேறு.

திங்களஞ் சடையாய் போற்றி செங்கண்மால் விடையாய் போற்றி
சங்கவெண் குழையாய் போற்றி தழன்மழு வுழையாய் போற்றி
மங்கள வுருவா போற்றி வானவர்க் கொருவா போற்றி
கங்கைசேர் தலையாய் போற்றி கயிலைமா மலையாய் போற்றி. (யஅ)

வந்தனக் குரியாய்போற்றி மாலயற் கரியாய்போற்றி
யுந்தனைத் தரித்தாய் போற்றி யநங்கனை யெரித்தாய் போற்றி
நிந்தனை யிலாதாய் போற்றி நினைகிலார்க் கலாதாய் போற்றி
கந்தனைப் பயந்தாய் போற்றி கைலையை நயந்தாய் போற்றி. (யகூ)

சோமனை முடித்தாய் போற்றி சுருதியைப் படித்தாய் போற்றி
பூமன்கம் மறுத்தாய் போற்றி புரமுநக் கறுத்தாய் போற்றி
மாமன வம்பாய் போற்றி வராகவெண் கொம்பாய் போற்றி
காமனைப் பொடித்தாய் போற்றி கைலையி னடித்தாய் போற்றி. (உ0)

வன்னியை முடித்தாய் போற்றி மணிமன்று ணடித்தாய் போற்றி
சென்னியா றேற்றாய் போற்றி சிதடர்பாற் றேற்றாய் போற்றி
சொன்னவில் லெடுத்தாய் போற்றி தோன்மடி யுடுத்தாய் போற்றி
கன்னியோர் பாகா போற்றி கைலைவா மேகா போற்றி. (உக)

வேலனைப் பயந்தாய் போற்றி விமலையோ டியைந்தாய் போற்றி
பாலனை யாண்டாய் போற்றி பணியணி பூண்டாய் போற்றி
யாலனை யூர்ந்தாய் போற்றி யாரணந் தேர்ந்தாய் போற்றி
காலனைத் தொலைத்தாய் போற்றி கைலையி னிலைத்தாய் போற்றி. ()

நஞ்சணி கண்டா போற்றி நகைமதித் துண்டா போற்றி
யஞ்செனு முகத்தாய் போற்றி யமரர்செய் மகந்தாய் போற்றி

விஞ்சைமந் திரத்தாய் போற்றி விளங்குதந் திரத்தாய் போற்றி
கஞ்சன்மால் விருப்பா போற்றி கைலைபம் பொருப்பா போற்றி (உஉ)

வேறு.

அந்தர சபையி னடித்தாய் சரணம் மரனொரு மூன்று பொடித்
தாய் சரணம், சந்தத மன்பரை யாள்வாய் சரணந் தற்பரை யுமை
யொடு வாழ்வாய் சரணம், மந்திர ரூபா சரணஞ் சரண மன்மத கோ
பா சரணஞ் சரணங், கந்தர நீலா சரணஞ் சரணங் கயிலா யபதே
சரணஞ் சரணம். (உச)

அம்புலி யுரியாய் சரணஞ் சரண மாடர வணியாய் சரணஞ் சரண
மும்பர்க ளுதா சரணஞ் சரண மொளிர்தரு பாதா சரணஞ் சரணஞ்
சம்புந டேசா சரணஞ் சரணஞ் சங்கரி நேசா சரணஞ் சரணங்
கம்புனை சடிலா சரணஞ் சரணங் கயிலா யபதே சரணஞ் சரணம். ()

அருவே யுருவே சரணஞ் சரண மமலா விமலா சரணஞ் சரண
மருவே மலரே சரணஞ் சரணம் வடவா லுடையாய் சரணஞ் சரண
ங், குருவே தருவே சரணஞ் சரணங் குளிர்வா னதியாய் சரணஞ்
சரணங், கருவேர் களைவாய் சரணஞ் சரணங் கயிலா யபதே சரண
ஞ் சரணம். (உசு)

மதிதா தகியாய் சரணஞ் சரணம் வரதா பயனே சரணஞ் சரணந்
துதிதாண் மலராய் சரணஞ் சரணஞ் சுரபூ சிதனே சரணஞ் சரணந்
ததிதா வெனவா டியவா சரணஞ் சலிலச் சடிலா சரணஞ் சரணங்
கதிதா மதிதா சரணஞ் சரணங் கயிலா யபதே சரணஞ் சரணம். ()

ஆதிப் பொருளே சரணஞ் சரண மையா னனவா சரணஞ் சரணஞ்
சோதிக் கிரியே சரணஞ் சரணஞ் சுகரூ பகரா சரணஞ் சரணம்
வேதச் சிகையே சரணஞ் சரணம் விடமார் களனே சரணஞ் சரணங்
காதிற் குழையாய் சரணஞ் சரணங் கயிலா யபதே சரணஞ் சரணம்.

வேறு.

பொடியணி மார்பா சரணஞ் சரணம் பொன்மலை வில்லாய் சர
ணஞ் சரணந், துடியணி கையா சரணஞ் சரணஞ் சுந்தர மெய்யா
சரணஞ் சரணம், படிபுகழ் பவனே சரணஞ் சரணம் பத்தரு ளத்

தாய் சரணஞ் சரணங், கடிமக் ழிதழித் தொடையூய் சரணங் கயி லா யபதே சரணஞ் சரணம். (உ௯)

வேறு.

அவரவர்க ளிவ்வாறு கவிமாலை தனித்தனியா யன்பிற் சாற்றத், தவளநகை யுமைகோமான் றிருவுளத்தின் மகிழ்கூர்ந்து தவத்தீர் நுங்கட், கெவளவெனி னுங்தோட மிலதாக புண்ணியங்க ளியாவுஞ் சேர்க, விவளவுசெய் புனையுநிதந் தோத்திரிப்போர் சிந்தனைக ளியாவு முற்ற. (௩0)

உங்களித யத்தினில்வேட் டனயாவுந் தருதுமவை யுணர்த்தீ ரெ ன்னச், செங்குமுத வாயுமைகோன் றிருவுளம்பற் றியதுணர்ந்து நினைத்துண் டேனும், பங்கமிலாக் ககோளமுனி முதலாய பலமுனி வர் பாரின் வீழ்ந்து, சங்கரநுங் காதரகிர் பாகரத யாநிதியே சாற்றக் கேண்மோ. (௩௧)

அடியேங்கள் சிற்றறிவாங் குறைதவிர்த்துப் பேரறிவா மதனை யுள்ள, படியேயெங் கட்குணரு மறிவதனை மலைமகடன் பாகா வே கா, கடியேறு பூங்கடுக்கை வேணியனே கடைக்கணிக்கக் கடவா யெ ன்னத், துடியேறு திருக்கரத்தா னந்தீசர் தமைப்பார்த்துச் சொல்லா நின்றான். (௩உ)

இம்முனிவர்க் கினிமேலெட் டுண்டெனினு மையமிலா தெமது ஞான, மெம்முனியோர் களுமிவர்கட் கிணையில்லை யெனத்தெளிவா வியம்பு கென்ன, வம்மொழியைச் சிரமேற்கொண் டடியேனு முய்ந் தேனென் றடியிற் றாழ்ந்து, தம்மிருக்கை முனிவரொடுந் தற்பரனார் விடைபெற்றுச் சார்ந்தா ரன்றே. (௩௩)

ஆயிரத்தெட் டரணமெலாங் கடந்துமுதற் கடைவாயி லணுகி யாங்க, ளாயிரத்தெட் டுத்திருக்கான் மண்டபத்திற் சிவகணங்க ளனே கர் சூழ, வாயிரத்தெட் டாகியமந் திரசொரூ பனைமனத்து ளாக்கி யன்றாற், காயிரத்தெட் டென்னுமருச் சனைசெய்து முனிவரைப்பா ர்த் தறைவா னந்தி. (௩௪)

சென்மகோ டிகடோறுஞ் சிவதரும மனுவனுவாச் சேர்ந்து மேவு, கன்மபரி பாகமுறீஇப் பரகதிக்கு வழிகாட்டுங் கண்ணு கின்

றீர், அன்மயமா கியகண்டத் தண்ணறிரு வருட்குரிய ராணீ ரன்ன, தன்மையரா கியவுங்கட் கையமியா துளதாகிற் சாற்று கிற்பீர். (௩௫)

எனநந்தி கேசனருள் வாங்கினிற்றேற் றியவமுத மியாரு முண்டா, ஙனபங்க யங்களெலா மாதவற்கண் டாலென்ன வலர்ச்சி மேவிப், பனகங்க டரித்தபரா பரனுருவே மெய்ஞ்ஞான பானு வேயிங்; கனமெங்க ளையமெல்லாங் கழன்றனமென் றிவையறவோர் கழறுநின்றார். (௩௬)

ஆதிபிரிவ் வகிலமெலா மண்ணறிரு வுளத்தெண்ணரி யாக்குஞான்று, சோதியா கியகைலை முதற்கண்ட தெனப்பெருநா றுவரிந்து கூறு, நீதியா கியபுரா ணங்கள்பல பலவாக நிகழ்த்தா நிற்கும், யாதிதனி னிச்சயமென் றெண்ணுவோ மெனநந்தி யடிகள் கூறும்.

கற்பங்க ளெண்ணிலவாற் கைலையுமெண் ணிலவாமக் கருத்தைநாடிற், சற்பங்க டரித்தபிரா னீரொன்பான் புராணத்திற் சாற்றுநின்ற, சொற்பங்க மாகாமற் சுருதிகளு மவ்வாறே சொல்லா நிற்கு, மற்பங்கொ ளரசருறை யிடங்களெல்லா மரண்மனையென் றுனவாபோல். (௩௮)

எம்மறிவு முங்களைப்போன் றிவ்வாறே யையமுற்ற திறைவனோர்ந்து, செம்மையுறு தனதுதிரு வருளாகுந் தினகரனாற் றிரட்சியான, மைம்மலிபு மனவிருளை யகற்றிமுத்தி நிலைகாட்டு மோர்க்கமாக, மெய்ம்மையா கியபரம ரகசியவந் தரங்கமொன்று விளம்பினானே.

முன்னொருகா லத்தில்வரு பொன்னிநதித் தென்பான்மழ விருநாதத்தின், மன்னுகடம் பாடவிக்கீ சானதிசுகி னைங்காதம் வழியிற்கானே, யென்னுமந்த நகர்வடக்கின் முக்காதங் கோதருணன் றனுக்குமேற்காம், பன்னுமிரு காதத்திற் கோளேச மென்னவொரு பதியுண்டாமால். (௪௰)

அன்னதிருக் கோளேசம் பரமரக சியவந்த ரங்கத் தானமென்னுமிந்தத் தலமகிமை யரியயனிந் திரன்முதலா மிமையோ ராலும் பன்னரிது கைலையெனும் பருப்பதத்துக் கிஃததிகம் பாரின் மீது கன்னன்மொழி யுமைக்குமிது கழறிலமால் வீரலையெனுங் கருத்தினாலே. (௪௧)

வேறு.

நந்தலவுங் கடல்புடைசூழ் புவிபுரக்கு நராதிபர்க
ளந்தரங்க மானோர்க்கு மமைச்சர்கட்கு மகத்துரிய
சொந்தமண வாட்டிகட்குந் தோற்றுமற் கருவூல
முந்தணமாய் வைப்பதுபோல் வைத்தனமத் தலமதனை. (சஉ)

பூமணம்போ னமைப்பிரியாப் பொன்னிமையப் பசுங்கொடிநந்
தோமணியா கியகுமரன் குறியதாட் பெரிய தொந்திச்
சாமியுருத் திரகணத்திற் றலைமைபெற்றோ ரிவர்களுக்கும்
யாமுரைத்தோ மிலைப்பரம ரகசியவத் தலத்தேற்றம். (சங)

ஆதிகயி லாயமென்று மநாதிசிதா காயமென்று
மோதுறுமத் தலப்பெருமை யொண்டிகிரி யானறியான்
வேதவியா சனுமறியான் விரிஞ்சன்முத லோரறியார்
சூதமுனி வனுமறியான் சுருதிகளு மறியாவே. (சச)

வேறு.

என்றென் னுள்ளத் திருக்குமை யத்தினை
யன்று கூறி யகற்றின னுங்கவை
யின்று நுங்கட் கியம்புவ னியானென
நன்று கேட்கென நந்தி யருள்செய்வான் (சரு)

வேறு.

பிறப்பதாற் கதிகொடுக்குஞ் சிலதலங்கள் கண்டதனாற் பெட்பி னியும், இறப்பதாற் கதிகொடுக்குஞ் சிலதலங்க ளினைத்தலா லிசைக்கு முத்தி, துறப்பதாற் கதிகொடுக்குஞ் சிலதலங்கள் வசித்தவர்க் குத் துலங்கு முத்தி, குறிப்புடன்கூ றியவிவைக டருந்திருக்கோ ளேசமது கூறக் கேண்மின். (சசா)

வேறு.

ஈதலாற் றென்னவனுட் டினிற்றலம்பன் னுன்குளவாங்
கோடிதலா மகற்றுவன குணமெலா மீதுவன
சூதமா முனிவேத வியாசனிவ ராற்றுறவோர்க்
கோதியன கேட்கவென விரித்தன்பி னுணர்த்துவனால். (சஎ)

வேறு.

கருவால சாவுமுயிர்க் கருள்பாண்டிக் கன்னிநுதற் றிலதமென்ன
மருவால வாலமுறுந் தளவுவிரி நறுமணம்வா னெங்கு மேறுங்கு
தருவால் வாயமருஞ் சங்கரனங் கயற்கண்ணி தலைவன் வாழுந்
திருவால வாயென்னும் பூவுலக சிவலோகந் திகழு மாதோ. (௪௮)

மாப்புடையார் பாப்புடையார் மணியுடையா ரெனுமாலு மறைநான் கோதுங், கோப்புடையா வெண்கமலக் கோதையுடை யூரணனுங் குலவைந் தாருத்,தோப்புடையான் முதலோருந் தொலைந்தாலுந் தமதிளமை தொலைவிலாத, மூப்புடையா ராப்புடையார் திருவாப்ப னூர்த்தலமு முன்புண் டாங்கே. (௪௯)

வேறு.

வரங்குன்றற் கரியவென மதித்திருந்த சூரபன்ம
னுரங்குன்றப் பொருமயிற்கை யொருமுருகன் முதற்றலமாய்ப்
புரங்குன்ற நகைத்தபரி பூரணனே திருவுருவாம்
பரங்குன்றத் திருத்தலமத் திருநாட்டின் பாலாமால். (௫௰)

எவணலும் பாகணலு மெரியுருவ மான நெற்றிக்
கோவணலு முருவேறாய்க் குணம்வேறா யிருந்து மொன்றா
மாவணம்பற் பலவாயு மான்பாலொன் றுமாபோற்
பூவணன்வாழ் பூவணமப் பொன்னாட்டிற் பொருந்தியதே. (௫௧)

காடகமா நாடகஞ்செய் கண்ணுதலார் கரத்தெறித்த
வாடகமே ருச்சிலைபி னமையிமைய மலைமகளாய்
பாடகமெல் லடியுமையாள் பாலருந்திப் பாடுதமி
ழேடகமாக் கொண்டதிரு வேடகமந் நாட்டினதே. (௫௨)

பருச்சுழியே யுந்தியல்குல் படவரவே யெனுமடவார்
மருச்சுழியுந் தருமுதலா வகுத்தவெண்பா னூலிலக்கக்
கருச்சுழியும் வீழாது கரையேற்றுங் கப்பலெனுந்
திருச்சுழியற் றிருத்தலமத் தென்னாட்டிற் கணியாமால். (௫௩)

வேறு.

மரிச்சாலும் பிறந்தாலும் வாழ்ந்தாலும் தாழ்ந்தாலு மானமெல்லா
முரிச்சாலு முடித்தாலு முண்டாலு மொழிந்தாலு முலகத் தாசை

கரிச்சானு மலைவனத்திற் சார்ந்தானு முத்திதருந் தானப்பா பன்னித்
திருச்சாலி வாடீச வேணுவனத் திருத்தலமத் தென்றிக் காமால். ()

## வேறு.

மருவிராய் நின்றதுழாய் மாலைமுடி மான்மனித
வருவிரா யிருடிகட்கு மும்பர்கட்கு மிடர்புரியும்
பெருவிரா வணனைவதை பிழைகழியப் பூசனைசெய்
திருவிரா மீசமெனுந் திருத்தலந்தென் றிக்காமால். (ருரு)

## வேறு.

சிற்றுலத் திலையுதரத் தகிலாண்ட புவனமெலாஞ் செனிப்பிக் குஞ்சீ
ருற்றுலத் தமுதுண்ணுங் குறும்பலா வீசரிடத் துமைதன் வாக்காற்
பெற்றுலித் தலத்திருக்கப் பெறவேண்டு மெனத்தரணி பீட மான
குற்றுலத் திரிகூடா சலமென்னுந் தென்கைலைக் குன்றங்காமால். ()

## வேறு.

தேனப்பேர்த் தவளைபடாச் சிவகங்கைச் சிவதரும
தானப்பே ருரினுக்குச் சண்டதிசைச் சமீபத்தின்
வானப்பே ருராரும் வந்துதினம் வணங்குதிருக்
கானப்பே ருரென்னுங் கானகை ரமுமவணே. (ருஎ)

கனவாயின் மனைமக்கள் களத்திரஞ்சுற் றங்காணி
நினைவாயி லாததனை நித்தமெனத் தடுமாறி
மனவாயிற் காயமதில் வரும்பொல்லாங் கினைமாற்றும்
புனவாயிற் றிருத்தலமப் பொன்னாட்டிற் பொலிவுளதே. (ருஅ)

வாடானை மறைநான்கும் வகுப்பானை வளைந்தபிறைக்
கோடானை வெளுத்தபன்றிக் கோட்டானைக் குணமிலர்பா
னாட்டானை மணிமன்று ளாடித்தானைப் பூசைபுரிந்
தாடானை முத்திபெற்ற வாடானை யும்மவணே. (ருகூ)

## வேறு.

மருப்புத்தா ராடளிகரு மதுவளிக்கு மிதழியங்கான் மதியந் தாங்குக்
கருப்புத்தா ராந்தரங்க முத்திறைக்கு நத்திரைக்குங் கழனி சூழ
விருப்புத்தா ராதுழலு மனங்கதுவாப் பரசிவன்வீற் றிருக்குந்தெய்

# திருக்கோளபுரப் புராணம்.

**வத். திருப்பத்து ராவதமும் தென்பாண்டித் திருநாட்டிற் சிறப்புற் றேழ்க்கும்.**

(சூய)

கங்கைநா யகனிவனே கைலைநா யகனிவனே கனன்மா லேனந்துஞ் செங்கைநா யகனிவனே தில்லைநா யகனிவனே திருமால் வேதன்ற ங்கணு யகனிவனே தற்பரையாய்ச் சிற்பரையாய்த் தனுவு மான மங்கைநா யகனிவனே யெனும்பரமன் கடோரவெற்பு மன்னு மாங் கண். (சூக)

இத்தகைய பழமையதாந் திருத்தலம்பன் னூன்குமூல கிரே ழாகச், சத்தகன்னி மலேயேபொன் வரையாக நானூடே சாருந் தீ வா, நித்தியமா கியபூமி யந்தரஞ்சொற் சுழுமாங்க ணிலவ லாலே யததனுறை பேரண்டத் தினுக்கொருசூக் குமவண்ட மாங்கோ ளே சம். (சூ௨)

சகலபுவ னண்டமதிற் சூக்குமாண் டமதான நலமா மென்றே யகநெகிழன் புடன்கேட்கு முனிவரர்க்கு நந்தீச ரருள வாங்கே மிகமகிழ்க கோளமுனி யெழுந்திறைஞ்சித் துதித்தெங்கள் விமலா வன்ன, மகிமையுறுந் தலங்கோள புரமாமா றுரைக்கவென மகிழ்ந்து கூறும். (சூ௩)

வரையிரண்டு சிறகுடைத்தாய்ப பறந்தென்னப் பறந்துலக மடி யச் செய்யுந், திரிபுரத்தை நகைத்தெரித்தற் காகவும்விண் ணோர்கு ழுவைச் சிறைசெய் துட்டக், கரியவுடற் சூர்குலத்தை வேரோடு மறக்குகனுற் கடிதழுக்குஞ், சரியைதவ றிடுங்கொடிய செய்கையிரா வணன்சிரத்தைத் தடிதழுக்கும். (சூச)

மறைநீதி வழியாயுந் தரங்கயோ சனைமுடிப்பான் வைத்த தானங் கறைமேவு களத்தினர்க்கு மந்தரங்கத் தானமுமாங் கைலைத்தான மிறையோனை யிலனென்றுங் கன்மமே பலன்கொடுக்கு மென்று மெ ண்ண, நிறைதாரு காவனத்தார் விரதபங்கஞ் செய்துசென்று நிலவு ங்காலை (சூரு)

இலக்குமியோ ரிலக்கரொன்று கினரென்ன மோகினியா யிருக் கு மாலோன், நலப்பெருமை யாகியவந் தரங்கரக சியக்கழிலைத் தல

த்தி யியானு, நிலங்களொரு தனிக்கிடந்தா வெனத்திருமெய் பத்
தான நேர்மைத் தென்றியான், சொலப்பரமே சனும்கீதா குவெ
னக்கோ ளேசரெனத் தோற்றிச்சென்றான். ([illegible])

அக்கோள்கேட் டதனாலே கோளேச னெனத்திருமா லறைந்த காம
மெக்காலு நின்றதந்தத் தலமகிமை யாவர்களு மியம்பொ ணாதான்
மைக்காள கண்டர்திரு வருளாலே யாந்தெரிந்த வாறு சொல்வே
முக்காலங் களுமுணரு மாதவத்தீர் கேண்மினென மொழிய லுற்றான்.

வேறு.

பரவைக ளேழும் போன்ற பத்தினோ டெண் புராணங்
கரவில்பாற் கடலே போலுங் காந்தமக் காந்தத் துள்ளே
திரமுறு சனற்கு மார சங்கிதை யமுதஞ் சேர்ந்து
விரவிய சுவையாங் கன்னி விலங்கலின் சரிதை மாதோ. (சுஅ)

வேறு.

அறிவைந்துங் கோளாபுரத் தரன்சரிதை கேட்பதனி லழுத்திச்
சிந்தை, பிறிவின்றி மவுனமதாய்த் தீட்டியவோ வியமென்னும் பெற்
றி யாகி, மறியொன்று திருக்கரத்துச் சிவதருமே சுரன்வடிவை மன
த்து ளாக்கி, வெறியுண்ட சுரும்பரெனக் களிகூர்ந்து கேண்மினென
விளம்பு கின்றான். (சுகூ)

புராணவரலாற்றுச்சருக்கம் முற்றிற்று.

ஆக விருத்தம் உ0எ.

---

# தலவிசேடம்.

---

பூமியினிற் றேசமைம்பா னாறும்பாண் டியதேசம் புண்ய தேச
மாமதனிற் சிவதலம நேகமுள வாம்பதினொன் கதிக மாகுந்
தோமில்பதி னொன்கினுக்குட் டென்பிரான் மலையதுவே தோற்று மூல
மாமதனிற் கன்னிவரைச் சிவதரும புரமெனவைக்கு மதிக மாமால். ()

எவ்வாறு மெனிற்பூமி யந்தரஞ்சொர்க் கமுமிதுபோ லிருக்குமாங்கே, யவ்வாறு யினும்பரம னந்தரங்கத் தானமென வறைதலானுஞ், செவ்வானக் கடோரகிரி யெனுங்கயிலைக் கிறுமூலந் தெளிந்துகொண்மி,னிவ்வாறு கியமகிமை யுள்ளதல மூவுலகத் தினிலு மின்றே.

காசிதிருக் கேதாரங் கயிலைநா ளத்திதில்லை கமலை காஞ்சி
பேசருணை விருத்தகிரி சீகாழி மாயூரம் பெருவெண் ணெவ்
லாசிலிடை மருதாலங் காடுதிரு மதுரைமுத லான வெல்லா
மீசனொரு காரணத்தா லிருந்ததல மிஃதியல்பா யிருகுந் தானம். ()

வேறு.

அப்பவனி யனல்காலம் பரமழியு மூழியினு
மிப்பெரிய தலமிருப்ப தெங்ஙனமென் றியமபுவிரேன்
முப்புரமு நீறுங்கான் மூவரெவ்வா றிருந்தனரோ
வப்படியித் திருத்தலமு மூழியினு யழியாதாம். (௪)

அத்தமுறு தத்துவங்க ளாறாறு மொடுங்கிடுநாட்
சுத்தமா யையினடங்கு மெனப்புகலுஞ் சுருதிகளுக்
கத்தமாய்க் கரதலவா மலகமெனக் காட்டுறுமா
லித்தலமற் றெத்தலமு மிறுதியிலீங் கொடுங்குமெனல். (௫)

பூருவகா லந்தொடங்கிச் சிவதரும புரமென்றுஞ்
சீரியதா கியபெருமைத் திருக்கோள புரமென்று
நாரியர்மற் றெழுவர்களாற் கன்னிமா நகரென்றும்
பாரினிலியா வருமுரைப்பர் பகரவினைப் பற்றறுமே. (௬)

வேறு.

அந்தரஞ் சுவர்க்கம் பூமி யாம்புவ னங்க ளீல
கந்தர னொடுக்குங் காலைக் காரண வுருவ மாகு
மிந்தமா நகருட் டங்கு மென்பதற் குரிய சான்றிச்
சுந்தர நகர மன்னோ வப்பெயர் துலங்கு மின்றும். (எ)

வேறு.

ஓருருவு மிலாதாரை யிருமுனிவர் பலவுருவா யுகங்க ணென்கும்,
பாருருவும் புனலுருவு மனலுருவுங் காலுருவும் பரந்த வானின்

சீருருவு மியமானன் றிருவுருவும் பரிதிமதி சேர்ந்த வெட்டுப் ..
பேருருவ மாய்நினைந்து பூசிப்ப தித்தலத்தின் பெருமை யன்றோ.

## வேறு.

ஓரூரின் மூன்றுலகு நாடு முளவாகுஞ்
சீரூரெப் புவனத்துந் தெரிப்பரிதா லதற்கேற்பப்
பாரூரும் பதிகடொறு மொருவடிவாம் பராபரையு
நீரூருஞ் சடையாரு மூன்றுருவாய் நின்றனரால். (௯)

தொனித்தவளை படாச்சுனையுந் தொனித்தவளை படுஞ்சுனையுங்
கனித்தநெல்லி யடிமுளைத்த கரும்பனைய சிவக்குறியு
மனித்தர்கடே வுருவாகுங் கோளபுர மாநகருஞ்
செனித்திருந்துந் தெரியாரேற் சிதடரினுஞ் சிதடர்களே. (௰)

கலன்களுக்குண் மகுடமென நதிகளுக்குட் கங்கையெனக்
குலங்களுக்குட் பனவரென முனிவரர்க்குட் கும்பனெனப்
பலங்களுக்குண் முத்தியெனப் பசுவினுக்குட் டேனுவெனத்
தலங்களுக்குட் சிவதரும புரமதிகஞ் சாற்றிடினே. (௧௧)

## வேறு.

கன்னிவரைச் சிவதரும புரத்திணையா மொருதலமுங் கனிந்த நெல்லி, தன்னிழலிற் றவளைபடாச் சுனைக்கிணையாந் தீர்த்தமுமத் தருக்கீழ்ச் சோதி, துன்னுசிவ தருமேசற் கிணையாமோர் சிவக்குறியுஞ் சுருட்டு முந்நீர், நன்னிலத்தும் பொன்னிலத்து மெந்நிலத்து மிலையுண்மை நவிற்றி னேமால். (௧௨)

## வேறு.

அத்தலத்தின் முதற்கற்பத் தரியதவக் ககோளமுனி
சத்தமா தர்களரிய தமிழ்முனிவன் புலத்தியன்மா
லொத்தபதஞ் சலிவடுக னொருமுருகன் மறைக்கிழவ
னத்திமுக னதியர்க ளருந்தவஞ்செய் தமர்குவரால். (௧௩)

குயின்மலையு மியாழின்மொழிக் குறமான்குஞ் சரியோடு
பயின்மலையுங் குறுகநிமிர் பன்னிரண்டு திருப்புயத்தோன்

வெயின்மதித்தி விழியானை யிவண்பரவி விற்றிருக்கு
*மயின்மலையு மிக்கன்னி மாநகர்க்குத் தெனுதாமால். (கச)

## வேறு

முன்புகிரே தாயுகத்தி னன்மறையுங் கீசகமா முளைத்து நிற்கும் பின்புதிரே தாயுகத்தி னுலேழா கமங்களும்பிப் பிலமா நிற்கு மென்பர்கள்மூன் ருமுகத்தி லீரொன்பான் புராணமுமீரம் பெண் ணை யாகு, மின்புறுநான் காமுகத்தி னுரணனு மலகமென விருக்கி ன்றனே. (கரு)

முனிவரெலாந் தருவாயுஞ் செடியாயுங் கொடியாயு முளைத்து நிற்பர், பனிவரைமேற் குன்றுகளாய்ப் பதினெண்சித் தாதிகளும் ப ரவி நிற்பர், கனிகாய்பூ விலைகவடாய்த் தருக்கடொறுங் கடவுளர்கள் கலந்து நிற்பர், புனிதவிரு டிகள்கருட கந்தருவர் பறவைகளாய்ப் பொருந்து வாரால். (கசு)

ஒருகடிகைப் போதீண்டு வதிந்தவர்கள் பொன்னுலகத் தும்ப ராவ, ரிருகடிகைப் போதிதனி லிருந்தவரிந் திரராவ ரிரண்டின் மே லா, வருகடிகை வசித்தவர்கண் மலரோன்சத் தியவுலகில் வாழ்வர் நான்கு, தருகடிகை வசித்தோர்கள் சத்தியலோ கத்தரசாய்ச் சார்வ ரன்றே. (கஎ)

நாளொன்றத் தலத்திருக்கின் வைகுந்த மாநகர்க்கு நாத னுவர் வேளன்று படவிழித்தோன் கயிலைபரத் தலத்திருநாண் மேவி னோ ர்கள், கோளொன்ற வகைமூன்று நாளிருக்கிற் சிவனுருவங் கொள் வர் திண்ணங், காளவிழி யெழுமாதர் தவஞ்செயிதில் நாளைந்து கழித் தார் முத்தர். (கஅ)

திருக்கோள புரமென்று சிந்தித்தோர் சாலோகஞ் சேர்வர் நா ளுந், திருக்கோள புரமென்று செப்பினோர் சாமீபஞ் சேர்ந்து வாழ் வர், திருக்கோள புரக்கன்னி வரைவலமா வருவோர்சா ரூபஞ் சே ர்வர், திருக்கோள புரத்திருந்தார் சிவன்முத்த ராவரிது திண்ண மா மால். (கக)

---

மயின்மலை-மயூரகிரி குன்றக்குடி.

வேறு.

அருந்துதலா குதியாகு மனந்தல்சிவ யோகமதாந்
திருந்தியவுற் சபநடத்த திருக்கோயில் வலம்வருதன்
மருந்துணவா ராதனமா மடவார்க ளுடன்கூடிப்
பொருந்துதலத் துவிதமுத்தி பொற்கோளே சத்தலத்தில்.(௨0)

வேறு.

தானங்கள் சோடசமும் யாகங்கள் சோடசமுந் தரும்பே றெல்லாங்
கானங்க ளரங்குதொறு நெருங்குதிருக் கோளபுரங் கண்டா லெய்து
மீனங்கள் சிறிதுமிலா நூல்கள்பல வாய்ந்திடினு மெழிற்கோ ளேச
ஞானங்கொ டிருநகரங் காணுருக் கிருவினையு நசியா வன்றே. (௨௧)

தாத்திரிப்பான் முளைத்தசிவ தருமேசர் கோளேசந் தன்னிற் சைவ
ராத்திரியில் வசித்தவர்கள் கோததிரங்கண் மூவேழு மெய்து முத்தி
யாத்திரைபோம் பொழுதுதிருக் கோளேச நினைவின்றி யடைந்தாரே
னுந், தீர்த்தமறு பானூறு கோடியுமா டியபலன்சித் திக்கு மாதோ.

வேறு.

அன்னிய தலங்க டம்மிற் சாந்திரா யணநூல் சொன்ன
நன்னிய மங்க ளோடு நடாத்துநின் றோர்கட் கந்நால்
பன்னிய பலங்க ளின்ன பதியினின் மூன்று போதுஞ்
செநநெலன் னம்பா லோடு தெவிட்டவுண் பவர்கட் கெய்தும்.

வேறு.

அன்னதா னங்கள்பல வந்தணர்கட் கீந்தபல னந்த மூதூர், தன்
னின்மேவியதவத்தோ ரொருவனுக்குக் கொடுத்தபலன் றனக்கொவ்
வாது, சொன்னதா னத்துடன்வத் திரதானம் பூதானஞ் சுரபி தா
னங், கன்னிகா தானமதிற் செய்பவர்க்கு வரும்பலன்கள் கணிக்கொ
ணுவால். (௨௩)

திருவாரூர் திருவானைக் காதிருவ ணுமலைசெந் திருக்கா ளத்தி
மருவாருந் திருத்தில்லை மணிமன்று வெள்ளிமன்று *வன்ன மன்று
பெரிதாந்தாம் பிரமன்று முதலான தலத்திருந்தோர் பெரும்பே

* வன்னமன்று-சித்திரசபை. இது திருக்குற்றாலத்துள்ளது.

றிங்ஙு, ஞொருபோது வசித்தவர்கட் குறுமென்று லிதன்பெருமை யுணர்க்கற் பாற்றே. (உ-ரு)

கொலைபுரிந்தோர் களவுசெய்தோர் குருமனைவி தனைப்புணர்ந் தோர் கோவைக் கொன்றோர், நிலைதவறாங் கள்ளுண்டோர் பொய்ப கர்ந்தோர் வேதநிந்தை நிகழ்த்தி னோர்கள், கலைகுலைந்த கற்புடைமா தரைக்கண்டோர் பிறர்பொருளைக் கவர்ந்தோர் செம்பொன், மலைசிலை யா வளைத்தவர்வாழ் கோளபுர மெனிற்றேட மருவி டாதே. (உ-சு)

வேறு.

அத்தலத் திருப்போர் மற்றைய தலத்தி லமர்பவர் தமைநினைந் தாலு, முத்தியெய் துவர்கண் மற்றைய தலத்தின் மூதறி வுடையரா யிருந்து, மத்தனக் கோள புரநினை யாரே லறிவுடை யோரவ ரல்லர், சித்தமா சுடைய ரெனினுமப் பொய்யாச் சிவபுர நினைந்தவர் தேவர்

வேறு.

அத்திருமா நகரின்பே ராமலக வனங்கோ ளபுரஞ் சிவன்
முத்திபுரங் கோளபுரஞ் சிவதரும புரமகத்ய புலத்ய மூதூர்
சத்தகன்னி புரமாதி கைலாய மந்தரங்கத் தலமுன் பான
சுத்தசிதா காசமென வேதவிறைற் றெரிந்துரைப்பர் சுருதி வல்லோர்.

அத்தலத்தின் றிருப்பெயர்பன் னொன்றிலொன்றே னும்பகர் வோ ரனறையு முந்நீர், மத்தியிற்றங் கியவுலக முழுவதுஞ்செங் கோல் செலுத்து மன்ன ராகிப்,புத்தமுதுண் பவர்கள்பொன் னாட் டரசாகிச் சிலகாலம் போகமூழ்கிச், சத்தியலோ கத்தரசாய்த் தண்டுளாய் புனை மாலாய்த் தங்கு வாரே. (உகூ)

அத்தலத்தின் மகிமைசொல வாதிசே டனுக்கும்யுக மனந்தஞ் செல்லு, நத்தருக்கும் விரிந்தநளி னத்தருக்கு முரைக்கவன்னா நாடீர்போ தாவாஞ், சித்தருக்கு முனிவருக்கு மவ்வாறே யமர்வரெ னச்செப்பு நீரார், முத்தருக்கும் பத்தருக்கு மத்தருக்கு மத்தான மூ லமன்றே. (௩௦)

தலவிசேட முற்றிற்று.

ஆக விருத்தம் உ௩௭,

# தீர்த்தவிசேடம்.

இவ்விதமாத் தலமகிமை யுரைத்தநந்தி கேசரைப்பார்த் திருடி வேந்தர், *பவ்வியமா யட்டாங்க பஞ்சாங்க மாய்ப்பணிந்து பரசி னோடு, நவ்வியணி திருக்கரத்தார் நாளுட்டுத் தலமகிமை நவிற்றுந் தோறுந், திவ்வியமா னதுதீர்த்தச் சிறப்பினையு மருள்கவெனச் செப்ப லுற்றார். (க)

புலப்பகைநீக் கியமுனிவீர் கேட்டபொழு தேழுன்றுப் புகல கின்ற, மலப்பகைநீக் கிடுமுதநதி வழிகாட்டு மத்தீர்த்தம் வகுப்பாம் வெண்ணித், திலப்பகையா கியமுறுவற் கற்பினெழு மாதர்தவந் திருந்தச் செய்யக், குலப்பெரிய கங்கைநதி தவளைபடாச் சுனையாகிக் குறுகித் தோன்றும். (உ)

கும்பமுனி வரன்பொன்னி நதியொடுதாம் பிரபன்னி கொணர்ந் தான் றேவை, நம்புபுலத் தியன்கோதா வரிகொணர்ந்தான் பதஞ் சலியந் நாக நாட்டி, னும்பர்புகழ் பாதாள கங்கைகொணர்ந் தான்மாத ரோரேழ் பேரு, மெம்பெருமான் சடாமகுடத் திருத்தகங்கை கொணர்ந்தனர்பின் பியம்பக் கேண்மின். (ங)

முனிவரெழு வரும்பமுனை நதிகொணர்ந்தா ரிருசுடரா மூர்த்தி மான்கள், புனிதநரு மதைகொணர்ந்தார் புழைக்கைமுகன் கடலாறும் புகுதச் செய்தான், செனியசர வணப்பொய்கை யறுமுகவன் கொணர்ந்தனனத் திருமால் வேத, னினியசங்குத் தாமரைதீர்த் தங் கொணர்ந்தார் சுனைவடிவா மிவைக ளெல்லாம். (ச)

## வேறு.

மற்றைய முனிவர் சித்தர் வானவர் கண்ட தீர்த்த
மிற்றென வெண்ணற் பாற்றோ விவற்றினோர் தீர்த்த மேனுஞ்
சற்றெனு மூழ்கப் பெற்றோர் தமதுபாக் கியத்தை யெண்கண்
பெற்றவ னானுஞ் சொல்லப் பெரியகற் பங்கள் வேண்டும். (ரு)

---

*பவ்வியம்-அடக்கம்.

## வேறு.

இப்பெருமைத் தீர்த்தத்தி லொருதீர்க்கத் தேனுமினி தெய்தி யாடி, யப்பணிசெஞ் சடைக்கோளே சருக்கபிடே கம்புரிவித் தவர்கள் சுற்ற, மெய்ப்புவனங் களிலிருந்த தென்னினும்வெள் ளிக்கயிலை யெய்தி யங்க, ணுெப்புயர்வில் லாதவொரு வன்னுருவம் பெறுவரிஃ துண்மை யாமால். (சா)

## வேறு.

அத்தடங் களினீ ராடி யஞ்செழுத் தோதிப் பூதி
யுத்தம வக்க மாலை யுடம்பெலா மணிந்தன் போடு
சுத்தமெய்ஞ் ஞான னந்தச் சோதியை நினைந்தார்ச் சிக்கின்
மத்தமு மதியுஞ் சூடி மாணுரு வடைந்து வாழ்வார். (எ)

## வேறு.

தென்புலத்தோர் தமைக்குறித்தத் தவளைபடாச் சுனைக்கரையிற் சிராத்தஞ் செய்யின், முன்புகங்கள் குலத்திருந்த மூவெழுசுற் றத்தவரு முத்தி சேர்வ, ரன்புடன்சோ டசதானம் யாகசோ டசமனந்த மாற்றும் பேறு, பொன்பிறங்கு மத்தடத்திற் சிவபூசை யொருபோது புரிதற் கொவ்வா. (அ)

## வேறு.

சென்மகோ டிகளிற் செய்த செபதப முதலா வுள்ள
நன்மைக ளநேகஞ் சேர்ந்து நாடொறும் வளர்ந்து நித்தத்
தன்மையைத் தெரிந்த னித்தச் சார்பற விட்ட சுத்த
நின்மலர்க் கிந்தத் தீர்த்தம் படிந்திட நினைவுண் டாமால். (கூ)

## வேறு.

செங்கதிரோன் வெண்கதிரை விழுங்குதின மிருக்திரைச் சினந்தங் காந்து, பொங்கரவம் விழுங்குதினம் விதிபாத மதிப்பிறப்பிப் புனலின் மூழ்கிக், கங்கை சடைக் கணிந்தவர்பூ சனைதான தருமங்கள் கருதிச் செய்யி, ணங்கதினைன் றுக்கனந்தங் கோடிமடங் கதிகமதா மறிந்து கொண்மின். (ய)

மேடமதி நிறைதிங்க ளிடபத்தின் விசாகமக மிதுனத் திங்க
ளாடிமதி பூரமா வணியவிட்டம் புரட்டாசி யதனி லொன்பான்

கூடிரவைப் பசிகந்த சட்டிகார்த் திகைசோம வாரங் கூன்விற்
றேடும்மா திரைமகரம் பூசமரா னிசிமாசி சேன்மா னேறே. (௧௧)

இந்நாளா கியமதிவி சேடத்தி னத்தீர்த்த மெய்தி மூழ்கின்
முன்னுளிற் கோடிசன்மத் தியற்றியபா வங்கணொலா முடுகி யோடு
முந்நீர்வா வியைத்தீண்டி னள்ளியுணி ஞசமிக்கி னன்பிற் காணிற்
பன்னுளுஞ் சரியைகிரி யாயோகஞ் செய்தபலன் பலவுண் டாமால்.()

இத்தகைய தீர்த்தத்துட் சிவகங்கை நெல்லியடி யிருக்குந் தீர்த்த, நத்தரற்றுந் தவளைபடாச் சுனைகேோ ளகத்தீர்த்த நற்றேன் றீர்த்தஞ், சத்தகன்னி மார்தீர்த்தஞ் சிவதரும தீர்த்தமெனச் சாற்று வாரா, லத்தீர்த்த நாமமொன்றை யறைந்தாலுந் தீர்த்தமெலா மாடும் பேறும். (௧௨)

அருத்தத்து ளதிகநவ நிதியிமையோர்க் கதிகமரா ளுய்ந்த சந்த விருத்தத்துட் டிருப்புகழ்நல் வேதியர்க்குட் டீக்கதர்பண் விளங்கு சுத்த, நிருத்தத்து ளகமார்க்க நீதத்துண் மனுநீதி நிலவு பூமேற், றிருத்தத்துட் சிவகங்கைத் தவளைபடாச் சுனையதிகந் தெரிகு வீரால்.

வேறு.

எனப்புகலுஞ் சூதமா முனியை நோக்கி யிருவினையின் றொடக் கறுத்தவிருடி வேந்தர், மனப்பெரிய பூங்கமலா சனத்தின் மீது மா தொருபா கனையிருத்தி மகிழ்ச்சி கூர்வோய், சுனைக்குமுனந் தவளைப டா தென்று கூறுந் தொடர்பெவன்சாற் றுகவென்னச் சுருதி நான்கு, மனத்தவன்போற் றெரிக்கவல்லீர் கேண்மி னென்ன வதன்மகி மையனைத்தினையு மறையா நின்றான். (௧௫)

வேறு.

கனந்தருபா கீரதியுந் திங்களும்பூங் கடுக்கைக் கண்ணியும்வே ணியிற்றுலங்கக் கையின்மான் மழுவும், புனைந்துபுலி யதளுடுத்துக் கவுரியுமோர் பாங்கர்ப் பொருந்திவீற் றிருந்தருளும் பொலிவனைத்து ங் கண்டு, தினந்தொழுமா லயன்முதலாந் தேவர்குழா மெல்லாந் திரு க்கயிலை முதல்வர்பதந் தெரிசிப்பான் செலுங்கா, லனங்கலுழன் சிக

ண்டிமுதல் வாகனத்தே வரும்வந் தமனடியைத் தொழுதிறைஞ்சி ய
னுகிநிற்குங் காலே. (கசு)

உயர்ச்சிதரு முவணவர சினைநோக்கி யொருநா ளுமைபாகன்
சிரத்திருக்கு முரகவேந் துரைக்கு, மயர்ச்சியிலா தேன்கருடா சுக
மோவென் றோத வரமிருக்கு மிடத்திருந்தாற் சுகங்குறையின் றெ
ன்றான், புயற்சடில னஃதறிந்திங் கிருத்தலொழி பூமேற் புனலரவா
குதியெனவாய் புதைத்திறைஞ்சி நாயேன், றுயர்ச்சியகல் வெங்ந
னெனக் ககோளபுரத் திருக்கிற் றொலேயுமெனத் தனதுதிரு வாய்ம
லர்ந்து சொன்னான். (கஎ)

கட்செவியோ னதுகேட்டுக் கண்ணீரா றுகிக் கைலேவரை சூழ்
ந்துதாழ்ந் தறுகாலி னேடும், விட்புலத்திற் செல்லுமுடி மேருவின்
றென் பாலாய் விண்ணுறு சூடிதிருத் தலங்களெலாந் தொழுது, தட்
பநதி யுங்கானுங் கிரிபலவுங் கடந்து தரணிமான் முகத்தெய்வத் தா
மரை போல் விளங்கும், பட்குலவு கழனிவிளே தருதிருக்கோ ளேச
ப் பதிசூழ்ந்தங் குளதீர்த்தம் பணியரசன் படிந்தான். (கஅ)

பூமியினு மந்தரத்துஞ் சுவர்க்கத்து மிருக்கும் பொய்யாதார் சி
வதருமர் கோளேசர்ப் போற்றி, வாமிமர கதவல்லி சிவகாம வல்லி
வையகம்போற் றுவுடைத்தாய் வல்லிபதம் வணங்கிக், காமியந்தன்
மார்த்தமோக் கத்தினுக்கும் வித்தாங் கங்கைநதித் தவளேபுடாச் சு
னைத்திருத்தக் கரைமே, னேமியங்குன் றெனவுடலே வளேத்துமணிச்
சிரமே னிமிர்த்திரவி யினைநோக்கி நெடிதுதவஞ் செயுங்கால். (கக)

வேறு.

ஒருவாத வுதரவன லவித்தற் காக வுறுசிவ ராசிமுழு லுயர்
தென் னுகம், வருகாலு முணவின்றி யுறையுங் காலே மலர்ச்சுனையின்
மண்டுகங்கள் வதித னேக்கிக், குருகாலுஞ் செயலினையுங் குறித்தங்
தோவிக் கொலேநமது விழிகாணக் கூடிற் றேயென், றுருகாவின் றர
னையுள்ளத் துன்னை வாங்க வொருவாக்கந் தரத்தினினின் றுதித்த
தன்றே. (உய)

வேறு.

நஞ்சடைக்கு மணியான நஞ்சடைக்கு மெயிற்றாய் நளினமலர்த்
தீர்த்தமிது நமது கங்கை யதனால், விஞ்சுதொனித் தவளேயின்று மு

தலிதிலில் லாமல் விலக்கினே மனத்துயர்நீ விடுமதிவெண் சிறைப்பா, பஞ்சமரு வித்திருத்தந் தவளைபடாச் சுனையென் றமர்கநின்சா பமுநீ ங்க வருள்புரிந்தோ மெனச்செங், கஞ்சமலர்ச் சரணிறைஞ்சத் திரு க்கரத்தாற் சிரமேற் கலைமதியோ டிருத்திபெங்குங் கலந்தனன் கோ ளேசன். (உக)

வேறு

அன்றமுத வித்திருத்தந் தவளைபடாத் திருச்சுனைப்பே ரடைந் தநாமா, லென்றுமுனி வரர்க்கறியத் திருக்கயிலை வரையினந்தி யிசை த்தா னென்னத், துன்றுநைமி சாரணியந் துலங்குமிரு டிகட்குயர்ந்த சூதன் கூற, நன்றுநன்றென் றதிசயித்துக் கரமுகிழ்த்துத் துதிகள் பல நவிற்றி னரால்.

தீர்த்த விசேட முற்றிற்று.

ஆகவிருத்தம் உருகூ.

---

# மூர்த்தி விசேடம்.

இவ்வண்ணந் தலப்பெருமை தீர்த்தத்தின் மகிமைதனை யிசைத் தோ மேருச், செவ்வண்ணச் சிலையார்வாழ் திருக்கயிலைக் காவனந்தி திருத்தாள் போற்றி, மைவண்ண மணிமிடற்றுச் சிவதருமேச் சுரன் பெருமை வகுப்பா மென்ன, வைவண்ண மலர்வாழி யிகலகற்று முனி வோர்கட் கருள்வ தானுன். (க)

அருள்வடிவா யாமலகத் தருக்கீழாய் முளைத்தெழுந்த வமுத லிங்கப், பெருமைதான் மூவர்கட்கும் பேசரிதே லியாம்பேசல் பேத மைத்தா, மருமலிபூங் கடுக்கையணி சிவதருமேச் சுரனருளால் வகு க்கலாமென், றொருமையினு லுரைக்கலுற்றே னிருமையினும் பெ ருமைநமக் குறுக வென்றே. (உ)

வேறு.

சத்த கோடிமா மந்திரந் தம்முளே சிவ
னைத்த வைந்தெழுத் தோமெனு மக்கரத் துள்ளாய்
நித்த மாயமர் திருத்தல்போ லெங்கணு நிறைந்த
சுத்த சைதன்னியஞ் சிவதன்மேச் சுரனெனத் துலங்கும் (ங)

அரிய தாஞ்சிவ தருமமென் ற்றோண நான்குந்
தெரிய வோதிய தித்தலங் குறித்தெதன றெளியக்
கரிய கந்தரக் கோளநா யகனெனுங் கடவுட்
குரிய நாமமுஞ் சிவதன்மேச் சுரனென வோங்கும். (ச)

புண்ணி யத்தினுட் சிவதன்மம் பெரிதெனப் புகன்ற
வண்ண லேதிரு வாமல கத்தின்கீ ழமுத
வண்ண மாகிய சிவலிங்க வடிவமாய் முளைத்து
நண்ணு மாதவ ரிதயதா மரைமிசை நடிக்கும். (ரு)

சத்த மாகிய பிரபஞ்ச மிங்ஙனந் தரலா
லத்த மாகிய பிரபஞ்சம் பின்பெண்ப தியார்க்கு
மொத்த தேயத னுலிந்த விலிங்கமே யுலகின்
வித்த தாகுமென் றறிமின்கள் வேதவே தியரே. (சா)

மூவ கைப்படும் வடிவமாய் மூவகை யுயிர்க்கு
மூவ கைப்பிர வஞ்சமாய்த் தாமுமூன் றுருவாய்
மூவ கைப்படுந் தத்துவ மாகிமுக் குணமாய்
மூவ கைப்படு மவத்தையாய் மூன்றிடத் தமரும். (எ)

இன்ன தாம்பதார்த் தத்திரை யங்களை யியம்பு
மன்ன வாகம மிருபதோ டெட்டுமா மலக
முன்ன ராகிய சிவதன்மேச் சுரன்சொலாய் முனிவோர்
பன்னு நான்மறை யின்னமுந் தனித்தனி பகரும். (அ)

வேறு.

காசியினிற் சிவலிங்கஞ் சுயம்புருவாய் முளைப்பதற்குக் காணும் வித்தா, மாசினியிற் பலகனியு மக்கனிக்குட் பலசுளையு மமர்ந்த போலுந், தேசுடைய வொருதீபத் திலுடையினின்றும் பலதீபஞ் செனித்தாற் போலும். பேசுசிவ தருமேச சிவலிங்கத் திடத்தினின்றும் பெருகுங் கோடி. (கூ)

சிவதருமே சுரனென்ன வொருதரமுச் சரிக்கினபோர் தேவ ராவ தவமுடனே யிரண்டுதர முச்சரித்தோர் சதுமுகவன் றனே யாவர், கவனமுடன் மூன்றுதர முச்சரித்தோர் செங்கமலக் கண்ண

ஞ்வர், பவமகல நான்குதர முச்சரித்தோ ருருத்திரர்தம் பதங்கொள் வாரே. (ய)

சிவதருமேச் சுரனென்றுற் பஞ்சமா பாதகங்க டீர்ந்து போகுஞ், சிவதருமேச் சுரனென்று லைந்தெழுத்தைக் கோடிபுருச் செபிக்கும் பேருஞ், சிவதருமேச் சுரனென்று லநேகசன்மங் களிற்புரிந்த தீமை நீங்குஞ், சிவதருமேச் சுரனென்று லட்டமா சித்திகளுஞ் சேருந் தானே. (கக)

தவளைபடாச் சுனைக்குணபா னெல்லியடி முளைத்ததனி மருந்தைக் கண்டாற், பவளமால் வரையுருவுங் கண்மூன்றுங் கரநான்கும் பயின்று வாழ்வார், கவளமா கயமுரித்த கோளேசற் றெழுதுமெனக் கருதினுலுங், குவளைவிழிப் பவளவிதழ்த் தவளமக ளவர்நாவிற் குடிகொள் வாளால். (கஉ)

வேறு.

ஆமலகத் தமர்சிவதன் மேசனென வதுகேட்டார்
சோமசூ ரியச்சுடர்முன் றொலைகின்ற விருளெனவு
மோமெனுமந் திரவொலியா லோடுமிராக் கதரெனவுந்
தீமையுறு பாவமெலாஞ் சிதைந்தோடத் திகழுவரால். (கங)

ஆறுகா லமுநெல்லி யடிமுளைத்த சிவக்கொழுந்தை
யூறுகா தலினோடு முண்மையுடன் பணிவோர்க்குச்
சீறுகா லனுமில்லை தேகத்திற் பிணியில்லை
பேறெலாமவர்க்குண்டு பேரின்ப மவர்க்குளதே. (கச)

வேறு.

இச்சிவனுக் கெண்ணெய்நெல்லி மாமஞ்சள் பாறயிர்நெய் யிளநீர் கன்னல், நச்சுமெனு மிச்சைநரந் தம்பலா மாவாழை நறும்பலங்கள், மெச்சுபதஞ் சாந்தமீ ருயாட்டி விரைத்தாமம் விளங்கச் சூட்டிப், பச்சரிசி யடிசிலொடு பண்ணியங்க ணிவேதிப்போர் பாரான் வாரே. (யரு)

திருப்பணிகள் செய்வோர்கள் செய்விப்போர் பரமனடி சேர்ந்து வாழ்வார், மருப்பயினந் தனவனங்கள் வைத்தவர்கண் மால்

பதத்தின் மருவி வாழ்வார், விருப்பமுடன் கட்டளைவைத் திருப்பவி ர்க ணொற்றிவிழி மேவி வாழ்வார், சருப்பமணி வான்கோயி லலகிடு வோர் சசிதழுவுந் தலைவ ளுவார். (கசு)

திருவிளக்குத் திருமாலை திருப்பரிவட் டந்தூபந் தீபக் கால்கள் பெருவிளக்க மாந்திருமஞ் சனக்குடங்கள் சுருட்டிகொடி பெருமே ற் கட்டி, கருவிபல கொடுசுவர்க்கக் கவின்காட்டும் புனைதிருத்தேர் கதிர்ப்பல் லக்குத், தருபவர்கள் வாகனங்கள் சமைத்தளிப்போர் திரு க்கயிலை தன்னில் வாழ்வார். (கஎ)

ஆட்டைவிசே டத்திருநாண் மாதவிசே டத்திருநா ளன்பிற் செய்வோர், சேட்டிளந்திங் களைப்புனைநதோ ராகுவார் தெப்பவிழா த் திருத்தி னோர்க, ளுட்டையெலா மொருகுடைக்கீ ழாள்வர்பல கேத்திரங்க ணல்கு வோர்கள், வீட்டையளிப் போனருள்பெற் றள வாத பேரின்ப மேவி வாழ்வார். (கஅ)

பாலாட்டப் பசுக்கொடுத்தோர் பல்லியங்கண் முழக்குவித் தோர் பசுங்கொம் பன்ன, சேலாட்டும் விழியர்நடஞ் செயப்பள்ளி யறைவிழாத் திருந்தச் செய்தோர், தாலாட்டுப் புரிவித்தோர் பின்ன லொடு கோலாட்டந் தனைச்செய் வித்தோர், காலாட்டுங் கவரிகுடை கோளேசர்க் களித்தவர்கள் கடவு ளாவார். (ககூ)

இச்சிவதன் மேசருக்குச் செய்புமுப சாரமெலா மீரே ழான, முச்சகத்தி லுள்ளசிவ மூர்த்திகட்கெல் லாஞ்செய்து முடித்த பேறு, நிச்சசிரா லம்பசுயம் பிரகாச சாட்குணிய நிறையா னந்தம், வைச்சிரு க்கும் பழம்பொருளே பெருங்கருணை வடிவாகி வந்த தாலே. (உ௦)

அட்டாங்க பஞ்சாங்க மாய்ப்பணிவோர் வலம்வருவோ ரரு ணைல் லிக்கீழ்க், கட்டாங்கு மலரிறைப்போர் கன்னிவரை யைச்சூழ் வோர் கவிதை சொல்வோ, ரெட்டாங்கு மளவெணிது மவன்புகழை விரிப்போர்க ளிவர்க ளெல்லா, முட்டாங்கு மலநீங்கி யும்பருமிம் பரு ம்வாழ்வ துண்மை யுண்மை. (உக)

வேறு.

நவநிதிக்குட் சங்கநிதி பதுமநிதி நவமணியிற்
சிவணுமா ணிக்கமொடு வச்சிரங்கள் சிறந்தெனப்

புவனமதி னுள்ளசிவ சத்திகட்குட் கோளபுரச்
சிவனுமா வுடைத்தாயுஞ் சிறப்புடைய ரெனத்தேர்மின். (உஉ)

வேறு.

இக்கோள புறம்போது மொருதலமுந் தவளைபடா திருக்குங் கங்கை, மிக்கான தீர்த்தமுநதாத் திரிமூலத் தெமையாள வேண்டித் தேன்று,'ஷமக்காள கண்டசிவ தருமலிங்கத் தினுக்கிணையா மகே சீன் ருனு, முக்காலத் தினுமில்லை யம்மூர்த்தி நாமங்கண் மொழியக் கேண்மின. (உங)

வேறு.

கன்னிமலைக் கொழுந்தீசர் கணப தீசர் ககோளேசர் கங்கேசர் கைலை யீசர், மன்னுகீ சகத்தீசர் பிபபி லேசர் வளர்பெண்ணை வனத் தீசர் தாத்தி ரீசர், பன்னுபுக ழகத்தீசர் புலத்தி யேசர் பதஞ்சலிசர் வேதேசர் கேச வேசர், சொன்னவயி ரவவீசர் சிவதன் மேசர் சொ ற்பொய்யா மொழீசரெனச் சுருதி கூறும. (உச)

வேறு.

இன்ன வாம்பதி னேழ்திரு நாமமுஞ்
சொன்ன பேர்கள் சுருதிக ளுன்கையும்
பன்னு கின்ற பயனுறு வாரென
வென்னை யாளு மிறையருள் செய்தனன். (உரு)

வேறு.

சிவதருமக் கோளேசச் சிவலிங்க பெருமானைக்
குவலயத்திற் கண்டார்கள் கூற்றனுருக் காணார்க
டவளைபடாச் சுனையெடுத்துச சம்புவுக்காட் டினநீரை
யவளவெனு முண்டார்க ளாப்புலைப்பா லுண்ணாரே. (உசா)

வேறு.

கன்னிவரை புரித்தாரே கரங்கொள்வரை யுரித்தாரே
சென்னியணி யாற்றினரே சிறந்திடமை யாற்றினரே
மின்னுமதிக் கங்கையரே வேதாகின் கங்கையரே
பன்னுநெல்லித் தருவாரே பரகதியைத் தருவாரே. (உள)

விரிமறையின் சிரத்தாரே விளங்குமைந்து சிரத்தாரே
திரிபுவனத் திருந்தாரே சிதடருக்குத் திருந்தாரே
தரிபரசு பாணியரே தவளையுருப் பாணியரே
யரியயனுக் கரியாரே யாவுடைச்சங் கரியாரே. (உ௯)

காமனெரி திருக்கழலார் காலனைக்காய் திருக்கழலா
ராமலகக் கானகத்தா ரரக்கன்மெலி கானகத்தா
ரேமவரை யாயவில்லா ரிரசிதவெற் பாயவில்லார்
நாமவரை நாடுவமே னற்கதியு நாடுவமே. (௩௰)

வேறு.

என்றுமா தவர்க்கறிய வெழிற்கயிலைக் காவனந்தி யியம்பக் கேட்டு, நன்றியா முடலெடுத்த பயன்பெற்றோந தேவரீர் நவின்ற கதை, யன்றுபாற் கடல்கடையத் தோற்றமுத மெனச்செவியா லருந்தி மாயை, வென்றுபே ரின்பவெள்ளத் தருட்டோணி மிசையேறி வீடுற் றேமால். (௩௧)

தீர்த்தவிசே டமுமூர்த்தி மகிமையுமத் திருத்தலத்தின் சிறப்புங் கேட்டு, மூர்த்தமெடுத் திடும்பயனைப் பெற்றனமூர்த் தியின்சரிதை முழுதுங் கேட்கும், கூர்த்தவறி விலமெனினுங் குரவர்புதல் வோரிதயங் குளிரும் வண்ண, மார்த்திசெயு மாறருள வேண்டுமெனத் தொகுத்துவிரித் தறைவா னுறன். (௩௨)

முற்பூசை தனக்காக்கு மும்மதத்தன் பூசனைசெய் முறையு மாத, வற்கான புகர்சாபங் கழிந்துபிறப் பினைந்தாய் வகுத்த வாறும், வெற்போடு வேழமட்டோன் றமிழ்வேத மோதுமந்த வியப்புந் தேனின், சொற்பூவை யனமடவா ரெழுவர்களு மதுவுருவாய்த் துலங்கு மாறும். (௩௩)

பதஞ்சலிமுனி யாகரண பாடியஞ்செய் தருளடைந்த பரிசுந் துன்பை, வதம்புரியும் புலத்தியனுங் குறுமுனியும் பலவுருவாய் வந்த வாறுஞ், சுதன்பெறவு நித்தியமாய்த் துலங்கவும்பொன் மாதுமுனந் துதித்த வாறுங், சுதந்தவிர்க கோளரு ளடைந்துதம்பே ரந்நகர்க்குக் காட்டு மாறும். (௩௪)

சத்தியவா சகர்முத்தி சார்ந்துபொய்யா மொழியரெனச் சாற்றுமாறும், பத்தியுடன் சிவதரும மயனுணர்ந்தப் பெயர்களுக்குப் பன்னுமாறு, முத்தனமூ ரற்சசியுங் கலைமகளுந் தம்மெண்ண முடித்தவாறு, மத்திதவிர்த் தர்த்தயா மப்பூசை வயிகேசர்க் காக்குமாறும். (கச)

வேறு.

தொகுத்துச் சொல்பதி னன்கெனுந் தொல்கதை
மகத்துவத்தினை மாதவக கொள்கையீ
ரகத்தி னின்புறக கேண்மினென் றன்பதாய்ப்
பகுத்து ணர்ததிடப் பன்னுவன் சூதனே. (கரு)

மூர்த்திவிசேட முற்றிற்று.

ஆக விருத்தம் உகச

---

# கணபதி பூசைசெய் சருக்கம்.

---

சீருலாங் கைலை மீதிற் சித்திரக் கயத்தை நோக்கிக்
காருலாங் குழலி வேண்டக் கருத்தனவ் வடிவாய்த் தந்த
நீருறைஞ் சடிலத் தந்தி நெல்லியங் காவாற் போற்றி
யேருலா வியமுற் பூசை யேற்றநற் காதை சொல்வாம். (க)

வேறு.

ஆதி யாம்பரை தன்னிடை விந்துவை யளித்தே
சோதி யாஞ்சநதப் பிரவஞ்சந் தோற்றுவித் ததன்பால்
நீதி யாமருத் தப்பிர வஞ்சம்பின் னிகழ்த்தி
மாதொர் பாகன்முத் தொழிற்கொரு மூவரை வகுத்தே. (உ)

அன்ன வர்க்குமுத் தத்துவத் தினுமதி காரந்
தன்ன தாக்கினே யாற்பதித் தத்துவாத் தனுவாய்
மன்னு மீசனப் பனிவரை மாதொடு மருவி
மின்னு வெள்ளியங் கிரிக்கிறை யோனென மேவும். (ங)

ஆய வெள்ளியங் கிரியினிற் கொடுமுடி யனந்தங்
காயும் வெங்கதிர்ச் சிலைமதிக் காந்தமா திகளான்
றோய மண்டபங் கோபுர விமானமெண் ணிலவாம்
மாய ராரண ரிந்திரர் கோடியோர் மருங்காம். (௪)

சிங்க வானனச் சிவகணம் பலபல வயமாத்
துங்க வானனக் கணம்பல பலதுதிக் கைமா
தங்க வானனக் குறள்பல பலகுதி தருசா
ரங்க வானனக் கிருத்திம மனந்தமாங் காங்காம். (௫)

ஐந்த ருக்குல விருக்கமெண் ணிலவவ ணவணே
பைந்த ருக்குழா நெருங்குகண் டலைகளபற் பலவே
கந்த முல்லைமல் லிகையிரு வாட்சிசெங் கழுநீ
ருந்து நந்தன வனங்களெண் ணிறந்தன வொருபால். (௬)

ஒன்ப தாகிய மணிகளா னுஞற்றுமண் டபங்கண்
முன்ப தாப்பலாப் பூக்மாத் தாழைமொய்த் தலவ
வின்ப தாகிய கன்னலு மரம்பைபு மிணைதுப
பொன்ப தாகைக ணிரைத்தபூம் பந்தரும் பொதுளும். (௭)

பங்க யத்தடஞ் செங்குமு தத்தடம் பணில
மெங்கு மொழ்யத்தநீ லோற்பலப் பூந்தட மெண்டிக்
குங்கு யிற்குழாம் பஞ்சமக் குரலினிற் கூவ
மங்கு லோதியா ரரம்பையர் குழாங்கொடு மகிழ்வார். (௮)
முத்தி னாற்செயும் பந்தர்கண் முதிர்ந்தசெம் பவளத
தொத்தி னாற்செயு மாடங்கண் மேடைகள் சூழச்
சித்தி ரம்பிறங் கியசில தெற்றிக டேவ
ரொத்த வோவிய வரங்கமெண் ணில்லன வொருபால். (௯)

வேறு.

இவ்விதமா மெவனங்க ணிறைந்தபெருங் கயிலாயத் தெம்மா
னோர்நா, ளவ்விவிழி யுமையோடும் வசந்தவிழாத் திருப்பவனி நாட்
டஞ் செய்து, கொவ்வையித ழுருத்திரகன் னியராடிக் கோகிலம்
போற் கூவிப் பாட, வவ்வணியா கியவசந்த மண்டபத்தி னினிதிருந்
தவ் வணிக ணோக்கி, (௧0)

திருவுளத்தின் மகிழ்கூர்ந்து தேவியைப்பார்த் திளமூறுவல் சி றிது தோன்ற, மருவுபல வகிலாண்டத் தாருயிர்களனைத்து முருவில் வரா ழ்வுற் றோங்கத், திரிவில்பர யோகிபுண ரோவியவெண் களிறுகளிற் றிருக்கண் சேர்த்த, மருவியகற் புலகினுறப் பரசிவையோர் பெண்க ரியின் வடிவங் கொண்டாள். (கக)

அந்தணர்க்கேதம பெருமானு மாண்கரியின் வடிவானு னன்னு ரன்ன, தகுதிபெறு மமயத்தி லொருவரிடை யொருவரன்பு சார்ந்து நோகக்கித், தொகுதிபெறு மாருயிரைப் பந்தித்த மலவடவி தொலைக் க வல்ல, பகுதிபெறு மானந்த வருள்கொழிக்கு மெய்ஞ்ஞானப் பரி தி கோடி. (கஉ)

ஓருருவாய் மத்தகங்கா தொளிர்மருப்புத் திருநயனத் தோடு பூந்தா, ளீருருவாய் மும்மதமாய் நால்வாயா யைங்கரமா யெழின்மா தங்கப், பேருருவாய் விக்கினங்க ணீக்குதற்கு மாக்குதற்கும் பெரிய வித்தாய்க், காருருவா மிடற்றிறையுங் கவுரியுங்கண் டுளங்களிப்பக் கண்முன் றோன்றி. (கங)

அன்னையும்பி தாவுமுன்ன மறிதெய்வ மெனவுலகுக் கறிவிப் பான்போற்,பன்முறையா லட்டாங்க பஞ்சாங்க முறப்பணியப் பரிவு கூர்ந்து,சின்மயனு கியபரமன் றிருக்கரத்தா லெடுத்தணைத்துச் சிர மோந்,தன்பாய்ப், பொன்மலைப்பூங் கொடியருமைத் திருக்கரத்திற் கொடுப்பவவள் போற்றி வாங்கி. (கச)

பெறவரிய திருமகனை யணைத்துமுத்தங் கொண்டாகம் பிறங்க ப்புல்லி,புறவோங்கு பிரியமுட னுச்சியைமோந் திருக்குங்கா லும்பர் நாதன், அறிவரிய விநாயகனங் குமரனெனப் பரசிவையு மஃதா கென்னப், பொறிமேவு புழைக்கைமுகப் பெருமானு மஃதறிந்து புகலுகின்றான். (கரு)

## வேறு.

தந்தையுறப் போலிருப்பர் தனையரென்றிப் புயந்த தாயுருப்போ லிருப்பரெனத் தரணியுளோர் கூறு, மந்தவுரை யடியேனுக் கயலோ வென் றேத வைமமுகமு முக்கண்ணு மாடரவப் பூணும், கந்தமலி கடுக்கைநிலாக் கங்கைநிறை சடையுங் காட்டுமடை யாளமெனக் க

ணனூந்தலோன் கொடுக்க, விந்தையுமை கருப்புவிற்பா சாங்குசம்பூங் கணையும் வியந்தளிப்ப நயந்தேற்று மீட்டுமொன்று புகல்வான். (௧௬)

உங்களிரு வர்க்குமுன்பா மெனக்குரிய பூசை யுலகியற்றும் படிக்குவர முதவுதிரென் றிறைஞ்ச, மங்குறவழ் பொழில் புடைசூழ் கோளபுர மாதி மாகயிலை யந்தரங்க மாத்தலமாம் புவிமேற், கொங்குகமழ் காவிரியின் றென்பாலி னுறு குரோசமுள ததன்மகிமை கூறவெளி தன்றாற், கங்கைநதி தவளைபடாச் சுனையெனவாங் காமக் கரையினெல்லித் தருநிழற்கீழ்க் காதலொடு முறைவோம். (௧௭)

முந்துகத்தி னல்வேத மூங்கிலுரு வாகி மோகமுடன் பூசிக்க வதனிழலி லிருந்தோம், பிந்துகத்தி னன்கேழா கமங்களும்பிப் பிலமாய்ப் பிரியமுடன் பூசிக்க வதனிழலி லிருந்தோ, மந்தமூன் றாமுகத்திற் புராணமிரண் டொன்பா னணைந்து பெண்ணை யாயிறைஞ்ச வதனிழலி லிருந்தோ, மிந்தயுகத் தினிநூரா யணனெல்லி யாகி யெமைப் பூசித் திடமகிழ்வா யின்புடனுங் கிருப்போம். (௧௮)

அகத்தியனும் புலத்தியனும் பலவுருவா யங்க ணமர்ந்துநமைப் பூசிப்பா ரைந்தலைநா கமதாய், மகத்துவமாம் பதஞ்சலியும் வந்தனை செய் தமர்வான் வழுத்தவெழு முனிவர்களு மாதர்களும் வருவார், சகத்தியல்பெ லாநீத்த கோளமுனி வருவான் றுமரையா சனன் வருவான் சண்முகனும் வருவா, னகத்தினயன் றலைகொய்த வயிரவனும் வருவா னளினமலர்த் திருவருவா ணமைப்பூசித் திடவே. ()

வேறு.

ஆகை யாலத் தலத்தை யணைந்தெம்மை
யோகை யோடு முளுற்றுதி பூசனை
தோகை யோடவண் டோற்றி வரமுனக்
கீகை செய்வ மெனவாய் மலர்ந்தனன். (௨0)

ஆனை மாமுக னவ்வுரை யுட்கொடு
ஞான நாயகி நாயகன் றடொழு
வான வாற்றின் வழிச்செல முன்னுங்கான்
மோன நந்தி யிவைமுடித் தானரோ. (௨௧)

சிவக ணங்களிற் சிற்சிலர் பற்பலர்
தவமி குந்திடு சாரத நாயகர்
கவன வாம்பரி பூண்டக வின்கொடேர்,
புவன நாயகன் முன்கொடு போந்தனர். (௨௨)

போந்த காலைப் புனிதனைத் தேரினிற்
சேர்ந்து வெள்ளிச் சிலம்பை வலங்கொடு
நீந்து வானந்தி நில்லென் றருளினான்
சேர்ந்த வைங்கரச் சிந்துரத் தண்ணலே. (௨௩)

வேறு.

செங்கதிர்மண் டலத்தோடு சேணின்று மிழிந்ததெனச்
சங்கரிவா முலகோருந் தாமரையா னுலகோரு
மங்குலூர் பவனுலக வாணர்களும் வந்திறைஞ்சி
யங்கவர்க ளெதிர்போற்ற வருளியவ னியின்மேவி (௨௪)

செம்பொன்வரைச் சம்புமாத் தீவதனி னோங்குகண்ட
மொன்பதிலெண் கண்டமுஞ்சென் றுயர்பரத கண்டமதி
னெம்பெருமான் கேதாரத் திறைவரைக்கண் டிறைஞ்சியவண்
முன்பதா கியகாசி முதற்பதிகண் டின்புற்று. (௨௫)

திங்கண்முடிச் சிவபெருமான் திருச்சடையி னின்றிழியுங்
கங்கைநதி யாடிமல்லி கார்ச்சுனமா நகங்கடந்து
சங்கரன்றன் விழிக்குமருந் தப்பினார் சயிலமுங்கண்
டங்கமெட்டைந் தாற்பணிந்தங் காராமை யுடன்மீண்டு. (௨௬)

திருவாலங் காடென்னத் திருமாலுக் குரைத்திசைப்பெண்
மருவாலங் காடென்ன மலர்மகனுக் கருள்செய்து
தருவாலங் காடென்னச் சதமகனுக் கருள்செய்து
திருவாலங் காட்டாடுஞ் செம்பொன்மணிச் சபையண்டான். (௨௭)

கண்புதைக்கும் பெருந்தோடங் கழுவவுமை சடைமேனீர்ப்
பெண்புதைக்கு மேகப்பீர்க் கிரண்டுபெரு வடுவளிக்கு
மண்புதைக்க வருகம்பை பாநதிமாத் தருச்சிறந்த
விண்புதைக்கும் பெருங்கீர்த்திக் கச்சிநகர் விழுந்திறைஞ்சி. (௨௮)

நான்முகன்மா லனமேன மாய்மேல்கீழ் நாடரிதாய்
வான்முகமேற் காணுமண்ணு மலைமருந்தை யுட்கொண்டு
பான்முகம்போல் வெளுத்தமுள்வாய்ப் பறவையிரண் டுறைபொருப்
பைத், தோன்முகத்துப் பிள்ளைகண்டு தூரத்தே தொழுதன்னுல். ()

உபயந்துன் றியவுடலு மலமுமொரு வினர்க்கருளுஞ்
சுபரவிசொ லெனக்கண்டோர் சொல்லமிளிர் சுவணப்பே
ரபயன்செய் திருத்தளியி லமர்ந்தநட ராசன்மா
சபையைந்துந் தரிசித்தான் றந்திமுகத் தெந்தைபிரான். (௩ய)

பிறந்தவர்க்கு முத்திதரும் பெரும்பதியும் பொற்கிணத்திற்
கறந்தபா திருஞானக் கன்றினுக்கூட் டியநகரும்
பறந்தசடா யுவுஞ்சம்பா தியும்பரவும் பழம்பதியு
மறங்களெண்ணான் கியற்றுமயி லாடுதுறை யும்பணிந்தான். (௩க)

தந்தைசொன்ன நதியென்னத் தாழ்ந்திரண்டு கூலமுள
வெந்தையார் திருத்தலங்க ளியாவுங்கண் டிறைஞ்சிநந்தி
சிந்தைமகிழ் வெய்தமணஞ் செயுமூதூர் தனைப்பணிந்து
கந்தமலி வெண்ணுவற் றிருநகருங் கண்டிறைஞ்சா. (௩௨)

வணிகமக டனக்காயாய் வந்தபிரான் சிராமலையைப்
பணிதற்காக் கிடைத்ததெனப் பரிவெய்திக் கயிலைநகர்
மணிமிடற்றன் கோகன்ன வள்ளல்பெரி யவட்போற்றி
யணிதிருந்துஞ் சுவேதநதி யதிற்புகுந்த நீர்படிந்தான். (௩௩)

அந்நதிக்குத் தெக்கணத்தி னப்பாலோ ரிருகாத
மன்னுமிக வளஞ்சிறந்த மாநிலமைந் தினுண்மருதந்
துன்னியதென் பாண்டியெனுந் தொன்னாட்டின் பலசிறப்புங்
கன்னிவரை யாமலகக் கானமுந்தோற் றிடவருங்கால். (௩௪)

## வேறு.

சிரங்களைந்து கொண்டகளோ ளேசர் வாழூர் திருநகரத் தினிற்
றவங்கள் செய்ய வேண்டிக், கரங்களைந்து கொண்டதும்பி வரவுநோ
க்கிக் காலாறு கொண்டதும்பி யெல்லாங் கூடி, மரங்களைந்தும் பேலத

ருவா யிருபா லுஞ்சேர் மார்க்கமதில் வரவெதிர்கொண் டமர மாதர், சரங்களைந்து மதன்றாவு மிரங்கா யெனனச சாற்றிநலின் முரலு மொலி தழைக்கு மாங்கண். (கரு)

வாரணமாய் வாரணத்தி னுரிவைதனைப் போர்த்த மாதங்கத் தானருள வந்தவொரு நால்வாய், வாரணமா யவன்வடிவா மாநெல்லி யின்கீழ் வளாசிவதன மேசரைபபூ சிக்கவரு மெனவெள், வாரணமு த நீன்றுவைததுத் தொனிகாட்டும வளைவாய் மலிந்தசிறைச செஞ் சூட்டு வளை நதமுடடாண் மருவும, வாரணங்க ளெக்காளந் தாரைசி னன மெனவே வாயங்காந திருப்புற்மு மலிந்திடுமபே ரொலியே. ()

வேறு.

ஐந்துகைய நாகமிதென றறுகாறு கங்கள்பண மலர்ததிய பா னு, சிந்துவெம்மை தனைமாற்றுங் கவிகையென நிழல்பரபபச் சென் னி மீதி, விந்துவுங்கங் கையுநீங்கா திருக்குநதே வாமபல்வர வினைக்க ண் டாங்கட், பைந்தளிர்ப்பூம பலவாவி யாம்பலெல்லா மலர்ந்துகண்ணீ ர் பரப்பு மாதே. (கஎ)

இன்னவா றுயபல வளங்கண்டு மகிழ்வெய்தி யிதயத்தன்பு துன்னவா ரணத்தின்முதற் பொருளிருபாற் சிவகணங்க டொழுது சூழ, மன்னவா வொடுமாற்றின் வதிந்தசிவ தலங்களியா வையுங்கண் டேத்திக், கன்னலுமவா ழைபுநெருங்குங் கன்னிவரை யாமலகக் கா வைக் கண்டான். (கஅ)

ஐந்துகையுஞ் சிரஞ்சூட்டி யானந்த வெள்ளமிழிந்தருவி யோட நைந்துருகித் தரைவீழ்ந்து பணிந்தெழுந்து தாளுவ நடந்து செல் லப், பைந்துணர்ப்பூந தருக்களெலா நடைப்படாம் விரிப்பதெனப் பார்தோன் றுமற், கந்தமலி மலர்பரப்பத் தந்திமுகக் கடவுள்சென் றுன் கோள மூதூர். (கசு)

ஆதிகை லாயமெனுங் கன்னிவரை யினைவலமா யணைந்து பூமேய், பூதிபுர ளப்பணிந்து புளகமெழ முகமலரப் பொங்கு கண் ணீர்ச், சீதவா னந்தவெள்ளங் கரைபுரள வாமலகத் திருக்குந் தேனைக், கோதிறனி முதற்பொருளை மனங்களிப்ப விருகண்ணுங் குளிரக் கண்டான். (சய)

ஆனந்தபரவசமா யவனியின்மே லெட்டுமெஞ்சு மழுந்த வீழ்ந்து காணுந்து செல்லியடிக் கீழ்முளைத்த தீங்கரும்பைக் கனியைத் தேனை, வாணுந்து பாற்கடலை மனககண்ணு லெடுத்தருந்தி வழிந்த தென்னத், தேனுந்து கவிமழைகாா காலமுகில பொழிவதெனச செப்பலுற்ருன். (௪௧)

வேறு.

பராபர நிராமய நிராலம்ப சாட்குணிய பரமா னந்த
புராதன புராந்தக நிரஞ்சன நிராகார புண்ணிய ரூப
முராரிநய ஞர்சசிதப தாம்புயகு ணுதீத மூன்று லோக
தராதல கோளகிரி யானகை லாசபதே சரணமென்றன். ()

வேறு.

இன்னவகை யாயபல துதிமுழக்கிசூ சிவகணங்கள் யாவுஞ்சூழ, வன்னவா மலாநிழற் கீழ்முளைத்த தனிமருந்தை யனைய மூர்த்தி, சொன்னவா ரணவாக மங்கள்புகன் றிடுமாறு தூலங்கப் பூசைக, ளென்னவேண் டியவனைத்துங் கொணாகவெனக் கணுதிபரை யேவிப் பின்னர். (௪௩)

வேறு.

அண்டர்கடச் சனைக்கொணர்கென் றொருகுறட்பார்த் தருள்செய்தான், கொண்டலூர் தியைக்கொணர்கென் றொருகுறட்குக் குறிப்பித்தான், தெண்டிரைவேந் தனைக்கொணர்கென் றொருகுறளைச் செலவுய்த்தான், மண்டனின்வீழ்ந் திறைஞ்சியவை மனத்தினுஞ்சென் றனவிரைந்தே. (௪௪)

ஆங்காங்குச் சென்றவர்கட் கறிவிக்கு முன்னரெழுந்
தோங்காரத் துட்பொருளா மும்பலுரை சிரமேற்றுத்
தேங்கார்வத் தொடுபோந்து தெண்டனிட்டு முன்னிற்ப
வோங்கார மூர்த்தியரு ளொழுகுவிழிக் கடைசாத்த (௪௫)

அடியேனு யிரங்கண்ண னென்றுரைத்தா னமரர்பிரான்
படிசூழுங் கடற்கரச னென்றன்மேற் றிசாபாலன்
பொடியார்மே னியவடியேன் புலவர்தச்சு னென்றனத்
தொடியார்கை யனைநோக்கித் துதிக்கையா னிவைபுகலும். ()

வேதாங்க மானசிற்ப விரிவான நான்முறைமேய
நாதாந்த மாஞ்சிவதன் மேசரெங்க ளுபகர்க்குங்
காதார்க ளுமையவட்குங் கவின்பரிவா ரங்களுக்கு
மாதார்ந்த திருக்கோயி றரிதத்தின் வகுக்கவென. (௪௭)

அவ்வுரைகொண் டவனேகி யவ்வண்ண மரைக்கணத்திற்
றிவ்வியமா கியகருப்பத் திருக்கிருக முதலாகத்
துவ்வமுத சேடமுணுந் தொண்டர்தளி யீறாகக்
கவ்வையுட னாற்றிவந்து கழறொழுதா னன்னவனே. (௪௮)

ஆயிரங்கண் ணுயிவணீ படிகளா ராதனைக்குத்
தூயவுப கரணமெலாந் தொகுக்கெனவா னைந்துமுதன்
மேயசந்தக் குழம்பீரு வேண்டுவன பற்பலவுங்
காய்கதிர்க்கற் சுடிகைமுதற் கவின்கொள்கன கப்பூணும். (௪௯)

வருக்கவகை யனஞ்சூதம் வாழைபலா முதற்கனிபுத்
துருக்குநெயிற் சமைத்தபல பண்ணியங்க ளுள்ளனவு
மருக்கொழுந்து வில்வமண மலர்வருக்கத் தொகையனைத்துங்
கருக்களைந்துத் தரவாங்கித் தந்துதிரு வடிபணிந்தான். (௫௰)

உயர்வருணை வொன்றுளிந்த வெழுகடலு மூங்கொருபாற்
றயிர்பானெய் தேன்கருப்பஞ் சாறுடுசுத் தோதகமும்
புயலேழும் பருகினும்வற் றுவாறு பொருத்துவையீங்
கியல்பாமெட் டாங்கடலை யிருஞ்சுனையாய் வருத்தென்றான். ()

வருத்தெனுஞ்சொல் லோவந்த வாரிதிக ளோமுனெனத்
திருத்தங்கொண் டடியேன்வந் தனனென்று செப்புதலு
மருத்தமறை முதன்மூனுவா மாம்பன்முகத் தெம்பெருமான்
பெருத்தமகிழ் வுடனெழுந்து பெரும்புனலிற் றுளைந்தனனால்.

வந்தபெருங் கணங்களெல்லா மாதீர்த்தம் படிந்தபின்மற்
றெந்தைமுத லாம்பர ரெல்லோரு நீறணிந்து
சந்தியா வந்தனங்க டருப்பணங்கண் முடித்தவுட
னந்திவணா னக்கமணி யங்கமணிந் தவர்முன்போய். (௫௩)

சிவகணங்கண் முகநோக்கிச் சிந்தூரத்தை வருள்செய்வான்
றவமிகுமுங் களுக்குரைக்குந் தகைபுரிமி னேவகில
புவனமெலா நிறைந்துநிறகுஞ் சிவதரும புரோகருக்கு
பவனபூ சனையுள்ளே வகுத்ததுவெளி யருச்சிக்க. (௫௪)

எல்லோருஞ் சூக்தமுத லிறைசொலு நூக்த திரஞ்சபிமின்
னல்லாதொன் றாம புகலீ ரந்தணிரென றறிவுறுத்தி
சொல்லாலுஞ் சங்கற்பஞ் செய்த்தருபவை விரற்றுறுத்திப
பல்லோரும காண்பாங் மண் டபசாந்தி பண்ணினனால். (௫௫)

வேறு.

தபனபுண்ணி யாகதும்ப தாபனபா லாகினிமண் டபத்தின் பூசை,
யுபமையிலாப பாத்தியவா சமனமருக கியூசங்க முடன்று பித்திங்
கிரமுகவன் பஞ்சசுத்தி யந்தரியா கார்ச்சனையு மிவைத்திலிங்கஞ்
சுபகரமா ரும்படிமுப்பபா னேடெண் கலாநியாசனுஞ் சூட்டினனால். ()

ஆவாக னாதிசோ டசநியா சமுமியற்றி யபிடே கங்கள்
,சேவாக னசோம சேகரா வென்றிரநது திலநெய் மஞ்சண்
மாவாதி குங்குமதநின் குழம்புகும்ப வபிடேக மரபி னாட்டிப்
பூவாகு மென்மையவாம் பரிவட்டத் தாலீரம் புலர்த்தி மாதோ. ()

வாசனையா கியகளபந் திருமேனி முழுவதுமட் டித்துப் பூணா றேசுமலி மகுடாதி யாபரணஞ் செறிவித்துத் தெரியல் சூட்டி யாசனமூர்த் திபுமருச்சித் தபபாற்றத் துவத்திரையத் தலர்கள் சாத்தி, யீசனுக்கென் வகைமலரு மருச்சித்து நிவேதனங்க ளெலாஞ் செய் வித்து. (௫௮)

தூபதீ பாதிகளீ ரெட்டுமுக மனுமியற்றிச் சுருட்டியாடி
தாபமாற் றிடுவிசிறி கவிகைசா மரங்காட்டிச் சபித்துச் சாத்தி
யேபரா பரகிருபா கரமனுலோ பங்கியிவை யியற்று லோப
மாபரா தஞ்சகிக்க வேண்டுமென விரந்துவல மாகச் சூழ்ந்து. (௫௯)

புவனியின்மே லட்டாங்க பஞ்சசங்க மாய்ப்பணிந்து புகழ்ந்து தோசார், தவனசுந்திராக் கினிநயன சந்திரசடா தரகெங்கா தரபு

ரணா நவதிரதி சயானந்த நாகபூ டணசபா நர்த்தரூப, பஞ்சருவி சங்காா பஞ்சகிர்த்தி யாதீத பரமே போற்றி.

வேறு.

கற்பனை கால மூன்றுங் கடந்துநின் றவனே போற்றி
தற்பர ஞான னந்தத் தனிமுத லானாய் போற்றி
நிற்பன நடப்ப வெல்லா நிறைந்தநின் மலனே போற்றி
பொற்பொது வினினின் றாடும் பொய்யாத மொழியாய் போற்றி ()

கங்கையுஞ் சடையு மைந்து வதனமுங் கடுக்கை பாம்புந்
திங்களு நெற்றிக் கண்ணுஞ் சிறியனேற் களித்தாய் போற்றி
மங்களஞ் செறிந்த நெல்லி வனத்துறை மருந்தே போற்றி
பங்கினிற் சிவகா மித்தாய் பதிந்ததற் பரனே போற்றி. (௬௨)

ஆரண நான்கு நான்கா னனத்தினின் றருளி மூல
காரண மான நான்கே முகமங் காண நோக்கும்
பூரண முகத்தி னின்று புகன்றவா பிரமனோடு
நாரணன் றேடிக் காணாத் திருக்கோல நாத போற்றி. (௬௩)

வேறு.

என்றுதோத் திரமனந்த வேதோப நிடதத்தி னியம்பிச் சோதி,
துன்றசவு ராதிசண்டாந் தமும்பூசை நிறைவேற்றிச் சுரர்க ளோடு,
மென்றுபலா திகளருந்திக் காலமா றினுமேன்மேல் விரிவாய்ச் செய்
தங், கொன்றுபோற் பலவருட மொருகணமாச் சிவார்ச்சனைக ளுஞ
ற்று நின்றான். (௬௪)

வேறு.

தேவவரு டத்தினு யிரமிவ் வண்ணந் தினந்தோறும் வழிபாடு
செய்யுங் காலே, மூவர்களு யகன்விரிஞ்சன் முதலா வுள்ள முப்பான்
முக் கோடியிமை யவர்கள் சூழ, மாவுலா வியமார்பன் மருங்கிற் போ
ற்ற மன்னுசிவ காமியெனும் வல்லி யோடு, மாவுருவா யடுத்தமால்
யானத் தேறி யமரர்பூ மழையினனோர் தணையும் போதில். (௬௫)

வேறு.

இந்திரன் களாஞ்சி தாங்க வெரியிறை தூப மேந்த
வந்தக னுடைவாள் பற்ற நிருதிமன் னடைப்பை கொள்ள

பந்தமா ருதம்பொன் னூல வட்டங்க ளசைப்ப முக்க
ணெந்தையார் தோழ னடி யெடுக்கவீ சானன் போற்ற. (கூரு)

சந்திரன் குடைகவிப்பத் தரணியெற் பந்த மேந்த
வந்தர வுடுக்க ளெல்லா மணிமுத்தின் பந்தர் தூக்கக்
கந்தர மேழும் பூவுங் கமழ்நறும் புனலும் பொன்னுஞ்
சிந்திமுன் னிற்ப வைந்து தேவருந் துமியு மார்ப்ப. (கூசு)

வேறு.

தும்புருநா ரதர்பாட முனிவ ரெல்லாஞ் சுருதிபிதி காசபுரா ணங்க ளோதக், கிம்புருடர் கந்தருவர் கீதம் பாடக் கின்னரர்கின் னரமுழக்கக் கருடர் சித்தர், தம்பணேவா சிக்கநந்தி சீர்த்தி கூறச் சதுமுகன்மான் மத்தளதா ளஞ்சேவிக்க, வும்பரெலா மரகர வென் றேலஞ் செய்ய வும்பன்முகத் தோங்கார வுருவங் கண்டான்.

அதுகாலை யெழுந்துவல மாகச் சூழ்ந்தா னடிக்கமல மேற்பணிந்தா னழகார் கையைப், பதுமமலர் போற்குவித்தா னந்த வெள்ளப் பரவையிடைப் படிந்துடலம் புளகம் போர்ப்பக், குதுகுலங்கொண் டானந்த நிருத்தஞ் செய்தான் குணலேயிட்டான் றுதிகள்பல கோடி செய்தான், விதுமேவு சடையணலீ தனைத்து நோக்கி மீக்கூரு மகிழ் வெய்தி விளம்பு மாதோ. (சுகூ)

இந்நாணீ செயும்பூசை துதிக ளியாவு மெமக்கினிதா யினவிந்தச் சரிதை தன்னை, யுன்னுநின் றவர்களிக பரத்து வாழ்க வுனக்குமுதற் பூசையின்று முதலுண் டாக, பன்னுக மேற்றுயில்வோன் முதலா வுள்ள பண்ணவர்மண் ணவர்கணமுன் பணிகி லாரே, லெந்நாளு மிடருறுக பணிந்து ளாரே லிடரெவையுங் கழன்றின்ப மெய்த மாதோ. (எ0)

வேறு.

இத்தலத்தி லுன்னைமலை மூர்த்திவிநா யகனென்றெல்லோரு மியம்பிடுக வின்னுமொரு காலை, நத்தணிசெங் கரன்வீர கத்திதீர்த் திடவங் கணமுமுன் றனக்காக நடனதரி சனத்துக், கத்தமிழ்மா முனிவரனு தியர்தவஞ்செய் தன்பி னடைவரிவ ணக்காலங் கடமுநீ காண்பாய், புத்திரவிங் கிருத்தியெனச் சிவலிங்கத் துள்ளே புகுந்தெங்கு நிறைந்திருந்தான் புகழ்தருநன் மேசன். (எக)

தந்தையுரைத் தும்பரோடுங் கணங்களோடு மிமயத் தையலொடு மறைந்தருளத் தந்திமுகத் தமலன், புந்திமகிழ் வொடுமந்தத் திருத்தலத்திற் றவனை புகாச்சனைக்குத் தரத்திலுயர் தன்மபுரே சனுக்கங், கந்தமுறு குடதிசையிற் கோளநா யகனுங் கடித்தலத்தின் மலைமூர்த்தி விநாயகப்பேர் தாங்கிச், சிந்தைநினைத் தனவெவையு மொருமொழி தடையச் செய்துயர்கற் பகநாணச் சிறப்பொடுவீற் றிருக்கும். (௭௨)

கணபதி பூசைசெய்சருக்க முற்றும்.

ஆக விருத்தம். ௩௬௬.

---

# மாதவன் சாபந்தீர்த்தசருக்கம்.

---

கண்ணுதலுங் கவுரியுமக் கயிலையினிற் கவருடற்
கெண்ணியரி யைக்கரியா விருத்திவிளை யாடுகையி
னண்ணல்கைதாழ்ந் திடவுயர்ச்சி யாமெனமா லறையவுமை
பண்ணியசா பந்தவத்தாற் பாற்றியவா சாற்றுவாம். (௧)

சந்திரர்கோ டிகடிரண்ட தகைமையெனுந் திருக்கயிலை
யந்தரங்கத் தானத்தி னரனிமய மகளோடு
மந்தணமாந் தானத்தின் மந்தமா ருதந்தவழச்
சிந்தைமகிழ்ந் திருக்குங்காற் றேவியைப்பார்த் திஃதுரைப்பான் (௨)

இக்கொப்பா மொழியாய்நா மிருவரும்பந் தயமமைத்துச்
சொக்கட்டான் விளையாட றொடங்கிடவா ராயென்ன
வக்கட்டா கியவிளையாட் டினுக்கிசைய வதுகாலை
முக்கட்டா னுவைப்பரவ முகுந்தனன்பு கொண்டணைந்தான். (௩)

அணைந்துலக நாயகனை யம்பிகையை யடிவணங்கிக்
குணங்குறியி லாதபெருங் குணக்குன்றீ றெனநிற்ப
மணந்ததுள வணிமார்ப வருதியென வழங்கியருள்
வணங்குறுநுண் ணிடையாளைப் பார்த்தொன்று வகுத்துரைப்பான்.

வைரத்திற் கித்தகைய சிறப்புண்மையை, "மாமணி மரபுக் கெல்லாம் வைரமே முதன்மைச் சாதி - யாமென வுரைப்பர் நூலோரதிகம்யா தேன்னி லேனைக் - காமரு மணிகட் கெல்லாந் தமரிடு கருவி யாமத் - தூமணி தனக் குத் தானே துளையிடுங் கருவி யாகும்." என்னும் திருவிளையாடற்புராணத் திருவிருத்தத்தானும், "வயிர வூசியு மயன்வினை யிரும்புஞ் - செயிரறு பொ ன்னைச் செம்மைசெ யாணியுந் - தமக்கமை கருவியுந் தாமா மவைபோ- லுரைத்திற முணர்த்தலு முரையது தொழிலே." என்னும் அகத்தியச் சூத் திரத்தானு மறிக. (௬௯)

ஒருவலா சுரன்ற தீசி யுடலென்பு வீழ்ந்த தேச
மரதன நாடென் றாகு மத்தேசங் கௌச லாதி
வருமதி லுதித்த வச்ரம் வாகைப்பூ நிறத்த வாகும்
புரைகலிங் கத்து தித்த வயிரம்பொன் னிறத்த வாமே.

(இ - ள்.) ஒப்பற்ற வலாசுரன் ததீசிமுனிவர் என்னும் இவ்விருவரின் சரீரமும் முதுகெலும்பும் விழுந்த தேசமானது, அரதன நாடென்று வழங் கும். அத்தேசங்கள் கௌசலம் முதலிய பெயரால் வழங்கும். அக்கோசல நாட்டிற் றோன்றிய வைரமணியானவை வாகைப்பூ நிறமுடையன. ஒப் பிடுதற்குரிய கலிங்கதேசத்திற்றோன்றிய வைரமணியானவை பொன்னிற முடையன.—எ - று.

கௌசலம் முதலிய தேயங்களென்றமையின், கோசலம் கலிங்கம் மா தங்கம் இமயம் மாராஷ்டம் சவ்வீரம் பவுண்டரம் மக்கம் என்பனவைகளாம்.

மாதங்க தேச வச்ர மல்லிகை மலரின் மேனி
பீதஞ்சே ரிமய வெற்பிற் பிறந்தன தவள மேனி
தீதங்கின் மாராட் டத்திற் செனித்தன சிவத்த மேனி
யோதுஞ்சவ் வீர தேசத் துதித்தன கரிய மேனி.

(இ - ள்.) மாதங்கதேசத்திற்றோன்றிய வைரமானவை மல்லிகை மல ரின் நிறமுள்ளன. அருவிநீருடைய இமயாசலத்திற்றோன்றிய வைரமணியா னவை வெண்ணிறமுள்ளன. கெடுதியில்லாத மாராஷ்டதேசத்திற்றோன்றிய வைரமணியானவை சிவந்த நிறமுள்ளன. சொல்லப்படுகின்ற சவ்வீரதேசத் திற் றோன்றிய வைரமணியானவை கருநிறமுடையன.—எ-று. (௭௦)

பேசிய பௌண்ட ரத்திற் பிறந்தன குவளை மேனி
யோசையே மக்க தேசத் துதித்தபொன் னிறத்த விப்பால்
பூசிய வாகை வாழை மூங்கிலின் பூநி றத்த
வாசிலா வச்சி ரங்கட் கச்சுதன் றெய்வ மாமே.

(இ - ள்.) யாவரும் புகழ்ந்து கூறிய பௌண்டரதேசத்திற்றோன்றிய வைரமணியானவை குவளைநிற முடையன; கீர்த்திவாய்ந்த மக்கதேசத்துப்

பிறந்தவை பொன்னிறமுடையன இதற்குப்பின், அலங்கரித்த வாகைப்பூ வாழைப்பூ மூக்கிற்பூ என்னும் இவைகளின் நிறமுள்ள குற்றமற்ற வைரமணி கட்குத் திருமால் அதிதேவதையாம் —எ-று. (ருஅ)

ஓர்மா றுய்வெ ளுத்த வயிரத்தே யும்பர் கோமான்
பூரிய பசுவின் கொம்பிற் பலநிற வயிரங் கூற்றுங்
கூரமுள் ளில்வம் போது குலாவிய பலாசம் பொற்பூச்
சீரிய வயிரத் திற்குத் தெய்வமிவ் வாயு வாமே.

(இ-ள்.) ஆறுமூலைகளையுடைத்தாய் வெண்ணிறமமைந்த வைரமணி களுக்குத் தேவேந்திரன் அதிதேவதையாகும். பருத்த பசுவின் கொம்பினு டைய பலநிறமுள்ள வைரமணிகளுக்கு யமன் அதிதேவதையாகும். கூர்மை யுள்ள முள்ளிலவமலர் விளக்கமுள்ள முண்முருக்கின் அழகிய மலர் என் னும் இவைகளின் நிறமுடைய சிறந்த வைரமணிகட்கு அதிதேவதை வாயு தேவனாகும்.—எ - று. (ருகூ)

கோங்கலர் நிறஞ்சி றந்த குறையுறு வயிரத் திற்குத்
தேங்கிய நாரஞ் சேருந் தெண்டிரை வருண னாகு
மோங்குநீர் நிறவச் ரத்திற் கொளிகொள்வெண் டிங்கட் டேவன்
பாங்குறு கோப மேனி வயிரத்தே பரிதித் தேவே.

(இ-ள்) கோங்கமலர்போலும் நிறத்தின்மேம்பட்ட பழுதற்ற வைரமணி கட்குத் தேக்கெடுக்கின்ற சலத்திரளினிறைந்துள்ள தெள்ளிய அலைகளை யுடைய கடலின்கணிருக்கும் வருணனே அதிதேவதையாகும் மேம்பாடுற்ற தண்ணீரின் நிறமுள்ள வைரமணிகட்கு ஒளியமைந்த வெள்ளிய சந்திரனே அதிதேவதையாகும். பொருத்தமுள்ள இந்திரகோபப் பூச்சியின் நிறமுள்ள வைரமணிகட்குச் சூரியனே அதிதேவதையாகும்.—எ-று. (சு௦)

தீநிற வயிரத் திற்குச் செய்யதீக் கடவுட் டெய்வ
மானவிவ் வயிரத் துள்ளு மமைந்தநாற் குலமு முண்டு
வானுறு படிகம் பாயு முயற்கண்வா ழைக்கு ருத்து
நீனிறை கார்வா னத்து நிறமணி மறையோ ராதி.

(இ-ள்.) அக்கினியின் நிறமுள்ள வைரமணிகட்குச் செந்நிறமுற்ற அக்கி னிதேவனே அதிதேவதையாகும். இவ்வாறாகிய இவ்வைரமணிகட்குள்ளும் வாய்ந்துள்ள நான்குவருணங்களும் உண்டு மேம்பாடுற்ற படிகநிறமுள்ளதும், பாய்கின்ற முயற்கண்ணின் நிறமுள்ளதும் வாழைக்குருத்தின் நிறமுள்ள தும், நீலநிறம்நிறைந்த மேகம்படர்ந்த ஆகாயத்தின் நிறமுள்ளதும் ஆகிய வைரமணிகள், முறையே பிராமணர்முதலிய நான்குவருணங்களையுடையன வாம்.—எ-று.

எனவே, வைரமணிகள் கோசலம் கலிங்கம் மாதங்கம் இமயம் மாரா ஷ்டகம் சவ்வீரம் பவுண்டரம் மக்கம் என்னும் இவ்வெட்டுத் தேயங்களினும்

உற்பத்தியாமென்பது, அவை எட்டும் காட்டுவாகை பொன் மல்லிகைமலர் வெண்மை செம்மை கருமை குவளைமலர் பொன் என்னும் இவ்வெண்வகை நிறமுள்ளனவென்பதும், இவற்றுள் காட்டுவாகை வாழை மூங்கில் என்னும் இவைகளின் மலர்போன்ற நிறமுள்ளவற்றிற்குத் திருமாலும், ஆறுமூலை வாய்ந்து வெண்ணிறமுள்ளவைகட்கு இந்திரனும் பசுவின் கொம்பினுடைய பலநிறமுள்ளவற்றிற்கு யமனும், முள்ளிலவு முண்முருக்கு என்னும் இவற்றின் மலர்போன்ற நிறமுள்ளவற்றிற்கு வாயுவும், கோங்கமலர் நிறமுள்ளவற்றிற்கு வருணனும், நீர்நிறமுள்ளவற்றிற்குச் சந்திரனும், இந்திரகோப நிறமுள்ளவற்றிற்குச் சூரியனும், அக்கினிநிறமுள்ளவற்றிற்கு அக்கினிதேனும், அதிதேவதைகளென்பதும். படிகநிறம்போன்றுள்ளவை பிராமணசாதியும், முயற்கண்ணிறம்போன்றுள்ளவை க்ஷத்திரியசாதியும், வாழைக்குருத்துப்போன்றுள்ளவை வைசியசாதியும், மேகநிறம்போன்றுள்ளவை சூத்திரசாதியு முடைத்தென்பதும், ஒருவலாசுரன்." என்னும் முதலையுடையசெய்யுண்முதலிச்செய்யுள் காறும் விளக்கிபவாறறிக. (சுக)

வயிரங்க ணான்கு மந்த வருணத்தோ ரடைவிற் பூண்பார்
செயிரொன்று முறுவி வற்றுட் செங்கதிர் வயிரஞ் செப்பிற்
பயினுாறு விலைம திக்கப் படாததிற் பணிகள் பூணார்
தயிரியஞ் செல்வ மாரோக் கியந்தருந் தரிக்க லாமே.

(இ-ள்.) மேற்சொன்ன நாற்சாதி வைரமணிகளையும், அவ்வவ்வருணத்தோர்கள் முறையிற்றரிப்பார்கள். குற்றமொன்றுமடையாத இவைகளுக்குள்ளே சூரியனை அதிதேவதையாகவுடைய வைரமணியைக்குறித்துக் கூறுங்கால், வழக்கமாய் வழங்கும் விலைமதிக்கவேலாததாகும். அம்மணியில் ஆபரணங்கள்செய்து தரிக்கமாட்டார்கள். ஊக்கமும் ஐஸ்வரியமும் கொடுக்கத்தக்கதாதலால் தனியாகத் தரிக்கலாகும்.—எ - று.

சூரியனை அதிதேவதையாகவுடைய வைரமணியை ஆபரணத்திற் பதிக்காமல் தனியே மாலையாகத் தரிப்பவர்கட்கு மனவூக்கமும் திரவியவிர்த்தியுமுண்டாமென்றபடி. (சுஉ)

அரசர்த மௌலி மேனு மணியொணு வரசி மார்க்கு
மருவிய தாலிப் பூணில் வயிரத்தாற் பண்ண வொண்ணு
பரவுமிவ் வொன்று மன்றிப் பற்பல வயிரத் திற்கு
மிருமைசூழ் குணங்குற் றங்க ளின்னுமிங் கியம்ப லுற்றேன்.

(இ-ள்.) அத்தகைய வைரமணியை அரசர்களும் தங்கள் மகுடத்தின் மீதாயினும் தரிக்கலாகா இராஜபத்தினிமார்க்கும் பொருந்தியுள்ள தாலியுடன் சேர்க்கும் ஆபரணங்கள் இவ்வைரமணியாற் செய்யலாகாது யாவரும் துதிக்கும் இவ்வோர்வகை வைரமணிக்கே யல்லாமல், பல்வேறுவகைப்பட்ட வைரமணிகட்குமுள்ள இரண்டாகப் பரவியிருக்கும் குணங்களையும் குற்றங்களையும் இவ்விடத்தில் இன்னும் கூறத்தொடங்கினேன்.—எ - று.

அரசர்க்குரிய பல்வகை யாபரணங்களுள் மேம்பாடுற்றதாகிய மகுடத்தினும், அன்னோர்பத்தினிமார்க ளாபரணங்களுள் மிகமேம்பாடுற்றதாகிய மங்கலசூத்திரத்திற் சேர்க்கத்தக்க ஆபரணங்களினும் இவ்வைரமணி சேர்க்கலாகாதென்றமையின், ஏனைப்பலமணிகள்போன்று சாதாரணமா யுபயோகிக்கத் தக்கதல்லவென விளக்கியவாறறிக. சிவக்குகிரணம் வீசும் வைரமணியாகிய இஃதொன்றொழிய ஏனைய நிறங்களமைந்த வைரமணிகளி னிலக்கணங்களையும் கூறுவேனென்பான், "பற்பலவயிரத்திற்கு - மிருமைசூழ்குணங்குற்றங் களின்னுமிங்கியம்பலுற்றேன்." என்றார். (௯௩)

நுவன்றிடு தாரை சுத்தி நொய்மையிந் திரசா பஞ்சே
ருவந்திடு பலகை யாங்க ணெழுங்கிய வெண்கோ ணங்க
ளவந்தவி ராறு கோண மைந்துகோ ணங்க ளாகா
நிவந்துள குணங்க ளேழா நிகழ்த்துப மணிநூல் வல்லோர்.

(இ - ள்) சொல்லப்படுகின்ற தாரை எனவும், சுத்தி எனவும், நொய்மை எனவும், இந்திரசாபத்துக்கொப்பாகக்களிக்கின்ற பலகை எனவும், அவ்விடத்தில் விசேடப்பட்ட எண்கோணங்கள் எனவும், தீமையொழிந்த அறுகோணங்கள் எனவும், ஐந்துகோணங்கள் எனவும், ஆக மேம்பட்டிருக்கும் குணங்கள் ஏழென்று இரத்தினசாத்திர முணர்ந்தோருரைப்பர்.—எ-று.

எனவே ஏனைய வைரமணிகட்கு இத்தகைய ஏழுகுணங்களுண்டென்றபடி. இன்னும் சிலநூல்களில் இவ்வேழையுமைந்துள்ளடக்கிக் குணங்களைந்தெனக் கூறியிருக்கின்றன. அவ்வாறு கூறியிருத்தலை, "பலகையெட்டுங் கோணமாறும் - பல்கியதாரையுஞ் சுத்தியுந்தராசமு - மைந்துங்குணமென் றறைந்தனர்புலவர்." என்னும் சூத்திரத்தாலறிக. (௯௪)

குலவிய தாரை கேடு கொடுந்தாரை மழுங்கல் கீற்று
மலமொடு காக பாதம் வருதுளை பிளத்தல் விந்து
பலகொடி கெடுதல் கோடி முறிதல்சம் படியி ருத்து
விலகிய குற்ற மீரா றென்றனர் வென்றி நூலோர்.

(இ - ள்.) விளக்கமுள்ள தாரைகேடெனவும் கொடியதாரை மழுங்கலெனவும் கீற்றெனவும் மலமெனவும் காகபாதமெனவும் வருகின்ற துளையெனவும் பிளத்தலெனவும் விந்தெனவும் பலவாகிய கொடிகெடுதலெனவும் கோடி முறிதலெனவும் சம்படிஎனவும் இருத்தெனவும் தெளிந்த குற்றங்கள் பன்னிரண்டாகுமென்று இரத்தின நூலிற்றேர்ந்தோருரைத்தனர்.—எ - று.

இத்தகைய குற்றங்கள் பன்னிரண்டும் வைரமணிக்குள்ளனவென்பதை "சரைமலங்கீற்றுஞ் சம்படிபிளத்தல் - துளைகரிவிந்து காகபாத - மிருத்துக் கோடி முறிதருரை - மழுங்கறம்மோ டெண்ணீராறும் - வைரத்திழிபென மொழிபவான்றோர்." என்று சிலப்பதிகாரத்தில் அடியார்க்கு நல்லாரெடுத்

துக் காட்டிய உதாரணச்சூத்திரத்தானு முணர்க. இனி இக்குற்றங்களின் பயனுவன, காகபாதம் என்பது காகங்கொல்லுமெனவும், மலமென்பது உலகத்துள்ள உறவினர்ப் போக்குமெனவும், விந்துவென்பது மனச்சஞ்சலத்தைத் தருமெனவும், கீற்றென்பது நல்குரவளிக்குமெனவும் இவைமுதலாகக் கூறுவர். இவற்றை, "காகபாத காகங்கொல்லு - மலம்பிரியாதது கிலந்தரு கிளைகெடும் - விந்துநிந்தையிற் சந்தாபந்தரும் - சீற்றுப்பாரிலேற்றுமாய்வர்" என்னும் சூத்திரத்தானுந்தெளிக. குணங்களின் பயனுவன - வேதியர் அணிந்தால் எழுபிறவிகளினும் வேதியராகவே பிறந்துவாழ்வார்கள், அரசர்களணிந்தால் எழுபிறவிகளினும் அனேக அரசர்கள் தம்மைச் சூழும்படி இந்நிலவுலகத்தை அரசாள்வார்கள், வைசியர்களணிந்தால் இரத்தினக்குவியலும் பொற்குவியலும் விசேடமாகப்பெற்றுக் குறைவின்றி இந்நிலவுலகத்தில் வாழ்வார்கள், சூத்திரர்களணிந்தால் அளவிறந்ததனமும் தானியமும் வாய்க்கும்படி ஆயராலங்கிர்தர்களாய் வாழ்வார்கள் என்பதாம். இவற்றை, "மறையோராணியின் மறையோராகிப் - பிறவியேழும் பிறந்து வாழ்குவரே." எனவும், "மன்னவரணியின் மன்னவர்சூழ - விந்நிலவேந்த ரவரெழுபிறப்பும்." எனவும், "வணிகரணியின் மணிபொன்மலிந்து - தணிவறவடைந்து தரணியில் வாழ்வர்" எனவும், "சூத்திரரணியிற் றொகையில்கனகநெல் - வாய்ப்பவணியின் மகிழ்ந்துவாழ்குவரே" எனவும் சிலப்பதிகாரத்தில் அடியார்க்கு நல்லாரெடுத்துக் காட்டிய உதாரணச்சூத்திரங்களாற்றெளிக. (சுடு)

அம்புவா ளிப்பார் தையா வாட்படை ஞாட்பில் வெல்வார்
செம்பொருட் சிறுதே சத்தார் செலுத்துவர் பல்தே யங்கள்
பம்புநல் குரவு பூதம் பசாசுபாம் பங்கி தீண்டா
நம்பமுன் சொன்ன சூர்ய நல்வயி ரங்கொள் வார்க்கே.

(இ - ள்.) யாவரும் உறுதிகொள்ளுமாறு முன்பெடுத்துரைத்த சூர்ய கிரணம்போன்ற நிறமுள்ள சிறந்தவைரத்தைக் கொள்பவர்க்கு, அம்பும்வாளும் இவ்வுலகத்தில் தைக்காது, காலாட்படைகளை வல்லபத்தால் வெல்வார்கள், செம்பொன்னைப்படைத்த குறுநிலத்தரசர்களும் பலதேசங்களினும் தமது செங்கோலைச் செலுத்துவார்கள், விசேடித்தவறுமை பூதம் பைசாசம் சர்ப்பம் தீ என்னும் இவைகள் நெருங்கா.—எ-று.

இவ்வைரமணி கைக்கொள்வோர்க்கு இவ்வகைப் பயனுண்டென்பதை, "குறுநிலத் தரசர் தாங்கிற் குறைவுதீர் செல்வ மெய்தி - யுறுபகை யெறிந்து தன்கோன் முழுதுல கோச்சிக் காக்கும்-வறுமைநோய் விலங்கு சாரா வரைந்தா னன்றிச் செல்லும் - கறுவுகொள் கூற்றம் பூதங் கணங்களு மணங்கு செய்யா." என்னும் திருவிளையாடற்புராணத் திருவிருத்தத்தானுந் தெளிக.

இனிமுத்தின் குணமு ருட்சி யியலும்வான் மீனின் றேசு
கனமறு வின்மை நோக்கிற் கவினுறல் படிக நன்று

வினவுமண் ணேறல் செந்நீர் சிவப்புமென் மூகங்க றுத்த
லினமரு ளிவற்றி னோடு கோணலென் றீரைங் குற்றம்.

(இ - ள்.) இனிமுத்தமணியின் குணங்களைவையெனின், உருட்சி பொருந்திய நட்சத்திரத்தின் ஒளி, திண்ணம், மாசின்மை, பார்வைக்கின் புறல், படிகம்போன்றிருத்தல் என்னும் இவையாறும் குணங்களாம், கேட்கத்தக்க மண்ணேறல் செந்நீர் சிவப்பு மிருதுவான மூகங்கறுத்தல் இனமருட்சி மண்ணேற்றுக்கோணல் செந்நீர்க்கோணல் சிவப்புக்கோணல் மூகக்கறுப்புக்கோணல் இனமருட்சிக்கோணல் என்னும் இப்பத்தும் குற்றங்களாம் —

இவ்வாறு குணங்களும் முத்துக்குண்டென்பதை, "உடுத்திர ளனைய காட்சி யுருட்சிமா சின்மை தையா - லெடுத்திடிற் றிண்மை பார்வைக் கின்புறல் படிக மென்ன - வடுத்திடு குணமா றின்ன வணியின்மூ தணங்கோடின்மை-விடுத்திடேந் திருவந் தெய்தும் விளைந்திடுஞ் செல்வம் வாழ்நாள்." என்னும் திருவிளையாடற்புராணத் திருவிருத்தத்தானும், இக்குற்றங்கள் பத்தையே காற்றேறு மண்ணேறு கல்லேறு நீர்நிலையென்னும் நான்கு குற்றங்களாகச் சிலநூல்களிற் கூறியுள்ளன. அதனை, "காற்றினு மண்ணினுங் கல்லினு நீரினுந் - தோற்றிய குற்றந்துகளறத் துணிந்தவுஞ் - சந்திரகுருவே யங்காரகனென-வந்தநீர்மை வட்டத்தொகுதியும்." என்னும் சிலப்பதிகாரத்தானுமுணர்க. (௬௭)

பணிமதி கதலி மேகம் பைந்தொடி கழுத்தா வின்பற்
றனியானை யேனக் கொம்பு தடங்கரா வுடும்பு கொக்கு
வினையராச் சலஞ்ச லஞ்சங் கிப்பிமீன் மூங்கிற் பூக
நினைசெந்நெற் கரும்பு கஞ்ச நிகழிரு பதுமுத் தீனும்.

(இ - ள்.) குளிர்ந்த சந்திரன் வாழை மேகம் மாதர்கண்டம் பசுவின்பல் ஒப்பற்ற யானை பன்றி இவற்றின் கொம்பு பெரிய முதலை உடும்பு கொக்கு தீங்கியற்றும் சர்ப்பம் சலஞ்சலச்சங்கு சாதாரணச்சங்கு இப்பி மீன் மூங்கில் கமுகு யாவரும் நினைக்கின்ற செந்நெல் கரும்பு தாமரை என்று விளக்கும் இவ்விருபது வஸ்துக்களும் முத்தமணியைப் பெறும்.—எ - று.

இவ்விருபது வஸ்துக்களுமே முத்தமணியைப் பெறுமென்பதை, "தந்திவராக மருப்பிப்பி பூகந் தனிக்கதலி - நந்து சலஞ்சல மீன்றலைகொக்கு நளின மின்னார் - கந்தரஞ் செந்நெல் கழைகன்ன லாவின்பல் கட்செவிகாநிந்து வுடும்பு கராமுத்த மீனு மிருபதுமே." என்னும் செய்யுளானுமுணர்க. அன்றியும் இம்முத்தமணிகள் தலசமெனவும் சலசமெனவும் இருவகைப்படும். எனவே, தலசம்பந்தத்தாற் பிறப்பன தலசமாமெனவும், சலசம்பந்தத்தாற் பிறப்பன சலசமாமெனவுங்கொள்க. சங்கு முகில் இப்பிமீன் என்னும் இவற்றுட்டோன்றுவன சலசமும் ஏனையவை தலசமுமாமென்பர். இம்முத்தமணியின் உற்பத்தி ஸ்தானங்கள் இருபதென இங்குக்கூறி

னும் இன்னும் சின்னூல்களிற் பதின்மூன்றெனவே கூறியுள்ளன. முத்த மணிகள் தலசம் சலசம் என இருவகைப்படுமென்பதையும், அவற்றின் உற்பத்திஸ்தானங்கள் பதின்மூன்றென்பதையும், "தக்கமுத் திரண்டு வேறு தலசமே சலச மென்ன - விக்கதிர் முத்தந் தோன்று மிடம்பதின் மூன்று சங்க-மைக்கரு முகில்வேய் பாம்பின் மத்தகம் பன்றிக் கோடு - மிக்கவெண் சாலி யிப்பி மீன்றலை வேழக் கன்னல்." எனவும், "கரிமருப் பவாய் மான் கை கற்புடை மடவார் கண்ட - மிருசிறைக் கொக்கின் கண்ட மெனக்கடை கிடந்த மூன்று - மரியன வாதிப் பத்து நிறங்களு மணங்குந் தங்கட் - குரியன நிறுத்த வாறே யெனவு முரைப்பக் கேண்மின்." எனவும்வரும் திரு விளையாடற்புராணத் திருவிருத்தங்களானுந் தெளிக. இப்பதின் மூன்று வகை முத்தமணிகளுள்ளும் சிங்கத்தின் கையிலும் ஸ்திரீகள் கண்டத்திலும் கொக்கின் கழுத்திலும் உதிக்கும் மூன்றும் கிடைத்தற்கரியனவென்றும் ஏனையபத்தும் எளியன என்றுங்கூறுவர். அப்பத்தினுள்ளும் சங்கின்முத்தமும் இப்பியின்முத்தமும் வெண்ணிறமெனவும், மேகத்தின்முத்தம் செந்நிறமெனவும், மூங்கிலின் முத்தம் கல்மழையினிறமெனவும், பாம்பின்முத்தம் நீலமணி நிறமெனவும், பன்றிக்கொம்பின்முத்தம் உதிரநிறமெனவும், வெண்ணெல்லின்முத்தம் பசுநிறமெனவும், மீனின்முத்தம் பாதிரிமலரின் நிறமெனவும், யானைக்கொம்பு கரும்பு என்னும் இவ்விரண்டின் முத்தங்களும் பொன்னிறமெனவும் கூறுவர். இவற்றை, "மாடவெண் புறவின் முட்டை - வடிவெனத் திரண்ட பேழ்வாய்க் கோங்கொன் முத்தம் வெள்ளை நிறத்தது கொண்மூ முத்தஞ் செம் பரிதி யன்ன நிறத்தது கழைமுத் தாலி - யிருசோ ணிறத்த பாவின் பெருமுத்த நீலத் தாமால்." எனவும், "ஏனமா வாரஞ் சோரி யிரஞ் சுவைச் சாலி முத்த - மானது பசுமைத் தாகும் பாதிரி யலரைய தாகு - மீனது தாளம் வேழ மிரண்டினும் விளையு முத்தந் - தானது பொன்னின் சோதி தெய்வதஞ் சாற்றக் கேண்மின்." எனவும்வரும் திருவிளையாடற்புராணத் திருவிருத்தங்களாற் காண்க. இன்னும், வெண்ணிறமுத்தங்கள் வருணனுக்கும், செந்நிறமுத்தங்கள் சூரியனுக்கும், நீலநிற முத்தங்கள் திருமாலுக்கும், உதிரநிற முத்தங்கள் வாயுதேவனுக்கும், பசுநிற முத்தங்கள் யமனுக்கும், பொன்னிறமுத்தங்கள் இந்திரனுக்கும், உரியனவாமெனக்கூறுவர், இதனை, "பான்முத்தம் வருணன் முத்தம் பகன் முத்தம் பகலோன்முத்த - மான்முத்த நீலமுத்த மாசறு குருதி முத்தங் - கான்முத்தம் பசிய முத்தங் காலன்றன் முத்தந் தேவர் - கோன்முத்தம் பொன்போன் முத்தங் குணங்களும் பயனுஞ் சொல்வாம்." என்னும் திருவிளையாடற்புராணத் திருவிருத்தத்தாற்றெளிக. இவ்வித முத்தமணிகளை அணிவதனால் வரும்பயனை, மேலெடுத்துக்காட்டிய, 'உருத்திரனனைய." என்னும்முதலையுடைய செய்யுளில், "அணியின் மூதணங்கோடுன்மை - விடுத்திடுந் திருவந் தெய்தும் விளைந்திடுஞ் செல்வம் வாழ்நாள்." என்பதனாலறிக. (௯௮)

இருபது முத்தின் றூலு மிப்பியின் முத்தே நன்றாக
விரவுமைப் பசியிற சோதி மின்னெறி சிறந்து நாளில

வருமிப்பி வாயில் வீழ்ந்த மழைத்துளி யொளிமுத் தென்ப
தருமணி நெடுநாட் செல்லிற் றய்வயி னுருகி யொன்றும்.

(இ - ள்.) மேற்கூறிய இருபது வஸ்துக்களும் முத்தமணிகளைப் பெற்றாலும் இப்பியினின்றுதிக்கும் முத்தமணியே சிறப்புற்றதாகும். மாதங்களிற் கலந்து வருகின்ற ஐப்பசிமாதத்திற் சுவாதிநட்சத்திரங் கூடிய மின்வீசுகின்ற சிலதினங்களில், ஜலத்தில் தோன்றும் இப்பியின்வாயில் வீழ்ந்த மழைநீர்த்துளியே பிரகாசமுள்ள முத்தமென்றுரைப்பர். அவ்வாறுண்டாகியமுத்தமணி அநேகநாட்கள் கழியுமாயின், தனது தாயாகிய இப்பியினிடத்தே யுருகிப் பொருந்தும்.—எ-று.

மேற்கூறியபடி முத்தின் உற்பத்தி ஸ்தானங்கள் இருபதாகவும் பதின்மூன்றாகவும் பல்வேறு வகைப்படக்கூறி, அவ்வப்பகுப்பின் பேதங்களையும் குணங்களையும் பயன்களையும் பலவாறாக விரித்துக்கூறினமையின், இவற்றுளெதை முக்கியமாகக் கொள்வதெனும் ஐயப்பாடெவர்க்கு முதியாவாறு, "இருபதுமுத்தின்றானு மிப்பியின் முத்தேநன்றால்." எனத் தெளிவுகூறினர். வருடந்தோறும் மழைக்குரிய நாள்களென அநேக நாட்களைக் குறித்திருந்தபோதினும், அவற்றுள் அதிமுக்கியமாகவும் நிச்சயமாகவும் குறித்திருப்பது, ஐப்பசிமாதத்திற் சுவாதிநட்சத்திரங்கூடிய நாளேயாகலின், அந்நாளில் மின்வீசி மழை பெய்கையிலே அம்மழைத்துளியானது இப்பியின் வாயில் வீழ்ந்தால் அதுவே முத்தமாகுமென விளக்குவான், "விறலுமைப் பசியிற் சோதி பின்னெறி சிறிது நாளில் - வருமிப்பி வாயில் வீழ்ந்த மழைத்துளி யொளிமுத் தென்ப." என்றார் ஐப்பசிமாதம் சுவாதிநட்சத்திரங்கூடியவன்றுமழை பெய்யுமென்பதை, "கோபந் தோன்ற வதிர்ந்தெழுந்து கோக்க டொறுமின் வான்வீசிச்-சாபந் தோன்ற வளைத்தொழியாச் சரமே பொழிந்து காரகிலின் - றாபந் தோன்று குழற்பனைதான் றேன்றிற் றிறைவன் றிருவெங்கைத் - தீபந் தோன்றும் புயனினைவைத் தீரா ரின்னும் வாராரே." என்னும் சிவப்பிரகாச சுவாமிகள் திருவாக்கானுந் தெளிக. (௬௯)

தடங்கட லிலங்கை மூதூர்ச் சமனொளி சூழ்ந்த பாங்கர்
மடங்கலி லலகை யாறு மாவிலி கங்கை தங்கி
யிடங்கொள்கம் பலையி னோடு கல்லணை யெனுநான் காற்றிற்
றிடம்பட விளைமா ணிக்கத் திறங்களு மறிந்து சொல்வாம்.

(இ - ள்.) விசாலித்த கடலின்கணுள்ள இலங்கை என்னும் பழைய நகரத்திலே, ஒரேவிதமான பிரகாசம் சூழ்ந்துள்ளவிடத்திலே, தடைபடாததாகிய அலகையாறு மாவிலியாறு, கங்கைநதி தங்கியிடங்கொண்டிருக்கும் கம்பலையாற்றுடன் கல்லணையாறு என்னும் இந்நால்வகையாறுகளிலே திடத்துடனே விளைகின்ற மாணிக்கமணியின் தன்மைகளுந் தெரிந்துரைப்பாம்.—எ-று.

எனவே, கடலின்கணுள்ள இலங்கையிலே சமனொளி பரப்பிய ஓரிடத்தில் அலகையாறு மாவிலியாறு கம்பையாறு கல்விளையாறு என்னும் இந்நான்கும் சேர்கின்ற ஸ்தானத்திலே மாணிக்கம் விசேடமாய் உற்பத்தியாமென்றபடி. (எ0)

குருவிந்த மொடுசா தாங்கங் கூறுகா வாங்க நன்மை
மருவுசௌ கந்தி நான்கின் வடிவினிற் குணங்க ளீரா
றுருவினிற் குற்ற மீரெட் டொளிக்குண மிருபத் தொன்பான்
பரவொளிக் குணங்கடம்மைப் பன்னிப்பின் பகர லுற்றாம்.

(இ - ள்.) அம்மாணிக்கமணிகள் குருவிந்தத்துடன் சாதாங்கமெனவும் யாவரும் கூறும் காவாங்கமெனவும், நன்மையமைந்த சௌகந்தியெனவும் நான்குவகைப்படும். அந்நான்குவகைகளின் வடிவிலே குணங்கள் பன்னிரண்டு, அவ்வடிவின் குற்றங்கள் பதினாறு, ஒளியின் குணம் இருபத்தொன்பது. பரவுகின்ற ஒளியின் குணங்களைக்கூறி முடித்து அதன் பின் மற்றையவற்றைக் கூறத்தொடங்கினோம். —எ-று.

மாணிக்க மணிகள் வடிவத்திற் குணங்கள் பன்னிரண்டு குற்றங்கள் பதினாறு, ஒளியின் குணங்கள் இருபத்தொன்பது என்றபடி. இவற்றை, "மாணிக்கத்தியல் வகுக்குங்காலை சமனொளிசூழ்ந்த விருநான்கிடனு - நால்வகை வருணத்தி னவின்றவிப்பெயரும் - பன்னிருகுணமும் பதினாறு குற்றமு - மிருபத்தெண்வகை யிலங்கியநிறனு - மருவியவிலையும் பத்தியும் பாய்தலு - மிவையெனமொழிய வியனுணர்ந்தோரே" எனச் சிலப்பதிகாரத்தினும் வருதலாற் றெளிக. (எக)

செங்கையி லெடுக்கிற் றேய்க்கிற் றீயினிற் சேர்க்கிற் றூக்கிற்
பங்குறு தகட்டிற் குச்சி னிற்பகற் வெயிலி னவ்வின்
மங்குத லிலாவோ ரத்தின் மத்தகக் குறியி னெய்த்துத்
தங்குபார் வையினி னேர்ந்து சிவந்துசார் குணமீ ராறே.

(இ - ள்.) சிவந்த கரங்களிலெடுத்தாலும், தேய்த்தாலும், நெருப்பிற் போட்டாலும், தூக்கினாலும், பாகமாயிருக்கும் தகட்டிலே வைத்தாலும், குச்சிற் புதைத்தாலும், வெயிலில் வைத்தாலும், நவிலும், கெடுதலிலாவோரத்திலும், மத்தகக்குறியிலும், நெய்ப்புள்ளதாயிருத்தலினும் பார்வையிலும், ஒரே தன்மையாய்ச் செந்நிறமுற்றடைகின்ற குணங்கள் பன்னிரண்டாகும்.-எ-று.

இவ்வாறு பன்னிரண்டு குணங்களுளவென்பதை, "தேய்க்கி னெருப்பிற் சேர்க்கினங் கையிற் றூக்கினற் றகட்டிற் சுடர்வாய் வெயிலிற்-குச்சியின் மத்தகக் குறியி னோரத்தி னெய்ப்பிற் பார்வையி னேர்ந்த சிவந்தாங்-கொத்த நற்குண முடைய பன்னிரண்டும்," என வருங் கல்லாடவகவலானுமுணர்க.

கருகிநொய் தாதல் செம்மண் கரும்புகை யிறுகல் கோபந்
திருகுதல் முரணல் காச மத்தகக் குழிவு செப்பில்
விரவிய புடாயம் நெய்ப்பில் காற்றிலேச் சுமிலிய வெச்ச
மிருமைதீர் சந்தை கேடென் றிவைகுற்றம் பதினு றாமே.

(இ-ள்.) கருகிநொய்தாதல் செம்மண் கரியபுகை இறுகல் வெகுளி திருகல் முரணல் காசம் மத்தகக்குழிவு, சொல்லுமிடத்து இவற்றுடன் கலந்துள்ள புடாயம் நெய்ப்பிலி காற்று இலேச்சுமி வெச்சம் இரண்டற்ற சந்தை பொரிவு என்றுரைக்கும் இவைகளே பதினறு குற்றங்களாம்.—எ - று.

இவ்வாறு பதினறு குற்றங்களுளவென்பதை, "கருகிநொய்தாதல் காற்று வெகுளி - திருகல் முரணே செம்மணிறுகல் - மத்தகக் குழிவு காச மிலேச்சுமி - வெச்சம் பொரிவு புகைதல் புடாயம் - சந்தைநெய்ப் பிலியெனத் தருபதி னறு-மூந்திய நூலின் மொழிந்தன குற்றமும்." என வரும் கல்லாடவகவலானு முணர்க (எங)

சாதகப் புள்ளி ஞட்டந் தாமரை காவி கோபங்
கோதின்மின் மினியா தித்தன் கொழுந்தன லெரிவி ளக்கு
மாதுளங் கனிப்பூப் பத்துஞ் சாதாங்க மணிக்கு ணங்கா
ஞேதிய குருவிந் தத்தி னெளிக்குண மினிமேற் சொல்வேன்.

(இ - ள்) சாதகப்பறவையின் கண் தாமரை கழுநீர் இந்திர கோபம் குற்றமற்ற மின்மினி சூரியன் கொழுவிய அக்கினி எரிகின்ற தீபம் மாதுளங்கனி மாதுளம்பூ என்னும் இப்பத்தின் நிறங்களும் சாதாங்க மணியின் குணமாகும் முன் சொல்லிய குருவிந்தத்தின் நிறக்குணத்தை இனிக் கூறுவேன்.—எ - று.

சாதாங்கமணிக்கு இத்தகைய பத்துக்குணங்களும் உளவென்பதை "தாமரை கழுநீர் சாதகப் புட்கண் - கோப மின்மினி கொடுங்கதிர் விளக்கு - மாதுளம்பூ விதை வன்னி யீரைந்தும் - ஓது சாதாங்க வொளிபாகும்மே." என வரும் கல்லாடவகவலானு முணர்க. (எச)

செம்பஞ்சோ டரத்த நல்ல திலகநீ ளிலோத்தி ரஞ்சீர்
நம்பிய முயலின் சோரி நக்கசிந் தூரங் குன்றி
வம்புறு முருக்கம் போது வருமெட்டா மசோகு செம்பஞ்
சம்படு மலரி செம்போ டிலவம்பூ வருங்கு யிற்கண்.

(இ-ள்.) செம்பஞ்சுடனே செவ்வரத்தம்பூ சிறந்த மஞ்சாடிப்பூ நீட்சியுற்ற வெள்ளிலோத்தம்பூ சிறப்புடனே நம்புவதான முயலிரத்தம் சித்தூரம் குன்றிமணி வாசனையுள்ள முண்முருக்கம்பூ என்னும் எட்டின் நிறமாகும். அசோகந்தளிர் செம்பஞ்சு அழகுண்டாகிய செவ்வலரி செம்புடனே இலவம்பூ அருமையான குயிலின்கண்—எ - று.

குருவிந்தமணிக்கிவ் வெட்டெக்குணங்களுளவென்பதை, "குருவிந் தத்தின் குறித்தன நிறமுந் - திலக மலோத்தஞ் செம்பருத் திப்பூ - கவிர்மலர் குன்றி முயலுதி ரம்மே - சிந்துரங் குக்கிற் கண்ணென வெட்டு - மெண்ணிய குருவிந்த மண்ணிய நிறமே." எனவரும் கல்லாடவாசவலானும், "சாதரங்க நிறக்கமலங் கருசெய்த விரவியொளி தழல்கச் சோத - மாதுளம்போ ததன் வித்துக் கார்விளக்குக் கோபமென வருத்தபத்து - மேதகையு குருவிந்த நிறங்குன்றி முயற்குருதி வெள்ள லோத்தம் போதுபலா சலர்திலகஞ் செவ்வரத் தம் விதாரமெரி பொன்போ லெட்டு." எனவரும் திருவிளையாடற் புராணத் திருவிருத்தத்தானுந் தெளிக. (எ௫)

இவ்வாறுஞ் சௌகந் திக்கா மெழிற்குண மினிக்நா வாங்கின்
மெய்வாய்த்த குணங் குராப்பூ வெண்கோவை செங்கல் மஞ்ச
ளெவ்வாய குங்கு மம்போற் சொல்லொளி யோரைந் தாகு
மவ்வாய மணிக்கு ணங்களாகவோ ரிருபத் தொன்பான்.

(இ - ள்.) எனமேற்கூறிய இவ்வாறு குணங்களும் சௌகந்திக்காகும் அழகிய குணங்களாம். இனி காவாங்கின் உண்மையமைந்த குணங்களாவன. குராமலர் வெண்கோவை செங்கல் மஞ்சள் தூய்மையான குங்குமம் என்னும் இவைகள்போற் சொல்லப்பட்ட குணங்கள் ஓரைந்தாகும். அவ்வாறு வாய்ப்புள்ளனவாகிய நால்வகை மணிகளின் குணங்கள் ஆகமொத்தம் இருபத்தொன்பதாகும் —எ - று.

சாதாங்கம் குருவிந்தம் சௌகந்தி காவாங்கம் என்னும் நால்வகை மணிகட்குள், சாதாங்கமணிக்குப் பத்தும், குருவிந்தமணிக்கு எட்டும், சௌகந்திமணிக்கு ஆறும், காவாங்கமணிக்கு ஐந்தும் ஆகக்கூறினமையின், முற்போந்த எழுபத்தோராம் செய்யுளில் "ஒளிக்குண மிருபத்தொன்பான்." எனக்கூறிய தொகைக்கு வகைகூறி முடித்தவாறுகாண்க. சௌகந்தியின் குணங்களாறென்பதை, "கோகிலக்கண் செம்பஞ்சி தொய்மலர்ப் பலாசம் - அசோகப் பல்லவ மணிமலர்க் குவளை - இலவத்தலர்களென் றாறுகுணமும் - சௌகந் திக்குச் சாற்றிய நிறனே." என்பதனானுமுணர்க. காவாங்கின் குணங்களைந்தென்பதை, "செங்கல் குராமலர் மஞ்சள் கோவை - குங்கும மைந்தின் கோவாங்கு நிறமும்." என்பதனானுமுணர்க. கோவாங்கம் என்பது கவாங்கம் என்னும் வடசொற்றிரிபு. இன்னும் சாதாங்கமாகிய இந்நான்கு மணிகளும் முறையே நான்கு யுகங்களில் நான்கு தேயங்களிலுதித்தனவென்றும், அவை முறையே நான்கு வருணங்களுரித்தெனவும் கூறுவர். இவற்றை, "வாளவிரு மாணிக்கங் கிரேதமுத லுகநான்கும் வழிமே மக்கங் - காளபுரந் தும்புருஞ்சிங் களமிந்நான் கிடைப்பமேக் கமல ராக - மாளுநிற மொன்பதர விந்தமா துளம்பூவித் தழல்கல் கூரங்-கோளரிய கச்சோத நரந் தநறும் பலந்தீபங் கோபமென்ன." எனவும், "இந்நிறத்த பொதுவாய மாணிக்க மறையவர்முன் னியலுற் சாதி - தன்னியல்பாற் சாதாங்கம் குருவிந்தஞ் சௌகந்தி கங்கோ வாங்க - மென்னுமிவற் றூற்சிறந்து நான்காகு மிவ்

வடைவே யிந்நான் கிற்குஞ்-சொன்னவொளி பத்திருநான் கிருமூன்று நான் கலையுஞ் சொல்லக் கேண்மின்.'' எனவும் வரும் திருவிளையாடற்புராணத் திருவிருத்தங்களானுந் தெளிக. எனவே மாணிக்கமணியின் உற்பத்தி முத லியவற்றை விரித்துரைத்து முடித்தமைகாண்க. அன்றியும், அந்நால்வகை யுள் களமுடையதாய் மேலும் கீழும் சுற்றும் ஒளியுடைய சாதாங்கமணி கள் முறையே உத்தமம் மத்திமம் அதமமெனவும், அத்தகைய சாதாங்கமணி களைத் தரிப்போர் கல்வியும் பசுவும் கன்னியும் அன்னமும் அனந்தவகைத் தானபலனும் யாகபலனு மடைவார்களெனவும், குருவிந்தமணிகளைத் தரிப் போர்கள், நிலவுலகமுழுவதும் தமது சந்திரவட்டக்குடைநீழலி லரசாண்டு தீனலட்சுமிவிலாசமும் விஜயலட்சுமிவிலாசமும் பெறுவார்களெனவும், சௌ கந்திமணிகளைத் தரிப்போர்கள் செல்வமும் கீர்த்தியுமடைவார்களெனவும், காவாங்கமணிகளைத் தரிப்போர்கள் பாற்பாக்கியமும் நெற்போர்களும் பொ ருட்குவைகளும் பெறுவார்களெனவும், இம்மணிகளுள்ளவர்களிடத்து மற் றைய இரத்தினங்களும் சேருமெனவும் கூறுவர். இவற்றை, "திண்ணிய தாய் மேல்கீழ்சூழ் பக்கமுற வொளிவிடுதல் செய்தாற் செவ்வே - யண்ணி யவுத் தமமுதன்மூன் றுமென்பர் சாதாங்க மணியோர் விச்சை - புண்ணிய வான் கன்னியறு சுவையன்ன முதலான புனித தானம் - பண்ணியதும் பரி மேத யாகமுதன் மகம்புரிந்த பயனுஞ் சேர்வர்.'' எனவும், "குருவிந்தந் தரிப்பவர்பார் முழுதுமொரு குடைநிழலிற் குளிப்ப வாண்டு - திருவிந்தை யுடனிருப்பர் சௌகந்தி கந்தரிப்போர் செல்வங் கீர்த்தி - மருவிந்தப் பயன டைவர் கோவாங்கந் தரிப்போர்தம் மனையிற் பாலும் - பெருவிந்த மெனச் சாலி முதற்பண்ட முடன்செல்வப் பெருக்கு முண்டாம்.'' எனவும், "எள்ளி யிடு குற்றமெலா மிகந்துகுண னேற்றொளிவிட் டிருள்கால் சித்துத் - தள் ளியவிச் செம்பதும ராகமது புனைதக்கோர் தம்பா லேனைத் - தெள்ளியமுத் துள்ளிட்ட பன்மணியும் வந்தோங்குஞ் செய்யா ளோடு - மொள்ளியநற் செ ல்வமதற் கொப்பவேடும் பாற்கடலி னோங்கு மாலோ.'' எனவும் வரும் திரு விளையாடற்புராணத் திருவிருத்தங்களானுந் தெளிக. (எச)

நீலத்தின் குணங்கா யாம்பூ நெய்தற்பூக் குவளை யம்பூக்
கோலிய கோக்கன் றின்கண் குயிற்கழுத் தவிரிச் சாறு
வாலிய மேக மெட்டாங் கிட்டமஞ் சணித ராசு
மேலுமன் பிணியும் வச்ச மிரசஞ்சர்ச் சரையெட் டூனம்.

(இ - ள்.) நீலமணியின் குணங்களாவன, காயாம்பூ நெய்தற்பூ துள சிப்பூ அலங்கரித்துள்ள பசுவின் கன்றினுடைய கண் குயிலின்கழுத்து அவி ரிச்சாறு சிறந்த மேகம் என்னும் எட்டுமாம். இட்டமும் மஞ்சும் அணியும் தராசும் பொருந்தியதாய் நிலைபெற்ற பிணியும் வச்சமும் இரசமும் சருச்ச ரையும் ஆகிய இவ்வெட்டும் குற்றங்களாம்.—எ-று.

நீலமணிக்குணங்க ளெட்டென இந்நூலாசிரியர் கூறினும் வேறு சில நூலார், இம்மணியின் குணங்கள் பதினொன்றென்றும், வெண்மை செம்மை

பொன்மை கருமை என்னும் நான்கு வன்னங்களுளவென்றும், இவை முறையே பிரம க்ஷத்திரிய வைசிய சூத்திரரென்னும் நான்கு வருணத்தவர்க்கும் உரித்தென்றும், இந்திரநீலம் மாநீலம் என இருபகுப்புடைத்தென்றும் கூறுவர். இவற்றை, "நீலத்தியல்பு நிறுக்குங்காலை - நால்வகைவருணமு நண்ணுமாகாரமுங் - குணம்பதிமென்றுங் குறையிருநான்கு - மணியோர் செயலுமறிந்திசினோரே." எனவும், "கோகிலக்கழுத்து குவளைசுரும்ப - ராகுலக் கண்ணோடவிரிச்சாறு-காயாசெய்தல் கனத்தல்குல்லை - கொண்மூமத்தி பாய்தலென்னக் - குணம்பதிமென்றெனக் குறித்தனர்புலவர்." எனவும், "வெள்ளை சிவப்பு பச்சை கருமையென் - றெண்ணிய நாற்குலத் தியங்கிய நிறமே." எனவும் சிலப்பதிகாரத்தில் அடியார்க்கு நல்லாரெடுத்துக்காட்டிய உதாரணச் சூத்திரத்தாலும், "உந்தவாழ் வார்வலன்க ணீலமிரண்டாரன் கண்டத் தொளிவிட்டோங்கு - மிந்திர நீலந்தான்மா நீலமென வேறிரண்டெண் டிந்தநீலம்." எனவும், "அவை சிதறும் புலந்தோன்று நீலமா நீலமிவையணியோர் வானோர்-நவையறுசீர் மானவரிந நகைநீலஞ் சாதியினு ளல்வேறந்த-கவலரிய வெள்ளைசிவப் பெரிபொன்மை கலந்திருக்கிற் கரிதாய் மூன்றுங் - தவலரிதாயிருக்கிலிரு பிறப்பாளர் முதன்முதனற் சாதிக்காகும்." எனவும் வரும் திருவிளையாடற்புராணத் திருவிருத்தங்களானும் தெளிக. (எஎ)

பவளநற் குணஞ்சிந் தூரம் பன்னுசெம் மணிச்செங் காய்நற்
றுவமுசு முசுக்கை வீரை தூதுணம் பழம்போன் றாறுங்
கவைமுடங் தொளை கறுப்புத் திருகுதல் வெளிற றுனென்
றிவைகளோ ராறுங் குற்ற மென்பர்நற் புலமை யோரே.

(இ - ள்.) பவளமணியின் குணங்களாவன, சிந்தூரம் சொல்லுகின்ற செம்மணி செங்காய் இரட்டித்துவருகின்ற முசுமுசுக்கைக்கனி வீரைக்கனி தூதுளங்கனி என்னும் இவைகள்போன்ற ஆறாகும். பிளவு முடக்கு தொளை கறுப்பு திருகல் வெளிறல் என்றுரைக்கும் இவ்வாறும் குற்றங்களாமென்று சிறந்த இரத்தின நூற்புலமையுள்ளவர்க ளுரைப்பார்கள்.—எ-று.

பவளமணிக்குக் குணங்களாறு குற்றங்களாறெனா இந்நூலாசிரியருரைப் பினும் வேறு சில நூலாசிரியர்கள், குணங்கள், முருக்கம்பூ பசுங்கிளி மூக்கு செவ்வரத்தமலர் கொவ்வைக்கனி என்னும் இந்நான்குமே யென்றும், குற்றங்கள், திருகிக்கோணுதல் புழுவரித்தல் முகமொடிதல் என்னும் இம்மூன்றுமே யென்றும், இப்பவளமணிகளைப் பெண்பாலரே அணியத்தக்கவர்களென்றும், அவ்வாறவர்களணியின் அவர்கட்குப் புத்திரப்பேறு முதலிய பயன்களுண்டாமென்றும் கூறுவர். இவற்றை, "அவ்வழியிற் படுபவளமுருக்கம்பூப் பசுங்கிளிமூக் கலர்ந்த செவ்விச்-செவ்வரத்த மலர்கொவ்வைக் கனிபோலுங் குணங்குற்றந் திருகிக் கோட - லெவ்வமுறப் புழுவரித்தன் முகமொடிதல் பெரும்பாலு மிப்பூ ணேந்தல் - பெய்வளையார் தமக்கேயாந் தரிக்கின்மகப் பேறுமுதற் பேறுண்டாகும்." என்னும் திருவிளையாடற்புராணத் திருவிருத்தத்தானு முணர்க. (எஅ)

பச்சையின் குணங்க ளொதிற் பசுங்கிளி மயிற்க ழுத்து
மெச்சிளம் பயிர் பொன் வண்டின் வயிறுமின் பொன்ப சுத்த
னிச்சயப் பத்தி பாய்த னெய்ப்பெறா வெளிறு கன்மண்
கச்சிடுந் தராசங் காற்று கருகுதல் பெறலே குற்றம்.

(இ - ள்.) மரகதமணியின் குணங்களைக் கூறுமிடத்து, பசுநிறமுள்ள கிளி மயில் என்னும் இவற்றின் கழுத்து, புகழப்படும், இளமையுள்ள பயிர் பொன்வண்டின் வயிறு, மின்னல் பொன்மை பசுத்தல் நிலையாகப் பத்தி பாய்தல் என்னும் எட்டாம். நெய்ப்பு நீங்காத வெண்மை கல்லேறு மண் ணேறு வெறுக்கின்ற தராசம் காற்றேறு கருகல் என்னும் இவைகளை அடைதலே எழுவகைக் குற்றங்களாம்.—எ - று.

மரகதமணிக்கு இவ்வாறு எட்டு குணங்களும் எழு குற்றங்களும் உள வென்பதை, "நெய்த்த மயிற்கழுத் தொத்தலும் பயிரிற் - பசுத்தல் பொன்மை தன்னுடல் பசுத்தல் - நடித்துப் பாய்தல் பொன்வண்டின் வயிறொத்துத் - தெளிதலோ டெட்டே குணமென மொழிப" எனவும், "கருகல் வெண்மை கன்மணல் காற்று - புரிவு தராசா மிறுகுதல் மரகதத் - தெண்ணிற் குற்றமிவை யேழென மொழிப." எனவும் சிலப்பதிகாரத்தில் அடியார்க்கு நல்லார் எடுத்துக்காட்டிய உதாரணத்தாலு முணர்க. அன்றியும், மரகதமணிகட்குக் காடம் சுப்பிரம் காளம் என்னும் மூன்று குணங்களுளவெனவும், அவற்றுள் அறுகினிதழ்போன்ற பசுநிறமுள்ள காடமென்பது சகுணம் சதோடம் என இருவகைப்படுமெனவும், இவற்றினுள்ளும் சகுணத்திலே காடம் உல்லசிதம் பேசலம் பித்தகம் முத்தம் பிதுகம் என்னும் ஆறுபேதங்களுளவெனவும், இவ்வாறனுள்ளே காடமென்பது புல்லைப்போன்ற பசிய நிறமும் உல்லசிதமென்பது மென்மைத்தன்மையும், பேசலமென்பது குளநீரால் விளையும் செந்நெற்பயிரிற்றோன்றிய முத்தையொத்த பசிய நிறமும், பித்தகமென்பது பச்சைக்கிளியின் சிறகை நிகர்த்த பசிய நிறமும், முத்தமென்பது துளபத்தின் நிறமும் உடைத்தெனவும், சதோடத்திலே தோடலேசாஞ்சிதம் துட்டம் தோடமூர்ச்சிதம் தோடலேசம் மந்ததோடம் என்னும் ஐந்து பேதங்களுளவெனவும், இவ்வைந்தனுள்ளே, தோடலேசாஞ்சிதமென்பது எலுமிச்சையிலையின் நிறமும், துட்டமென்பது அலரியிலையின் நிறமும், கருங்குவளையினிதழ் நிறமும், தோடமூர்ச்சிதமென்பது புல்லின் நிறமும், தோடலேசமென்பது தாமரையிலையின் நிறமும், மந்ததோடமென்பது மயிலிறகின் நிறமும் உடைத்தெனவும், இத்தகைய குற்றமுள்ளவற்றை நீக்கி மேற்கூறிய குணமுள்ள மரகதமணியை அணிவோர்கள் நால்வகைச் சைனியங்களையும் ஆயுள்விர்த்தியையும் பெறுவாரென்னவும் கூறுவர். இவற்றை, "காடமே சுப்பிரமே காளமெனக் குணமூன்றுங் கருடப் பச்சைக்-கீடறு கினிதழ்நிறத்த காடமது சாதியிற்று விருவே றாகுந் - சாடரிய ச குணமெனச் சதோடமென வகையிரண்டிற் சகுண மாறும் - பீடுபெறு காடமொடு முல்லசிதம் பேசலம்பித் தகமே முத்தம்." எனவும், "புல்லரிய பிதுகமென விவை

யாறிற் காடமது புல்லின் வண்ணை - மூல்லசித மெலிதாகும் யேசலமே குளச் செசெலொளை டரளம் போலு - மல்லடரும் பித்தகமே பசுங்கிளியின் சிறை நிறத்த தாகு முத்தங் - குல்லைநிறம் பிதுகமலை யிலையினிறஞ் சதோடத்தின் குணேனார்தாகும்." எனவும், "தோடலே சாஞ்சிதமே துட்டமே தோட மூர்ச் சிதமே வெய்ய - தோடலே சத்திரெனடு சூழ்மந்த தோடமெனத் தொகுத்த வைந்திற் - ருேடலே சாஞ்சிதஞ்சம் பிரவிலையா மலரியிலை துட்டநீலத் - தோடதாம் புல்லினிறந் தோடமூர்ச் சிதமுளரி தோடலேசம்." எனவும், "மந்ததோ டங்கலப மயிலிறகி னிறமாமிவ் வகுத்த தோடஞ் - சிந்தவா ளுதகுண மணியணிவோர் நாற்கருவிச் சேனைவாழ்நா - ளுந்தவாழ் வார்வலன்க ணிலமிரண் டரன்கண்டத் தொளிவிட் டோங்கு-மிந்திரநீ லந்தான்மா நீலமென வேறிரண்டின் டிந்த நீலம்." எனவும் வரும் திருவிளையாடற்புராணத் திருவிருத்தங்களானுந் தெளிக. (எக)

தழைவயி டூரி யம்பொற் றகட்டினின் முலைப்பால் வார்ப்ப
வொழுகிய வொளியாங் கோமே தகம்வயி டூரி யத்திற்
றழுவுறன் மேனி யாம்புட் பராகம்பொற் றகட்டிற் றேன்பாய்
முழுநிற மாமி வைக்கு மும்மணி யென்று நாமம்.

(இ - ள்.) விருத்தியாகின்ற வைடூரியமணிக்குப் பொன்னலாகிய தகட்டிலே முலைப்பால் வார்த்தால் ஒழுகியதுபோன்ற நிறமாகும். கோமேதக மணிக்கு வைடூரியத்துடனே கலந்த நல்ல நிறமாகும். புட்பராகமணிக்குப் பொன்னலாகிய தகட்டிலே தேன்பாய்கின்ற முழுநிறமாகும். இவைகட்கு மும்மணி என்று பெயர்.—எ - று.

இந்நூலாசிரியர் வைடூரியமணிக்குப் பொன்னலாகிய தகட்டிலே முலைப்பால் வார்த்தால் ஒழுகியதுபோன்ற நிறமென்றாராயினும், வேறு சில நூலாசிரியர், வைடூரியமணி, மூங்கிலிலை, மயிலின் பிடரி, பூனைக்கண் என்னும் இம்மூன்றின் நிறமும், திண்மையும் மென்மையும் பெறுமெனவும் வலப்பாலொளியுள்ளன பிராமணவருணமென்றும், இடப்பாலொளியுள்ளன க்ஷத்திரிய வருணமென்றும், மேற்பாலொளியுள்ளன வைசியவருணமென்றும், கீழ்ப்பாலொளியுள்ளன சூத்திரவருணமென்றும், நான்குவருணமுடைத்தெனவும், பெரியோர்கள் இதைத் தினந்தோறும் பூசித்துத் தரிக்கவேண்டுமெனவும் கூறுவர். இம்மணிக்கு வலமிடங் கீழ்மேலென்னும் பகுப்பெவ்வாறு கணிப்பதெனின், அம்மணியைக் கைப்பற்றிநின்றோனிருந்த திசைநோக்கி யெண்க. இவற்றை, "கழையிலைகார் மயிலெருத்தம் வெருகின்கண் ணிறத்த தாய்க் கனத்ததாகி - விழைவுதரு தெளிதாகித் திண்ணியதாய் மெலிதாகி விளங்கு மீதி - லழகுபெற வலமிடமேல் கீழொளிவிட் டனமுறையே யறவோ ராதித் - தழைவுறுநாற் சாதிகளாந் தினமிதனைப் பூசித்துத் தரிக்க சான்றோர்." என்னும் திருவிளையாடற்புராணத் திருவிருத்தத்தானுந்தெளிக. வாழை மா பலா என்னும் மூன்றுக்கும் இனிமை மேம்பாட்டின் ஒற்றுமை நோக்கி முப்பழம் எனக்கூறுவதுபோன்று, இம்மூன்று மணிகளின் நிறமேம்

பாட்டின் ஒற்றுமை நோக்கி மும்மணியெனப் பெரியோர் கூறுவரென்பார், "மூழுநிறமாமிவைக்கு மும்மணியென்று நாமம்." எனக் கூறினர். (௮௦)

அத்தனா ரிந்தி யத்தால் வருமணிப் பச்சை செம்மை
யொத்தொரு நிறம தாக்கு மொள்ளெரி யொளிவெள் ளாரம்
வித்துரு மங்க ளென்றும் விளைவின்றி விளைவிப் பார்க
ளுய்த்தகண் மணியா னோக்கி னொண்மணி போலு மாலோ.

(இ-ள்.) சிவபெருமானுடைய விந்துவினால் உற்பத்தியாகியமரகத மணியின் செவ்வியொத்து ஒரே நிறத்தினையுண்டாக்கும் மரகதமணி யென்றும், சிறந்த அக்கினியினொளிபோன்ற பவளமணியென்றும், வெள்ளியமுத்தமணிகளென்றும், இயற்கையுற்பத்தியில்லாமல் செய்கையாலுற்பத்தி செய்வார்கள. பார்க்கச் செலுத்துகின்ற கண்மணிகளாற் பார்க்குங்கால், அவைகளும் சிறந்த இயற்கைமணிகள் போன்றிருக்கும் —எ - று.

திருமால் மோகினிவடிவங்கொண்டபோது சிவபெருமான் கூடிய தருணத்தி லொழுகியவிந்துவில் தோன்றியது மரகதம் என்று அம்மணியின் தோற்றங்களுள் ஒன்றிற் கூறியிருத்தலை விளக்குவான், "அத்தனாரிந்தியத்தால் வருமணி." என்றும், மாந்தாளிப்பசளை என்றும் பங்காளமுத்து என்றும் கற்பவளம் என்றும் இக்காலத்தில் வழங்கும் மூன்றும், வைத்தியநூல்களிற் கூறியுள்ள பச்சைவைப்பு முத்துவைப்பு பவளவைப்பு என்னும் முறைப்படி இயற்றுவனவாகையால், "விளைவின்றி விளைவிப்பார்கள்." என்றும், அவைகளும் பார்ப்பவர்கண்களுக்குப் பொது நோக்கத்தில் இயற்கைமணிகள் போன்றே விளங்குமென்பார், "உய்த்த கண்மணியானோக்கி னொண்மணிபோலும்." என்றும் கூறினர். சிவபிரான் விந்தில் மரகதமணியுற்பத்தியாயிற்றென்பதை, "முன்னரை முளரிக் கண்ணன் மோகினி யணங்காயோட - வன்னரை மதியஞ்சூடி மந்தர வரைமட் டாகத் - துன்னரி யேறு போலத் தொடர்ந்தொரு விளையாட் டாலே - யென்னரி தாயசெந்தீ யிந்தியக் கலனஞ் செய்தான்." எனவும், "அப்பொழு தமல வித்தி லரிகர குமரன் கான - வைப்புற தெய்வத்தோடும் வந்தன னந்த விந்து - துப்புறு கருடன் கௌவிக் கடலிலுந் துருக்கநாட்டும் - பப்புற விடுத்த வாறே பட்டது கலுழப்பச்சை." என்னும் திருவிளையாடற்புராணத்திருவிருத்தத்தானுந் தெளிக. இது கலுழப்பச்சை என்றமையின் ஏனைய இரண்டுவித தோற்றங்களுளவென்பதை யுய்த்துணர்க. (௮௧)

நல்லியற் கோர வல்லி நாட்டிய கனக கோர
வல்லிசொல் லியவா மற்று மணிகளு மேரு வெற்பிற்
சொல்லிய னடவா நிற்குந் துணைமணி விடங்க டர்க்கு
மொல்லியன் மணிகள்யாவு மும்மணி மாகு மன்றே.

(இ-ள்.) சிறந்த இலக்கணமுள்ள கோரவல்லியும் நிலைப்படுத்திய கனககோரவல்லியும் சொல்லமுடியாத மற்றைய இரத்தினங்களும் மேரு

வரையிலே வழக்கமாக வழங்கிக்கொண்டிருக்கும், மேற்சொல்லிய இரண்டு இரத்தினங்களும் பலவகை விடங்களைப்போக்கும், இயற்கையமைந்த அவ்வகை இரத்தினங்களனைத்தும் உம்முடைய இரத்தினங்களாய்விடும் —எ-று.

எனவே, மேருவரையில் கோரவல்லி கனககோரவல்லி என்னும் இரண்டு மணிகளும் இன்னும் உரைக்கவேலாத பல்வேறு வகை இரத்தினங்களும் வழங்குமென்பதும், அவ்வாறு வழங்குவனவற்றுள், முதலிற் சொல்லிய இரண்டுமே பலவகை விடங்களைத் தீர்க்குமென்பதும், மேற்கூறிப்போந்த மணிகளுள் குணமமைந்த மணி ஏதேனும் ஒன்றிருக்குமாயின், மேருவரையிற் கிடைக்கக்கூடிய இத்தகைய மணிகளும் உம்மதேயாமென்பதும் தாற்பரியம். குணமமைந்த ஓர்வகை மணியிருக்கின், ஏனையவகை மணிகளெல்லாம் சேருமென்பதை, "எள்ளியிடு குற்றமெலா மிகந்துகுண னேற்றொளி விட்டிருள்கால் சீத்துத் - தள்ளியவிச் செம்பதும ராகமது புனைதக்கோர் தம்பாலேனைத் - தெள்ளியமுத் தன்ளிட்ட பன்மணியும் வந்தோங்குஞ் செய்யாளோடு - மௌள்ளியசற் செல்வமதற் கொப்பரெடும் பாற்கடலி னோங்குமாலோ." என்னும் திருவிளையாடற்புராணத் திருவிருத்தத்தானுந் தெளிக. மன் - ஒ, அசைகள். (அ௨)

மானுக மீன்ற வான்ற மணிகளு மாலன் மார்பின்க
ணூனுத மணியுஞ் சிந்தா மணியுமாங் காங்க நிந்து
வானுடர் மகுடக் காசு மதிப்பன வருமெற கென்று
பூநாகஞ் சடைக்க ணிந்த புண்ணிய னருளிச் செய்தான்.

(இ - ள்.) சிறந்த நாகங்கள் கக்கிய பெருமையமைந்த இரத்தினங்களையும், திருமால் மார்பின்கணுள்ள கெடாத கவுத்துவமென்னும் இரத்தினத்தையும் சிந்தாமணியையும் அவ்வவ்விடத்தில் குணங்களுணர்ந்து, தேவர்களுடைய கிரீடங்களினுள்ள மணிகளையும் மதிக்கத்தெரியும் எனக்கென்று, அழகிய சர்ப்பத்தைச் சடைக்குத் தரித்த புண்ணியராகிய பிராமணச்சிறுவர் திருவாய் மலர்ந்தனர்.—எ-று.

எனவே, இரத்தினத்தோற்றங்களையும் அவற்றின் வேறுபாடுகளையும் குணகுற்றங்களையும் சிறங்களையும் பலன்களையும் முறையே கூறி முடித்த பிறகு, கடைசியாகச் செயற்கையாயுள்ள மணிகளிவையிவையென அவற்றையுங் கூறி முடித்து, மானிடர்க்கருமையானவையாயுள்ள நாகமணி கவுத்துவமணி சிந்தாமணி தேவர்கள் கிரீடமணி என்னும் இவற்றையும் யாம் மதிக்க வல்லோம் எனத்தமதாற்றலை மிகுதியும் விளக்கினரென்றபடி. (அ௩)

மற்றுள தொழில்வெவ் வேறு வல்லமை சொல்லு நல்லோன்
குற்றமில் குணத்த னென்று குறித்தனர் திருவெண் காடர்
செற்றமில் சிந்தை யிந்த மைந்தமேல் திறைகொண் டானென்
றிற்றுணர்ந் தந்த ணாளர் செழின்முக நோக்கிச் சொல்வார்.

(இ - ள்.) மற்றுமுண்டாகிய வேறுவேறான தொழில்களின் வல்லபங்களெவற்றையும் கூறுகின்ற பிராமணச்சிறுவர், குற்றமற்ற குணமுடையவரென்று திருவெண்காட்டடிகள் கருதிப் பிடிவாதமற்ற என்மனமானது இச்சிறுவனே கப்பமாகக்கொண்டாவென்று நிச்சயித்தறிந்து, ஆதிசைவராகிய சிவசருமரது அழகிய முகத்தைப்பார்த்துத் திருவாய் மலர்கின்றனர்.—எ - று.

திருவெண்காட்டடிகள் மனமானது விருப்பு வெறுப்பற்ற நடுநிலைத் தன்மையுடையதாகலின், "செற்றமில்சிந்தை." என்றார். எனெனின், ஒன்றினுண்மையை ஆராயப்புகுவோர் விருப்புவெறுப்பற்று ஆராயவேண்டும் எனவும் விருப்புடனே ஆராயின் குற்றம்விளங்காதெனவும் வெறுப்புடனே யாராயின் குணம் விளங்காதெனவும் நூல்கள் கூறுகின்றமையினென்க. இத்திருவெண்காட்டடிகள் அப்பிராமணச்சிறுவரின் வல்லபத்தினுண்மையை ஆராயத்தொடங்கியபோது அவரிடத்தில் விருப்பும் வெறுப்புமற்று நடுநிலையாயிருந்தாரேனும், அவர்மனம் அவ்வேதியச்சிறுவர்மீது அதியூற்றமாய்ப்பதிந்ததாகலின், "செற்றமில் சிந்தையிந்தமைந்தனே நிலைறகொண்டான்." என்றனர். ஒருவர் ஓர்பொருளையாராயும்போது விருப்புவெறுப்பின்றி யாராயவேண்டுமென்பதை, "சாய்த லுவத்த லகற்றி யொருபொருட்க - ணாய்த லறிவுடையார் கண்ணதே-காய்தலின்க-ணுற்றகுணந் தோன்றா தாகு முவத்தலின் கண்-குற்றமுந் தோன்றாக் கெடும்." என்னும் வெண்பாவானுமறிக. (அச)

என்னுடை யிடத்தி லிந்த மைந்தனுற் றிருத்தல் வேண்டு
மன்னவன் றனக்குப் பொன்னோ ராயிர மளிக்கேன் முன்னாட்
பன்னிய மூலவோலை பலரறி தால வோலை
யின்ன நீர் நல்கி ரென்றார் நட்பியு மிசைந்தா னன்றே.

(இ - ள்.) இப்பிராமணச்சிறுவர் என்னிடத்திலேயே வசித்திருத்தல் வேண்டும், அவருக்காக ஓராயிரம்பொன் தருகின்றேன், இதற்கு முன்பு இவர் உமக்கடிமையென்று செப்பியுள்ள மூலவோலையும், பலருக்கும் அறியும்படி காட்டத்தக்க படியோலையும் ஆகிய இவற்றை நீர்கொடுப்பீராக என்றுரைத்தனர். அதுகேட்ட சிவசருமரும் அதற்கொருப்பட்டனர்.—எ - று.

அப்பிராமணச் சிறுவரைத் தாமேவைத்துக்கொள்ள விரும்பிய திருவெண்காடர், அவருக்கு விலையாக ஆயிரம்பொன்னளிப்பதாகச் சிவசருமருக்குரைத்து, அச்சிவசருமருக்கு இச்சிறுவரடிமையென்றெழுதித் தந்துள்ள மூலவோலைபடியோலை என்னும் இரண்டையும் கேட்டாரென்றபடி. தாலமென்பது படியென்னும் பொருடருதலின், படியோலை என்பதற்குத் தாலவோலையென்றனர். மூலவோலை படியோலை என்னும் இவ்விரண்டையுமே இக்காலத்தவர்கள் அசல் என்றும் நகல் என்றும் வழங்குகின்றார்கள். மூலவோலை படியோலை என்பதுவே தமிழ்வழக்கென்பதை, "ஆட்சியிலாவணத்திலன்றிமற் றயலார் தங்கள் - காட்சியின் மூன்றி லொன்று காட்டுவா யென்ன முன்னே - மூட்சியிற் கிழித்த வோலை படியோலை மூலவோலை - மாட்சியிற்

காட்டவைத்தே னென்றனன் மாயைவல்லான்." என்னும் அருண்மொழித் தேவரமுதவாக்கானுமறிக. (அ௫)

ஒருவனை மணம்வி லக்கி யுற்றவன் றொண்டு கொண்டு
பெருகுமா வணமுங் கொண்டோன் பிறங்குமங் கவன்குலத்தாற்
றிருமணஞ் செய்து வன்றொண் டாகியா வணமீ வோன்போன்
றருளினால் வந்த வன்ற னவணந் தனங்கொண் டிருந்தான்.

(இ - ள்.) ஒப்பற்றவராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகளைத் திருமணம் செய்யாமற்றடுத்து வன்றொண்டாக ஆட்கொண்டு, பெருமையுற்ற அடிமையோலையும் அவரிடத்திற் பெற்றுக்கொண்டோராகி, சிவபெருமான், விளக்கமுற்ற அச்சுந்தரமூர்த்தி சுவாமிகளின் குலத்திற் பிறந்த சிவசருமருக்குப் பெருமையமைந்த திருமணஞ்செய்து முடித்து, வலிய தொண்டராய் அடிமையோலையெழுதிக் கொடுப்பவர்போலத் திருவருளால்வந்த சிவபெருமானாகிய பிராமணச்சிறுவர் தம்முடைய அடிமையோலையைத் திரவியம் பெற்றுக்கொண்டு கொடுத்தருளினர்.—எ - று.

முன்பு சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருமணத்தைத் தடுத்து அவர் தமக்கு எழுதிக்கொடுத்ததாக அடிமையோலைகாட்டி அவரை வன்றொண்டாகக் கொண்டவர், இப்போது அதற்கு நேர்மாறாக அக்குலத்தவரொருவர்க்குத் திருமணமுடித்து, தாமே அவருக்கடிமையென்று ஓலையெழுதித் தந்து அவரையாட்கொண்டாரென்றபடி. (அ௬)

ஈந்தபி னெழுந்து நம்பி யேகநா யகனை யேத்தி
வாய்ந்தவெண் காடர் நீட மாசிலா சிகளுங் கூறிப்
போந்திட மருதிற் புக்குப் புதுமணம் புணர்ந்து வாழ்ந்தான்
சேர்ந்திடு மருத வாணன் செய்கைமே லியம்ப லுற்றாம்.

(இ - ள்.) அவ்வாறுகொடுத்தபின் சிவசருமரெழுந்து, ஏகநாயகராகிய சிவபிரானைத் துதித்து, செல்வம்வாய்க்கப்பெற்றுள்ள திருவெண்காடர்மேன் மேலும் அபிவிர்த்தியாகுமாறு, குற்றமற்ற ஆசிவசனங்களையுமுரைத்துச்சென்று, தமது இருப்பிடமாகிய திருவிடைமருதூரிற் சேர்ந்து, மறுமணம் செய்துகொண்டு வாழ்ந்திருந்தனர். திருவெண்காடரிடத்திற் சேர்ந்தவராகிய மருதவாணருடைய திருவிளையாடலை இனிமேற்கூறத்தொடங்கினோம்.—எ - று.

நம்பி - ஆண்மகனிற் சிறந்தோன். அன்றியும் முன்புசிவபெருமானால் மணம்விலக்கப்பெற்ற நம்பியாரூரராகிய சுந்தரமூர்த்திசுவாமிகளைப் போன்று இவரும் அப்பெருமானால் மணம்விளைக்கப் பெற்றாராகையால் அவ்வொற்றுமைநோக்கி இவரையும் நம்பியென்றாரென்னலுமாம். சிவபெருமானே பிராமணச் சிறுவராய்வந்து அடிமையோலையெழுதிக்கொடுத்து, அவ்வோலையுடன் இவரையும் திருவெண்காடரிடத்திற்குக் கொண்டுபோய், அங்குதமது இரத்தினப்பரிட்சாவல்லபம் முதலியவற்றை அவர்க்கு நன்குணர்த்தி, அவர் தம்மைவாங்கிக்கொள்ளும்படிச் செய்து, தமது விலையாக அவர்கொடுத்த திரவி

யத்தை இவர்க்குக்கொடுத்துத் திருமணம் முடிப்பித்தாராகலின், "புதும ணம்." என்றார். (அஎ)

மருதவா ணனைவெண் காடர் மகன்மையாக் கொண்ட தன்றி
யுரிமைகூ ரடிமை யாக வொருகணப் போது மெண்ணு
ரருளினு லிவனு மந்த வன்பருக் கன்ப னுனன்
றெரிவரா திருவ ருந்தான் றிருநெல்வே லியின்வே யொத்தார்.

(இ - ள்.) திருவெண்காடர் மருதவாணரைப் புத்திரமுறைமை யாகக் கொண்டதேயன்றி தமது தொழிலுக்குரிமைமிக்க அடிமையாக ஓர் கூணப் பொழுதேனுங் கருதார். இம்மருதவாணரும் தமது திருவருளினுல் அன்ப ராகிய அத்திருவெண்காடருக்கு அன்புடையவராயினர். யாவருக்கும் இவர் கள் முறைமை தெரியாவண்ணம் இவ்விருவரும் திருநெல்வேலியின்கணுள்ள மூங்கிலைப் போன்ருர்கள்.—எ - று.

திருவெண்காடர் மருதவாணரைத் தமக்கடிமையாக அடிமைச்சீட்டுடன் விலைகொடுத்துப் பெற்றுக்கொண்டபோதினும், தமது முற்பிறவியின் வாச னுவிசேடத்தாலும், அம்மருதவாணரது வல்லப மேம்பாட்டாலும் அவரைத் தமது புத்திர முறையாகக் கொண்டிருந்தாரென்பதும், மருதவாணராகிய சிவபெருமானும் தமது திருவருட் பெருமிதத்தால் அவ்வன்பருக்கன் பரா யிருந்தாரேயன்றி அடிமையைப் போன்றிருந்தாரில்லையென்பதும், இவ்விரு வருமிருந்த முறைமையை நோக்குவோர் யாவரும், மருதவாணருக்குத் திரு வெண்காட்டடிகள் இன்னமுறையினரென்றும், திருவெண்காட்டடிகட்கு மருதவாணர் இன்ன முறையினரென்றும் உணரக்கூடாத தன்மையி னராஞரென்பதும், அவ்வாறிருந்தமையின், இவர்களிருவரையும் நோக்கு மிடத்துத் திருநெல்வேலி என்னுந்தலத்துள்ள மூங்கிலைப்போன்றர்களென் பதும் கருத்து. என்னை, திருநெல்வேலியிலே சிவபிரான் ஓர் மூங்கிலின் கணுதித்தாரென்பது சரிதமாகலின், அச்சரிதத்தை நோக்குமிடத்து அம் மூங்கில் சிவபிரானுக்குத் தாயாக விளங்குகின்றது. அங்ஙனம் விளங்கினும் அம்மூங்கில் அப்பெருமானைத் தனது புத்திரனுகக் கருதுகின்றதோ இல்லை. தெய்வமாகவே கருதுகின்றது, அப்பெருமானும் அதைத்தாயாகத் திருவுளங் கொள்கின்றரோ இல்லை. தமக்கு விருப்பமுள்ளதாகத் திருவுள்ளங்கொள் கின்றனர். நோக்குவோர் யாவரும் சிவபெருமான் அம்மூங்கிலினிடத்து விருப்புற்று வீற்றிருக்கின்றனரென்றே கொள்கின்றனர். இவ்வாறே திரு வெண்காட்டடிகள் மருதவாணரை அடிமையாகக் கொண்டாரேனும் அவ ரைத் தமது புத்திரராகவே கருதினர். மருதவாணரும் அவரைத் தமது ஆண் டானுகவாவது பிதாவாகவாவது கருதாதவராய் அன்பராகவே கருதினர். நோக்குவோர் யாவரும் மருதவாணர் திருவெண்காட்டடிகளிடத்து வைத்த நேயத்தால் அவரிடத்து வசித்திருக்கின்றனரென்றே கருதினரென்க. மூங் கிலின்கண் சிவபிரானுதித்தனரென்பதை, "வேயின்ற முத்தர்தமை வெட் டிஞனேயிடையன் - ருயீன்ற மேனி தயங்கவே - பேயாகே - ளொத்தனோ

னென்றே யிடுவான்பாற்குடத்தை - யத்தனையும் வேண்டுமெவர்க்கு." என்னும் இரட்டைப்புலவர்கள் திருவாக்கானுந் தெளிக. (அஅ)

இவ்வா றிங் கொழுகு நாளி னெழிற்றொழில் வாணி பங்கள்
செவ்வான மேனி யன்பா லளித்தனர் திருவெண் காட
ரொவ்வாத துறைக டோறு மூதிய மதிக மாக்கித்
தெவ்வான பெயரும் வந்து திறையிடச் செய்வித் தானே.

(இ - ள்.) இவ்விதமாய் இவ்விடத்தில் நடந்துகொண்டிருக்கும் நாளிலே, திருவெண்காட்டடிகள் அழகிய தமது தொழிலாகிய வியாபாரங்களைச் செக்கர்போலுந் திருமேனியுடைய சிவபிரானாகிய மருதவாணர் வசமீந்தனர். மருதவாணர் ஒன்றுக்கொன்றொவ்வாத பல்வேறு வகைப்பட்ட மார்க்கங்களெவற்றினும் இலாபத்தை விசேடப்படுத்தி, பகைவர்களாயிருப்பவரும் திருவெண்காட்டடிகளைக் கிட்டிப்பகுதிகட்டச் செய்வித்தனர்.—எ - று.

எனவே, திருவெண்காடர் மருதவாணரை மகன்மை கொண்டதற்கிணங்கத் தமது வியாபாரங்களனைத்தையும் அவர்பாலளித்தனரென்றும், அவரும் திருவெண்காட்டடிகளிடத்து வைத்த நேயத்தால் அவர் திரவியத்தைப் பெருக்கித் தருவான் அவர் அதுகாறும் செய்துவந்த வியாபாரங்களேயன்றி ஏனைய பல்வேறுவகைப்பட்ட வியாபாரங்களையும் செய்யத்தொடங்கி இலாபம் அதிகரிக்கச் செய்தாரென்றும், அவ்வாறு செய்ததால், ஏகசக்கிராதிபதிக்கு ஏனைய குறுநிலமன்னர்கள் கப்பங்கட்டுவதுபோல, மற்றுள்ள சிறு வியாபாரிகளனைவரும் திருவெண்காட்டடிகளையே தங்கள் தலைவராகக்கொண்டு, தாங்கள் கடல்மார்க்கமாய் வரவழைக்கவேண்டிய பல்வேறு சரக்குகட்குங்கூடிய தொகையை அவரிடத்திலேயே கப்பமாகக் கட்டச்செய்தாரென்றும் விளக்கியபடி. இஃதன்றிப் பகைமையால் இவருடனெதிர்த்து இவரைப்போன்றே தனித்து வியாபாரஞ்செய்து வந்தோரனைவரும் இவரிடத்திற் சரக்குகளைப் பெற்றுக்கொள்ளத்தக்க அவ்வளவு பெரிய வியாபாரியாக்கினரென்றும் போதருதல்காண்க. (அக)

செய்திக ளிவையு மன்றிச் சிந்துயாத் திரைக்குப் போந்திங்
கெய்திடல் கருதி யாங்கு மிங்கும்வேண் டியவை யாவும்
வைதிர மதிக்கச் செய்து பற்பல சரக்கு மொக்கப்
பெய்தனர் கலங்கொ டுய்த்தார் பெருந்திரு நீங்கா தோங்க.

(இ - ள்.) இவ்வாறான சமாச்சாரங்களுமல்லாமல், கடல்யாத்திரைக்குச் சென்று இவ்விடத்தடைய வேண்டுமென்பதைத் திருவுளங்கொண்டு, தாம் போகும் அவ்விடத்திற்கு வேண்டியவற்றையுந், தாம்வருமளவும் இவ்விடத்திற்கு வேண்டியவற்றையும் அந்நாட்டிலுள்ளார் யாவரும் மதிக்கும்படி இயற்றி, பல்வேறான சரக்குகளையும் ஒன்றாகவாங்கி மரக்கலத்திற் சேர்த்துப் பெருத்த ஐஸ்வரியம் ஒழியாது விர்த்தியாகும்படி செலுத்தினர்.—எ - று.

தம்தேயத்திற் பெருத்தவியாபாரமியற்றி ஊதியமதிகப்படுத்தியதுமன்றித் தூரதேயத்து வியாபாரமும் செய்யத்தொடங்கினரென்பார், "செய்திகளிவையுமன்றிச் சிந்துயாத்திரைக்குப்போந்திங் கெய்திடல்கருதி" என்றும், திருவெண் காட்டடிகள் தம்முடைய விவகாரங்களனைத்தையும் இம்மருதவாணர் வசம் ஒப்புவித்தாராகையால், இப்போது தாம் கடல்யாத்திரை சென்று மீண்டு வருமளவும், இவ்விடத்து வியாபாரங்கட்கு வேண்டியசரக்கு முதலியவற்றையும், தாம் கடல்மார்க்கமாய்ப் போகும்தேயங்களிற் செலவாகத் தக்க சரக்குமுதலியவற்றையும் சேகரித்து அததற்கேற்ற ஏற்பாடுகளை ஏனைய வியாபாரிகள் மதிக்குமாறியற்றினரென்பார், "ஆங்குமிங்கும் வேண்டியவையாவும்-ஸப்திரமதிக்கச் செய்து." என்றும் கூறினர். (௯௦)

ஓங்குமா கலத்தி னேறு மோரையுஞ் சேர நோக்கிப்
பாங்குறக் கண்டு கொண்டு பகட்டுமா முகத்து வள்ளாற்
காங்கனி யினிய செந்தே னமுதமோ டளாவி நல்கித்
தீங்கிலா தானை யேத்திச் செழுங்களி பிறங்கி னாரே.

(இ - ள்) மரக்கலத்தில் ஏறுதற்கேற்ற நட்சத்திரமும் முகூர்த்தமும் ஒருங்குகூடப் பார்த்து, அவையிரண்டும் அமைந்திருப்பதைத் தெரிந்து மரக்கலமீதேறிக்கொண்டு, யானையின் சிறந்தமுகமுள்ள விநாயகக்கடவுட்குரிய கனிவர்க்கங்களையும் இனிமையுடைத்தாய்ச் செந்நிறமமைந்த தேனையும் பாலுடன்கலந்து நிவேதித்து, கெடுதியற்றவராகிய அப்பெருமானைத் துதித்து விசேடித்த மகிழ்ச்சியின் விளங்கினர்.—எ - று.

விநாயகக்கடவுட்குக் கனிவர்க்கங்களும் பாலுந்தேனுமே நிவேதித்தற் கதிமுக்கியப் பொருள்களாகலின், "பகட்டுமாமுகத்துவள்ளற்காங் கனியினிய செந்தேனமுதமோடளாவி நல்கி." என்றார். இதனை, "வாழைக்கனிபலவின்கனி மாங்கனி தாஞ்சிறந்த - கூழைச் சுருள்குழை யப்பமெள்ளுண்டையெல் லாந்துறுத்தும் - பேழைப் பெருவயிற் றோடும் புகுந்தென்னுளம்பிரியான்-வேழத் திருமுகத் துச்செக்கர் மேனி விநாயகனே." என்னும் கபிலதேவர் திருவாக்கானும், "பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை-நாலுங் கலந்துனக்கு நான்றருவேன் கோலஞ்செய்-துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்குச் - சங்கத் தமிழ்மூன்றுந்தா." என்னும் ஔவைப்பிராட்டியார் அமுதவாக்கானு மறிக. (௯௧)

அருங்கல மீது போது மமுதனைக் கங்கை நங்கை
கருங்கடல் வடிவாய்த் தானுந் தாங்குதல் கருதி னாள்போ
னெருங்கலைக் கரத்தா லேந்த நெடுங்கட லோடி நாடி
மருங்குறு வணிக மாக்கண் மனங்கவ லுறாது சென்றான்.

(இ - ள்.) அருமையான மரக்கலத்தின்மீது செல்கின்ற அமுதேச்சுரராகிய மருதவாணரை, கங்கை என்னும் பெண்ணானவள் கருநிறங்கொண்ட கடல்வடிவமாகத் தானும் சுமக்கச் சிந்தித்தவளைப்போன்று, நெருங்கிய அலை

கனென்னுங் கரத்தினுற் சுமக்க, நெடிய கடல்மார்க்கமாய்ச் சென்று, அவ்வித வியாபாரத்தையே விரும்பித் தமது பக்கத்திற் சேர்ந்த ஏனைய வியாபாரிகள் மனம் வருந்தாதபடி சென்றனர்.

சிவபிரான் மருதவாணரென்னும் பெயருடன் தமது திருவுருவைக் கரந்து வந்திருக்கின்றாராகலின் அவரை விட்டுப் பிரியாத அவரது தேவிமார்களிருவருள் பார்வதிதேவியார் தமது திருவுருவைக்கரந்துகொண்டு அவரது திருவருளுருவாக விளங்குதலின், நீர்த்தன்மையுடைய யாம் எவ்வாறு அவரைப் பிரியாதிருப்பதெனக்கருதி, அவர் இப்போது கடல்யாத்திரை செய்வதால், அக்கடலின் வடிவாக யாமிருந்து அலைகளென்னும் கரத்தால் அவரைத் தாங்கிச்செல்லுவோமென்று கங்கை நிச்சயித்து வந்தனளென்பார், "அருங்கல மீது போது மழுதனைக் கங்கை நங்கை-கருங்கடல் வடிவாய்த் தானுந் தாங்குதல் கருதி னன்போ - னெருங்கலைக் கரத்தா லேந்த." என்றும், மருதவாணர் கருணாகரக்கடவுளாகலின் தம்முடன் அக்கடல்மார்க்கமாய்ச் சென்ற ஏனைய வியாபாரிகட்கும் தம்மாலியன்ற உதவி புரிந்துகொண்டு அவர்கள் மனம் வருந்ாது சென்றாரென்பார், "நெடுங்கடலோடி நாடி - மருங்குறு வணிக மாக்கண் மனங்கவ லுறாது சென்றான்." என்றும் கூறினர். தானும் என்பதன்கணுள்ள உம்மை, மரக்கலந் தாங்குதலேயன்றித் தானும் எனப்பொருடருதலின் இறந்தது தழீஇய எச்ச உம்மை. (௯உ)

சென்றுநா டியதோர் தீவிற் சேர்ந்துதான் கரையைச் சார்ந்து
வன்றிறச் சரக்கு மாற்றி மறுசரக் கேற்றிப் போற்றிக்
குன்றினின் றிழிவார் போலக் குரைகடல் கலத்தா னீந்தி
மன்றலங் கொன்றை வேய்ந்த வாண்டகை மீண்டு வந்தான்.

(இ - ள்.) தாம் கருதிச்சென்றதாகிய ஓர் தீவிலடைந்து கரையிலிறங்கி, தாம் கொண்டுபோன மிகமேலாந் தன்மைபெற்ற சரக்குகளை மாற்றிவிட்டு, அவற்றின் மதிப்பிற்குத்தக்க வேறு சரக்குகளை ஏற்றிக்கொண்டு பாதுகாத்து, மலையினின்றும் கீழிறங்குபவரைப்போன்று ஒலிக்கின்ற கடலை அம்மரக்கலத்தால் தாண்டி, மணமும் அழகுமமைந்த கொன்றைமலர் மாலிகை சூடிய ஆண்டகையாரென்னும் மருதவாணர் திரும்பிவந்தனர்.—எ-று.

தான் - அசை மருதவாணர் கப்பலிலேற்றிச் சென்றது உயர்ந்த சரக்குகளெனக்குறிப்பிப்பான், "வன்றிறச் சரக்கு." என்றும், குன்றும் குரைகடலும்பொதுவாக அதிதூர வொற்றுமையுடைமையின், "குன்றினின் றிழிவார் போலக் குரைகடல் கலத்தா னீந்தி." என்றும் கூறினர். சிவபிரானுரே மருதவாணராகலானும், அவர் இப்போது தமது கோலங்களை மாற்றிக்கொண்டிருத்தலினும், இப்போதவர்க்குக் கொன்றைமாலிகை இன்மையினும், மன்றலங் கொன்றையேயும் என நிகழ்காலத்தாற் கூறாது, "வேய்ந்த" என இறந்தகாலத்தாற் கூறினர் மருதவாணருடைய சாமர்த்தியத்தையும் பெருமிதத்தையும் மேம்பாட்டையும் ஒருங்கு விளக்குவான், "ஆண்டகை" என்றார். ()

வந்தவா ணிபத்தாற் பெற்ற வளமெலாம் வளர்பொன் னாக்கித்
தந்தனன் றிருவெண் காடர் தருக்கறு மகிழ்ச்சி பொங்க
வெந்திறல் விடையி னார்க்கு வேண்டிய சிறப்பு நல்கி
யுந்திடச் செய்தா ரிவ்வா றொழுகினான் வழுவி லாதான்.

(இ - ள்.) மருதவாணர் அவ்வாறாகக் கடல்யாத்திரைபோய் வந்து, அந்த வியாபாரத்தால் தாம் அடைந்த பல வளப்பங்களையும் விசேடித்த பொற்காசுகளாக்கி, திருவெண்காடர் களிப்புநீங்காத மகிழ்ச்சியின் மேம்படுமாறு கொடுத்தனர். திருவெண்காட்டடிகள் பெருமையமைந்த வல்லபமுள்ள இடபவாகனமுடையராகிய சிவபிரானுக்குச் செய்யவேண்டிய அபிஷேகாதிகட்குரிய சிறந்த வஸ்துக்களைக் கொடுத்து, அவருக்குரித்தாக்கும்படிச் செய்வித்தனர். குற்றமற்றவராகிய மருதவாணர் இவ்வாறு நடந்துவந்தனர்.

மருதவாணர் கடல்யாத்திரை சென்றிருந்தபோது, திருவெண்காட்டடிகள், அம்மருதவாணர் சென்றிருக்கும் யாத்திரை இடையூறின்றி இனிது முற்றுப்பெறுமாறு சிவபிரானுக்குப் பிரார்த்தனை செய்து கொண்டிருந்தாரென்று விளக்குவான், "வெந்திறல் விடையினார்க்கு ; வேண்டிய சிறப்பு நல்கி" என்றும், அபிஷேகாதிகட்குரிய திரவியங்களைக்கொண்டு தாமே பூசியாமல், பூசித்தற்குரிய ஆதிசைவர்கள்பாற்றந்து பூசிக்கச்செய்தனரென்பான், "உந்திடச் செய்தார்." என்றும் கூறினர். (கூஎ)

மந்திரத் தலைமை சான்ற மதிமுது சேந்த னாருஞ்
சந்ததங் கண்டு கண்டு தம்முளே மகிழ்ச்சி பொங்க
வந்துறு மருத வாணன் வனப்புறு சிறப்பு வாய்ப்பச்
சுந்தரம் பலிப்பச் செய்தார் சூழழுக் காறி லாதார்.

(இ - ள்.) மனத்தைப் பாவியிருக்கும் பொறாமையில்லாதவராகிய, திருவெண்காட்டடிகளின் மந்திரிகளில் முதன்மை பெற்றவரான பேரறிவுடைய சேந்தனார்நாயனாரும், தமது மனத்தின்கண் மகிழ்ச்சியானது மேம்பட, கடல்யாத்திரை செய்துவந்த மருதவாணரைச் சதாகாலமும் பார்த்துப் பார்த்து, அவரது அழகுக்குப் பொருந்திய மேன்மையமைய அலங்காரம் வாய்க்கும்படிச் செய்தார் —எ - று.

மனத்தைப் பாவியிருப்பது அழுக்காறாகலின், "சூழழுக்காறிலாதார்" என்றும், மருதவாணருடைய அழகுக்கேற்ற அலங்காரங்களைச் செய்துதினந்தோறும் பார்த்துக் களித்தனர் சேந்தனாரென்பார், "சேந்தனாருஞ் சந்ததங் கண்டு கண்டு தம்முளே மகிழ்ச்சி பொங்க-வந்துறு மருதவாணன் வனப்புறு சிறப்பு வாய்ப்பச்-சுந்தரம் பலிப்பச் செய்தார்." என்றும், சேந்தனாருடைய அறிவின் மேம்பாட்டால் மந்திரிமாருள் முதல்வராயினரென்பார், "மந்திரத் தலைமை சான்ற மதிமுது சேந்தனார்." என்றும் கூறினர். மனத்தைப் பாவி

யிருப்ப தழுக்காறென்பதை, "ஒழுக்காறுக் கொள்க வொருவன்றன் னெஞ் சத்-தழுக்கா றிலாத வியல்பு." என்னும் திருக்குறளுரையானுந் தெளிக.

பின்னரு மார வாரப் பெருங்கடற் புக்கும் போந்துஞ்
சென்னிய னுளு ருத தீவினு மரும்பண் டங்க
ளிந்நில மதிக்கக் கொண்டு வருமிருங் கலங்க ளோட்டுந்
தன்மைமீ காம ரெல்லாந் தங்கண்மீ காம னென்பார்.

(இ - ள்.) அதன் பின்னும் ஒலியையுடைய பெரிய கடலில் யாத்திரை சென்றும் மீண்டும் திரும்பியும், சோழராஜனரசாட்சிக்குட்படாத தீவுகளி லிருந்தும் அருமையான வஸ்துக்களை இவ்வுலகத்துள்ளார் மதிக்கும்படி கொண்டு வருவார், பெரிய மரக்கலங்களைத் தாமே யோட்டுவார், அதனால் மேம்பாடுற்ற கப்பலோட்டிகளனைவரும் இம்மருதவாணரைத் தங்கட்குத் தலைவரான மீகாமனென்று கூறுவார்கள்.—எ-று.

கப்பல் வியாபாரம் புரிந்த மருதவாணர் ஏனைய வாணிபர்கள் என்றுஞ் செல்லாதனவும், சோழனரசாட்சிக்குட்படாதனவுமாகிய அனேக தீவுகட் கும் அக்கடல் மார்க்கமாகவே சென்று, அவ்வத்தீவுகளிற் கிடைத்த அருமை யான பண்டங்கள் அநேகமாகக் கொண்டுவந்தாரென்பார், "சென்னியனுளு ருத தீவினு மரும்பண்டங்க - ளிந்நில மதிக்கக் கொண்டு வரும்." எனவும், மரக்கலஞ் செலுத்தும் தொழிலறியார் மீகாமனையே எதிர்பார்த்திருப்பது போன்றிராமல், இவரே அத்தொழிலை இயற்றிவந்தா ரென்பார், "இருங் கலங்க ளோட்டும்." எனவும், அவ்வாறோட்டுகையில், அத்தொழிலிற் பயி ன்று தேர்ந்துள்ள மீகாமர்கள் ஒருபோதும் கண்டறியாத அநேக நுட்பங் களை விளக்கிவந்தாராகலின், அம்மீகாமர்களனைவரும் இவரையே தங்கட் கா சிரியராகக்கொண்டார்களென்பார், "தன்மை மீகாமரெல்லாந் தங்கண் மீகாம னென்பார்." எனவும் கூறினர். (௩௩)

ஆயதன் கருணை யாகு மலைகடலிடையா னந்தத்
தூயமாக் கலத்தி லேற்றித் தொகும்பொரு ளேயே நல்க
மேயசீர் வெண்கா டர்க்கு விளையாட்டு காட்டி நாட்டு
நாயக னின்ன வாறு நாடக நடிக்கு மாலோ.

(இ - ள்.) இயற்கையாகிய தமது திருவருளாகும் அலையையுடைய கடலினிடத்து, ஆனந்தமாகிய பரிசுத்தமான பெரிய மரக்கலத்திலேற்று வித்து, தொகையாயுள்ள சிறந்த பொருளைத்தருவதற்கு,சேர்த்தியமைந்த திரு வெண்காடருக்குத் தமது திருவிளையாடல்களைக் காட்டி, தம்மிடத்தவர்க் குள்ள மெய்யன்பை நிலைபெறச் செய்துவரும் மருதவாணர் இவ்வண்ணம் நாடகம் நடிக்கின்றனர்.—எ-று.

ஆல் - ஓ அசைகள். சிவபிரானது திருவருள் கடல்போன்று எங்குஞ் சூழ்ந்து அளவுகடந்ததாகலின், 'கருணையாகு மலைகடல்." எனவும், அக்கட

வீற் செல்லுதற்குரியோர் சுகமென்னும் மரக்கலத்திலேறிச் செல்லவேண்டு தலின், "ஆனந்தத்தூய மரக்கலம்." எனவும், அவ்வாறு செல்வோரடைவது எவ்வகைப்பொருட்கும் காரணமாகிய பொருளாகலின், "தொகும்பொருள்." எனவும், தமது குழந்தைகட்குத் தம்மிடத்துப் பிரியம் வரச்செய்கின்ற கருணையுடைய தந்தையர்கள் அக்குழந்தைகள் விரும்பும் விளையாடல்களைக் காட்டுவதியல்பாகலின், "விளையாட்டு காட்டி" எனவும் கூறினர். எனவே, திருவெண்காடரை அடிமைகொள்ளத் திருவுளங்கொண்ட சிவபெருமான் தமது திருவருளால் அவர்க்கு நித்தியானந்தத்தை விளைவித்து அழிவற்ற பொருளைத்தரவிழைந்து, முந்தி அநித்தியமாகிய கடலினிடத்துச்சென்று அநித்தியமாகிய வஸ்துக்களைக்கொண்டுவந்து கொடுத்து அநித்தியமாகிய இன்பத்தை விளைவித்துக்கொண்டும் நாடகநடித்தனர் என்றபடி. சிவபிரான் தமது கருணையால் ஆன்மாக்களை யாட்கொள்ளினல்லது ஆன்மாக்கள் நேரே சிவபிரானை யடையாவென்பது நன்முறையென்பதை, "அவனருளாலே யவன்றாள் வணங்கி." என்னும் மணிவாசகப்பிரான் மலர்வாக்கானும், "மூதையாமெமது மனப்புலத்தை மூடுங் காம வெகுளிவன - முற்றுங் கருணைத் தீக்கொளுவி முருக்கித் திருத்திச் செருக்கெனுமா, மதயானையைவந் தழியாது மறிப்பப் பொறையே வியுமமைத்து - வலிய சிவமந் திரப்படையால் வாய்ப்ப வுழுது சிவவிதையை, விதையா முளைப்பப் பிறதெய்வ விரவு களைகட் டறவளர்த்து-வீடாங் கனிகொள் பருவத்து விடயக் கரவர் புகுந்ததனைச், சிதையா வண்ணங் காத்தளிக்குந் திறத்தாய் தாலோ தாலேலோ - தேடற் கரிய சிவஞான தேவே தாலோ தாலேலோ." என்னும் சிவப்பிரகாசசுவாமிகள் திருவாக்கானுந் தெளிக. (௬௭)

இன்னம்ப ரெனுமூ தூரு மிருக்குமிவ் வணிக னம்ம
பொன்னம்பர் கமழு மாழிப் பூவம்பர் புழுகு சார்ந்த
மின்னம்பர் மாலூ மம்மை மேருவெவன் வரையாம் வில்லர்
நன்னம்ப ரென்று காணு நல்லவெண் காடர்க் கீவான்.

(இ - ள்.) திருவின்னம்பர் என்னும் புராதன க்ஷேத்திரத்திலும் வீற்றிருக்கும் மருதவாணராகிய இவ்வணிகர், திருமாலாகிய தவப்பெண்ணையும் மேருவென்னும் மலையாகிய வில்லையுமுடையவராகிய மேன்மையுற்ற சிவபெருமானென்று அறியாத சிறந்த திருவெண்காட்டடிகட்கு, பொன்னம்பரையும், கடலினிடத்துண்டாகிப் பரிமளிக்கின்ற பூவம்பரையும், புனுகையும், குளிர்ச்சியாகிய மின்னம்பரையும் கொண்டுவந்து கொடுப்பார்.—எ - று.

அம்ம - வியப்பிடைச்சொல். மருதவாணராய் வந்திருப்பவர் சிவபிரானென்று திருவெண்காட்டடிகளறிந்திலரேனும், மருதவாணர் மிகவுயர்ந்த விலையுடைய பொன்னம்பர் பூவம்பர் மின்னம்பர் புனுகு என்னும் வஸ்துக்களைத் தந்துவந்தாரென்றபடி. எனவே, இத்தகைய அரியவஸ்துக்கள் அபரிமிதமாய் இவர்க்கெவ்வாறு கிடைத்ததென் றாலோசிப்பாராயின், இவரிடத்தேதோ தெய்வீகமிருக்கிற தென்றறிவரென்பது கருத்து, திருமால் வெகுதா

லம் அரியதவமியற்றிச் சத்தியுருவமைந்து சிவபிரானிடப்பாகத் திருக்கப் பெற்றனராகலின், "மாலர்மம்மை." எனவும், திரிபுரதகனஞ் செய்தருளிய போது மேருவரையை வில்லாகக் கொண்டாராகலின், "மேருவென்வரை யாம் வில்லர்." எனவும் கூறினர். திருமால் சிவபிரானுக்குத் தேவி என்பதை, "எரியலா லுருவ மில்லை யேறலா லேற மில்லை-கரியலாற் போர்வை யில்லை காண்டகு சோதி யார்க்குப் - பிரிவிலா வமரர் கூடிப் பெருந்தகைப் பிரா னென் றேத்து-மரியலாற் றேவி யில்லை யையனை யாற னார்க்கே," என்னும் திருநாவுக்கரசு சுவாமிகள் திருவாக்கானும், மேருவை வில்லாகக்கொண்டமையை, "விருது குன்றமா மேருவினாண ராவன லெரியம்பாற் - பொருத மூவெயில் செற்றவன் பற்றிநின் றுறைபதி யெந்நாளுங் - கருது கின்றவூர் கனைகடற் கடிகமழ் பொழிலணி மாதோட்டங் - கருதிநின்றகே தீச்சரங் கைதொழக் கடுவினை யடையாவே." என்னும் திருஞானசம்பந்த சுவாமிகள் திருவாக்கானுந் தெளிக. (கஅ)

பரந்தபாய் விரியா தோட்டும் படரெதிர் காற்றி லோட்டுஞ்
சரம்படர் வதுபோ லோட்டுந் தடங்கடற் குதிரை நாவா
யரந்தையாற் றத்தார் பூட்டு மவர்களை நகைத்து நோக்கும்
வரந்தரு மருத வாணன் வருதிரு விளையாட் டன்றே

(இ - ள்.) மரக்கலத்தைப் பரவியுள்ள பாயை விரிக்காமலோட்டுவார்' படர்கின்ற எதிர்காற்றிலேயோட்டுவார், அம்புசெல்வதைப்போன்ற வேகத் துடனோட்டுவார், விசாலித்த கடலின்கணுள்ள குதிரையென்று சொல்லத் தக்க மரக்கலர் துன்பம்புரிய, அதற்காகக் கயிறு பூட்டுகின்றவர்களைச் , சிரித் துப் பார்ப்பார், இவைகள் யாவும் வரங்களைப் பாலிக்கின்ற மருதவாணரிடத் துண்டாகிய திருவிளையாடல்களாகும்.—எ - று.

அன்று - ஏ. அசைகள். பாய்விரிக்கா தோட்டுவதும் எதிர்காற்றிலோ ட்டுவதும் அதிவேகமாய் அம்புவேகத்தைப்போ லோட்டுவதும் ஏனையர்க் கே லாதாகையானும், அம்மரக்கலம் தங்கள் வசப்படாது துன்பம் புரிவதால் அதற்குக் கயிறுபோடுகின்றவர்களைச் சிரித்துப்பார்த்தலினானும், "மருதவா ணன் வரு திருவிளையாட்டு." என்றனர். (கக)

இவனிவ ணெங்கு ளானோ வெண்ணருந் தெய்வங் கொல்லோ
தவறிலா யோகர் சித்தர் தம்மிலீங் கொருவ னேயோ
வவலமொன் றில்லா னிந்த வாண்டகை யென்றென் றென்றும்
பவர் திரு நீங்கா தோங்கும் பட்டினம் பகரு மாலோ.

(இ - ள்.) துன்பமென்ப தொன்றுமில்லாத இந்த ஆண்தன்மையுடைய இவன், இவ்விடத்திலெங்கிருக்கின்றானோ? நினைத்தற்கரியதெய்வந்தானோ? தவறற்ற யோகிகள் சித்தர்கள் என்பவர்களில் இவனொருவனோ? என்றிவ் வாறு, எக்காலத்தும் நெருங்கிய ஐஸ்வரியங்கள் நீக்கமற்று மேம்பாடுற்ற அப் பட்டினத்தவர்கள் யாவரும் கூறுவர்.—எ - று.

ஆல் - ஓ. அசைகள். மருதவாணர் மானிடர்க்கேலாத மகிமைகளை விளைவித்தலின், அவரை நோக்கும் அப்பட்டினத்தவர்களெல்லாம், இவரிருக்குமிடத்தையு மறியாதவர்களாய் முதலில் தெய்வந்தானோ என்றாகித்து, தெய்வமாயின் ஓர்காலத்தோன்றி மறையும், இவர் அவ்வாறின்றி எப்போதும் நாம் காணத்தக்கவராயிருத்தலினால் தெய்வமல்லவென்று நிச்சயித்தவர்களாய், அற்புதச் செயல்களை யுடைத்தாயிருத்தலினால் யோகிகள் சித்தர்கள் என்னும் இவர்களிலொருவரா யிருக்கவேண்டுமென் றாகித்தார்களென்றபடி. எனவே, முதற்கருதியவாறு தெய்வமென்றே நிச்சயிக்கவொட்டாத வண்ணம் அவர்கள் வினைதடுத்ததென்பது கருத்து. (௯00)

சிறிதுநா ளின்ன வாறு திருவுறச் சரித்த பின்னர்
மறுவிலான் முன்போ லின்ப மரக்கலம் பாய்வி ரித்து
நெறிசெறி வணிக ரோடு நெடுங்கட லொருதீ வத்துப்
பொறியுறப் போந்தி ருந்து புரிந்தவா புகல லுற்றேன்.

(இ - ள்.) சில தினங்கள் இவ்வண்ணம் ஐஸ்வரியம் மேம்படச் சஞ்சரித்துக் கொண்டிருந்த பிறகு, குற்றமற்றவராகிய மருதவாணர், முன்பு பலமுறை சென்றதுபோலவே இன்பத்துடனே கப்பலின் பாயை விரித்துக்கொண்டு, கடல்மார்க்கமாய்ச் செல்ல நெருங்கிய ஏனைய வணிகர்களுடனே நெடிய கடலின்கணுள்ள ஓர் தீவிலே திரவியம் சேரும்படி சென்றிருந்து செய்தருளிய திருவிளையாடலைச் சொல்லத் தொடங்கினேன்,—எ - று.

ஏனைய வணிகமாக்கள் சென்றது போன்றே தாமும் திரவியவபேட்சையின்மேற் செல்பவர்போன்று நடித்தனரென்பார், "நெறிசெறிவணிகரோடு நெடுங்கடலொரு தீவத்துப் - பொறியுறப் போந்திருந்து புரிந்தவா புகலலுற்றேன்." என்றார். எனவே இம்மருதவாணர் இம்முறையோடு கடல் யாத்திரையை நிறுத்தித் திருவெண்காடரை அடிமைகொள்ளக்கருதிப் பெரிய அற்புதம் விளைவிப்பான் திருவுளங்கொண்டு, அவ்வெண்ணத்தைத் தம்முடன் வந்த ஏனைய வணிகமாக்களும் மாதாபிதாக்களும் அறிந்துகொள்ளாத வண்ணம் நடித்தனரென்றபடி. (௯0௧)

வேறு.

கொடுபோகிய சரக்கெங்கணுங் குலவாவிலை நிலவத்
திடமேலிடு நற்பொற்கிழி சேமத்திடை யொடுக்கிக்
கொடைமேம்பட லாகித்தெரி குரவோர்மடம் பலபோய்த்
தடநீடிய புகழ்வேண்டினன் றூழாதறம் புரிவான்.

(இ - ள்.) மருதவாணர் கொண்டுபோகிய சரக்குகள் அத்தீவின் எவ்விடத்திலும் பரவி நல்லவிலையுடனே விற்க, நிலையுள்ளதாய் மேம்பட்ட நல்ல பொன்முட்டையை வைப்பிடத்திற் சேர்த்து, கொடைத்தன்மையிலே மேம்பாடுற்றவராய், மெய்ஞ்ஞானமுணர்ந்த சைவாசாரியர்களுள்ள பலமடங்கள்

தோறும் சென்று, உலகத்திற் பரவிய புகழை விரும்பினராய்க் காலதாமதமின்றித் தருமஞ்செய்யத் தொடங்கினர்.—எ - று.

உலகமெங்கும் பரவத்தக்க புகழையடைய விரும்புவோர் அது விளைதற்கு வித்துப்போன்ற ஈகையையுடையரா யிருத்தல் வேண்டுமென்பார் "நீடிய புகழ்வேண்டினூன்றுழாதறம் புரிவான்." என்றார், இதனை, "ஈத லிசைபட வாழ்த லதுவல்ல-தூதிய மில்லை யுயிர்க்கு." என்னும் திருக்குறளானுந் தெளிக. (௧0௨)

அலந்தோர்களுக் களித்துப்நெறி யறிமாதவர்க் களித்து
நலந்தீங்கின றென்றுதற நல்கூர்ந்தவர்க் களித்துங்
கலந்தேபொருந் தினர்யா வர்க்குங் கடனுவுட னளித்து
இலந்தேறிடத் தேவேசர்க்கு நிதிவேண்டிய தளிப்பான்.

(இ - ள்.) துயரப்படுவோர்களுக்குக் கொடுத்தும், நன்மார்க்க முணர்ந்த பெருந்தவசிகட்குக் கொடுத்தும், நன்மையுடையவர்கள் தீமையுடையவர்கள் என்று பாராமல் மிகவும் வறுமையுடையோர்கட்குக் கொடுத்தும், தம்முடன் கூடி வசிக்கின்றவர்கள் யாவர்க்கும் கடனாக உடனுக்குடன் கொடுத்தும், உலகமீடேறும்படிக்குச் சிவபிரானுக்கும் வேண்டியவற்றைக் கொடுப்பார்,—எ - று

துயரமடைந்தோர்க்கும், சற்பாத்திரருக்கும், மிகவறியவர்க்கும் உடன் கூடி வாழ்பவர்க்கும், சிவபிரானுக்கும் உபயோகப்படுத்துதலே திரவியத்தின் பயனென உலகத்தார்க்கறிவிப்பான் அவ்வாறே இவருபயோகப்படுத்தினரென்க. (௧0௩)

உடன்போந்துள பலமாந்தரு முடையானறி குவனே
லடங்காதிவன் புரிகாரியத் தாற்றீங்கிழைத் திடுமால்
முடங்காதினி நாமாகவிம் முறைகூறிடின் முனிவான்
வடந்தாங்கு மென் முலையாரொடு மருவாதொரு நலனே.

(இ - ள்.) இம்மருதவாணருடன் சென்றிருக்கும் பல வணிகர்களும் இப்பொருளுக்குடையவராகிய திருவெண்காட்டடிகள் இச்செய்தியை யுணர்வாராயின், இம்மருதவாணர் செய்யுங் காரியத்தா லுதித்தகோபம் தணியாதவராய்க் கொடுமை புரிவர். இனி ஒளியாமல் நாமே இத்தன்மையை யுரைப்போமாயின் இம்மருதவாணர் கோபிப்பார். ஆயின், இவர் முத்தவடத்தைச் சுமக்கும் மிருதுவான தனங்களையுடைய மாதர்களுடனே கலவாதிருத்தலே ஒரு நன்மையான காரியம்—எ - று.

மருதவாணருடன் சென்றோரனைவரும் அவர் செய்யுங் காரியங்களைக் கண்டு சகியாதவர்களாய், இக்காரியங்களை இவர் பிதாவுடன் நாமேகூறுவோமாயின், அவரும் கோபாவேசத்தால் இவர்க்கேதேனும் தீங்கியற்றுவர், இவரும் நம்மீது கோபிப்பாரென்றும், இவ்வண்ணம் பல்வேறாகிய விசேட செல

வுகளியற்றினும், மாதர்கள் மயக்கத்திலாழாமை மாத்திரமே ஓர் நன்மை என்றும் ஆலோசித்தார்களென்றபடி. (௧௦௪)

என்றென்றவர் மொழியப்பொழி யேமக்கொடை யுடையோன்
குன்றொன்றினை வகிர்செய்தறங் குறையாவகை நிறையப்
பொன்றங்கிய திருவாலய மெடுப்பிப்பது பொருட்டா
னன்றொன்றிய நிமித்தக்கிளை நாட்டிப்பொருள் பூட்டி.

(இ - ள்.) என்று இவ்வண்ணம் அவ்வணிகர்கள் கூறிக்கொண்டிருக்க, சதாபொழிகின்ற பொற்கொடையுடையோராகிய மருத்வாணர், ஓர் மலையைப் பிளந்து தருமமானது குறைவறப்பெருகுமாறு அழகு குடிகொண்ட திருவாலயத்தைக் கட்டுவிக்கும்பொருட்டு, நன்மையமைந்த சகுனமுதலிய தொகுதியை நிச்சயித்து, அதற்குவேண்டிய திரவியத்தையும் செலவழித்து

உடன்வந்த வணிகர்கள் இவ்வாறு பேசிக்கொள்வதைச் சற்றும் கவனியாதவராய்த் தாமெடுத்த காரியத்தை முடிக்கும்பொருட்டு, ஓர்மலையைப்பிளந்து அதில் ஓர் சிவாலயங்கட்ட உத்தேசித்து, அவ்வாறுகட்டத்தொடங்குவதற்கேற்ற சகுனம் வாரம் நட்சத்திரம் திதி யோகம் கரணம் முகூர்த்தம் முதலியவற்றை நிச்சயப்படுத்திக்கொண்டு, அதற்குவேண்டிய பொருளையும் செலவழித்தனரென்றபடி. ஓர் காரியத்தைத்தொடங்கிய ஊக்கமுடையோர் யாதொன்றுங் கருதார் என்பது நூற்றுணிபு. இதனை, "மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்டுஞ்சா-ரெவ்வெவர் தீமையு மேற்கொள்ளார்-செவ்வி-யருமையும் பாரா ரவமதிப்புங் கொள்ளார்-கருமமே கண்ணாயினார்." என்னும் குமரகுருபரசுவாமிகள் திருவாக்கானுமறிக (௧௦௫)

மாலிங்கமெ னத்தான்முளைத் திருந்தான் மணிகண்ட
னாலிங்கனம் பொருந்தாவுடை யாளும் பெறநாளுங்
கோலஞ்செய்சோ பானம்முதற் குளிர் தூபியந் தஞ்செய்
தேலும்படி கோலும்படி யெல்லாமமை விப்பான்.

(இ - ள்.) அவ்விடத்திலே நீலகண்டராகிய சிவபெருமான், ஆலிங்கனம் பொருந்திய ஆவுடையாளும் அடையும்படி மகாலிங்கமென்று சொல்லுமாறு தோன்றியிருந்தனர். எக்காலமும் அழகுசெய்கின்ற கற்படி முதல் குளிர்ச்சியுற்ற ஸ்தூபிவரையிற் கட்டிப்பொருத்தமாய்ச் சூழும் வண்ணம் மற்றையவனைத்தையும் கட்டுவிப்பாராய் —எ - று.

அவ்விடத்திலே சிவபெருமான் சிவலிங்கசொரூபமாய்த் தோன்றினமையின், அதற்குக் கற்படிமுதல் தூபிவரையிற் கட்டிமுடித்து, மற்றும் பொருத்தமாய்ச் சூழ்ந்திருக்கவேண்டிய கட்டடங்களைக் கட்டத்தொடங்கினர் என்றபடி. (௧௦௬)

வெண்டிங்களை முடிசூடிய வியன்கோபுர மருங்கிற்
கண்டங்கிய வாயிற்புடை கனமாமதி லியற்றி
வண்டங்கணி யளகாடவி மடமாதரு மாடற
கெண்டங்குழு முாக்கொட்டிடு மிளமாக்களு மிசைத்தான்.

(இ - ள்.) வெள்ளிய சந்திரனைத் தனதுமுடியிலே தரித்த சிறந்த கோபுரமும், அதன்பக்கத்திற் கண்கள்பொருந்திய வாயில்களும், அதன்பக்கத்திற் கனதையுள்ள பெரியமதில்களும் கட்டி, நிர்த்தனஞ்செய்வதற்காக வண்டுகள் அவ்விடத்தழகு விளக்கும் அளகமென்னும் காட்டையுடைய இளமையுள்ள கணிகையர்களும், எண்ணிக்கை யமைந்த முழவொலிக்கின்ற இளமையதுள்ள நட்டுவர்களும் ஏற்படுத்தினர்.—எ - று.

எனவே அதியுன்னதமான கோபுரமும், அக்கோபுரத்தின் பக்கத்திற் கண்களமைந்த வாயில்களும், அதன்பக்கத்திற் பெரிய மதில்களும் கட்டுவித்து, அவ்வாலயத்தில் நிர்த்தனஞ்செய்வதற்குக் கணிகையர்களையும், அவர்களுக்கு வாத்தியமொலிப்பதற்கு நட்டுவர்களையுமமைத்தாரென்றபடி. (௯௦௭)

இசைவித்தொளிர் மணிமண்டப மெழிலோங்குற வியற்றி
யசைவற்றிடு வலையான்மக ளணிகோயிலுங் குயிற்றித்
திசை விட்டொளிர் வேழம்முகன் செவ்வேள் சினகரமு
நசையுற்றவி ழாமற்றவு நடித்தானுடன் முடித்தான்.

(இ - ள்.) இவ்வாறு ஏற்படுத்தியபிறகு, பிரகாசிக்கின்ற இரத்தினங்கள் பதித்த மண்டபத்தை அழகமையும்படி கட்டுவித்து, அழிவற்ற இமாசலபுத்திரியாராகிய உமாதேவியார் திருவாலயத்தையுங் கட்டுவித்து, அஷ்டதிக்கிலும் பிரகாசிக்கின்ற விநாயகக்கடவுள் முருகக்கடவுள் என்னும் இவர்களுடைய திருக்கோயில்களையும், யாவரும் விரும்பும் மற்றைய திருவிழா ஏற்பாட்டையும் நடராஜப் பெருமானுடைய திருவாலயத்துடனே முடித்தனர்.—எ - று.

சிவபிரானுக்கும் தேவியார்க்கும் திருவாலயமமைத்த பின்னர், அவர்களின் மூத்தபிள்ளையார் இளையபிள்ளையார் என்னும் இருவருக்கும் நடராஜப்பெருமானுக்கும் ஆலயங்களமைத்து, இரத்தினக்கற்கள் பதித்த மண்டபமும் கட்டுவித்து, திருவிழாநடாத்துதற்குரிய ஏற்பாடும் செய்தாரென்றபடி. (௯௦௮)

தனைத்தானருச் சனையாற்றுதல் சோணாட்டினுந் தடங்கார்
கனைத்தோடிய கடற்றீவினுங் கண்டேமனப் பெரியோர்
புனற்கூட்டிய சடைக்காட்டினன் பொருட்பூசனை புரிந்தா
னினைத்தாங்குறு சிறுமாக்களு நிறையாக்கதி பெறவே.

(இ - ள்) சிவபெருமான் தம்மைத்தமமே வழிபடுதல் சோழநாட்டினும் விசாலித்த மேகங்களை யொலித்தோடி நீருள்ளனவும் கடலின்கணுள்ள இத

தீவினும் பார்த்தோமென்று அறிவின் மேம்பாடுற்ற அறிஞர்கள், கங்கையைச் சேர்ந்த சடாடவியினராகிய அப்பெருமானுக்குரிய மேலாகிய வழி பாட்டைப் புரிந்து, மனிதசரீரத்தைப்பெற்ற அற்பர்களும் நிறைவுற்ற பெருங்கதியை அடையும்படி.—எ - று.

சோழநாட்டின்கணுள்ள திருவிடைமருதூரிற் போன்றே இங்கும் மருதவாணராகிய சிவபெருமானே திருவாலயம் சமைத்துத் திரிவிழாநடாத்தலின், சிவபிரான் தம்மைத்தாமே பூசித்ததலங்களிரண்டென்று பெரியோர் கணித்து வழிபடுவதேயன்றி, மிக அற்பர்களும் வழிபட்டுக் குறைவற்ற பெருங்கதியை அடையுமாறென்றபடி (௧௦௯)

அத்தீவத்தி லுள்ளோர்களு மையனுட னடைந்தோ
ரித்தேயத்த ரெல்லோர்களு மிறைசேவையி னுய்ந்தார்
மெய்த்தானத்து வெக்காலமும் விழைபூசனை புரிவான்
வைத்தானிலந் தலையூர்களு மற்றுமமை வுறவே.

(இ - ள்.) அத்தீவிலுள்ளவர்களும், மருதவாணரோடு வந்தவர்களுடனே இவ்வுலகத்தினரெவர்களும்சிவபிரான் தரிசனத்தாலீடேறினர். உண்மையுள்ள அத்திருப்பதியில் எப்போதும் விரும்பப்படும் வழிபாடியற்றும் பொருட்டு, நிலங்களும் கிராமங்களும் மற்றும் வேண்டியவைகளும் பொருத்தமாகும்படி ஏற்படுத்திவைத்தார்.—எ - று.

தாம் வழிபட்டவாறே தம்முடன்வந்தாரும் அவ்விடத்துள்ளாரும் வழிபட்டு ஈடேறினர் அதைக்கேட்ட இவ்வுலகத்தாரும் ஈடேறினர். தாம் இயற்றிய திருவிழா எக்காலமும் நிறைவேறுமாறு நிலங்களும் கிராமங்களும் மற்றும் வரும்படிகளும் ஏற்படுத்தினரென்றபடி. (௧௧௦)

பொன்னுமவை பலவுஞ்செலப் போக்குந்தர நோக்கா
னென்னுமினி யின்போர்களுக் கென்னுமினி யென்பான்
பன்னுவரு மெருப்பாண்டில்கள் பலகோடிக ளுளவாற்
றென்னுவென விசைபாடுமின் செல்கோமினி யென்பான்.

(இ - ள்) பொற்குவியலானவை பலவும் அழியும்படி செலவிடுந்தன்மையைக் கருதார் இனி எவ்வாறுமென்று கூறுவோர்களுக்கு, இனிநாமென் செய்வதென்றுரைப்பார், சொல்லுதற்குரிய வரட்டிவண்டிகள் பலகோடிகளிருக்கின்றன, தென்னுவென்று கீதம்பாடுங்கள், நாமினிமேற் போவோமென்பார்.—எ - று.

இம்மருதவாணர் தம்மிடத்துள்ள பொற்குவியல்கள் யாவும் தினந்தோறும் குறைவுபடுமாறு செலவிடுவதைக் கவனியாதவராய், தம்மை ஏனைய வணிகரைப்போன்று கருதி இவ்வாறு செலவிட்டால் இனி எவ்வாறுவதென்று கூறுவோர்களை நோக்கி, இனி நாமென்செய்வது, நம்மிடத்துப் பல கோடிகளாக வரட்டிவண்டிகளிருப்பதால் அதிமகிழ்ச்சியுடன் தென்னுவென்

றிசைபாடிக்கொண்டு செல்வோமென் றுரைப்பாரென்றபடி. எனவே, பொற்குவியல்களையும் வரட்டிவண்டிகளையும் சமமாக மதித்திருந்ததால், களிப்புடன் இசைபாடிச்செல்வோமென்றன ரென்பது கருத்து. இத்தகைய நிலைமை சிவனடியார்கட்குண்டென்பதை விளக்குவான், அடியார்போன்று நடித்துக்காட்டும் சிவபெருமானுன மருதவாணரிவ்வாறுரைத்தனரென்க. சிவனடியார்கட்கிந் நிலைமையுண்டென்பதை, "ஓடுந் தனமும் புகழும் பழியு-முயர் விழிவுங் - கேடுந் திருவு மமுதமும் புற்கையுங் கேள்பகையும் - வீடுங் குடிலு மகளிரு மன்னையும் வேறறவே - நாடுங் கருத்து வருமோ வெனக்கென் னைக் நாயகமே." என்னும் சிவப்பிரகாச சுவாமிகள் திருவாக்கானுந் தெளிக.

பன்னவருமென்றபாலது எதுகைநோக்கிப் பன்னுவருமென நின்றது. ஆல் - அசை. (௧௧௧)

எருவட்டங்க ணந்தேயத்து மிலவோபொருள் வருமா
றொருமித்திடு மென்பார்கூட லுடனேறிய புடையோர்
வருமித்திற மேலார்சொற்சொல வொருமித்தன மைந்தன்
முரணிச்சரக் கேற்றீரென முன்சொன்னமை சொன்னான்.

(இ - ள்.) கடல்யாத்திரைக்குக் கூடச்சென்ற அயல்வணிகர்கள் வரட்டமான இவ்வரட்டிகள் நம்முடையதேசத்து மில்லையோ, திரவியம் விர்த்தியாகும்படி எங்களுடன் சேர்வீரென்றுரைப்பார்கள், தம்முடன் வந்த இத்தன்மையுடைய வணிகர்கள் மேற்சொல்லிய வார்த்தையைக்கூற, அவர்கட்குடன்பட்டவர்போன்ற மருதவாணர், மீண்டும் மாறுபட்டவராய்ச் சரக்குகளையேற்றுவீர்களாகவென்று முற்கூறியவார்த்தைகளையே கூறினர்.—எ-று.

இம்மருதவாணர் சேர்த்துள்ள வரட்டிகளின் மதிப்பறியாதவர்களாகிய வணிகர்கள் அவற்றைச் சாதாரணமாக மதித்துக்கூறினமையின், மருதவாணர் சினந்தவராய்ச் சரக்கேற்றுகவென்றுரைத்தாரென்பார், "முரணிச் சரக்கேற்றீரென முன்சொன்னமை சொன்னான்." என்றனர். (௧௧௨)

கிடையாச்சரக் கேதேனுமிக் கிளர்பூங்கலங் காணே
நடையாற்றிடைப் போதற்கிவ னன்றுந்துணி வுற்று
ருடையேநமக் கிணையாவர்க ளென்றென் றுளங்களிதூர்
தடையாவது மறப்போதற்கு விரைந்தான் றருக்குடையோன்.

(இ - ள்.) மற்றையவணிகர்கள், நந்தேசத்திற் கிடைக்காத சரக்கேதேனுமொன்று, விளக்கமுள்ள அழகிய இம்மரக்கலத்தில் கண்டோமில்லை, நடக்கின்றவழியாகப் போவதற்கு இம்மருதவாணர் மிகவும் நிச்சயித்தனர். நாமோ பல அரும்பண்டங்களையுடையோம், நமக்குச் சமானர்கள் யாரிருக்கின்றார்கள் என்றென்றுரைத்து மனக்களிப்படைந்தார்கள், தருக்குடையவராகிய மருதவாணர் தடைசுளொன்றுமின்றிச் செல்வதற்குத் துரிதப்பட்டார்.—எ - று.

ஏனைய வணிகர்கள் மருதவாணருடைய வரட்டிகளின் மதிப்பையுணராதவர்களாகையால், தங்கள் வஸ்துக்களையே மேலாகமதித்து இறுமாந்தார்களென்பார், "உடையே நமக்கிணையாவார்களென்றென் றுளங்களித்தார்." என்றும், மருதவாணர் தமது சரக்கின் மதிப்புணர்ந்தவராகையாற் களிப்புடன் செல்வதற்கு விரைந்தாரென்பார், "தடையாவது மறப்போதற்கு விரைந்தான் றருக்குடையோன்." என்றும் கூறினர். எனவே இவ்வணிகர்கள் மருதவாணர் மகிமையறியாராய் அவரது சரக்கை அவமதித்தனராகலின், இவ்வவமானத்தைப் பின்னர்த்தாங்க ளடைவார்களென்பது கருத்து. பெரியோர் முன் தம்மைத்தாம் புகழ்வோர்கள் பின்னா அவமானமடைவாரென்பதை, "பெரியோர்முற் றன்னைப் புனைந்துரைத்த பேதை - தழியா துயர்வகன்று தாழுந் - தெரியாய்கொல் - பொன்னுயர்வு தீர்த்த புணர்முலையாய் விந்தமலை - தன்னுயர்வு தீர்ந்தன்று தாழ்ந்து." என்னும் சிவப்பிரகாச சுவாமிகள் திருவாக்கானுந் தெளிக. (௧௧௩)

பலவாயபொற் சரக்கேற்றினர் பலரும்பாலி முறுவா
னலனுமிவன் சரக்காமெரு நகையாடிட வேற்றி
யலையாழியி னடக்கும்படி யரும்பாய்மரம் விரித்தார்
சிலநாளிடை யடை பூங்கலஞ் செல்கின்றன பலநாள்

(இ - ள்.) பலவணிகர்களும் சிறந்த பிரயோசன மடையுமாறு பலவகைப்பட்ட சிறந்த சரக்குகளை மரக்கலத்திலேற்றினார்கள். அதன்பின் நல்லவராகிய இம்மருதவாணருடைய சரக்காகிய வரட்டிகளைக் கண்டார் நகைக்கும்படி ஏற்றி, அலைகளையுடைய கடலிற் கப்பல் செல்லும்படி அருமையாகிய பாய்மரத்தை விரித்தார்கள். வழக்கமாய்ச் சில தினங்களிலே கரைசேர்கின்ற அழகிய மரக்கலங்கள் பல தினங்களாகக் கடலிலே ஓடுகின்றன.—எ - று.

ஏனைய வணிகர்கள் கப்பலிலேற்றிய சரக்குகளனைத்தும் அரியவைகளாயிருந்தமையின் கண்டோரெவரும் நகையாதவர்களாய், மருதவாணர் சரக்காகிய வரட்டிகளை யேற்றுகையில் அவர்களனைவரும் அச்சரக்கின்தோற்றத் திழிவால் நகைத்தார்களென்பார், "சரக்காமெரு நகையாடிடவேற்றி." என்றார். (௧௧௪)

உடன்போந்துள வணிகக்கிளை யுறுதீவிற கிலராய்க்
கடன்கோடற்குக் கருதிக்கொடுங் கடல்வாய்விட மிடற்றி
லடங்காவரு மவனைக்கட னளிப்பாயென வளித்தான்
முடங்காச்சரக் கிவைபோலவ ணளிப்பீரென மொழிந்தான்.

(இ - ள்) உடன் சென்றிருந்த வணிகர்களாகிய கூட்டத்தார்கள், வழியிலே நெருப்புண்டாக்குவதற்கு விறகில்லாதவர்களாய், கடன் வாங்குவதற்கெண்ணி, பாற்கடலிற்றோன்றிய கொடிய ஆலகாலவிடம் கண்டத்தில் அடக்கி வருகின்ற மருதவாணரைக் கடன் கொடுப்பீரென்று கேட்க, அவரவ்

வாறே கொடுத்தனர். அதன்பின் அழிவுபடாத எனது சாக்காகிய இவ்வரட்டிகளைப்போல அவ்விடத்திற் றருவீரென்றுரைத்தனர்.—எ - று.

மரக்கலம் வழக்கம்போலச் செல்லாமல் இம்முறையில் மருதவாணருடைய திருவிளையாடலால் தினங்கள் நீட்டித்ததால், மருதவாணருடன் கூடிவந்த ஏனைய வணிகர்கள் தாங்கள் சேகரித்திருந்த விறகுகளைச் செலவழித்துவிட்டு, வழியில் நெருப்பு மூட்டுவதற்கு வேண்டிய விறகில்லாதவர்களாய், மருதவாணரைக்கிட்டி அவரிடத்துள்ள வரட்டிகளிற் சிலவற்றைக் கடனாகக் கேட்டார்கள். அப்போது அவர் அவ்வாறே கொடுப்பதற் கொருப்பட்டு, நம்மூர்க்குச் சென்றவுடனே இம்மாதிரியான வரட்டிகள் எனக்குக் கொடுக்கவேண்டுமென்று ஏற்பாடு செய்துகொண்டு கொடுத்தனரென்க. இம்மாதிரியான வரட்டி கொடுக்கவேண்டுமென்று மருதவாணருரைத்தபோது அவ்வணிகர்கள் அம்மாதிரியென்பது அவ்வரட்டியினவென்று கருதினார்களேயன்றி, மகத்துவமென்று கருதினார்களில்லை யென்பது பெறப்படுதல் காண்க. (கக௫)

மொழிகின்றதற் கிசைந்தார்முறி முகமன்னொடு கொண்டான்
வழிவந்தவன் மதுராபுரி மருங்கேயெரி கரும்பால்
விழைவொன்றிசை யிசையாளனை வென்றோரிட நின்றோ
னழிவொன்றுமி லாதானவர் தமையொன்றிட லரிதோ.

(இ-ள்) மருதவாணர் இவ்வண்ணமுரைத்ததற்கு ஏனைய வணிகர்களொருப்பட்டவர்களாய் உபசாரத்துடனே சீட்டும் எழுதிக்கொடுக்கப்பெற்றனர். வழிவழியடிமையாக வந்தவராகிய பாணபத்திரர் வசித்திருந்த மதுரைமாநகரத்திற்கருகில், விறகுச் சுமையால், யாவருக்கும் விருப்பமுள்ள கீதத்தில் வல்லபுகழாளனை வெற்றிகொண்டு ஓரிடத்தில் நின்ற சிவபிரானாகிய ஓர் அழிவுமற்ற மருதவாணர், அவ்வணிகமாக்களை வெற்றிகொள்ளுத லருமையோ.—எ - று.

விறகுச்சுமையாளராய் வந்தபோதே ஓர் கீதவித்துவானை வெற்றிகொண்டவர், பெரிய வியாபாரியாய் வந்திருக்குமிப்போது, தம்போன்ற வணிகர்களை வெற்றிகொள்வதருமையோ என்றபடி. விறகுச் சுமையாளாய் வந்து கீதவித்துவானை வெற்றிகொண்டமையை, "நெடியவன்பிரமன்றேடநீண்டவன் றென்னற் கேழின்-முடியதாஞ் சிவலோகத்தைக் காட்டிய முறையீதையன்-படிமிசை நடந்து பாடிப் பாணன்றன் விறகாளாகி-யடிமையென்றடிமை கொண்ட வருட்டிற மெடுத்துச் சொல்வாம்" என்னும் திருவிளையாடற் புராணத் திருவிருத்தத்தானுந் தெளிக. (ககசு)

கடலோடிய கலநீடிய கரைகண்டது விண்டோ
யிடிபோன்முர செறிந்தாங்கத ரெல்லோர்களு மறிந்தார்
மடியாதமனத்தானொடு வணிகக்கிளை யெவரும்
படியேறினர் மலர்வாண்முகம் பங்கேருக மொத்தார்.

(இ - ள்.) கடலிலே சென்றிருந்த மரக்கலம் மீண்டிருக்கும் கரையைச் சேர்ந்தது. உடனே நகரத்துள்ளாரனைவரும் இச்செய்தியை யுணர்ந்தவர்களாய், ஆகாயத்திற்றோன்றுகிற இடியொலியைப்போன்ற வெற்றிமுரசறைந்தார்கள். வேறுபடாத சித்தத்தினராகிய திருவெண்காட்டடிகளுடனே மற்றுள்ள வணிகர்களின் தொகுதியினராகிய அனைவரும், கரையேறினவர்களாய் ஒளியுள்ள முகங்கள் மலர்ந்த தாமரையைப் போன்றவர்களானார்கள்.

அந்நகரத்துள்ள வணிகமாக்களிலனேகர் மருதவாணருடன் சென்றிருந்தமையின் கப்பல் வந்ததென்று தெரிந்தமாத்திரத்தில், திருவெண்காட்டடிகளும் மற்றையவணிகமாக்களின் சுற்றத்தினரும் கரையில்வந்து தத்தம் உறவினர் அம்மரக்கலத்தினின் றிறங்குவதைக் கண்டவுடனே முகமலர்ச்சியுற்றவராய் வானத்திற்றோன்றுமிடியேற்றி னொலிபோன்ற சத்தமுள்ள வெற்றிமுரசறைந்தார்களென்றபடி. ஏனைய வணிகமாக்கள் தத்தம் உறவினர் இக்கப்பல் வியாபாரத்தில் இலாபத்துடன் மீள்வரோ நஷ்டத்துடன் மீள்வரோ என்னும் ஐயப்பாட்டுடனிருந்தன ரென்றும், திருவெண்காட்டடிகள் மாத்திரம் அவ்வித ஐயப்பாட்டாற் கலங்காச் சித்தமுடையராயிருந்தன ரென்றும் விளக்குவான், "மடியாதமனத்தான்." என்றனர். (கஎ)

திருமாநக ரெங்குங்களி திளைக்கத்தெளி விளக்கு
மருதாளியும் வெண்காடர்த மணிமாளிகை புகுந்தா
ரொருமாமணி யளித்தான வருவனைக்கடல் புக்கா
வருவோர்களிற் பொல்லார் சிலர் வந்தின்னன மொழிவார்.

(இ - ள்.) மேன்மையுற்ற ஐஸ்வரியமுள்ள அக்காவிரிப்பூம் பட்டினத்தெவ்விடத்தும் களிப்பின் மேம்பாடமையும்படி தெளிவை விளைவிக்கின்ற திருவிடைமருதூர்ப் பெருமானாகிய மருதவாணரும திருவெண்காட்டடிகளின் அழகிய மாளிகையிற் சேர்ந்தவராய், சிறந்த ஓர் இரத்தினத்தைத் திருவெண்காட்டடிகளிடம் கொடுத்தனர். அதுபெற்ற திருவெண்காட்டடிகள், சந்தோட சாகரத்தழுந்தினர். அவருடன் கப்பலிலிருந்து வருபவர்களிற் றுட்டர்களாகிய சிலர் திருவெண்காட்டடிகளிடம் வந்து இவ்வாறுரைக்கின்றனர்.—எ - று.

மருதவாணர் காவிரிப்பூம் பட்டினத்துள்ள திருவெண்காட்டடிகளிடம் வசிக்க வந்ததுமுதல் அந்நகரத்தார்களுட் பெரும்பாலார் அறிவாளிகளாக விளங்கினரென்று குறிப்பிப்பான், "திருமாநகரெங்குங் களிதிளைக்கத் தெளிவிளைக்கு மருதாளி." என்றும், அம்மருதவாணருடன் சென்ற அநேகருள் நல்லோர் பெரும்பான்மையரென்றும், அவர்கள் கலககுணமில்லாதவர்களென்றும், பொல்லார் சிறுபான்மையரென்றும், அவர்களே தங்களியற்கைக் குணத்தாற்கலகஞ் செய்யத் தொடங்கினரென்றும் விளக்குவான், "வருவோர்களிற் பொல்லார் சிலர் வந்தின்னன மொழிவார்." என்றும் கூறினர். பொல்

லார்களாகிய இழிந்தோர்கட்கே குற்றங்கூறுங் குணமியல்பென்பதை, "உண்டு குணமின் றொருவர்க் கெனினுங்கீழ் - கொண்டு புகல்வதவர் குற்றமே - வண்டு மலர்ச்-சேக்கை விரும்புஞ் செழும்பொழில்வாய் வேம்பன்றே - காக்கை விரும்புங் கனி." என்னும் சிவப்பிரகாச சுவாமிகள் திருவாக்கானுந்தெளிக. மருதாளியும் என்பதிலுள்ள உம்மை ஏனையர் தத்தம் மனைகட்குச் செல்ல இவரும் எனப்பொருடருதலின் இறந்ததுதழீஇய எச்சவும்மை. அவருவகைக் கடல்புக்கார் என்பதற்கு அம்மருதவாணரின் மாதா பிதாக்களிருவரும் சந்தோடசாகரத் தழுந்தினரென் றுரைப்பினுமாம். ஒருமாமணி என்பதற்கு விலையேறப்பெற்ற ஓர் மாணிக்கமணி எனப்பொருள் கூறினுமமையும். திருவெண்காட்டடிகட்குத் தெளிவருளுவான் மருதவாண ரெழுந்தருளினமையின், அத்திருவெண்காட்டடிகண் மூலமாய் ஏனையருந் தெளிவடைந்தார்களென்பது கருத்து. இவ்வாறு ஒருவரால் ஏனையரும் சுகமடைவார்களென்பதனை, "நெல்லுக் கிறைத்தநீர் வாய்க்கால் வழியோடிப் - புல்லுக்கு மாங்கே பொசியுமாந் - தொல்லுலகி - னல்லாரொருவ ருளரே லவர்பொருட் - டெல்லார்க்கும் பெய்யுமழை." என்னும் ஔவைப் பிராட்டியாரமுதவாக்கானுந் தெளிக. (௧௧௮)

தீவிற்புகுந் ததுவுஞ்செறி செம்பொற்றிரட் பெருக்காற்
கோவிற்புனைந் ததுவுங்குறை கொண்டோர்க்களித் தனவு
நாவிற்புகழ்ந் தோர்க்கீந்தது நவின்றாரலா தன்றிப்
பூவிற்சரக் கெருச்சேர்த்ததும் புகன்றார்நகை புரிந்தார்

(இ - ள்.) இம்மருதவாணரும் தாங்களும் ஓர் தீவிற் சேர்ந்ததும், அங்கு மருதவாணர் தம்மிடத்திற் சேர்ந்த பசும்பொற் குவியலின் விசேடத்தால், திருக்கோயில் கட்டுவித்ததும், வறுமையாற் குறைவுற்றோர்கட்குக் கொடுத்தனவும், தம் நாவினாற் றுதித்தோர்கட்குக் கொடுத்ததும் கூறினார்கள். அதுவல்லாமல் இவ்வுலகத்திற் சரக்காக எண்ணும்படி வரட்டிகளைச் சேர்த்ததும் கூறினவர்களாய் நகைத்தார்கள் —எ று.

மருதவாணர் வர்த்தகத்தாற் சேகரித்த திரவியத்தைப் பலவாறு செலவிட்டதைக் கூறிவந்தும், அச்செலவுகள் பெரும்பாலும் நீதிக்கேற்ற செலவாயிருப்பதை யுணர்ந்த திருவெண்காடர் முகத்திற் சினக்குறிதோன்றாமையைத் தெளிந்த கலகக்காரர்கள், அவர்க்கு மருதவாணரிடத்துச் சினந்தோன்றுமாறு கடைசியாக, உலகத்தாரெவரும் மதிக்கப்பெறாத வரட்டிகளைச் சரக்காகக் கொண்டுவந்தா ரெனக்கூறி நகைத்தார்களென்றபடி. (௧௧௯)

என்செய்தனை யென்றின்னவன் முகநோக்கின ரிவனும்
பொன்செய்திரள் போயிற்றினிப் பொருள்வேண்டிய தருகேன்
வன்செய்கையின் வெகுளாதொழி கென்றுரை வகுத்தான்
முன்செய்கைமொ ழிந்தார்களு முரண்கொண்டயல் போனார்,

(இ - ள்.) உடனே திருவெண்காடர், என்ன காரியம் செய்தாய் என்று இம்மருதவாணர் முகத்தைப் பார்த்தனர். அப்போது மருதவாணரும் நான் சம்பாதித்த பொற்குவியலனைத்தும் செலவாய்விட்டன, இனி உமக்கு வேண்டியதிரவியம் தருகின்றேன், கொடுஞ்செய்கையினாலே கோபியா திருப்பீரென்றுத்தாமுரைத்தனர். முன்பிவரியற்றிய செய்கையைக் கூறினோரும் மாறுபட்டவர்களாய் வெளியே போய்விட்டார்கள். எ - று.

திருவெணகாடர் வினவியபோது பொருளபேட்சையே பெரிதாகவுடையரா யிருந்தனரென்றுணர்ந்த மருதவாணர், திரவியம் பலவாறு செலவிட்டது வாஸ்தவமே, உமக்குவேண்டிய திரயளிப்பேன் அப்பொருள் குறித்து என்மீது சினங்கொள்ள வேண்டாமென்றுரைத்தவுடனே, கோட்சொல்லவந்தவர்களும் மேலும் மேலும் சினமூட்டுவதற் கேலாதவர்களா யோட்டெடுத்தனரென்க. (௧௨௦)

எருப்பாண்டில்க ளெல்லாஞ்சரக் கடுசாலையி னிறைப்பத்
தருக்காலிவன் சொற்றானிறை தாமாதுசெய் தமைந்தார
மருப்பூவணி வெண்காடர்தம் வயத்தாகவர் முறிப்பால்
விருப்பாலளித் தனன்வாசித்து வெகுண்டார்பொருள் விழைவால்.

(இ - ள்.) வண்டிகளிலுள்ள வரட்டிகளனைத்தையும் சரக்குகள் வைகின்ற சாலையினிறைக்கும்படி தருக்கினாலே அம்மருதவாணருரைத்தனர். இறையளவும் தாமறியாமல் அவ்வாறே செய்து மணமுள்ள மலரின் அழகுவாய்ந்த திருவெண்காட்டடிகள் ஏனைய வணிகர்களை யழைத்தவராய் அவர்களின் சீட்டுத்தொகுதியை விருப்புடனே அவர்கள் வசமீந்தனர். பொருளபேட்சையால் அதை வாசித்துப்பார்த்துக் கோபித்தார்கள்.—எ - று.

மருதவாணர் சொற்படியே அவ்வரட்டிகளைச் சரக்கறையிற் சேர்த்து, கடனாளிகளாயுள்ள வணிகர்களை வரவழைத்து, அவ்வவர்கள் சீட்டைத்திருவெண்காட்டடிகள் காட்டியபோது, அதை வாசித்துணர்ந்த வணிகர்கள் பொருளபேட்சையாற் கோபித்தார்களென்றபடி. எனவே, அவர்கள் கடனாக வாங்கிக்கொண்ட வரட்டி யொன்றுக்கிவ்வளவென்று இரயங்காட்டினமையின் அத்தொகையைப் பார்த்தபோது திரவியாபேட்சை நிறைந்த அவ்வணிகர்கள் வரட்டியின் விலை இவ்வளவாவென்று சினந்தார்களென்பதாம்.

பொருளீகுவ னெருப்பாண்டிலிற் புக்கொன்றிவண் கொடுவா
மருளுள்ளவம் முறியாளரை வாவிங்கழை யவர்முன்
கரையொன்றினை யென்றாெரு கைவல்லவன் கரைந்தா
னெருவுள்ளெரி யெனச்செம்மணி வெயில்விட்டெறித் தனவே.

(இ - ள்) அப்போது மருதவாணர் திருவெண்காடரை நோக்கி, உமக்குப் பொருளளிக்கின்றேன், உன்னே சென்று வரட்டிவண்டிகளிலிருந்து ஓர் வரட்டியை இங்கே கொண்டுவாரும், மயக்கமுள்ள அக்கடன்காரர்களை இவ்

விடத்தில் வரவழையுங்கள், 'அவர்கட்கெதிரில் ஓர் வரட்டியைச் சலத்திற் கரையுங்களென்றனர். கைவலியுள்ள ஒருவன் அவ்வாறே கரைத்தனன். அப்போது அவ்வரட்டிக்குள்ளே மாணிக்கமானது அக்கினியைப்போன்று கிரணம்வீசிப் பிரகாசித்தது.—எ-று.

அக்கடன்காரர்கள் கோபித்ததைக் கண்ட திருவெண்காட்டடிகள் திரவியம் வருவதாயில்லை யென்று அதைரியப்பட்டபோது, ' அது தெரிந்த மருதவாணர், அவ்வாறு அதைரியப்படவேண்டாம், அவ்வரட்டிகளின் மதிப்பிவ்வள வென்பதை அவர்கட்கு முன்பாக நானேகாட்டி அவர்கள் நமக்குக் கொடுக்கவேண்டிய திரவியத்தை நானே சேகரித்துத் தருகின்றேனெனக் கூறி இவ்வாறு செய்தனரென்க. (கஉஉ)

இத்தன்மையிற் கடன்கொண்டுள வெருப்பாண்டில்களெனவைக்கும்
வைத்தன்னவர் விலைநோக்கினர் வணிகக்கிளை மாக்க
ளொத்துள்ளன வென்றார்பொரு ளிலமென்றுரை வரைந்தா
ரத்தன்மையில் வெண்காடரு மடிமைத்திறங் கொண்டார்.

(இ - ள்.) இவ்வாறே தாங்கள் கடன் வாங்கி யிருக்கின்ற வரட்டிகளனைத்திற்கும் கிரயமேற்படுத்தி, அவ்வணிகர்களின் உறவினர் அத்திருவெண்காட்டடிகள் காட்டிய சீட்டின் விலையையும் பார்த்தார்கள். இரண்டு தொகையும் ஒத்திருக்கின்றன வென்றுரைத்து, ஆயின் இக்கடனைத் தீர்க்கப் பொருளில்லையென்று கூறினார்கள். அத்தன்மையினாலே திருவெண்காட்டடிகளும் அவர்களை அடிமைகளாக்கிக் கொண்டனர்.—எ - று.

மருதவாணர் சலத்திற்கரைத்துக் காட்டிய ஓர் வரட்டியிலிருந்த மாணிக்கத்தை மதிப்பிட்டு, அம்மதிப்புத் தொகைவீதம் தாங்கள் வாங்கிக்கொண்ட வரட்டி வண்டிகளுக்கு மதிப்பிட்டுப் பார்த்துத் தெளிந்த அவ்வணிகர்கள் யாவரும் திருவெண்காட்டடிகள் காட்டியகடன் பத்திரத்தொகையும் தங்கள் மதிப்புத் தொகையும் சரிப்பட்டிருக்கின்றன வென்றும், அவ்வளவுதொகை கொடுக்கத் தமக்குச் சத்தியில்லை யென்றும் தெரிவித்தமையின், அச்சீட்டில் முன்னமே கண்டிருக்கிறபடி அவ்வணிகர்களனைவரையும் திருவெண்காட்டடிகள் அடிமைகளாக்கிக்கொண்டன ரென்றபடி. (கஉங)

கொண்டாரருண் மருமான்றனைக் கொண்டாடினர் குளிர்தோய்
வண்டாமரை மலர்போன்முக மலர்ந்தார்மகிழ்ந் ததற்பி
னெண்டானிறையெருப்பாண்டில்க ளாராய்ந்தன ரெரிநேர்
தண்டாமணி நண்டாரிலை தவறாதிது வென்றார்.

(இ - ள்.) இவ்வாறு அடிமைகொண்டவராகிய திருவெண்காட்டடிகள் திருவருள்நிறைந்த மருதவாணரைப் புகழ்ந்தவராய், குளிர்ச்சியமைந்த வளப்புறுமுள்ள மலர்போன்ற முகமலர்ச்சியுற்றவராய் மகிழ்வடைந்த பின்பு தனக்கின் மேம்பட்டுள்ள வரட்டிகளனைத்தையும் ஒவ்வொன்றாய ஆராய்ந்து

பார்த்தார், அவ்வரட்டிகளில் முன்பு மருதவாணர்காட்டிய அக்கினியைப் போன்ற நிறமுள்ள தவறற்ற மாணிக்கமணியைப் பார்க்கவில்லை, உடனே மருதவாணர்செய்த இக்காரியம் தவறாகுமென்றுரைத்தனர் —எ - று.

• மருதவாணர் ஓர் வரட்டியிற் காட்டியவாறு தமது சரக்கறையின்க ணிரப்பிய வரட்டிகளொவ்வொன்றினுமிருக்கப் பார்க்கவேண்டுமென்று திருவெண்காட்டடிகள் அவ்வண்டிகளிலுள்ளவற்றையெல்லாம் சோதித்தபோது ஒன்றிலேனும் அவ்வாறிருக்கக் காணாமையால், மருதவாணர்செய்த காரியம் தவறானகாரியமென்றும், அதற்கிணங்கித் தம்மாபினரனைவரையும் அடிமையாக்கிக்கொண்ட தமது காரியமும் தவறானதென்றும் கருதிச் சினந்தனரென்க.* (கஉச)

எருவஞ்சக னிவனைத்தனி யிருத்தித்திடந் திருத்தித்
திருவஞ்செறி பொருள்கேண்மின்க ளென்றாரது செய்தார்
கருநெஞ்சின னவர்பக்குவக் கவினோக்கியங் கிருந்தா
னுருவஞ்சிறி திலதுண்டல னொருவன்றெளி யொளியோன்.

(இ - ள்.) வரட்டிக்கபடனாகிய இவனைத் தனியிடத்திலிருத்தி, நிச்சயத்தைக் கூறும்படிசெய்து, ஐஸ்வரியத்தின் மேம்பட்ட பெருந்தொகையைக் கொடுக்கச்சொல்லிக் கேளுங்களென்று தண்டமாக்களுக்குக் கட்டளையிட்டனர். அவர்களவ்வாறே இயற்றினர். அப்போது திருவுருவம் சற்றுமே இல்லை என்னும் இரண்டுக்கும் அல்லாதவர் என்றும், ஒப்பற்றவரென்றும் தெளியத்தக்க ஒளியுள்ளவராகிய சிவபிரானான மருதவாணர், கபடமனமுடையவராய், அத்திருவெண்காட்டடிகளின் பரிபக்குவச் சிறப்பை எதிர்பார்த்தவராய் அவ்விடத்திருந்தனர்.—எ - று.

உருவமுடையரென்றும் இலரென்றும் அல்லரென்றும் ஒருவரென்றும் உணர்ந்தோரால் றெளியத்தக்க ஒளியுருவராகிய சிவபெருமான் திருவெண்காட்டடிகளேவிய தண்டமாக்களின் வசப்பட்டிருந்தனரென்றபடி. சிவபிரானித்தன்மையுடையாரென்பதை, மண்ணல்லை விண்ணல்லை வலையமல்லை மலையல்லை கடலல்லை வாயுவல்லை - யெண்ணல்லை யெழுத்தல்லை யெரியு மல்லை யிரவல்லை பகலல்லை யாவு மல்லை - பெண்ணல்லை யாணல்லை பேடு மல்லை பிறிதல்லை யானாயும் பெரியாய் நீயே - யுண்ணல்லை நல்லார்க்குத் தீயை யல்லை யுணர்வரிய வொற்றியூ ருடைய கோவே'' என்னும் திருத்தாண்டகத்தானும், 'இன்றெனக் கருளி யிருள்கடிந் துள்ளத்தெழுகின்ற ஞாயிறே போன்று - நின்றநின் றன்மை நினைப்பற நினைந்தேனீயலாற் பிறிதுமற் றின்மை சென்றுசென் றணுவாய்த் தேய்ந்து தேய்ந்தொன்றாந் திருப்பெருந் துறையுறை சிவனே - யொன்று நீயல்லை யன்றி யொன்றில்லை யாருன்னை யறியகிற் பாரே.'' என்னும் மணிவாசகப் பிரான் மலர்வாக்கானு மறிக (கஉரு)

ஒளியானென விவனோரிடத் துறைந்தானெங்கு நிறைந்தான்
குளிர்போகிய கவலுற்பறை கொட்டுஞ்சில பூத

மணிநீடிய சிலபூதங்க ளாடுஞ்சில பாடும்
வெளிமேவிய கணநாதர்கள் விண்ணோர்குழுத் தழுவும்.

(இ - ள்.) ஒளியுடையவனென் றுரைக்கும்படி இம்மருதவாணர் ஓரிடத்திலிருந்தவராகவே எவ்விடத்தும் நிறைந்திருந்தார். அச்சம்வினைதற்கேதுவாகிய கோராத்திரியில் சில பூதங்கள் பறைகொட்டும், இருளை விசேடித்த சிலபூதங்களாடும், சிலபூதங்கள் பாடும், ஆகாயத்தில் வசிக்கின்ற சிவகணநாதர்களும் தேவர்கூட்டங்களும் அவரைத் தழுவிக்கொள்வார்கள்.—எ - று.

மருதவாணர் சிவபெருமானாகையால், தம்முடைய இயற்கைத் தன்மையால் ஓரிடத்திலிருந்துகொண்டே எங்கெங்கும் நிறைந்தவராகக் காணப்பட்டனரென்றும், பூதங்களே அப்பெருமானுக்குப் பரிசனங்களாகலின், சில பூதங்கள் பறைகொட்டினவென்றும், சிலபூதங்களாடினவென்றும் சில பூதங்கள்பாடினவென்றும், சிவகணநாதர்களும் தேவகூட்டத்தினரும் அவரைத் தழுவினரென்றும் கூறினர். சிவபெருமானுக்குப் பூதப்படைகளே இவ்வாறு செய்வதியல்பென்பதை, "கொட்டுஞ் சிலபல சூழநின் றார்க்குங்குப் புற்றெழுந்து - கட்ட மறியுங்கி ரீடிக்கும் பாடு நகும்வெருட்டும் - வட்டம் வருமருஞ் சாரணை செல்லு மலர்தயங்கும் - புட்டங் கரும்பொழில் சூழ்மறைக் காட்டான் பூதங்களே." என்னும் பொன்வண்ணத் தந்தாதியானுமுணர்க. ()

மாலிந்திரன் மலரோன்முதன் மறைமாமுனிக் கணங்கள்
சீலந்தரு சிவஞானிக டெய்வத்திரண் மடவார்
ஞாலம்புக ழிசைநாரதர் நல்லோர்கலை வல்லோர்
காலம்பல மனுவாகமங் காணும்படி மிடைவார்.

(இ - ள்.) திருமால் தேவேந்திரன் பிரமன் முதலியவர்களும் வேதத்தில் வல்ல சிறந்த முனிவர் கூட்டங்களும், தூய்மை விளக்கின்ற சிவஞானியர்களும் தேவமாதர்களின் கூட்டமும், உலகத்தாரால் புகழப்பட்ட இசையில் வல்லபராகிய நாரதமுனிவரும், பலவகைப்பட்ட காலங்களும் மந்திரங்களுங் கூறும் சாத்திரங்களிலும் சிவாகமங்களினும் வல்லவர்களும் மருதவாணராகிய சிவபெருமானைத் தரிசிக்கும்படி நெருங்குவார்கள்.—எ - று.

காலபேதங்களும் மந்திரங்களும் சிவாகமங்களும் வந்தனவென அவ்வவற்றின் அதிதேவதைகளையே இங்குக்கூறினமையின் "மிடைவார்." என உயர்திணையாற் கூறினர். (கஉஎ)

மருதப்பெரு மானிங்ஙன மகிழ்நாள்களி லொருநா
டிருவிற்பெருந் திருவோலக்க மிருந்தான்றெரிந் திடுமா
றிருள்விட்டெறி வெள்ளிக்குவட் டிருக்குந்தம மிருந்தான்
மருள்வெற்றிசெய் வெண்காடர்த மனையாருடன் கண்டார்.

(இ - ள்.) மருதவாணர் இவ்வண்ணம் திருவிளையாடல்களியற்றிக் களிக்கின்ற நாள்களிலோர்நாள், யாவர்க்கும் தெரியும் வண்ணம் அழகில் விசேடித்த திருவோலக்கங் கொண்டிருந்தனர். இருணீங்கிப் பிரகாசிக்கின்ற வெள்ளிமலையென்னும் திருக்கைலாயத்திலிருக்குந் தன்மையைப்போன்றிருந்த மருதவாணரை, அஞ்ஞானத்தை வெற்றிகொண்டவராகிய திருவெண்காட்டடிகளின் மனைவியார் உடனே தரிசித்தார் —எ -று.

மேற்கூறிய செய்யுளிற் குறித்தபடி திருமால் இந்திரன் பிரமன் சிவஞானியர் தேவமாதர்கள் நாரதமுனிவர் சகல சாத்திரவல்லபர்கள் என்னும் இவர்கள் நெருங்கினமையின், அவர்கட்குக் காட்டும்படி திருவோலக்கங் கொண்டாரென்று குறிப்பிப்பான், "இருள்விட்டெறி வெள்ளிக்குவட்டிருக்குந் தாமிருந்தான்." என்றார். (கஉஅ)

கண்டோடினர் வெண்காடர்தங் கருத்தச்சுற மொழிவார்
வெண்ணீறணி பணிவெண்டையன் மென்பச்சிளம் பாவை
செண்டாடிய மிடலாகுவன் சிறுசெம்பவ ளச்சேய்
தண்டாவிடை யுண்டென்றனர் தக்கார்பய மிக்கார்.

(இ - ள்.) பார்த்தவுடனே ஓடினவராய், திருவெண்காட்டடிகளின் மனம் அச்சமுறும்படி கூறுவாராய், வெண்ணிறமுள்ள திருவெண்ணீறணிந்த சர்ப்பவெண்டையமுடையவனாகவும், மென்மையுடைய பசிறமமைந்த இளமைவாய்ந்த பாவைபோன்ற உமாதேவியாருடனே பந்தாடிய வலியுள்ளானாகவும் ஒருவனிருக்கின்றான், சிவந்த பவளம்போன்ற திருமேனியாகிய சிறுவயதுடைய முருகக்கடவுள் இவ்விருவர் மத்தியிலுமிருக்கின்றனரென்றுரைத்தார். தகுதியுடையவராகிய திருவெண்காட்டடிகள் இதைக்கேட்டவுடனே அச்சமேம்பட்டனர்.—எ - று

எனவே, திருக்கயிலையின் திருவோலக்கத்துடனிருந்தாரென மேற்கூறினமையின், அக்கோலம் சோமாஸ்கந்த மூர்த்தமெனத் தெரிவிப்பான், "வெண்ணீறணிபணி வெண்டையன் மென்பச்சிளம்பாவை - செண்டாடியமிடலாகுவன் சிறுசெம்பவளச்சேய் - தண்டாவிடையுண்டு." என்றனர் சஹ உமாஸ்கந்தர் என்பது சோமாஸ்கந்தரெனலாயிற்று. உமாதேவியார் பாகமாகவும் மத்தியில் முருகக்கடவுள் வீற்றிருப்பதாகவும் கொண்ட திருக்கோலமென்பது பொருள். இம்மூர்த்தத்தையே சச்சிதானந்த சொரூபமாகக் கூறுவாருமுளர். (கஉக)

பயந்தோடினர் கண்டார்வரு பச்சைப்பெரு மாலுங்
கயந்தோன்றிய மலராளியுங் காணாததொர் காட்சி
வியந்தாரொரு பேரற்புத மென்றார்மிக வெருண்டார்
நயந்தாருடன் மீண்டார்விழி துயிலாரிரவை பயிலார்.

(இ - ள்.) குற்றச்செய்கை பயின்றறியாத் திருவெண்காட்டடிகள் அச் சமூற்றோடினவராய், முன்னர்த்தரிசனத்திற்கு வரத்தக்க பசுமிறமுள்ள திருமாலும், நீர்க்கயத்திற் றோன்றுவதாகிய தாமரைமலராதனனான பிரமனும் கண்டறியாத நிகரற்ற காட்சியைத் தரிசித்தனர். அதிசயித்தவராய் இஃது ஒப்பற்றமேலான அற்புதமெனக்கூறினர், மீண்டும் அச்சமுற்றனர், உடனே விருப்பமுள்ளவராய்த் திரும்பினர், அன்றிரவு முழுமையும் நித்திரை கொள்ளார்.—எ - று.

மருதவாணரைப் பொருளபேட்சையால் இவ்வாறு செய்ததொன்றொழிய மற்றொரு தீமையும் புரியாதவரெனவிளக்குவான், "நவைபயிலார்." எனவும், தமது மனைவியார் அக்கோலத்தைக்கண்டுவந்து சொல்லியவளவில் சிவபெருமானுடைய சோமாஸ்கந்தமூர்த்தம் இங்கு விளங்கவேண்டியதென்னை? ஒருக்கால் தமதடியாராகிய மருதவாணரைத் தண்டித்தது சகியாதவராய்ச் சிவபெருமானே வந்தனரோ? அவ்வாறு வந்திருக்கின் அவர்நம்மைத் தேடி வராமுன்னர், நாமேசெல்வது முறையாமெனக் கருதினவராய் அச்சத்துடன் விரைந்தோடினரென்பார், "பயந்தோடினர்." எனவும், இவ்வாறாகிய சோமாஸ் கந்தமூர்த்தம் திருமால் பிரமன் என்னும் இருவருமே காணுதற்கருமையுள்ளதென்பார், "பச்சைப்பெருமானும்-சயந்தோன்றியமலராளியுங் காணாததோர்காட்சி." எனவும், இவ்வாறானகோலம் திருக்கைலாயத்திலன்றிவேறெங்கும் நிதரிசனமாய்க் காணக்கூடாததாகலின், அத்தகைய கோலம் மிக எளிதில் இந்நிலவுலகத்துள்ளார் பலருங் காணும்படி வந்தது அதிசயப்பும் அற்புதமுமாகையால், "வியந்தா ரொருபேரற்புதமென்றார்." எனவும், மருதவாணரே இவ்வாறாய கோலங்கொண்டமையின் அவர் சிவபெருமானென்பதற்கையமென்னை? அத்தகையோரை யாம் தண்டித்தோமே இதனால் இனி என்விளையுமோ எனச்சிந்தித்து மிகவும் அச்சமுற்றனரென்பார், "மிகவெருண்டார்." எனவும், நமக்கித்தகையகோலத்தை நண்பே காட்டியருளுதற்குத் திருவுளங்கொண்டுதான் இவ்வாறு தனித்திருக்கச் செய்வித்துக் கொண்டனர்போலுமெனச் சிந்தித்தவராய்த் திரும்பினரென்பார், "மீண்டார்." எனவும், இத்தகைய சிந்தனைகள் பலபலவாக விரிந்தமையின், தம்மனைக்கண் வந்து பொழுதுவிடியுமளவும் நித்திரையின்றியிருந்தனரென்பான், "விழிதுயிலார்." எனவுங் கூறினர். (கஙo)

கங்குற்புலர் சிறுகாலையி லெழுந்தன்பருங் காண
வெங்கட்கிறை மருதப்பெரு மானாய்த்தனித் திருந்தான்
துங்கக்கம லச்சேவடித் துணையேதுணை யாகச்
செங்கைத்திரு மலர்சாத்தினர் சென்னிக்குறப் படுத்தார்.

(இ - ள்.) இரவு விடிகின்ற உதயகாலத்தில் மெய்யன்பராகிய திருவெண்காட்டடிகளும் சயனத்தைவிட்டெழுந்து முன்பு தரிசித்தவிடத்திற் போய்ப்பார்க்க, எங்கட்குத் தலைவராகிய சிவபெருமான் மருதவாணராய்த் தனியேயிருந்தனர். அப்போது திருவெண்காட்டடிகள் அம்மருதவாணரு

லுடைய பரிசுத்தமான சிவந்த தாமரை மலர்போன்ற திருவடிகளிரண்டுமே தமக்குத் துணையாகுமாறு, தமது சிவந்த கரங்களாகிய அழகிய தாமரைமலர்களைச் சாத்தினவராய், அத்திருவடிகளே தமது சிரசிற் கணியாகும்படி தண்டாகாரமாய்ப் பணிந்தனர்.—எ - று

இரவு தரிசித்ததுமுதல் னித்திரையின்றி விழித்திருந்த திருவெண்காட்டடிகள் பொழுதுவிடிந்தவுட னெழுந்துபோய்ப் பார்த்தபோது, பழையபடியே மருதவாணராய்த் தனித்திருக்கக்கண்டு, இவரே நம்மையடிமையாகவுடைய சிவபெருமானெனத் துணிந்து, அவருடைய இரண்டு திருவடிகளையும் தமதிருகரங்களாற் பற்றிக்கொண்டு, அத்திருவடிகளையே தமது சிரசிற்கணியாக்கித் தண்டாகாரமாகப் பணிந்தனரென்க. (கஙௗ)

புன்மைப்பிழை புரிந்தேனவை பொறுத்தாண்டிட வேண்டும்
வன்மைக்கொள னினையாதுகொண் மருதப்பெரு மானீ
நன்மைப்பொரு ளாய்வில்லிடு நாதப்பொரு ளாய
தன்மைப்பொரு ளாய்நின்றிடு தனியேயெனை முனியேல்.

(இ - ள்.) பொல்லாங்காகிய குற்றங்கள் அடியேனியற்றினன், அவைகளை மன்னித்து அடிமைகொள்ளவேண்டும், அப்பிழைகட்கேற்ற கடுந்தண்டனை செய்யும் வல்லபத்தைக் கொள்ளும்படியாகத் திருவுள்ளங் கொள்ளாது மருதவாணரே கிருபை கொள்வீராக, யாவர்க்கும் நன்மையைப் பாலிக்கும் பொருளாகி ஒளிவிடுகின்ற தலைமைப்பொருளாகிப் பெருந்தகைமைவாய்ந்த பொருளாகி விளங்குகின்ற ஒப்பற்றவரே! அடியேனைக் கோபிக்க வேண்டாம்.—எ - று.

ஒளிமயமாய் விளங்குவதும் தலைமைவாய்ந்த பெருந்தகைமையுள்ள பொருளாய் விளங்குவதும் சிவபிரானுக்கியல்பாகலானும், மருதவாணராய் வந்த இப்போதும் உலகத்துள்ளாரனைவரினும் மேம்பாடுற்ற ஒளியுடையராயும் எவர்கட்கும் தலைவராயும் விளங்குகின்றமையானும்,நன்மையைப் பாலிப்போரென்னும் பொருளையுடைய சங்கரரென்னும் திருநாமம் வகித்திருத்தலானும், "நன்மைப்பொருளாய் வில்லிடுநாதப் பொருளாய தன்மைப்பொருளாய் நின்றிடுதனியே." என்று கூறினர். ஒளிமயமாய் விளங்கி எவர்கட்கும் தலைமைபெற்றிருக்கின்றன ரென்பதை, "சோதியே சுடரே சூழொளி விளக்கே சுரிகுழற் பணைமுலை மடந்தை - பாதியே பரனே பால்கொள்வெண்ணீற்றாய் பங்கயத் தயனுமா லறியா - நீதியே செல்வத் திருப்பெருந் துறையு ணிறைமலர்க் குருந்தமே வியசீ - ராதியே யடியே னாதரித் தழைத்தா லதெந்துவே யென்றருளாயே." என்னும் மணிவாசகப்பிரான் மலர்வாக்கானும், சங்கரரென்னும் திருநாமத்திற்குச் சுகத்தைஅருள்பவரென்பது பொருளென்பதை, "புரளுந்திரை யெறியுங்குரை கடலும்பகை தமிழோன் - பொதியம்பகை மதியம்பகை மதனன்பகை முலைசேர், தரளம்பகை பனையன்றில்கள் பகையங்குயில் பகையே - தமரும்பகை யனையும்பகை சகியும்பகை நகர்வாழ் - திரளும்பகை மலர்சிந்திய வணையும்பகை பனிநீர் - திமிருங்குளிர் களபம்

பகை யெனிலென்செய வடியே, னருளுஞ்சக மருள்கின்றிலர் பெயர் சங்கர ரெனவோ - யணிவெங்கையி லமர்கின்றவ ரதுமென்குறை யனமே." என்னும் சிவப்பிரகாசசுவாமிகள் திருவாக்கானுந் தெளிக. வில்லிடு நாதப்பொருளாய என்பதற்கு ஒளிவீசும் நாததத்துவமாய் எனப்பொருள் கூறுவாருமுளர். (கரு௨)

ஏவற்றனி யாளாயினை முறையோரென வியைந்தாய்
தாவற்றிடு தேவாயினை தருவாய்த்தரு குருவே
யாவற்றனி யேன்றன்னையு மவ்வாறருள் குவையோ
பூவிற்கமழ் மணம்போன்றுயர் புனிதாவெனை முனியேல்.

(இ - ள்.) கற்பகத்தருவைப்போன்று அடியேனுக்கு வேண்டியவற்றைப் பாலிக்கும் ஆசாரியரே! அடியேன் ஏவலுக்கேற்ற ஓர் அடிமையாகவுமானீர், அன்றியும் அடியேனுடைய உறவின்முறையாரென்றும் பொருந்தினீர்! அழிவற்ற தெய்வமாகவும் விளங்கினீர்! அவ்வண்ணமாதற்கு விரும்பிய தமியேனையும் ஆண்டருள்வீரோ? மலரில் மணக்கின்ற வாசனைபோன்று மேம்பாடுற்ற தூயரே! அடியேனைக் கோபிக்கவேண்டாம்.—எ- று.

யாவரும் தொழுதற்குரிய தெய்வமாகவும் ஆசாரியராகவும் விளங்குகின்ற தேவரீர், அடியேனுக்கோரடிமையாகவும் உறவின்முறையோராகவும் விளங்கினீர். அவ்வாறே அடியேனும் தேவரீருக்கோர் அடிமையாகவும் உறவின் முறையாகவும் விரும்பியவண்ணம் ஆட்கொண்டருள்வீரோ என்பதாம். தெய்வமே ஆசாரியராகவருவதென்பது நூற்றுணிபாகலின், "தாவற்றிடு தேவாயினை தருவாய்த்தருகுருவே." என்றும், அடியார்க்கெளியராதல் சிவபிரானியல்பாகலின், "ஏவற்றனியாளாயினை." என்றும், மருதவாணரென்னும் திருநாமத்தோடு திருவெண்காட்டடிகட்குக் குமாரரென்னும் முறையுடன் வந்தமையின், "முறையோரென வியைந்தாய்." என்றும், மலரின் மணம்போல் விளங்குவது சிவபெருமான் றன்மையாகலின், "பூவிற் கமழ்மணம் போன்றுயர் புனிதா." என்றும் கூறினர். தெய்வமே ஆசாரியராகவருவதென்பதை, "மறைமுடி யதனில் விளங்கிடு மொளியே மனிதரைப் போலவந்தெனது-சிறைதவிர்த் தாண்ட சிவப்பிரகாச தேசிகன் றன்னைமற் றவன்ற-னறைமல ரடியைப் போற்றிடுஞ் சாந்த நாயகன் றன்னைமற் றவன்ற-னிறையருள் பெற்ற பழசிமா முனியை நெஞ்சினு ளிருத்தியே பணிவாம்." என்னும் சிதம்பரசுவாமிகள் திருவாக்கானும், அடியார்க் கெளியராய் வருதல் சிவபெருமானுக் கியல்பென்பதை, "அடியார்க் கெளியன்சிற் றம்பலவன் கொற்றங்-குடியார்க் கெழுதியகைச் சீட்டு - படியின்மிசைப் - பெற்றான்சாம் பானுக்குப் பேதமறத் தீக்கைசெய்து - முத்தி கொடுக்க முறை." என்னும் அப்பெருமான் திருவாக்கானும், அடியார்க்குறவினராதலு மியல்பென்பதை, "அப்பனீ யம்மைநீ யன்புடைய மாமனு மாமியுநீ - யொப்புடைய மாதரு மொண் பொருளுநீ யொருகுலமுஞ் சுற்றமு மோரூருநீ - துய்ப்பனவு முய்ப்பனவுந் தோற்றுவாய்நீ துணையாயென்னெஞ்சந் துறப்பிப்பாய்நீ-யிப்பொன்

ணீ யிம்மணிநீ யிம்முத்துநீ யிறைவநீ யேறூர்ந்தசெல்வனீயே." என்னும் திருநாவுக்கரசுசுவாமிகள் திருவாக்கானும், மலரின்மணம்போல் விளங்குவது சிவபெருமான்றன்மை யென்பதை, "பூவண்ணம் பூவின்மணம் போலமெய் யோதவின்ப - மாவண்ண மெய்கொண்ட வன்றன்வலி யாணைதாங்கி-மூவண் ணறன் சந்நிதி முத்தொழில் செய்பவாளா-மேவண்ண லன்னான் விளையாட் டின் வினையை வெல்வாம்." என்னும் திருவிளையாடற் புராணத் திருவிருத் தத்தானுந் தெளிக. (கஙரு)

மறையாமறை யீறும்பெரு வானோர்களு மறியா
விறைவாவெனை யடிமைக்கொள வெண்ணித்துணிந் தனையோ
சிறுமானிட னடியேனுறு தெய்வப்பெரு மானீ
குறையோவிலை குறையுண்டெனிற் கொடுப்பாயினி முனியேல்.

(இ - ள்.) வேதத்தலைவரே! வேதத்தினந்தமும் பெருமையுற்றதேவர் களும் உணராதமுதல்வரே! என்னை அடிமைகொள்வதற்காகத் திருவுளங் கொண்டு நிச்சயித்தீரோ! அடியேன் சிற்றறிவினையுடைய மானுடப்பிறவி யுற்றவன், அடியேன் அடையத்தக்க தெய்வீகமுள்ள ஆண்டவர் நீரே ஆன மையின், அடியேன் இன்னும் வேண்டத்தக்க குறைபாடொன்று மில்லை, பெறவேண்டிய குறைபாடேதேனுமுளதாயின் பாலிப்பீராக. இனி அடியே னைக் கோபிக்கவேண்டாம்.—எ - று.

வேதமருளிய தலைவர் சிவபிரானாகலின், "மறையா." என்றும், அவ் வேதத்தின் முடிவும் தேவர்களும் அறியப்படாத தலைவராகலின், "மறை யீறும் பெருவானோர்களு மறியாவிறைவா." என்றும், தமியேனை அடிமை கொள்ளுதற்குத் திருவுள்ளங்கொள்ளாமலும், ஒருக்கால் கொண்டபோதி னும் தாமதிக்காமலும் காருணியத்தாற் றிருவுள்ளங்கொண்ட தக்ஷணமே மானுடச்சட்டைசாத்தி எழுந்தருளி அடிமைகொள்ள நிச்சயித்தீரோ என் பான், "எனையடிமைக்கொளவெண்ணித் துணிந்தனையோ," என்றும், மானி டர் சிற்றறிவினராகலின், "சிறுமானுடனடியேன்." என்றும், அத்தகைய மானிடப் பிறவி யெய்தினோர் அடையத்தக்க தெய்வீகமுள்ள பெருமான் தேவரீரே என்பான், "உறுதெய்வப்பெருமானீ." என்றும், அத்தகைய தேவ ரீர் அடியேனுக்குக் கிடைத்திருத்தலின் குறையொன்றிலை என்பார், "குறை யோவிலை." என்றும், அவ்வாறுண்டாயின், தேவரீரே கொடுத்தருளவேண்டு மென்பார், "குறையுண்டெனிற் கொடுப்பாய்." என்றும் கூறினர். வேதத் தலைவரென்பதை, "குறைவிலா நிறைவே கோதிலா வமுதே யீறிலாக் கொ ழுஞ்சுடர்க் குன்றே - மறையுமாய் மறையின் பொருளுமாய் வந்தென்மனத் திடை மன்னிய மன்னே - சிறைபெறா நீர்போற் சிந்தைவாய்ப் பாயுந் திருப் பெருந் துறையுறை சிவனே - யிறைவனே நீயென் னுடலிடங் கொண்டா யினியுன்னை யென்னிரக் கேனே." என்றும்,வேதத்தினாலும் தேவர்களாலும் அறியப்படாத தலைவரென்பதை, "வானநாடரு மறியொணாதநீ மறையினீறு முன் றொடரொணாதநீ-யேனைநாடருந் தெரியொணாதநீ யென்னையின்னிதா

வாண்டுகொண்டவா - ஞானநாடக மாடுவித்தவா வுருகிநானுனைப் பருகவைத் தவா-ஞானநாடக மாடுவித்தவா வையகத் துடையவிச்சையே," என்றும், அடியார்கட்கு வேண்டும் குறைபாடுகளுண்டெனிற் பாலிப்பது சிவபெருமான் கடனென்பதை, "வேண்டத்தக்க தறிவோய்நீ வேண்டமுழுதுந் தருவோய்நீ, வேண்டுமயன்மாற் கரியோய்நீ வேண்டியென்னைப் பணிகொண்டாய் - வேண்டிநீயா தருள்செய்தா யானுமதுவே வேண்டினல்லால்-வேண்டும்பரிசொன் றுண்டென்னி னதுவுமுன்றன் விருப்பன்றே." என்றும்வரும் மணிவாசகப்பிரான் மலர்வாக்குகளானுமறிக. மானிடர் சிற்றறிவின ரென்பதை, "ஏழைய ரிருகாற் பசுக்களன்மற் றிவரா லியன்றிடத் தக்கதொன்றிலையே - வாழிய நலந்தீங் கறிந்துயி ரியற்ற வல்லதோ யாங்கணும் விரவிச் சூழுநீ யெவ்வா றசைத்தனை யவ்வா றசைதலிற் சுதந்தர மிலதற் - பாழிமால் விடையா யவ்வுயி ரந்தோ பழித்திடுந் தகையதொன் றன்றே" என்னும் சிவதத்துவவிவேகத் திருவிருத்தத்தானும் தெளிக. (கரு௪)

பல்காலிவர் புகலப்பயில் பிரநாதனும் பருவ
மல்காவரு முனக்குக்கதி வழங்குமுப தேச
நல்காவருள் செயவந்தன னென்றானவில் கென்றான்
செல்காரிய மலநீங்குப தேசஞ்சிவன் செய்தான்.

(இ - ள்.) இத்திருவெண்காட்டடிகள் பலமுறை இவ்வண்ணங்கூறவும், இவருடன் பழகிய மேம்பாடுற்ற தலைவராகிய மருதவாணரும், பரிபாகம் விசேடித்து வருகின்ற உனக்கு முத்தியின்பத்தைப் பாலிக்கின்ற ஞானோபதேசஞ்செய்து திருவருள் புரிவதற்காக யான் வந்தேன் எனத் திருவாய்மலர்ந்தனர். அதைக்கேட்டவுடனே திருவெண்காட்டடிகள் அத்தகைய உபதேசத்தைச் செய்வீரெனப் பிரார்த்தித்தனர், விடயங்களின் மேற்செல்கின்ற காரியமலம் நீங்குதற்குரிய உபதேசத்தைச் சிவபெருமானாகிய மருதவாணர்புரிந்தனர்.—எ - று.

சிவபெருமான் மருதவாணரென்னும் திருநாமத்துடனே திருவெண்காட்டடிகளின் புத்திரரென்னு முரிமைகாட்டி அவருடன் பழகியிருந்தனரென்று குறிப்பிப்பான், "பயில்பரநாதன்." என்றும், இருவினையொப்பினால் மலபரிபாகம் வாய்க்கப்பெற்றுச் சத்திநிபாதம் பதிந்த பரிபாகிகட்கே முத்திப்பேற்றி லிச்சையுண்டாகுமென்பது நூற்றுணிபாகலின், அவ்வித முத்திப்பேற்றிற்கு நேர் காரணமாயுள்ள சத்திநிபாதத்தின் காரணமாகிய மலபரிபாகம் விசேடிக்கும் பருவம் திருவெண்காட்டடிகட் கடுத்ததெனக் குறிப்பிப்பான், "பருவமல்காவருமுனக்கு." என்றும், சத்திநிபாதம் பதிதற் கேதுவாயது ஞானோபதேசமாகலின், "கதிவழங்கும் முபதேச நல்கா வருள் செயவந்தனன்." என்றும், அத்தகைய ஞானோபதேசம் சாமானியமெனவும் விசேடமெனவும் இருதிறப்படுமென்றும், அவற்றுள் சாமானிய ஞானோபதேசம் புறப்பற்றை நீக்குமென்றும், விசேட ஞானோபதேசம் அகப்பற்றை நீக்குமென்றும் குறிப்பிப்பான், "செல்காரியமல நீங்குபதேசஞ் சிவன் செய்

தான்." என்றும் கூறினர். இருவினை யொப்பென்பது நல்வினை தீவினை என்னும் இரண்டையும் சமமாய்ப் பார்த்தல், மலபரிபாகம்என்பது யானென தென்னும் அபிமானமற்றிருத்தல், சத்திநிபாதமென்பது சிவபெருமான்திருவருள் பதிதல். எனவே, நல்வினையின் பயனான சுகத்தையும் தீவினையின் பயனான துக்கத்தையும் ஒன்றாகப் பார்ப்போர்க்கு யானென்பதும் எனதென்பதும் அறவே விட்டொழியும், ஒழியவே எங்கும் சிவமாய் விளங்குந் தன்மை யுண்டாகு மென்பது கருத்து. இருவினையொப்பு வாய்ந்தவர்கள் தன்மை இத்தகைத் தென்பதை, "கேடு மாக்கமுங் கெட்டதிருவினோ-ரோடுஞ் செம்பொன்னு மொக்கவே நோக்குவார்-கூடு மன்பினிற் கும்பிட லேயன்றி-வீடும் வேண்டா விறலின் விளங்கினார்." என்னும் அருண்மொழித்தேவர் அமுதவாக்கானும், மலபரிபாகம் வாய்ந்தவர்கள் தன்மை இத்தகைத் தென்பதை, "யானென தென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க்-குயர்ந்த வுலகம் புகும்" என்னும் திருக்குறளானும், சத்திநிபாதம் வாய்ந்தோர் தன்மை இத்தகைத் தென்பதை, "எங்குஞ் சிவமொழிய வில்லையவன் றன்னோடு- யங்கத் திரள் கருவி யாணவமாம் - பொங்குமயல்-மைசெய்த மாமாயை மாயைவினை மற்றனைத்தும் - பொய்பொய்பொய் பொய்பொய்பொய் பொய்." என்னும் ஒழிவிலொடுக்கத் திருவெண்பாவானும், "முந்திரு வினையுந் தமவென விருப்பின் முற்றவற் றின்பயன் றருவாய் - வந்தவை நினவென் றிருப்பினக் கவற்றை மாற்றிவீ டுறவருள் குவையே - சிந்தையி லென்னெஞ் சனது கொஞ்சென்மெய் நினதுமெய் யென்றனிந் தியங்கின் - னிந்திய மெனக்கொண்டென்கரத் திருக்கு மீசனே மாசிலாமணியே." என்னும் சிவப்பிரகாசசுவாமிகள் திருவாக்கானுந் தெளிக. செல்காரிய மலநீங்குபதேச மென்றதை "வாரீ ருமக்கொ ருபதேசங் கேளு முடம்படங்கப் - போரீர் சமனைக் கழுவேற்று நீற்றைப் புறந்திண்ணையிற் - சாரீ ரனந்தலைச் சுற்றத்தை நீங்கிச் சகங்கைக்க - வேரீ ருமக்கவர் தாமே தருவ ரிணையடியே." என்னும் திருவெண்காட்டடிகள் திருவாக்கானுந் தெளிக. (கரு)

செய்தங்ஙனஞ் சிலநாடரித் திருந்தான்சிவ நன்னூ
லெய்தும்படி படியென்றளித் திளஞாயிறு போல்வான்
கைவந்தன நன்னூல்களுங் கண்டானது வந்தும்
பொய்தங்கிய மருள்வாழ்க்கையும் போகாதவுங் கண்டான்.

(இ - ள்.) அவ்விதமாகத் திருவிளையாடலியற்றிக்கொண்டு சில தினங்கள் வசித்திருந்தனர். அதன் பின்னர் பாலசூரியனைப் போன்றமருதவாணர், நன்மையடையும்படி சிறந்த சாத்திரங்களை வாசிப்பீராகவென்று திருவாக்களித்து, ஒழுங்கமைந்தனவாகிய மேம்பாடுற்ற சாத்திரங்களையுந் தந்தருளினர். அச்சாத்திரங்களை வாசித்துணர்ந்தும் அஞ்ஞானமும் அதனாலாகியவாழ்வும் அவரைவிட்டு நீங்காமையையும் பார்த்தனர் —எ - று

தமது திருவிளையாடல்களிற் பலவாறு அற்புதங்களைக் காட்டி அவற்றாற்றானே இவ்வுலகவாழ்வு அஞ்ஞானமுடையதெனத் தெருட்டியும் தெளி

யாமைக்கண்டு, இவருக்குச் சாத்திரவுணர்ச்சி சாலாமையின் இவ்வாறு மயங்குகின்றனரெனத் திருவுளங்கொண்டு சிறந்த சாத்திரங்களைக் கற்றுணரும்படி அவர்க்குக் கட்டளையிட்டு, அவ்வாறு கட்டளையிட்டபிறகும், அவர் அச்சாத்திரங்களைத் தேடிக்கற்பதில் அசிரத்தையாயிருப்பதை யுணர்ந்து, தாமே சிறந்த சாத்திரங்களை அவர்க்குக் கொடுத்துக் கற்பித்தும், அவ்வாறு அவர் கற்றபிறகும் அஞ்ஞானமும் அதனால் விளையும் மாயவாழ்வும் அவரைவிட்டொழியாமையையுங் கண்டருளினர் என்றபடி. எனவே, மாயையானது எவரையும் விடாமற் பற்றி அஞ்ஞானத்தின் இழிவு தோற்றவொட்டாமலும், அதனால் விளையும் வாழ்வில் வெறுப்புறவொட்டாமலும் தடுத்து, மேலும்மேலும் அஞ்ஞானத்தையே விர்த்தியாக்குமாகலின், திருவெண்காட்டடிகளையும் செல்வமென்னும் மாயை தனது கோலாகலத்தால் வேண்டியவளவு மாயவாழ்க்கையை விர்த்தித்து வருவதால், மருதவாணரியற்றிய, அற்புதத் திருவிளையாடல்களாலும், சாத்திரவுணர்ச்சியாலும் தெளிவடையாமல் குடும்பச்சேற்றில் மூழ்கியிருந்தனரென்பது கருத்து. செல்வமே பலவகைக் கவலைகட்கும் காரணமாகலின், அப்பற்றை அறவே விடாதார்க்குச் சுகம் கிடையா தென்பது நூற்றுணிபு. இதனை, "கெடுவ தாம்பொருட் செல்வமே பல்வகைக் கிலேச மற் றதுதன்னை - விடுவ தேசுக மெனவு மோர்ந் திலமுனம் விடுத்துளோர்க் குனைப்போலு - நெடிய யூகம தில்லையோ சொல்லுதி நெஞ்சமே யினிப்பற் றற் - றடைது மேலர னருளையே பொருளென வருஞ்செல்வ மதுதானே," என்னும் சாந்தலிங்கசுவாமிகள் திருவாக்கானும், "இன்ன றரும் பொருளை யீட்டுதலுந் துன்பமே - பின்னதனைப் பேணுதலுந் துன்பமே யன்ன-தழித்தலுந் துன்பமே யந்தோ பிறர்பா - லிழத்தலுந் துன்பமே யெண்." என்னும் நீதிவெண்பாவானு மறிக. இச்செல்வம் முதலாக விளைந்திருக்கும் மாயை எத்தகையோர்களையும் மயக்கித் தன்வயப்படுத்தி யிருக்கின்றதென்பதை, "கலையை மதிக்கும் புலவர்தமைச் சித்தர் குழாத்தைக் கடவுளரை-நிலையை மதிக்கு முனிவரரைத் திசைமாமுகனை நிரைவளையாச் சிலையை மிதிக்கு நெடியோனை விழுங்கி யுமிழாத் திறன்மாயைத்-தலையை மிதிக்கு மல்லமன் செங் கமல மலர்த்தா டலைக்கணிவாம்" என்னும் சிவப்பிரகாசசுவாமிகள் திருவாக்கானும் தெளிக. செல்வம் முதலியவற்றானும் உறவினர் முதலியவற்றானும் பந்தப்பட்டுள்ளோர்க்கு மருணீங்காதென்பதை, "தந்தைதாய் புத்திரர் தன்னுடன் றோன்றினர் தாரமென்னும் - பந்தநீங் காதவர்க் குய்ந்துபோக் கில்லெனப் பற்றினையே - வெந்தநீ றணியா ராதியார் சோதியார் வேதகீத - ரெந்தையா ரூர்தொழு துய்யலா மையல்கொண் டஞ்சனெஞ்சே." எனவும், "பழகினால் வரும் பண்டுள சுற்றமும்-விழவி டாவிடின் வேண்டிய தெய்தொணா - திகழ்கொள் சேறையிற் செந்நெறி மேவிய-வழகனா ருள ரஞ்சுவ தென்னுக்கே." எனவும் வரும் தேவாரங்களாற் றெளிக. (கஙகூ)

நவகோடிபொற் குவைநீடிய நாட்டத்தோர்வெண் காட
ரிவைபோயிடத் துறக்கும்வண்ண மெவ்வண்ணமென் றெண்ணும்
பவமாற்றுதற் கிவைமாறெனப் பார்க்குஞ்சிவ மாக்குங்
கவலாதசற் குருநாதனைக் காணும்பதம் பூணும்.

(இ - ள்.) நவகோடிகளென்னும் எண்ணையுடைய பொற்குவியல்களில் விசேடித்த அபேட்சையுடையராகிய திருவெண்காட்டடிகள், இவ்வளவு பெருஞ் செல்வமும் அழியும்படி நாம் துறவடையும் மார்க்கம் எம்மார்க்கமென்று சிந்திப்பார், பிறவியை ஒழிப்பதற்கு இப்பொருட்பற்றும் ஏனைய பற்றுக்களும் முரணுமென் றாகித்துப் பார்ப்பார். தம்மைச் சிவமாக்குவதற் கெழுந்தருளியிருக்கும் கவலையற்ற சற்குருநாதராகிய மருதவாணரைத் தரிசிப்பார், அவர் திருவடிகளைச் சிரசிற் சூடிக்கொள்வார்.—எ - று.

திருவெண் காட்டடிகள் ஏனைய செல்வரைப்போன்று சாமானிய செல்வமுடையாரல்லரென விளக்குவான், "நவகோடி பொற்குவை நீடிய நாட்டத்தர் வெண்காடர்." எனவும், இவ்வளவு பெருந்திரவியத்தை யனுபவித்தற்குரிய புத்திரப்பேறும் நமக்கில்லையே! நாம் எப்படி இப்பெருஞ் செல்வத்தை விட்டுத் துறப்போமென்றெண்ணிஞரென்பார், "இவைபோ யிடத்துறக்கும் வண்ணமெவ் வண்ணமென் றெண்ணும்." எனவும், நாம் பிறவியறவொழிப்பதற்கு இப்பொருட்பற்றே பகையாமெனச் சிந்தித்தாரென்பார், "பவமாற்றுதற் கிவைமாறெனப் பார்க்கும்." எனவும், தம்மிடத்துள்ள மருதவாணர் தமக்குப் புத்திரராகவாவது அடியாராகவாவது வந்திருப்பவரல்லரென்றும், தம்மை யாட்கொள்ளத்தக்க குருசிகாமணியாய் வந்திருக்கின்றனரென்றுமுணர்ந்தாரென்பார், "சிவமாக்கும் கவலாத சற்குருநா தனைக்காணும்." எனவும், இப்பற்றை யொழிப்பதற்கு நம்மாலேலாது. ஒழியும்படி செய்ய வேண்டியவை திருவருட்கிருப்பிடமாகிய இக்குருநாதரின் திருவடிகளே எனக்கருதி அம்மருதவாணருடைய இரண்டு சரணங்களையும் சிரசிற் சூடிக்கொள்வாரென்பார், "பதம் பூணும்" எனவும் கூறினர். மிக்க பெருஞ்செல்வமுடைய நாம் இவ்வளவு செல்வத்தையும் எவ்வாறு துறப்பதெனச் சிந்தித்தாரென்றமையின், தமது செல்வத்தையே விசேடித்ததாக நோக்கினரே யொழியத் தம்மினும் உயர்ந்தோருடைய செல்வத்தை நோக்கித் தருக்கழியவும், தம்மினும் தாழ்ந்தோரை நோக்கித் திருத்தியும் அடைந்தாரில்லையென்பது பெறப்பட்டது. அறிவுடையோராகிய எவரும் தம்மினும் மிக்கோருடைய செல்வத்தை நோக்கித் தமது செல்வமற்பமாக எண்ணித் தருக்கடையாரென்பதை, "தொலையாப் பெருஞ்செல்வத் தோற்றத்தோ மென்று-தலையா யவர்செருக்குச் சார்த - லிலைபா-விரைக்கும்வண் டூமல ரீர்ங்கோதாய் மேரு-வரைக்கும்வந் தன்று வளைவு." எனவும், தம்மினிழிந்த செல்வரைக் கண்டு திருத்திபடைதலே அறிஞர் செயலென்பதை, "தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை - யம்மா பெரிதென் றகமகிழ்க - தம்மினுங்-கற்றாரை நோக்கிக் கருத்தழிக கற்றதெல்லா - மெற்றே யிவர்க்குநா மென்று." எனவும் வரும் சிவப்பிரகாசசுவாமிகள் திருவாக்கானுந் தெளிக. இப்பொருட்பற்றாகிய அவாவே பிறப்பறுத்தற்குப் பகையென்பதை, "ஆமுனிச்சையே மேலுமே லும்பிறப் பளிக்குமீவித் தெனநெஞ்சே - நீமறந்திடா சைக்கடல் சுவறுமே வினைவெனுர் திமைமாயும் - போமிறந் தெலா வினைவு மெப்பொழுதிலப் பொழுது பூரணமாம் - சோமசேகரத்தெந்தைபொற் கழலையுந் தொழ லையமில நாமே." எனவும், ஞானசாரியருடைய அனுக்கிரகத்தினுற்

ருள் பற்றுக்களைத்தும் ஒழியுமென்பதை, "காரியமாகலாற் சகம்படைக் கும் காரணன் குலாலனி லுளனெனன் - றோரியல் பெனவேழ் கடலுமொன் றுக்கி யொப்பிடுங் கருணையனேனும் - பேரியை பிறப்புத் தனையடைந் தவர்க்குப் பிணையுருவகை கெடப்பார்க்கும்-கூரிய விழியோ னுதவினறவுங் கொடியனு மாகுமக்குரிசில்." என்னும் சாந்தலிங்கசுவாமிகள் திருவாக்கானும், "தன்னிலையு மெதிர்காட்டாத் தமமாகு மாணவநோய் - இன்னையல தெஞ்ஞான்று நீங்குவது தானன்றே - தன்னிருள்வாய் முழங்குதிரைச் சுருட்டு கடள் முகட்டெழுந்த - மன்னுசுதி ராலன்றி மற்றொன்றான் மாயுமோ." என்னும் சிவப்பிரகாசசுவாமிகள் திருவாக்கானுந் தெளிக. (௧௩௭)

மருளுந்தெரு ளும்போர்புரி மாறுட்டமுங் கண்டான்
றெருளொன்றிட மருணின்றிடத் திருவுள்ளத்திற் கிடத்தி
யொருதந்திரம் புரிகின்றன னுடையானெவை யெவைக்குந்
தருமந்தணப் பொருட்குஞ்சுதந் தரனுஞசங் கரனே.

(இ - ள்.) என்னை யடிமையாகவுடையவரும், உலகத்துள்ள எவ்வெவ் வஸ்துக்களுக்கும் அருள்பாலிக்கும் ரகசியமான உண்மைப்பொருட்கும் உரிமையுடையவருமாகிய சிவபிரானுன மருதவாணர், திருவெண்காட்டடிகட்கு மேற்கூறியவாறு அஞ்ஞானமும் ஞானமும் போராநின்ற மாறுபாட்டையும் பார்த்தருளினர். மெய்ஞ்ஞானமே பொருந்துமாறும் அஞ்ஞானம் நீங்குமாறும் திருவுள்ளங்கொண்டருளி, ஓர் தந்திரம் புரியலாயினர்.—எ - று.

உலகத்துள்ள எவ்வெப்பொருட்கும் உண்மைப்பொருட்கும் சிவபெருமானே தலைவனென்பதை, "ஐவகை யெனும்பூத மாதியை வகுத்ததனுளசர சரபேதமான - யாவையும் வகுத்து நல்லறிவையும் வகுத்துமறை யாதிநூலையும் வகுத்துச் - சைவமுத லாவளவில் சமயமும் வகுத்துமேற் சமயங் கடந்த மோன சமரசம் வகுத்தநீ யுன்னையா னணுகவுந் தண்ணருள் வகுக்கவிலையோ - பொய்வளரு நெஞ்சினர்கள் காணுத காட்சியே பொய்யிலா மெய்யரறிவிற் - போதபரி பூரண வகண்டிதா காரமாய்ப் போக்குவர வற்ற பொருளே - தெய்வமறை முடிவான பிரணவ சொரூபியே சித்தாந்த முத்தி முதலே - சிரகிரி விளங்கவரு தக்ஷிணு மூர்த்தியே சின்மயா னந்த குருவே." என்னும், தாயுமானசுவாமிகள் திருவாக்கானும், அஞ்ஞானமும் ஞானமும் இருபாரிசத்தும் போராநின்றனவென்பதை, "தீர்க்கின்ற வாறென் பிழையை நின் சீரு ளென்கொலென்று - வேர்க்கின்ற வென்னை விடுதிகண்டாய் விரவார் வெருவ - வார்க்கின்ற தார்விடை யுத்தர கோசமங் கைக்கரசே - யீர்க்கின்ற வஞ்சொடச் சம்வினை யேனை யிருதலையே" என்னும் மணிவாசகப்பிரான் மலர்வாக்கானு மறிக. (௧௩௮)

## ஆட்கொண்டசருக்கம் முற்றிற்று.

---

ஆகத் திருவிருத்தம் - ௧௧௨.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# துறவறச் சருக்கம்.

முன்னெறித் தவம்பல முயன்ற நன்மையான்
மின்னெறித் தனவென விளக்க மோங்குவார்
சென்னெறிக் கதியுறு திருவெண் காடனார்
பன்னெறித் துறவறச் சருக்கம் பன்னுவாம்.

(இ - ள்.) பூர்வத்திலே முறைமையமைந்த தவங்கள் பலவற்றை இயற்றிய நன்மை காரணமாக, மின்னுக்கொடிகள் பிரகாசித்தவைபோன்று விளக்கத்தின்கண் மேம்படுவோராய், முத்தர்ன்மாக்கள் செல்லுதற்குரிய சன்மார்க்க முத்தியை யடையப்போகும் திருவெண்காட்டடிகளுடையயாவராலும் துதிக்கப்படும் மேம்பாடுற்ற துறவறச்சருக்கத்தைச் சொல்லுவோம்.—எ - று,

முற்பிறவியிற் றவம்புரிந்தார்க்கே இப்பிறவியிற் றவம் பலிக்குமென்பது நூற்றுணிபாகலின், "முன்னெறித்தவம்பலமுயன்றநன்மையான் - மின்னெறித்தன வெனவிளக்கமோங்குவார்," என்றும், சரியை, கிரியை, யோகமென்னும் மூன்று பாதங்களையுங்கடந்து நான்காவது பாதமாகிய ஞானநிலையை எய்தினோர் அடையத்தக்க சன்மார்க்க முத்தியை யடைதற்குரிய திருவெண்காட்டடிகளென விளக்குவான், "சென்னெறிக்கதியுறு திருவெண்காடனார்." என்றும், ஏனையர் யாவருடைய துறவினும் அதிமேம்பாடுற்றதாய் உலகத்துள்ள பெரியோர்கள்பலராலும் புகழப்படுவது திருவெண்காட்டடிகள் துறவேயென்றறிவிப்பான், "பன்னெறித்துறவறம்." என்றும் கூறினர். முற்பிறவியிற்றவம்புரிந்தோர்க்கே இப்பிறவியிற்றவம் பலிக்குமென்பதை "தவமுந் தவமுடையார்க் காகு மவமதனை - யஃதிலார் மேற்கொள்வது." என்னும் திருக்குறளானும், சரியாவான்கள் சாலோகபதவியையும் கிரியாவான்கள் சாமீபபதவியையும், யோகவான்கள் சாரூபபதவியையும், ஞானவான்கள் சாயுச்சியபதவியையும் அடைவார்களென்பதையும், சரியை கிரியை யோகம் ஞானம் என்னும் இந்நான்குமே சதுஷ்பாதங்களென்பதையும், இவற்றிற்கே முறையே தாதமார்க்கம் சற்புத்திரமார்க்கம் சகமார்க்கம் சன்மார்க்கமெனப் பெயர்களுண்டென்பதையும், அதனானே இந்நூலாசிரியர் சன்மார்க்க முத்தியென்பதற்குச் சென்னெறிக் கதியென்றாரென்பதையும், "சன்மார்க்கஞ் சகமார்க்கஞ் சற்புத்ர மார்க்கந் தாதமார்க்கமென்றுஞ் சங்கரனையடையு - நன்மார்க்க நாலிவைதான் ஞான யோக நற்கிரியா சரியையென்று நவிற்றுவதுஞ் செய்வர் - சன்மார்க்க முத்திகள்சா

லோக்கிய சாமீப்ய சாரூப்ய சாயுச்யமென்றுசதுர் விதமா - முன்மார்க்க ஞானத் தாலெய்து முத்தி முடிவென்பர் மூன்றினுக்கு முத்திபத மென்பர். என்னும் சிவஞானசித்தித் திருவிருத்தத்தானும், திருவெண்காட்டடிகள் துறவையேயா வரும் வியக்கின்றன ரென்பதை பாரனைத்தும் பொய்யெனவே பட்டணத் துப் பிள்ளையைப்போ - லாருந் துறக்கை யரிதரிது - நேரே - மனத்துறவு மப்பா டியே மாணுவிவற்று - ஞனக்கியைந்த தொன்றெனவேயோர். என்னும் தாயுமா ஞர் திருவாக்கானும் நிறந்தருந் தெய்வப் புலமைவள்ளுவனுர் நீத்தவர் பெருமை நான் முகப்பாற் - சிறந்திட வமைத்தாங் கதுகொடில் வாழ்க்கைச் சிறுமை தூற் றினாது தெரியார்க் - கறந்தவா தியற்றி னவனினுங்கோடி யதிகமாமென மன மரூது துறந்துளோரையும் பட்டணத்தெமதடிக டொருத்தகட்டுரை திகழ்த் திடுமே'' என்னும் சாந்தலிங்கசுவாமிகள் திருவாக்கானும் தெளிக. இனித் தாத மார்க்க முதலிய நான்குபாதங்களி னிலக்கணங்க ளிவையிவையென்பதை'' தாத மார்க்கஞ் சாற்றிற் சங்கரன்றன் கோயிற் றலமலகிட் டிலகுதிரு மெழுக்குஞ் சாத்திப்-போதுகளுங் கொய்துபூந் தார்மாலை கண்ணிபுனிதற்குப் பலசமைத் துப் புகழ்ந்து பாடித் தீதிறிரு விளக்கிட்டுத் திருநந்தவனமுஞ் செய்துதிரு வேடங்கண் டாலடியேன் செய்வ - தியாதுபணியீரென்று பணிந்தவர்தம் பணியு மியற்றுவதிச் சரியைசெய்வோ ரீசனுலகிருப்பர்.'' எனவும், "புத்திரமார்க் கம்பு கலிற் புதியவிரைப் போது புகையொளிமஞ் சனமமுது முதல்கொண்டைந்து - சுத்திசெய்தா சனமூர்த்திமூர்த்தி மானுஞ் சோதியையும் பாவித்தா வாகித்துச் சுத்த-பத்தி ஞ லருச்சித்துப் பரவிப் போற்றிப் பரிவிஞெடு மெரியில்வரு காரிய மும் பண்ணி - நித்தலுமிக் கிரியையினை யியற்று வோர்க ணின்மலன்ற னருகி ருப்பர் நினையுங் காலே.'' எனவும், "சகமார்க்கம் புலனொடுக்கித் தடுத்துவளி யிர ண்டுஞ்சலிப்பற்று முச்சதுர முதலாதா ரங்களகமார்க்க மறிந்தவற்றி னரும்பொ ருள்க ளுணர்ந்தங் கணைந்துபோய் மேலேறி யலர்மதிமண் டலத்தின் - முகமார் க்க வமுதுடல முட்டத் தேக்கி முழுச்சோதி நினைந்திருத்தல், முதலாகவினைக - ளுகமார்க்க வட்டாங்க யோக முற்று முழத்தலுழந் தவர்சிவன்ற னுருவத்தைப் பெறுவர்'' எனவும், "சன்மார்க்கஞ் சகலகலைபுராண வேதசாத்திரங்கள் சமயங்க டாம்பலவு முணர்ந்து - பன்மார்க்கப் பொருள்பலவுங் கீழாக மேலாம் பதிபசுபா சந்தெரித்துப் பரசிவனைக் காட்டு - நன்மார்க்கஞானத்தை நாடி ஞான னேய மொடு ஞாதிருவு நாடா வண்ணம் - பின்மார்க்கச் சிவனுடனும் பெற்றி ஞானப் பெருமையுடை யோர்சிவனைப் பெறுவர் காணே.'' எனவும வரும் சிவஞானசித் தித் திருவிருத்தங்களாற் றெளிக. (௯)

திருவிடை மருதுடைத் தெய்வ நாயக
னொருபுடைக் காதறை யூசி வாசியாற்
பிரிவுடைச் சாட்டொடு பேணி மாணுறப்
பரிவுடைப் பட்டினுற் பயிலச் சூழ்ந்தரோ.

(இ - ள்.) திருவிடைமருதூரைத் தமதிருப்பிடமாகக்கொண்டருளியதெய் வநாயகராகிய மருதவாணர், ஓர் பக்கத்திற் காதற்ற ஊசியை அதிகமாகப் பிரிந்

திருக்கின்ற நூலுடன் கோத்து, மாட்சிமையடையும்படி யாவரும் விரும்பும் தன்மையுடைய பட்டுவஸ்திரத்தினால்விளங்கும்படி சுற்றி—எ-று. அரோ-அசை.

சிவபிரான் ஏனைய சிவதலங்களெவற்றினும் மிக்கபிரீதியுடையராய் மற்றைய தலங்களிற் றரித்துள்ள திருநாமங்களெவற்றினும் மேம்பாடுற்ற மகாலிங்கர் என்னும் திருநாமத்துடன்,திருவிடைமருதூரில்வீற்றிருக்கின்றனராகலின்,” திருவிடைமருதுடை.”என்றும்,மகாலிங்கர் என்னும்திருநாமத்துடன்ஏகநாயகர் என்னும் திருநாமத்தையும் தரித்து விளங்கலின்” தெய்வநாயகன்.’என்றும்,அறவே காதற்றிருந்தாற் சாரடேறாதாகலின்,ஓர்பக்கமாத்திரம் காதறுபட்டஊசிஎன்பார் ஒருபுடைக் காதறை யூசி.“என்றும்இழைகள் சேர்த்து முறுக்கிய கயிறல்ல வெறும் இழைகளாகவே யுள்ளதெனவிளக்குவான், “வாசிபாற் பிரிவுடைச் சரடு. “என்றும், அக்காதற்ற ஊசியையும் இழையையும் தனியாகக்கொடுக்கின் பார்ப்போர்க்கழகன்மையுடன் வெவ்வேறாகப் பிரிந்து பயன்படா தொழியுமாகலின், பார்ப்போர் யாவரும் காமுறும்படி பட்டினாற் சுற்றிக்கொடுத்தாரென்பார், மாறுறப்பரிவுடைப் பட்டினாற்பயிலச் சூழ்ந்து.” என்றும் கூறினர். சிவபிரானுக்குத் திருவிடைமருதூர் மிக்க பிரீதியுடையதென்பதை, “எங்கு முற்றுநின்றியாவையுமுணர்ந்திடுமெங்கள்-சங்கரன் றனிக்கயிலையா மருதிடைச் சார்ந்து-பொங்கு மத்தரு நீழலிற்பொருந்துறு விசும்பிற்-றங்க மால்விடை நிறுத்திநின் றின்னதுசொல்வான். “எனவும்,“இனையமாதலமநாதியாயிருப்பது நமக்கீ-தனைய மாதலம் பாவை குழகிலத்தினில்லை-நனைய மாமலர்ச் சோலையும் வாவியு நன்கு-புனையு மீடறும்மித னெழில்பாரெனப் புகன்றான். “ எனவும் வரும் மருதவனப்புராணத் திருவிருத்தங்களானும்,மகாலிங்கர் என்னும் திருநாமமேயன்றி ஏகநாயகரென்னும்திருநாமமும் அத்தலத்தில் வகித்திருக்கின்றனரென்பதை-“தேறுபுகழிடைமருதிலுறையேக நாயகன்றன் செய்ய தாளு மூறுமது மலர்க்கூந்தற் பசியமயி லுறையிடமு மோங்கு கங்கை - யாறிலகு சடைமுடியு மைம்முகமு நாற்றோளு மணிமுக்கண்ணுங்-கூறுதிற லிருமானு மொருமழுவு மனவரதங் குறித்து வாழ்வாம்.” எனஷை மருதவனப் புராணத்தில் வரும் திருவிருத்தத்தானும் தெளிக. (உ)

ஏற்றபூம் பெட்டியி னிட்டுக் கட்டுறத்
தேற்றமா முத்திரைச் சின்னஞ் சேர்த்தினா
கோற்றொடி யன்னைகைக் கொடுத்துன் காந்தனுக்
காற்றலீ தளித்தியென் றகன்று போயினான்.

(இ-ள்.) மருதவாணர் அதன்பின் அவ்வூசியையும்சரட்டையும் தகுதியமைந்த அழகிய பெட்டியில் வைத்துப் பிணிப்பமையுமாறு தெளிவாகிய முத்திரை என்னும் அடையாளத்தையும் பொருத்தினவராய் அழகிய வளையலணிந்த தமது தாயார்வசமளித்து, உமது கணவனுக்கு இதுதான் வலுவுடையது,ஆதலால் இதனைக் கொடுப்பீரென்று நீங்கிப்போயினர்.—எ-று.

முன் பட்டினற் சுற்றிய அம்மூட்டையை வெறுமனே கையிற்றந்தால்
யாவரும் பிரித்துப்பார்க்கும்படி நேருமெனத் திருவுளத்தெண்ணி, திருவெண்
காட்டடிகணீங்க ஏனையோர் பிரித்துப்பாராவண்ணம் அதனை ஓர்பெட்டியினுள்
வைத்து மேல்மூடி முத்திரைசெய்தாரென விளக்குவான், "எற்றபூம் பெட்டியி
னிட்டுக்கட்டுறத் - தேற்றமா முத்திரைச் சின்னஞ் சேர்த்தினன். "என்றும்,
திருவெண்காட்டடிகட்கு இவ்வூசியினலும் சாட்டினலுமே மெய்ஞ்ஞானோதய
மாகப்போகின்றமையின் உன் காந்தனுக்கு ஆற்றலீது என்றும் அவ்வாறு
ஞானோதயம் பிறப்பித்தற்காகவே தாமெழுந்தருளிய தாகலின், அக்காரியம்
நிறைவேறியவுடனே தாம் நீங்கினரென்பார், "அகன்றுபோயினன், "என்றும்.
கூறினர். இவ்வூசியினலும் சாட்டினலுமே மெய்ஞ்ஞானோதயமாகுமோவெனின்
அற்றன்று, மருதவாணப்பெருந்தகையார் இத்தனைகாலமாக இடைவிடாது இத்
திருவெண்காட்டடிகளுடன் வசித்திருந்ததால், அவருடைய நோக்கம் பரிசம்பா
வனை வாக்கு என்னும் இவ்வற்றால் நாளுக்குநாள் பக்குவப்பட்டு இருவினைநீக்
கம் மும்மலபரிபாகம் நாற்கரணசுத்தம் ஐம்புலனின்மை அறுவகைக்குற்றநாசம்
என்னும்இவைகளைப் படிப்படியா யடைந்துவந்தாராகலின்,இவ்வூசியையும் சாட்
டையும் கண்டவுடனே மெய்ஞ்ஞானோதயமாதற்குப் பருவம்வாய்த்ததென்றறிக.
ஆசாரியருடையநோக்கம் பரிசம்பாவனை வாக்குஎன்னும்நான்கினலாவதே ட்சு
தீட்சை எனவும் பரிசதீட்சை எனவும் பாவனதீட்சை எனவும் வாசகதீட்சை
எனவும் சதுர்வித தீட்சைகளாகக்கூறுவர் இவையே, நோக்கம் பரிசம் பாவனை
வாக்குநூல் யோகம் என ஆறாகக் கூறுவதுமுண்டு. அவ்வாறனுள் யோகத்தைப்
பாவனையுள் ளடக்கியும் நூலை வாக்கினு ளடக்கியும் நாலாகக்கொண்டாமென்க.
இவ்வாறுகொள்ளல் நான் முறைமை யென்பதையும் ஆறு தீக்கைகளுண்டென்
பதையும், "தேட்டந் திரண்டதிருமேனி யுட்புறம்பாய்க் - காட்டு மளவே கரை
புரண்டு - கேட்ட - வதிபக்கு வத்தார்க் ககம்புரமென் றாறு - விதிவைத்த தீக்
கையாமெண் ,, எனவும், "பரிசித்துஞ் சிந்தித்தும் பார்த்து மலமாயைக் - கரு
மத்தை யெல்லாங் கழற்றிச் - சரிதாதி - வாதனையாம் போதமயக்கத்தை வாக்
காலே-போதைசெய்துபோக்கிவிடப் போம்." எனவும் வரும் ஒழிவிலொடுக்கத்
திருவெண் பாக்களானு முணர்க. இவை நான்கனுள் திருநோக்கம் பாவனை
என்னும் இவ்விரண்டும் அகத்தீட்சை எனவும் பரிசம், வாக்கு என்னும் இவ்
விரண்டும் புறதீட்சை எனவும் பெயர் பெறும். இவற்றுள் பறவை தன் முட்
டையைச் செட்டையாற் பரிசித்தல்போன்று மாணாக்கனைக் கரசரணங்களாற்
பரிசித்தற் பரிசதீட்சையென்றும், ஆமைகரைக்கணிருந்த முட்டையைத் தன்
மனதிற் பாவித்தல்போல மாணாக்கனைத் தமதருளுருவாகப் பாவித்தால் பாவன
தீட்சை யென்றும், மீன் தனது சினையைப் பார்த்தல்போற் றமது மாணாக்க
னைக் கிருபாநோக்கத்தாற் பார்ப்பது சட்சு தீட்சையென்றும் கூறுவதுமுண்டு.
இவற்றை, "மூவகையா ருயிர்வர்க்க மலத்தார் கன்மமூல மலத்தார் மூன்று
முடையாரன்றே-ஈவகமா மெனவுருவாய்வந்து நாதன்றிருநோக்காற் பரிசத்தாற்
றிகழும் வாக்காற் - பாவனையான் மிகுநூலால் யோகப் பண்பாற் பரவிவருமவுத்

திரியாற் பாசநாச - மேவவரு ளுதவுமவுத் திரியிரண்டு திறனும் வியன் கிரியை ஞானமென விளம்பு மாறே" என வரும் சிவப்பிரகாசத் திருவிருத்தத்தானுந் தெளிக. (௫)

பண்டுபோ னிருந்தனன் பரம நாயகன்
மண்டுகா தலின்வரு மதிவெண் காடரும்
புண்டரீ கத்திருப் பொருந்து மாளிகை
யண்டனைக் காணவென் றணைந்த போதினில்.

(இ - ள்.) பரமநாயகராகிய மருதவாணர் அங்குநின்றும் நீங்கிச் சிவலிங்கத்திற் பழையபடி கலந்திருந்தருளினர். விசேடித்த விருப்பத்தினாலே வருகின்ற அறிவின் மேம்பாடுற்ற திருவெண்காட்டடிகளும், தாமரைமலரில் வீற்றிருக்கும் இலக்குமி வசித்திருக்கின்ற தமது மனைக்கண், கடவுளாகிய மருதவாணரைப் பார்க்க வேண்டுமென்னும் எண்ணத்துடனே சேர்ந்தபொழுது—எ-று.

இதுகாறும் திருவெண்காட்டடிகளின் தபோபலத்தினால் ஒரு நாமம் ஓருருவம் என்னும் ஒன்று மில்லாராகிய சிவபெருமான் தமது அருவுருவத்திருமேனியினின்றும் பிரிந்து மானிடவுருவந்தாங்கி மருதவாணரென்னுந் திருநாமத்துடனெழுந்தருளியிருந்து அத்திருவெண்காட்டடிகளைத் தமதடியாராக்கிக்கொண்டு மீண்டும் பழையபடியே அருவுருவத் திருமேனிகொண்டன ரென்று விளங்குவான், "பண்டுபோ னிருந்தனன் பரம நாயகன்." என்றும், அறிவின் மேம்பாடுற்ற அறிஞர்க்கன்றி ஏனையோர்க்குச்சிவபிரானிடத்துவிசேடித்த அன்புதியாதாகலின், "மண்டுகாதலின்வருமதிவெண்காடர்." என்றும், அக்காவிரிப்பூம்பட்டினத்தின்கண் திருவெண்காட்டடிகளினு மேம்பட்ட திருவுடையோரின்மையாலும், அத்தகைய திருவாய்த்தவர்களின் மாளிகையிலேயே சதா குடிகொண்டு விருப்புடன் வீற்றிருப்பது திருமகட் கியல்பாகலானும், "புண்டரீகத்திருப்பொருந்துமாளிகை." என்றும்,மருதவாணராகிய சிவபெருமான் சகலாண்டங்கட்கும் அதிபனாகலின், "அண்டன்." என்றுங்கூறினர். சிவபிரான் ஒரு நாமம் ஓருருவம் ஒன்றுமில்லாரென்பதை, "திருமாலும் பன்றியாய்ச்சென் றுணராத் திருவடியை - யுருவா மறியவோ ரந்தணனா யாண்டுகொண்டா-னொருநாமமோருருவ மொன்றுமில்லாற் காயிரந்-திருநாமம் பாடிநாந் தெள்ளேணங் கொட்டாமோ." என்றும், அறிவின் மேம்பட்ட அறிஞர்க்கே சிவபிரானிடத் தன்புதிக்கும் என்பதை, "அரிக்கும் பிரமற்கு மல்லாத தேவர்கட்குந் - தெரிக்கும் படித்தன்றி நின்றசிவம் வந்துநம்மை - யுருக்கும் பணிகொள்ளு மென்பது கேட் டுலகமெல்லாஞ் - சிரிக்குந் திறம்பாடித் தெள்ளேணங் கொட்டாமோ. என்றும்,சிவபெருமான் அண்டங்கட் கதிபனென்பதை,"நஞ்சமர்கண்டத்தனண்டத்தவர்நாதன்-மஞ்சுதோய் மாட மணியுத்தர கோசமங்கை-யஞ்சொலா டன்னோடுங் கூடி யடியவர்க - ணெஞ்சுளே நின்றமுத மூறிக்கருணைசெய்து-துஞ்

சல் பிறப்பறுப்பான் தூயபுகழ் பாடிப் - புஞ்சமார் வெள்வளையீர் பொன்னூச லாடாமோ." என்றும் வரும் மணிவாசகப்பிரான் மலர்வாக்குகளானு மறிக.

ஞானசற் குருவினி னயந்த நாயகன்
போனதிக் கறிவுறுப் புனித ரானவர்
வானனைக் கண்டிலார் வனச வாள்விழிப்
பானல்வெண் டாளங்கள் பரப்பி னாரரோ.

(இ.- ள்.) ஞானசற்குருவைப்போன்று திருவெண்காட்டடிகளிடத்து விருப்பமுற்ற தலைவராகிய மருதவாணர், சென்ற திசையை யுணராதவராகிய பரிசுத்தரான திருவெண்காட்டடிகள் தேவர்பெருமானாகிய மருதவாணரைக்காணாதவராய் தாமரைபோன்ற ஒளியுள்ள நேத்திரங்களினின்றும் சிறந்த வெள்ளிய முத்துக்களையொத்த நீர்த்துளிகளைச் சிந்தினார்.—எ - று.

மருதவாணர் திருவெண்காட்டடிகளிடத்து அடிமையாக வந்து அவ்வடிகளால் மகன்மைகொள்ளப்பட்டுத் தற்காலம் ஞானசாரியராக விளங்கினராகலின், "ஞானசற் குருவினி னயந்த நாயகன்" என்றும் திருவெண்காட்டடிகள்தூய்மையெவற்றினும மேம்பட்டவாய்மையென்னும் அகத்தூய்மையமையப்பெற்றாராகலின், "புனிதர்" என்றும் சிவபெருமான் தேவர்களெவர்க்கு மறிதற்கரியராய்த் தேவாதிபனென யாவரும் வழுத்தற்குரியாராகலின், "வானன்," "என்றும், மருதவாணர் சென்ற திசையுணராதவராய் அவரைக் காணப்பெறாத திருவெண்காட்டடிகள் பிரிவாற்றாமையால் ஆராமை மேற்கொண்டவராகிக் கண்ணீர்விட்டனரென்பார், "வனசவாள்விழிப்பா னல்வெண்டாளங்கள்பரப்பினார். என்றும் கூறினர். தூய்மை யெவற்றினும் மேம்பட்டது அகத்தூய்மை யென்பதையும், அத்தூய்மை வாய்மையா னமையப்படுமென்பதையும், "புறந்தூய்மை நீரானமையு மகந்தூய்மை-வாய்மையாற் காணப்படும். "என்னும் திருக்குறளானும், சிவபெருமான் தேவாதிபரென யாவரும் வழுத்தற்குரியாரென்பதை," தேவர்கோ வறியாத தேவதேவன் செழும்பொழில்கள் பயந்துகாத் தழிக்கு மற்றை-மூவர்கோ னாய்நின்ற முதல்வன் மூர்த்தி மூதாதை மாதாளும் பாகத்தெந்தை யாவர்கோ னென்னையும்வந் தாண்டுகொண்டான் யாமார்க்குங் குடியல்லோம் யாது மஞ்சோ-மேவினோ மவனடியா ரடியா ரோடு மேன்மேலுங் குடைந்தாடி யாடுவோமே.' என்னும் மணிவாசகப்பிரான் மலர்வாக்கானு மறிக. (ரு)

திருவினா ரெங்கணுந் துளங்கிக் காண்கிலார்
வெருவியே யவ்வயின் விரைந்து தாயரு
மருவினார் பெரியவர் மணிகொள் பெட்டியொன்
றருளினா ருமக்கென வருளிப் போயினார்.

(இ-ள்.) திருவெண்காட்டடிகள் எவ்விடத்தும் திரிந்து தேடினார் மருதவாணரைக் கண்டாரில்லை. உடனே அம் மருதவாணரின் தாயார் அச்சமுற்

றவராய்த் திருவெண்காட்டிகளிருக்குமிடத்து அதிவிரைவாகச் சேர்ந்தவதாய், பெரியவராகிய மருதவாணர் இரத்தினங்களிழைத்த ஓர் பெட்டி உமக்காகக் கொடுத்துவிட்டுப் போயினரென் றுரைத்து அப்பெட்டியைக் கொடுத்துச்சென்றனர்.—எ - று.

மருதவாணரைத் திருவெண்காட்டடிகள் பலவிடங்களினும் தேடிக் காணாமல் வருந்தியதையுணர்ந்து அவ்வடிகளின் மனைவியார், நமது தலைவர் இதுகாறும் மருதவாணரைத்தேடியுழலும்படி வாளாவிருந்தோமே, மருதவாணர் நம்மிடத்தீந்த இப்பெட்டியை அப்போதே நமது தலைவரிடம் கொடுத்திருந்தால் இவ்வளவு பிரயாசையுடன் மருதவாணரைத்தேடாது, அதிலுள்ள விஷயத்தால் அமைதிபெற்றிருப்பரே இத்தனைகாலம் அவர் வருந்தும்படிபெட்டியைத்தராதிருந்தது பெரும்பிழையாமே என்று இவ்வாறு பற்பலவாக வெண்ணி. அதிக அச்சத்துடன் மிக்க வேகமாய்ப்பட்டினத்தடிகளிடம் வந்தனரென்று விளக்குவான், "வெருவியே யவ்வயினவிரைந்து தாயருமருவினர்," என்றும் அப்பெட்டியை ஈந்து, அவரிருக்கும் வெளியிடத்தில் தாமிருக்க அச்சமுற்றவராய் அங்குநின்றும் நீங்கினரென்பார், அருளிப்போயினர். என்றும் கூறினர். (சு)

எனமொழி யேழையப் பேழை யீந்தனண்
மனமொழி மெய்களால் வணங்கு மன்பருங்
கனைகெழு சிலம்பணி கமல னீந்ததைத்
துனைவினல் விழித்துறச் சோதித் தாரரோ.

(இ - ள்.) என்று கூறிய அவர் மனைவியார் அப்பெட்டியைத் தந்தனர். மனம் வாக்கு காயமென்னும் திரிகரணங்களும் ஒருப்பாடுடையவராய் மருதவாணரை வழிபடுகின்ற மெய்யன்பராகிய திருவெண்காட்டடிகளும், ஒலிமேம்பாடுற்ற சிலம்பைத்தரித்த தாமரைமலர்போலும் திருவடிகளையுடைய மருதவாணர் தந்தருளியஅப்பெட்டியை, அதிவிரைவிலே கண்களைத்திறந்து பொருந்தும்படி ஆராய்ந்தனர்.—எ - று.

திரிகரணசுத்தியுடையோர் செய்யும் வழிபாடே சிவபிரானுக்கேற்புடைத்தென்பதை விளக்குவான், "மனமொழி மெய்களால் வணங்குமன்பரும்" என்றும் வேதமே சிலம்பாகப் பாதங்களி லணிந்தவர் சிவபிரானாகலினும், அவரே இப்போது மருதவாணராய் வந்திருத்தலினும் "கனைகெழுசிலம்பணி கமலன்." என்றும், திருவெண்காட்டடிகள் மருதவாணரைக் காணாமையாற் கலக்கமுற்றுக் கண்களை மூடி விழிநீர்சோர நின்றாராகலின், அவர் மனைவியார் மருதவாணரீந்த பெட்டி இதுவென்று தந்தமாத்திரத்தில் அக்கலக்கம் தெளிந்து கண்களை விழித்து அப்பெட்டியைச் சோதித்தாரென்பார், மதுனைவினல் விழித்துறச் சோதித்தார்," என்றும் கூறினர். திரிகரணசுத்தியுடையாரியற்றும் வழிபாடே சிவபிரானுக் கேற்புடைத் தென்பதையும், அவ் வழிபாட்டிற்காகவே இச் சரீரம் நமக்குக் கிடைத்த தென்பதையும், தியானித்தல்வாழ்த்

தல் வணங்கல் என்னும் இம் மூவித வழிபாடுகட்காகவே மூக்கரணங்களமைந்த வென்பதையும் கையொன்று செய்ய விழியொன்று நாடக்கருத் தொன்றெண்ணப் - பொய்யொன்று வஞ்சக நாவொன்று பேசப் புலால் கமழு-மெய்யொன்று சாரச் செவியொன்று கேட்க விரும்புமியான்-செய்கின்ற பூசையெவ்வாறுகொள் வாய்வினை தீர்த்தவனே" எனவும், "கண்ணுண்டு காணக் கருத்துண்டு நோக்கக் கசிந்துருகிப் - பண்ணுண்டு பாடச் செவியுண்டு கேட்கப்பல் பச்சிலையா - லெண்ணுண்டு சாத்த வெதிர்நிற்க வீச னிருக்கையிலே - மண்ணுண்டு போகுதை யோகெடு வீரிந்த மானிடமே," எனவும் வரும்திருவெண்காட்டடிகள் திருவாக்கானும், "நெக்கு நெக்கு நினைபவர் நெஞ்சுளே-புக்கு நிற்கும் பொன்னார்சடைப் புண்ணியன்-பொக்க மிக்கவர் பூவுநீருங் கண்டு - நக்கு நிற்பரவர்தமை நாணியே." எனவும் வாழ்த்தவாயு நினைக்க மடநெஞ்சுந்-தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனைச் - சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே - வீழ்த்த வாவினை யேனெடுங் காலமே" எனவும் வரும் ஆளுடையவாசுக ளருள்வாக்கானும் வீடு கூட்டுவான் குறித்ததினிமித்தமா விமலனீ தவினம்பாற், கூடு மாயையையெனதியா னெனவெணிக் கொள்வதென் பயமாசை, காடுபோழ்தவைசுழுத்தியிற் புரந்தவ னெவனவ னவாதி, யூடு மூழ்வழி புரப்பனென் றுள்ளமே யுடல்கைவிட்டிருப்பாயே" என்னும்சாந்தலிங்கசுவாமிகள்திருவாக்கானும் சிவபிரானுக்கு வேதமே சிலம்பென்பதை "எழுதரிய மறைச்சிலம்பு கிடந்துபுறத் தலம்ப வன்பரிதய மென்னுஞ் செழுமலரோ டையின்மலர்ந்து சிவானந்தத் தேன்றதும்பு தெய்வக் கஞ்சத் தொழுதகுசிற் றடிப்பெரிய விரல்சுவைத்து மைக்கணீர் துளும்ப வாய்விட் டழுதணையா டையிற்கிடந்தா னனைத்துயிரு மீன்றுகாத் தழிக்கு மப்பன்" என்னும் திருவிளையாடற்புராணத் திருவிருத்தத் தானுந் தெளிக. (எ)

முத்திரை கவிழவிட் டவிழ்ந்து முட்டறச்
சித்திர சேத்திரச் சுற்றுத் தீர்த்தபின்
குத்திர மொன்றறக் கொடுத்த தோர்பொரு
ளத்திர வாக்கினு லறியப் பண்டமே.

(இ-ள்.) அப்பெட்டியிற் பொறித்திருந்த முத்திரை கீழேவிழும்படி திறந்து, முழுமையும் அவிழும்படி சித்திரமமைந்த பட்டுவஸ்திரச் சுற்றை அவிழ்த்த பிறகு வஞ்சகமொன்றுமில்லாமல் மருதவாணரீந்தருளிய ஒப்பற்ற வஸ்துவானது மேம்பாடுற்றதாகிய உண்மையான வாசகதீட்சையினு லுணரப்படுவதான சிறந்த பொருளாயிருந்தது. —எ - று.

காதற்ற ஊசியையும் சரட்டையும் பட்டு வஸ்திரத்திற் சுற்றி, இரத்தினங்களிழைத்த அப்பெட்டியுள் வைத்து முத்திரையிட் டிருந்தாரக்லின், அப்பெட்டியைத் திறக்கையில் திருவெண்காட்டடிகள் அம்முத்திரையைக் கீழே தள்ளிவிட்டுச்சுற்றியிருந்த பட்டு வஸ்திரத்தை அவிழ்த்தாரென்பார், "முத்திரை கவிழவிட் டவிழ்த்து முட்டறச் - சித்திர சேத்திரச் சுற்றுத்

தீர்ந்தபின்." என்றும், அதனுள்ளிருந்த காதற்ற ஊசியும் சரடும் தமக்கு மருத வாண ரருளிய உண்மை வாசகத்தாற் கிடைக்கக்கூடிய மெய்ப்பயனை விளக்கத் தக்க சிறந்த பொருளா யிருந்ததென்பார், "கொடுத்த தோர்பொரு ளாத்திரவாக் கிடு லறியப்பண்டம்." என்றும் கூறினர். (அ)

ஒடிவுறப் புரைவிழுந் தூறிக் கூர்முறிந்
தடிபடு காதறை யாகிச் செய்கையாய்
கொடிதர முறுக்குறு நாலுங் கோத்துள
வடிவினூசியின் வாசி நோக்கினர்.

(இ - ள்.) திருவெண்காட்டடிகள் வளைவுற்றுப் பிளப்புண்டாய் நாட்பட்டுக் கூர்மையற்று நசுங்குண்டு காதற்றதாகி, செயற்கையாய்க் கூறுதற்கு முறுக்கமையாத சரட்டையுங் கோக்கப்பெற்றுள்ள உருவத்தாலாகிய அவ்வூசியின்மேம் பாட்டைப் பார்த்தனர்.—எ-று.

அவ்வூசி ஏனைய ஊசிகளைப்போன்று பளபளப்பாய் வளைவின்றிக் கூர்மையமைந்து காதுடைத்தாயின்மையினாலும், அதிற் கோத்திருக்கும் சரடும் செயற்கையா னமைந்ததென் றுரைத்தற் கேலாததாய் முறுக்கேறாத இழைகளாயிருத்தலினாலும், அவ்விரண்டையும் அதிசயமாகப் பார்த்தனரென்பார், "ஊசியின் வாசி நோக்கினர்." என்றார். (கூ)

நோக்கினர் நீக்கற நெடிது நோக்கினர்
பூக்கமழ் சடையினர் பொற்பு நோக்கினர்
பாக்கிய மிதுவெனப் பரிந்து நோக்கினர்
தேக்கிய வுலகுவிண் டேற நோக்கினர்.

(இ - ள்.) அவ்வூசியைப் பார்த்தவராகிய திருவெண்காட்டடிகள் அதைப் பார்ப்பதினின்றும் நீங்காதவராய் நீடித்தகாலம் பார்த்தனர். கொன்றைமலர் பரிமளிக்கின்ற சடையை யுடையவராகிய சிவபெருமான் திருவருளின் அழகைப்பார்த்தனர். நமக்கு வேண்டிய முத்திச்செல்வம் இதுவேயென்று விருப்பமுற்றும் பார்த்தனர். நிறைந்துள்ள உலகத்தினரும் தேவர்களும் இவ் வுண்மையைத் தெளியும்படி பார்த்தனர்.—எ-று.

அவ்வூசியும் அதிற் கோத்துள்ள சரடும் இன்ன விஷயத்தை விளக்குவதென்று விளங்காமையின், அவ் விரண்டையும் பார்க்கத் தொடங்கின திருவெண்காட்டடிகள் விடாமற் பார்த்தனரென்பார், "நீக்கற நெடிது நோக்கினர்." என்றும், சிவபிரான் தமது திருவருளை இவற்றால் விளக்கினரெனக் கருதியதால், "பூக்கமழ் சடையினர் பொற்பு நோக்கினர்" என்றும், அதன்பின் ஒருவாறு ஊசி சரடு என்னும் இரண்டின் பயனும் விளங்கினமையின் உவகையுற்றவராய், "பாக்கிய மிதுவெனப் பரிந்து நோக்கினர்." என்றும் இவ் விரண்டால் விளையும் மெய்ப்பய னிதுவென்பதைத் தாமுணர்ந்தவாறே, உலகத்துள்ள ஏனையரும், தேவலோகத் துள்ளாரும் தெளியவேண்டும் என்னும் கருத்துடன்

நோக்கின ரென்பார், "தேக்கிய வுலகு விண்டேற நோக்கினார்." என்றும் கூறினர். (௧௦)

காதினூல் போதனங் காதிற் கல்விநூல்
போதலைக் குறிப்பினாற் புகன்ற பொற்புமா
மேதகு முலகெலாம் விடுங்கு றிப்புமாஞ்
சேதமிப் பாசநம் பாசச் சேதமாம்.

(இ - ள்.) இவ்வூசியின் காதிலே நூல் செல்லுதல், நமது செவியிற் கல்வியின் மேம்பட்ட நூல்கள் செல்லுதலைக் குறிப்பாகக் கூறிய உவமையுமாகும். மேம்பாடுற்ற உலகப்பற்றுக்களனைத்தும் விடுதற்குரிய குறிப்புமாகும். பழுதீற்ற பாசமென்னும் இச் சரடு நமது பாசத்தின் சேதத்தைக் குறிப்பித்ததுமாகும்.—எ - று.

இவ்வூசியின் காதில் எவ்வாறு நூல் செல்லினும் பிணிப்புற் றிருக்கவில்லையோ அதுபோல நமது செவிகளில் ஞானநூல் செல்லினும் பிணிப்புற் றிருக்கவில்லை என்பதைக் குறிப்பால் விளக்குவதற்காக இவ் வூசியையும் நூலையுந் தந்தனரென்பார், "காதினூல் போதனங் காதிற் கல்விநூல் போதலைக் குறிப்பினாற் புகன்ற பொற்புமாம்." என்றும், அன்றியும், அந்நூல் ஊசியின் காதிற் செல்லினும் எவ்வாறு பந்தப்படவில்லையோ அதுபோல நீ உலக விவகாரங்களிற் செல்லினும் பந்தமற் றிருப்பா யென்பதையும் விளக்குவ தென்பார், "மேதகு முலகெலாம் விடுங் குறிப்புமாம்" என்றும், அன்றியும், இவ் விழைகள் எவ்வாறு முறுக்கேறுதலா லொன்றுபடப் புணர்ந்து பந்தமுறாது தனித்தனி பிரிந்திருக்கின்றதோ அதுபோல உனது பாசங்களும் இனித் தனித்தனி பிரிந்துபோமென்று குறிப்பால் விளங்குகின்றதென்பார், "சேத மிப்பாச நம்பாசச் சேதமாம்." என்றும் கூறினரென்றார். சிவபிரான் புகழ்கேளாச் செவிகள் பயனிலவாகலின், நம்காதில் கல்விநூல் போதலைக் காதற்ற வூசியிற் சரடுசெல்லுவதற் குவமித்தனரென்றார். இதனை, "ஆளா காராளா னாரை யடைந்துய்யார்—மீளா வாட்செய்து மெய்ம்மையு ணிற்கிலார்—தோளா சுரையோ தொழும்பர் செவி—வாளா மாய்ந்து மண்ணாகிக் கழிவரே." என்னும் ஆளுடைய அரசுகளருள்வாக்கானும், உலக விவகாரங்களுட னிருக்கினும் பந்தமற்றிருத்தல் பெரியோரியல்பென்பதை, "தருவ தீமையு நன்மையு முழுதுந் தழையுயர் கழைமேனின்—றுரைக ளாதிசெய் கூத்தரிற் பிறனெனச் சொருமக டவனேவல்—புரித றன்னினம் பொறிகளாற் பற்றினும் புகனிரா சையையேயுற்—றிரவி னும்பக லினும்விடே னெஞ்சமே யின்பவீடெளிதாமே." என்னும் சாந்தலிங்கசுவாமிகள் திருவாக்கானும் உணர்க. (௧௧)

ஊசிகாந் தச்சிலை யுற்றுப் பற்றல்போ
லாசிலாப் பரஞான மாற்றலா
மாசிலோ மென்றுகொண் டலங்க லோங்கிய
மாசினா லங்குல வடிவம் போயினார்.

(இ - ள்) ஊசியானது காந்தக்கல்லைப் பொருந்திப் பிடிப்பது போன்று அழிவற்றதாகிய மெய்ஞ்ஞான வல்லபத்தால், நாம் குற்ற மற்றோமென்று எண்ணி, ஒழிவானது விசேடித்த மறையினால் அழகிய குலாசாரவுருவம் நீங்கினார்.—எ - று.

திருவெண்காட்டடிகள் அக் காந்தத்தூசியும் சமமாகிய இரண்டு வஸ்துக்களை விடாது நோக்கியதால், ஊசியானது காந்தக்கல்லைப் பிடிப்பதுபோன்று, உறுதியாகத் தம்மைப் பற்றிக்கொண்டு மெய்ஞ்ஞான வல்லபத்தாலே, இனி நாம் குற்றங்களினின்றும் விடுபட்டோமெனக் கருதி, அறுதியா மொழியின் மேம்பாட்டாற் குலாசார தருமங்களினின்றும் நீங்கினவராயினர் என்பது கருத்து. மெய்ஞ்ஞான முதிக்கப்பெற்றோர் குலாசார முதலிய தருமங்களை அறவே விட்டொழிப்பாரென்பதை, "சமயா சாரசங் கற்ப விகற்பமு-மமையாதாங்குல வாசார மானது - மிமையா தாரும் விடாத வில் வாழ்க்கையு - மமையார் தோளி விடுத்த லாசாரமே" என்னும் தேவிகாலோத்தரத்தானும் தெளிக. (கஉ)

இச்சைஞா னந்தொழி லிவைக ளீசனு
ரிச்சைஞா னந்தொழி லிவற்று ளாக்கினு
ரச்சமில் பரையுட னாக வாருயிர்க்
கச்சனு மவனிடை யடைந்தொன் றாயினார்.

(இ - ள்.) திருவெண்காட்டடிகள் தமது இச்சை ஞானம் கிரியை என்னும் இம் மூன்றையும் சிவபெருமானுடைய இச்சை ஞானம் கிரியை என்னும் இம் மூன்றினுள்ளுஞ் சேர்த்தார். அச்சமற்ற பராசத்தியுடனே உலகெங்கும் நிறைந்த சர்வான்மாக்கட்கும் பரமான்மாவாகிய அப்பெருமானுடன் கலந்து ஒன்றாக விளங்கினார்.—எ - று.

தனது இச்சை ஞானம் கிரியை என்னும் மூன்றையும் தன்னதாகக் கருதி, யான் செய்தேன் பிறர் செய்தார் என்னது யான் என்னும் இச்சீவபோதச் செருக்குறாது யாவும் சிவன் செயலென்னும் பதிகாரணம் வாய்க்கப் பெற்றோர்க்கு, அவ் விச்சை ஞானம் கிரியை என்னும் மூன்றாலும் விளையும் சுகதுக்கங்க ளிலவாகலின், திருவெண்காட்டடிகள் அத்தகைய சுக துக்கங்கள் தமக் கிலவாகு நிமித்தம் தமது இச்சை ஞானம் கிரியை என்னும் மூன்றையும் சிவபெருமானுடைய இச்சை ஞானம் கிரியையென்னும் மூன்றுட் சேர்த்தனரென்பார், "இச்சை ஞானந் தொழி லிவைக ளீசனு ரிச்சை ஞானந் தொழிலிவைக்கு ளாக்கினார்." என்றும், அவ்வாறு இச்சை ஞானம் கிரியை என்னும் மூன்றையும் தமதல்லவென்று விடுத்தமையின் தமக்கென ஓராசையின்றிச் சிவத்திற் கலந்தனரென்பார், "பரையுடனாக வாருயிர்க் கச்சனு மவனிடை யடைந்தொன் றாயினார்." என்றும் கூறினார். இவ்வாறு சீவபோதச் செருக்கறார்க்குச் சுகோதய முண்டாகா தென்பதை, "யான் செய்தேன் பிறர் செய்தா ரென்னதியா னென்னு மிக்கோணை ஞானவெரி யால்வெதுப்பி நிமிர்த்துத்-தான் செவ்

வே நின்றிடவத் தத்துவன்ரு னேரே தனையளித்து முன்னிற்கும் வினையெர் ளித்திட் டோம்-நான்செய்தே னெனுமவர்க்குத் தானங் கின்றி நண்ணுவிக்கும் போகத்தைப் பண்ணுவிக்குங் கன்ம - மூன்செய்யா ஞானந்தா னுதிப்பி னல்லா லொருவருக்கும் யானெனாதிங் கொழியா தன்றே." எனவும், இவ்வாறு செய்வோர் சிவனிற் கலந்தொன்ருதலின் இவர் செயல்களெல்லாம் சிவன் செயல்களாகவே முடியுமென்பதை, "இவனுலகி லிதமகிதஞ் செய்தவெல்லா மிதமகித் மிவனுக்குச் செய்தார்பா லிசையு - மவனிவனுய் நின்றமுறை யேக னுகியரன் பணியி னின்றிடவு மகலுங் குற்றஞ் - சிவனுமிவன் செய்தியெல்லா மென்செய்தி யென்றுஞ் செய்ததெனக் கிவனுக்குஞ் செய்த தென்றும்-பவமகல வுடனுகிநின்று கொள்வன் பரிவாற் பாதகத்தைச் செய்திடினும் பணியாக்கி விடுமே." எனவும் வரும் சிவஞான சித்தித் திருவிருத்தங்களானு மறிக. (௧௬)

மறைபெறு சிவமுளே மறைந்து நின்றபின்
குறையற விளங்கிய கோலம் போலுமாத்
திறமுறு தாமுமச் சிவத்துட் புக்கொளித்
தறிவுரு விளங்கினு ரதீத வின்பமே.

(இ - ள்.) வேதங்களாற் றுதிக்கப்பெற்ற சிவமானது தமக் குள்ளே ஒளித்து நின்றபிறகு, பூரணமாய்த் திகழ்ந்த மாதிரியை யொத்து, மிகக மெய்ஞ்ஞான வல்லபமுற்ற தாமும் அச் சிவத்திற்குள்ளே புகுந்து மறைந்து தெரிந்துகொள்ளாத வண்ணம் நிரதிசயாநந்த இன்ப முடையவராய் விளங்கினர்.— எ-று,

தமக்குட் சிவம் மறைந்திருந்த காலத்தில் எவ்வாறு பூரணமாகச் சிவ சொரூபமாகவே விளங்கினரோ அதுபோன்று, தாம் அச் சிவத்துள் மறைந்த இப்போது பூரணமாகச் சிவ சொரூபமாகவே விளங்கி, இவ்வாறு விளங்குவதை ஒருவராலு முணரப்படாதவராய் நிரதிசயானந்த இன்ப வடிவா யிருந்தன ரென்றபடி. இவ் வனுபவத்தையன்ரே, "உடையா ளுன்ற னடுவிருக்கு முடையா ளடுவு ணீயிருத்தி - யடியே னடுவு ளிருவீரு மிருப்ப தானு லடியேனுன் - னடியார் நடுவு ளிருக்கு மருளைப் புரியாய் பொன்னம்பலத்தெம் - முடியா முதலே யென்கருத்து முடியும் வண்ண முன்னின்றே." என மணிவாசகப்பிரானும், "நானவனென் றெண்ணினர்க்கு நாடுமுள முண்டாத - ருனெனவொன் றின்றியே தானதுவாய் - நானெனவொன் - றில்லென்று தானே யெனுமவரைத் தன்னடிவைத் - தில்லென்று தானு மிறை." என மெய்கண்ட தேவநாயனுரும், "ஆதனமு மாதனியு மாய்நிறைந்து நின்றவனைச் - சேதனனைக் கொண்டே தெளிவுற்றுச் - சேதனனைச் - சேதனனி லேசெலுத்திச் சிற்பரத்த ராயிருப்ப - ரேதமறக் கண்டவர்க ளின்று" எனஉய்யவந்த தேவ நாயனுரும் திருவாய்மலர்ந் திருக்கின்றனர். இவ்வாறு கலத்தல் கண்ணொளியும் விளக்கொளியும் கலத்தலுக் கொப்பெனக் கூறுவர். தூல வொளியாகிய கண்ணொளியைச் சீவனுக்கும் சூக்கும வொளியாகிய விளக்

கொளியைச் சிவத்துக்கும் உவமையாக்குவர். இவ்விரண்டொளிகளும் அத்து விதமாய்க் கலந்து நிற்கும் நிலை உற்றுநோக்கவல்லார்க்குப் பிரித்தறிய வாராமை யின், கண்ணொளியாய் நோக்குங்காற் காணுந்தன்மையே விசேடித்து விளங்கு மல்லது விளக்கொளி விசேடித்து விளங்காமைபோன்று, சீவனாகவே நோக்கு வோர்க்கு எங்கும் சீவபோதமாகவே விளங்குமல்லது சிவபோதமாக விளங்கா. அவ்வாறே சிவமாகவே நோக்குவோர்க்கு எங்கும் சிவபோதமாகவே விளங்கு மல்லது சீவபோதமாக விளங்கா. ஆகலின் திருவெண்காட்டடிகள் சீவபோ தத்தை அறவே விட்டுச் சிவபோதமெய்தினராகலின், சீவபோதத்தா னிகழ் தற்குரிய சுகதுக்கானுபவங்கள் சற்றுமின்றி நிரதிசயானந்த மெய்தினரென் றறிக. (கச)

இன்பமா மதீதமே யிருக்கும் வள்ளலா
ரன்பிலா ருலகெலா மசத்துக்காட்சிவந்
தன்பினு லரனடி யமுத மாந்தினுர்
ரென்பரா லிவர்நல மியம்பொ ணாதரோ.

(இ-ள்.) இவ்வாறு அதீதவின்பமாகிய நிரதிசயானந்தத்திலிருக்கும் வள்ள லாராகிய திருவெண்காட்டடிகள், உலகமெல்லாம் அநித்தியமென்னும் காட்சி பிறந்து ஆசையற்றவராய், மெய்யன்பினாலே சிவபிரானது திருவடியென்னும் அமுதம்புசித்தனரென்று பெரியோர்கூறுவர். இத்திருவெண்காட்டடிகளுடைய நன்மை இன்னபடியென்று சொல்ல வேலாததாகும்—எ-று.

நிரதிசயானந்த வின்பமெய்தினோர்க்கு நித்தியப்பொருளாகிய சிவபிரான் திருவடியொன்றின்மேலல்லது ஏனைய அநித்தியமாயுள்ள உலகப் பொருள்க ளெவற்றினும் அன்புதியாதென்பதை புணர்த்துவான், "இன்பமா மதீதமே யிருக்கும் வள்ளலா - ரன்பிலா ருலகெலா மசத்துக் காட்சிவந் - தன்பினு லர னடி யமுத மாந்தினுர்." என்றனர். இதனை, "செயலெலா மறமாகச் செய்யுங் காலத் திகழ்வெலாம் பொய்யாகத் திகழுங் கால-மயலெலா முறவாகி யமையுங் கால மறிவெலாந் தினையறிய வினையுங் கால - மயலெலா மொழிந்துபர வசமாங் கால மனமெலாம் போன்பு மயமாங் கால - மியலெலாம் பிறப்பொழிய வெடுக் குங்கால மெங்கள் சிவஞானியரு ளிசையுங் காலம்." என்றும், இத்தகையோர் பெருமையை எவருமுரைக்க வேலாததாகு மென்பதை, "குன்று மறையுள் விபூதியென் றேசொலுங் கூற்றினுக்குப் - பொன்றுத செல்வ மெனப்பொருள் கூறும்வன் பூசுருந் - தன்று மரைமலர்க் கைக்நீறு சாற்றத் தவம்புரிவ - ரென்று லெவர்சிவ ஞானிதன் மேன்மை யிசைப்பவரே." என்றும் வரும் சிவப்பிரகாச சுவாமிகள் திருவாக்கானுந்தெளிக. (கரு)

எறிந்தனர் முறிந்தவூ சியினை யேந்தலார்
செறிந்தன சிறைமுறி தெளிந்த நீரெனப்
பிறிந்தன ரில்லறம் பெரிய நூற்படி
நிறைந்தனர் துறவற நெறிகொ ணீர்மையே.

(இ-ள்.) தலைவராகிய திருவெண்காட்டடிகள் அக்காதற்ற ஊசியை எறிந்துவிட்டவராய் நிறைவுற்றனவாகிக் கறைபுடைபட்டுத் தெளிந்தோடும் சலத்தைப்போன்று இல்லறத்தை விட்டுப் பிரிந்தனர். மேம்பாடுற்ற ஞானநூற்கிணங்கத் துறவறமார்க்கத்தைக்கொண்ட தன்மையினிறைவுற்றனர்.—எ-று.

ஞானநூலிற் கூறியுள்ள துறவற விலக்கணமெவையெனின், உயிர்ச்சார்பு பொருட்சார்பு என்னும் இருவகைச்சார்பாகிய புறப்பற்றென்றும், இடைப்பற்றாகிய உடற்பற்றென்றும், கரணங்களாகிய உட்பற்றென்றும் இவ்வாறு பற்றுக்கள் மூவகையாய் விளங்கும். இம்மூன்றனுள் காயத்துடன் காணத்தைச்சேர்த்து உட்பற்றென்றும், முன் சொன்னவாறே உயிர்ச்சார்பு பொருட்சார்பாகிய புறப்பற்றென்றும், இவ்விருவகையையும் விடுதலே உட்டுறவென்றும் புறத்துறவென்றும், இவ்விரண்டனுள் அகப்பற்றையேனும் புறப்பற்றையேனும் தனியாய் விடுதல் துறவன்றென்றும், அவ்விரண்டையும் அறவே விடுதல்தான் துறவென்றும், இவ்விரண்டையும் விடத்துணிந்தோர் முன்னர்ப் புறப்பற்றையே விடல்வேண்டுமென்றும், அவ்வாறு விடவே அகப்பற்றுத் தானும் நழுவுமென்றும் கூறியுள்ள இவைபோல்வனவேயாம். இவற்றை, "இருவகைச் சார்பாமொருபுறப் பற்று மிடையதாங் கடையுடற் பற்றும் - விரிகரணங்களாகுமுட் பற்று மெனத்திரி விதம்விளங்கிடுமித் - திரிவிதத் தினையுங் காத்திரங் கரணஞ் சேர்த்திடொன் றுக்கொடுட்பற்றும்-வருபுறப் பற்றுமெனவிரண்டாக மதிப்பரவ் வணந்துற வையுமே." என்றும், "இருவகைப் பற்றி லொருவனே ஞானியெனப்படிற் புறப்பற்றதேனு - மொருவுத லரு மைவணமப் பெயருக் குரியர்வே றொன்றுமில் கொடியுந் - தருமில மலர்கா யெனினகப் பற்றி றவர்புறப் பற்றையுந் தணவார் - மருவினு மஃதோ ரொருவர்வே றன்றீர் மலர்க்கொடி வாடுருவகையே." என்றும், "வேரறக் கொடிவா டுதலினுட் பற்றை விடுக்கின் மற்றைபபற்று நேரே - சோருத லியல்பா மதனையே முன்னர்த் தொலைக்க வேண்டுவதெனிற் கடுமுட்-சாருமோர் கொடியின் கிளையனைத்தையுமுன் றறித் தொழித் தலத்த னிடைபா - ரோர்தனி வேர்கொள் ளரிதரி தகப்பற் றொழித்தலும் புறப்பற்ற துறவே." என்றும் வரும் சாந்தலிங்கசுவாமிகள் திருவாக்கானுந் தெளிக. (கரு)

விடுத்தனர் வீடுகல் வீடு கூடுமா
றெடுத்தனர் துணிவுகூர் துறவை யேபெற
வடுத்தனு ரம்பல மதனிற் புக்குளார்
கடுத்துளா னம்பல கண்ணுறும் வண்ணமே.

(இ-ள்.) திருவெண்காட்டடிகள் உயர்வுற்ற வீடென்னும் முத்தியை யடையும்வண்ணம் தமது கிருகத்தை விட்டனர். மேம்பாடுற்ற துறவாச்சிர மத்தை யடையும்வண்ணம் துணிவுமேற்கொண்டனர். ஆனந்த நடனமுடைய சிவபி

ானது சிற்றம்பலத்தை யடையும்வண்ணம், தமதூருக்குச் சமீபித்த ஓரம்பலத் திற் சேர்ந்திருந்தனர்.—எ-று.

நாம் வசித்தற்கிருப்பிடமாகிய வீட்டை நம்மதென்றெண்ணுமெண்ணம் அவிவேகமுடைய தாகலின், இவ்வீட்டைவிட்டு, எல்லாப்பற்றுக்களையும் விடுதற் குக் காரணமாகிய முத்திவீட்டை யடையவேண்டுமென் றுணர்ந்தாரென்பார், "விடுத்தனர் வீடு நல்வீடு கூடுமாறு," என்றும், நிச்சயமான வெறுப்பென்னும் வைராக்கிய முடையார்க்கன்றித் துறவு கைகூடாதாகலின், அத்துறவையடை வானெண்ணியவிவர் துணிவென்னும் வைராக்கியத்தை மேற்கொண்டாரென் பார், "எடுத்தனர் துணிவுகூர் துறவையே பெற." என்றும், இத்துறவினலா கிய பயனை முத்தியின்பத்தைச் சிற்றம்பலத்தின்கண் ணாமடைதலுண்மை யென் றறிவிப்பான், அவ்வூர்க்கருகிலுள்ள ஓர் அம்பலத் தடைந்தாரென்பார், "அடுத்தவூரம்பல மதனிற் புக்குளார் நடத்துளா னம்பல நண்ணும் வண்ணம்." என்றும் கூறினர். நாம் வசித்தற் கிருப்பிடமாகிய வீட்டை நம்மதென்றெண்ணு தல் அவிவேகமென்பதை, "காணி யீதெம திடமிது வெனமனைக் கருதிமண் ணுகின்றாய் - நாணி லாய்மட நெஞ்சமே யுடலிது நமதிட மலவென்றற்-பேண வும்படு மோவிதற் கிடமதாம் பிருதிவி தனைநாகப் - பூணி னன்றிருச் சரணமே யுயிர்க்கெலாம் புகலிட மதுதேரே." என்றும், துறவுக்கு வைராக்கியமே முக்கிய மென்பதை, "கயல்விழி மனைவியனைமுத லியவாங் கட்டது தனையெனை தெனவு - மியல்பதா மசுத்த மாதியாருடற்கட்டிதனையா னெனவும்வைத் தெனு மோர் - மயலதா மிருளைத் துறவெனு மொளியான் மாற்றிநெஞ் சகத்தினை விள க்கஞ் - செயலினிந் நூற்குப் பெயர் வயிராக தீபமென்று ரைத்திடப் படுமால்." என்றும் வரும் சாந்தலிங்கசுவாமிகள் திருவாக்கானும் தெளிக. (கள)

போந்தபின் சுற்றமும் புடையிற் சுற்றவேல்
வேந்தனும் பட்டினம் விளங்கு மேன்மையாற்
சேர்ந்தனன் மயக்கறுந் தேற்றந் தேற்றினு
ராய்ந்திடி னளவுகாண் பரிய வள்ளலே.

(இ-ள்.) திருவெண்காட்டடிகள் அவ்வாறு சென்றபிறகு, அவருடைய உறவின்முறையாரும் பக்கத்திற் சூழ்ந்துகொள்ள, வேலேந்திய அவ்வூராசனும் அக்காவிரிப்பூம்பட்டிணம் எங்கும் பிரசித்திபான பெருமையால் அடைந்தனன். அதுகண்ட திருவெண்காட்டடிகள் அவ்வேந்தன் கொண்டிருந்த அஞ்ஞானம் நீங்காத தெளிவைப் பலவாறுகத் தெளிவித்தனர். அத் திருவெண்காட்டடிகள் தெளிவித்த ஞானேபதேசங்களாகிய அவைகளை ஆராயின் அளவு கூறுதற்கரிய னவாகும்.—எ-று.

இவ்வாறு திருவெண்காட்டடிகள் தமதூர்க்கருகிலுள்ள அம்பலத்திற் சேர்ந்தபோது அவருறவினர்கள் யாவரும் அவரைப் புடைசூழ்ந்து கொண் டார்கள். அவ்வாறு யாவரும் புடைசூழ்ந்து உலகெங்கும் பிரசித்தமானமை

யைக் கேள்வியற்ற அவ்வூர் அரசனும் அங்குவந்து சேர்ந்தனன். அதுகண்ட திருவெண்காட்டடிகள் அவ்வரசன் கொண்டிருக்கும் மயக்கமுறுத தெளிவைத் தெளிவிக்கும்வண்ணம் பற்பல ஞானோபதேசங்களைப் புரிந்தனர். அவையனைத்தையும் ஆராயுமிடத்து இவ்வளவினவென்றுரைத்தற் கேலாதனவாம் என்றபடி. எனவே, அவ்வரசன் தான் கொண்டிருக்கும் மயக்கத்தையே முடிவான தெளிவெனக் கருதியிருக்கின்றனனென்றுணர்ந்த திருவெண்காட்டடிகள், அரசனை மயக்கமுற்றிருப்பானாயின் குடிகளும் மயங்கிக்கிடப்பாராகலின், முந்தி அரசனைத் தெளிவித்தால் அவன் ஆணையின்வழி நடக்கும் குடிகளனைவரும் தெளிவுறுவார்களெனச் சிந்தித்து அவனுக்கு ஞானோபதேசம் புரியத்தொடங்கினரென்க. அரசன் தெளியின் குடிகள் தெளிவார் என்பதை, "அரசனெவ்வழி குடிகளவ்வழி." எனவும், "மன்னனெப்படி மன்னுயிரப்படி" எனவும் வழங்கும் மூதுரைகளாலும், "குலமகட்குத் தெய்வங் கொழுநனே என்ற - புதல்வர்க்குத் தந்தையுந் தாயு - மறவோர்க் - கடிகளே தெய்வ மனைவோர்க்குந் தெய்வ - மிலைமுகப் பைம்பூ ணிறை." என்னும் குமரகுருபரசுவாமிகள் திருவாக்கானும் தெளிக. (௧௮)

> மாயையின் போதமுற் றிருக்கு மன்னவற்
> காயிரம் போதமங் காற்றி னாரஃ
> தேயின வல்லவா யிகழ்ந்த நெஞ்சினர்
> தூயரா விருந்தனர் துளக்க மின்றியே.

(இ-ள்.) அஞ்ஞானபோதமடைந்திருக்கும் அவ்வரசனுக்கு அவ்விடத்து அனேகவிதமான ஞானோபதேசங்களைத் திருவெண்காட்டடிகள் புரிந்தனர். அவ்வுபதேசங்கள் யாவும் அம்மன்னனுக்குப் பொருத்தமில்லாதனவாகக்கண்டு அவனை இகழ்ந்த மனமுடையவராகிய திருவெண்காட்டடிகள், அசைவற்றவராய்ப் பரிசுத்தமெய்தியிருந்தனர்.—எ-று.

அஞ்ஞானமுடையோர்க்கு எத்தகைய ஞானோபதேசமும் பயனுறாதென்பது நாற்றுணிபாகலின், "மாயையின் போதமுற் றிருக்கு மன்னவற் - காயிரம் போதமங் காற்றினாரஃ - தேயின வல்லவாய்.' என்றும், அதுகண்ட திருவெண்காட்டடிகள் நாம் என் வீணே இவரிடத்தில் வசனிக்கவேண்டுமென்றெண்ணி அசைவின்றிப் பரிசுத்தராயிருந்தனரென்பார், "இகழ்ந்த நெஞ்சினர் தூயரா விருந்தனர் துளக்கமின்றி." என்றும் கூறினர். இதனாலன்றோ தாம் ஞானசாரியராயினும் பக்குவமிலார்க்குப் போதிப்பாராயின், அவர் அஞ்ஞசாரியரென்றும், அவ்வாறு பக்குவமுடையோன், தேனை நிறையவுண்டு அதனை மீட்டுங்கக்குந் தன்மைபோல உள்ளும்புறம்புமாயென்கும் நிறைந்து மௌனமாயிருந்த சிவானந்தவெள்ளம் காருண்ணியத்தினால் ததும்பி ஞானசாரியருபதேசமொழிகளைக் கூறும் காலத்தளவும் பணிவிடைசெய்துகொண்டு நின்று,' அதுவிதுவென்று ஒன்றையும் சுட்டாது பதைப்பறவிருந்து அதனைக் கேட்கவேண்டுமென்றும் அவ்வாறு அவ்வாசிரியருபதேசிக்கும் ஞானோபதேசம், இருளுக்கு விளக்குப்போலும் சந்திரன்போலும் சூரியனபோலும் பிரகாசித்து ஆணவ விருளை

நீக்குமென்றும்' அத்தகைய ஞானோபதேசம் அபக்குவர்க்குப் பயன்படாதென்றும் நூல்களிற் கூறியுள்ளன. இவற்றை' ',பொய்போகப் போகப் பொருந்திப் பொருடானுஞ்-சையோக போக தரங்கத்தி-னையும் பரிபாகங் கண்டு பதையாமற் பார்க்குங் - குருவேகாண் ஞானக்குரு என்றும், தேனுண் டெழுந் திறம்போற் சிவானந்த - மோனந்தானும்பி மொழிகாலத் - தேநின்று - தோன்றிருந்து போலு மொன்றைச் சுட்டாது கேட்பவர்கட் - கான்றதவம் வேத மது. என்றும், இருளிற் சுடரென்ன விந்திரவி யென்ன-வருளைக் கடந்தபரா னந்தர்-திருவாக்-கமுத மழை யம்பரச்சொ னன்னிமித்த மாங்கே-மமதையிரா தென்றே மதி. என்றும். உடற் குயிர்போற் கட்கிமைபோ லூசிநூ லொத்து - விடிற்புலிதீ பாம்பினில் வீழ் வார்க்காஞ் - சுடச்சுடினும் - வாழைக்கா காவேதி மீட்கலத்துக் காகாவா - றேழைக்காகாத திது என்றும்வரும் ஒழிவிலொடுக்கத் திருவெண்காட்டர்வாறு முணர்க. (கங)

*பகர்ந்தனர் பட்டினப் பலரும் பண்பினன்*
*மிகுந்திருச் சேந்தனர் விளம்புவீரெனப்*
*புகழ்ந்தனர் மவுனமாம் பொற்பின் வைகினர்*
*திகழ்ந்தமூ கரைமொழிச் செல்வ ராக்கினர்*

(இ-ள்.) அக்காவிரிப்பூம் பட்டினத்துள்ள பலரும், தகுதியான் மேம்பாடுற்றசேந்தனரே நமதுதிருவெண்காட்டடிகட்கு நீரேனும் கூறுவீரென்றுரைத்தனர். அவ்வாறே அச்சேந்தனர் திருவெண்காட்டடிகளைப் பலவாறாகப் புகழ்ந்தார் உலகத்தில் விளங்கியிருந்த ஊமர்களைப்போன்ற அநேகரை வார்த்தையென்னும் செல்வமுடையவராகச் செய்த திருவெண்காட்டடிகள் மவுனமென்னும் நிலைமையிலமர்ந்தனர்.—எ - று.

காவிரிப்பூம் பட்டினத்துள்ள யாவர் திருவெண்காட்டடிகளைப் பழையபடியே இல்லறத்திலிருக்கும்படி பலவாறு வேண்டியும் அவர்கட்கொன்றும் மறுமொழி கூறாதிருந்ததைநோக்கி, அவருக்கு மிகப்பிரீதியுடையவராயும் குணவிசேடங்களின் மேம்பட்டவராயுமுள்ள சேந்தனரைநோக்கி' நீரேனும்திருவெண்காட்டடிகட்குரைக்கலாகாதா வென்றனரென்பார் பகர்ந்தனர் பட்டினப்பலரும் பண்பினன் மிகுந்திருச் சேந்தனர் விளம்புவீரெனப் புகழ்ந்தனர். என்றும் அவ்வாறே அச்சேந்தனர் கூறியவனைத்திற்கும் உத்தரமின்றித்திருவெண்காடர் மவுனமா யிருந்தனரென்பார், மவுனமாம் பொற்பின்வைகினர் என்றும், அவ்வாறு வைகிய திருவெண்காட்டடிகள் எத்தன்மையரெனின், அதற்குமுன் யாதோர்விஷயமும் பேசவறியாத மூகர்கள்போலிருந்த அநேகரை விசேடமான ஞானபோதங்களைக் கூறத்தக்க வாக்கின் செல்வமடையச் செய்தவர் என்பார், திகழ்ந்த மூகரை மொழிச் செல்வராக்கினர், என்றும் கூறினர் அப்பட்டினத்திலுள்ளார் பலரும் தங்கட்கு மறுமொழி கூறாத திருவெண்காட்டடிகளிடமிருந்து ஏதேனும் ஒருத்தரம் பெறுமாறு அவர்க்குரியவராகிய சேந்தனரைப்

பிரார்த்தித்தனர். இத்தகைய விஷயத்தில் இவ்வாறு செய்வதே நீதியென் பதை' தங்கட் குதவிலர்கைத் தாமொன்று கொள்ளினவர் - தங்கட்குரியவ ராற் றுங்கொள்க - தங்கநெடுங் - குன்றினுற் செய்தனைய கொங்கையா யாவின் பாற் - கன்றினர் கொள்ப கறந்து. என்னும் சிவப்பிரகாச சுவாமிகள் திருவாக் கானும் தெளிக. அன்றியும் பண்பினுன் வகுந்திருச்சேந்தனார்விளம்பு வீரொணப் புகழ்ந்தனர் என்றுகூட்டிப் பொருள்கொள்ளுவாருமுளர். (௨0)

மற்றவர் மவுனமுற் றுறைந்த வாய்மையா
லற்றைநான் றைவர்களு மகல வன்பரைப்
பெற்றபே றென்னையென் றரசன் பேசினு
னிற்கநீ ரிருக்கயாம் பெற்ற சீர்மையே.

(இ-ள்.) அத்திருவெண்காட்டடிகள் அக்கு வார்த்தையாடிய பலர்க்கும் மறமொழிகூறு து மவுனநிலையையுற்றிருந்த உறுதியினுலே, அன்று அவ்விடத்து வந்திருந்தவர்களனைவரும் நீங்கிவிட, அப்போது அங்குவந்து காத்திருந்த அரச ன் நீர் துறவடைந்ததனுலடைந்த பயன் யாதென்று வினுவினன். அதுகேட்டதி ருவெண்காட்டடிகள் நீர் நிற்கவும் யாமிருக்கவும் பெற்றுக்கொண்டதன்மையே —எ - று.

அரசன் அவ்விடத்திற்குவந்து திருவெண்காட்டடிகளைத் தனித்துக்கா ணவேண்டுமென்று காத்திருந்தானென்பார், மற்றவர் மவுனமுற்றுறைந்தவாய் மையா லற்றை நான் றைவர்களுமகல, என்றும் அவ்வாறு நீங்கியவுடனே அர சன் அவ்வடிகளிடத்துத் தனித்துச்சென்றுகிட்டி சுவாமிகாள் நீர் துறவடைந்த தனு லெய்தியபயன்ருன் யாதென வினுவினுனென்பார், அன்பரைப்பெற்றபே றென்னையென்றரசன்பேசினுன். என்றும், அதுகேட்ட திருவெண்காட்டடிகள் அவ்வரசன் வார்த்தையை ஓர் பொருளெனமதியாமலும், முன்பு தாம்ஞானபோ தங்கூறியபோது பயன்பெருது போனதைச்சிந்தித்தும் செல்வ மேம்பாட்டை யும் அதிகாரமேம்பாட்டையுமுடைய நீர் நிற்கவும் யாமிருக்கவும் வாய்த்ததேபெ ரும்பயனெனக் கூறினுரென்பார் நிற்கநீரிருக்கயாம்பெற்றசீர்மை. என்றுங்கூறி னர் அரசனது வார்த்தைகளெழுதப்பட்ட திருமுகத்தைக்கண்டபோதே அவன து அரசாட்சிக்குப்பட்டகுடிகள் மிகப்பயந்து அதன்படி நடக்கத்துணிவார்களாக லின் இவர் அத்தகைய அரசன் நேரில் வந்தபோதே சற்றேனும் மதியாதவராய் அவனதுசெல்வத்தின் சிறுமையையுணர்ந்துதெளிந்துதுணிந்துகூறினரென்பது கருத்து. அரசன்திருமுகத்திற்கே அவனதுஅரசாட்சிக்குடிகள் நடுங்கிநடப்பார்க ளென்பதை அரையன்வா யுரைகள் வரைதரு முடங்க லதுவரக காணின்மற்றவ ரு கடையின்வாழ்பவருண்ணடுங்கியோர்ந் ததன்வாய்ச்சாற்றியமுறைசெய்வா றென்றுற்-கரையில் பேரின்பந் தரவெமக்கிறை சால் கட்டுரையென்னின்வே றென்னே - புரைபுள வேதா கமமவ னெனக்கீண் டுரைத்தவா புரிதுவதல்லால் என்றும், அரசசெல்வமும் சிறுமையுடைத்தென்பதை, "இளமையிற் பிணி

யற் றொருகுடை நிழற்கீ ழிருநில முழுவதும் புரக்கும் - வளமையின் றுடைய மகற்குமெப் பொழுது வருங்கொல்கூற் றெனும்பயத் தானு - முளமிகப் பறைநின் றறையுமேற் புவிமீ துடையரோ மற்றைய ரின்பங் - களிமிகுத் திருப்பர் தெளிவிலா மையின்மேற் காரியங்கருது வாரோ." என் றும்வரும் சாந்தலிங்க சுவாமிகள் திருவாக்கானும் தெளிக. (உக)

என்வினைசத் தன்பனு ரியைந்த காலையி
லனகவம் பலத்துள்ளா னடியர் மேன்மையை
நினையவு மரிதெனு நிருபன் கூறினன்
மனையறக் கிளைஞரோ வழக்கம் பன்னுவார்.

(இ-ள்.) என்றுகூறி மெய்யன்பராகிய திருவெண்காட்டடிகள் தமது நிலைமையிற்பொருந்திய போது, மாசற்ற பொன்னம்பலத்தின்கணுள்ளாராகிய சிவபிரானுடைய அடியார்களின் பெருமையை எண்ணவும் அரிதென்று அரசனுரைத்தனன். அப்போது இல்லறத்தினராகிய திருவெண்காட்டடிகளின் சுற்றத்தாரனைவரும் வழக்கத்தைக் கூறலாயினர்.—எ-று.

சிவனடியார் பெருமையை இற்றென யாவருமுரைத்தற்கரிதென்பதை "சிவனாலு மறையாலு முணர்வினாலுந் தெரியாத பரன்வெங்கை யரசன்றன்மா தவனாலு மயனாலு மலரியாலுஞ் சரியாலுங் குருவாலு மமரர் கோவா-லவனாலுங் குகனாலு முனிவராலு மாவாலுஞ் சுராலும் புலவராலு - மெவராலும் வெலற் கருமைம் புலன்கள் வென்ற வெழிலடியார் பெருமைதனை யியம்பொணாதே" என்னும் சிவப்பிரகாசசுவாமிகள் திருவாக்கானும், "பெரிது பெரிது புவனம் பெரிது - புவனமோ நான்முகன் படைப்பு - நான்முகனோ கரியமா லுந்திவந்தோன் - கரியமாலோ வலைகடற் றுயின்றோன் — அலைகடலோ முனிகையி லடக்கம்-முனியோ கலசத்திற் பிறந்தோன்-கலசமோ வுலகிற் சிறுமண் - உலகமோ வரவினுக் கொருதலைப் பாரம் — அரவோ வுமையவள் சிறுவிரன் மோதிரம்-உமையவளோ விறைவர் பாகத்தொடுக்கம் - இறைவரோ தொண்டருள்ளத் தொடுக்கம்-தொண்டர்தம்பெருமை சொல்லவும் பெரிதே." என்னும் ஔவைப் பிராட்டியார் அமுதவாக்கானும் தெளிக. (உஉ)

மன்னகே ளிவர்பெருங் குடிமை வாழ்வுறத்
தன்னிகர் மருகனை யிருத்தித் தாழ்வரப்
பன்னருந் திருவெலாம் பரிக்கச் செய்கவென்
றுன்னின ருரைத்தனு மோகை யாகியே.

(இ-ள்.) வேந்தரே! வினவுவீராக, இத்திருவெண்காட்டடிகளின் மேம்பாடுற்ற குடிவாழ்க்கை விருத்தியடையுமாறு, தமக்குத்தாமே நிகராகவிளங்கும் இவரது மருகரை அவ்வீட்டிற் குடியிருத்தி, குறைபாடின்றி யாவர்க்கும் கூறுதற்கரிய இவருடைய ஐஸ்வரியங்களனைத்தையும் பரிபாலிக்கச் செய்வீராக

வென்று ஆலோசித்தவர்களாய்க் கூறுதலும், அதுகேட்ட வேந்தன் களிப்புற்று.—எ-று.

மாமனார்ச்சிதத்திற்கு மைந்தனில்லாவழி மருகனேயுரியனென்பது மனுநீதியும், வழக்குமாகலின், மேற்செய்யுளில் "வழக்கம் பண்ணுவார்." எனவும், இச்செய்யுளில், "இவர்பெருங் குடிமை வாழ்வுறத்-தன்னிகர் மருகனை யிருத்தித் தாழ்வறப் - பன்னருந் திருவெலாம் பரிக்கச் செய்க." என்றும் கூறினர். மாமனார்ச்சிதத்திற்கு மருகனே யுரியனாதல் வழக்கென்பதை, "தந்தை பிறந்திரவாத தன்மையினாற் றன்மாமன்-வந்து பிறந்திருக்கும் வண்மையினான்-முந்தொருநா-ளேணிக்கு வேளையெரித்தான் மகன் மாமன் - காணிக்கு வந்திருந்தான். காண்" என்னும் காளமேகப்புலவர் வெண்பாவானு மறிக. (உரு)

அரசனுஞ் சுற்றமு மகன்று போயொளி
யிரவிநேர் மருகனை யிவர்க்கு நேரென
வரிசைசெய் திருத்தினர் மைந்தன் முங்கினன்
புரையிலா விழுதுவிட் டன்ன பொற்பினான்.

(இ-ள்.) அப்பால் அவ்வேந்தனும் உறவினரும் அங்கு நின்றும் சென்று சூரியப் பிரகாசத்திற்கு ஒத்த இவரது மருகனை இத்திருவெண்காட்டடிகட்கு நிகரொன்று சிறப்புக்களியற்றி அம்மனையிலிருக்கச் செய்தார்கள். அழகுடையவராகிய அம்மருகர் குறைவற்ற ஆலவிருட்சம் விழுதுவிட்டதுபோன்று அவ்வாழ்க்கையின் பாரத்தைத் தாங்கினர்.—எ-று.

இத்தகைய பெருஞ்செல்வத்திற்குரியவனாவோன் சாமுத்திரிகா நூலிற் கூறியுள்ள இலக்கணங்களமைந்த எழிலுடையவனா யிருக்கவேண்டுமாகலின், "ஒளி யிரவிநேர் மருகனை." என்றும், அச்செல்வமனைத்தும் அவனுக்கே யுரிமையுடைத் தென்பதற்கேற்ற சாதனங்களும், அத்திருவெண்காட்டடிகளின் விவகாரங்களனைத்தையும் அவனே நடத்தவேண்டியதற்குரிய நன்முகூர்த்த நிச்சயமும், அம்முகூர்த்தத்தில் நடத்தவேண்டிய கிரியைகளும் குறைவின்றி நடாத்தினரென்பார், "வரிசைசெய் திருத்தினர்." என்றும், ஆலவிருட்சம் அடியற்றுப்போகையில் அதன் விழுது அம்மரத்தை விழவொட்டாது தாங்குவதுபோன்று, திருவெண்காட்டடிகளின் குடிவாழ்க்கை ஆதாரவற்றதாகிய காலத்து இம்மைந்தன் தாங்கினமையின், "புரையிலா விழுதுவிட்டன்ன பொற்பினான்." என்றும் கூறினர். விழுதுவிட்டனன் என்றமையின், மரங்களுக்குட் பெரும்பாலும் விழுதுவிடல் ஆலமரமொன்றேயாகலின், ஆலவிருட்சம் விழுதுவிட்டது போன்ற எனப் பொருள் கூறினும். விழுதுவிட்டனன் பொற்பினனென்று கூட்டி, அழகென்பதொன்றே பற்பல அவயவங்களாய் விழுதுவிட்டதுபோன்றவன் எனப்பொருள் கூறுவாருமுளர். அவ்வாறு கொள்ளின் திருவெண்காட்டடிகளுடைய செல்வத்தைத் தாங்கினரென்பதற்கு விசேடமின்மையை யறிக.

இவன்சிறந் திருந்துழி யெழுந்து கற்பினு
ணவம்புனை மனைவியார் தாமு நாடொறுந்
தவம்புரி குவனெனத் தனிவெண் காடருங்
கவன்றுகட் டறவழி காட்டி யோட்டினார்.

(இ-ள்.) இம்மருகர் இவ்வண்ணம சிறப்புற்றிருக்குங்காலத்து, சற்பிற் சிறந்த விநோதமான அலங்காரமைந்த திருவெண்காட்டடிகளின் மனைவியார் வீட்டினின்றும் வெளிக்கொண்டு, தாமும் தினந்தோறும் தவம்புரிவேனென் றுரைக்க, ஒப்பற்ற திருவெண்காட்டடிகளும் நினைந்து அறவே நீங்கும்படி வீட்டிற்கு வழிகாட்டித் துரத்தினார்.—எ-று.

கட்டற வழிகாட்டியோட்டினார் என்பதற்கு, திருவெண்காட்டடிகள் காருணிய மூர்த்தியாதலின், மனைவியாருடைய பந்தபாசங்களும் இல்லறத்திருந்த வண்ணமே நீங்கும்படியான ஓர் மார்க்கத்தை யுபதேசித்துத் துரத்தினார் எனப் பொருள்கோடலுமொன்று. பிறவியறுதற்பொருட்டுத் துறவினையடைந்தோர்க்கு இச்சரீரத்தைச் சுமந்து திரிதலே பெரும்பந்தமாதலின், அச்சரீராபிமானத் தானேர்ந்த மனைவியாதிய பந்தபாசங்களைக் கைப்பற்றுவரோ, பற்றாராதலின், தம்மைப் பின்றொடர்ந்த மனைவியின் பந்தம் அறவே ஒழியும்படி நீக்கித் துரத்தினாரென்க. பிறவியறுப்பார்க்குச் சரீரமே பெரும்பந்தமென்பதை, "மற்றுந் தொடர்ப்பா டெவன்கொல் பிறப்பறுக்க - லுற்றார்க்குடம்பு மிகை." என்னும் திருக்குறளானும் தெளிக. துறக்கத் துணிந்த ஏனையரும் இவ்வாறே மனைவியைத் துரத்தினரென்பதையும், இம்மனைவி மக்கள் முதலியோர்க்கு நாமோர் துணையன்று, சர்வான்மாக்கட்கும் சிவபிரானொருவரே துணையாயவரென்று துணிந்தாரென்பதையும், "ஆகமத்தின் விதிதவறா தறைந்தனை நீ விவேகியே யாவா யானுந்-தேகமுதற் பிரபஞ்ச மதனினசை விடுத்துவனஞ் செல்லா நின்றேன் - நாகமுலை யாயெனுமை தடுத்தலுன்றன் விரதமல நாடுதன்னிற்-போகுதியென் றவளைவிடுத் தேதிலரைப் போலகன்று போகாநின்றான்." என்னும் குமாரதேவர் திருவாக்கானும், நவிலி னிம்மனை மக்களுக் கொருதுணை நாமல திலையென்றே - கவலையுற்றான் றுண்டறந்தனையுனைக் காலனார் கொடுபோகிற்-குவல யத்தடைந்திவரைநா டொறும்புரந் திடுவையோ குறிக்குங்கால் - சவலை நெஞ்சமே சிவனலா துயிர்க்குயிர் தானுமோர் துணையாமே." என்னும் சாந்தலிங்க சுவாமிகள் திருவாக்கானும் தெளிக. (௨௫)

நங்கையா ரிற்புக நடாத்தி விட்டபின்
மங்கலச் சேந்தனார் மனங்க ரைந்துவீழ்ந்
தெங்கணா யகவென விறைஞ்சிப் பின்னரும்
பங்கயச் சேவடி பிடித்துப் பன்னுவார்.

(இ-ள்.) இவ்வண்ணம் தமது மனைவியார் வீட்டிற் சேரும்படி செலுத்திய பிறகு, பொலிவுற்றோராகிய சேந்தனார்நாயனார், திருவெண்காடரிடம்

வந்து மனவுருக்கத்துடன் கீழேவிழுந்து எங்கள் தலைவரேயென்று பணிந்து, மீண்டும் தாமரைமலர்போன்று சிவந்த நிறமுள்ள திருவடிகளைப் பிடித்துக் கொண்டு விண்ணப்பிக்கின்றனர்.—எ-று.

சேந்தனார்நாயனார் திருவெண்காட்டடிகளிடம் மந்திரியாராக விருந்தமை யானும், அவரது மெய்யன்பின் தன்மை இத்தன்மைத்தென நன்குணர்ந்திருந் தமையானும் அவரைவிட்டுப் பிரிய மனந்துணியாமல், அவரது திருவடிகளை விடாது பற்றி விண்ணப்பிக்கலாயினரென்க. தமது தலைவர் துறவடைதற்கே குங்காலத்து மந்திரியார் பிரிவாற்றாமையாற் கருத்துருகிக் கலங்குதலியல்பென் பதை, "அலது நீபூகி னவணியுங் காப்பற றவத்திலே யலைந்திடும் யாமுஞ் சலனம தாறுவே மித்தகை யெமைநீ தவிக்கவிட் டேகுதல் கடனன் - றிலகிட வெமக்கீ தருவொ னவமைச்ச ரியம்பிட வாசனும் பார்த்தே - யுலகமெய் யென வென் ணுறுமதி யுடையோர்க் குரைப்பினு முணர்வுதி யாதலால்." என்னும் குமாரதேவர் திருவாக்கானும் தெளிக. இச்சேந்தனார் நாயனார் திருப்பல்லாண்டு திருவாய்மலர்ந்தருளி யிருக்கின்றனர். அது திருவிசைப்பாவுடன் சேர்த்திருக் கின்றனர். (௨௯)

எனையுமீ டேற்றுத லெந்த ஞான்றுகொன்
மனையறம் புகுதவோ மன்று ளாடலை
நினைவினி னிறுத்தவோ நிகழ்த்து வீரென
வனையவர் கருத்தினுக் கமைந்த செய்கென்றார்.

(இ-ள்.) அடியேனையும் ஆட்கொள்வது எந்தக்காலமோ? இல்லறத்திற் சேரவோ? பொன்னம்பலத்தில் நடராஜப்பெருமான் புரிந்தருளும் ஆனந்தத் தாண்டவத்தைச் சதா சிந்தித்துக்கொண்டிருக்கவோ? திருவாய்மலர்ந்தருள்வீ ரென்று விண்ணப்பிக்க, அதுகேட்ட திருவெண்காட்டடிகள் உமதெண்ணத்திற் கெதுபொருத்தமானதோ அதைப்புரிமினெனத் திருவாய்மலர்ந்தருளினர்.-எ-று.

இல்லறத்திலிருப்போரும் சதா நடராஜப்பெருமானது ஆனந்தத்தாண் டவத்தைச் சிந்தித்திருப்பார்களாயின், அச்சாதகத்தால் அவ்வானந்தத் தாண்ட வத்தின் சிலம்பொலி தினந்தோறும் அவர்கள் பூசை முடிவிற் கேட்கப்படு மென்பது நாற்றுணிபாகலானும், அவ்வாறே சதா தியானித்துக்கொண்டிருந்து சேரமான்பெருமானாயனாரும் தினந்தோறும் அச்சிலம்பொலியைக் கேட்டுவந் தாராகலானும், இச்சேந்தனாரும் பின் திருச்சிற்றம்பலச் செல்வருக்குக் களி யமுது படைத்தாராகலானும், அப்பெருமானிடத்துத் தமக்குள்ள பேரன்பை ஆசாரியராகிய திருவெண்காட்டடிகட் கறிவிப்பான், "மனையறம் புகுதவோ மன்று ளாடலை-நினைவினி னிறுத்தவோ," எனக்கூறினரென்க. சேரமான்பெரு மானாயனார் நிதமும் சிலம்பொலி கேட்டுவந்தாரென்பதை, "வாசத் திருமஞ் சனம்பள்ளித் தாமஞ்சாந்த மணித்தூபந் - தேசிற் பெருகுஞ் செழுந்தீப முத லாயினவுந் திருவமுது - மீசர்க்கேற்ற பரிசினா லர்ச்சித்தருள வெய்தாலும்

பூசைக் கமர்ந்த பெருங்கூத்தர் பொற்பார் சிலம்பி ஞெலியளித்தார். என்னும் அருண்மொழித்தேவர் அமுதவாக்கானும், ஆனந்தத்தாண்டவத்தைச் சதாதியா னிப்பவர்கட்குச் சிலம்பொலி கேட்குமென்பதை, ஓசையெலா மற்று றொலிக் குந் திருச்சிலம்பி - ேைசை வழியேசென் றெத்தொடுங்கி - லோசையினி - னந்தத்தா னத்தா னரிவையுடனம்பலத்தே - வந்தொத்தா னத்தான் மகிழ்ந்து., என்றும் சேந்தனர் களியமுது நிவேதித்தாரென்பதை, அவிழ்ந்த துணி யிலவி ழ்ந்த வவிழை - யவிழ்ந்த மனத்தால் லவிழ்க்க - வவிழ்ந்தசடை - வேந்தனார்க் கின்னமுத மாயிற்றே மெய்யன்பிற் - சேந்தனர் செய்த செயல்." என்றும் வரும் உய்யவந்த தேவநாயனர் திருவாக்கானும் தெளிக. இச்சேந்தனர்நாயனர் மேற்கூறிய சாதனத்திற் சாத்தியராயிருக்கின்றமையைத் திருவெண்காட்டடிக ளுணர்ந்திருக்கின்றாராகலின் அத்தகையார் இல்லறத்திருக்கினும் துறவறத்தி ருக்கினும் ஒன்றே என்னும் கருத்துடையவராய், கருத்தினுக் கமைந்த செய்க.' என்றனர். இத்தகையோர் எவ்வறத்திருக்கினும்தியானத்தைக் கைவிடாராகலின் ஓர் பற்றுமின்றிப் பற்றற்றவராகவே விளங்குவரென்பதை' வீட்டிலே சென்று வினையொழிந்து நின்றிடிலென் - றுண்டிலே நல்வினைகள் செய்திடிலென்-கூட் டில்வாள் - சாத்தியே நின்றிலேயேற் றக்கனர் வேள்விசெய்த - மாத்திரமேயாங் கண்டாய் வந்து.', என்னும் உய்யவந்த தேவநாயனர் திருவாக்கானும், துயிலி னும் போகினு நிற்கினும் வீழினுஞ் சொல்லினுமொன் - றயிலினுங் காணினுங் கேட்பினும் வாழினு மல்லலொடு - பயிலினுஞ் சோரினுந் தேறினு நீக்கினும் பற்றினும்பொய் - குயிலினுஞ் சோம்பினு நிற்கடவேனென்னைக் கொற்றவ னே.,, என்னும் சிவப்பிரகாசசுவாமிகள் திருவாக்கானும் தெளிக. (உஎ)

பக்குவக் குறைவறு பண்ப ராதலா
லக்கணம் விடைகொளா வகன்று தம்மகம்
புக்கனர் முக்கணன் புனித வன்பரு
மிக்கஞா னக்கிளை விளைவின் வாழ்குவார்.

(இ-ள்.) சேந்தனர் பரிபாகக்குறைவற்ற தன்மையராகலின், அந்த க்கண மே திருவெண்காட்டடிகளிடம் விடைபெற்றுஅங்குநின்றும் நீங்கித் தமதுமனை யிற்சேர்ந்தனர்' திரிநேத்திரதாரியாகிய சிவபிரானுடைய மெய்யன்பினராகிய திருவெண்காட்டடிகளும் மெய்ஞ்ஞானத்தின் பாகுபாடுகள் மேன்மேல் விர்த்தி யாகும்படி வாழ்ந்திருப்பாராயினர்.-- எ - று.

சேந்தனர்நாயனரும் பரிபாகம் மேம்பட்டவராகலின் திருவெண்காட்டடி களிடம் மீண்டும் யாதொன்றும் வினவாதவராய்த் திருவெண்காட்டடிகளுடைய திருவுள்ளக்கிடை இதுதானென்றுணர்ந்து தம்மகத்திற் சேகித்தமது சாதகப் படி சிவத்தியானத் திருந்தனரென்பார்' பக்குவக்குறைவறுபண்பராதலா - லக்க ணம்விடைகொளாவகன்று. தம்மகம் புக்கனர்.,, என்றும், திருவெண்காட்டடி கட்கு மெய்ஞ்ஞானத்தின் பாகுபாடுகளாகிய எங்குஞ்சிவமாய்க்காணுதல்சுகதுக்கம்

சமமாய்ப் பார்த்தல் உறவுபகை ஒன்றாகநாடுதல் என்னும் இவையாவும் மேன் மேல் விருத்தியாயின என்பார்' முக்கணான் புனிதவன்பரு - மிக்கஞானக்கிளை விளைவின் வாழ்குவார்',, என்றும் கூறினர் பரிபாகமுற்றவர்களின் தன்மை இத் தகைத்தென்பதை' தேனுண்டிமிழுந் திறம்போற்சிவானந்த - மோனந் துளும்பி மொழிகாலத் - தேநின்று - தோன்றிருதுபோலுமொன்றைச் சுட்டாது கேட்ப வர்கட்-கான்றதவம் வேதமதி,என்னும் ஒழிவிலொடுக்கத் திருவெண்பாவானும் ஞானேயமானபோதுமேற்கூறியகுணங்கள் மேன்மேலும்அபிவிர்த்தியாமென் பதை, நகர் தனி லேகிப் பிச்சை நண்ணியே மனைக டோறுமகமகிழ்ந்-தங்கை யேற்றே யவ்விடத் தருந்தி யாங்கே-செகமுளோர் பேயென் றெண்ணிச் சிரித் திட நாணமின்றி-யிகபதத் திச்சை யற்றே யேகனு யுலாவ லுற்றான் ,,என்றும் தோன்றிடு முலகமெங்கே தோன்றிடு மென்ன நோக்கித்-தோன்றிடுநினைவிலெ ன்றேதோன்றிய நினைவுதானுந்-தோன்றிடு மிடத்தைப்பார்த்துத் தோன்றிடுஞ் சொருபத் தென்றே-தோன்றிடுஞ் பொருள்களெல்லாஞ் சொருபமே யென்று கண்டான். என்றும் வரும் குமாரதேவர் திருவாக்கானும் தெளிக. (௨௮)

தகவுகன் மனைவியாய் தனைய ராமவர்
மிகுமுயி ரய்ச்சிவம் விரவுந் தொண்டரே
புகுமுற வாயுறப் பூமென் பாயலா
நகைமலர்ப் பள்ளிமே லையந்து நண்ணுநாள்.

(இ-ள்.) மேம்பாடுற்ற சிறந்த தமதுமனைவியாரும்தாயாரும் மைந்தர்களும் ஆகிய அவர்கள்' விசேடித்தனையசீவர்களாகவும்சிவத்துடன்கலந்தமெய்யன்பர் களே தம்மிடம்சேரும் உறவினர்களாகவு மிருக்கும்படி, பூமியென்னும் மிருது வானபடுக்கையாகிய ஒளியுள்ள புட்பசயனத்தின் மேல் விரும்பிப் பொருந்தும் நாளிலே.—எ - று.

மனைவி தாய் மைந்தரென்னும் இவர்களிடத்துத் தமதுறவினரென்னும் சிறப்புநோக்கமின்றி, ஏனைய சீவர்களிலிவர்களுங் கலந்தவர்களாகவே பொது நோக்கமுற்றும் சிவஞானத்தாற் சிவத்துடன் கலந்தமெய்யன்பினர்களே தமது றவினர்களென்று அவர்கண்மீது சிறப்புநோக்கமுற்றும் பூமியேமிருதுவானபடு க்கை யென்றுரைக்கத்தக்க புட்பசயனமாகக் கொண்டும் வாழ்ந்திருந்தனரென்ற படி' மனைவிதாய் மைந்தரென்னும் உறவினர்களிவர்களல்லரென்றும் சிவபிரா னே பிதாவும் உமாதேவியே அன்னையும், மெய்யறிவேஇன்பந்தருதலான் மனை வியும், முத்தியின்பமென்னும் அமுதையூட்டுதலால் மைந்தனுமாமென்றும் தெளிந்தனராகலின், இவ்வுறவினரைப் பொதுவாகக்கண்டனரென்றார் இதனை விடையதா ரிறையே தாதைமற்றவன்பாண் மின்னெம தன்னையன் னவ்வைக்- கடையபோ மறந்து துறந்துதானன்றே கடும்பவ விடும்பையுற் றனமில் - வடை வுணர்ந் திலேபோன் றுடலிதற்கேது வாய்வாத் தாய்பிதாவெனநெஞ்-சுறாவுடை நின்றாய் பவந்தொறிவ்வணமுற் றுளவுயிர்க் களவியா திரையே." எனவும்

"தனதகத் தகலா திருந்துபே ரின்பந் தருதலான் மனைவியுந் தன்பா-லினிதுதி த்தொருதன் வினையொழித் தசையா திருத்திவீட் டமுதாத் துதலா-லுனலருஞ் சுதனு மொருவனுக் கவனா ருதயமா யெழுந்தமெய் யுணர்வே-பினையிக் தன்றி மனைசுத ரெனயாம் பேணிநாட் கழிப்பதும் பிழையே." எனவும், சிவனடியார் களே உறவினராமென்பதை "விருப்பமாயிது கேட்டிநன் னெஞ்சமே விமல னுக் காளல்லார்-பொருப்பு நேர்தனஞ் சொரியினு மவர்களோர் புன்னுனித் துணை பன்புந்-திருப்பி டேலான் றொழும்பர்தந் தொழும்பனாய்த் திரிந்தவர் பணிசெய்தீண் - டிருப்பை யேன்மிக நல்லையிச் சொல்லைநம் பில்லை யேற் பொல்லாயே." எனவும்வரும் சாந்தலிங்கசுவாமிகள் திருவாக்கானும், பூமியே மலர்ச்சயனமாகக் கொள்ளல் துறவினரியல் பென்பதை, "பூவணை யாகி வானம் பொருந்துமேற் கட்டியாகித் தீவம தாகி யிந்து செங்கதிர் வீசுங் காற்று மேவுசா மரம தாகி விடுதலை மனைவி யாகிக் - கேவல மின்பமாகிக் கிளர்ச்சியாய் நின்றான் வேந்தன்." என்னும் குமாரதேவர் திருவாக்கானும் தெளிக. (உ௯)

அங்கணின் றகன்றுபோ யகங்க டோறும்புக்
கெங்கணா யகனென விரந்த ருந்துவார்
பொங்கொளி வணிகர்தாம் பொறுது மானத்தாற்
றங்களூ ரனமிடற் றடைசெய் தார்களே.

(இ-ள்.) அங்குநின்று நீங்கிச் சென்று வீடுகளொவ்வொன்றினும் பிரவேசித்து, எங்கள் தலைவராகிய சிவபிரானைப்போன்று பலியேற்றுப புசிப்பார். விசேடித்த கீர்த்தி வாய்ந்த எனையவைசியர்க ளனைவரும் சகியாதவர்களாய் மான மேலீட்டால், தங்களூரில் திருவெண்காட்டடிகட்குப் பிட்சையிடுதலைத் தவிர்த்தார்கள்—எ-று,

துறவிகளாயுள்ளார் ஓரிடத்திற்றானே புசித்துக்கொண் டிருப்பார்களாயின் அவ்விடத்தின்மீதும் அங்கு வசிப்பவர்கள் மீதும்பற்றுண்டாமென வுணர்ந்து ஓரிடமின்றிப் பல விடங்களினும் பல வீடுகளினும் இரந்து புசித்தலே இயல்பாகலின், திருவெண்காட்டடிகளும் பலவில்லங்கடோறுஞ் சென்று யாசித்துப் புசித்து வந்தனரென்க. துறவிக ளியல்பித்தன்மைத்தென்பதை, "பொருந்தி வாழிடமொன் றாகிற் பொருந்திடும் பற்றென் றெண்ணி-யிருந்தில னோரிடத்து மெங்கெங்கு மொருவ னாகித் - திருத்திய சமாதி விட்டுத் திரும்பிடா துறைக்க வுன்னி - யிருந்திருந் திடங்க ளெங்கு மேகமே நோக்கி நின்றான்." என்வும், "நகர்தனி லேகிப் பிச்சை நண்ணியே மனைக டோறு - மகமகிழந் தங்கையேற் றே யவ்விடத் தருந்தி யாங்கே - செகமுளோர் பேயென் றெண்ணிச் சிரித்திட நாணமின்றி - யிகபரத் திச்சை யற்றே யேகனா யுலாவ லுற்றான்." எனவும்வரும் குமாரதேவர் திருவாக்கானுமறிக. சிவபெருமான் பலியேற்கின்றமையின், "ஆண்டானெவ்வழி அடிமையவ்வழி" என்னும் பழமொழிக் கிணங்கத் திருவெண்காட்டடிகளும் பலியேற்கத் தொடங்கின ரென்பான், "எங்கணாயக னெனவிரந் தருந்துவார்." என்றனர், சிவபெருமான் பலியேற்றன ரென்பதை

"அம்பலத்தே கூத்தாடி யமுதுசெயப் பலிதிரியு - நம்பனையுந் தேவனென்று நண்ணுமது வென்னேடீ - நம்பனையு மாமாகே ஞான்மறைகடாமறியா - வெம் பெருமா னீசாவென் றேத்தினன்காண் சாழலோ." என்னும் ஆளுடைய வடிக ளருள்வாக்கானு மறிக. திருவெண்காட்டடிகள் அவ்வூரில் மிக்கசெல்வமும் த்க கீர்த்தியு முடையவராய் வாழ்ந்தாராகலின், அத்தகையோர் இக்கால் இல்லங்க டோறுஞ் சென்றிரத்தலைக்கண்ட அவர் மரபினராகிய ஏனையவணிகர்கள் மான மீக்கூர்வாராய், திருவெண்காட்டடிகட்கு வேண்டியவரையில் நல்ல வார்த்தை கூறி இல்லறத்தில் முன்போலவே இருக்கவேண்டியும், அவ்வடிகள் அவர்கள் வேண்டுகோட் கிணங்காமையின் அவரிடத்து வெறுப்புற்றவர்களாகி, அவ் வூரி லுள்ள தங்கள் மரபினர்க்கெல்லாம், "இன்று முதல் திருவெண்காடருக்குப் பிட்சையிடாதொழிவீர்களாக." எனக்கட்டளையிட்டுத் தடுத்தார்களென் றுணர் த்துவான். "தங்களூரனமிடற்றடை செய்தார்கள்." என்றனர். (௬௦)

அடைவிலா வாலமிட் டப்ப மெய்ப்பயங்
கொடுசமைத் துடன்பிறந் தவள்கொ டுத்திடங்
கடுவிட னடியவர் கடுகி வாங்கினார்
முடிபொரு ளறிகில மூர்க்க மாக்களே.

(இ - ள்.) இனி விளையப்போகும் விஷயம் அறியாத மூர்க்கர்களான ஏனையவர்கள், பொருத்தமற்ற விஷமிட்டு ஒரப்பம் உண்மையான நெய்யைக் கொண்டு சமைத்து உடன்பிறந்தவளாற் கொடுப்பிக்க, கொடூரமுள்ள விட முண்டவரான சிவபிரானுடைய அடியவராகிய திருவெண்காட்டடிகள் அதி விரைவிலே வாங்கிக்கொண்டார்—எ-று.

அப்பத்திற்குப் பொருத்தமானவை சர்க்கரை நெய் முதலியவையும் பொருத்தமாகாதது விடமுமாகலின், "அடைவிலாவாலம்." என்றும், அவ்வாறு ஆலங்கலந்த அப்பத்தை ஏனையரைக்கொண்டு கொடுப்பியாமல் அத் திருவெண்காட்டடிகளின் தமக்கையைக்கொண்டே கொடுப்பித்தார்களென்பார், "உடன்பிறந் தவள் கொடுத்திட." என்றும், ஆலமிட்ட அப்பமென மெய்யுணர்வினாற்றெளிந்த திருவெண்காட்டடிகள், ஆலமுண்ட அண்ணலா ரடிய ராகலின் அச்சத்தினாற் றுமதியாது உடனே வாங்கினாரென்பார், "கடுவிட னடியவர் கடுகி வாங்கினார்." என்றும், அவ்வாறு செய்வித்த வணிகர்கள் இன்னது விளையும் என்றாகித் துணராத மூடர்களென்பார், "முடிபொருளறிகிலா மூர்க்கமாக்கள்" என்றும் கூறினர். ஆலமுண்டாரடியரை ஆலம் வருந்தாதென்னும் துணிவினால் அவ்வப்பத்தை அதி விரைவில் வாங்கினரென்பது கருத்து. ஆலமமுது செய்தாரடியார்க்கும் ஆலமமுதாமென்பதை, "பொடியார்க்குந் திருமேனிப்புனிதர்க்குப் புவனங்கண் - முடிவார்க்குந் துயர் நீங்க முன்னைவிட மமுதானற்-படியார்க்கு மறிவரிய பசுபதியார் தம்முடைய - வடியார்க்கு நஞ்சமுத மாவதுதா னற்புதமோ," என்னும் அருண்மொழித்தேவர் அமுதவாக்கானுமறிக. (௬௧)

வினையினைப் பிடித்தொன்று விளப்பி யப்பனீண்
மனையின்மேற் செருகினார் மனையின் மண்டழல்
துணைவுறப் பற்றவூர் துயர்கண் டன்னபோ
தனையவர்க் கிரங்கியா ரெரியை மாற்றினார்.

(இ - ள்.) அவர்களியற்றிய தீவினையைக் காரணமாகக் கொண்டு ஓர்வாக்கியம் திருவாய்மலர்ந்து, அவ் வப்பத்தை தமக்கையாரது நீண்ட மாளிகையின் மேற் செருகினார். உடனே அம்மாளிகையில் நெருங்கிய அக்கினியானது அதி விரைவாக அவ்வூரெங்கும் பற்றிக்கொள்ளலும், அத்தருணத்தில் அவ்வூரார் துயருறுவதை நோக்கியருளி, அவ்வூரார்க்காகத் திருவுளமிரங்கி ஊரெங்கும் நிறைந்த அக்கினியைத் தணித்தருளினார்—எ-று.

அவ்வூரார் ஒருமித்து இத்தீவினை இழைத்தமையின், இத் தீவினை இத்தகைய கெடுதியை விளைக்குமென்றவர்க் குணர்த்துவான். "தன்வினை தன்னைச்சுடும் ஒட்டப்பம் வீட்டைச்சுடும்" என்னும் ஓர் வாக்கியம் திருவாய் மலர்ந்து அவ்வப்பத்தை வீட்டின்மேற் செருகினாரென்பார், "வினையினைப் பிடித்தொன்று விளம்பியப்பனீண் - மனையின்மேற் செருகினார்." என்றும் இவர் செருகினது மனையிலேனும் அவ் விளைவுக்குக் காரணம் ஊரிலுள்ளாரெவருமாகலின் அதி விரைவில் ஊரெங்கும் பற்றியதென்பார், "மனையின் மண்டிழல் துணைவுறப்பற்ற." என்றும், பெரியோர்கள் இயற்கையிற் காருண்யராகலின், அவ்வாறு அத் தீவினையின் பயனை விளக்கியவுடனே, அப்பயனால் அவ்வூரவர்கள் படுந்துயரத்தைக் கண்டு திருவுள மிரங்கி அவ்வக்கினியைத் தணித்தாரென்பார், "ஊர் துயர்கண் டன்னபோதனையவர்க் கிரங்கியாரெரியை மாற்றினார்." என்றும் கூறினார். திருவெண்காட்டடிகள் ஒட்டப்பத்தை வீட்டிற் செருகிய மாத்திரத்தில் தீ எவ்வாறு பற்றியதெனின், அவரது சினத்தீயே அவ்வாறு பற்றியதென்க. பெரியோர்கள் சினத்தீ இத்தன்மைத்தென்பதை, குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி - கணமேனுங் காத்தலரிது." என்னும் திருக்குறளானுமறிக. (கஉ)

### எண்சீர்விருத்தம்.

தங்களைக் கேட்டுப் பிறந்தில மென்னுந் தடந்தமிழ் சாற்றினாரதற்பின், பொங்கெரி புகுந்தவ் வூரெலா முண்ணப் பூம்புகார் மாந்தர்க ளெவருஞ், செங்கண லவியா திரங்கினா ரதனாற் சிறியவ ரறிவிலா தவரென், றங்கியை யவித்தார் பலபுர மெரித்தா ரடியரோர் புரஞ்சுட லரிதோ.

(இ - ள்.) திருவெண்காட்டடிகள் மீண்டும் "தங்களைக் கேட்டுப் பிறந்திலம்." என்னும் முதலையுடைய விசாலித்த ஓர் தமிழ்க் கவிதையைத் திருவாய் மலர்ந்தனர். அவ்வாறு திருவாய்மலர்ந்தபிறகு பெருந்தீ பிரவேசித்து அவ்வூர் முழுமையும் தனக் கிரையாகக்கொள்ள, அக் காவிரிப்பூம் பட்டினத்திரு

ந்த மனிதர்களனைவரும், செந்நிறமுள்ள அவ் வக்கினி தணியாமையினால் வருந்தினர். அவ்வாறு வருந்திய திறத்திற் சிறியோர்களுணர்வற்றவர்களென்று திருவுளங்கொண்டு, அவ் வக்கினியையும் தணித்தார். பல உலகங்களையும். எரித்தருளிய சிவபிரானடியார் இவ்வொரு நகரத்தை எரித்தருள லருமையோ —எ-று.

அவ்வூரார் முன்பு தணிந்ததீ தங்களாலியற்றிய காரியங்களாற் றணிந்ததெனக் கருவித்தமையுணர்ந்த திருவெண்காட்டடிகள். திருவருட் செயலாற் றணிந்த தென்றுணர்ந்து செருக்கறுமாறு, மீண்டும் "தங்களைக் கேட்டுப் பிறந்திலம்." என்னும் கவிதை திருவாய்மலர்ந்து தீப்பற்றச் செய்தனரென்க. சிவபிரான் சங்கிர்த்தியத்தை மேற்கொண்டகாலத்து அளவிறந்த உலகங்களையும் தகித் தருளுகின்றனராகலின், அவர்க்கு மெய்யடிமை பூண்ட திருவெண்காட்டடிகள் இவ் வோரூரைத் தகித்த லருமையோ என்றார். (௩௩)

பின்னருந் தமையே முன்னைநாட் கருதிப் பெறலருந் தவத்தி ணாற் பெற்ற, வன்னையைக் குறித்துக் குடியிருந் துன்வீ டனலிடு வேனென வறைவா, ரின்னவா சகத்தா லென்கொலோ வென்றென் றிரங்குவார் நகருளோ ரெவரும், பன்னுமவ் வன்னை யிறந்த நாள் வாக்கா லாக்கைதீப் பற்றிடப் பணித்தார்.

(இ - ள்.) அதன்பிறகும் முற்காலத்திற் பிள்ளைப்பேற்றைச் சிந்தித்துப் பெறுதற்கரிய அருமையான தவத்தால் தம்மை ஈன்றருளிய மாதாவைப்பற்றி, குடியிருந்த உன் வீட்டை அக்கினிக் கிரையாக்குவேனென்று கூறுவார். இவரிவ்வாறுரைககும் வார்த்தையால் யாது விளையுமோவென்று நகரத்துள்ளாரனை வரும் வருந்துவார்கள். சொல்லுகின்ற அம் மாதா இறந்த தினத்திலே தம்முடைய வாக்கினாலே, அச் சரீரத்தில் அக்கினிப் பற்றும்படி கட்டளையிட்டார்— எ-று.

அவர் மாதா புத்திரப்பேற்றைக் கருதிப் பலவகைத் தவங்கள் புரிந்து அவரை ஈன்றமையின், அவ் வறுமை தோன்ற, "தமையே முன்னை நாட் கருதிப் பெலவருந் தவத்தினாற் பெற்றவனை." என்றும் அத்தகைய மாதாவுக்குத் தாமியற்றவேண்டிய ஈமங்களை இயற்றத் தாம் கடைமைப் பட்டவராகலின் அக் கருத்துத்தோன்ற, "குடியிருந்துன் வீடனலிடுவேனென வறைவார்." என்றும், அவ் வார்த்தையைக்கேட்ட நகருளோரனைவரும், முன்பிவர் தீவிளைக்க அதனால் அச்சமுற்றோராகலின் மீண்டும் எவ்விதத் தீயை விளைவிப்பாரோ என்றெண்ணி வருந்துவோராயினரென்பார், "இன்ன வாசகத்தா லென்கொலோ வென்றென் றிரங்குவார் நகருளோரெவரும்." என்றும், அவ்வாறே அவ் வன்னையார் இறந்த தினத்திலே தாம் திருவாய்மலர்ந்த ஓர் பாடலினாலேயே அவர் சரீரம் தீக்கிரையாகும்படி கட்டளையிட்டனரென்பார், "பன்னுமவ்வன்னை யிறந்தநாள் வாக்கா லாக்கை தீப் பற்றிடப் பணித்தார்." என்றும் கூறினர். புத்திரப்பேற்றுக்காக மாதாபிதாக்கள் புரியும் தவம் இவை யென்பதை, "தங்

கையே முதலா மிக்க கடவுண்மா நதியிற் றோய்ந்தும் - பங்கயா சனன்மா றிங்கட் பவளவார் சடையான் றன்னை - யங்கையாற் பூசைசெய்து மதிதிகட் களித்துந் தீயிற் - பொங்குமா குதிக ளீந்தும் பூவலம் வந்துந்தேவர்.'' எனவும், ''ஆலயஞ் சாலை யாக்கி ராரநந் தனவ னங்கள் - கோலமாரிலஞ்சி கூடங் குளம்பல செய்து மீரேட் - டேனுமா தானத் தோடே யிரண்ய முதலீ ரைந்து-சாலநற் றான மீந்துந் தருமமெண் ணான்கு செய்தும்.'' எனவும், ''தவம்பல புரிந்து வேந்தன் றனையனைப் பூத்த பின்னர்ப் - பவந்தனைத் துடைத்தேன் மேலாம் பரமநற் பதமு முண்டென் - றுவந்துசா தகன் மத்தோ டொழிவறு கருமமெல்லா -முவந்தரச் செய்து நாம நமன்மகா ராஜனென்றே.'' எனவும் வரும் குமாரதேவர் திருவாக்கானும். தமது திருவாக்கால் அன்னையார்சரீரம் அக்கினிக் கிரையாகும்படி கட்டளையிட்டன ரென்பதை, ''முன்னை யிட்டதீ முப்பு ரத்திலே - பின்னை யிட்டதீ தென்னி லங்கையி—லன்னை யிட்டதீ யடிவ யிற்றிலே-யானு மிட்டதீ மூள்க மூள்கவே. என்னும் திருவெண்காட்டடிகள்திருவாக்கானுமறிக.

## கோச்சகப்பா.

> எண்ணும்ப சுங்குடிபன் னீரா யிரவருள்ளு
> நண்ணும் பிறருள்ளு நல்லோர் பலர்குழுமி
> யண்ணலே யேகுதியோ வாரா வமுதேயெங்
> கண்மணியே யென்னுக் கனிந்து கலாந் தழுதார்.

(இ - ள்.) அதன்பின் யாவராலும் மதிக்கப்படும் செல்வ மிக்க வைசியர்களாகிய பன்னீராயிரங் குடிகளிலும். அன்றி அவ்வூரிற் சேர்ந்துள்ள பலவகை மரபினர்களிலும் பெரியோர்களாகிய பலர் ஒருங்குகூடி, பெருந்தன்மை வாய்ந்தவரே! தெவிட்டாத அமுதம்போன்றவரே! எங்கள் கண்களுக் கோர் மணி போன்றவரே! எங்களை விட்டுச் செல்கின்றீரோ ? என்று கூறி மிகக் கனிவுடையவர்களாய் மனமுருகித் துக்கித்தார்கள்—எ-று.

அக் காவிரிப்பூம் பட்டினத்தில் தம் மரபினர்களாய்ச் செல்வ மேம்பாடுற்ற பன்னீராயிரங் குடிக ளிருந்தமையானும், அக் குடிகளிற் பெரியோராயுள்ளாரும், அந்நகரத்தின் ஏனைய மரபினருட் பெரியோராயுள்ளாரும் இத் திருவெண்காட்டடிகளின் மேம்பாட்டை நன்குணர்ந்தார்க ளாகலாலும், அவ் வடிகள் தம் தாயாருக்குரிய ஈமக்கடன்களை நிறைவேற்றியேகுதலைக் கண்ட வளவிற் கருத்திளகி மனமுருகித் துக்கித்தார்க ளென்றபடி, எனவே திருவெண்காட்டடிகளின் மரபினர் அவர் பிரிவாற்றாமையைக்கண்டு துக்கித்தது மரபாபிமானத்தின்மேலேனும் உறவின்முறைப் பந்தத்திலேனு மிருக்கினும், ஏனைய மரபினருட் பெரியோரும் இவ்வடிகளின் பிரிவுக் காற்றாராய் மனங் கரைந்து துக்கித்ததெற்றுக்கெனின், அவ்வடிகள் உறவினர்பகைவர் என்னும் பேதமின்றி யாவரிடத்தும் ஒரேதன்மைத்தாயிருந்ததாலென்க, பெரியோர்கள் இத்தன்மையுடையரென்பதை, ''ஓடுந் தனமும் புகழும் பழியு முயர்விழியுங் - கேடுந் திருவு மமுதமும் புற்கையுங் கேள்பகையும் - வீடுங் குடிலு மகளிரு மன்னையும் வேற

றீவே - நாடுக் கருத்து வருமோ வெனக்கென்னதந் நாயகமே." என்னும் சிவப்பிரகாசசுவாமிகள் திருவாக்கானுந் தெளிக. இத் திருவெண்காட்டடிகள் அக்காவிரிப்பூம் பட்டினத்துள்ள ஏனைய வணிகர்கட்குச் செல்வத்தின் மேம்பட்டிருந்தது போன்றே அறிவினும் மேம்பட்டவராய்ச் சகலர்க்கும் மெய்யறி வூட்டி வந்தாராகலின், "அண்ணலே" என்றும், அவ்வாறு அவ்வடிக ளூட்டிவரும்மெய்யறிவானது, அமுதம் புசித்தோர்க்கு மீண்டும் பசிநோ யெய்தாதவாறுபோல் அறியாமை தலைகாட்டவொட்டாமற் செய்தபடியாலும், அவர் திருவாக்கைக் கேட்கக்கேட்க வெறுக்காது அமுதம்போன்று அபேட்சையைத் தருதலினாலும், அத்தகைய அமுதமுடையாரையே அமுதமாக உபசரித்து. "ஆராவமுதே." என்றும், கண்க ளிரண்டும் மிக்க விசாலமுடையதாய்க் கருமையும் வெண்மையும் படைத் திருக்கினும் உள்ளீடாகிய மணியே ஒளிதருவதாகலின், தாங்கள் யாவரும் கண்களாகவும் அக் கண்களுக் கொளிகொடுக்கும் மணி திருவெண்காட் டடிகளாகவும் உவமித்து, "கண்மணியே." என்றும் கூறினரென்க. (௬௫)

ஆதித்த னேலாத வம்பரம்போ லிந்நகரம்
பேதிக்கு மென்னிலிஃ தென்னும் பெரியோனே
தீதகற்றற் கையனை நீ யெண்ணுந் திறம்போலுன்
பாதத்தை யெண்ணிப் பணிகின்றோம் பண்ணவனே.

(இ - ள்.) பெரியவரே! இக் காவிரிப்பூம் பட்டினமானது சூரியன் பொருந்தாத ஆகாயத்தைப்போல மாறுபடுமாகில் இது எதாய்முடியும், பிறவிக்கொடுமையை நிவாரணத்திற்குத் தேவரீர் எவ்வாறு சிவபிரானைத் தியானிக்கின்றீரோ அத்தன்மையைப் போன்று, அடியேங்கள் தேவரீர் திருவடிகளை வணங்குகின்றோம் சுவாமி! —எ று.

இத் திருவெண்காட்டடிகள் அக் காவிரிப்பூம் பட்டினத்தில் ஞான திவாகரராக விளங்கியிருந்தமையின் அந்நகரத்தில் அஞ்ஞானமென்னும் அந்தகாரம் தலைகாட்டாது மறைந்திருந்தது. இனி இத்திவாகரர் அங்கு விட்டுப் பெயரின் அந்நரம் எவ்வாறாய்விடுமோ என்னும் ஏக்கத்தினால், அப் பெரியோ ரனைவரும் "ஆதித்தனேலாதவம்பரம்போலிந்நகரம் - பேதிக்கு மென்னிலிஃதென்னும்பெரியோனே" என்றொன்றும், தேவரீர் பிறவிக்கொடுமையை நிவாரணத்திற்குச் சிவபிரானை எவ்வாறு பணிகின்றீரோ அது போன்றே, அடியேங்களும்எங்கள் பிறவிக்கொடுமையை நிவாரணித்தற்குத் தேவரீர் திருவடிகளைப் பணிகின்றோம், அது குறித்துத் தேவரீர் இவ்விடத் தெழுந்தருளி யிருக்க வேண்டுமெனப் பிரார்த்தித்தாரென்பார், "தீதகற்றற் கையனை நீ யெண்ணுந்திறம்போலுன் - பாதத்தை யெண்ணிப்பணிகின்றோம் பண்ணவனே" என்றும் கூறினர். எனவே, சிவஞான முடையோர் ஞானதிவாகரரென்பதும், அன்னோர் சிவனடிகளைஇடைவிடாது பற்றுதல் போன்று அன்னோர் திருவடிகளை இடைவிடாது பற்றுதலே மெய்யடியாரிலக்கணமென்பதும் கருத்து. சிவஞானமுடை

யோர் ஞானதிவாகரரென்பதை, 'முத்தியே வடிவமான முடியுடை வேந்தர் வேந்த - னெத்திசை தனக்கும் ராஜனெமைவிட வேறில்லென்று-சத்தியமாக வெண்ணித் தன்னிட மதனிற் றன்னைச் - சுத்திசெய் தனைத்து மாகிச் சுயஞ் ஜோதியாகி நின்றான்.'' என்னும் குமாரதேவர் திருவாக்கானும், அன்னோர் திருவடிகளை இடைவிடாது பற்றுதலே மெய்யடிய ரியல்பென்பதை, ''செங்கமலத் தாளிணைகள் சேர லொட்டாத் திரிமலங்க ளறுத்தீச னேசரொடுஞ் செறிந்திட் - டங்கவர்தந் திருவேடமாலயங்க ளெல்லா மரனெனவே தொழுதிறைஞ்சியாடிப் பாடி - யெங்குமியாமொருவர்க்கு மெளியோ மல்லோம் யாவர்க்கு மேலானே மென்றிறுமாப் பெய்தித் - திங்கண்முடி யாரடியா ரடியோமென் றுதிர்ந்திடுவர் சிவஞானச் செய்தியுடையோரே.'' என்னும் சிவஞான சித்தித்திருவிருத்தத்தானுந் தெளிக. (கூ)

முன்னிச் சுடப்படுவா ரில்லாத முப்புரங்கள்
வன்னிக் கிடுமவன்போன் மாதாவின் முப்புரங்க
டொன்மைச் சுடர்ஞான வங்கியிறைற் சுட்டளித்தா
யின்னற் படுவோமுக் கின்னருளொன் றீந்தருளாய்.

(இ-ள்.) இவ்வாறியற்றலாமென்றெண்ணித் தகிக்கத் தக்கவரில்லாதிருந்ததிரி புரங்களை அக்கினிக் கிரையாக்கிய சிவபிரானைப்போன்று, தாயின் மூன்றுசரீரங்களையும், புராதனமான சோதிமயமாகிய ஞானக்கினியாற் றகித்தருளினவரே, துயரப்படுகின்ற அடியேங்களுக்கு இனிமையான ஓர் திருவருளைப் பாலித்தருள்வீராக—எ-று.

வித்துன்மாலி தாரகாக்கன் கமலாக்கன் என்னும் மூன்றசுரர்கள் தாரகனுக்குப் புத்திரர்களாய்த் தோன்றிப் பிரமனைநோக்கிப் பெருந்தவம் புரிந்து, அவன் பிரசன்னமானபோது; சொர்க்கம் மத்தியம் பாதலமென்னும் மூவுலகத்திலும் தாங்கள் மூவரும் வசிக்கவும், அம் மூவிடங்களிலும் முறையே பொன் வெள்ளி இரும்பு என்னும் மூவகை யுலோகங்களாற் கோட்டைகளும் வாய்க்கப் பெற்று, சிவபிரானைத்தவிர மற்றையெவராலும் அழியாதிருக்கவும் வரம் பெற்றிருந்தனராகலின், ''முன்னிச்சுடப்படுவாரில்லாத முப்புரங்கள்.'' என்றும், அத்தகைய புரங்களை அக்கினியின்றியே தமது நகையாற்றானே தகித்தனரென்பார், ''வன்னிக்கிடுமவன்போல்.'' என்றும், திருவெண்காட்டடிகள் தமது தாயாரின் தூலசரீரத்தைத் தகித்தபோதே சூட்சுமம் காரணமென்னும் இரண்டும் காணதொழிந்தனவாகலின், ''மாதாவின் முப்புரங்க - டொன்மைச் சுடர்ஞான வங்கியினாற் சுட்டளித்தாய்.'' என்றும், தேவரீர் இந்நகர்விட்டேகுதலாற் றுயரப்படுகின்ற எங்களுக்குத் தேவரீர் இவ்விடத்திலேயே எழுந்தருளியிருப்பதாக வாக்கருளித் திருவருள் பாலிப்பீர் என்பார், ''இன்னற் படுவோமுக் கின்னருளொன் றீந் தருளாய்.'' என்றனரென்று கூறினர். வித்துன்மாலி தாரகாக்கன் கமலாக்கன் என்னும் மூன்றசுரர்களும் இவ்வாறு வரம்பெற்று மூன்று கோட்டைகளும் பெற்றிருந்தன ரென்பதையும், அக்கோட்டைகள் மூன்றையும் சிவபிரான்

நகைத்தெரித்தனரென்பதையும், "தாலமேற் புகழ் வைத்துள்ள தாரகன் சிறு ராய் வித்துன் - மாலியே தார காக்கன் வயக்கம லாக்க னென்ன - வேலுலாந் தடக்கைவென்றி வீரர்கள் மூவர் பாவ - மூலகா ரணம தாயமுக்குற்றம் போலு ண்டானூர்." என்றும், "பேருக மனேக மெண்ணில் பெரும்புவி யண்ட மாண்ட-தாருக னுயிர்கூற் றுண்ணச் சட்டகங் கடைவாய் பெய்தெய்த் - தோருகவயி லிற் செவ்வே டொலேத்தபின் மூவ ரும்பங் - கேருக விறையை நோக்கிக் கெட லருந் தவமுயன்றூர்." என்றும், "மூவுலகத்துமொன்ற மூவெயிலளிக்கவேண்டு-மூவரு மவனுறைந்து முடிவிலா வுகங்க ளாண்டு - மேவலாச் செருக்கவேண்டும் பத்துநூ றுண்டிற் கோர்கான் - மேவுற வெயில்கண் மூன்றுங் கூடவும்வேண்டுமென்றே." என்றும், "இன்னமு மொன்றுண்டைய வெந்தமக் கிருதிநாளுண்-டென்னினு மொருவ னேகின் றெளிதினி லாட லேபோற் - றன்னொரு கணையா லெம்மை யொருங்குறத் தடிவ தல்லாற் - பின்னொரு செயலால் வெல்லாப் பெருமையும் வேண்டு மென்றூர்." என்றும் வரும் சிவப்பிரகாசசுவாமிகள் திருவாக்கானும். சிவபிரான் அப்புரங்கள் மூன்றையும் தகித்து அவ்வசுரர் மூவரும் சிவபூசாதுரந்தரர்களாதலின் அவர்களை யடிமைகொண்டருளினரென்பதை, "எண்ணுடை மூவ ரிராக்கதர்க ளெரிபிழைத்துக் - கண்ணுத லெந்தை கடைத் தலைமு னின்றதற்பி - னெண்ணிலி யிந்திர ரெத்தனையோ பிரமர்களு-மண்மிசை மால்பலர் மாண்டனர்காண் டோணோக்கம்." என்னும் மணிவாசகப்பிரான் மலர்வாக்கானும், தூலசூக்கும காரணமென்னும் மூவகைச்சரீரங்களும் ஒன்றை விட்டொன்று நில்லாதனவாய் ஒன்றினென்று லயிப்பனவா யிருக்குமென்பதை, "தூலவிவ் வுடலை விடுத்துநில்லாது சூக்குமஞ் சூக்குமம் விடுத்துத் - தூலநில் லாதீ திரண்டையுட விடுத்துத் தொல்லுயிர் நிலாவுயிர் விடுத்துத் - தூல சூக்கும ங்கணின்றிடா துயிருஞ் சூக்கும மும்முடி வடைந்தாற் - றூலமு முடிவை யடைந்திடா திந்தத் தொல்லுல கினில்விழுந் திடுமோ." என்னும் குமாரதேவர் திருவாக்கானும தெளிக. சிவபிரான் எவ்வாறு அத்திரிபுரங்களை அக்கினியின்றி நகைத்தெரித்தனரோ அதுபோன்றே, திருவெண்காட்டடிகளும் தமதன்னையாருடைய மூவித சரீரங்களையும் அக்கினியின்றியே தமது திருவாக்கினலருளிய செய்யுண் மாத்திரத்தானே தகித்தமையின், சிவபிரான் செயலும் அவரடியார்செயலும் ஒத்திருத்தலுணர்க. அன்றியும், சிவபோதமுற்றூர் செய்கை சிவபோதமுற்றூர் செய்கைக்கு நேர்மாறுபடுதலுங் காண்க. (௬௭)

முத்துக் கொழித்து முழக்கெழுப்பு முன்னீரூர்க்
கொத்துக்குடிப்பெரியோ ரிவ்வாறு கூறுதலும்
வைத்துப் படர்வாரை முன்போய் மறிப்பாரா
யுய்த்துத் திருவடிமே லொன்று வணங்கினரால்.

(இ - ள்.) முத்துக்களைக் கொழித்துக் கோஷமுண்டாக்குகின்ற கடற்கரையிலுள்ள காவிரிப்பூம் பட்டினத்தின் கூட்டமாகிய குடிகளிலிருக்கும் பெரியோர்கள் இவ்வாறு ரைத்தவளவில், அவர்களை அங்ஙனே நிறுத்திச் செல்

நுகின்றவராகிய திருவெண்காட்டடிகளை எதிரிற்போய்த் தடுப்பவர்களாய், தங்கள் கால்களை விசையாய்ச்செலுத்தி அத்திருவெண்காட்டடிகளின் பாதங்களின்மேல் ஒரே தொகுதியாய்ப் பணிந்தார்கள்.—எ-று.

முத்துக்களைக் கொழித்துக் கோஷித்தல் கடற்கியல்பாகலானும் இக்காவிரிப்பூம்பட்டினம் கடற்கரையிலுள்ள நெய்தனிலமாகலானும், நெய்தனிலக்கருப்பொருள்களுள் முத்தே முதன்மையுடைத்தாகலானும், "முத்துக் கொழித்து முழக்கெழுப்பு முன்னீரூர்." என்றும், அக்காவிரிப்பூம் பட்டினத்தில் வணிகர் குடிகள் பன்னீராயிர மிருந்தமையானும், அக்குடிகளிலுள்ள பெரியோர்களனைவரும் இத்திருவெண்காட்டடிகளிடம் வந்திருந்தமையானும், "கொத்துக்குடிப் பெரியோர்." என்றும், அவர்களனைவரும் மேற்செய்யுளிற் கூறியவாறு பிரார்த்தித்தும், அப்பிரார்த்தனைக் கோருத்தரமுங்கூறாது சென்றானெனக் குறிப்பிப்பான், "வைத்துப்படர்வானை." என்றும், அப்பெரியோர்கள் யாவரும் அங்கு நின்றும் அவரெதிர்போய்த் தடுப்பவர்களைப்போல விரைந்துசென்று அவ்வடிகளின் திருவடிகளிற் பணிந்தார்களென்பார், "முன்போய் மறிப்பாராயுய்த்துத் திருவடிமேலொன்று வணங்கினர்." என்றும் கூறினர். அந்நகரத்துள்ள பெரியோர்கள் பிரார்த்தித்தபோது அப்பிரார்த்தனைக்குச் சற்றும் மனமிரங்காது மறுமொழிகூறாது வாளாசெல்லுதன் மரபோ எனின், இப்பெரியோர்கள் பட்டினத்தடிகள் செல்லும் பெருநெறிக்கு விலக்காகிய வசனங்களைக் கூறினமையின் அவர்கள் வார்த்தைக்கு மறுமொழிகூற மனமின்றி வாளாசென்றனரென்க. இவ்வாறு செல்லுதலே பெருநெறிபிடித்த பெரியோரியல் பென்பதை, "இந்த வுணர்வு நமக்கின்லுமெய்த வில்லை நாமிங்கே - யெந்த வுணர்வு கொடுநிற்பே மென்ன வமைச்சன் யூகித்து - வந்த வழியே தான்றிருப்பி வளப்பமுடைய மாபுரிக்கே-பந்தமுடையோ ருடனிருந்து பகர்ந்தா னரசனியற்கையெல்லாம்." எனவும், கேட்ட பேர்கண் மிகவியந்து கிட்டாவென்று மிம்முனிபோற்-றேட்ட முடனே யவரவர்க டேடி வந்து பணிந்திடவும்-வாட்ட முடனே தாய் தந்தை மனையாள் பதத்தில் வீழ்ந்திடவு-நாட்ட மாறு பாடின்றி நகைசெய் திருந்தானற்றவனே." எனவும், "வந்த பேர்களுடன் வார்த்தை மலரா திருப்ப தவமறிந்து பந்தமுடையோ நமக்கென்னை பகர்ந்தாற் றேன்று மெனத்திரும்பித்-தந்தமிடத்திற் சென்றார்க டவனுஞ் சிறிது நாட்கழித்துத்-தொந்தமொன்று மில்லாத சுயமாமுத்தி தானுனன்." எனவும் வரும் குமாரதேவர் திருவாக்கானும் தெளிக. எனவே, பெருநெறிசெல்வாரைப் பிழைபடக்கூறி மறுத்தல் பிழையேயன்றி, அவர்க்குத்தரங்கூறாது தம்நெறி பிசகாவண்ணம் அப்பெரியோர் செல்லுதல் பிழையன்றென்பது கருத்து அன்றியும், பெருநெறிசெல்ல உண்மையிற் கருதினேரைத் தடுத்துச் சிறுநெறி செலுத்தவும், சிறுநெறியின் இழிபு நோக்காது அந்நெறியிலேயே மகிழ்ந்து நாட்கழிக்கும் மதியிலிகளைப்பெருநெறியிற் செலுத்தவும், தினந்தோறும் ஓய்வின்றிப் பிச்சையெடுத்துத் திரிபவர்களை அவ்வண்ணம் பிச்சையெடாதிருக்கச் செய்யவும் எவராலுமேலாது. இதனை, "ஆவாரை யாரே யழிப்ப ரதுவன்றிச்-சாவாரை யாரே தவிர்ப்பவ-ரோவாமலையம் புகு

வாரை யாரே விலக்குவார்-மெய்யம் புவியதன்மேல்." என்னும் ஔவைப்பிராட்டியார் அமுதவாக்கானு மறிக. (௬அ)

### வேறு.

வணங்கினர்க் கருள்கூ ரெனுமுப தேச மறைப்பொருட் பாடலீந் திருந்திக், குணங்குறி யறியப் படாதமாப் பொருளே குலாயவெண் காட்டிடைக் குறுகி, யிணங்கிடும் போதி லிறைவர் தங் கோயி லேயவர் தூயவர் யாருங், கணங்கொள வெதிர்ந்தார் வணங்கிட வணங்கிக் காமர்பூங் கோயிலுட் புகுந்தார்.

(இ - ள்.) அவ்வாறு வழிமறித் தெதிர்த்துத் தம்மைப்பணிந்த அப்பெரியோர்கட்கு "அருள்கூர்." என்னும் முதலேயுடைய உபதேசம்புரியத் தக்க வேதார்த்த மடங்கிய திருப்பாடலொன்றைத் திருவாய்மலர்ந்து, அவர்களை அங்ஙனே இருக்கச்செய்து, குணங்குறிகளறியப்படாத பரம்பொருளான சிவபிரானே குலாவி வீற்றிருக்கும் திருவெண்காடென்னும் க்ஷேத்திரத்தைச் சமீபித்தடையும்பொழுது, சிவபிரானுடைய அத்திருவாலயத்துள்ளவர்களும் பெரியோர்களுமாகிய அனைவரும் கூட்டமாகக்கூடி எதிர்கொண்டவர்களாய்ப் பணியத்தாமும்பணிந்து மிக்கஅழகுடைய திருவாலயத்தினுட்பிரவேசித்தனர்-எ-று.

அப்பெரியோர்கட் கோருபதேசமாக "அருள்கூர்" என்னும் முதலேயுடைய ஓர் திருப்பாசுரம் திருவாய்மலர்ந்து அவர்களை அங்ஙனே நிறுத்தித்தாம் திருவெண்காட்டை யடைந்தனரென்க. அப்பாசுரம் இவ்வடிகளின் திருப்பாடல்கள் ஒருங்குசேர்ந்துள்ள பதினோராந் திருமுறையினும் தனிப்பாடல்களினும் காணப்படாமையின் மறைந்ததாகக்கொள்ளவேண்டும். அப்பாடல் வேதத்தின் சாரமாகிய உபநிடதார்த்தப் பொருளடங்கியதென்று குறிப்பிப்பான், "உபதேசமறைப்பொருட்பாடல்." என்றும், திருவெண்காடென்னும் க்ஷேத்திரம் குணங்குறி கடந்த பரம்பொருளான சிவபிரான் திருவுளக்களிப்புடன் வீற்றிருக்கும் பெருமிதமுடையதென்று விளக்குவான், "குணங்குறியறியப்படாத மாப் பொருளே குலாயவெண்காடு" என்றும், இவ்வடிகளெழுந்தருளுதலேக்கேட்ட அவ்வாலயத்துள்ளாரும் ஏனைய மெய்யன்பராய பெரியோர்களும் ஒருங்குகூடித் தங்கண் முறைமைப்படி எதிர்கொண்டு பணிந்தார்களென் றுணர்த்துவான், "இறைவர்தங்கோயிலே யவர் தூயவர் யாருங்-கணங்கொள வெதிர்ந்தார் வணங்கிட" என்றும், அப்போது திருவெண்காட்டடிகளும் அவர்களை வணங்கினரென்றறிவிப்பான், "வணங்கி." என்றும் கூறினார். சிவபெருமான் குணங்குறி கடந்தவர் என்பதை, "பலகலையா கமவேதம் யாவையினுங் கருத்துப் பதிபசுபாசந்தெரித்தல் பதிபரமே யதுதா-னிலவுமரு வுருவன்றிக் குணங்குறிக ளின்றி நின்மலமா யேகமாய் நித்தமாகி-யலகிலுயிர்க் குணர்வாகி யசலமாகி யகண்டித மாயானந்த வுருவா யன்றிச் - செலவரிதாய்ச் செல்கதியாய்ச் சிறிதாகிப் பெரி

தாய்த் திகழ்வதுதற் சிவமென்பர் தெளிந்துளோரே." என்னும் உமாபதிதேவ நாயனார் திருவாக்கானும், மெய்ஞ்ஞானியர் ஓர் தலத்திற்கெழுந்தருளுகின்றன ரெனக் கேள்வியுற்றபோதே, அத்தலத்துள்ள மெய்யன்பர்களனைவரும் எதிர் கொள்ளுதன் முறைமையென்பதை, "பொங்கு கொங்கையிற் சுரந்தமெய்ஞ் ஞானமாம் போனகம்பொற்குன்ற-மங்கை செய்கையாலூட்டவுண் டருளிய மத லையார் வந்தாரென்-றங்கண் வாழ்பெருந் திருத்தில்லை யந்தண ரன்பர்க ளுடனீ ண்டி - யெங்கு மங்கல வணிமிக வலங்கரித் தெதிர்கொள வணைவார்கள்." என வும், "வேத நாதமு மங்கலமுழக்கமும் விசும்பிடை நிறைந்தோங்கச் - சீதவாச நீர் நிறைகுடந் தீபங்க டிசையெலா நிறைந்தாரச்-சோதிமாமணி வாயிலின்புறஞ் சென்று சோபன வாக்கமுஞ் சொல்லிக்-கோதி லாதவர் ஞானசம்பந்தரை யெ திர்கொண்டு கொடுபுக்கார்." எனவும் வரும் அருண்மொழித்தேவர் அமுதவாக் கானுமறிக. அத்தலத் திருவாலயம் ஏனைய தலங்களிலுள்ள திருவாலயங்க ளெ வற்றினும் மிக்க மேம்பாடுற்ற அழகமைந்ததெனக் குறிப்பிப்பான். "காமர்பூங் கோயில்." என்றார். (ருக)

அன்பினு லுருகி யாதரம் பெருகி யையனே யமுதவா ரிதியே, என்பெலாப் பிழைகள் பொறுத்தளித் தனையே யிளம்பிறைப் பவள வேணியனே, பொன்புனை பொருளே யென்றவப் பொழுதிற் பூசுரர் மாணிக்கக் கந்தை, யின்பறக் கொடுத்தா ரிறையவ ருடுத்தற் கென் றன ரென்செய்தா ரிவரே.

(இ-ள்.) மெய்யன்பினாலே மனவுருக்கமெய்திக் காதலதிகரித்து, எமது தலைவரே! பாற்கடல்போன்றவரே! அடியேனுடைய கொடும்பிழைகள் யாவை யும் மன்னித்துப் பரிபாலித்தீரே! இளஞ்சந்திரனையணிந்த பவளம்போன்ற சிவந்த சடையையுடையவரே! பொன்போலழகமைந்த பொருளாயிருப்பவரே! என்று துதித்தபோது, அங்குள்ள மறையவர்கள் சிவபிரான் உடுத்துக்கொள்வ தற்காக, இரத்தினங்களிழைத்த வஸ்திரமொன்றைத்தந்தனரென்றீர்கள். இவர் என்செய்தாரென்று திருவுளங்கொண்டு.—எ-று.

ஒருவருக்குப் புண்ணியமுடைமையை விளக்குவது அன்பேயென்பதும், அவ்வன்பே ஆதாரத்திற்குக் காரணமென்பதும், அத்தகைய அன்புடையார்க்கே மனவுருக்கமுண்டாமென்பதும், அன்புடைய சரீரமே உயிருள்ள சரீரமென்ப தும், அஃதில்லார் சரீரம் உயிரில்லாச் சரீரமென்பதும் நூற்றுணிபாகலின், "அன்பினுலுருகி யாதரம்பெருகி." என்றும் தலைவராயிருப்போர் பாற்கடல் போன்று விசேடித்த இனிமையுடையராதலும், அவ்வினிமையால் தமதேவல ரிழைத்த பிழைகளைப் பொறுத்தருளும் இயற்கையாகப் பெற்றிருப்பாராகலின், "ஐயனேயமுதவாரிதியே-யென்பொலாப்பிழைகளைப் பொறுத்தளித்தனையே" என்றும், அத்தகைய தலைவர் இதற்குமுன் எவருடைய பெரும்பிழையேனும் பொறுத்துள்ளாரோவெனின், சந்திரனியற்றிய பெரும்பிழையானேர்ந்த சாபம் காரணமாகக் குறைந்த கலைகளுடையவனாகித் தம்மைச் சரணடைந்தவுடன், அச்சாபத்தை நிவாரணித்துத் தமது சடையிற்றானே சதாகுடியிருக்க வைத்தா

சென்று விளக்குவான், "இளம்பிறைப் பவளவேணியனே." என்றும், அத்தகைய தலைவர்பொன்போலும் விளங்குகின்றவரென்றறிவுறுத்துவான், "பொன்புனைபெருநேனே" என்றும் கூறினர். புண்ணியமுடைமையை விளக்குவது அன்பேயென்பதை, "அறத்திற்கே யன்புசார் பென்பவறியார் மறத்திற்கு மஃதே துணை." எனவும், அவ்வன்பே ஆதாரத்திற்குக் காரணமென்பதை, "அன்பீனு மார்வமுடைமை யதுவீனு-நண்பென்னு நாடாச்சிறப்பு." என்வும், அவ்வன்புடையார்க்கே மனவுருக்கமுண்டாமென்பதை, "அன்பிற்கு முண்டோவடைக்குந்தா ழார்வலர்-புன்கணீர் பூச றரும்." எனவும், அன்புடைய சரீரமே உயிருள்ள சரீரமும் அஃதில்லாச் சரீரம் உயிரற்ற சரீரமுமாமென்பதை, "அன்பின் வழிய துயிர்நிலை யஃதிலார்க்-கென்புதோல் போர்த்த வுடம்பு." எனவும் வரும் திருக்குறள்களானும், தலைவராயுள்ளார் தமதேவலரிழைத்த பெரும்பிழைகளைப் பொறுத்தலியல்பென்பதை, "மறுத்தனன் யானுன் னருளறியாமையி னென்மணியே-வெறுத்தெனை நீவிட் டிடுதிகண்டாய்வினை யின்றொகுதி - யொறுத்தெனை யாண்டுகொ ளுத்தர கோசமங் கைக்கரசே - பொறுப்பரன் றேபெரியோர்சிறு நாய்கடம் பொய்யினையே." என்னும் மணிவாசகப்பிரான் மலர்வாக்கானும், சிவபிரான் சந்திரனுடைய சாபத்தை நிவாரணித்துச் சடையிற் றரித்தனரென்பதை, "சடையிடை புக்கொடுங்கி யுட்டங்குவெள்ளம் வளர்திங்கள் கண்ணியயலே - யிடையிடை வைத்ததொக்கு மலர்தொத்துமாலை யிறைவன்னிடங்கொள் பதிதான் - மடையிடை வாளைபாய முகிழ்வாய் நெரிந்து மணநாறு நீலமலரு - நடையுடை யன்னம்வைகு புனலடட்பை நனிபள்ளிபோலு நமர்காள்." என்னும் ஆளுடைய பிள்ளையார் அருள்வாக்கானும், சிவபிரான் பொன்போலும் திருமேனி யுடையாரென்பதை, "பொன்னார் மேனியனே புலித்தோலரைக் கசைத்து-மின்னார் செஞ்சடைமேன் மிளிர்கொன்றை யணிந்தவனே-மன்னே மாமணியே மழபாடியுண் மாணிக்கமே - யன்னே யுன்னை யல்லா லினியாரை நினைக்கேனே" என்னும் ஆளுடைய நம்பிக ளருள்வாக்கானு முணர்க. திருவெண்காட்டிலுள்ள திருவாலயத்தில் பட்டினத்தடிகள் செல்வதற்கு முன்னமே, சிவபிரான் அவ்வாலயத்தருச்சகர் கனவிற்றோன்றி, அவ்வடிகளின் விரத்தியை அனைவர்க்கும் தெளிவிக்குமாறு, ஓர் இரத்தினமிழைத்த பீதாம்பரத்தை அவ்வருச்சகர் வசமளித்து, இதனைப் பட்டனத்தடிகள் வசம் அளிப்பீரெனத் திருவாய்மலர்ந்து கரந்தருளினராகலின், "பூசுரர் மாணிக்கக் கந்தை யின்புறக் கொடுத்தாரிறையவருடுத்தற்கென்றனர்." என்றார். (௫௦)

நாயினுக் காகா மணியிர ணியங்க ளுயனுக் காகுமோ வென்று, வாயினிற் புகலா முனமுதறினரான் மாணிக்கக் கந்தை யாங்கனைத்தும், போயின நக்க னெனும்பெயர் புதுக்கிப் பிணர்திசைத் திருவுடை யாடை, யாயின ரனந்த வன்பருக் கின்ப வருட்செல்வம் விளக்கினா ரன்றே.

(இ-ள்.) அவ்வாறு அப்பீதாம்பரம் அக்கோபிலர்ச்சகர் கொடுத்தவுடனே, நாயனைய அடியேனுக்குப் பயனற்ற இவ் விரத்தினம் பொன் என்னும் இவைகள் தலைவராகிய சிவபிரானுக்குப்பயன்படுமோ என்று வாயாற்கூறி முடிவதற்கு முன்பே உதறிவிட்டனர். இரத்தினங்களிழைத்த அவ் வஸ்திரம் முழுவதும் கிழிந்துபோயிற்று. அப்போது நக்கனென்னும் சிவபிரானுக் குரிய திருநாமத்தைப் புதியதாகச்செய்து, கலந்திருக்கின்ற திசைகளென்னும் செல்வமமைந்த வஸ்திரமுடையவராயினர். அதுகண்ட அனேக மெய்யடியார்கட்கு இன்பமிக்க திருவருட் செல்வத்தை மேன்மேலும் விளங்கச்செய்தனர். —எ-ன். ஆல் ஆங்கு அன்று ஏ - அசைகள்.

அடியேனுடைய விரத்தியினால் ஓர் பொருளாக மதிக்கப்படாத இவ் விரத்தினம் பொன் என்னு மிவைகள், அவ் விரத்தியை அடியேனுக்கருளிய தலைவராகிய சிவபிரானுக்கு மதிப்புள்ளதாகுமோ என்று விரைந்து உதறினாரென்பார், "நாயினுக்காகாமணியிரணியங்களுபனுக்காகுமோவென்று - வாயினிற் புகலாமுனமுதறினர்." என்றும், அவ்வாறுதறியவுடனே அதிலிருந்த இரத்தினங்கள் சிதறினதுடன் அவ்வஸ்திரமும் கிழிபட்டது என்பார், "மாணிக்கக்கந்தையனைத்தும் போயின." என்றும், சிவபிரான் திகம்பாராகலின் அது காரணமாகப் பிறந்தநக்கனென்னும்பெயர் புராதனமாயிருந்ததை இன்று புதுப்பித்தனரென்பான், "நக்கனென்னும் பெயர் புதுக்கி." என்றும், உடனே நக்கனென்னும் பெயர்க்குரிய நிருவாணி என்னும் பொருட்கியைந்த திகம்பரர் என்பதற்கேற்பத் திசைகளையே ஆடையாகவுடையாராயினரென்பான். "புணர் திசைத்திருவுடையாடையாயினர்." என்றும், தம்மைப்போன்ற அனேகமெய்யடியார்கட்கு இன்பம்பெருகத்தக்க திருவருட் செல்வத்தை மேன்மேற் பெருகச்செய்தாரென்பான், "அனந்தவன் பருக்கின்பவருட் செல்வம் விளக்கினர்." என்றும் கூறினர். மெய்ஞ்ஞானியர் மணிமுத்து பொன் முதலிய யாவும் அப் பெருமானாகவே பாவித்து உலகத்தாராலிச் சிக்கப்படும் இம்மணி பொன்முத்து என்னும் இவைகளிற் பற்றற்றிருப்ப தியல்பென்பதை, "அப்பனீ யம்மைநீ யன்புடைய மாமனு மாமியுநீ - யொப்புடைய மாதரு மொண் பொருளு நீ யொருகுலமுஞ் சுற்றமு மோரூருநீ - துய்ப்பனவு முய்ப்பனவுந் தோற்றுவாய்நீ துணையா யென்னெஞ்சந் துறப்பிப்பாய்நீ - யிப்பொன்னீ யிம்மணிநீ யிம்முத்துநீ யிறைவனீ யேறூர்ந்த செல்வனீயே." என்னும் ஆளுடைய வாசுகளருள்வாக்கானும், சிவபிரான் பிட்சாடனமூர்த்தங் கொண்டகாலத்து ஆடையின்றித் திக்கையே ஆடையாகக் கொண்டனரென்பதை, "நங்குற்றந் தீர்க்கும் பழமலை நாதர்க்கு நற்பலிகொண் - டங்குற்று மென்றுகில் போக்கினள் வெற்றரை யாகியந்தோ - விங்குற் றனையென வெம்பெரு மானிவ் விருநிலத்திற் - றங்குற்றம் பார்க்கு மவருள ரோவெனத் தாழ்ந்தனளே." என்னும் சிவப்பிரகாச சுவாமிகள் திருவாக்கானும், பெரியோர்கள் தாம்பெற்ற இன்பத்தை ஏனையரும் எய்திக் களிக்க இச்சையுறுவாரென்பதை, "தாமின் புறுவ துலகின் புறக்கண்டு - காமுறுவர் கற் றுணர்ந்தார்." என்னுந் திருக்குறளானும் தெளிக. அன்று ஏ என்பவற்றை அசைகளாக்க

கொள்ளாது அன்றே எனக்கூட்டி, மேற்கூறிய இன்பத்தை ஏனையோரும்பிற்ப ட்டுச் சின்னாள்கழித்துப் பெறவொட்டாமல் அந்தத் தினத்திலேயே அடையச் செய்தாரென்று விளக்கினாரென்னலுமொன்று.

(௬௧)

**அளக்கர்வெண் காட்டி லருட்டிருப் பொருந்தி யமர்ந்துலகறி வுறும் பொருட்டால், விளக்கினை வைய முய்யவென் பாடல் விளம் பினர் விளங்கிய மேலோர், களக்கனிக் களத்தா ரருட்பொருட் பிடி த்தார் கரும்பினு மினியசெந் தமிழ்ப்பாத், துளக்கறப் பாவி யுளக் கருத் துருகித் துளிக்கணீர் மழைபொழிந் துறைந்தார்.**

(இ-ள்.) மெய்ஞ்ஞானம் விளங்கிய மேம்பாடுற்றோராகிய திருவெண்காட் டடிகள், கடலாற் சூழப்பட்ட திருவெண்காடென்னும் க்ஷேத்திரத்தில், திரு வருட் செல்வமுடையவராய் வீற்றிருந்து, அப்பெருமான் திருவருளை உலகத்தா ரறியும்பொருட்டு மெய்ஞ்ஞான-தீபமாகிய சிவபெருமானை "வையமுய்ய" என் னும் முதலையுடைய திருப்பாடலைத் திருவாய்மலர்ந்தவராய், களாக்கனிபோன்ற நிறமுள்ள கண்டத்தினராகிய அப் பெருமானுடைய திருவருளென்னும் ஓர் பொருளைக் கைப்பற்றிக் கரும்பினும் மதுரமுள்ள செந்தமிழாலாகிய திருப்பா டல்களால் அசைவறத் துதித்து, சிந்தனையினாலே மனவுருக்கமுற்று, கண்ணீர் த் துளிகளாகிய கண்ணீர்த்துளிகளாகிய ஆனந்த பாஷ்பங்களை மழையாகப்பொ ழிந்துகொண்டு வசித்தனர்.—எ-று

வையமுய்ய என்னும் முதலையுடைய பாடல் இறந்ததாகக் கொள்ளவேண் டும். ஏனைய செந்தமிழ்ப் பாடல்களாவன—"பூதமுங் கரணம் பொறிகளைம் புலனும் பொருந்திய குணங்களோர் மூன்று - நாதமுங் கடந்த வெளியிலே நீயு நானுமாய் நிற்குநா ளுளதோ - வாதமுஞ் சமய பேதமுங் கடந்த மனோலய வின்பசா கரனே - யேதுமொன் றறியேன் யாதுநின் செயலே யிறைவனே யேக நாயகனே." எனவும், "யாவரே யிருந்தும் யாவரே வாழ்ந்தும் யாவரே யெமக்குற வாயுந் - தேவரீ ரல்லாற் றிசைமுக மெனக்குத் திருவுள மறியவே யுளதோ-பாவலா ரொருவன் செநதமிழ்க் கிரங்கிப் பரவையாருடலை மாற்ற - வேவலா ளாகி யிரவெலா முழன்ற விறைவனே யேகநா ,யகனே." எனவும், "உண்டதே யுண்டு முடுத்ததே யுடுத்து மடுத்தடுத் துரைத்ததே யுரை த்துங் – கண்டதே கண்டுங் கேட்டதே கேட்டுங் கழிந்தன கடவுநா ளெல்லாம்- விண்டதா மரைமே லன்னம்வீற் றிருக்கும் விழவறா வீதிவெண் காடா - வண் டரோ போற்ற வம்பலத் தாடு மையனே யுய்யுமா றருளே." எனவும் வருவன வாம் என்க. மெய்யன்புடையார்க்குச் செந்தமிழ்ப் பாடல்கள் திருவாக்கிற் றோ ன்றுதலும், மனவுருக்க முறுதலும், ஆனந்தபாஷ்பங்கள் பொழிதலு மியல்பெ ன்பதை, வெள்ளந்தாழ் விரிசடையாய் விடையாய் விண்ணோர் பெருமானே எனக்கேட்டு வேட்டநெஞ்சாய்ப் - பள்ளந்தா ழுறுபுனலிற் கீழ்மேலாகப் பதை த்துருகு மவர்நிற்க வென்னை யாண்டாய்க் - குள்ளந்தா னின்றுச்சி யளவுநெஞ் சாயுருகாதாலுடம்பெல்லாங் கண்ணா யண்ணா-வெள்ளந்தான் பாயாதாலெஞ்சங்

கல்லாங் கண்ணிணையு மரமாந்தீ வினையி னேற்கே." என்னும் மணிவாசகப்பிரான் மலர்வாக்கானு மறிக. (சஉ)

ஒருவிடை கொடுபின் றமக்குவந் தளித்த வுத்தம ருவப்புறு வுறையுந், திருவிடை மருதை நோக்கிநின் றிறைஞ்சிச் சிறந்தகாவ தம்பல கடந்து, மருவிடை யருந வாவியப் பதியி லெதிர்ந்தவர்வ ணங்கிட வணங்கி, யுருவிடை மருவு குருபரன் றிருமு னொருமையிற் பணிந்துரு கினரால்.

(இ-ள்.) அத்திருவெண்காட்டினின்றும் ஒப்பற்றவிடையைப்பெற்றுக்கொண்டு அதன்பிறகு, தமக்குத் திருவருள் பாலித்த, சிவபிரான் திருவுள்ளக்களிப்புடன் வீற்றிருந்தருளும், திருவிடைமருதூரென்னும் க்ஷேத்திரத்தைப்பார்த்து நின்று பணிந்து சிறப்புற்ற பலகாதவழிதூரம் தாண்டி, நன்மணம் இடையறாது பரிமளிக்கின்ற தடாகங்களையுடைய அத் திருவிடை மருதூரில் எதிர்கொண்ட மெய்யடியார்கள் தம்மைப் பணிந்திடத் தாமும் அவர்களைப் பணிந்து, உருவத்துடன் கலந்த குருமூர்த்தியாகிய மருதவாணருடைய சந்நிதிக் கெதிரில் ஒற்றுமையுடனே வணங்கி மனமுருகினர்.—எ - று ஆல் - அசை

மெய்யடியார்கள் ஓர் க்ஷேத்திரத்தைத் தரிசித்துத்திரும்புகையில் பெறுவது பிரியாவிடையாகையால், "ஒருவிடை" என்றும், திருவெண்காட்டினின்றும் திருவிடைமருதூர்க்குச் செல்லத் திருவுளங்கொண்ட பட்டினத்தடிகள் அங்கிருந்த வண்ணமே அந்த க்ஷேத்திரமிருக்கும் திசையை நோக்கிப் பணிந்தாரென்பார், "திருவிடைமருதைநோக்கிநின்றிறைஞ்சி." என்றும் திருவெண்காட்டிற்கும் திருவிடைமருதூர்க்கும் அநேககாத தூரமுள்ளன வென்பார், "சிறந்தகாவதம்பலகடந்து." என்றும், அத் திருவிடை மருதூரின்கணெழுந்தருளியிருக்கும் சிவபிரானை மருதவாணரென்னுந் திருநாமந்தாங்கித் திருவுருக்கொண்டு ஞானோபதேச மருளினராகலின், "உருவிடைமருவுகுருபரன்றிருமுன்." என்றும் கூறினர். (சரு)

உருகிநீ ரிடத்திற் பிறந்தவொண் கமல மொளிகொணீ ருதவிய தென்னப் பெருகுநீ ரருவி யிருவிழி பொழியச் சிவக்களி பிறங்கி நின்றாடி, யுருவெலாம் புளகம் பரந்திடத் தெளிந்த வுரைதழு தழுப்பவு மொருவி, மருவினு ரிறைதன் விடைகொடு மீண்டு வசித்தன ரங்கண்மா தவத்தான்.

(இ - ள்.) நீரிடத்திற் றோன்றிய ஒள்ளிய தாமரைமலர்கள் உருக்கமுற்று ஒளியுள்ள சலத்தைக் கொடுத்ததுபோல, இரண்டு கண்களும் பெருக்கெடுக்கும் ஆனந்தபாஷ்யத்தை யருவிபோன்று பொழியும்படி சிவானந்தம் விளங்கியிருந்து ஆனந்தக் கூத்தாடி, திருமேனி முழுவதும் புளகம்போர்ப்ப, தெளிவாகிய வார்த்தைகள் தழுதழுப்புறவு மிருந்து பிறகு, அம் மருதவாணரது விடையைப்

பெற்றுக்கொண்டு திரும்பி ஆலயத்தினின்றும் அந்த ஊரை யடைந்து அங்கரத்திற்றானே பெருந்தவமுடையராய் வசித்திருந்தனர்.—எ-று.

திருவெண்காட்டடிகளின் விழிகள் தாமரைபோல்வ தாகலானும், அத்தாமரை நீரிற் றோன்றுவதாகலானும், அவ் விழிகளில் ஆனந்தபாஷ்பம் சொரிவது தாமரைநீரைச் சொரிதல்போன் றித்தலானும், "உருகிசீரிடத் திற்பிறந்த வொண்கமல மொளிகொணீ ருதவிபதென்னப் - பெருகிநீருவ் யிருவிழிபொழிய" என்றும், மெய்யன்புடையார் ஆனந்தக்கூத்தாடுதலும் புளகாங்கிதங் கொள்ளுதலும் உரைதழுதழுப்பெய்தலும் இயல்பாகலின், "சிவக்களி பிறங்கிநின்றாடி - யுருவெலாம் புளகம்பரந் திடத்தெளிந்தவுரைதழுதழுப்ப." என்றும் கூறினர். இத்தகைய இலக்கணங்கள் இன்றியமையாதனவாய் மெய்யன்பருக்குளவென்பதை, "மெய்தா னரும்பி விதிர்விதிர்த் துன்விரை யார்கழற் கென் - கைதான் றலைவைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பியுள்ளம் - பொய்தான் றவிர்ந்துன்னைப் போற்றி சயசய போற்றியென்னுங்-கைதாமெனிழ விடேனுடையாயென்னைக் கண்டுகொள்ளே." எனவும், "ஆடுகின்றிலை கூத்துடை யான்கழற் கன்பிலை யென்புருகிப் - பாடுகின்றிலை பதைப்பதுஞ் செய்கிலை பணிகிலை பாதமலர் - சூடுகின்றிலை சூட்டுகின்றதுமிலை துணையிலி பிணநெஞ்சே-தேடுகின்றிலை தெருவுதொறலறிலை செய்வதொன் றறியேனே-" எனவும்வரும் மணிவாசகப்பிரான் மலர்வாக்குகளானு மறிக.

முதல்வனைத் தெய்வத் தாமரை முதலா மும்மணிக் கோவை
யாற் றுதிப்பார், திதியவ னநாதி நிலைபரம் பரையாய்ச் சித்தசித்த
றிவொடா தாரம், விதியுற வொன்று நிலைமுத லுரைத்தார் வியனி
ரண் டாயவா சிரியத், ததிகனிற் பிடித்தா லன்றியுற் பவம்போகா
தெனு மருமையும் புகன்றார்.

(இ - ள்.) தலைவராகிய சிவபெருமானை, "தெய்வத்தாமரை." என்னும் சொல்லை முதலாகக் கொண்டு, மும்மணிக் கோவை என்னும் பிரபந்தத்தால் துதிசெய்பவராய், அப் பெருமானுடைய இரட்சகத் தன்மையையும், அவரது அநாதித்தன்மையையும், பரம்பரையாகச் சித்துத் தன்மையையும் அசித்துத்தன்மையையும் அறிவாந்தன்மையையும் ஆதாரமாந் தன்மையையும் முறைமையாக ஒருபடித்தாம் தன்மையையும் முதலாசிரியப்பாவில் திருவாய்மலர்ந்தருளினர். மேன்மைமிக்க இரண்டாவது ஆசிரியப்பாவில், மேம்பாடுற்ற சிவபெருமானே! தேவரீரைப் பற்றினாலன்றிப் பிறவி யொழியாதென்னும் அருமைப் பாட்டையும் திருவாய்மலர்ந்தருளினர்.—எ-று.

திருவிடைமருதூர் மும்மணிக்கோவையில் முதலாசிரியப்பாவில், உமாமகேசமூர்த்தத்தைச் சிறப்பித்து அதன் இடையிடையே அப் பெருமானது இரட்சகத்தன்மை அநாதித்தன்மை சித்துத்தன்மை அசித்துத்தன்மை அறிவுருத்தன்மை ஆதாரத்தன்மை ஒன்றாந்தன்மை என்னும் இவைகளையும், இரண்டாவது ஆசிரியப்பாவில், சிவபெருமானைப் பற்றினாலல்லது பிறவி யொழியாதென்பதையும் விளக்கினா ரென்றபடி - எனவே, சீவர்களை இரட்

சிக்கும் ஆற்றலுடையார் ஆதிமத்தியாந்தரகிதராகவும், சித்துக்குச் சித்தாகவும் அசித்துக்கு அசித்தாகவும் அறிவுக்கறிவாகவும் ஆதாரத்துக் காதாரமாகவும் ஒருவராகவும் இருக்கவேண்டுமென்பதும், அத்தகையோரைப் பற்றினரே பிறப்பொழிப்பாரென்பதும் விளங்குதல்காண்க. இத்தகைய இலக்கணம் வாய்ந்த இறைவனைப் பற்றுகின்றார்க்கே பிறப்பொழியுமென்பதை, "பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்று - பற்றுக பற்று விடற்கு" என்னும் திருக்குறளானும் தெளிக. (சுஐ)

மூன்றில்வன் றொண்டர் வாசவன் செல்வ முழுக்கடல் குளப்படி யென்றார், மான்தரு கரத்தா னஞ்செழுத் தருங்காய் மருதமாணிக்கத்தீங் கனியென், றான்றினர் நான்கி லேந்தினிற் சகல முற்ற கேவலத்திலெற் காணே, னென்றநின் கருணை ஞானநாட்டத்தானின்பெருந் தன்மையான் கண்டேன்.

(இ-ள்.) உரத்த பத்திமையுடைய அன்பராகிய திருவெண்காட்டடிகள், இந்திரனுடைய கடல்போன்ற போகமும் சிவபோகத்தை நோக்கக்குளப்படி நீருக்கொப்பாமென மூன்றாவது ஆசிரியப்பாவில் திருவாய்மலர்ந்தருளினர். மானேந்திய திருக்கரமுடைய சிவபிரானது திருவைந்தெழுத்தாகிய அரியகாயே பின்னர்ப் பழுத்து மருதமாணிக்கமென்னும் மதுரமுள்ள கனியாமென்று நான்காவது ஆசிரியப்பாவில் திருவாய்மலர்ந்தருளினர். ஐந்தாவது ஆசிரியப்பாவில் நனவிற்சுழுத்தியிலே என்னைக்கண்டேனில்லை, ஏற்றமாகியதேவரீரது திருவருளென்னும் ஞானநோக்கத்தால் தேவரீருடையபெருமித்தை அடியேன் அறிந்தனன் —எ-று.

ஏனைய போகங்கள் யாவும் சிவபோகத்தின்முன், கடல் நீர்முன் குளப்படி நீர்போலாமென்பது நூற்றுணிபாகலின், மூன்றாவது ஆசிரியப்பாவில், "வாசவன்செல்வமுழுக்கடல் குளப்படியென்றார்." என்றும், திருவைந்தெழுத்தை மறவாது செபிப்போர்க்கு அதுவே சிவமயமாமென்பார், "அஞ்செழுத்தருங்காய் மருதமாணிக்கத்தீங்கனி," என்றும், சகலகேவலமென்னும் நனவிற் சுழுத்தியிலே திருவருள் விளக்கத்தால் சிவதரிசனமாமென்பார், "என்ற நின்கருணை ஞானநாட்டத்தானின்பெருந் தன்மையான்கண்டேன்." என்றுங்கூறினர். ஏனையபோகங்கள் யாவும் சிவபோகத்தின்முன், கடல்நீர் முன்னே குளப்படிநீர்போலாமென்பதை, "மன்னராவாருறுசுகமும் வானோர் மகிழ்ந்து பெறுசுகமு, மணிப்பைந் நாகத் தவர்சுகமு மற்றை யோர்களடைசுகமும் - பன்னுமிடத்திற் சிவத்தெழுந்த பரமானந்த லேசமெனப், பகர்ந்தாய் குருவா யெழுந்தருளிப்படிறேன் மறந்திங் குழல்கின்றேன்- என்னவெழுந்த தெளிசாறே கட்டுமாவின் றீங்கனியே, கதலிக்கனியே நற்பலவின் கனகச்சுளையே கதிமுளையே - பொன்னம் பொருப்பே யென்விருப்பே போதச் சுகமே கிஞ்சுகமே, புராணவெளியே யுள்ளொளியே போரூர் முருகப் பெருமானே." என்னும் சிதம்பரசுவாமிகள் திருவாக்கானும், திருவைந்தெழுத்தை இடைவிடாது தியானிப்போர்க்கு அதுவே சிவமயமாமென்பதை, "அண்ணன் முதலா வழகா றெழுத்தைந்து - மெண்ணி

விராப்பகலற் றின்பத்தே - நண்ணி - யருளா னதுசிவத்தை யாக்கு மணுவை - யிருளானதுதீர வின்று." என்னும் மனவாசகங்கடந்ததேவநாயனார் அருள்வாக்கானும், சகலகேவலமென்னும் நனவிற் சுழுத்தியிலே திருவருள்விளக்கத்தாற் சிவதரிசனமாமென்பதை, "வினவிற் பரத்தையறி வுறுதற் கவத்தைபுலன் வினை மாறியே - நனவிற் சுழுத்திநிலை வரினப் பொருட்டிகழு நலமாகவே." என்னும் தத்துவராய சுவாமிகள் திருவாக்கானுமறிக (சுரு)

கண்டபி னெனையுங் கண்டுளே னென்றார் கருதுபா ருவதி லொருவ, னுண்டிவேட் டிருத்த லயினியின் குறையோ வுன்குறை யில்லையென் குன்றயீ, தண்டனே யென்றார் வல்லுனர் வல்லா ரம்பரத் தெறிந்தனர் நிலத்திற், கொண்டிடல் போலுன் னஞ்செழுத் துரைப்போர் குறைவிலா ரென்றன ரேழில்.

(இ-ள்.) ஏவ்வாறு கண்டபிறகு என்னையும் கண்டேனென் றருளிச்செய்தனர். யாவரும்சிந்திக்கத்தக்க ஆறாவது ஆசிரியப்பாவில், ஒருவன் ஆகாரத்தை இச்சித்துப் புசியாதிருத்தல் சாதத்தின் குறையோ ? அல்ல அதுபோல தேவரீரை யடையாதிருத்தல், கடவுளே தேவரீராற் குறையில்லை, இது என்குறையேயாகும் எனத் திருவாய்மலர்ந்தனர். ஏழாவது ஆசிரியப்பாவில், வலியுள்ளாராயினும் வலியில்லாராயினும் ஆகாயத்தெறிந்த வஸ்துவை நிலத்தில் விழப்பெறுவதுபோல், தேவரீருடைய திருவைந்தெழுத்தைச் செபிப்போர் குறைவற்றவராவாரெனத் திருவாய்மலர்ந்தருளினர்.—எ-று.

அறுசுவைகலந்த கறிவகைகளுடன் சாதம் சமைத்துச் சித்தமாயிருக்கவும் அதைப்புசியாது ஒருவன் பசியோடிருத்தல் சாதத்தின் குற்றமாகாததுபோலத் திருவருள்புரியத் தேவரீர்சித்தமாயிருக்கவும் தேவரீரையடையாதது அடியேன் குறையேயென்பதும், வல்லபமுள்ளாரொருவனும் வல்லபமில்லாரொருவனும் ஆகக்கூடிய இருவரும் ஆகாயத்தெறிந்த கல்நிலத்தில் விழப்பெறுவதுபோல், உபதேசமுடையானும் உபதேசமடையானுமாகிய இருவரும் திருவைந்தெழுத்தைச் செபிப்பாராயின் குறைவற்றவராவாரெனத் திருவாய்மலர்ந்தருளினர். ()

எட்டினி லடிசார்ந் தவர்க்கருட் செல்வ மிறைவ நீ யாதினுங் குறையா, திட்டனை யென்றா ரொன்பதிற் புத்த னெறிந்தக னென் குனக் கென்றார், பட்டவோ பத்தி லென்செய லன்றிப் பரமநின் செயலினே னென்றார், முட்டிலிங் கிசைத்த திருவிசைப் பாவின் முடிவில்வெண் காடனென் றனரே.

(இ-ள்.) எட்டாவது ஆசிரியப்பாவில், தலைவரே! தேவரீர் உமது திருவடிகளையடைந்தவர்கட்குத் திருவருட்செல்வத்தை எவற்றினுங் குறைவுபடாது தந்தீர் எனத்திருவாய்மலர்ந்தருளினர். ஒன்பதாவது ஆசிரியப்பாவில் புத்தராகிய சாக்கியநாயனாரெறிந்த கற்கள் தேவரீருக்கடிபட்டனவோ ? நன்மை பயக்

த்னவே ஆயிற்றெனத் திருவாய்மலர்ந்தருளினர். பத்தாவது ஆசிரியப்பாவில் அடியேன் செய்கை யாதுமின்றித் தேவரீருடைய செய்கையினேனுயினனெனத் திருவாய்மலர்ந்தருளினர் முட்டின்றி இத்தலத்திற்றிருவாய்மலர்ந்தருளிய மும்மணிக்கோவை என்னும் திருவிசைப்பாவின் கடைசியிலுள்ள கட்டளைக் கலித்துறையின் மூன்றுவதடியில் வெண்காடனெனத் திருவாய்மலர்ந்தருளினர்.—எ-று.

எனவே முதலாவது ஆசியப்பாவிற் சிவபெருமானுடைய இரட்சகத்தன்மை அனுதித்தன்மை பரம்பரைத்தன்மை சித்தசித்துத்தன்மை அறிவுத்தன்மை ஆதாரத்தன்மை என்னும் இவற்றையும், இரண்டாவது ஆசிரியப்பாவில், அத்தகைய சிவபெருமானை மெய்யன்பினுற் பற்றினுலன்றிப் பிறவியறுதென்பதையும், மூன்றுவது ஆசிரியப்பாவில் இவ்வுலகத்தின் போகங்களையன்றித் தேவலோகத்துக்குரிய இந்திரபோகமென்னும் கடலும்சிவபோகத்தை நோக்குங்காற் குளப்படி நீரொப்பாமென்பதையும், நான்காவது ஆசிரியப்பாவில், அத்தகைய சிவத்தையடைதற்குத் திருவைந்தெழுத்தை புச்சரித்தலே சாதனமென்பதையும், ஐந்தாவது ஆசிரியப்பாவில், சகல கேவலத்தில் என்னைக்காணேன், தேவரீருடைய திருவருளுட்டத்தால் தேவரீருடைய பெருந்தன்மையைக் கண்டபின் என்னையுங் கண்டேன் என்பதையும், ஆறுவது ஆசிரியப்பாவில், இத்தகைய சிவபோகத்தைப் பாலிக்கத் தேவரீர் சித்தமாயிருக்கவும் அடியேன் தேவரீரை யடையாது பிறவிநோயில் வருந்தியிருப்பது எதற்கொப்பாமெனில், புசிப்பதற்கு வேண்டிய சாதம் சமைத்துச் சித்தமாயிருக்கவும், அதைக்கிட்டியருந்தாமல் பசியோடிருத்தலுக்கொப்பா மென்பதையும், எழுவது ஆசிரியப்பாவில், வல்லுனன்மாட்டானுகிய இருவரெறிந்த கல்லும் நிலத்தில்வீழ்வது நிச்சயமாமாறுபோல, உபதேசக்கிரமத்துடன் திருவைந்தெழுத்தைத்தியானிப்பவன் அஃதின்றித் தியானிப்பவன் ஆகிய இருவரும் பயனுறுவார்களென்பதையும், எட்டாவது ஆசிரியப்பாவில் தேவரீருடைய திருவடிகளைப் புகலாக அடைந்தவர்கட்குத் திருவருட்செல்வம் குறைவின்றிப்பாலித்தீரென்பதையும், ஒன்பதாவது ஆசிரியப்பாவில், புத்தராகிய சாக்கியநாயனுரெறிந்த கல்லும் அவரது அன்பின் மேம்பாட்டால் தேவரீருக்கு மலராயிற்றென்பதையும், பத்தாவது ஆசிரியப்பாவில், யாவும் நின்செயலன்றி அடியேன் செயலல்லவென்பதையும் ஒன்றுக்கொன்றியைபுடைத்தாகவரிசைப்படுத்திக் கூறினுரென்பதாம். இம்மும்மணிக்கோவையின் ஈற்றில் திருவாய்மலர்ந்தருளிய கட்டளைக்கலித்துறைப்பாவது:—

"காத்தினன் மாலவன் கண்கொண்டு நின்கழல் போற்றநல்ல-வாத்தினை யீயுமருதவப் பாமதி யொன்றுமில்லேன் - சிரத்திலு மாயென்றன் சிந்தையுளாகி வெண்காடனென்னுந்-தாத்திலு மாயது நின்னடி யாந்தெய்வத் தாமரையே."

என்பதே, மெய்யன்பர்களாகிய சைவசமயாசாரியர் நால்வருளிருவர் தமது திருநாமத்தைத் தாம் திருவாய்மலர்ந்தருளிய ஒவ்வோர் பதிகத்தின் இறுதியினும் அமைத்திருப்பதுபோன்று, இப்பட்டினத்தடிகளும் தமது திருநாமமாகிய திருவெண்காடர் என்பதை இப்பிரபந்தத்தின் ஈற்றுக்கவியாகிய மேற்குறித்த கட்ட

ளைக்கலித்துறையில் அமைத்தனரென்பான், "திருவிசைப்பாவின் முடிவில் வெண்காட னென்றனர்." என்றார். இதுபோன்றே ஏனைய பிரபந்தங்களின் ஈற்றிலும் தமது திருநாமத்தைக் குறிப்பித்திருக்கின்றனரோ எனின், அவ்வாறு வேறொன்றினுங் கண்டோமில்லை. இதுகுறித்தே வெண்காடனென்றது சிவ பிரானையே எனச் சிலர் கூறுவர். (சுஅ)

இவைமுதற் றமிழாற் றுதிபல வியம்பி யிருக்குமந் நாடனி லொருநா, ணவைவிடாய் கழிக்க நீர்பெறா திருப்ப நாதர்தம் பாணிதண் பாணி, யுவகையா லுதவு மின்றெனும் பாட லுரைத்தனர் மற்றுமோர் தினத்திற், கவலும்வல் விடத்தா லுறங்குறார் கட்டிக் கரும்பிடு கழனியீர்ப் புண்டார்.

(இ-ள்) இவ்வாசிரியப்பாக்கள் முதலாகிய திருப்பாடல்களால் பலவகைத் தோத்திரங்கள் திருவாய்மலர்ந்துகொண்டிருக்கும் நாள்களில் ஓர்நாள், குற்றமுள்ள தாகவிடாய் தணிப்பதற்காக நீர் கிடைக்காதிருக்க, இத்தினத்திலே சிவபிரானுடைய திருக்கரமானது குளிர்ந்த ஜலத்தைப் பாலிக்கும் என்னும் கருத்தமைந்த ஓர் திருப்பாடல் திருவாய்மலர்ந்தனர். மற்றோர் தினத்திலே வருத்துகின்ற கொடிய சர்ப்பவிஷத்தால் நித்திரைகொள்ளாதவராய், சர்க்கரையுண்டாகும் கரும்புகள் வளர்ந்துள்ள கழனியிலே வலியடைந்திருந்தார்.—எ-று.

தாகம்மேற்கொண்டபோது நாவரட்சியும் வார்த்தையாடக் கூடாமையும் ஆகிய இவைபோன்ற அனேக கெடுதிகள் விளையுமாகலின், "நவைவிடாய்" என்றும், சிவபிரானது சடையின்மீது தெய்வகங்கை யிருத்தலின், அவர் தமது திருக்கரத்தால் அள்ளியுதவுவர் என்னும் கருத்தால், நாதர்தம்பாணி தண்பாணி யுவகையாலுதவுமின்று." என்றாரென்றும். அந்நகரத்துள்ள கருப்பஞ்சோலையின் வழியாய்த் திருவெண்காடர் வருகையில் ஓர் சர்ப்பம் தீண்டுதலும் அவ்விடவேகத்தால் அக்கழனியிலே வருந்தியிருந்தா ரென்பார், "கவலும்வல்விடத்தாற் கட்டிக்கரும்பிடு கழனியீர்ப்புண்டார்," என்றார், விடவேகங்கொண்டார் உறங்கிற் கெடுதியாமென்பதையும், வலியினால் நித்திரைகொண்டில ரென்பதையும் விளக்குவான், "உறங்குறார்." என்றும் கூறினர். நாதர்தம்பாணிதண்பாணி யுவகையாலுதவுமின்று என்னும் கருத்தமைந்தபாடலாவது.-"மென்றுவிழுங்கி விடாய்கழிக்க நீர்தேட - லென்று விடியுமெனக் கென்கோவே-நன்றி-கருதார் புரமூன்றுங் கட்டழலாற் செற்ற - மருதாவுன் சந்நிதிக்கே வந்து." என்னும் வெண்பாவே. எனவே உடனே சிவபிரான் ஓர் மறையவர்போன்று வடிவெடுத்துவந்து நீருதவித் தாகவிடாய் தணித்தனரென்பது கருத்து. (சுக)

இந்தவா றீர்ப்புண் டொருபுறத் திண்ணை யிடங்கிடந் துறங்குறும் பொழுதி, லந்திவான் மதியம் வலம்புரிக் கண்ணி யாமெனப் புனைமரு தாளி, வந்துமன் னுடையூர் காப்பவன் போல வடி

**வுகொண் டிவர்மனஞ்சோதித், துந்துவான்கருணை புரிகுவான்கருதி யோரிரா நள்ளிரு ளணைந்தான்.**

(இ - ள்.) இவ்வண்ணம் வலியடைந்தவராய் ஓர் புறந்திண்ணையிற் படுத்து நித்திரைசெய்யும்பொழுதில், அந்திக்காலத்தில் ஆகாயத்து தயமாகும் சந்திரனை வலம்புரிமாலையென்று அணிந்துள்ள மருதவாண ரெழுந்தருளி, தம்முடைய நகரைப் பரிபாலிப்பவனையொத்துத் திருமேனிதாங்கி, இத் திருவெண்காடருடைய மனத்தைச் சோதித்துச் செலுத்துகின்ற சிறந்த திருவருளைப் பாலிப்பதற்காகத் திருவுளங்கொண்டு, ஓர்நாள் மிகுந்த இருளடைந்த பாதிராத்திரியிற் சேர்ந்தனர்.—எ - று.

மூன்றாம்பிறைச் சந்திரனைச் சடையி லணிந்திருப்பது வலம்புரிமாலை போன்றிருத்தலின், "அந்திவான்மதியம் வலம்புரிக்கண்ணி யாமெனப்புனை மருதாளி." என்றும், ஊர்காக்கும் சேவகன்போல் வடிவெடுத்தவரின் அதிகாரத்திற்காக அச்சமுறுவரென்று திருவுளங்கொண்டு அவ்வாறே வந்தனரென்பான், "ஊர்க்காப்பவன்போல் வடிவுகொண்டு" என்றும், அவ்வாறு அச்சமுறுதற் கேதுவாக வந்ததும் அவர் மனநிலைமையை மற்றுள்ளோ ருணருமாறு சோதித்துத் திருவருள் பாலிப்பதற்காகவே யென்பார், "இவர் மனஞ் சோதித்துந்துவான்கருணை புரிகுவான் கருதி." என்றும், அவ் வடிவுகொண்டு பகற்காலத்துவரின் விசேடமாக அச்சமுறுமென்று திருவுளங்கொண்டு நடு ராத்திரியில் வந்தனரென்பான், "ஓரிராநள்ளிருளணைந்தான்." என்றும் கூறினர். மூன்றாம்பிறைச் சந்திரனைச் சடையி லணிந்திருப்பது வலம்புரிமாலை போன்றிருப்பதென்பதை, "திங்கண்மதிக்கண்ணி யானைத் தேமொழி யாளொடும் பாடி - யெங்கரு ணல்குங்கோ னெந்தை யெனக்கினி யென்னு வருவே - னங்கிள மங்கைய ராடு மையா றடைகின்றது போது - பைங்கிளி பேடையொ டாடிப் பறந்து வருவன கண்டேன் - கண்டே னவர் திருப்பாதங் கண்டறி யாதன கண்டேன்." என்னும் ஆளுடைய வரசுகளருள் வாக்கானு மறிக. (௫௦)

**காரிரும் பொலிக்குந் தடிநிலத் திடித்துக் காலினுன் மார்பிடைத் தாக்கி யாரை நீ யென்ன வினவிட வெருவா வமுதவெண் காடரு மிசைப்பா. ரூரிடை யெவைக்குங் காவலுக் குரியோ யுணர்ந்தியா னுரைக்குமா கேட்டி, சோரிபுன் மயிரின் றொகைகளோ டிறைச்சி தோலொடு மென்புமூ ளைகளோ.**

(இ-ள்.) கருநிறங்கொண்ட இரும்பினாற் சத்திக்கின்றதடியைப் பூமியிலே தட்டிக்கொண்டு, அந்தத் தடியைக் காலிலே வைத்து நிறுத்தி மார்பிலே ஊன்றிக்கொண்டு திருவெண்காட்டடிகளிடம் கிட்டி, நீ யாரென்று கேட்க, யாவர்க்கும் அமுதம்போல்பவராகிய திருவெண்காட்டடிகள் அச்சமுற்றவராய்க் கூறுவார். இவ்வூரினிடத்திலுள்ள அனைத்திற்கும் காப்பதற்குரிமை பூண்டவரே;

யான் தெளிந்து கூறுவதைக் கேட்பீராக! உதிரம் அற்பமான மயிர்க்கூட்டங்க ளுடனே தசை சருமம் அஸ்தி மூளை என்னும் இவைகளோ ?—எ-று.

ஓர்நகரில் அந்நகர்க் காவலாளன் பாதிராத்திரியில் நகர்ப்பரிசோதனை செய்வதும், அவ்வாறுசெய்ய வருங்கால் இருப்புப் பூண்கட்டிய தடியொன்றைப் பூமியில் தட்டிக்கொண்டு வருவதும், வந்தபின்பு யாராயினும் ஒருவர் தூதனமாய்த் தனியாய்ப் படுத்திருந்தால் அவரைக்கிட்டி, அத் தடியை மார்பில் ஊன்றிக் கொண்டு நின்று விசாரிப்பதும் இயல்பென்பதை யுணர்த்துவான், "காரிரும் பொலிக்குந் தடிநிலத்திடித்துக் காவிறல் மார்பிடைத் தாக்கி யாரை நீ யென்ன வினவிட." என்றும், உலகத்துள்ளா ரனைவர்க்கும் திருவெண்காடர் அமுதம் போல்வாரென்பதையும், அத்தகையோர் இந்நகர்க் காவலாளனை நோக்கியவுடனே அச்சமுற்றுக் கூறுவாரென்பதையும் விளக்குவான், "வெருவாவமுத வெண்காடருமிசைப்பார்" என்றும் கூறினர். (கக)

ஊனமா மெண்ணி றத்துவக் குழாமோ வின்னதென் றென்
னையான் காணேன் யானல தொன்றை யானென நினையு மிது
வென துள்ளமென் றிசைத்தார், தேனல ரிதழிச் சேவகப் பெரு
மான் றெறிந்திலர் மறைந்தனர் சிறந்த.ஊனெலா முருகிப் பெரு
குமன் பினரா யுவகையங் கடலிடைப் படிந்தார்

(இ-ள்.) அற்பமாகிய அளவிறந்த தத்துவக்கூட்டங்களோ ? இவற்றுள் இதுதான் நானென்று என்னை யறிந்தேனில்லை. நானல்லாத ஒன்றை நானென்று சிந்திக்கும் இதுதான் எனது மனநிலைமை என் றுரைத்தனர். சேவகராக வந்த தேன்பொருந்திய கொன்றைமலரைத் தரிக்கும் சிவபெருமான் உடனே காணப்படாதவராய்க் கரந்தருளினர், தக்கணமே திருவெண் காட்டடிகள் விசேடித்த மெய்யன்புடையவராய்ச் சரீரமுழுவதும் உருகப்பெற்று மேம்பாடுற்ற களிப்பெனுங் கடலில் மூழ்கினர்.—எ-று.

உதிரம் மயிர்த்தொகுதி தசை சருமம் அஸ்தி மூளை தத்துவக் கூட்டங்கள் என்னும் இவைகள் ஒன்றாய்க் கூடிச் சமைந்த இத் தேகத்தில் எதையானெனக் கூறுவதென்பார், "சோரிபுன் மயிரின் றொகைகளோ டிறைச்சி தோலொடு மென்பு மூளைகளோ ஊனமா மெண்ணிறத் துவக்குழாமோ வின்னதென் றென்னை யான் காணேன்." என்றும், யானல்லாத ஒவ்வொன்றையும் யான் யான் என்று சிந்திப்பதே எனது மனநிலைமை யென்றனரென்பான், "யானல தொன்றை யானென நினையு மிதுவென துள்ளமென் றிசைத்தார்." என்றும், காவலாளனைப்போன்று வடிவுகொண்டு வந்தவர் சிவபிரானென் றுணர்த்துவான், "தேனலரிதழிச் சேவகப்பெருமான்." என்றும், திருவெண்காட்டடிக ளுரைத்த உத்தரத்தைக் கேட்டவளவில் மறைந்தனரென்பான், "தெரிந்திலர் மறைந்தனர்." என்றும், மெய்யன்பின் மேம்பாட்டோர்க்கு ஊனெலா முருகுதலும் உவகைக்கடலிடை மூழ்கலும் இயல்பென்பதை யுணர்த்துவான் "ஊனெலாமுருகிப்பெருகுமன்பினராயுவகையங்கடலிடைப்படிந்தார்." என்றுங்கூறினர்

உதிரம் மயிர்த்தொகுதி தசை சருமம் அஸ்தி மூளை தத்துவக் கூட்டங்கள் என்னும் இவற்றாலாயது சரீரம் என்பதை, "தோலிரத்த மெலும் பிறைச்சி சுக்ல மேதை மச்சையொன்றாய்த் - தாலிகரித்த வுடம்பாகு ந்தொட்ட வெவையுந் தீன்வடிவாய்க் - கோலியடக்கிக் கொளுமிதனைக் கூறுகூறா நோக்காது-போலியுணர்வோர் மகிழ்வெய்தும் புனிதமென்றும் பாமபதம்." என்னும் குமாரதேவர் திருவாக்கானும், நானல்லாததை நானென்றுணர்ந் திருப்பதே ஆன்மாக்களியல்பென்பதை, "பொருளல் லவற்றைப் பொருளென் றுணரு மருளானு மாணாப் பிறப்பு." என்னுந் திருக்குறளானும், "பொய்யை மெய்யென் றறிந்து போதமின்மை யாலே மெய்யைப் பொய்யென்றெண்ணி மெலிந்தே யுழல்வருலகர் - பொய்யைப் பொய்யென்றறிந்து போதகுருவி னருளின் - மெய்யை மெய்யென்றறிந்தே மெலிவு தீர்வ ருயர்ந்தோர்" என்னும் குமாரதேவர் திருவாக்கானும், மெய்யன்பின் மேம்பட்டோர்க்கு ஊனெலா முருகலும் உவகைக் கடன் மூழ்கலு மியல்பென்பதை, "வேனில்வேள் மலர்க்கணைக்கும் வெண்ணகைச்செவ் வாய்க்கரிய-பானலார் கண்ணியர்க்கும் பதைத்துருகும் பாழ்நெஞ்சே-யூனெலா நின்றுருகப் புகுந்தாண்டா னின்றுபோய் - வானுளான் காணாய்நீ மாளாவாழ் கின்றாயே.' என்னும் மணிவாசகப்பிரான் மலர்வாக்கானும் அறிக.

படிந்தவ ரெழுந்து திசையினை நோக்கிப் பணிந்தன ரணிந்த வெண் ணீற்றார், விடிந்தன விருளுந் தாமரைச் சரண மெல்லிதழ் நொந்தவோ வென்பார், கடிந்தசொன் னடந்த கருணையைப் புகழ்வார்காற்சுவ டுரத்தினிற் குறிப்பார், முடிந்தமாப் பொருளை முடிவிலா வருளை முன்னினர் பன்னின ரிருந்தார்.

(இ - ள்.) அவ்வாறு களிப்புக்கடலில் மூழ்கிய திருவெண்காட்டடிகள் திருமேனி முழுதுவதும் திருவெண்ணீறு தரித்தவராய், எழுந்து நின்று சேவகராய் வந்த சிவபிரான் மறைந்துசென் றருளிய திக்கைப்பார்த்து வணங்கினர். உடனே இருளும் நீங்கி உதயகாலமாயிற்று. அப்போது திருவெண்காட்டடிகள் இவ் வேடங்கொண்டவர் சிவபிரானெனன்றுணர்ந்து, மிருதுவான இதழ்களையுடைய தாமரைமலர்போன்ற திருவடிகள் வருந்தினவோ என்றுரைப்பார், தாமுரைத்த கடுமையான சொற்களால் அங்கு நின்றும் சென்றருளிய திருவருளைத் துதிப்பார், அப் பெருமானுடைய திருவடிச்சுவட்டை மார்பில் ஒற்றிக்கொள்வார், சர்வாதீதமான பரம்பொருளையும் அவருடைய அழிவில்லாத திருவருளையும் சிந்தித்தவராய்த் துதித்துக்கொண்டிருந்தார்,—எ - று.

ஊர்க்காவலாளனாக வடிவெடுத்துவந்து நீ யாரென்று வினவி மறைந்தவர் சிவபிரானே யென்றுணர்ந்த திருவெண்காட்டடிகள், அவர் மறைந்த திசையைநோக்கி வணங்கிப் பின்னர் அடியேன்பொருட்டு நள்ளிருளில் நடந்துவந்த திருவடிகள் நொந்தனவோ என்றும், அடியேனுரைத்த கடூரமான சொற்களினாலே அவ் விடத்தினின்றும் சென்றருளியது திருவருளே யெனப்புகழ்ந்தும்,

அப்பெருமானுடைய சரணச்சுவட்டை மார்பிலொற்றிக்கொண்டும், அதீத பரம்பொருளான பெருமானையும் அவருடைய திருவருளையும் தியானித்துத் தோத்திரஞ்செய்துகொண்டு மிருந்தனரென்பதாம். (௫௬)

**அறுவகைச் சமய மிடைமரு தாளி யாறுமா முகத்தினுக்தோன்றி, மறுவற நடக்கும் புறநெறிச் சமய மற்றுள வாறுமாறுய, புறநடைச் சமயப் புன்மைபற் பலவாம் பொருவிலம் மருதனை நோக்கி, யுறவரு மனைத்து மென்றனர் சமயா தீதமுற் றிருப்பவரிவரே.**

(இ-ள்.) சமயாதீத நிலைமையுற்றுள்ள இத் திருவெண்காட்டடிகள் அதன் பின், திருவிடைமருதூரின்க ணெழுந்தருளியுள்ள சிவபெருமானுடைய ஆறு திருமுகங்களினின்றும் சண்மதங்களு முற்பவித்துக் குற்றமின்றி நடைபெற்று வரும். அவையன்றி வேறுயுள்ள சமயங்களாறும் புறச்சமயங்களாகும். இவையிரண்டிற்கும் எதிர்மறையாயுள்ள புறப்புறச் சமயங்களின்கொடுமைகள் அனந்தமாகும். இச் சமயபேதங்களின் பயன்கள் யாவும் ஒப்பற்றவராகிய அம் மருதவாணரை அகமார்க்கமாகத் தரிசித்துக்கொண்டிருக்க வருமென்றெண்ணினர். —எ-று.

உலகத்து விளங்கும் சமயபேதங்கள் உட்சமயம் புறச்சமயம் புறப்புறச் சமயம் என முத்திறப்படுமென்றும். அவற்றுள் உட்சமயங்களாறுமே சிவபிரான் திருமுகங்க ளாறினும் தோன்றினவென்றும், அவ்வாறு தோன்றியதால் அவ்வாறு சமயங்கள் மாத்திரமே குற்றமின்றி நடைபெறுமென்றும், ஏனைய புறச் சமயங்க ளாறும் உட்சமயங்களாறையும் அடைதற் கேதுவாமென்றும், மற்றுள்ள புறப்புறச் சமயங்க ளாறும் தீமையுடையனவென்றும், சமயா தீத நிலைமையுடையோர்க்கே முற்கூறிய உள்ளும் புறம்புமான சமயங்கள் பன்னிரண்டின்பயன்களும் சித்திக்குமென்றும் தமக்குத்தாமே சிந்தித்தாரென்றபடி. சிவபிரான் திருவடிகளை யடைதற்கேற்ற நன்மார்க்கத்தை யடைவதற்காக இச் சமயபேதங்க ளேற்பட்டன வென்பதை, "ஒன்றதே பேரூர் வழியா றதற்குள - தென்றதே போலு மிருமுச் சமயங்க, ளொன்றிது தீதிது வென்றுரை மாந்தர்கள் - குன்று குரைத்தெழு நாயையொத் தாரே." என்றும், "ஒத்த சமயங்க ளோராறு வைத்திடு - மத்த னொருவனு மென்ப தறிந்தில - ரத்த னொருவனு மென்பதறிந்திடின் - முத்தி விளைக்கு முதல்வனு மாமே." என்றும், "முதலொன்றுமானை முதுகுடன் வாலுந் - திதமுறு கொம்பு செவிதுதிக் கைகான் - மதியுடனந்தர் வகைவகை பார்த்தே - யதுகூற லொக்கு மாறு சமயமே." என்றும் வரும் திருமந்திரங்களானும், சிவபிரானைச் சதா தியானித்துக்கொண்டிருக்கின் இச் சமயபேதங்களின் பயன்களனைவையும் வருமென்பதை, "அன்றென்று மாமென்று மாறு சமயங்க -ளொன்றோடொன் றொவ்வா துரைத்தாலு - மென்று - மொருதனையே நோக்குவா ருள்ளத் திருக்கு-மருதனையே நோக்க வரும்." என்றும் திருவெண்காட்டடிகள் திருவாக்கானும் தெளிக. மேற்சொல்லியவாறு திரு

வெண்காட்டடிகள் கருதியபோது இத்திருவெண்பாவையே திருவாய்மலர்ந்தனரென்க. (ருச)

இடைமரு தாளி சமயபே தங்க ளின்னவா றிழைத்ததென் னென்னின், மூடிலா வுயிர்கள் பக்குவக் குறையான் மொழிகதி யடைதர மவுன, வடிவுறு மவர்கள் புகலிட மிழம்பின் மாயைமா மாயையு ளடங்கும், படியிலா வொன்றி னின்றன ரிவர்தம் பாக்கி யம் யாவரே பகர்வார்.

(இ-ள்.) திருவிடைமருதூரின்கணெழுந்தருளியுள்ள சிவபெருமான் இவ்வாறாய சமயபேதங்களை என் இயற்றினரென்றால், அளவிறந்த சீவர்கள் பக்குவக்குறைவினாலே யாவராலும் சொல்லுதற்குரிய முத்தியின்பத்தை அடைவதற்காகவே மௌனநிலைமையுடையவர்களது சேர்விடத்தைச் சொல்லுவோமாயின், மாயையானது மகாமாயையுளடங்கிய தன்மைக்கொப்பாம். ஒப்பற்ற ஓர் நிலைமையிலிருந்த இத்திருவெண்காடருடைய பாக்கியத்தை எவர்கள் அளவிட்டுரைப்பார்கள்—எ-று.

சமயபேதங்கள் யாவும் சீவர்களின் பக்குவபேதங்கட்குத் தக்கவாறே அமைத்துள்ளனவென்பதை, "வேதம்பல் பக்குவ மோர்ந்தொரு வீட்டினுக் - கோதும்பல் லாற்றானு முந்நீபற - வுண்மைகண் டார்க்கேக முந்நீபற" என்னும் சாந்தலிங்க சுவாமிகள் திருவாக்கானும், "சமய வாதிக டத்த மதங்களி - லமைவ தாக வரற்றி மலைந்தனர்." என்றும், "இருமுச் சமயத் தொருபேய்த் தேரினை-நீர்நசை தாவரு நெடுங்கண் மான்கணந் - தவப்பெரு வாயிடைப் பருகித் தளர்வொடு - மவப்பெருந் தாப நீங்கா தசைந்தன" என்றும் வரும் மணிவாசகப்பிரான் மலர்வாக்கானும், "உரைத்த துறைபா துறைக்குஞ் சமயம்-பாத் தையறிவுற்ற பான்மை - மரத்தி - னவயவத்தி லோரொன் றறிந்தார் மரமா - மவயவத்தைக் கொண்டவா றும்." என்னும் அமுதசாரத் திருவெண்பாவானும் தெளிக. (ருரு)

பிரிவில்சித் தாந்தர் சமயபே தங்கள் பேசிய தெய்வ மொன்றெனினு, நிருபனு நிருபன் மைந்தரும் புந்தி நிகழ்தரு மமைச்சரு மார்க்கம், பெருகுதந் திரரும் ஞாளிகைக் கொள்ளும் பின்னைமாக் களுநிகர் பகரு, முரிமையை யுலகோ ரறிவுறப் பாடி யுடையவனடி விடா துறைந்தார்.

(இ-ள்.) பிரிவற்றவர்களாகிய சித்தாந்திகள் சமயபேதங்களுக்குரியவைகளாகக்கூறிய தெய்வம் ஒன்றேயாயினும், ஓர் அரசனும் அவன்புத்திரரும், புத்தி மேம்பட்டு விளங்கும் அவனுடைய மந்திரிமாரும், படைவகுப்பிலே பெருகிய சேனாபதிகளும், நாயைக் கையிற் பிடித்துக்கொள்ளுகின்ற மற்றுள்ள சேனா சமூகங்களும் நிகராகக்கூறும் சம்பந்தத்தை உலகத்தார் தெரியும்படி பாடி, தம்மை அடிமையாக வுடைய சிவபெருமானது திருவடிகளை இடைவிடாது தியானித்துக்கொண்டு வசித்திருந்தனர்.—எ-று.

எனவே, சமயங்கடோறும் அதததற்குரியதாக ஒவ்வோர் அதிதேவதையைக் கூறுதலின், அத்தெய்வங்கள் யாவும் சிவபிரானைத் தவிரவில்லை பென்பதை, ஓர் அரசனைத் தவிர அவனது புத்திரர் மந்திரி சேனாபதி சைனியசமூகம் எவ்வாறில்லையோ அதுபோலாமென்றுலகத்துள்ளார் தெளிந்துய்யுமாறு பற்பல பாக்களைத் திருவாய்மலர்ந்து சிவபிரானைத் தியானித்துக்கொண்டே அத்தலத்தினில் வசித்திருந்தனரென்றபடி. எச்சமயத்தார் எவ்வுருவாக எப்பெயருடன் பூசிக்கினும் அவ்வச்சமயத்தார்க்கும் பக்குவத்திற் கேற்றவாறு அனுக்கிரகம்புரிவோர் சிவபிரானே என்பது கருத்து. இதனை, "யாதொரு தெய்வங் கொண்டீ ரத்தெய்வ மாகி யாங்கே-மாதொரு பாக னார்தாம் வருவர்மற் றைத் தெய்வங்கள்-வேதனைப் படுமிறக்கும் பிறக்குமேல் வினையுஞ் செய்யு - மாதலா லவையி லாதோ னறிந்தருள் செய்வனன்றே." என்னும் சிவஞானசித்தித் திருவிருத்தத்தானுந் தெளிக. (௫௬)

அங்குறச் சிலநா ளுறைந்தரு ளிடைபெற் றருட்குறிக் குடந்தைவா யடைந்து, சங்கரற் கன்பாற் றுதிபல வழங்கிச் சடைமுடியுடையவ னிடங்க, ளெங்கணு மிறைஞ்சி யந்தணு ளரு மிறைஞ்சியங் கமருநாட் களவாற், பொங்குகா மத்தா லிறந்தவற் பார்த்துச் செயுமொரு வாய்க்கெனப் புகன்றார்.

(இ-ள்.) அத்தலத்திற்றானே பொருந்தும்படி சிலதினங்கள் வசித்திருந்து, அவ்விடத்தினின்றும் நீங்கிப் பிரியாவிடை பெற்று மீண்டு, திருவருட் குறியினாலே திருக்குடந்தைக்கெழுந்தருளி, அவ்விடத்தெழுந்தருளியிருக்கும் சிவபிரானிடத்தன்புடையவராய்த் தோத்திரங்கள் பலவாகத்திருவாய்மலர்ந்து, அத்தலத்தை யடுத்துள்ள சடைமுடியினரான சிவபிரான் க்ஷேத்திரங்கள் பலவற்றையும் பணிந்து, அழகுந் தட்பமும்வாய்ந்த திருவாரூரென்னும் க்ஷேத்திரத்தையும் பணிந்து, அத்தலத்தில் வீற்றிருந்தருளும் நாளில், களவினாலே விசேடித்த காமங் காரணமாக இறந்துகிடப்பவனைப் பார்த்தருளி, "எருவாய்க்கு" எனமுதலெடுத்து ஓர் திருவெண்பாவைத் திருவாய்மலர்ந்தருளினர். —எ-று.

திருவிடைமருதூரின் கண் வீற்றிருந்த திருவெண்காடருக்கு ஓர்வகைக் குறியால் திருக்குடந்தைக் கெழுந்தருளுமாறு சிவபிரான் கட்டளையிட்டனரென்றும், அவ்வாறே திருவெண்காட்டடிகள் திருக்குடந்தைக் கெழுந்தருளினரென்றும் விளக்குவான், "அருவிடைபெற் றருட்குறிக் குடந்தைவா யடைந்து." என்றும், அப்பால் ஆங்குச் சின்னாள் வீற்றிருந்து அத்தலத்தை யடுத்துள்ள ஏனைய திருப்பதிகள் பலவற்றையும் பணிந்துகொண்டு திருவாரூர்க் கெழுந்தருளினரென்பான், "சடைமுடியுடையவ னிடங்களெங்கணு மிறைஞ்சி யந்தணுளருமிறைஞ்சி." என்றும், திருவாரூரில் இவ்வடிகள் வீற்றிருக்குங்கால் இவரிடத்து மிக்க பத்தியுடைமையாற் பணிசெய்திருந்த சிறுவனொருவன், இவரது கட்டளைப்படியே திருமணம் முடித்து வாழ்ந்துவருகையில், எண்ணெயிட்டு நீராடிய ஓர்தினத்திற் காமமேலீட்டாற் கலவிபுரிய ஜன்னிகண்டு உயிர்துறந்

தான். அவன் உயிர் துறந்த அத்தினத்தில் அவ் வீதிவழி யுலாப்போந்த திருவெண்காட்டடிகளைக்கண்ணுணர்ந்தருளி, "எருவாய்க் கிருவிரண்மே லேறுபுழுக்கூட்டுக் - கருவாய்க்கோ கண்கலக்கப் பட்டாய் - திருவாரூர்த் - தேரோடும் வீதியிலே செத்துக் கிடந்தாயே - நீரோடுந் தாரைக்கே நீ." என்னும் திருவெண்பாவைத் திருவாய்மலர்ந்தனராகலின், "களவாற் பொங்குகாமத்தா லிறந்தவற்பார்த்துச் செயுளொருவாய்க்கெனப்புகன்றார்." என்றும்* கூறினர். அச்சிறுவனுக்குத் திருமணமுடிக்கையில் சேவைஷயிடுவதற்காக, "நாப்பிளக்கப் பொய்யுரைத்து நவநிதியந் தேடி நலமொன்று மறியாத நாரியரைக் கூடிப் - பூப்பிளக்க வெழுகின்ற புற்றீசல் போலப் புலபுலெனக் கலகலெனப் புதல்வர்களைப் பெறுவீர் - காப்பதற்கும் வகையறியீர் கைவிடவு மாட்டீர் கவர்பிளந்த மரத்தொளையிற் கானுழைத்துக் கொண்டே - யாப்பதனைப் பிடித்தசைத்த பேய்க்குரங்கு போல வகப்பட்டீர் கிடந்துழல வகைப்பட்டீர் நீரே." என்னும் திருப்பாடலையும், இச்சிறுவன் இறந்து கிடக்கையில், 'வடிவந்தானும் வாலிபம் மகளுந் தாயு மாமியும் - படிகொண் டாருமூரிலே பழிகொண்டாட னீதியோ - குடிவந் தானு மேழையோ குயவன்றானுங் கூழையோ - நம்நின் றானும் வீணனே நகரஞ் சூறையானதே." என்னும் திருவிருத்தத்தையும், "மண்ணுமுருகு மாமுருகு மாயை யுருகுமாலுருகும் - பெண்ணு முருகு மாலுருகும் பேதாபேத வகையுருகு - மண்ணலுருகு மிடத்தமர்ந்த வாத்தா ளுருகு மரவணையா - னெண்ணி யுருகுங் குருநாத னென்பா லுரைத்த வோர் மொழியே." என்னும் திருவிருத்தத்தையும் திருவாய்மலர்ந் தருளினரென்றும் கூறுவர்.                                                    (௬எ)

அசபையாட் டயருங் கூத்தனை நோக்கி யங்குநின் றருள்விடை
கொடுபோய், வசையுறாப் பாண்டி மண்டலம் புகுந்து வண்டமிழ்
மதுரைமா நகரி, லிசையிறை போற்றி மலைகொணாட் டுள்ள விறை
வனு லயங்களு மேத்தி, நசையினு லாங்காங் கன்பினு லின்ப நாத
னுர்க் கருந்தமிழ்புனைந்தார்.

(இ-ள்.) அசபா நடனம்புரிகின்ற சிவபெருமானைத் தரிசித்து, அவ்விடத்தினின்றும் பிரியா விடை பெற்றுக்கொண் டெழுந்தருளி, இழிவற்ற பாண்டி மண்டலத்தை யடைந்து, வளவிய தமிழ் நாடாகிய மதுரைமா நகரமென்னும் க்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருக்கும் புகழமைந்த சோமசுந்தரக்கடவுளைத் துதித்து மலைநாடாகிய சேரநாட்டின்கணுள்ள சிவபிரான் ஆலயங்களையும் துதித்துப் பெருங்காதலுடன் கூடிய மெய்யன்பினாலே, அவ்வத்தலங்களில் எழுந்தருளியிருக்கும் இன்பமயமான சிவபிரானுக்கு அருமைமிக்க தமிழ்ப்பாமாலைக ளணிந்தருளினார்.—எ-று.

அசபாநடனமென்பது அனுபவ ஞானிகளுணர்வாற் றரிசிக்கப்படுவதொன்றாகலின் அதனை ஈண்டு விரிக்கலாகாதெனினும், அவ்வனுபவஞானிகள் அந்நடனத்தைப் பற்றிக் கூறியுள்ள பாடல்களுள் ஓர் திருப்பாடலை இங்குக் காட்டுவாம். அது, "ஒன்றிரண் டா[illegible]வொன்றினின்

MAHAMAHOPADHYAYA

மூன்றுடவோரேழு மொத்தாட-வொன்றிரு லாடவோ ரொன்ப துடனுட-மன்றினி லாடினான் மாணிக்கக் கூத்தே." என்னும் திருமூலநாயனு ரருளிய திருமந்திரமேயென்க. சேரசோழபாண்டியர் என்னும் மூவேந்தராலாண்ட மும்மண்டலங்களில் பாண்டிமண்டலத்திலுள்ள மதுரைமாநகரத்திலேயே சோமசுந்தரக்கடவுள் தடாதகைப்பிராட்டியாரை மணந்து சவுந்தரபாண்டியராக அரசாண்டதும் அவரே சங்கத்தவரிலொருவராயிருந்து தமிழை வளர்த்ததும் அறுபத்துநான்கு திருவிளையாடல்களியற்றியதுமாகலின், "வசையுறுப் பாண்டிமண்டலம்" என்றும், "வண்டமிழ் மதுரைமாநகர். என்றும்," அதன்பின் பாண்டிநாட்டைக்கடந்து சேரநாட்டுள்ள திருத்தலங்களைத் தரிசிக்கச் சென்று ஆங்காங்குள்ள திருத்தலங்களினும். செந்தமிழ்ப்பாக்கள் திருவாய்மலர்ந்துகொண்டே சென்றுமொன் றுணர்த்துவான், "மலைகொளுட்டுள்ள விறைவனாலயங்களுமேத்தி - சைசையினாலாங்காங் கன்பினு லின்பநாதனுர்க் கருந்தமிழ் புனைந்தார்." என்றும் கூறினர். மதுரைமாநகரத்திற் கெழுந்தருளி ஆங்கு வீற்றிருந்தருளும் சோமசுந்தரக்கடவுளையும் அங்கயற்கண்ணம்மையாரையும் பணிந்து, "விடப்படுமோவிப் பிரபஞ்ச வாழ்க்கையை விட்டுமனம் - திடப்படுமோநின் னருளின்றியேதின மேயலையக் - கடப்படு மோவற்பர் வாயிலிற் சென்றுகண் ணீர்ததும்பிப் - படப்படுமோசொக்க நாதா சவுந்தர பாண்டியனே." என்னும் திருப்பாடல் திருவாய்மலர்ந்தனரென்றும், மலைநாடாகிய சேர நாட்டின்கணுள்ள திருப்போரூர் அவிநாசி திருமுருகன் பூண்டி முதலிய திருத்தலங்கட் கெழுந்தருளியகாலத்தில் மோனவிரதங்கொண்டிருந்தனரென்றும்கூறுவதுமுண்டு. (ரு அ)

ஆலமுண் டவர்க்குத் தமிழமு தளிப்பா ரருளிடை மருதில்வந்தடைந்து, பாலவெண் டிங்கட் பழைவற் பணிந்து பற்பல காலமங்கிருந்து, மேல்விடை யவரை விடைகொடு மீண்டு விரைந்து வெண்காட்டிடைப் புகுந்து, வாலியசூல கபாலியை நீல மாலினிவாமனைப் பணிந்தார்.

(இ-ள்.) பாற்கடலிற் றோன்றிய ஆலகாலத்தை அமுதுசெய்தருளிய சிவபிரானுக்குத் தமிழ்ப்பாவாகிய அமுதத்தைத் திருச்செவியாலூட்டுகின்ற திருவெண்காட்டடிகள் தமக்கருள் புரிந்த க்ஷேத்திரமாகிய திருவிடைமருதூர்க்கு மீண்டுமெழுந்தருளி, பால்போலும் வெண்ணிறமுடைய சந்திரனை யணிந்த சடாதாரராகிய புராதனரை வணங்கி, அநேககாலம் அத்தலத்தைவிட்டகலாது வசித்திருந்து, அதன்பின் இடபாரூடராகிய சிவபிரானிடத்திற் பிரியாவிடை பெற்று வெளிக்கொண்டு, அதிதுரிதமாகத் திருவெண்காடென்னும் திருத்தலத்திற் சேர்ந்து, சுத்தமாகிய சூலத்தையும் கபாலத்தையும் எந்தினவரும் நீலநிறமுள்ள உமாதேவியை இடப்பாகத்துடையவருமாகிய சிவபெருமானை வணங்கினர்.—எ-று.

சிவபிரான் பாற்கடலிற் றோன்றிய ஆலகாலத்தை யமுதுசெய்தவராகலானும், அத்தகைய ஆலகாலமுண்டவர்க்கு அமுதளிப்பது விசேடமாக

ல்ரனும், "ஆலமுண்டவர்க்குத் தமிழமுதளிப்பார்" என்றும் மருதவாணரே திருவெண்காட்டடிகட்கு ஆசிரியராயெழுந்தருளி அனுக்கிரகம் புரிந்தாராக லின், "அருளிடை மருது" என்றும், சிவபிரான்திருமுடியிலணிவது கலைநிரம் பாத இளஞ்சந்திரனேயாகலின் களங்கமற்ற சந்திரனென்று குறிப்பிப்பான், பாலவெண்டிங்கள்." என்றும், அப்பெருமான் ஆதிமத்தியாந்த ரகிதராகலின்' "பழையவன்." என்றும் கூறினர் சிவபிரானுக்கு ஆலமே அமுதாயிற்றென் பதை, "கோலால மாகிக் குரைகடல்வா யன்றெழுந்த-வாலால முண்டா னவன் சதுர்தா னென்னேடீ - யாலால முண்டிலனே லன்றயன்மா லுள்ளிட்ட - மே லாய தேவரெல்லாம் வீடுவர்காண் சாழலோ." என்னும் மணிவாசகப்பிரான் மலர்வாக்கானும் அறிக. தமிழ் இனிமையுடையதென்பதையும், அவ்வாறினிமை யுடைமைபற்றியே சிவபிரானுக்கு இப்பாஷையில் மிக்க பிரியமென்பதையும், அத்தகைய பிரியத்தினாலேயே இத்தமிழ்ப்பாடல்களால் அளவிறந்தமகிமைகள் விளங்கினவென்பதையும், இத்தமிழாகியதென் மொழியொன்றே வடமொழிக் கொப்பானதென்பதையும், "கடுக் கவின்பெறுகண்டனுந் தென்றிசை நோக்கி-யடிக்க வந்தவந் தாடுவா னாடலி னிளைப்பு-விடுக்க வாரமென்காறிரு முகத்திடை வீசி-மடுக்க வுந்தமிழ் திருச்செவி மாந்தவு மன்றே." எனவும், "விடையு கைத் தவன் பாணினிக் கிலக்கண மேனாள்-வடமொழிக்குரைத் தாங்கியன் மலயமா முனிக்குத்-திடமுறுத்தியம் மொழிக்கெதி ராக்கிய தென்சொன்-மடம கட்கரங் கென்பது வழுதி நாடன்றே." என்றும், கண்ணு தற்பெருங் கடவுளுங் கழக மோடமர்ந்து - பண்ணு றத்தெரிந் தாய்ந்தவிப் பசுந்தமி ழேனை - மண்ணி டைச்சில விலக்கண வரம்பிலா மொழிபோ - லெண்ணிடைப்படக் கிடந்ததா வெண்ணவும் படுமோ." என்றும், "தொண்டர் நாதனைத் தூதிடை விடுத்தது முதலை-யுண்ட பாலனை யழைத்தது மெலும்புபெண் ணுருவாக் - கண்ட தும்ம றைக் கதவினைத் திறந்ததுங் கன்னித் - தண்ட மிழ்ச்சொலோ மறுபுலச் சொற் களோ சாற்றீர்." என்றும்வரும் திருவிளையாடற்புராணத் திருவிருத்தங்களா னுந் தெளிக. (௫௧)

ஐயனை வணங்கி வழிபடுங் காலத் தகன்றிடு மந்திரிச் சேந்தர்,
செய்யசேய் வந்திங் கிவரடி பணியச் சேருநீ யாரெனச் சேந்தர்,
கையுறுதனைய னென்றுபுன் மொழிலாற் கைதளைப் பட்டனன்றாதை
வெய்யவச் சிறைமீட் டருள்கெனப் பணிந்தான் விரைந்து வெண்
காடரு மெழுந்தார்.

(இ-ள்.) திருவெண்காட்டின் திருவாலயத்தின்கண் வீற்றிருந்தருளும் சிவபிரானைப் பட்டினத்தடிகள் பணிந்து வழிபட்டுக்கொண்டிருக்குந் தருணத் திலே, அவ்வடிகளைவிட்டு நீங்கிய அமைச்சராகிய சேந்தநாயனாருடைய சிறப்ப மைந்த புத்திரர்வந்து இவ்விடத்தில் இத்திருவெண்காட்டடி களின் திருவடி களிற் சாஷ்டாங்கமாக வணங்குதலும், 'அதுகண்ட திருவெண்காட்டடிகள் இங்குவந்த நீ யாரென்று வினவியருள, சேந்தநாயனாருடைய சிறுமையமைந்த

புத்திரனென்று விடைபகர்ந்து, அடியேனுடைய பிதாவாகிய சேந்தநாயனார் அரசனுடைய கொடூரச்செய்கையால் விலங்குடையவராயினர், அவரை அக்கொடிய சிறையினின்றும் மீட்டருளவேண்டுமெனப் பிரார்த்தித்து வணங்கினர். அப் பிரார்த்தனையைத் திருச்செவியிலேற்றருளியவுடனே அதிவிரைவில் திருவெண்காட்டடிக ளெழுந்தருளினர்—எ-று.

திருவெண்காட்டடிகள் தமது கிருகஸ் தாச்சிரமத்தைவிட்டுத் துறவாச்சிரமத்தை மேற்கொண்டகாலத்து, அவ்வூரரசன் அவ்வடிகளுடைய செல்வத்தின் அளவையைத் தெளியவெண்ணி, அவ்வடிகளுடைய மந்திரியாராகிய சேந்தநாயனாரை வரவழைத்து, அவரைநோக்கி, உமது தலைவராகிய பட்டினத்தடிகளின் செல்வப்பெருக்கு விசேடமெனக் கேள்வியுற்றிருந்தேனே, இப்போது இவ்வளவு குறைந்த தொகையாகக் காணப்படுகின்றதே எனக்கேட்டபோது, சேந்தனார் யாதோர் வஞ்சகமுமற்றவராகையால், அவ்வடிகளின் செல்வத்திற் செலவழிந்ததுபோகத் தற்காலத்திலுள்ளது இவ்வளவேயெனஉண்மையைக்கூறினர். அவ்வாறுகூறிய உண்மை அவ்வரசனுக்குப்பொய்யாகப்புலப்பட்டமையால் அச்சேந்தனாரைச் சிறையிலிடும்படி கட்டளையிட்டனன், அவ்வாறே தண்டனாளர்கள் சேந்தனார்க்குக் கைத்தளைபூட்டிச் சிறைப்படுத்தினர். அச்செய்தியை அவரது குமாரர் திருவெண்காட்டடிகட்கு விண்ணப்பித்துத் தமதுபிதாவைஅச்சிறையினின்றும் விடுவித்தருளல்வேண்டுமெனப் பிரார்த்தித்தனரென்பார், சேந்தர் கையுறுதளையனென்று புன்றொழிலாற் கைதளைப்பட்டனன்றாதை - வெய்ய வச்சிறை மீட்டருள்கெனப்பணிந்தான்.'' என்றனர். புன்றொழிலாற் கைதளைப்பட்டனன் என்பதற்கு, திருவெண்காட்டடிகள்தாம் துறவாச்சிரமத்தை மேற்கொண்டகாலத்துத் தமதரும்பெருஞ் செல்வமனைத்தையும் குறைவிடச் சேந்தனார்க்குக் கட்டளையிட்டபோது, இவ்வளவுபெருஞ்செல்வத்தையும் வீணே குறைவிடக்கட்டளையிட்டனரே எனச்சிந்தித்த ஓர் தோடமாகிய புன்றொழிலாற் கைத்தளையிடப்பெற்ற சேந்தனாரெனப் பொருள் கூறுவாருமுளர், தமதாசிரியராகிய திருவெண்காட்டடிகள் திருவாக்கிற் குறையுளதாகச் சிந்தித்ததே தோடமாகலினென்க. சிந்தித்தலாலும் தோடம் நேரக்கூடுமென்பதை, சொல்லால் வருங்குற்றஞ் சிந்தனை யால்வருந் தோடஞ்செய்த - பொல்லாத தீவினை பார்வையிற் பாவங்கள் புண்ணியநூ-லல்லாத கேள்வியைக் கேட்டிடுந் தீங்குக ளாயவுமற்-றெல்லாப் பிழையும் பொறுத்தருள் வாய்கச்சியேகம்பனே.'' என்னும் திருவெண்காட்டடிகள் திருவாக்கானும் தெளிக. (சு௭)

எழுந்துபோந் தண்ணல் சந்நிதிப் புறத்தி லிசைந்துமத் தளை
தயிர்ப் பாடல், கொழுந்தெழப் பாடி முடித்திடக் கணங்கள் கொ
ழும்புகழ்ச் சேந்தரைக் கொணர்ந்து, தொழுந்தகை யவர்முன் காட்
டிட வருளாற் றொண்மைசால் சேந்தருந் தொழுது, விழுந் தெழுந்
தாடிப் பாடின ரார்க்கு மெய்யன்ப ரிருவரு மிவரே.

(இ - ள்.) திருவெண்காட்டடிகள் எழுந்தருளிவந்து சிவபிரானுடைய திருச்சந்நிதிக்குப் புறத்தில் நின்று, "மத்தளைதயிர்." என்னும் திருப்பாடலைத் திருவருளின்கொழுந்து தோன்றும்படி திருவாய்மலர்ந்து முடித்தவுடனே, அம்பெருமான் திருவருளினாலே சிவகணங்கள் சென்று மிக்கபுகழ் வாய்ந்த அச்சேந்தனாரைச் சிறைமீட்டுக்கொண்டுவந்து, யாவரும் தொழத்தக்க தன்மையுடைய திருவெண்காட்டடிகளுக்கெதிரில்விட்டுவிட, பழமை மேம்பட்ட சேந்தனாரும் திருவெண்காட்டடிகளைச் சாஷ்டாங்கமாகப் பணிந்தெழுந்து ஆனந்தக் கூத்தாடினர், அதன்பின் உண்மையடியார்களாகிய இவரிருவரும் சிவபிரானுக்குத் தோத்திரம்பாடியருளினர்.—எ - று.

அத்தருணத்திற் சிவபிரானுக்குரிய வழிபாடுகள் புரிந்துகொண்டிருந்தாராகலானும், அவ்வழிபாடு நிட்காமியமானதாகலானும், இப்போது சேந்தனாரைச் சிறைமீட்கவேண்டியது காமியமாகலானும், அத்தகைய காமிய விண்ணப்பத்தைத் திருச்சந்நிதியிலியற்ற மனமில்லாராகலானும், அவ்வாறு சிறைமீட்டலாகிய காரியமும் இவரது பெருந்தன்மையுணர்ந்த சிவகணங்களே இயற்றவேண்டுவதாகலானும் சந்நிதிக்குப் புறம்பேவந்து நின்றுதுதித்தாரென்பார், "எழுந்துபோந்தண்ணல் சந்நிதிப்புறத்திலிசைந்து." என்றும் மத்தளைதயிர் என்னும் முதலையுடைய திருப்பாடலிற் சிவபெருமானுடைய திருவருளின் லேசம் உதயமாம்படி பாடியருளினரென்பார், "கொழுந்தெழப்பாடி முடித்திட" என்றும் அரசனது சிறைபுற்றாரை அங்குள்ள காவலாளரைக்கடந்துட்புகுந்துபற்றிக்கொண்டு மீட்டும் அக்காவலாளரறியாவண்ணம் வெளிக்கொண்டுவருதல்ஏனையோராலேலாதாகலின், "கணங்கள் கொழும்புகழ்ச் சேந்தரைக் கொணர்ந்து." என்றும், திருவெண் காட்டடிகள் யாவராலும் பணிதற்குரியபெருந்தகைமை வாய்ந்தோராகலின், "தொழுந்தகையவர்முன்காட்டி." என்றும், இவ்வளவிற்குங்காரணம் திருவெண்காட்டடிகள் சேந்தநாயனார் என்னும் இருவர்மீதும்சிவபிரான்வைத்த திருவருளேயாதலின் "அருளால்." என்றும், சேந்தனார்வெகுகாலம்திருவெண்காட்டடிகளுடன் பிரியாவிடைபாய் மருவிவாழ்ந்தவராகலின், "தொன்மைசால் சேந்தர்." என்றும், இவர்களிருவரும் ஒருங்குகூடிச் சிவபிரானைத் துதித்தனரென்பார், "பாடினரரற்கு மெய்யன் பரிருவருமிவர்." என்றும் கூறினர். மத்தளைதயிர் என்னும்முதலையுடைய திருப்பாடலாவது:—"மத்தளைதயிருண்டானு மலர்மிசை மன்னினானு - நித்தமுந்தேடிக் காணா நிமலனே யமல மூர்த்தி - செய்த்தளைக் கயல்பாய் நாங்கூர்ச்சேந்தனை வேந்தனிட்ட - கைத்தளை நீக்கி யென்முன் காட்டுவெண் காட்டுளானே." என்பதே (கூக)

சேந்தர்வெண் காட ரடியிணை பணிந்து திருவுள மறிந்திடப் பணிக்தி. ரேய்ந்தவிச் சிறைமீட் டெனவுடற் சிறைமீட் டிடுநெறி காட்டிட வேண்டும், வாய்ந்தநீ ரென்ன வன்னவர் மகிழ்ந்து வனத்தினில் விறகொடித் தெடுத்திட், டாய்ந்தவவ் விறகு விற்றிடும் பொருளா லனந்தின மொருவருக் களிப்பீர்,

(இ - ள்.) அதன்பின் சேந்தநாயனார் திருவெண்காட்டடிகளின் சரணங்களிற்பணிந்து. தேவரீர் திருவுள்ளத்தை அடியேனுணர்ந்துகொள்ளுமாறு கட்டளையிட்டருளினீர், தமியேனுக்குக் குருவாகக்கிடைத்த தேவரீர் அடியேனுக்கு நேர்ந்த இந் ச் சிறைச்சாலையினின்றும் மீட்டருளியதுபோன்றே சரீரமென்னும் சிறைச்சாலையினின்றும் மீளத்தக்க மார்க்கத்தைக் காட்டியருளவேண்டும் என்று விண்ணப்பிக்க, அவ்விண்ணப்பத்தைத் திருவெண் காடர் திருச்செவியேற்றுத் திருவுளங்களித்து, காட்டிற்சென்று உலர்ந்துள்ள விறகுகளை ஒடித்துச் சுமையாகக்கட்டி யெடுத்துக்கொண்டு நீர் ஆராய்ந்தெடுத்த அவ்விறகுச் சுமையை விற்பதனால்வரும் பொருளைக்கொண்டு தினந்தோறும் ஓர் சிவனடியாருக்கமுதளித்து வருவீராக —எ-று.

திருவெண்காட்டடிகளின் திருவுள்ளம் மிக்க காருணியமுடையதென்பது, சேந்தனாருடைய புத்திரர்வந்து தமதுபிதாவின்சிறையைமீட்டருளவேண்டுமென்று பிரார்த்தித்தவளவில் தமது வழிபாட்டையும் நிறுத்திப் புறத்தேவந்து சேந்தனாருடைய கைத்தளையைத் தறித்துச் சிறையினின்றும் "விடுவித்தருளவேண்டுமென்னும் கருத்தமைந்த திருப்பாடல் திருவாய்மலர்ந்தமையினன்குவிளங்குதலால்' "திருவுள மறிந்திடப் பணித்தீர்" என்றும் அரசனாலமைத்த இச்சிறையை எவ்வளவு அற்புதத்துடன் மீட்டருளினீரோ அதுபோன்றே, வினையினாலமைத்ததாயுள்ள உடற்சிறையினின்று மீட்டருளல் வேண்டுமென்பார், "ஏய்ந்தவிச்சிறைமீட்டெனவுடற்சிறைமீட்டிடுநெறி காட்டிடவேண்டும்." என்றும், சிவபரம்பொருளே ஆசிரியராகத திருவுருக் கொள்ளுமென்பது நூற்றுணிபாகலின், "வாய்ந்தநீர்" என்றும் கூறினர். சரீரம்சிறையென்பதை, "கருமருவு குகையனைய காயத்தி னடுவுட் களிம்புதோய் செம்பனைய யான்-காண்டக விருக்கநீ ஞானவனன் மூட்டியே கனிவுபெற வுள்ளுருக்கிப் பருவம தறிந்துநின் னருளான வேதிகொடு பரிசித்து வேதி செய்து - பத்துமாற்றுத்தங்கமாக்கியே பணிகொண்ட பட்சத்தை யென்சொல்லுவே, னருமைபெறு "புகழ்பெற்ற வேதாந்த சித்தாந்த மாதியா மந்த மீது - மத்துவித நிலையரா வென்னையாண் டுன்னடிமை யானவர்களறிவி னூடுந், திருமருவு கல்லா லடிக்கீழும் வளர்கின்ற சித்தாந்த முத்தி முதலே-சிரகிரி விளங்கவரு தக்ஷிணா மூர்த்தியே சின்மயா னந்த குருவே." என்னும் தாயுமானசுவாமிகள் திருவாக்கானும், "கட்டிய கட்டோ கருமலக் கட்டு-பூட்டிய தளையோ பொன்ரு நசத்தளை-யடைத்தவச்சிறையோ வறிவிலா தகச்சிறை - யெனிலுயிர்க் கள்வனென்ஙன முயுமே" என்னும் சிவஞான வள்ளலார் திருவாக்கானும் தெளிக. சிவபிரானே ஆசிரியராகத் திருவுருக்கொண்டு இச்சிறையினின்றும் மீட்டருளுவரென்பதை, "விந்துமோகினி மானென விரிந்த தத்துவக் காட்டிற் றனித்திடு முயிரை - யாணவ வேங்கை யொருபா லடர்ப்ப - மாயைக் குடாவடி யொருபான் மயக்கக் - காமியக் கடமா வொருபாற் கறுவ - விருவினை மலைப்பாம் பொருபாலிழுக்க-வாசையா மண்ணை யொருபா லறையக் - குலமெனு ஞமலி யொருசார் குரைப்பக்-கல்விக்கானியா றொருசார் கவரச் - சமயச் சூறை யொருசார் தாக்க - வவாவெனும் படுகுழி யறி

வைக் கொளுவ - மாயர் வாத வனசரர் வெருட்ட - வின்னண மாவி யிடறுங் காலே - யுயிரிடை யொளிபுக் கிருந்த வொருவரத் - தாயினுஞ் சாலத் தயாநிதி யிரங்கிக் - கட்கடை வாளாற் காடற மாற்றலு - முட்கின யாவு முயிர்பிழைத் தன்றே." என்னும் ஸ்ரீ சிவஞானவள்ளலார் திருவாக்கானறிக. (கூஉ)

எனுமுப தேசத் தவமளித் தகன்று ரிவருமத் தவம்புரிகாலே, வனவயிற் பொதிசோ றொருபுடை தூக்கி வாய்திறந் துறங்கிட வாயிற் கனிபணம் பிதிர்ந்து வீழ்ந்திட வாயிற்பயந்துகன் மன்றனு க்கென்று, ரனகமன் றுடு மெங்கடம் பிரானு ரமுதுசெய் தரும்பசி யகன்றார்.

(இ-ள்.) என்னும் இவ்வாறான உபதேசமென்னும் தவத்தைப் பாலித்து அங்கு நின்றும் வெளிக்கொண்டனர். இச் சேந்தனார் நாயனாரும் அத் தவத்தை இயற்றி வருங்காலத்தில், விறகு வெட்டச்சென்ற அக் காட்டினிடத்தும் தாம் புசிப்பதற்காகக் கட்டிக்கொண்டுவந்த கட்டுச்சோற்றை ஒரு பக்கமாகத் தொங்க விட்டு, வாயைத் திறந்துகொண்டு நித்திரைகொள்ள, அப்போது அவர்வாயிலே அக் கட்டுச்சோற்றின் சாதங்கள் பிதிர்ந்து வீழ்ந்திட அச்சமுற்று அவ் வாயிற் கல் பொன்னம்பலக் கூத்தனுக்காகவென்று கூறினர், பரிசுத்தமான பொன் னம்பலத்தில் ஆனந்தத் தாண்டவம்புரியும் எங்கள் பெருமானாகிய நடராஜமூர்த் தி அக்கட்டுச்சாத முழுவதும் திருவமுதுசெய்தருளி அருமையான பசி நீங்கி னர்.—எ-று.

காட்டில் விறகொடிக்கவந்த சேந்தனார் தாம் புசிப்பதற்காகக் கட்டிக் கொண்டுவந்த கட்டுச்சோற்றை அக் காட்டின்கணுள்ள ஒரு விருட்சத்தின் கிளையிற்கட்டித் தொங்கவிட்டுத் தாம் அவ்விருட்சத்தி னிழலிற்றானே வாயைத் திறந்துகொண்டு நித்திரைபுரிந்தனர். அந் நித்திரையின் மேலீட்டால், தினந் தோறும் அவர் புரிந்துவரும் மகேசுரபூஜாகாலம் தவற நேரிட்ட துணர்ந்த சிவ பெருமான், அக் கட்டுச்சாதத்திலுள்ள சாதங்கள் ஒவ்வொன்றாய் அவர் வாயில் வீழச்செய்தனர். அவ்வாறு விழுவதனால் விழித்துக்கொண்ட சேந்தனார் நாய னார் நித்திரைமயக்கத்தினால் அச்சாதத்தைக் கல்லென்று நினைத்து, எதுவாயினு மாக, நம் வாயில் விழுவதனைத்தும் முன்பு நடராஜனுக் கற்பிதமாக வேண்டிய தாகலின், இதுவும் அந் நடராஜப்பிரபுவிற்கே அற்பிதமென்றனர். அவ்வாறு அவர் கூறியவளவில் அக் கட்டுச்சாதம் முழுவதையும் நடராஜப்பெருமானே திருவமுதுசெய்து பசியாறினரென்பார், "வனவயிற்பொதி சோறொருபுடை தூக்கி வாய்திறந்துறங்கிட வாயிற் - கனியணம் பிதிர்ந்து வீழ்ந்திட வாயிற் பயந்து கன்மன்றனுக்கென்று - ரனகமன்றுடுமெங்கடம்பிரானுரமுது செய்தரும் பசியகன்றார்." என்றனர். எனவே, தினந்தோறும் சேந்தனார் அடியார்க்குப் படைக்கும் திருவமுதை ஏற்றுக்கொள்வோர் சிவபிரானே யென்பதும், இன்று அக்காலம் தவறியதை அச் சேந்தனார்க் கறிவிப்பான் இவ்வாறு செய்தனரென்

பதும், அவ்வண்ணம் அப்பெருமான் திருவமுது செய்த வளவில் சேந்தனர் பசி நிவாரணமாயிற்றென்பதும் விளங்குதல் காண்க. (கரு)

பொருவிலக் காலத் தொருதிரு வளவன் பூசனை குறைவறப் புனைவான், பரவுமக் தத்திற் கோயிலா ராய்ச்சிப் பருமணி நாதமங் கெழும்பு, மருவுமவ் வோசை கேட்டில னயர்ந்து வருந்தினன் கன வினிற் கூத்த, ருரைசெயச் சேந்த ரன்பினை யுணர்ந்திவ் வுலகுளோ ரறியவாய் திறந்தான்.

(இ-ள்.) நிகரற்ற அக்காலத்திலே செல்வச்சோழனொன்னும் ஒருவர், நடராஜப் பெருமானுக்குரிய வழிபாட்டைத் தினந்தோறும் தம தாண்மையிற் குறைவின்றி முடிப்பார், அவ் வழிபாட்டின் முடிவில் சிதம்பரத் திருக்கோயி லின்கணுள்ள பெரிய ஆராய்ச்சிமணியின் ஓசை 'அங்குண்டாகும். இவ்வாறு வழக்கமாயிருந்ததனுல், சேந்தனர்வாயிற் கட்டுச்சாதச் சோறு விழுந்த அத் தினத்திலே அந்த ஆராய்ச்சிமணியின் ஓசை கேளாதவராய்ச் சோர்வடைந்து துக்கித்தனர். அவர்து கனவில் நடராஜப்பெருமா னெழுந்தருளிச் சேந்தனரு டைய மெய்யன்பினைத் திருவாய்மலர்ந்தருளலும், அச் சோழர் அஃ தறிந்து, இச் செய்தியை உலகுள்ளோ ரனைவரும் உணருமாறு கூறினர்.—எ-று.

செல்வச் சோழரென்பவர் நடராஜப்பெருமானைத் தினந்தோறும் பூசித்து, அப்பூசனையின் முடிவில் சிதம்பராலய வாராய்ச்சி மணியோசை கேட்டு ஆனந்தித்துவரும் வழக்கமுடையவரா யிருந்தனர். சேந்தனர் கட்டுச்சாதத் தைத் திருவமுதுசெய்தற்கு நடராஜப்பெருமா னெழுந்தருளிய அத் தினத்தில் அவ் வாராய்ச்சிமணியோசை கேளாமையால் சோர்ந்து வருந்திய காரணத்தி னலே, நடராஜபெருமான் அச்சோழர் கனவின்க ணெழுந்தருளி, சேந்தன ருடைய அன்பின் பெருக்கை அருளிச்செய்ய, அவர் அச் செய்தியை உலகறிய விளம்பினரென்பது கருத்து, அன்பர்களன்பை இவ்வாறே நடராஜப்பிரான் உலகறிய விளக்குவதியல்பென்பதை, "ஆடற்சிலம்பி னெலிகேளா வுடைவாள கற்றியங்கை-மலர்கூடத் தலைமேற்குவித்தருளிக்கொண்டு விழுந்துதொழுதெழு ந்து - நீடப் பரவி மொழிகின்றர் கேடுமால் பிரம னருமறை முன் - றேடற் கரி யாய் திருவருண்முன் செய்யா தொழிந்த தென்னென்றர்." எனவும், "என்ற பொழுதி லிறைவர்தா மெதிர்நின் றருளா தெழுமொலியான் - மன்றி னிடை நங் கூத்தாடல் வந்து வணங்கி வன்றெண்ட - னென்று முணர்வா னமைப் போற்றி யுரைசேர் பதிகம் பாடுதலா - னின்று கேட்டு வரத்தாழ்ந்தோ மென்று ரவரை நினைப்பிப்பார்." எனவும் வரும் அருண்மொழித்தேவ ரமுத வாக்கானு மறிக. (கூச)

நீலநீர் வேலி ஞாலமே லறிஞர் நிறைபர ஞானிக ளெவருஞ் சீலமா ரன்பர் சேந்தனர்க் கீந்த திருவருட் டிறத்தினைக் குறித்தா, ரேலுமன் னவர்தந்தவத்தினைத் துதித்தா ரினியவெண் காடரை மதி த்தார், பாலனம் புரியும் வளவனைப் பரவிப் பைம்பொனம் பலத்தை யும் பணிந்தார்.

(இ-ள்.) கருநிறங்கொண்ட கடலையே வேலியாக வுடைய உலகத்திலுள்ள பெரியோர்களும் பரஞானம் நிறைவுபெற்ற மெய்ஞ்ஞானியர்களும் தூய்மைவாய்ந்த மெய்யன்பர்களும், சேந்தனார் நாயனார்க்குச் சிவபிரான் பாலித்த திருவருட் டன்மையைச் சிந்தித்தார்கள். பொருத்தமாகிய அச் சேந்தனார் நாயனாருடைய மெய்த்தவத்தைப் புகழ்ந்தார்கள். இந் நாயனார்க் காசிரியராகிய இனிமையுள்ள திருவெண்காட்டடிகளை மெச்சினார்கள். இவ் வுலகத்தை அரசாட்சிபுரியும் செல்வச்சோழரைத் தொழுது, பசும்பொன்னாலாகிய திருவம்பலத்தையும் வணங்கினார்கள்.—எ-று.

அறிஞர்களென் றமையாற் கல்விசான்றவர்களும், பரஞானிகளென்றமையான் மெய்ஞ்ஞானிகளும், அன்பரென் றமையான் மெய்ப்பத்தர்களும் ஆகிய மூவகுப்பினரும், முதலிற் சேந்தனாரையும், அதன்பின் அவர்க்குத் திருவருள்பாலித்த நடராஜப்பெருமானையும், அதன்பின் அத்திருவருளடைதற் கேதுவாகிய சேந்தனார் பெருந்தவத்தையும், அதன்பின் அவர்க் கவ்வாறாகிய தவத்திற்கேதுவான உபதேசமளித்த திருவெண்காட்டடிகளையும், அதன்பின் இவையனைத்தையும் உலகத்தார்க் கறிவித்த செல்வச்சோழனையும், அதன்பின் அச்சோழர்க்கனுக்கிரகித்த நடராஜப்பெருமானுடைய பொன்னம்பலத்தையும்பணிந்தார்களென்றபடி. (௬௫)

**திருவிசைப் பாவிற் றிருவிடைக் கழியிற் றிருச்சிற் றம் பலமுடை யவரை, மருவமுன் வைத்து முருகவேட் டனக்கு மாலுலாமெனத்தமிழ் பாட, வுருகுமன் பினரூர் மன்றினின் றாடு மும்பர்தம் பதமல ரடையக், கருணைசெய் தனர்வெண் காடராங் கதனாற் கதியடைந் திடவணித் தானார்.**

(இ-ள்.) சேந்தனார் நாயனார் திருவிசைப்பாவினாலே திருச்சிற்றம்பலமுடையாரைப் பொருந்த முதலமைத்து திருவிடைக்கழிஎன்னும் க்ஷேத்திரத்திலே முருகக்கடவுளுக்கு மாலுலாமென்னும் முதலையுடைய திருப்பதிகத்தைத் திருவாய்மலர்ந்தருளலும், அதுகண்ட திருவெண்காட்டடிகள் அச் சேந்தனாரிடத்து மனவுருக்கமுள்ள அன்புடையவராகி, பொன்னம்பலத்தின்கணின்று ஆனந்தத்தாண்டவம் புரியும் நடராஜப்பெருமானுடைய திருவடி நீழலடையும்படி கிருபைபுரிந்தருளினர். சேந்தனார் அக்கிருபையினாலே முத்தி யின்பத்தையடைவதற்குச் சமீபித்த பக்குவமுடையவராயினர்.—எ-று.

திருவிசைப்பாவினாலே திருச்சிற்றம்பல முடையாரை முதலிற்றுதித்ததாவது:—"மன்னுக தில்லை வளர்க நம்பத்தர்கள் வஞ்சகர் போயகலப்-பொன்னின்செய் மண்டபத் துள்ளே புகுந்து புவனியெல் லாம்விளங்க - வன்னநடைமட வாளுமை கோனடி யோமுக் கருள்புரிந்து - பின்னைப் பிறவி யறுக்கநெறிதந்த பித்தர்க்குப் பல்லாண்டு கூறுதுமே." என்னும் பல்லாண்டேயாம். இப் பல்லாண்டு, சேந்தனார் தில்லைக் கெழுந்தருளியிருந்தபோது, அங்கு நடக்கும் இரதோற்சவதினத்தில் இரதம் செல்லாது தடையுற்ற காரணத்தால் அங்குள்ள தில்லைவாழந்தணர் முதலியோர் யாவரும் வருந்துவதைத் திருவ

ளங்கொண்ட நடேசப்பெருமான், அவர்களனைவருக்குங் கேட்கும்படி, சேந்தனார் நாயனாரை விளித்து, "சேந்தனே! நமது தேர் நடக்குமாறு பல்லாண்டு பாடுக." என அசரீரிவாக் கருளியபோது, சேந்தனார் நம்மையும் ஓர் பொருட்படுத்தி இப் பணிகட்டளையிட்டனரே எனக் களிகூர்ந்து திருவாய்மலர்ந் தருளினரென்றும், அவ்வாறு இப் பல்லாண்டோதிய வளவில் இரதம் நடையின்றிச் சென்றதென்றும் கூறுவர். திருவிடைக்கழி என்னும் க்ஷேத்திரத்தில் முருகக்கடவுளை நோக்கி மாலுலாமென முதலெடுத்துத் திருவாய்மலர்ந்தருளிய திருவிசைப்பாவாவது:—'மாலுலா மனந்தந் தென்கையிற் சங்கம் வவ்வினான் மலைமகண் மதலை - மேலுலாந் தேவர் குடிமுழு தாளுங் குமரவேள் வள்ளிதன்மணாளன் - சேலுலாங்கழனித் திருவிடைக் கழியிற் றிருக்குரா நீழற் கீழ்நின்ற - வேலுலாந் தடக்கை வேந்தனென் சேந்த னென்னுமென் மெல்லிய லிவளே." என்பதே. கதியடைந்திட வணித்தானார் என்றமையின் திருச்சிற்றம்பலமுடையார் திருவடிநீழ லடைந்தனரென்பது கருத்து. (கூகூ)

### அறுசீர்விருத்தம்:

தோணிபம் புரத்துட் புக்குச் சுடர்விடு மழுமான் விட்டுக்
கோணற நிற்கு மின்பக் குழகனை யழகு பூத்து
மாணுறு தோளி யாணி மணியணிப் பச்சை யாடுங்
காணுறுங் குரவர்ப் போற்றிக் கண்டுகண் களிக்க லுற்றார்.

(இ-ள்.) அதன்பின் திருவெண்காட்டடிகள் அழகிய தோணிபுரமென்னும் சீகாழியைச் சேர்ந்தருளி, அப்பதியில், ஒளிவீசும் மழுவையும் மானையும் நீக்கி, குற்றமொழிய வீற்றிருக்கும் இன்பமயமான சிவலிங்கப் பெருமானும், அழகானது விசேடித்த மாட்சிமையுற்ற ஆணிமுத்தணிந்துள்ள அலங்காரமான பசுநிறம் விளங்கும் தோள்களையுடைய உமாதேவியார் தரிசித்துக்கொண்டிருக்கும் ஆசாரியருமாகிய சிவபிரானைத் துதித்துத் தரிசித்து நேத்திரானந்த மடையலாயினர்.—எ-று.

சீகாழிக்குத் தோணிபுரம் முதலிய பன்னிரு திருநாமங்களுடைமையின் அப் பன்னிரண்டின் முதன்மையான தோணிபுரத்தைக் கூறினர். சீகாழிக்குத் தோணிபுரம் முதலிய பன்னிரு திருநாமங்களுள்ளன வென்பதை, "தொன்னீரிற் றோணிபுரம் புகலி வெங்குருத் தயர்தீர் காழி-பின்னீர வேணுபுரந் தராய் பிரமனூ ரெழிலார் சண்பை - நன்னீர்ப்பூம் புறவங் கொச்சைவயஞ் சிலம்ப னகரா நல்ல - பொன்னீர்புன் சடையான் பூந்தண் கழுமலமாம் புகழூரே." என்னும் ஆளுடைய பிள்ளையா ரருள்வாக்காற் காண்க. அத்தகைய க்ஷேத்திரத்திற் றிருவெண்காட்டடிகள் சென்றவளவில் திரு வாலயத்தினுட் புகுந்து அங்கு வீற்றிருந் தருளும் சிவலிங்கப் பெருமானைத் தரிசித்தாரென் றுணர்த்துவான், "சுடர்விடுமழுமான்விட்டுக் கோணற நிற்குமின்பக்குழகன்." என்றும், உமையம்மையார் அழகமைந்த தோள்களில் ஆணி முத்தங்களாலாகிய மாலைபணிந்திருத்தலினாலும் பசுநிறமுடைமையாலும், அவ்வம்மையாரே பெருமானைச் சதா தரிசித்துக்கொண் டிருக்கின்றமையாலும், "அழகு பூத்து

மாணுறதோணி யாணிமணியணிப் பச்சைபாடுங் காணுறுங் குரவர்," என்றும்
கூறினர். (கஅஎ)

கருங்கடற் றோணி விட்டுக் கட்டுமட் டுடைமா ணுக்கர்
பெருங்கடற் றோணி விட்ட பெரியதங் குரவற் போற்றி
யொருங்கடற் கோலு நீல மொருமூன்று முடைந்து மாற
வருங்கடற் கண்ட னூடு மகிழ் தமிழ்ப் பாகி நாளில்.

(இ-ள்.) கருநிறங்கொண்ட கடலிலே மரக்கலத்தைச் செலுத்தியிருந்த
அப் பந்தங்களின் அளவைப் போக்கிய மாணுக்கரான திருவெண்காட்டடிகள்,
ஓர் பிரளயத்திற் பெரிய கடலினிடத்துத் தமது திருப்பதியைத் தோணியாகச்
செலுத்திய பெருமையமைந்த தமதாசிரியராகிய சிவபிரானைத் துதித்து, ஒரே
கூட்டமாக வல்லபத்தாற் சூழ்ந்துள்ள ஒப்பற்ற அஞ்ஞானங்கள் மூன்றும் அழி
ந்து வேறுபடும்படி, பாற்கடலிற் றோன்றிய விடமாகிய கறுப்புள்ள கண்டத்
தையுடைய சிவபிரான் விரும்புகின்ற மகிழ்ச்சியுற்ற தமிழ்ச் செய்யுட்களைத்
திருவாய்மலர்ந்தருளும் நாளிலே.—எ-று.

திருவெண்காட்டடிகள் கடலில் மரக்கலத்தைச் செலுத்தி வாணிபம்
புரிந்துகொண்டிருந்து அப்பொருட் செல்வப்பற்றுக்களனைத்தையும் விட்டவரா
கலானும், சிவபெருமான் திருப்பதியாகிய சீகாழியை ஓர் பிரளயத்தில் தோணி
யாகக் கடலில் மிதக்கச்செய்தமையானும், அப் பெருமானே திருவெண்காட்
டடிகளைத் தமது மாணுக்கராக்கிக்கொண்டமையானும், "கருங்கடற் றோணிவி
ட்டுக் கட்டுமட்டுடைமாணுக்கர் - பெருங்கடற்றோணிவிட்டபெரிய தங்குரவற்
போற்றி, என்றும், காமம்வெகுளி மயக்கமென்னும் மூன்றும், ஒன்றற்கொன்று
சமமான வல்லபமுடைமையானும், அவை தனித்தனி பிரிந்திருத்தலின்றி ஒரு
ங்குகூடி யிருத்தலே இயல்பாமையானும், "ஒருங்கடற்கோலுநீல மொரு
மூன்று முடைந்துமாற." என்றும், மெய்யடியார்கள் திருவாய்மலர்ந்தருளும்
திருப்பாடல்களிற் சிவபெருமான் மிக்க விருப்பமுடையாராகலின், "வருங்கடற்
கண்டனூடுமகிழ்தமிழ்." என்றும் கூறினர். சீகாழி தோணியாகக்கடலில் மித
க்கச்செய்தனரென்பதை, "ஆணியல்வு காணவன வாணவியல் பேணியெதிர்
பாணமழை சேர் - தூணியற நாணியற வேணுசிலை பேணியற நாணிவிசயன்-
பாணியமர் பூணவருண் மாணுபிற மாணியிட மேனுகுறை யிற் - பாணியுல
காளமிக வாணின்மலி தோணிநிகர் தோணி புரமே." என்னும் ஆளுடைய பிள்
ளையா ரருள்வாக்கானும், காமம் வெகுளி மயக்கம் என்னும் மூன்றும் குற்றங்க
ளென்பதையும் அவை நீங்கார்க்குப் பிறவி யறுதென்பதையும், "காமம்வெகுளி
மயக்க மிவைமூன்ற - னாமங் கெடக்கெடுநோய்." என்னும் திருக்குறளானும்,
சிவபிரான் மெய்யடியார் திருவாய்மலர்ந்தருளும் திருப்பாடல்களில் மிகு விருப்
பமுடையரென்பதை, படியிலா நின்பாட்டி லார்வீநனிவிருப்பன் பரமனென்ப-
தடியனே னறிந்தனன்வான் றொழுமீச னினைத்தடுத்தாட் கொண்டு மன்றித் -
தொடியுலா மென்கைமட மாதர்பா னினக்காகத் தூது சென்ற - மிடியிலா

மனைகடொறு மிரந்திட்டு முழன்றமையால் விளங்கு மாறே." என்னும் சிவப்பிரகாசசுவாமிகள் திருவாக்கானும் "கொடுக்கின் றோர்கள்பாற் குறைவையாதியானெனுங் குதர்க்கம்-விடுக்கின் றோர்கள்பாற் பிரிகிலா துள்ளன்பு விடாதே - யடுக்கின்றோர்களுக் கிரங்கிநிந் தண்டயி ழலங்க - ளொடுக்கின் றோர்களைச் சோதியா ததுபரஞ் சோதி." என்னும் தாயுமானர் திருவாககானும் தெளிக.

பண்டினு மதிக சத்தி பாதம்வந் தடைத லாலே
பொண்டிறற் றிருவெண் காட ருடற்கலத் துயிர்ச்ச ரக்கைக்
கொண்டிடத் தில்லைகூத்தர் குறியரு ணற்றூர் பூட்டி
யெண்டிகழ சிவந்த பாதத் திருங்கரை சேரச் செய்வார்.

(இ-ள்.) முன்னினும் மேம்பட்ட சத்திநிபாதத்தன்மை திருவெண்காட்டடிகட்குப் பதிந்தமையால், பெருமைமிக்க வல்லபமுடைய திருவெண்காட்டடிகளின் சரீரமென்னும் மரக்கலத்திலுள்ள உயிரென்னும் சரக்கைத் தாம் பெற்றுக்கொள்வதற்குத் திருவுளங்கொண்ட திருத்தில்லையில் ஆனந்தத் தாண்டவம் புரியும் நடராஜப் பெருமான் தமது திருவருட் குறியாகிய சிறந்த கயிற்றைப் பிணித்து, மெய்யன்பர்களின் தியானமானது விளங்குகின்ற தமது சிவந்த திருவடியென்னும் பெரிய கரையி லடையும்படி செய்யத் தொடங்கினர் —எ-று.

சிவகரணம் நீங்கப்பெற்றுச் சிவகரணமுறுதலே சத்திநிபாதத் தன்மையாகலின், திருவெண்காட்டடிகள் அந்நிலைமை யடைந்தாரென் றுணர்த்துவான், "பண்டினுமதிகசத்திபாதம்வந்தடைதலாலே" என்றும், உயிர்வாழ்தலையே ஓர் வாணிபமாகக் கற்பித்து உடலைத் தோணியாகவும் உயிரைச் சரக்காகவும் உவமித்த வியல்பாகலின், "உடற்கலத்துயிர்ச்சரக்கைக்கொண்டிட." என்றும், மரக்கலத்தைக் கரைகிழுக்கவேண்டின் கயிறுபோட்டிழுத்தல் மரபாகலின், "குறியருணற்றூர்பூட்டி." என்றும், பிறவியென்னும் கடலுக்குக் கரையாயிருப்பது சிவபிரான் திருவடியேயாகலின், "சிவந்தபாதத்திருங்கரை." என்றும் கூறினர். சீவகரணமற்றுச்சிவகரணமுறுதலே சத்திநிபாதத் தன்மையென்பதை, "பாலை நெய்தல் பாடியதும் பாம்பொழியப பாடியதுங்-காலனையன் றேவிக் கராங்கொண்ட-பாலன்-மரணந் தவிர்த்ததுவு மற்றவர்க்கு நந்தல்-கரணம்போ லல்லாமை காண்." என்றும் உய்யவந்ததேவநாயனார் திருவாக்கானும், உயிர்வாழ்ந்திருத்தலை ஓர் வாணிபமாகக் கூறுவதை, "மனமெனுந் தோணிபற்றி மதியெனுங் கோலையூன்றிச் - சினமெனுஞ் சரக்கை யேற்றிச் செறிகடலோடும்போது - மதனெனும் பாறை தாக்கி மறியும்போ தறிய வொண்ணா-துனையுனு முணர்வைநல்கா யொற்றியூ ருடைய கோவே." என்னும் ஆளுடையவரசுக ளருள்வாக்கானும், பிறவியென்னும் கடலுக்குச் சிவபிரான் திருவடிக்கலப்பாகிய முத்தியேகரையென்பதை, "இப்பிறவி யெனுமோ ரிருட்கடலின் மூழ்கினா னென்னுமொரு மகர வாய்ப்பட் டிருவினை யெனுந்திரையி னெற்றுண்டு புற்புத மெனக்கொ

ங்கை வரிசைகாட்டுந், துப்பிதழ் மடந்தையர் மயற்சண்ட மாருதச் சுழல்வந்து வந்த டிப்பச் - சோராத வாசையாங் காறு வானதி சுரந்ததென மேலு மார்ப் பக், கைப்பரிசு காரர்போ லறிவான வங்கமுங் கைவிட்டு மதிமயங்கிக் - கள்ள வங் கக்காலர் வருவரென் றஞ்சியே கண்ணாருவி காட்டு மெளியேன், செப்ப ரிய முத்தியாங் கரைசேர வுங்கருணை செய்வையோ சத்தாகி யென் - சித்த மிசை குடிகொண்ட வறிவான தெய்வமே தேஜோமய னந்தமே.'' என்னும் தாயுமானர் திருவாக்கானும், தனியனேன் பெரும்பிறவிப் பௌவத்தெவ்வத் தடந்திரையா லெற்றுண்டு பற்றொன்றிக் கனியைநேர் துவர்வாயா ரென்னுங்கா லாற் கலக்குண்டு காமவான் சுறவின் வாய்ப்பட்டிணியென்னே யுய்யுமாறென் றென் றெண்ணி யஞ்செழுத்தின் புணைபிடித்துக் கிடக்கின் றேனை - முனை வனே முதலந்த மில்லாமல்லற் கரைகாட்டியாட்கொண்டாய் மூர்க்க னேற்கே.'' என்னும் மணிவாசகப்பிரான் மலர்வாக்கானும், ''அறிவி லொழுக்கமும் பிறிது படு பொய்யுங் - கடும்பிணித் தொகையு மிடும்பை யீட்டமு - மினையன பலசரக் கேற்றி வினையெனுந் - தொன்மீகாம னுய்ப்ப வந்நிலைக் - கருவெனு நெடுநக ரொருதுறை நீத்தத்துப் - புலனெனுங் கோண்மீ னலமந்து தொடரப் - பிறப் பெனும் பெருங்கடலுறப் புகுந் தலைக்குந் - துயர்த்திரை யுவட்டிற் பெயர்ப்பிட மயர்த்துக் - குடும்பமென்னு நெடுங்கடல் வீழ்த்து-நிறையெனுங் கூம்புமுரிந்து குறையா - வுணர்வெனு நெடும்பாய் கீறிப் புணரு - மாயப்பெயர்ப்பெடு காயச் சிறைக்கலங் - கலங்குபு கவிழா முன்ன மலர்கஞ் மதியுட னணிந்த பொதி யவிழ் சடிலத்துப் - பையர வணிந்த தெய்வ நாயக-தொல்லெயி லுடுத்த தில்லை காவல - வம்பலர் தும்பை யம்பல வாணநின் னருளெனு நலத்தார் பூட்டித் - திருவடி நெடுங்கரை சேர்த்துமா செய்யே.'' என்னும் திருவெண்காட்டடிகள் திருவாக்கானும் தெளிக. (சுகூ)

ஆதலாற் காழி வாழு மமுதனை வழிபட் டேத்திக்
கோதுதீர் குரவைற் போற்றிக் குறிபற்றி டைபெற் றண்ணல்
மாதவம் பெற்றோர் போற்று மன்றுண்மா ணிக்கம் பெற்றே
யேதமி லின்பா தீத விலாபமுற் றிருக்க வந்தார்.

(இ-ள்.) ஆகையினாலே திருவெண்காட்டடிகள் சீகாழிப்பதியில் வீற்றிருந் தருளும் அமுதம்போன்ற தோணியப்பரைப் பூசித்துத் துதித்து, குற்றமற்ற தமதாசிரியராகிய மருதவாணரைத் தோத்திரஞ்செய்து, திருவ நட் குறிப்பைக் கொண்டு விடைபெற்று, சிறந்த தவத்தைப் பெற்றோர்கள் துதிக்கின்ற பொன் னம்பலத்தின்கண்ணுள்ள மாணிக்கமாகிய நடராஜப்பெருமான் திருவருளைப் பெற்று, பழுதற்ற நிரதிசயானந்தமென்னும் ஊதிய மடைந்திருக்கும்படி எழுந் தருளினர்.—எ-று.

எனவே, திருவெண்காட்டடிகள் திருக்கழுமலமும் மணிக்கோவை என் னும் பிரபந்தம் பாடி முடித்து, அங்கிருந்தவண்ணமே மருதவாணரையும் துதி த்துக்கொண்டிருக்கையில், தோணியப்பர் திருவெண்காட் டடிகளைச் சிதம்

பாத்திற் கனுப்பவேண்டுமெனக் கொண்ட திருவுள்ளக்குறிப்பை யுணர்ந்தவராய், அப் பெருமானிடத்து விடை பெற்றுக்கொண்டு சிதம்பரத்தை யடைந்து நிரதிசயானந்த வாழ்வடைதற் கெழுந்தருளினரென்றபடி. (எ0)

வந்தவர் மற்று முள்ள தலங்களும் வழிபா டாற்றிக்
கொந்தலர்ச் சிறைவண் டார்க்குங் கொள்ளிடப் பொன்னி பின்னிட்
டந்தளிர்ச் சோலை வேலி யண்ணலூர் கண்டுங் கேட்டுஞ்
செந்தமிழ்த் திருவாக்காளர் தில்லைத்துளங் களித்து வந்தார்.

(இ-ள்.) அவ்வாறெழுந்தருளிய திருவெண்காட்டடிகள் இடையிலுள்ள மற்றைய தலங்களிலும் பூசனைபுரிந்து, கொத்தாயிருக்கும் மலர்களிலே சிறகுகளையுடைய வண்டுகள் ஆரவாரிக்கின்ற விசாலத்திலுள்ள காவிரிநாட்டைக் கடந்து, அழகிய தளிர்கணிறைந்த சோலைகளையே வேலியாக வுடைய சிவபிரானுக்குரிய திருப்பதியாகிய சிதம்பரத்தைத் தூரத்தே தரிசித்துக்கொண்டும் அப்பதியின் புகழைச் சிரவணித்துக்கொண்டும், செவ்விய தமிழ்ப்பாடல் நிறைந்த திருவாக்கையுடைய திருவெண்காட்டடிகள் ஆனந்த நிறைவெய்தி மனக்களிப்படைந்தவராய்த் திருத்தில்லைக்கெழுந்தருளினார்.—எ-று.

தில்லையையடையத் திருவுளங்கொண்ட திருவெண்காட்டடிகள், தில்லைக்கும் காவிரிநதிக்கும் மத்தியிலுள்ள சிவதலங்களைத் தரிசித்துக்கொண்டு, காவிரிநாட்டைக் கடந்து, அதன்பிறகும் தில்லைக்கடுத்துள்ள ஏனைய திருப்பதிகளையும் பணிந்துகொண்டே சிதம்பரத் தடைந்தனரென்றபடி. (எக)

கொள்ளைவண் கமலக் காடுங் குளிர்செந்தா மரைக்கு ழாமு
மள்ளலங் கழனி தோறு மனந்தகோ டிகள்வண் டில்லை
வள்ளனு டகங்கண் டுள்ள வாணிலா வண்ணப் பானு
தள்ளறத் தலவா சஞ்செய் தன்மைபோன் றனவுங் கண்டார்.

(இ-ள்) அத்திருப்பதியில் கூட்டமாயிருக்கின்ற வெண்தாமரைக்காடும், குளிர்ச்சியுள்ள செந்தாமரைக்கூட்டமும், சேறு நிறைந்துள்ள அழகிய கழனிகளெல்லாம் அனந்தகோடிக் கணக்காக, வளமமைந்த திருத்தில்லையின் கண்ணுள்ள நடராஜப்பெருமானுடைய ஆனந்தத் தாண்டவத்தை முன்பே தரிசித்திருந்த வெண்ணிறமுள்ள சந்திரனும் செந்நிறமுள்ளசூரியனும் நீக்கமின்றித் தலவாசஞ்செய்கின்ற தன்மையைப் போன்றிருப்பனவும் பார்த்தார்.—எ-று.

சிதம்பரமென்னும் அந்த க்ஷேத்திரத்தில் பூர்வபுண்ணியத்தினாலே சூரியனும் சந்திரனும் ஆனந்தத்தாண்டவந்தரிசித்திருந்தார்களாகலானும், அப்பதிக்குத் திருவெண்காட்டடிகள் தரிசிக்க எழுந்தருளியபோது, அங்கு கழனிகளெங்கும் வெண்டாமரைமலர்களும் செந்தாமரைமலர்களு மலர்ந்திருத்தல், முன்பு தரிசித்த சூரியர்களும் சந்திரர்களும் அளவிறந்தவர்களாக வடிவங்கொண்டு, அந்த க்ஷேத்திரவாசஞ்செய்துகொண்டிருத்தலைப் போன்று விளங்கினவென்

றுவமித்தனர். முற்செய்யுளிற் கூறியவாறு அத்தலத்தைத் தூரத்தே தரிசித்துக்கொண்டும், அத்தலத்தின் மிக்க புகழைச் சிரவணித்துக்கொண்டும் வந்ததல்லாமலும், அத்தலத்தைக் குறுகியவுடன், வெண்டாமரை மலர்களும்செந்தாமரை மலர்களும் விகசித்திருப்பதையும் கண்டன ரென்றுணர்த்துவான்; "தன்மை போன்றனவும்" என உவமைக்கொடுத்துக் கூறினர். (எஉ)

தில்லைமா நகரஞ் சுற்றுந் திருமதில் சிகரி நான்கு
நல்லவர் மௌனப் பொற்பு ஞாயிறு தோன்றிற் றென்னு
வெல்லொளி மிளிரும் வெற்பு மிமயமும் பொதியி லும்போற்
சொல்லுவ கண்டார் தூண்டு முவகையா ரூருட் புக்கார்.

(இ-ள்.) சிறப்புற்ற திருத்தில்லையைச்சூழ்ந்துள்ள திருமதில்களும், நான்கு கோபுரங்களும், பெரியோர்களுடைய மௌனமென்கிற அழகும், சூரியனுதயமாயினனென்று சூரியப்பிரகாசத்துடனே யோங்கிய உதயவரையும் இமயவரையும் பொதியவரையும் போன்றனவெனப் பலபெரியோர்கள் கூறுவனவும் பார்த்தவராய், எழுப்பப்படுகின்ற களிப்புடையவராகி அப்பதிக்குட் சேர்ந்தருளினர்.—எ-று.

சிதம்பரமென்னும் க்ஷேத்திரத்தின்கணுள்ள திருமதில்கள் திருக்கோபுரங்கள் பெரியோர்களுடைய மௌனமென்னும் குணக்குன்று ஆகிய மூன்றும் முறையே உதயவரை இமயவரை பொதியவரை என்னும் மூன்றுவரைகளுக்கொப்பாகப் பெரியோருரைத்தவாறு விளங்குவதைக் கண்கூடாகத் தரிசித்துக்கொண்டு, நடராஜப் பெருமானைத் தரிசிக்கவேண்டுமென்னும் விருப்பம் தூண்டப்பட்டவராய் அத்திருப்பதிக்குளெழுந்தருளினரென்றபடி. திருமதில்களையும் கோபுரங்களையும் அவற்றின் உன்னதத்தால் வரைகளுக்கொப்பாகக்கூறினரெனினும், பெரியோர்களின் மௌனநிலைமையையும் ஓர் வரையாகக் கூறலாமோ வெனின், அன்னோர்களின் மௌனநிலைமைக்குக் காரணமான சத்துவகுணத்தை ஓர் மலையாகக்கூறுவதியல்பாகலின் அங்ஙனம் கூறினரென்க. பெரியோர்களுடைய சத்துவகுணத்தை மலையென்றுவமித்திருப்பதை, "குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி - கணமேனுங் காத்த லரிது." என்னும்திருக்குறளானுந் தெளிக. (எ௩)

வீதிக டொறும்ப ணிந்து விதிமுறை யந்த ணாளா
ராதிமூ வாயி ரத்தோ ரங்கிக ளனேகஞ் சுற்ற
மீதிரா திற்கு ஞான வங்கியை வியந்து காண்பான்
பேதமை தீருந் தீரப் பெரியவ ரரிதின் வந்தார்.

(இ-ள்.) அவ்வாறுசென்ற திருவெண்காட்டடிகள் அத்திருப்பதியின் தெருக்களிலெல்லாம் வணங்கிக்கொண்டு, வேதவிதிப்படி மறையோர்களாகிய முதன்மைபெற்ற தில்லைமுவாயிரவரியற்றும் அக்கினிகாரியங்கள் அள

விறந்தனவாகச் சூழ்ந்திருக்க, அவைகட்கு மேலாயிருக்கின்ற ஞானக்கினியான நடராஜப்பிரானைக் களித்துத் தரிசிக்கும்படி அஞ்ஞானம் நிவாரணமான உறுதி யமைந்த அறிஞராகிய திருவெண்காட்டடிகள் அருமையுடனே எழுந்தருளினர். —எ-று.

தில்லைவாழந்தணர்கள் நடராஜப் பெருமானைப்போன்று அறுதியா யுள்ளவர்களாகலின், "அந்தணளாதி மூவாயிரத்தோர்" என்றும் அவர்கள் ஒவ்வொருவரும் ஆகவனீயம் காருகபத்தியம் தக்ஷணாக்கினி என்னும் மூன்று யாகாக்கினிகளை வளர்க்கின்றாராகலின், "அங்கிகளனேகஞ்சுற்ற." என்றும், அவ்வக்கினிகளொவ்வொன்றின்மீதும் விளங்குவது நடராஜப் பிரானென்னும் ஞானக்கினியாகலின், "மீதிராநிற்கு ஞானவங்கி." என்றும் திருவெண்காட்டடிகள் அஞ்ஞானம் தீருதற்கேதுவாகிய மெய்ஞ்ஞானவுறுதியுடையோராகலின், "பேதமை தீருந்தீரப் பெரியவர்." என்றும், திருவெண்காட்டடிகள் ஏனையரைப்போன்று சாதாரணமாய் நடராஜப்பெருமானைத் தரிசிக்க வந்தாரல்லர், மெய்ப்போதவழித்தாய் அகமுகநோக்காகத் தரிசிக்க வந்தாரென்பதை விளக்குவான், "அரிதின் வந்தார்." என்றும் கூறினர். தில்லைவாழந்தணர்கள் சதாமூன்றக்கினிகளையும் வளர்க்கின்றனரென்பதை, "கற்றாங் கெரியோம்பிக் கலியை வாராமே-செற்றார் வாழ்தில்லைச் சிற்றம் பல மேய - முற்றா வெண்டிங்கண் முதல்வன் பாதமே - பற்றா நின்றாரைப் பற்றா பாவமே." என்னும் ஆளுடையபிள்ளையாரருள் வாக்கானும், 'பவந்த விர்ப்பவர் தில்லைசூ ழெல்லையின் மறையவர் பயில்வேள்விச் சிவந்த ரும்பய னுடையவா குதிகளின் செழும்புகைப் பரப்பாலே - தவந்த ழைப்பவந் தருளிய பிள்ளையார் தாமணை வுறமுன்னே - நிவந்த நீலநுண் டுகில் விதானித்ததுபோன்றது நெடுவானம்" எனவும், மெய்ப்போத வழித்தாய் அகமுக நோக்காகத் தரிசித்தல் பெரியோரியல்பென்பதை, "அண்ண லார்தமக் களித்தமெய்ஞ் ஞானமே யானவம் பலமுந்தம்-முண்ணி றைந்தஞா னத்தெழு மானந்த வொருபெருந் தனிக்கூத்துங்-கண்ணின் முன்புறக் கண்டுகும் பிட்டெழுங் களிப்பொடுங் கடற்காழிப் - புண்ணி யக்கொழுந் தனையவர் போற்றுவார் புனிதரா டியபொற்பு" எனவும், "உணர்வி னேர்பெற வருஞ்சிவ போகத்தை யொருவின்றி யுருவின்க - ணணையு மைம்பொறி யளவினு மெளிவர வருளினை யெனப்போற்றி - யினையில் வண்பெருங் கருணையே யேத்திமுன் னெடுத்த சொற் பதிகத்திற் - புணருமின்னிசை பாடின ராடினர்பொழிந்தனர்விழிமாரி." எனவும்வரும் அருண்மொழித்தேவ ரமுதவாக் கானுமறிக. (எசு)

கலி விருத்தம்.

நீடுமறை யாகம நிரப்பிய பெருஞ்சொல்
லாடிய விதிப்படி யமைந்த சதுர்வீதி
நாடுமதி லைந்தணவ வாகநவ மாகுந்
தேடரிய வீடுதரு தெய்வநகர் கண்டார்.

(இ-ள்.) மிக்க மேம்பாடுற்ற வேதாகமங்களில் நிரப்பியுள்ள பெரிய வாக்கியங்களுரைத்த முறைப்படியே, அமைந்துள்ள நான்குவீதிகளும் விண்ணைநாடுகின்ற மதில்களைந்தும் ஒன்றுசேர்தலால் ஆகக்கூடியதொகை ஒன்பதாகின்ற, தேடுதற்கரிய முத்தியைப்பாலிக்கும் தெய்வீகமுள்ள சிதம்பர க்ஷேத்திரத்தைத் தரிசித்தனர்.—எ-று,

வேதாகமங்களிற் சிவபிரானுக்கு அருவம்நான்கு உருவம்நான்கு அருவுருவம் ஒன்று என்னும் நவபேதங்களும் கற்பித்திருப்பதனாலும் அத்தகைய நவபேதங்களும் பிரமன் திருமால் உருத்திரன் மயேசுரன் சாதாசிவன் சிவம் சத்தி நாதம் விந்து என்றும், இவற்றுள், பிரமன் திருமால் உருத்திரன் மயேசுரன்என்னும் நான்கும் உருவமும், சதாசிவன் அருவுருவமும். சிவம் சத்தி நாதம் விந்து என்னும் நான்கும் அருவுருவமும் ஆகுமென்றும், இத்தகைய நவேந்திரபேதமுடையசிவத்தைத் தரிசித்தோர்க்கு எவ்வாறு முத்திப்பேறு,சித்தியாமோ அவ்வாறே இத்திருப்பதிக்கணுள்ள நான்குவீதிகளையும் ஐந்துமதில்களையும்தரிசித்தோர்க்குமுத்திசித்தியாமென்றும் கூறியிருத்தலின்,"நீடுமறைபாகம நிரப்பியபெருஞ்சொல் - லாடிய விதிப்படியமைந்த." என்றனர். சிவன் நவபேதமுடையரென்பதை, "சிவஞ்சத்தி நாதம் விந்து சதா சிவன் றிகழுமீச - னுவந்தரு ளுருத்திரன்றான் மாலய னொன்றி னொன்றாய் - பவந்தரு மருவ நாலிங் குநவநா லுபயமொன்று - நவந்தரு பேத மேக நாதனே நடிப்ப னென்பர்." என்னும் சிவஞானசித்தித் திருவிருத்தத்தானும், சிதம்பரத்தைத்தரிசித்தோர்க்குமுத்தியென்பதை, "துவக்கற வறிந்து பிறக்குமா ரூருந் துயர்ந்திடா தடைந்துகாண் மன்று - மவப்புட னினைத்து மரிக்குமோர் பதிபு மொக்குமோ நினைக்குநின் னகரைப் - பவக் கடல்கடந்து முத்தியங் கரையிற் படர்பவர் திசைப்பற நோக்கித் - தவக் கல நடத்த வுயர்ந்தெழுஞ் சோண சைலனே கைலைநா யகனே." என்னும் சிவப்பிரகாச சுவாமிகள் திருவாக்கானுமறிக. (எ௫)

கண்டனர் வணங்கினர் கணங்கொள விணங்குந்
தொண்டரொடு முட்சிகரி சூழ்ந்தமதில் வாயி
லெண்டர விறைஞ்சியுள் புகுந்தன ரிலங்கு
மண்டர்கட மாடுமணி யாலய மருங்கே,

(இ-ள்.) அவ்வாறு தரிசித்தவராகியதிருவெண்காட்டடிகள்பணிந்தவராய்க் கூட்டமாகச் சேர்கின்ற அடியார்களோடும் உட்பிராகாரத்தில் மதில் சூழ்ந்துள்ள கோபுரவாயிலை தியானமோங்கும்படி வணங்கி விளங்குகின்ற நடராஜப்பெருமான் ஆனந்தத்தாண்டவம் புரியும் அழகிய திருவாலயத்தின்சமீபத்தில்உள்ளே சென்றனர்—எ-று

தில்லைப்பதியை மேற்கண்டவாறு தரிசித்த திருவெண்காட்டடிகள் கூட்டமாகத் தம்மைச்சூழ்ந்துள்ள மெய்யடியார்களோடு வெளிப்பிராகாரத்தை வணங்கிக்கொண்டு உட்பிராகாரத்திலுள்ளதூலலிங்கமாகிய கோபுரத்தைத்தியானித்து

வணங்கி, அவ்வாயிலாக உள்ளேசென்று நடராஜப்பெருமான் ஆனந்தத்தாண்டவம்புரியும் திருவாலயத்தைச் சமீபித்தனர் என்றபடி. (எசு)

ஆலய மிலங்குவ தறிந்தனர் செறிந்தே
ஞாலநடு விண்ணுயர்வு பாதல நலக்கீ
ழேலுமிஃ தென்பதுவு மின்பமொடுகண்டா
ராலமணி கண்டரருள் செய்யிலரி தென்னே.

(இ-ள்.) அத்திருவாலயம் விளங்குவதைக்கிட்டியுணர்ந்த திருவெண் காட்டடிகள், மத்தியிலுள்ள உலகமாகிய இப்பூவுலகத்திலும் மேலுள்ளதாகிய விண்ணுலகத்திலும் கீழுள்ளதாகிய சிறந்த பாதல உலகத்திலும் இத்திருவாலயம் பொருந்தியுள்ளதென்பதையும் இன்பத்துடனே பார்த்தனர்விடத்தைத்தரித்த கண்டமுடையவர் திருவருள் புரிவாராயின் அத்தகையோர் கட்கு அருமையானது யாது ?—எ - று.

அத்திருவாலயக் கோபுரங்களின் உன்னதத்தை நோக்குகையில் விண்ணுலகம் அளாவுவதாகவும், அவ்வளவு உன்னதமான கோபுரங்களைத் தாங்குவதற்குக் கீழே பாதாளம்வரையில் அஸ்திபாரம் அமைந்ததாகவும் காணப்படுவதோடு பூவுலகத்தில் ஆலயம் விளங்குவதால், மூவுலகத்திலும் பொருந்தியுள்ளதென்றும், விண்ணுலக வாசிகளும் நிலவுலகவாசிகளும் நாக லோகவாசிகளும் சதா ஆனந்தத்தாண்டவம் தரிசித்துக்கொண்டிருத்தலைத்திருவெண்காட்டடிகள் தமது அகமுக நோக்காற் கண்டனராகலின் இத்திருவாலயம் மூவுலகங்களிலும் பொருந்தியுள்ளதென்றும் கூறினர். (எஎ)

ஏடவிழ் செழுங்கமல மெங்கணு மிலங்கப்
பாடுமளி யாடுமவர் பாவமென வோவத்
தேடுமரு ஞேயநிலை சேருமவர் நேச
நீடுசிவ கங்கையி னெடுந்தவர் படிந்தார்.

(இ-ள்.) யாவரும் தேடுகின்ற அருமையான ஞேயநிலையைச் சேர்பவரும் பெருந்தவசியு மாகிய திருவெண்காட்டடிகள், இதழ்கள்விரிந்த செழுமையான தாமரைமலர்களொவ்வொன்றிலும் விளங்கப் பாடுகின்ற வண்டுகளானவை, தீர்த்தத்தில் முழுகுவோர்களுடைய பாவத்தைப்போன்று பறக்குமாறு, அடியார்களன்புமிக்க சிவகங்கை என்னும் தீர்த்தத்தில் முழுகினார். எ-று,

காண்பான் காட்சி காணப்படுபொருளென்னும் மூன்றையுமே ஞாதுருஞானம்ஞேயம் என வடநூலார் கூறுவதியல்பாகலானும், அம்மூன்றனுள் காணப்படுபொருளென்னும் ஞேயத்தைச் சேர்வதே பெரியோர்கட் கிலக்கணமாகலானும், அவ்விதவிலக்கணம் பெருந்தவ முடையோர்கட்கே யமையுமாகலானும், இவையனைத்தையும் விளக்குவான், “தேடுமருஞேய நிலைசேரு

மவர் நெடுந்தவர்" என்றும், சிவகங்கை என்னும் தீர்த்தத்தின்கண் மலர்ந்துள்ள தாமரைமலர்களில் இசைபாடிக்கொண்டிருக்கும் வண்டுகள் யாவும், அத்தீர்த்தத்தில் எவரேனும் நீராடுங்கால் பறப்பதை நோக்குகையில், அவ்வாறு முழுகுவோர்களுடைய பாவங்கள் பறப்பதைப்போன்றிருக்கின்றதென்பார், "எடவிழ் செழுங்கமல மெங்கணு மிலங்கப் - பாடுமளி யாடுமவர் பாவமெனவோவ," என்றும் கூறினர். ஞேயத்தைச் சேர்வதே பெரியோர் கட்கிலக்கணமென்பதை, "கண்டன வல்லவென் றேகழித்திடி பிறகிக் கண்ணே - கொண்டது பரமா நந்தக் கோதிலா முத்தி யத்தாற் - பண்டையிற் படைப்புங் காப்பும் பறந்தன மாயை யோடே - வெண்டலை விழிகை காலில் விளங்கிட நின்றான் யாவன்" என்னும் தாயுமானர் திருவாக்கானும், பாவத்தைப் போக்கத்தக்க தீர்த்தங்களுட் சிவகங்கையே சிறந்ததென்பதை, "தீர்த்த மென்பது சிவகங்கையே - யேத்த ருந்தலமெழிற்புலி யூரே-மூர்த்தி யம்பலக் கூத்தன துருவே." என்னும் குமரகுருபரசுவாமிகள் திருவாக்கானும் அறிக. (எஅ)

> படிந்துசிவ மாயிதென வோர்ந்துபடர் பாவம்
> விடிந்துசிவ மூலமுறை மேதகைய சோதி
> முடிந்தபொரு ளாய்முடிவி லாதபொருள் கண்டார்
> தடிந்திருள் கடிந்தபொரு டக்கசபை புக்கார்.

(இ-ள்.) அவ்வாறு நீராடி இதுவும் சிவமயமே என்றுணர்ந்து அதுவரையில் தொடர்ந்திருந்த பாவனைத் தியானத்தை நீங்கி, முழுமுதற்பொருளாகிய சிவம்பொருந்திய மேம்பாடுற்ற சோதிமயமே தீர்ந்தபொருளாகி அந்த மற்ற பொருளைத் தரிசித்தனர். உறத்திருந்த அஞ்ஞானத்தைப் போக்கிய அப்பொருள் வீற்றிருக்கும் தகுதியமைந்த சபையிற் சென்றனர்.—எ-று. தடித்திருள் எனற்பாலது எதுகைநோக்கித் தடிந்திருள் என நின்றது.

சிவகங்கையில் நீராடிய திருவெண்காட்டடிகள் அத்தீர்த்தமும் சிவமயமே எனத்தெளிந்து பாவனைத்தன்மை தீர்ந்தவராய் எங்கும் சிவமயமாய்க் காணப்பெற்று அத்தகைய சிவம் சோதிப்பொருளென்றும் துணிந்து, அழிவற்றதாகிய அப்பொருள் தம்முள்ளும் விளங்கப்பார்த்து, அத்தகைய பொருளே நடனசபேசராய் வீற்றிருக்கின்ற பொன்னம்பலத்திற் பிரவேசித்தனர் என்றபடி. எனவே, அச்சிவகங்கையில் நீராடியவுடன் பாவனாதீதமாகிய உண்மைநிலையை எய்தினரென்பது கருத்து. பாவனாதீத நிலைமையை அடைந்தோர் தன்மை இத்தகையதென்பதை, "நெஞ்சமே யினிப் பாவனாதீதமாய் நின்றிடின் றெனினிற்பா . யெஞ்சுறு தகல்புரணபா வனையையோர்ந் திலையெனி னுலகெல்லா - மஞ்சனக்களன் மேனியென் றோர்ந்திலை யெனினருள் சுரந்தெம்பால் - வஞ்சமற்றிடும் படிக்கினி யடைந்ததோர் வடிவையோர்ந் துய்வாயே." என்னும் சாந்தலிங்க சுவாமிகள் திருவாக்கானுணர்க. இவ்வனுபவ நிலைமையை இன்னும் விரிக்கின் மிகப்பெருகுமென்றஞ்சி விடுத்தனம். (எகூ)

சற்றுமசை யாதபொரு டானசைய மூல
முற்றநிலை யுந்தலைமை யுற்றபடி மற்றும்
பெற்றபடி கொற்றவர் பிறங்குசெயல் கண்டா
ரற்றமறி யானரு ளளிக்கலரி தென்னே.

(இ-ள்.) கொஞ்சமேனும் அசைவற்ற நிஷ்களப் பொருள்தானே அசைய ஆதியாயிருக்குந் தன்மையும் இன்னும் முதன்மைபொருந்தியிருப்பதும் பெற்றுக்கொண்டவாறும் விளங்கும் கிர்த்தியத்தைத் திருவெண்காட்டடிகளுணர்ந்தார். குற்றத்தை அறியாத நடராஜப்பெருமான் திருவருள் பாலிக்கின் அருமையானது யாது?—எ-று.

அசைவற்ற நிட்களப்பொருளாய்க்கண்ட பரம்பொருளே ஆனந்தத்தாண்டவமாடவும், அப்பொருளே தனக்கோர் காரணமில்லாதிருப்பதையும் முதன்மைபெற்றிருப்பதையும், அத்தாண்டவத்தாற் பஞ்சகிர்த்தியம் புரிந்தருள்வதையும் அப்பெருமானே அறிவிக்க அறிந்தனர் என்றபடி. அசைவற்ற நிட்களப்பொருளாகிய சிவமே சகளீகரித்துத் தாண்டவம் புரிவதொன்பதை, "அகளத்திலாநந்தத் தாநந்தி யாயே - சகளத்திற் றையலுடன் றோன்றி - நிகளத்தைப் - போக்குவதுஞ் செய்தான்றன் பொன்னடியென் புன்றலைமே - லாக்குவதுஞ் செய்தானவன்." என்னும் உய்யவந்த தேவநாயனார் திருவாக்கானும், அத்தாண்டவத்திற்றானே பஞ்சகிர்த்தியங்க ணடத்துவதொன்பதை, "தோற்றந் துடியதனிற் றோயுந் திதியமைப்பிற் - சாற்றியிடு மங்கியிலே சங்காரம் - ஊற்றமா - வூன்று மலர்ப்பதத்தி லுற்ற திரோதமுத்தி - நான்ற மலர்ப்பதத்தே நாடு." என்னும் மனவாசகங்கடந்ததேவநாயனார் திருவாக்கானும் தெளிக. (௮௦)

கஞ்சமலை மஞ்சர்பல காலரற்றி மூல
ரெஞ்சுதல்ப டாவிடப யோகிபுலி பாம்பு
நஞ்சமுறு தேசிக நட்டங்கலவிக் கண்டா
ரஞ்சலிசெயின்னவரு மன்னவரை யொத்தார்.

(இ-ள்.) தாமரையையும் பாற்கடலையும் இடமாகவுடைய பிரமன் திருமால் என்னும் இருவரும் திருமூலநாயனாரும், குறைவுபாடற்ற இடபயோகியென்னும் திருநந்திதேவரும், வியாக்கிரபாதரும் பதஞ்சலியும் பலகாலும் துதித்து, விடத்தைக்கண்டத்துடைய பரமாசிரியராகிய நடேசப்பெருமானுடைய ஆனந்தத்தாண்டவத்தை ஒருங்குகூடித் தரிசித்தார்கள். அப்பொற்சபையிற் சென்று வணங்கினவராகிய திருவெண்காட்டடிகளும் முற் கூறினவர்களை நிகர்த்தனர். எ-று.

பிரமன் திருமால் திருமூலர் நந்தியெம்பெருமான் வியாக்கிரபாதர் பதஞ்சலி என்னும் இவர்கள் நடராஜப்பெருமானுடைய ஆனந்தத்தாண்டவத்தைத் தரிசித்தற்கேற்ற தவத்தை அளவிறந்த காலம் புரிந்து துதித்துத்

தரிசிக்கப்பெற்றனர். அவ்வாறிருக்க அத்தகைய தாண்டவத்தைப் பொன்னம் பலத்திற்சென்று தொழுதுகொண்டிருந்த திருவெண்காட்டடிகளும் அவர்களைப் போன்றே தரிசித்தனரென்றபடி இவ்வாறிருதிறத்தரும் ஒருவகைப் பேறெய் தலை, "சலியாது முயன்ற தவப்பெருந் தொண்டர் - பலநா ளொருதிக்கலைமுற்று நிரம்பி - யளவையி னளந்துகொண் டுத்தியிற் றெளிந்து - செம்பொரு ளிது வெனத் தேறி யம்பலத் - தாரா வன்பினோ டகனமர்ந் திறைஞ்சிப் - பேரா வியற்கை பெற்றனர் யானே - சரியையிற் சரியாது கிரியையிற்றளரா - தியோ கத்துணங்கா தொண்பொரு டேக்காது - வறிதே நின்றிரு மன்றநோக்கிப் - பிர வா நன்னெறி பெற்றன னன்றே - தெய்வப் புலியூர் வைதிகக் கூத்த - பொன் னிறப் பிறவுங் கருநிறக் காக்கையு - மன்னு மா லி மய வரைப் புறஞ் சேர்ந்துழி - யிருதிறப் பறவைக்கு மொருதிற னல்லதை - நிறம் வேறு தெரிப்ப துண்டோ விறைவநின் - னின்னருள் பழுத்த சந்நிதிச் சேர்ந்துழி - யிருவேம் பெற்றது மொருபே றாகலின் - வேற்றுமையுளதோ வில்லை - யாற்றல்சால் சிறப்பி னனை யரோ டெனக்கே." என்னும் குமரகுருபரசுவாமிகள் திருவாக்கானுமறிக. கஞ்ச மென்னும் கட்டிலாவது பிரமனுடைய தாமரையாதனம். அலையென்னும் கட்டி லாவது திருமாலின் சேஷசயனமுள்ள திருப்பாற்கடல் என்க. (அக)

அந்தநடு வாதிவிடு மண்ணலவை யுண்டாய்
வந்ததிச யத்தினை வழுத்தினர்த நெஞ்சில்
முந்துறவி ளைந்தவொரு மூர்த்திவிச யத்தைச்
சிந்தைசெய் திருந்தனர் திருந்தினர் வருந்தார்.

(இ-ள்,) திருத்தமுடையராய் வருத்தமற்றிருக்கும் திருவெண்காட்டடிகள், ஆதிமத்தியாந்தரகிதராக விளங்கும் நடராஜப்பெருமானுடைய பொன்னம்பலத் திற் றோன்றிய அற்புதத்தைத் தமது மனத்தின்கண் துதித்தனர், அதன்பின் முற்பட்டுத் தோன்றுகின்ற மூர்த்தியின் தோற்றத்தையும் தியானித்துக்கொண் டிருந்தனர்,—எ - று

மனத்தின் வேறுபாடுக ளனைத்தும் தீர்ந்தவராகலின், "திருந்தினர் வரு ந்தார்." என்றும், முதலிற் றமது அகமுகநோக்காகவே பொன்னம்பலத் தைத் தரிசித்துப் பேரானந்தமெய்திப் பின் பகிர்முகப்பட்டு நடராஜமூர்த்தியைத் தரி சித்தனரென்பதைக் ,குறிப்பிப்பான், "அந்த நடுவாதிவிடு மண்ணலவையுண் டாய் - வந்ததிசயத்தினை வழுத்தினர்தநெஞ்சில்." என்றும், அதன் பின், "முந் துற விளைந்தவொரு மூர்த்தி விசயத்தைச் சிந்தை செய்திருந்தனர். " என்றும் கூறினர். இத்தகைய மெய்யடியார்கட்கு அகமுகநோக்காகத் தரிசித்தலே யா னந்தமென்பதை, "முகத்திற் கண்கொண்டு பார்க்கின்ற மூடர்கா - ளகத்திற் கண்கொண்டு பார்ப்பதே யானந்த - மகட்குத் தாய்தன் மணாளனோடாடிய - சுகத்தைச் சொல்லெனிற்சொல்லுமாறெங்ஙனே." என்பதனானும், "செஞ்சொன்

மலர்ந்த திருப்பதிகம் பாடித் திருக்கடைக்காப்புச்சாற்றி-யஞ்சலி கூப்பி விழுந்தெழுவா ரானந்த வெள்ள மலையப் போந்து-மஞ்சிவர் சோலைப் புகலிமேவு பாமறை யோர்தமை நோக்கி வாய்மை-நெஞ்சு நிறைந்த குறிப்பில்வந்த நீர்மைத்திறத்தை யருள்கின்றார்." எனவும், "பிரம புரத்தி லமர்ந்த முக்கட் பெரியபிரான்பெரு மாட்டியோடும்-விரவிய தானங்க ளெங்குஞ் சென்று விரும்பிய கோயில் பணிந்து போற்றி-வருவது மேற்கொண்ட காதல்கண்டங் கமர்ந்த வகையிங் களித்த தென்று-தெரிய வுரைத்தருள் செய்துநீங்கள் சிரபுர மாநகர் செல்லு மென்றார்." எனவும் வரும் அருண்மொழித்தேவ ரமுதவாக் கானுமறிக. (அ௨)

செங்குரு நடந்தரி சனஞ்செய்சம யத்தில்
வெங்ககன லிங்கவுரு மேல்விளைதல் பெற்றா
ரங்கையினி லங்கியவ னடலிசை பாட
லங்கிசைய வோதின ரருந்திரு விசைப்பா.

(இ-ள்.) தமது செவ்விய ஆசாரியான நடராஜப்பெருமானுடைய ஆனந்தத்தாண்டவத்தைத் தரிசிக்கும் சமயத்தில், யாவர்க்கும் விருப்பத்தை விளைக்கத்தக்கதான ஆகாயலிங்கசொரூபம் அதன்மேல் தோன்றத் தரிசிக்கப் பெற்றனர். அழகிய திருக்கரத்திலே மழுவேந்திய அப்பெருமானுடைய திருத்தாண்டவத்திற்கேற்ற திருப்பாடலாக, அருமையான திருவிசைப்பாவை அவ்விடத்திற் பொருந்தும்படி திருவாய்மலர்ந்தருளினர்.—எ-று.

உண்முக நோக்காக முதலிற் சிதாகாச தரிசனம் கிடைத்தபிறகு வெளிமுக நோக்காக ஆனந்தத்தாண்டவம் தரிசனமாக, மீண்டும் உண்முக நோக்காக ஆகாயலிங்கதரிசனமாயிற்று அப்போது திருவெண்காட்டடிகள் துதிக்கத்தொடங்கினரென்றபடி. பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாயமென்னும் பஞ்சபூதங்கட்கும் பஞ்சலிங்கங்களெனவும், அவற்றுள் காஞ்சியிலிருப்பது பிருதிவிலிங்கமும், திருவானைக்காவிலிருப்பது அப்புலிங்கமும், திருவண்ணாமலையிலிருப்பது தேயுலிங்கமும், திருக்காளத்தியிலிருப்பதுவாயுலிங்கமும், சிதம்பரத்திலிருப்பது ஆகாயலிங்கமுமாமெனவும் சிதம்பரத்தில் எவ்வாறு பொற்சபை இருக்கின்றதோ அவ்வாறே, திருக்குற்றாலத்திற் சித்திர சபையும் திருவாலங்காட்டில் இரத்தின சபையும், திருநெல்வேலியில் தாம்பிரசபையும், திருவாலவாயில் இரசித சபையும் உள்ளதென்பதும் நூற்றுணிபாகலின், ஈண்டு திருவெண்காட்டடிகட்கு ஆகாயலிங்கந் தரிசனமாயிற்றென்பார், "செங்குருநடந்தரிசனஞ்செய்சமயத்தில் - வெங்ககன லிங்கவுருவு மேல் விளைதல் பெற்றார்." என்றனர். இவ்வாறே இலிங்கங்களும் சபைகளும் உளவென்பதை, "கடல்விட நுகர்ந் காசினியிலிங்கல் காஞ்சிமா நகருறை யிலிங்கம் - காவிரி வடபால் வருதிருவானைக் காவினி லப்புலிங் கமதாம் - வடதிசை யண்ணாமலையினி லிலிங்கம் வன்னியின் வடிவுகா ளத்தி - வாயுலிங் கமதாஞ் சிதம்பர லிங்க யாசிலா காய லிங்கமதாங் - குடதிசை யதனின் மருவு குற்றாலங் கோதறு சித்திர சபையாம் - குற்றமில் குணக்கின் பழயனூர் மன்றங் குலநவ ரத்னமன் றென்பா -

ரடல்விடைப் பாக னெல்லையம் பதியிலம்பலந் தாம்பிர சபையா - மாலவாய் மதுரை வெள்ளியம் பலமா மணிதில்லை செம்பொனம் பலமே.” என்னும் தில்லைக்கலம்பகத் திருவிருத்தத்தானுந் தெளிக. (அரு)

கொச்சகப்பா.

பொன்னாரு மணிமார்பன் பூமே லயனறியா
வென்னா வெடுத்தோதி யேவிடைபெற் றேகியபின்
பன்னாக வாடகப்பொற் பாதமெனப் பாடியிடச்
சென்னாவுண் சோறளித்தாள் சிவகாம சுந்தரியே.

(இ-ள்.) திருமகள் குடிகொண்டிருப்பதுடன் கௌத்துவமணியணிந்துள்ள மார்பினையுடைய திருமாலும் தாமரைமலர்மீதுள்ள பிரமனும் அறிதற்கரியவரே என்று முதல்தொடங்கிப் பாடிமுடித்து விடைபெற்றுச்சென்ற பிறகு, “பன்னாகவாடகப் பொற்பாதம்” எனப்பாடியருளிய வுடனே, சிவகாமசுந்தரியார் திருவெண்காட்டடிகள் தமது செவ்விய நாவினாலுண்ணும்படி திருவமுதளித்தருளினார்.—எ-று.

இந்நூலாசிரியர் “பொன்னாருமணிமார்பன் பூமேலயனறியா.” எனக் கூறினாரேனும் திருவெண்காட்டடிகள் கோயினான்மணிமாலை என்னும் பிரபந்தத்திற்கு முதலாகவெடுத்தது, “பூமேலயனறியா” என்பதே. பன்னாகவாடகப் பொற்பாதம் என்னும் முதலையுடைய திருப்பாடல் யாண்டும் வழங்காமையால் இறந்ததாகக் கொள்ளவேண்டும். ஆனால், திருவெண்காட்டடிகள் துறவடைந்தபின் சதா பிச்சையேற்றுப் புசித்துவந்ததாகவும் ஒவ்வோர்கால் மிக்க பசிநேர்ந்தபோது ஒவ்வோர் திருப்பாசுரம் திருவாய்மலர்ந்தவுடனே திருவமுது பெற்றுவந்ததாகவும், அவருடைய திருப்பாடல்களென வழங்கும் சிலவற்றுள் காண்கின்றோ மாகையால் மேற்குறித்த பாசுரமும் இருந்து இறந்திருக்கலா மென்று ஊகிக்கவேண்டுமென்க. பசியைக்குறித்து வழங்கும் பாடல்களாவன:—சோறிடு நாடு துணிதருங் குப்பைதொண் டன்பரைக்கண் - டேறிடுங் கைக ளிறங்கிடுந் தீவினை யெப்பொழுது - நீறிடு மேனியர் சிற்றம் பலவர் நிருத்தங்கண்டா - லூறிடுங் கண்க ளுருகிடு நெஞ்சமென் னுள்ளமுமே.” எனவும், “பூணும் பணிக் கல்ல பொன்னுக்குத் தானல்ல பூமிதனைக் - காணும் படிக்கல்ல மங்கையர்க் கல்லநற் காட்சிக்கல்ல - சேணுங் கடந்த சிவனடிக் கல்லவென் சிந்தைகெட்டுச்- சாணும் வளர்க்க வடியேன் படுந்துயர் சற்றல்லவே.” எனவும், “அத்தி முதலெறும்பீ றானவுயி ரத்தனைக்குஞ்-சித்தமகிழ்ந்தளிக்குந் தேசிகா - மெத்தப்—பசிக்குதையா பாவியேன் பாழ்வயிற்றைப் பற்றி - யிசிக்குதையா காரோ ணரே.” எனவும், “இருக்கு மிடந்தேடி யென்பசிக்கேயன்னம் - முருக்கமுடன் கொண்டு வந்தா லுண்பேன் - பெருக்க—வழைத்தாலும் போகே னரனேயென் றேக - மிளைத்தாலும் போகே னினி.” எனவும் வருவனவே. (அசு)

ஞால மறியவெங்க ளுயகியா ரீந்தவன்னக்
கோல வருளுண்டு குலாப்பெருகிக் கூத்தாடி
மூல விலிங்கமமர் முழுச்சுடர்பின் னுந்தொழுது
சால மகிழ்ந்து தருக்கினர் தண்டமிழார்.

(இ-ள்.) தட்பமான தமிழுணர்ந்தவராகிய திருவெண்காட்டடிகள் எமது நாயகியாராகிய சிவகாமசுந்தரியார் உலகத்தார் அறியும் வண்ணம் பாலித்த அன்னமாகிய அழகிய திருவருளைப் புசித்து, மகிழ்ச்சிமேம்பட்டு ஆனந்தக்கூத்தாடி, மூல இலிங்கமாய் வீற்றிருக்கின்ற பரிபூரணப் பிரகாசத்தை மீண்டும் பணிந்து, மிக்க களிப்படைந்து இறுமாந்திருந்தனர்.—எ-று.

சிவகாமசுந்தரியார் திருவெண்காட்டடிகட்குத் திருவமுது பாலித்தது அந்தரங்கத்தல்லவென்றும் பகிரங்கமாகவேயென்றும் விளக்குவான், "ஞால மறியவெங்களுயகியா ரீந்த." என்றும், அவ்வாறுபாலித்தது வெறும் அமுது மாத்திரமே யன்று திருவருளும் என்று விளக்குவான், "அன்னக்கோலவருள்." என்றும், அம்பிகையார் திருவமுதுடன் திருவருளையுமளாவி யளிக்கவுண்டார் கொண்டகளிப்பிற்கு மேம்பட்ட களிப்பின் றென்றுணர்த்துவான், "குலாப் பெருகிக் கூத்தாடி." என்றும், நடராஜப்பெருமானைத் தரிசித்தல் பகிரங்கக் காட்சியும், மூலலிங்கமாகிய சுயஞ்சோதியைத் தரிசித்தல் அந்தரங்கக் காட்சியு மென்றறிவிப்பான், "மூலவிலிங்கமமர் முழுச்சுடர் பின்னுந்தொழுது." என்றும், இவ்வாறான பேற்றையடைந்த பெரியோர் தற்போதமற்றுச் சிவபோத மயமாய்ச் செருக்கியிருத்தலியல்பாகலின், "சாலமகிழ்ந்துதருக்கினர்." என்றும் கூறினர். இவ்வாறானபேறெய்தினோர் இறுமாந்திருத்தலியல்பென்பதை, "இறு மாந் திருப்பன்கொலோ - வீசன்-பல்கணத் தெண்ணப்பட்டுச் - சிறுமானேந்தி தன் சேவடிக் கீழ்ச்சென்றங் - கிறுமாந்திருப்பன் கொலோ." என்னும் ஆளுடைய வரசுக ளருள்வாக்கானுமறிக. (அரு)

பேசிக் கடைதொறும்போய்ப் பிச்சைகொண்டிங் குண்டிருத்தல்
வாசிக் களிப்புடைத்தாம் வண்ணமெனத் தண்ணளியார்
தேசூற் றிருந்தார் சிலகாலஞ் செந்தமிழாற்
பூசிக்கப் பெற்றார் புனிதனடித் தாமரையே.

(இ-ள்.) இவ்வாறாகவே வீடுகள்தோறும் சென்று சிவபிரான் புகழைத் துதித்துப் பிச்சையேற்றுப் புசித்திருத்தலே விசேட மகிழ்ச்சியுண்டாகும் மார்க்கமென்று, சிலகாலம்வரையிற் சிதம்பரத்திற்றானே செவ்விய தமிழ்ப்பாக்களாலே தாய்மையராய சிவபிரான் திருவடித்தாமரைகளைப் பூசித்துத் துதித்து, குளிர்ந்தகாருணியமுடையராகிய திருவெண்காட்டடிகள் மெய்ஞ்ஞானவொளி யுடையராய் வீற்றிருந்தருளினர்.—எ-று.

சிதம்பரத்தில் வசித்திருந்த சிலகாலம் வரையில் தினந்தோறும் அத் தலத் திருவீதிகட்கெழுந்தருளி இல்லங்கடோறுஞ் சென்று சிவபிரான் புகழினைக்கூறித் துதித்திரந்து புசித்தலும் நடராஜப்பெருமானைத் தரிசித்திருத்

தலும் ஆகிய இதுவே சுகமான மார்க்கமென்றெண்ணினு ரென்றபடி. இத்திரு வெண்காட்டடிகளின் திருவுள்ளம் இவ்வாறே இருந்ததென்பதை, "நச்சரவம் பூண்டானை நன்ருத் தொழுவதுவு - மிச்சையிலே தானங் கிருப்பதுவும்-பிச்சை தீனை - வாங்குவது முண்பதுவும் வந்துதிரு வாயிலே-தூங்குவதுந் தானேசுகம்." என்னும் அவ்வடிக ளருள் வாக்கானுமறிக. (அசூ)

வான்றேடு மறையேயோ வென்றெடுத்து வண்டமிழ்ப்பா
நான்றேட நானுரோ நானுரோ வெனமுடித்தார்
தோன்ருப் பொதுச்சூழ்ந்து சோதிவிடை பெற்றேகி
யேன்ருர் வடதிக் கிடைநடக்க வன்பாளர்.

(இ-ள்) மெய்யன்புடையராகியதிருவெண்காட்டடிகள், "வான்றேடுமறை யேயோ." என்று தொடங்கி "நான்றேட நானுரோ நானுரோ." என்று இறுதியிலே வரும்படி வளவிய தமிழ்ப்பாவொன்றைத் திருவாய்மலர்ந்தவராய், யாவர்க்கும் தோற்றமாகாத அம்பலத்தை வலம்வந்து தொழுது சோதிசொரூபராகிய நடராஜப்பெருமானுடைய பிரியாவிடையைப்பெற்றுச்சென்று, வடதிசைக் கணுள்ள க்ஷேத்திரங்களைத் தரிசிப்பான் திருவுள்ளங்கொண்டனர்,—எ-று.

வான்றேடுமறையேயோ என்னும் முதலையுடைய திருப்பாடல் இறந்த காலக் கொள்ளவேண்டும் இத்திருவெண்காட்டடிகள் அகமுகநோக்காகத் தரிசிற்சபை ஏனையோர்க்குத் தோற்ருததாகலானும், தோன்றலிருத்தன் மறைதல் என்னும் மூவகைக் குற்றங்களுமமையாததாகலானும், "தோன்ருப் பொது." என்றும், ஆலயத்தைவிட்டரிதினீங்குவோர் வலம்வந்து பணிந்து சந்நிதிக்கெதிரில் நின்று விடைபெற்று நீங்குதன் மரபென்பதை விளக்குவான், "சூழ்ந்து சோதிவிடைபெற்று." என்றும், அவ்வாறு நீங்குவோர் சந்நிதிக்குப் புறங்காட்டாது சந்நிதியை நோக்கியவண்ணமே மீண்டனரென்றுணர்த்துவான் "ஏன்ருர்," என்றும் கூறினர். (அஎ)

## அறுசீர் விருத்தம்.

ஏயும் பூக மிளநாக மினிய கனிசூழ் பனைமரங்கள், காயும்போ துங் கலந்தளிப்பக் கனையார் புனல்சேர் திணைநகர்வாய்த், தாயுந் தமருந் துறந்தவர்தந் தம்பி ரானுர் தாம்வரக்கண். டாயும் பெரியோ ருளமுருகி யருகா வின்பம் பெருகினரால்.

(இ-ள்.) பொருந்தியுள்ள கமுகமரங்களும் இளமையானபுன்னைமரங்களும் இனிமைவாய்ந்த பழங்கள் செறிந்துள்ள பனைமரங்களும், காய்களையும்மலர்களையும் ஒருங்குசேர்த்துக்கொடுக்க, ஒலியையுடைய நீர் நிறைந்துள்ள திருத்தினை நகர் என்னும் க்ஷேத்திரத்தினிடத்து, தாயையும் உறவினரையும் துறந்த துறவினர்கூட்டத்துத் தலைவராகிய திருவெண்காட்டடிகள் எழுந்தருள, அத்தலத்துள்ளவர்களாய் வேதசிவாகமங்களை ஆராய்கின்ற அறிஞர்களனைவரும் அவ்வடிகளைத் தரிசித்து, மனவுருக்கமுற்றுக் குறைவுபாடற்ற சுகாதீத இன்பத்தில் மேம்பட்டார்கள்,—எ-று. தாம்-ஆல்-அசைகள்.

கமுகு புன்னை பனை என்னும் மூவகை விருக்கங்களும் தனித்தனிமலர்களையும் காய்களையும் தந்தனவென் றுணர்த்துவான், "காயும் போதுங் கலந்தளிப்ப," என்றும், அவ்வாறளிப்பதற்குக் காரணமான நீர்வளம் மிகுதியுடையதென்பான், "கனையார் புனல்சேர்." என்றும், திருவெண்காட்டடிகள் காவிரிப்பூம் பட்டினத்தில் தமக்கிருந்த அகண்டைஸ்வரியத்தை அரைக் கணத்திற் றுறந்தோராகையால், இவ்வாறுன பெருந்திரவியமின்றித் தாய் தமர்களைமாத்திரந் துறந்த ஏனைய துறவிகடொகுதிக் கிவரே தலைவரென்றறிவிப்பான், "தாயுந்தமருந் துறந்தவர்தந் தம்பிரானுர்." என்றும், அத்தலத்துள்ளவேதசிவாகமங்களிற் றேர்ச்சியுற்ற பெரியோர்கள் திருவெண்காட்டடிகளை எதிர்கொண்டு தரிசித்துப் பேரானந்த முற்றனரென்பான், "கண்டாயும் பெரியோருளமுருகி யருகாவின்பம் பெருகினர்." என்றும் கூறினர். (அஅ)

**விடைகொண் டகன்று சிவாலயங்கள்விரவிப் பரவியடிபோற்றி**
**மடைகொண் டுடையும் புனற்கேடின் மணிநீர் வாவி யலரோடை,**
**விடைகொண் டொருபா திரித்தருவிற் புணர்சண்பகமும் பலபூவு,**
**மடையுந் திருப்பா திரிப்புலியூ ரடைந்தா ருடைந்த மனமுடையார்**

(இ-ள்.) அவ்வாறெதிர்கொண்ட அடியார்களிடத்தில் விடைபெற்று நீங்கி அங்குள்ள சிவாலயங்கள்தோறுஞ் சென்று துதித்துச் சிவபிரான் திருவடிகளைத் தொழுது, உருகிய மனமுடைய திருவெண்காட்டடிகள் மடைகளில் நிரம்பிப் பாய்கின்ற நீரமைந்த பழுதுறுத இரத்தினமயமாக விளங்குகின்றதடாகங்களும் நீரோடைகளும் பக்கத்திற் சூழப்பெற்று, ஒப்பற்ற பாதிரி விருட்சத்திலே சேர்ந்திருக்கின்ற சண்பகமலர்களும் மற்றுள்ள பலவகை மலர்களும் கலக்கும் திருப்பாதிரிப்புலியூர் என்னும் திருப்பதியைச் சேர்ந்தனர்.— எ-று.

திருத்தினைநகர் என்னும் க்ஷேத்திரத்திற் பல சிவாலயங்களுளவாகலின் அவ்வாலயங்கடோறுஞ் சென்று சிவபிரானைத் தொழுதுதரிசித்தனரென்பார், "சிவாலயங்கள்விரவிப் பரவியடிபோற்றி." என்றும், நீர் மடைகளில் நிரம்பித் தடாகங்கட்கும் ஓடைகட்கும் பாய்தலியல்பாகலின், "மடைகொண்டுடையும் புனல்." என்றும், அவ்வாறு பாயப்பெற்ற தடாகங்கட்கும் ஓடைகட்கும்அமைந்துள்ள வரம்புகளில் மணிகளிழைத்திருத்தலின் அவைகளை நோக்குங்கால் இரத்தினமயமா யிருக்கின்றதென்பார், "மணிநீர்வாவி மலரோடை." என்றும் அந்த க்ஷேத்திரத்தில் தலவிருட்சமா யமைந்துள்ள பாதிரி விருட்சத்திற்கருகில் சண்பகமுதலிய ஏனைய விருட்சங்கள் ஆங்காங்கு சூழ்ந்திருத்தலின், அவ்வாலயத்தினுள்ளே சென்றோர்க்குப் பாதிரிமலர்களுடனே சண்பகமலர்கள் முதலிய மற்றையமலர்களும்ஒருங்குகிடைக்குமென்பார், "ஒருபாதிரித்தருவிற்புணர்சண்பகமும் பலபூவுமடையும்." என்றும் கூறினர். (அக)

அரக்க ரனையார் விடுதூணை யலைவாய்த் துரும்பி னெளிதாக்கி யுரக்கு மந்தக் கற்கலத்தா லொருமா தவரைக் கரையேற்றிப், பரக் கும் கடல்வாய் மரக்கலந்தாழ்ப் படுத்தித் தமையுங் கரையேற்றும், இரக்கம் பெரியோர் தமைக்காண விளநீர்க் கெடிலம் படிந்தாடி.

(இ-ள்.) அசுரர்களைப்போன்ற சமணர்கள் கட்டிவிட்ட கற்றூணை, அலை யிலகப்பட்ட துரும்பைப் பார்க்கினும் அற்பமாகச்செய்து, வலுவமைந்த அந்தக் கற்றூணாகிய புணையால், ஒப்பற்ற பெருந்தவசியாராகிய ஆளுடைய வரசுகளைக் கரையிலேற்றுவித்து, விசாலித்துள்ள கடலினிடத்துச் சென்று கொண்டிருந்த மரக்கலத்தைக் கடலிலமிழ்த்தித் தம்மையும் முத்திக்கரையிற் சேர்ப்பிக்கும் கா ருணியமிக்கோராகிய சிவபெருமானைத் தரிசிக்கும்பொருட்டு இளநீர்போன்ற நிறமுள்ள கெடிலநதியில் ஸ்நானஞ்செய்து.—எ-று.

சமணர்கள் ஆளுடைய பிள்ளையார் விஷயமாகவும் ஆளுடைய வரசு களின் விஷயமாகவும் நடத்திய கொடுஞ் செய்கையை நோக்குங்கால் அசுரர் கட்கிணையான கொடூரச்செய்கைகளுடையாரென நன்குவிளங்கலின், "அரக் கரனையார்" என்றும், அத்தகைய சமணர்கள் திருநாவுக்கரசு சுவாமிகளைக் கட லிலமிழ்த்திவிடுதற்கெண்ணிக் கட்டியகற்றூணனது சிவபிரான் திருவருளால், அலையிலகப்பட்ட துரும்புபோல மேலேமிதக்கச் செய்வித்ததால், "விடுதூணை யலைவாய்த்துரும்பினெளிதாக்கி." என்றும், துரும்பின் றன்மைபெற்று மிதந்த அத்தூணையே மீண்டும் தெப்பமாக்கித் திருநாவுக்கரசு சுவாமிகளைக் கரையேற் றுவித்ததால், "உரக்குமந்தக் கற்கலத்தாலொரு மாதவரைக்கரையேற்றி." என் றும், திருவெண்காட்டடிகளும் கடல்போன்ற செல்வப்பெருக்கால் அக்கடலி னிடத்து மரக்கலஞ்செலுத்தி வாணிபம்புரிந்து வந்தாராகலின், அச்செல்வக் கடலிலமிழ்ந்தி வருந்தாது அவரையும் கரைசேர்க்கத் திருவுளங்கொண்ட சிவ பிரான், அக்கடலில் அம்மரக்கலம் செல்லாவண்ணமழுத்திக் கரையேற்றுவித்,தா ரென்பான், "பரக்குங்கடல்வாய்மரக்கலந்தாழ்ப்படுத்தித் தமையுங் கரையேற் றும்." என்றும், இவ்வாறான காருணியக்கடலாகிய சிவபிரானைத் தரிசித்தற் பொருட்டு என்பார், "இரக்கம்பெரியோர் தமைக்காண." என்றும், கெடிலநதி யின் நீரானது இளநீர்போன்ற நிறமும் மதுரமுமுடையதென விளக்குவான், "இளநீர்க்கெடிலம்" என்றுங்கூறினர். சமணர்களரக்கர்களனையாரென்பதை, "பாவக்கொடு வினைமுற்றிய படிறுற் றுடுகொடியோர் - நாவுக்கர செதிர்முற் கொடு நணுகிக்கரு வரைபோ - லேவிச்செறு பொருகைக்கரி யினையுய்த் திட வெருளார் - சேவிற்றிகழ்பவர் பொற்கழ றெளிவுற்றனர் பெரியோர்." என்றும், அத்தகைய சமணர்கள் ஆளுடையவரசுகளைக் கற்றூணிற்கட்டிக் கட லில் விடுத்தனரென்பதை, "ஆங்கதுகேட்ட வரசனவ்வினைமாக்களை நோக்கித்- தீங்கு புரிந்தவன் றன்னைச் சேம முறக்கொண்டு போகிப் - பாங்கொரு கல்லி லணைத்துப் பாசம் பிணித்தோர் படகில் - வீங்கோலி வேலையி லேற்றி வீழ்த்

துமி னென்று விடுத்தான்." என்றும், "அவ்வினை செய்திடப் போகுமவருடன் போயரு கருத - வெவ்வினையாளருஞ் சென்று மேவிட நாவுக் கரசர் - செவ்விய தாந்திருவுள்ளஞ் சிறப்ப வவருடன் சென்றார் - பவ்வத்தின் மன்னவன் சொன்னபடிமுடித் தாரப் பதகர்." என்றும், அக்கற்றூண் அலைவாய்த் துரும்பைப் போன்று மிதந்ததென்பதை, "பெருகிய வன்பினர் பிடித்த பெற்றியா - லருமலரோன்முத லமரர் வாழ்த்துதற் - கரியவஞ் செழுத்தையு மரசுபோற்றிடக் - கருநெடுங் கடலினுட் கன்மி தந்ததே." என்றும், அதையே தெப்பமாக்கிக் கரையேற்றுவித்தனரென்பதை, "வாய்ந்தசீர் வருணனே வாக்கின் மன்னரைச் - சேர்ந்தடை கருங்கலே சிவிகை யாயிட - வேந்தியே கொண்டெழுந் தருளுவித்தனன் - பூந்திருப் பாதிரிப் புலியூர்ப் பாங்கரில்." என்றும் வரும் அருண்மொழித்தேவரமுதவாக்கானு மறிக. திருவெண்காட்டடிகளைக் கடலிற் கலஞ்செலா வண்ணமழுத்திக் கரையேற்றுவித்ததுபோல் திருநாவுக்கரசுகளைக் கல்லேமிதக்கச்செய்து கரையேற்றுவித்தாராகலின், கரையேற்றுவித்தலென்னும் தொழிலொற்றுமை நோக்கி, "ஒருமர்தவரைக் கரையேற்றித் தமையுங்கரையேற்றும்." எனக் கூறினரென்க. கெடிலமென்பது திருப்பாதிரிப்புலியூர்க் கருகிற்செல்லும் நதி. அத்தலத்துள்ள சிவபிரான் தோன்றாத்துணையாயிருந்து தம்மைக் கரையேற்றுவித்தமையின், அவ்வாறு கரையேறிய திருநாவுக்கரசுசுவாமிகள், "ஈன்றாளு மாயெனக் கெந்தையு மாயுடன் றோன்றினராய் - மூன்றா யுலகம் படைத்துகந் தான் மனத்துள்ளிருக்க - வேன்றா விமையவர்க் கன்பன் றிருப்பாதிரிப்புலியூர்த் - தோன்றாத் துணையாயிருந்தனன் றன்னடி யோங்களுக்கே." எனத் திருவாய்மலர்ந்தனர். (௧௦)

**கடற்பாற் றிகழ்ந்த சடைஞாழற் கன்னி வனத்தெம் பெருமானை யுடற்பா லினிமே லுறாவறியா ருலவாச் செல்வம் பெறப்பணிந்து, மடற்பாற் கமலம் வழிபிரசம் வாவிச்செழுநீர் மேன் மிதந்து; விடற்பா லனவாந் திருவதிகை வியன்மா நகரத் தயல்போந்தார்.**

(இ-ள்.) கடலின்கண் விளங்கிய கூட்டமான பலினிகள் சூழ்ந்துள்ள கன்னிவனமென்னும் க்ஷேத்திரத்தில் வீற்றிருந்தருளும் எமது சிவபெருமானை, இனியொரு சரீரத்தில் வருதற்கறியாராகிய திருவெண்காட்டடிகள் அழியாத முத்திச்செல்வம் பெறும்படியாக வணங்கி, தம்முடைய இதழ்களினிடமாகத் தாமரைமலர்கள் சொரிகின்ற தேனனது, தடாகத்தில் நிறைந்துள்ள செழுவிய நீரின்மீது மிதந்துகொண்டிருக்குந் தன்மையுடைய திருவதிகை என்னும் சிறப்புற்ற பெரிய நகரத்தின்சமீபத்திற் கெழுந்தருளினர்.—எ-று.

கெடிலநதியில் நீராடிய திருவெண்காட்டடிகள் அங்குள்ள கன்னிவனத்தெழுந்தருளியுள்ள சிவபிரானைப் பணிந்து அதன்பின் திருவதிகை என்னும் க்ஷேத்திரத்தடைந்தன ரென்றபடி. எனவே, திருப்பாதிரிப்புலியூர்

கருகில் கன்னிவனமிருத்தலின் அங்குள்ள சிவபிரானையும் வணங்கித் துதித்தன ரென்க. "மூலமறியேன் முடியு முடிவறியேன் - ஞாலத்துட் பட்டதுயர் நாட நடுக்குதடா." என்பது ஆதிபாகவும், "வாக்கு மனாதீத வகோசரத்திற் செல்ல வெனத் - தாக்குமருட் குருவேயின் றாளிணைக்கே யான் போற்றி." என்பது அந்தமாகவும் வழங்கும் எழுபத்திரண்டு கண்ணிகளும் அக்கன்னிவனத்திற் றிருவாய்மலர்ந்தனவாகக் கூறுவர். சிவபிரான் எவ்வாறு பிறக்கவறியாரோ அது போன்றே அவரடியார்களும் பிறக்கவறியா ரென்பதை விளக்குவான், "உடற் பாலினிமேலுறவறியார்." என்றும், நாம் இவ்வுலகின்கணடையும் எத்துணைச் செல்வமும் அழிதற்பாலனவாகலின், அவ்வாறின்றி அழியாச்செல்வமென்பது முத்திச்செல்வமே என்பதை விளக்குவான், "உலவாச்செல்வம்பெற." என்றும், நீர்வளப்பமிகுதியாற் றாமரைகள் விசேடித்து அவைகளிலுள்ளதேன்தடாகங்கள்தோறும் பாய்ந்து அந்நீர்மேன் மிதந்துகொண்டிருக்கும் திருவதிகையென்பார், "மடற்பாற் கமலம் வழிபிரசம் வாவிச்செழுநீர் மேன்மிதந்து - விடற்பாலனவாந் திருவதிகை." என்றும் கூறினர். சிவபிரான் பிறக்கவறியாரென்பதை, "எல்லாமும் வல்ல சித்த ரென்றபெய ருன்றனக்குச் - செல்லாது செல்லாது செல்லாது - நல்லாய் — பிறக்கவறி யாய்மேற் பிறந்திருந்து மண்மே - லிறக்கவறி யாயீசனே." என்னும் காளமேகப்புலவர் வெண்பாவானும், முத்தியின்பமாகிய சிவபிரான் திருவடி நீழலடைதலே அழியாச் செல்வமென்பதை, "கெடுவதாம் பொருட் செல்வமே பல்வகைக் கிலேசமுற் றதுதன்னை - விடுவதேசுகமெனவு யோர்ந் திலைமுனம் விடுதுளோர்க் குளைப்போலு - நெடிய யூகமதில்லையோ சொல்லுதி நெஞ்சமே யினிப்பற்றற் - றடைது மேலா னருளையே பொருளென வருஞ்செல்வ மதுதானே." என்னும் சாந்தலிங்க சுவாமிகள் திருவாக்கானும், செல்வ நெடுமாடஞ் சென்றுசே ணோங்கிச் - செல்வ மதிதோயச் செல்வ முயர்கின்ற - செல்வர் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய - செல்வன் கழலேத்துஞ் செல்வஞ் செல்வமே." என்னும் ஆளுடையபிள்ளை யாரருள்வாக்கானுமுணர்க. (கூக)

கூற்றா யினவா றென்றெடுத்துக் கொழுத்த தமிழூான்வழுத்து
மவர்க் காற்றா வின்பந் திருநாவுக் கரசென் றளித்தா ரொளித்தாள்
கள், போற்றா வணங்கி மணங்கமழும் பொற்பூ வனையதமிழ்ப்பனுவ
லேற்றா நின்றார் மரகதவீ ரட்டா னத்தெம் மிறைவனையே,

(இ-ள்.) "கூற்றாயினவாறு," என்று முதல்தொடங்கி வளவியதமிழ்ப்பதிகத்தால் துதிக்கும் மருணீகியார்க்கு, அடங்காப் பேரின்பத்தால் திருநாவுக்கரசு என்னும் திருநாமம் பாலித்த சிவபிரானுடைய ஒளியுள்ள திருவடிகளைத் துதித்துப் பணிந்து, மரகதவல்லியார் பாகரான வீரட்டானேச்சுரரென்னும் எமது சிவபிரானை, வாசனைவீசும் பொன்மலர்போன்ற தமிழ்ப்பாக்களிலே ஏற்றினார்.

புகழுனூர்பாலவதரித்த மருணீக்கியார் சிறிதுகாலம் சமணவயப்பட்டு வருந்தி, சிவபிரான் திலதவதியார் வேண்டுகோண்முன்னிலையாற் சூலை நோயளித்துத் தடுத்தாட்கொண்டபோது. திருவதிகைக்கெழுந்தருளி, "கூற்றாயின வாறு." என்னும் முதலையுடைய பதிகம் திருவாய்மலர்ந்தனராகலின், "கூற்றாயினவா றென்றெடுத்துக் கொழுந்தமிழான் வழுத்துமவர்க்கு" என்றும் அப்பதிகத்தைத் திருச்செவியேற்றருளிய சிவபிரான் அடங்காப் பெருங்களிப்புற் றிருநாவுக்கரசு என்னுந் திருநாமம் பாலித்தனரென்று விளக்குவான், "ஆற்றுவின்பந்திருநாவுக்கரசென்றளித்தார்." என்றும் பொன்னினுலோர்மலர்செய்து அதனிடத்து மணமும் விளையச்செய்வோமாயின் எத்தகைய அற்புதமோ அத்தகைய அற்புதமுடைய திருப்பாடல்களென்பார், "மணங்கமழும் பொற்பூவனைய தமிழ்ப்பனுவல்." என்றும், சிவபிரானிபற்றிய அட்டவீரட்டங்களுள் ஓர் வீரட்டமியற்றியது இத்திருப்பதிக்கண்ணதாகலின், "மாகத வீரட்டானத் தெம்மிறைவர்." என்றும் கூறினர். திருவதிகைப் பதிகத்தின் முதற்பாடலாவது:—"கூற்றாயினவாறு விலக்ககிலீர் கொடுமைபல செய்தன நானறியே - னேற்றாயடியே யிரவும்பகலும் பிரியாது வணங்குவனெப்பொழுதுந் - தோற்றாதென்வயிற்றி னகம்படியே குடரோடு துடக்கி முடக்கியிட - வாற்றேனடியே னதிகைக் கெடிலவீரட்டா னத்துறை யம்மானே" என்பதே. இப்பதிகத்தைத் திருச்செவியேற்றருளிய சிவபிரான் திருநாவுக்கரசு என்னும் திருநாமம் பாலித்தன ரென்பதை, "மேவுற்றவிவ்வேலையினீடியசீர் வீரட்டமமர்ந் தபிரானருளப் பாவுற்றலர்செந் தமிழின்சொல்வளம் பதிகத்தொடைபா டியபான்மையினு - னாவுக்கரசென் றுலகேழினுநின் னனைநன்னுகவென் - றியாவர்க்கும் வியப் புறமஞ்சுறைவா னிடையேயொருவாய் மையெழுந்ததுவே." என்னும் அருண்மொழித் தேவாமுதவாக்கானும், பொன்மலர் மணமுடைத்தாதல் அற்புதமென்பதை. "எத்துணைய வாயினுங் கல்வி யிடமறிந் - துய்த்துணர் வில்லெனி னில்லாகு - முய்த்துணர்ந்துஞ் - சொல்வன்மை யின்றெனி னென்னா மஃதுண்டேற் - பொன்மலர் நாற்ற முடைத்து." என்னும் குமரகுருபரசுவாமிகள் திருவாக்கானும், சிவபிரானுடைய அஷ்டவீரட்டங்களிவையென்பதை, "பூமன் சிரங்கண்டி யந்தகன் கோவல் புரமதிகை - மாமன் பறியல் சலந்தரன் விற்குடி மாப்பழுவூர் - காமன் கொறுக்கை யமன்கட வூரிந்தக் காசினியிற் - றேமன்னு கொன்றையுந் திங்களுஞ் சூடிதன் சேவகமே." என்னும் பாசுரத்தானும் உணர்க, (௯உ)

இறைவாழ் மூல லிங்கவடி யிறைஞ்சிப்போந்தங் கிடைஞாழ லுறையார் சோலைத் திருவெண்ணெய் நல்லூ ருடைய விடையாரை யுறவா டினர்தா முறவாடி யொன்று மிருமர்க் கருள்பெற்றார் பிறை யார்பின்னற் பின்னலராப் பேணிப் பணிந்தார் பெரியோரே.

(இ-ள்.) சிவபிரான் வீற்றிருந்தருளும் மூலவிலிங்கத்தின் திருவடிகளிற் பணிந்து சென்று, அவ்விடத்தின் மத்தியில், குங்குமமரத்தின் மணம் நிறைந்த சோலைசூழும் திருவெண்ணைநல்லூரென்னும் க்ஷேத்திரத்தில் வீற்றிருந்தருளும் இடபாரூடராகிய சிவபிரானைச் சேர்தற்கு மனவுருக்கமுடையாராகிய திருவெண்காட்டடிகள் அன்பின் மிகுதியாற் கலப்புற்று, அவ்விடத்து அகமுக நோக்கத்திற்குத் தடைப்பட்ட மயக்கம் நீங்கப்பெற்றுத் திருவருளடைந்தனர். அப்போது அத்தலத்துள்ள பெரியோர்களனைவரும் பிறைபோல் விளங்கு மின்வீசுகின்ற சடையையுடையவர்களாகி விரும்பித் திருவெண் காட்டடிகளை வணங்கினர்.—எ-று

திருவதிகை வீரட்டானம் என்னும் க்ஷேத்திரத்துள்ள மூலத்தான விலிங்கத்தின் திருவடிகளைப்பணிந்து சென்று, இடையிலுள்ள க்ஷேத்திரமாகிய திருவெண்ணெய்நல்லூரையடைந்து அங்கு வீற்றிருந்தருளும் சிவபிரானைப்பணிந்து நிற்கையில், அத்தலத்துள்ள பெரியோர்கள் யாவரும் சடைமுடியுடையவர்களாக வணங்கினரென்பதாம். அன்றியும், அடியார்களையே அரனாகப் பாவிக்கவேண்டுதலின், அப்பெரியோர்கள் யாவரும் திருவெண் காட்டடிகளையே சடைமுடியினரான சிவபிரானாகப்பாவித்து வணங்கினரென்னலுமொன்று. திருவெண்காட்டடிகட்குத் தலந்தோறும் தரிசனமாய் வந்த அகமுக தரிசனம் ஆங்குத் தடையுற்றுப் பின்னர் அத்தடை நீங்கித் தரிசித்தாரென்பார், "ஒன்றுமிருடீர்ந்தருள்பெற்றார்." என்றனர். சடைமுடி மின்போல் விளங்குமென்பதை, "மின்னெறி சடாமுடி விநாயக னடிதொழ - நன்னெறி வெண்பா நாற்பதும் வருமே." என்னும் சிவப்பிரகாச சுவாமிகள் திருவாக்கானும், அரனடியாரை அரனெனவே பாவிக்கவேண்டுமென்பதை, "ஞானயோ கக்கிரியா சரியை நான்கு நாதன்றன் பணிஞானி நாலினுக்குமுரிய - ஞானமிலா யோகமுதன் மூன்றினுக்கு முரியன் யோகி கிரி யாவான்முன் னொன்கிரிகைய யாதி-யானவிரண் டினுக்குரியன் சரியையினி னின்றோ னச்சரியைக் கேயுரிய னாகலினால் யார்க்கு - மீனமிலா ஞானகுரு வேகுருவு மிவனே யீசனிவன் றானென்று மிறைஞ்சி யேத்தே." என்னும் சிவஞான சித்தித் திருவிருத்தத்தாலுமுணர்க (௯௫)

சோலை காட்டுங் கரைப்பெண்ணைத் துறையார் மறையார் சுந்தரரை, மாலை காட்டுந் தமையிமையோர் மகிழ்ந்து காண முறியூசி, யோலை காட்டி யாண்டாரை யோவா விடைபெற் றேகையினு, லாலை காட்டும் பெருந்துழனி யண்ணா மலையை நண்ணுவரால்.

(இ-ள்.) திருவெண்காட்டடிகள், யாவர்க்கும் சோலைகளைக் காட்டிக் கொண்டிருக்கும் கரையையுடைய பெண்ணைநதித்துறையை யுடையாராகிய வேதியரும், ஆளுடைய நம்பிகளையும், தமிழ்ப்பாமாலைகள் தொடுத்துக்கொண்டிருந்த தம்மையும் தேவர்களும் மகிழ்ச்சியுற்றுத் தரிசிக்குமாறு, எழுத்தாணியாலெழுதிய அடிமையோலை காட்டியும், காதற்ற ஊசியையும் ஓலையையும்

காட்டியும் அடிமைகொண்டவருமாகிய சிவபெருமானிடத்துப் பிரியாவிடை பெற்றுக்கொண்டு களிப்புடனே, கரும்பாலைகள் ஒலிக்கும் பெருங்கோஷ்டமுடைய திருவண்ணுமலை என்னும் க்ஷேத்திரத்தை யடைவாராயினர்.—எ-று

பெண்ணைநதியின் கரைகடோறும் சோலைகள் விளங்குதலாலும், அந்நதியின் கரையிலேயே திருவெண்ணெய்நல்லூரென்னும் க்ஷேத்திரமிருத்தலாலும், "சோலைகாட்டுங் கரைப்பெண்ணைத்துறையார்" என்றும், அத்தலத்து வீற்றிருக்கும் சிவபெருமானாகிய வேதியர், சுந்தரமூர்த்திகளை எவ்வாறு அடிமையோலை காட்டி யாண்டனரோ அதுபோன்றே தமக்கும் ஓலைகாட்டி யாண்டாராகலின், "மறையார் சுந்தரரை மாலைகாட்டுந் தமையிமையோரா மகிழ்ந்துகாண முறியூசி யோலைகாட்டி யாண்டாரை." என்றும் கூறினர்' ஆளுடையநம்பிகளை ஊசியினுலெழுதப்பட்ட ஓலையைக்காட்டியும். திருவெண்காட்டடிகளை முறிந்தவூசியையும் ஓலையையும் காட்டியும் ஆட்கொண்டாரென்பது கருத்து, பெண்ணைநதியின் கரையிலேயுள்ளது திருவெண்ணெய் நல்லூரென்பதை, "பித்தா பிறைசூடி பெருமானே யருளாளா - வெத்தான் மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை - வைத்தாய்பெண்ணைத தென்பால் வெண்ணெய் நல்லூரருட்டுறையு - ளத்தாவுனக் காளாயினி யல்லேனெனலாமே" என்னும் ஆளுடையநம்பிகளருள்வாக்கானு மறிக, ஆளுடைய நம்பிகளை அடிமைகொண்ட ஓலையாவது.—"அருமறை நாவலாதி சைவனூரன் செய்கை - பெருமுனி வெண்ணெய்நல்லூர்ப் பித்தனுக கியானுமென்பால் - வருமுறை மரபுளோரும் வழித்தொண்டு செய்தற்கோலை - யிருமையா லெழுதிநேர்ந்தே னிதற்கிவை யென்னெழுத்து." என்றெழுதியிருந்த ஓலையும், திருவெண்காட்டடிகளைபடிமைகொண்ட ஓலையாவது:—"காதற்றவூசியும் வாராது காணுங் கடைவழிக்கே." என்றெழுதியிருந்த ஓலையுமாமென்க. (௬௪)

நெடுந்தூரத்தே வன்னிமலை நிலையை நோக்கிப் பணிந்தெழுந்து, தடந்தா மரைத்தா ணினைந்துருகிச் சந்தம் பெருகுந் தமிழ்வாயார், நடந்தா ரனந்த தொண்டர்பத நளினம் புளகம் பெறப் போற்றி, வடந்தாழ் முலையா ரனுங்கொழும்பால் வாரி முழங்குமவ்வூரே.

(இ-ள்.) அதிக தூரத்திலேயே அக்கினிமலையாகிய திருவண்ணுமலையின் தன்மையைத் தரிசித்து வணங்கியெழுந்து, சந்தம் விசேடித்த தமிழ்ப்பாக்கள் திருவாய்மலரும் திருவெண்காட்டடிகள், அம்மலையின் விசாலித்த தாமரை மலர்போலும் திருவடிகளைத் தியானித்து மனவுருக்கமடைந்து, அங்கு எதிர்கொண்டு பணிந்த அனேக அடியார்களது தாமரைததாள்களைப் புளகாங்கிதமுறப் பணிந்து துதித்து, முத்தமாலை தொங்கும் தனங்கள்வாய்ந்த மகளிர்களென்னும் கொழுமையானு பாற்கடல் கோஷிக்கின்ற அத்தலத்தை நோக்கிச் சென்றனர். ௬௫ எ-று,

திருவண்ணாமலையென்னும் அவ்வரையானது விசேடித்த உன்னதமாயிருத்தல்காரணமாக அதிதூரத்திற்றானே தரிசனமாகலானும், அவ்வரையுருவாய் விளங்குவது, சிவபெருமானே யாகலானும், "நெடுந்தூரத்தே வன்னிமலை நிலையைநோக்கிப் பணிந்தெழுந்து - தடந்தாமரைத்தா ணினைத்துருகி." என்றும், திருவெண்காட்டடிகள் திருவாய்மலரும் பாசுரங்கள் யாவும் மிக்க இசையுடைமையின், "சந்தம் பெருகுந் தமிழ்வாயார்." என்றும், திருவெண்காட்டடிகள் அத்தலத்திற்கெழுந்தருளுவதையுணர்ந்த அனேக அடியார்கள் அவரை எதிர்கொண்டு வணங்கினார்களாகலின், அத்தகையோரைத் தாமும் பணிந்து புளகங்கொண்டனரென்பார், "அனந்த தொண்டர்பத நளினம் புளகம் பெறப்போற்றி." என்றும், பால்போலும் இனிமைவாய்ந்த சொற்கலையுடைய மாதர்கள் கூட்ட மிகுதியாகக் கோஷிப்பது நகர்வளப்பத்திற்கோர் விசேடமாகலின், அம்மகளிர்களையே பாற்கடலாக உவமித்து, "வடந்தாழ்முலையாரெனுங் கொழும்பால்வாரிமுழங்குமவ்வூர்." என்றும் கூறினர். திருவண்ணாமலை விசேட உன்னதமுடைமையின் எவ்விடத்தும் தரிசனமாமென்பதை, "புரத்துற மவுணக் குழாமும்வண்டிசைகூர் பூங்கணை மதனுமுன் பெறுநின் - சிரித்த வெண்ணகையு நுதல்விழி நோக்குஞ் சிறியனேனிருண்மலம் பெறுமோ - கருத்தினுங் கருத வரியநுண் ணியனென் கடனறவுலகெலாங் காண்பான் - றரித்தநி தூல வடிவுறுஞ் சோண சைலனே கைலை நாயகனே." என்றும், "வேலையந் துகில்சூழ் மலர்தலை யுலகின் மெய்யினைப் பொய்யெனு மவர்க்கே - யேலவந் தருள்வ தன்றிமெய் யினைமெய் யெனுமெனக் கருள்புரிந் திடாயோ - காலநன் குணர்ந்து சினகரம் புகுந்து காணரிதெனு துலகனைத்துஞ்-சாலநின் றுழியே கண்டிடுஞ் சோணசைலனே கைலை நாயகனே." என்றும் வரும் சிவபிரகாசசுவாமிகள் திருவாக்கானுணர்க (௩௫)

ஊருட் புகுந்து வீடுதொறு முள்ளங் குளிர வொளிவளரப்,
பாருட் பணிந்து திணிந்தமதிற் பயில்கோ புரவா யிலும்பணிந்து,
வேருட் பழுத்த பலாக்கனியை விண்ணாட் டமுதைத் தண்ணளி
கூர், வாருற் றுண்ணா முலையாளை மலைசூழ் போந்து வணங்கினரால்.

இ-ள்.) திருவண்ணாமலையென்னும் அத்தலத்தினுட் பிரவேசித்து, மாடவீதிகள்தோறும் மனம் தட்பமடையவும் மெய்ஞ்ஞானப்பிரகாசம் மேம்படவும் சாஷ்டாங்கமாக வணங்கி, திண்ணிமையுடைத்தான திருமதில்களையும் விளக்கமுற்ற கோபுரவாயிலையும் வணங்கி, அத்திருவண்ணாமலையை வலம் வந்து, வேரிலே பழுத்த பலாக்கனிபோன்ற இனிமையானவரும், தேவலோகத்தமுதம்போன்றவருமாகிய அருணாசலேசரையும், கச்சணிந்திருக்கும் தனங்களையுடைய குளிர்ந்த கிருபை விசேடித்த உண்ணாமுலையம்மையாரையும் பணிந்தனர்,—எ-று.

திருவெண்காட்டடிகள் அத்தலத்துட் பிரவேசித்தவளவில் நான்கு மாட வீதிகளிலும் கிலமுறப் பணிந்துகொண்டு மதிலையும் கோபுரவாயிலையும் வணங்கி, அதன்பின் மலையை வலம்வந்து ஆலயத்துட் பிரவேசித்தனரென்றபடி. எனவே, ஆலயங்கட்குச் செல்வோர் முதலில் மாடவீதிகளையும் பிறகு மதில்களையும் கோபுரவாயிலையும் வணங்கிக்கொண்டு ஆலயத்துட் பிரவேசிக்கவேண்டுமென்னும் சிவாகம விதிகளை விளக்கியவாறும். சிவபெருமான் மெய்யன்பர்கட்குப் பலாக்கனியின் இனிமையைப்போன்றும் அமுதத்தின் சுவையைப் போன்றும் விளங்குவாராதலின், "வேருட்பழுத்த பலாக்கனியை விண்ணூட்டமுதை." என்றும், அப்பெருமானது திருவருளே உண்ணாமுலை யாரென்னும் அம்பிகையாதலின், "தண்ணளிகூர்வாருற்றுண்ணாமுலையாளை." என்றும் கூறினர். சிவபெருமான் மெய்யன்பர்கட்குப் பலாக்கனியின் இனிமையைப் போன்றும் அமுதத்தின் சுவையைப்போன்றும் விளங்குவரென்பதை, "ஞானக்கரும்பின் றெளியைப் பாகை நாடற் கரிய நலத்தை நந்தாத் - தேனைப்பழச் சுவை யாயி னானைச் சித்தம் புகுந்து தித்திக்கவல்ல - கோனைப் பிறப்பறுத் தாண்டு கொண்ட கூத்தனை நாத்தழும் பேறவாழ்த்திப் - பானற் றடங்கண் மடந்தை நல்லீர் பாடிப்பொற் சுண்ண மிடித்து நாமே." எனவும், "மின்னிடைச் செந்துவர் வாய்க்கருங்கண் வெண்ணகைப் பண்ணமர் மென்மொழியீர் - என்னுடை யாரமு தெங்களப்ப னெம்பெரு மானிம வான்ம கட்குத் - தன்னுடைக் கேள்வன் மகன் றகப்பன் றமைய னெம்மையன் றாள்கள் பாடிப் - பொன்னுடைப் பூண்முலை மங்கை நல்லீர் பொற்றிருச் சுண்ண மிடித்து நாமே." எனவும் வரும் மணிவாசகப்பிரான் மலர்வாக்குகளானும், சிவபெருமான் திருவருளே சத்தி என்பதை, "ஒன்றதா யிச்சா ஞானக் கிரியையென் றொருமூன் றாகி - நின்றிடுஞ் சத்தி யிச்சை யுயிர்க்கரு ணேசமாகு - நன்றறா ஞானசத்தி யானயந் தறிவனாத - னன்றருட் கிரியை தன்னா லாக்குவ னகில மெல்லாம்." என்னும் சிவஞானசித்தித் திருவிருத்தத்தானும் தெளிக (௬௬)

தாழாக் கருணை விடைகொடுபோய்த் தருக்கிப் பெருகு காற் றொழுக்கதென, வாழா நின்ற திருவிசைப்பா வள்ள லுள்ளங் கனைந்துரைத்துப், பாழாய்ப் பயிலாத் தொழிலாற்றும் பரனாலயங்கள் பலபோற்றிச், சூழா வருவா ரிடைமருதிற் றோன்றுங்குருவை யொருவாதார்.

(இ-ள்.) திருவிடைமருதூரின் கணின்றும் தோற்றிய ஆசாரியரைத் தமதிதயத்தினின்றும் நீங்கப்பெறாதவராகிய திருவெண்காட்டடிகளென்னும் வள்ளலார், அருணாசலேசரிடத்தும் உண்ணாமுலையம்மையாரிடத்தும் குறைவுபாடற்ற கிருபையுடைய விடைபெற்றுச்சென்று, இறுமாப்புற்றுப்பெருகுகின்ற ஆற்றொழுக்கைப்போலும் விளங்கும் திருவிசைப்பாக்களை மனமுருகித் திருவாய் மலர்ந்து, பாழ்படாத கிருத்தியம் புரிகின்ற சிவபெருமான் திருவாலயங்கள் பலவற்றையும் துதித்துப் பிரதக்ஷிணம் வருவாராயினர்.—எ-று.

திருவெண்காட்டடிகள் திருவண்ணாமலை என்னும் க்ஷேத்திரத்தில் சிலகாலம்வீற்றிருந்து ஆற்றுப்பிரவாகம்போன்று அநேகம் பாசுரங்கள் திருவாய்மலர்ந்தனரென இந்நூலாசிரியர் கூறினும் இப்போது வழங்கும் பாடல்களிரண்டேயாம். ஆகலின் ஏனையவை மறைந்தனவாகக் கொள்ளல்வேண்டும் மேற்குறித்த இரண்டு பாசுரங்களாவையெவையெனின், "வாதுற்ற திண்புய ரண்ணாமலையர்மலர்ப் பதத்தைப் - போதுற்றெப் போதும் புகலுநெஞ் சேயிந்தப் பூதலத்திற் - தீதுற்ற செல்வமென் றேடிப் புதைத்த திரவியமென் - காதற்ற ஊசியும் வாராது காணுங் கடைவழிக்கே." எனவும், "கச்சிற் கிடக்குங் கனதனத் திற்கடைக் கண்கள் பட்டே - யிச்சித் திருக்கின்ற வேழைநெஞ் சேயிம வான்பயந்த - பச்சைப் பசுங்கொடி யுண்ணா முலைபங்கர் பாதத்திலே - தைச்சுக் கிடமன மேயொரு காலுந் தவறில்லையே." எனவும் வருவனவேயாம்.

மற்றும் பதிக ளாங்காங்கு வணங்கிக் குணங்கொ ணீறணிந்த,
சுற்றுஞ் சடையார்க் கினியதமிழ்த் தொடைமாலைகளும் பலசாத்தி,
யெற்றும் புனலும் பெரியோரு மிளம்பூ வையரும் வளம் பூத்துக்,
கொற்றந் தரும்வே தாகமமுங் குழுமுங் காஞ்சி நகர் புகுவார்.

(இ-ள்.) திருவெண்காட்டடிகள் ஆங்காங்குள்ள மற்றைய க்ஷேத்திரங்களையும் பணிந்து, நன்மையைப் பயப்பதான தன்மைவாய்ந்த திருவெண்ணீறு தரித்த இண்டைபோலுஞ் சடைமுடியுடையாராகிய சிவபெருமானுக்கு, இனிமையான தமிழ்த்தொடை என்னும் பாமாலைகளும் பலவாகச் சூடி, மோதுகின்ற நீரும் அறிஞர்களும் இளமைவாய்ந்த மகளிர்களும் வளமை மேம்பட்டு வெற்றியைப் பாலிக்கத்தக்க வேதசிவாகமங்களும் கூடியிருக்கும் காஞ்சிமாநகரத்திற் கெழுந்தருளுவாராயினர்.—எ-று.

ஓர் நகரத்திற்கு நீர்வளப்பமும் பெரியோர்கள் வாசமும் மங்கலகரத்திற்கமைந்த இளமகளிர்களும், அங்குள்ளார் செந்நெறியிற் பயிலுதற்கு வேதசிவாகமங்களும் இன்றியமையாதனவாகலானும், இவை யாவும் ஒருங்கெய்தப்பெற்றது காஞ்சிநகரொன்றேயாகலானும், அம்மேன்மைதோன்ற, "எற்றும் புனலும் பெரியோரு மிளம்பூவையரும் வளம்பூத்துக் - கொற்றந்தரும் வேதாகமமுங் குழுமுங் காஞ்சி நகர் புகுவார்." என்றனர். இந்நகரமொன்றே நகரமென்பதை, "குன்றலரு மருளாள னென்றமொழி சிற்றூறிக் கொண்டுசெல் கின்ற தெனவுங் - குறித்தொருவர் பாலென்ற வளவிலம் மொழி சென்று கோவமுதி னேர்த லெனவு, நன்றினிய பழமென்ற வளவினெட்டிலைவாழை நற்கனியி னெய்தலெனவு - நாடரும் பிள்ளையென் கின்றமொழி யாண்மகவி னண்ணுமா றெனவு மீச, னென்றளவின் விடமெழுந் திடநெடுங்கிநிலை யின்றியிரு தருதே வரை-யெய்தாமன் மணிகண்ட னைப்பொருந் துதலெனவு மிவண்நகரமென்பது தனைச், சென்றடைய மொருபெருங் கச்சிநகராளிங் சிறுதே ருருட்டி யருளே - சிவசமய குலதிலக சிவஞான மாமு

ளிவ சிறந்த ருருட்டி யருளே." என்னும் சிவப்பிரகாசசுவாமிகள் திருவாக்கானறிக. (௯௮)

கொச்சகப்பா.

மாயவளப் பொருடேட மாநீரிற் போய்வருவார்
நேயவளப் பொருடேட நீணிலத்தின் மேற்படர்வார்
தூயவளப் பெரியோர்வாழ் துண்டீர மண்டலத்துத்
தாயவளெப் போதுமுறை தண்காஞ்சித் தலத்தணைந்தார்.

(இ-ள்.) மாயையின் விருத்திக்கேதுவாகிய திரவியத்தைத்தேடும் பொருட்டுக் கடலில் மரக்கலமேறிப்போய் வருபவராகிய திருவெண்காட்டடிகள், அறிவின் விருத்திக்குக்காரணமாகிய பொருளைத் தேடுவதற்காக நீண்ட நிலவுலகத்தின்மீது செல்பவராகி, தூய்மையின் மேம்பாட்டையுடைய அறிஞர்கள் வாழ்கின்ற தொண்டைமண்டலத்தின்கண் உலகமாதாவாகிய காமாட்சியம்மையார் சதாகாலமும் வீற்றிருந்தருளும் குளிர்ச்சியுற்ற காஞ்சியென்னும் க்ஷேத்திரத்திற் சேர்ந்தனர்.—எ-று.

மாயையின் விருத்தியாகிய துன்பத்திற்குக் காரணமாயிருப்பது பொருளாகலின், 'மாயவளப்பொருள்." என்றும், அப்பொருளைச் சேகரிப்பதற்காகக் கப்பலிலேறிக் கடல்மார்க்கமாய்ச்சென்று வாணிபம் புரிந்துவந்தாராகலின், "மாநீரிற் போய்வருவார்." என்றும், அத்தகையோர் இப்போது தமதறிவிற்குக் காரணமாகிய சிவமென்னும்பொருளைத் தேடுவதற்காகத் தலயாத்திரைசெய்வாராய் என்பார், "நேயவளப் பொருடேட நீணிலத்தின் மேற்படர்வார்." என்றும், தொண்டைமண்டலமே பெரியோர் வசித்தற்குரித்தாகலின், "தூயவளப் பெரியோர்வாழ் துண்டீரமண்டலம்." என்றும், காமாட்சியம்மையார் எப்போதும் வீற்றிருத்தலின், "தாயவளெப்போது முறை" என்றும் கூறினர். பொருளே துன்பத்திற் கேதுவென்பதை, "இன்னாதரும் பொருளை யீட்டுதலுந் துன்பமே - பின்னதனைப் பேணுதலுந் துன்பமே - யன்ன - தழித்தலுந் துன்பமே யந்தோ பிறர்பா - லிழத்தலுந் துன்பமே யெண்." என்னும் நீதிவெண்பாவானும், தொண்டைநாடு சான்றோருடைத்தென்பதை, "வேழ முடைத்து மலைநாடு மேதக்க - சோழவளநாடு சோறுடைத்து - பூழியர்கோன்-றென்னாடு முத்துடைத்து தெண்ணீர் வயற்றொண்டை - நன்னாடு சான்றோ ருடைத்து." என்னும் ஔவைப்பிராட்டியாரமுதவாக்கானு மறிக. (௯௯)

கச்சியாந் தலநலத்தைக் கண்டிரண்டு கைகூப்பி
யுச்சியா னிளம்பளிங்கை யொத்துவளா ருத்தமனூர்
நச்சியா ரணம்பாடி நாடியநற் றவங்காட்டும்
பச்சைநா யகிசிவந்த பாதநினைந் துட்புகுவார்.

(இ-ள்.) காஞ்சி என்னும் க்ஷேத்திரத்தின் சிறப்பைத் தரிசித்துத் தமதிருகரங்களையுஞ் சிரமேற்கூப்பினவராய், ஒளியுள்ள மழுமழுப்பான பளிங்கைப்

போன்று தூயராய் விளங்கும் திருவெண்காட்டடிகள், விருப்பத்துடனே வேதங்களெல்லாந் துதித்துக் குறித்துள்ள சிறந்த தவம் இத்தன்மைத்தென்று உலகத்தார்க்குக் காட்டியருளிய மரகதம்போன்ற நிறமுள்ள திருமேனிவாய்ந்த காமாட்சியம்மையாரது சிவந்த திருவடிகளைத் தியானித்துக்கொண்டு அந்நகரத்துட் பிரவேசிக்கலாயினர்.—எ-று.

காஞ்சியென்னும் க்ஷேத்திரம் சிறப்பின் மேம்பட்டதாகலின், "கச்சியாந் தலநலத்தைக் கண்டு." என்றும், வெண்மைக்கும் தூய்மைக்கும் பளிங்கையே உவமித்தல் மரபாகலானும், திருவெண்காட்டடிகள் மனம் களங்கமற்ற வெண்மையாயிருப்பதுடன், அவர் மனம் இத்தன்மைத்தென்று சரீரமும் வெளிப்படக்காட்டுவதுபோன்று, திருமேனி முழுவதும் திருவெண்ணீறணிந்திருத்தலானும், "வாளிளம் பளிங்கையொத்து வளருத்தமனார்," என்றும், வேதங்கள் சதா தவத்தையே விசேடமாகக்கூறி, அத்தவத்தின் குறிப்பையே விளக்குவதாலும், அத்தவம் இவ்வாறு புரியவேண்டுமெனக் காமாட்சியம்மையார் தாமே புரிந்து காட்டியதாலும், "நச்சியா ரணம்பாடி நாடிய நற்றவங் காட்டும் பச்சை நாயகி," என்றும் கூறினர். காஞ்சி என்னும் க்ஷேத்திரம் சிறப்பின் மேம்பட்டதென்பதை, "எழுநகரி னுட்சிறந்த தென்பதலாற் சீர்மை - முழுது மியம்ப முடியா - தழகுறவேற் கந்தனுயர் கச்சிவளங் காற்கூ றளவுரைப்ப - லைந்துகான் சொல்வ னரைக்கூறு - நந்தமரன் - கூறுடையா ளோர்முக்காற் கூறுரைப்பன் முற்றுமிள - வேறுடையான் சொல்வனெனவனந்தன் - வீறுடைய - நாவா யிரங்கொண்டு நானுரைத்தல் காற்கீழென் - றோவாத காணுகி யோடியே - சாவாத - வேலையிடை வீழ்வன் மேல்வீழ்ந்து துஞ்சினன் - போல வரிகிடப்பப் பொங்குபுகழ் - ஞாலமெலா - நண்ணவொரு காசி நடுமெய்ஞ் ஞகரமுறு - மெண்ண வரிய வெழினகரும்.", என்னும், சிவப்பிரகாசசுவாமிகள் திருவாக்கானும், தூய்மைக்கும் வெண்மைக்கும் பளிங்கையுவமித்தன் மரபென்பதை, "ஆய கலைகளறுபத்து நான்கினையு - மேய வுணர்விக்கு மென்னம்மை - தூய - வுருப்பளிங்கு போல்வாளென் னுள்ளத்தி னுள்ளே - யிருப்பளிங்கு வாரா திடர்." என்னும் சரஸ்வதியந்தாதிக் காப்பு வெண்பாவானும், வேதங்களுரைப்பது தவமென்பதை, "கொடியவரை வனத்திருந்து நோற்கி னுங்கோட் கொற்றவரை யொத்தவரைத் துறந்து போகிப் - படியவரை மருட்டுதவ வேடந் தாங்கிப் படிமுழுதுமுலாவுகினு மறைக ளெல்லா - முடியவரை யறுத்துணர்ந்து புகலி னுந்தீ முளரிமலர்க் கரத்தெடுத்த வெங்கை வாண - ரடியவரை வழுத்திடவ ரடிகள் சூடா வவலரையோர் பொருளாக வறிகிலோமே." என்னும் சிவப்பிரகாசசுவாமிகள் திருவாக்கானும், காமாட்சியம்மையார் தவம்புரிவ திவ்வண்ணமென்று தாமே புரிந்துகாட்டியது காஞ்சியென்னும் க்ஷேத்திரத்திலென்பதை, "அங்கு மண்ணுல கத்துயிர் தழைப்ப வுளவி லின்பத்தி னருட்கருவிருத்தித் - திங்கடங்கிய புரிசடை யார்க்குத் திருந்துபூசனை விரும்பினள் செய்ய - வெங்கு நாடவுந் திருவிளை யாட்டா லேக மாமுத லெதிர்படா தொழியப் - பொங்கு மாதவஞ் செய்துகாண் பதற்கே புரிவு செய்தனள்

பொன்மலை வல்லி." எனவும், "நெஞ்ச மீசனைக் காண்பதே விரும்பி நிரந்தரத் திரு வாக்கினி னிகழ்வ - நஞ்செ ழுத்துமே யாகவா ளுடைய வம்மை செம்மலர்க் கைகுவித் தருளித் - தஞ்ச மாகிய வருந்தவம் புரியத்தரிப்ப ரேயுவ டனிப்பெருங்கணவர் - வஞ்ச நீக்கியமாவின் மூலத்தில் வந்து தோன்றினர் மலைமகள் காண." எனவும்வரும் அருண்மொழித்தேவ ரமுதவாக்கானு மறிக.

மெய்காட்டி யாண்டருளும் வித்தகர்மா வடித்தேவர்
கைகாட்டுந் தொண்டரெலாங் காவிரிப்பூம் பட்டினத்து
ளைகாட்டும் பெரியோர்வந் தடைகின்றா ரென்றடைந்தார்
மெய்காட்டி யிவரவர்கண் முன்பணிந்தா ரன்பாளர்.

(இ-ள்.) தமதுண்மைநிலையை அடியார்கட்குத் தரிசிப்பித்து அடிமை கொண்டருளும் ஞானசொரூபராகிய மாவிருட்சத்தடியில் வீற்றிருந்தருளும் ஏகாம்பரநாதர்க்குரிய ஒழுக்கத்தை உலகத்தினர்க் கறிவிக்கின்ற அத்தலத்தின் கணுள்ள மெய்யடியார்களனைவரும், காவிரிப்பூம்பட்டினத்தில் அவதரித்த வரும் துறவாச்சிரமத்தினொழுகை உலகத்தினர்க் கறிவிக்கின்ற அறிஞருமாகிய திருவெண்காட்டடிகள் இத்தலத்திற்கு வருகின்றனரெனக் கேள்வியுற்று எதிர்கொண்டேகினார்கள். சற்குணத்தொகுதியையுடைய இத்திருவெண்காட்டடிகள் மிக்க அன்புடையவராய் அவர்களெதிரே வணங்கினர்.—எ-று.

சிவபிரான் தமதுண்மைநிலைமையைத் தாமே காட்டி அடிமைகொள்ள வேண்டுமென்பதை, "கங்கை யாற்றின் கடிகிரப் பொழிக்கும் - திங்களங் கண்ணித் தில்லை வாண - வன்பருக் கெளியை யாகலினைய - நின்பெருந் தன்மை நீயேயிரங்கி - யுண்ணின் றுணர்த்தி னுணரி னல்லதை - நுண்ணா லெண்ணி னுணங்க நாடிப் - பழுதின் றெண்ணிப் பகர்து மியாமெனின் - முழுது மியாரே முதக்குறைந் தோரே - நால்வகைப் பொருளு நவையறக் கிளந்த - வேத புருடனு மியாதுகின் னிலையெனத் - தேறலன் பலவாக் கூறின னென்ப - அதா அன்று - முன்னோன் மறையு முறைப்பட நிறீஇ - மன்னிருஞ் சிறப்பின் வாதராயணனுங் - கையிழந்தனனது பொய்மொழித் தன்றே - அதனால் - தெளிவில் கேள்வியிற் சின்னூலோதி - யளவா நின்னிலை யளந்தும்போது - மறிவு மாயுளுங் குறையக் குறைபாத - மையுறே யெண்ணில படைத்துப் - பொய்யுடல் சுமக்கும் புன்மை யோமே." என்னும் குமரகுருபரசுவாமிகள் திருவாக்கானும், துறவாச்சிரமத்தினியல்பை யுலகத்தார்க்கறிவித்தவர் பட்டினத்தடிகளென்பதை, "ஒட்டேடன்பற் றின்றி யுலகைத் துறந்த செல்வப் - பட்டினத்தார் பத்ரகிரிப் பண்புணர்வ தெக்காளோ." என்னும் தாயுமானார் திருவாக்கானு மறிக. (௧௦௧)

மாடநெடும் பொன்வீதி வண்ணமெலாங் கண்ணுவப்ப
நீடியசீ ரார்பணிந்து நீர்மழைகண் ணூற்பொழிந்து
கோடலுறு வாக்காற் குணம்பாய் கொழுந்தமிழ்கள்
பாடினார் நாடிப் பரநாதன் முன்பணிந்தார்.

(இ-ள்) அழகுடைத்தாய் நீண்டிருக்கும் மாட வீதியின்கண்ணுள்ள தன்மைகளனைத்தையும் மிக்க அன்புடையவராகிய திருவெண்காட்டடிகள் கண்கள் களிக்கத் தரிசித்து வணங்கி, ஆனந்தபாஷ்பத்தைக் கண்களாற் சொரிந்து, தடைபடாத அருள்வாக்கினாலே மகிமைகள் நீடிய சிறந்த தமிழ்ப்பாக்களைத் திருவாய்மலர்ந்துகொண்டே சென்று ஏகாம்பரநாதர் திருச்சந்நிதிக்கு முன்பாக வணங்கினார்.—எ-று.

மாடவீதியைத் தரிசித்துக்கொண்டே வருகையில், அநேகம் தனிப்பாடல்கள் திருவாய்மலர்ந்துகொண்டே வந்தனரென்பார், "கோடலுறுவாக்காற் குணம்பாய் கொழுந்தமிழ்கள் பாடினார்." என்றனர். அவ்வாறு பாடிய தனிப்பாக்களுள் அநேகம் இறந்துவிட்டன. ஏகதேசமாக இரண்டொன்றே வழங்கி வருவதால் அவற்றுள் ஒன்றை இதனடியிற் காட்டுகின்றோம். "எத்தனையூ ரெத்தனைவீ டெத்தனைதாய் பெற்றவர்க - ளெத்தனைபேரிட்ட ழைக்க தேனென் றே - னித்த - மெனக்குக் களையாற்று மேகம்பா கம்பா - வுனக்குத் திருவிளையாட்டோ." என்பதே. அன்றிக் கச்சிக்காரோணத்திற் செழுந் தருளிய போது, "அத்தி முதலெறும்பீ றானவுயி ரத்தனைக்குஞ்-சித்த மகிழ்ந்தளிக்குந் தேசிகா - மெத்தப் - பசிக்குதையா பாவியேன் பாழ்வயிற்றைப் பற்றி - யிசிக் குதையா காரோணரே." என்னும் இவ் வெண்பாவைத் திருவாயமலர்ந்தருளியதாகவுங் கூறுவர். (௧௦௨)

ஒன்றாக நின்றுருகி யோங்கார நீங்காம
னின்றானை யென்றன்பி னின்கோல மாயிருப்பக்
குன்றா வரமளிப்பா யென்றார் குறைவறியார்
வென்றாளு மம்பிகைவாழ் மெய்க்கோயில் புக்கனரால்.

(இ-ள்,) ஐம்புலன்களும் ஒருங்கமையும்படி சந்நிதிக்கெதிரே நின்று மனமுருகி ஓங்காரமாகிய பிரணவத்தினின்றும் பிரியாதிருந்த பெருமானை நோக்கி, அடியேனை ஏற்றுக்கொண்டு மெய்யன்பினாலே ஊனவுருவாகிய இச் சரீர நாட்டமற்றுத் தேவரீருடைய ஞானவுருவாயிருக்குமாறு அழிவுபடாத வரம்பாலிப்பீர் என்று துதித்தவராகி, யாதோர் குறைபாடுமற்ற திருவெண்காட்டடிகள், மாயையை வென்று அன்பரை அடிமைகொள்ளும் காமாட்சியம்மையார் வீற்றிருந்தருளும் நித்தியமாயுள்ள திருவாலயத்துட் சேர்ந்தனர். —எ-று.

பெரியோர்கள் சிவபிரான் சந்நிதியிற் சென்று தரிசிக்குங்காலத்தில் ஐம்புலன்களும் ஒருங்கெய்தப்பெற்றுத் தரிசித்தலியல்பாகலின், "ஒன்றாகி நின்றுருகி." என்றும், சிவபிரான் நாததத்துவத்தினீங்கா துறைபவனாகலின், "ஓங்கார நீங்காமனின்றானை." என்றும், சீவரூபத்திற்கு அநித்தியமும் சிவரூபத்திற்கு நித்தியமும் இயல்பாகலின், அநித்தியத்தை நீக்கி நித்தியத்தை யருள்வீரென்பார், "நின்கோலமா யிருப்பக் குன்றாவரமளிப்பாய்." என்றும், திருவருளெய்தினாரே மாயைநீக்க முறுவரென்பதும், அத்திருவருளே சிவசத்தியென்பதும் நூற்றுணிபாகலின், "வென்றாளுமம்பிகை." என்றும், அழியாநிலைமை

யுடைத்தாகலின், "மெய்க்கோயில்." என்றுங் கூறினர். பெரியோர்கள் சிவபிரான் சந்நிதியிற் சென்று தரிசிக்குங்காலத்தில் ஐம்புலன்களும் ஒருங்கெய்தப்பெற்றுத் தரிசித்த லியல்பென்பதை, "ஐந்துபே றறிவுங் கண்களே கொள்ள வளப்பருங் கரணங்க ணான்குஞ் - சிந்தையே யாகக் குணமொரு மூன்றுந் திருந்துசாத் துவிகமே யாக – விந்துவாழ் சடையா னாடுமா னந்த வெல்லையி றனிப்பெருங் கூத்தின் - வந்தபேரின்ப வெள்ளத்துட் டிளைத்து மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்." என்னும் அருண்மொழித்தேவ ரமுதவாக்கானும், சிவபிரான் நாதத்தத்துவத்தி னீங்கா துறைபவன் என்பதை, "ஓங்கார மாய்நின்ற வத்துவிலேயொரு வித்துவந்து-பாங்காய் முளைத்த பயனறிந் தாற்பதி னாலுலகு - நீங்காம னீக்கி நிறையா நிறைந்து நிறையுருவா யாங்கார மானவர்க் கேட்டாக் கனிவந்தமர்ந்திடுமே."என்னும் திருவெண்காட்டடிகள் திருவாக்கானு முணர்க.

கலிவிருத்தம்.

ஆருயி ராமவை யார்பெறு வீடுற
வார நி லாவிய மாதவன் மாதவள்
சீருறை வாள்விழி சீருறை வாளரு
ளேருற வேருற வேயிவர் நின்றார்.

(இ-ள்.) நிறைந்த சீவர்களென்னும் கூட்டத்தார் முத்தியின்பமெய்து தற்காக அன்புநிறைந்த சிவபெருமானுடைய மனைவியாகிய காமாட்சி யம்மையாரின், சிறப்பமைந்த வாள்போன்ற விழியென்னும் அலங்காரமான ஒளியுள்ள உறையிலிருக்கும் திருவருளானது, மேம்பாடுறும்படி தம்மீது விருத்தியிதற்கேதுவாக இத் திருவெண்காட்டடிகள் அச் சந்நிதிக்கெதிரேநின்றனர்.—எ-று.

சிவபெருமான் சதா தம்மைத் தியானிக்கின்றவர்களெவர்களோ அத்தகைய சீவர்கள் முத்தியின்பமெய்தும்பொருட்டு விருப்ப முடையவரென்பார், "ஆருயிராமவையார் பெறுவீடுற வாரநிலாவியமாதவன்." என்றும், உமாதேவியார் சதா சிவத்தைநோக்கிக்கொண்டிருந்து அந்நடன தரிசனத்தின்பேற்றை ஆன்மாக்கட்கடைவிக்கும் காருணியமுடைமையின், அவ்வம்மையார் திருநோக்கம் திருவருளுக் குறையென்பார், "மாதவள்சீருறை வாள்விழிசீருறைவாளருள்," என்றும், திருவெண்காட்டடிகள் அத்தகைய அருணோக்கம் பூரணமாய்த் தம்மீது பதியும்வகை நின்றனரென்பார், "ஏருற வேயிவர் நின்றார்." என்றும் கூறினர். சிவபெருமான் தம்மைப் பூசிக்கின்ற ஆன்மாக்களை முத்தியிற் சேர்க்க விருப்பமுடையாரென்பதை, "பூசைசெய்து தோத்திரஞ் சொல்லித் தனைநினை புண்ணியர் பானண்ணற் - காசைசெய்திடு மம்பலக் கூத்தனை யடையிலே யடைத்தாரிற் - பேசு கின்றனை யறவரின் விளங்கினைபிறர்மனை நயக்கின்றாய் - சீசி யிங்கிருந் தென்செய்தாய் நெஞ்சமே செத்திலாய் கெடுவாயே." என்னும் சாந்தலிங்கசுவாமிகள் திருவாக்கானும், தம்பிகையார் ஆனந்தத் தாண்ட

வத்தைவிடாது தரிசித்து அத் தர்சனப்பலனை ஆன்மாக்கட்கருளும் காருணிய முடையாரென்பதை, "பாலுண்குழவி பசுங்குடர் பொறாதென - நோயுண் மருந்து தாயுண் டாங்கு - மன்னுயிர்த் தொகுதிக் கின்னருள் கிடைப்ப-வையமீன் றளித்த தெய்வக் கற்பி னருள்சூற் கொண்ட வையரித் தடங்கட் - டிருமாண் சாயற் றிருந்திழை காணச் - சிற்சபை பொலியத் திருநடம் புரியு - மற்புதக் கூத்தநின் னமுதவாக் களித்த - நல்லற நூல்களிற் சொல்லறம் பலசில - வில்லறந் துறவற மெனச்சிறந் தனவே." என்னும் குமரகுரு பரசுவாமிகள்திருவாக்கானுமுணர்க. திருவருளேக்கம் பதியுமாறு மனவொருப்பாட்டுடன் செவ்வே நிற்றலே முறைமையாகலின், "ஏருறவேருறவேயிவர்நின்றார்." என்றனரெனினுமாம். (௪௦௬)

செங்கழு நீர்மலர் மூன்றொரு தீப
மங்கலர் நான்கொரு நான்கவிர் தீப
மெங்களு மைக்கென லாமிவை யாவுஞ்
சங்கர னன்பர் தருக்கொடு கண்டார்.

(இ-ள்.) சிவந்த குவளைமலர்கள் நான்கு தீபங்களாகவும், அன்றியும், அங்குமலர்கின்ற மலர்களின் நால்வகைகளும் விளக்கமுள்ள ஒப்பற்ற நான்கு தீபங்களாகவும், எங்களுடைய உமாதேவியாருக்கென்று உற்பவமாகின்ற இவ் விம்மிதங்களனைத்தும், சிவபிரா னடியாராகிய திருவெண்காட்டடிகள் களிப்புடனே தரிசித்தனர்.—எ-று.

நான்கு செங்கழுநீர்மலர்கள் வருடத்திற்கோர்முறை ஏககாலத்தில் புட்பிக்கின்ற ஓர் விம்மிதமும், மற்றைக்காலங்களில், கோட்டுப்பூ கொடிப்பூ நீர்ப்பூ நிலப்பூ என்னும் இந்நால்வகை மலர்களும் தத்தமக்குரிய காலபேதங்களுக்கும் இயற்கைக்கும் மாறாக அலர்கின்ற விம்மிதமும் காஞ்சியில் விளங்குவதாலும், இவை உமாதேவியார் தவக்கோலங்கொண்ட காரணத்திற்காகவே விளங்குவதாலும், மேற்கூறியவையேயன்றி இன்னும் அநேக விம்மிதங்கள் விளங்குவதாலும், "செங்கழுநீர்மலர் மூன்றொருதீப - மங்கலர் நான்கொரு நான்கவிர்தீப-மெங்களுமைக்கெனலாமிவையாவும்." என்றும் இவற்றைக்கண்ட திருவெண்காட்டடிகள் களிப்புற்றனரென்பார், "சங்கரனன்பர்தருக்கொடுகண்டார்." என்றும் கூறினர். நான்கு செங்கழுநீர்மலர்கள் வருடத்திற் கோர்முறை மலர்கின்றன என்பதை, "அலகி னீடவத் தறப்பெருஞ் செல்வி யண்ட மாந்திரு மனைக்கிடுந் தீப - முலகில் வந்துறு பயனறி விக்க வோங்கு நாண்மலர் மூன்றுட னொன்று-நிலவ வாண்டினுக் கொருமுறை செய்யு நீடு தொன்மையா னிறைந்தபேருலக-மலர் பெருந் திருக் காமக்கோட் டத்து வைவத நல்லற மன்னவே மன்னும்." என்னும் அருண்மொழித்தேவமுதவாக்கானும், நால்வகை மலர்களும் தத்தமக்குரிய காலபேதங்களும் இயற்கைக்குமாறாக அலர்கின்றவிம்மிதமுண்டென்பதை, "எல்லியிடைப் பங்கயமும் பகற்காலத்தி னிருங்குமுதச் செழும்போது மலர்ந்து நீர்தேன் -பில்குவதொன் றொருகாம்பின் முளரி மூன்று பிறங்குபுனற்

றடமொன்று குளித்தோ ரெய்த-வல்லவா னரத்துருவ மளிப்ப தொன்று மூழ்கினோர் மாற்றார்க்குக் கொடிய தீமை - நல்குவதொன் றுடினோ ருற்றார்க்கின்ப நலந்தருவ தொன்றெனலாந் தடாக மைந்தே." என்னும் காஞ்சிபுராணத் திருவிருத்தத்தானும், மலர்கள் கோட்டுப்பூ கொடிப்பூ நீர்ப்பூ நிலப்பூ என்னும் நால்வகையுடையன வென்பதை, "கோட்டு மலருநிலமலருங் குளிர்நீர் மலருங் கொழுங் கொடியின் - மோட்டு மலரு மாமலருஞ் சுருதி மலருந் திருவாயிற் - காட்டு முறுவ னிலவலரக் கனக வரையிற் பன்னகநாண் - பூட்டு மொருவர் திருமுடிமேற் புனைய லாகு மலர்தெரிந்து." என்னும் அருண்மொழித்தேவாமுதவாக்காம், இன்னும் அளவிறந்த விம்மிதங்களுளவென்பதை, காஞ்சிபுராணத்தின்கணுள்ள விம்மிதப்படலத் தானு முணர்க. (௪0௫)

தாயவ ணின்று தவம்புரி காலைக்
கோயில் குலாநதி கொண்டமை கண்டார்
நாயகன் மேனி நலஞ்செய் தழும்பை
யேயவர் நாத்தழும் பேற மொழிந்தார்.

(இ-ள்.) அதன்பின் திருவெண்காட்டடிகள் ஜகன்மாதாவாகிய காமாட்சியம்மையார் அத்தலத்தின்க ணெழுந்தருளியிருந்து தவம்புரியுங்காலத்து, அக்கோயிலைப் பிரவாகித்த நதியானது தன்னுளடக்கிக்கொண்டதையுந்தரிசித்தனர். அதன்பின் சிவபிரானுடைய திருமேனியில் நன்மையை விளக்கும் வளைச்சுவடு தனச்சுவடு என்னும் இரண்டையும், அடிமைத்தன்மைபொருந்திய திருவெண்காட்டடிகள் தமது நாத் தழும்பேறுமாறு துதித்தனர்.—எ-று.

எனவே, காமாட்சியம்மையார் தவம்புரிகாலையில் அத் தவத்தைச் சோதிப்பான் சிவபிரான் கம்பாநதியை ஏவினமையின், அந்நதி அம்மையாரமைத்த கோயிலையழிக்கத் தொடங்கியபோது, அம்மையார் அச்சமுற்றவராய்ச் சிவபிரானைத் தழுவிக்கொள்ளுதலும், அக்காரணத்தால் சிவபிரான் திருமேனியில் அம்மையாருடைய வளைச்சுவடும் தனச்சுவடும் பதிந்தனவென்பது சரிதமாகலின், திருவெண்காட்டடிகள் அவ்வாறு பிரவாகித்த கம்பாநதியைத் தரிசித்துச் சிவபிரான் திருமேனியின்கண்ணுள்ள சுவடுக ளிரண்டையும் நாத்தழும்பேறத் துதித்தனரென்றபடி, சிவபிரான் கம்பாநதியை ஏவினரென்பதை, "நாதருப்பெரு விருப்பொடு நயந்து நங்கை யர்ச்சனை செய்யுமப் பொழுதிற் - காதன் மிக்கவோர் திருவிளை யாட்டிற் கனங்கு ழைக்கருள் புரிந்திட வேண்டி - யோதமார் கட லேழுமொன் றாகி யோங்கி வானமு முட்படப் பரந்து - மீது செல்வது போல்வரக் கம்பை வெள்ள மாந்திரு வுள்ளமுஞ் செய்தார்." என்றும், அம்மையார் அச்சத்தாற் சிவபிரானைத் தழுவிக்கொண்டனரென்பதை, அண்ணலாருள் வெள்ளத்தை நோக்கி யங்க யற்கண்ணி தம்பெரு மான்மேன்-விண்ணெலாங்கொள வரும்பெரு வெள்ளமீது வந்துறு மெனவெருவக்கொண்டேயுண்

ணிலாவிய பதையுபுறு காதலுடன்றிருக்கையாற்றடுக்கதில் லர்ஷம் - தண்ணிலாடர் வேணியினுரைத்தழுவிக்கொண்டனடன்னையே யொப்பாள்." என்றும், அம்மை யூர் வளைச்சுவடும் தனச்சுவடும் சிவபிரான் தமது திருமேனியி லேற்றனரென் பதை, 'பூதி யாகிய புனிதநீ றூடிப் பொங்கு கங்கைதோய் முடிச்சடை புனைந்து - காதில் வெண்குழை கண்டிகை தாழக் கலந்த யோகத்தின் மருவிய கருத்தா - லாதி தேவனு ராயுமா தவஞ்செ யவ்வாங் கொலோ வகிலமீன் றளித்த - மாது மெய்ப்பயன் கொடுப்பவே கொண்டு வளைத்த ழும்புடன் முலைச்சுவ டணிந்தார்." என்றும் வரும் அருண்மொழித் தேவர்முதவாக் குகளானு மறிக. (௪௦௬)

கச்சிந கர்க்கட லக்கடற் றோன்றும்
பச்சமு தப்பரை யைப்பணி வுற்றோர்
மைச்செறி கட்கடை வைத்தருள் வைத்தா
லிச்சிறு மைக்கடல் வற்றிடு மென்றார்.

(இ-ள்.) காஞ்சிபுர மென்னும் பாற்கடலையும், அந்தக்கடலின்கணு தித்த பசுநிறம் பொருந்திய அமுதம்போன்ற அம்மையாரையும் வணங்கின வராகிய திருவெண்காட்டடிகள், அம்மையாரை நோக்கி, தேவரீர் உம்மு டைய கருநிறமிக்க கடாட்சத்தைச் செலுத்தித் திருவருளைப் பாலித்தால், இந்தத் தாழ்மையென்னும் கடலானது வற்றிப்போமென்று விண்ணப்பித் தனர்.—எ - று.

கச்சிநகர்ப் பொலிவையும் அற்புதங்களையும் நோக்கிப் பாற்கடலென உவமித்ததற்கேற்ப, அத்தலத்தின்கண் வீற்றிருந்தருளும் அம்மையாரை அமுத மென்றுவமித்து, அப்பாற்கடலிற்றோன்றிய அமுதத்திற்கும் இக்கடலிற்றோன் றிய அமுதத்திற்குமுள்ள வேற்றுமையையுங்குறிப்பிப்பான், "கச்சிநகர்க்கடலக்க டற்றோன்றும் பச்சமுதப்பரை." என்றும், அவ்வம்மையார் கடாட்சத்திருவரு ளே போதுமென்பார், "மைச்செறிகட்கடைவைத் தருள்வைத்தா - லிச்சிறு மைக்கடல்வற்றிடும்," என்றுங்கூறினர். தேவியாருடைய கடைக்கண்ணிலுள்ள திருவருளே போதுமென்பதை, "கருங்குழனுதற்கட் பின்னற் கவின்கடைக் கபோலந் தாழ்ந்த - வருங்குழை கடந்த கண்ணி னயிற்கடை யனங்க சாப - நெருங்குறத் தொடுத்த வேவினிமிர்தலை யேய்க்குமென்றான் - மருங்கில்பொற் றிருவே யாருன் மதர்விழி பரவ வல்லார்." என்னும் சௌந்தரியலகரித் திருவி ருத்தத்தானும் தெளிக. (௪௦௭)

என்று வணங்கி வலங்கொ டிணங்கிக்
குன்றில் விளைந்த கொழுங்கனி புட்கொண்
டென்று மிருங்களி யின்ப நிரம்ப
மன்றி னடங்தொழ வந்தவர் வந்தார்.

(இ-ள்.) இவ்வாறு விண்ணப்பித்துப்பணிந்து வலம்வந்து, இமயமலையிற்பொருந்தியுதித்த கொழுவிய கனிபோன்ற காமாட்சியம்மையாரைத் தமதுள்ளத்திற் றியானித்துக்கொண்டு, எக்காலத்தினும் பேரானந்தமாகிய இன்பம் நிறையும்படி பொன்னம்பலத்து ஆனந்தத்தாண்டவம் தரிசித்தற்காக அவதரித்தவராகிய திருவெண்காட்டடிகள் மீண்டனர்.—எ-று.

எனவே, காமாட்சியம்மையாரைத் தரிசித்துக்கொண்டிருந்த திருவெண்காட்டடிகள், அம்மையாரை வணங்கி வலம்வந்து தியானித்துக்கொண்டு தமஇதயத்தில் ஆனந்தத் தாண்டவ தரிசனத்தை இடைவிடாது தரிசிப்பவராகிய அவ்வடிகளார் மீண்டனரென்றபடி. கனி என்று பொதுப்படக்கூறினமையின் கனிகளுண் மேம்பாடுற்ற வாழைக்கனியையே குறிக்கும். அவ்வாழைக்கனியின் கூறுபாடுகளுண மேம்பட்டது மலைவாழையாகலின், "குன்றில்விளைந்த கொழுங்கனி." என்றும், சிவபெருமான் அடியார்களிதயமென்னும் அம்பலத்திற் றாண்டவம் புரிவாராகலின் அத்தாண்டவத்தைச் சதாதரிசித்தற் குறித்தவர் திருவெண்காட்டடிகளென்பார், "மன்றினடங்தொழவந்தவர்வந்தார்." என்றும், அத்தகைய தாண்டவத்தைத் தரிசிப்போர்க்குப் பேரானந்தக்களி நிரம்புமென்பார், "என்று மிருங்களியின்பநிரம்ப." என்றும் கூறினர். வாழைக்கனிகள் எட்டுவகைப் படுமென்பதையும் அவ்வகைக்கனிகளுள் மலைவாழையே மேம்பாடுடைத் தென்பதையும், "செவ்வாழை வெள்வாழை சேர்ந்தரச தாளிமொந்த - னெவ்வுமிவை நோயோர்க் குலகத்திற் - கவ்வுக்கு - வாழைகரு வாழைபசுவாழை மலைவாழைகளி - லூழிமலை வாழை நன்று மோது." என்றும், "ஒதலுற்ற வாழையெட்டி லுற்ற கனிகளெல்லாம் - வாதநோய்க் காகாது வையகத்தோர் - போதவுண்ண - வெண்ணமுண் டாயினிதற்கிணையந்த சத்துருவோ - வெண்ணவிட ரில்லை யுணர்." என்றும் வரும் வெண்பாக்களானும், அடியார்களிதயமே பொதுவாகக்கொண்டு சிவபிரான் தாண்டவம்புரிவரென்பதை, 'குன்றாத மூவுருவா யருவாய் ஞானக்கொழுந்தாகி யறுசமயக் கூத்துமாடி - நின்றுயே மாயையெனுந் திரையை நீக்கி நின்னையா ரறியவல்லார் நினைப்போர் நெஞ்ச - மன்றாக வின்பக்கூத் தாடவல்ல மணியேயென் கண்ணேமா மருந்தே நால்வர்க் - கன்றாலின் கீழிருந்து மோன ஞான மமைத்த சின்முத் திரைக்கடலே யமரரேறே." எனவும், "விளங்கவெண் ணீறு பூசி விரிசடைக் கங்கைதாங்கித் - துளங்குநன் னுதற்கண்டோன்றச் சுழல்வளி நெடுமூச் சாகக்-களங்கமி லுருவந் தானே ககனமாய்ப் பொலியப் பூமி - வளர்ந்ததா ளென்ன வுள்ள மன்றென மறையொன் றின்றி." எனவும், "மறைமுழக் கொலிப்பத் தானே வாதமோடபயக் கைகண்-முறைமையி னேங்க நாத முரசெனக் கறங்க வெங்குங்-குறைவிலா வணங்கி றைந்து கோதிலா நடனஞ் செய்வா - னிறையவ னெனலா மியார்க்கு மிதயசம் மதமீ தல்லால்." எனவும் வரும் தாயுமானர் திருவாக்கானுமறிக, (௪௦அ)

அறுசீர்விருத்தம்.

திருவே கம்ப முடையார்க்குத் திகழந் தாதி யொருமாலை, யி ருபான் மெய்த்தொகை டனவெடுத்தா ரியற்றொண் டறியேன் கைத்தொண்டு, புரிவா ரதனிற் காற்றொண்டுப் புரியே னுண்பான் பொய்த்தொண்டாய், வருவே னென்றார் மெய்நாட்டோர் நகைக்க வெனுமா லேயுமிசைத்தார்,

(இ-ள்.) அதன்பின் திருவெண்காட்டடிகள் திருவேகம்பமுடையார்க்கு விளக்கமுள்ள ஓரந்தாதியை ஒப்பற்ற வேட்கையினாலே நூறுதிருவிருத் தங்க ளால் முடிக்க, "மெய்த்தொண்டு." என்னும் முதலேயுடைய திருப்பாசுரத்தைத் தொடங்கினர். அவ்வந்தாதியினிடையிலே அடியேன் தேவரீர்க்குப்புரிதற்குரிய இயற்கைத்தொண்டினுவென்று முணரேன், நின் அடியார்களனேகர் கைத்தொ ண்டு புரிகின்றார்கள், அத்தொண்டிலே நான்கிலொரு பாகமேனும் யானியற் றேன், வயிறுவளர்த்தற்பொருட்டுப் பொய்த்தொண்டு பூண்டவனாய் வருவேன் என்றும் இசைத்தனர். "மெய்நாட்டோர் நகைக்க." என்னும் முதலேயுடைய வேறோர் மாலேயும் திருவாய்மலர்ந்தனர்.—எ-று.

திருவேகம்பமுடையார் திருவந்தாதி என ஓரந்தாதியே இக்காலவழ க்குவதால், மெய்நாட்டோர் நகைக்க என்னும் முதலேயுடைய மாலே இறந்ததா கக்கொள்ளவேண்டும். மெய்த்தொண்டு இயற்றொண்டு கைத்தொண்டு காற்றொ ண்டு பொய்த்தொண்டு என்னும் அடுக்கிவந்தமைகாண்க காற்றொண்டு என் பது, ஒன்றென்னும் எண்ணின் நான்காவது பாகமான தொண்டெனப் பொ ருள்பட்டு நிற்பதுடன், கைத்தொண்டென்பதற்கொத்துக் காற்றொண்டு என வும் நின்று விரோதப்பொருள் பயத்தலுணர்க. இயற்றொண்டியற்றாவிடினும் கைத்தொண்டேனு மியற்றல் வேண்டும். அக்கைத்தொண்டு முழுமையுமி யற்றாவிடினும் சிறக்கூறேனு மியற்றல் வேண்டும் அஃது மில்லாமையின், "பொய்த்தொண்டாய் வருவேனென்றார்." என்றனர். சிவஞான முற்றோரைக் கண்டு நாட்டோர் நகைப்பதியல்பாகலின், "நாட்டோர்நகைக்க." எனத்தொடங் கினர். நாட்டோர் நகைப்பதியல்பென்பதை, "கேட்டாயோ தோழி கிறிசெய்த வாறொருவன் - தீட்டார் மதில்புடைசூழ் தென்னன் பெருந்துறையான் - கா ட்டா தனவெல்லாங் காட்டிச் சிவங்காட்டித் - தாட்டா மரைகாட்டித் தன்கரு ணைத் தேன்காட்டி - நாட்டார் நகைசெய்ய நாமேலே வீடெய்த - வாட்டான் கொண் டாண்டவா பாடுதுங்கா ணம்மானாய்." என்னும் மணிவாசகப்பிரான் மலர்வாக்கானுமறிக. (௧௦௩)

இசைத்தங் கிருட்பா ரோரிரவி லெரிவக் துதரம் புகுந்தாற்போ லொசிக்கும் பசிவந் தெழுவயிறே யூருண் டுறங்க னடந்தனகாண் வசிக்கு மவர்க ளனம்பகிரா ரளியா யென்று வழுத்திடவும் பசிக்குந் தாமே லிடவிளக்குப் படுவீ டொன்றிற் படர்ந்தனரால்,

(இ - ள்.) இவ்வாறு பாமாலை திருவாய் மலர்ந்துகொண்டு அக்காஞ்சிமாநகரத்தின்கண் வீற்றிருந்தருளும் நாட்களுள் ஓர் நாளிரவில், அக்கினிவந்து வயிற்றிற்புகுந்தது போன்று, மானம் முதலிய எவற்றையும் அழிக்கத்தக்க பசியானதுதோன்ற, அஃதுணர்ந்த திருவெண்காட்டடிகள் என்னுடைய வயிறே, இப்போது ஊரெங்கும்புசித்து நித்திரைசெய்கின்றன, ஆதலால், இவ்வூரிலிருப்பவர்கள் அன்னம்படையார்கள், என்னைக் காப்பாற்றுவாயாக என்று தோத்திரஞ்செய்தும், பசிக்கும் தன்மை அதிகரித்ததனால், தீபம் அவிந்துள்ள ஓர் வீட்டிற்குச் சென்றனர்.—எ-று.

பசியென்பது ஓர் அக்கினியைப் போன்றுதகிக்குந் தன்மையுடைமையின் ஆன்றோர் அதற்கு உதராக்கினியென்றும் பசித்தீயென்றும் நோயென்றும் பெயர்வழங்கினராகலானும் பசி மானம் முதலியவற்றைப் போக்குந் தன்மையுடையதாகலானும், "எரிவந்து தாம்புகுந்தாற்போ லொசிக்கும்பசி" என்றும், இத்திருவெண்காட்டடிகட்குப் பசிநோய் தோன்றியது நடுராத்திரியிலாகையாலே அக்காலத்தைக் குறிப்பிப்பான், "ஊருண்டுறங்கனடந்தன." என்றும், இத்தருணத்தி லென்னைக காப்பாற்ற வேண்டுமெனக் குறையிரந்தா ரென்பார், "அளியாய்" என்றும் கூறினர். பசியை உதராக்கினியென்றும் பசித்தீயென்றும் நோயென்றும் கூறுவதை "அங்கி யதனிற் றங்கியிடு மயோ மயத்த கும்பத்திற் - றங்கு மொருவன் றபனம்போற் றபன மெய்துந் தாயுதரத் - தங்கி சுடவே யழலனைய சூசி யதனு லாகத்தைப் - பங்கித் திடவே படுமிடரி னிருநாற் குணிதம் பட்டமுங்கும்." என்னும் சிவதருமோத்தரத் திருவிருத்தத்தானும், "உடலிதற் பவத்தோ ரைம்பெருந் துயர்மாய்ந்துறுகணத் துயரினெண் மடங்கா - லிசையுள திதிக்கட் டுயரமூப் பறிவோங் கிளமையிற் பிணியுறு விடத்தும் - விடலரும் பசிநோய் காமநோய் தணிப்பான் மிகுபொருடேடுத றுயரீண் - டடையினு மதனைக் காக்குத றுயர்வேந் தாயினு மிகுநாற் றுயரே." என்னும் சாந்தலிங்க சுவாமிகள் திருவாக்கானும், பசியானது மானம் முதலியவற்றைப் போக்கத்தக்கதென்பதை, "மானங் குலங்கல்வி வண்மையறிவுடைமை - தானந் தவமுயற்சி தாளாண்மை - தேனின் - கசிவந்த சொல்லியர்மேற் காமுறுதல் பத்தும் - பசிவந் திடப்பறந்துபோம்." என்றும், அப்போது என்சொலினுங் கேளாதகியல்பென்பதை, "ஒருநா ளுணவை யொழியென்றா லொழியா - யிருநாளைக் கேலென்றா லேலா - யொருநாளு - மென்னோ வறியா யிடும்பைகூ ரென்வயிறே - யுன்னோடு வாழ்தலரிது." என்றும் வரும் ஔவைப்பிராட்டியார் அமுதவாக்கானுமறிக காண் - ஆல் - அசைகள். (௧௧)

காயும் பசியா லருட்பெரியோர் கங்குல் யாமத் தெளியராய்
வாயுந் திறவா ரங்கைகொட்ட மனைவாழ் பவன்சற் றறியாம
லாயுங் காமக் கள்ளனென வந்தோவந்தோ தீங்கிழைப்பத் [ன்.
தீயோன் செயலை யறிந்தங்க ணயலா னொருவன் றெரிந்தனைந்தா

(இ - ள்.) வயிற்றிற் றகிக்கும் பசியினாலே, சிவபிரான் திருவருட் குரியராகிய திருவெண்காட்டடிகள், இரவின் நடுயாமத்தில் தனிமையராய், வாய்

திறந்துரைக்காமற் கைகொட்டிப் பிச்சை வினவ, அவ்வீட்டில் வசிப்பவன் சற்றும் தெரிந்துகொள்ளாமல், மனிதர் அரவத்தை யாராயும் காமத்திருடனிவனென்றெண்ணி, ஐயோ! ஐயோ! கொடுமைபுரிய, அவ்விதக்கொடுமை புரியும் அக்கொடியோன் செய்கையைப்பார்த்து, அவ்விடத்துள்ள அயல்வீட்டுக்குடையவ னொருவன் திருவெண்காட்டடிகளென் றறிந்து திடீரென்று வந்தான்.—எ-று.

நடுராத்திரியிற் றனியாய்வந்து நின்று வாய்பேசாது கைகொட்டுதல் காமக்கள்வர்க்கு முரித்தாகலின், அவ்வீட்டுக்குடையான் திருவெண்காட்டடிகளைக் காமக்கள்வராகவே தீர்மானித்தன னென்பார், "ஆயுங்காமக்கள்ளனென ." என்றும், இந்நூலாசிரியர்க்குத் திருவெண்காட்டடிகளிடத்துள்ள பத்திமைப்பெருக்கால் அக்கொடியோன் அவ்வடிகளை அடித்தனனெனக் கூறுதற்கு மனமின்றி இரக்கக்குறிப்புடனே, "அந்தோவந்தோ தீங்கிழைப்ப" என்றும் கூறினர். மெய்யன்புடையார், அடியார்க்குத் தீயோரிழைத்த தீங்கைத் தம் வாயாற்கூற மனமில்லாம லிவ்வாறே கூறுவரென்பதை, "கைத்தலத் திருந்த வஞ்சக் கவளிகை மடிமேல் வைத்துப் - புத்தக மவிழ்ப்பான் போன்று புரிந்தவர் வணங்கும் போதிற் - பத்திரம் வாங்கித் தான்மு னினைந்தவப் பரிசே செய்ய - மெய்த்தவ வேட மேமெய்ப் பொருளெனத் தொழுது வென்றார்." எனவும், "அந்நின்ற தொண்டர் திருவுள்ள மாரறிவார் - முன்னின்ற பாதகனுந் தன்கருத்தே முற்றுவித்தா - னிந்நின்ற தன்மை யறிவா ரிவர்க்கருள - மின்னின்ற செஞ்சடையார் தாமே வெளிநின்றார்." எனவும் வரும் அருண்மொழித்தேவ ரமுதவாக்கானுமறிக. (கககக)

போற்றும் பெரியோ ரிவர்தமைநீ புடைத்தல் பொல்லா தெனவதனை, மாற்றிக் கொடுபோ யுடற்றடவி மகிழ்பா லன்னங் கறிநறுநெய், கோற்றே னிவைகள் கலந்தூட்டிக் குளிர்சாந் தணிந்து பணிந்துசெயல், சாற்றி யிடநீ ரவரவர்க்குத் தக்க தடைந்தீ ரென்றார்பின்.

(இ - ள்.) உலகத்தார் துதிக்கும்பெரியோராகிய இவரை நீ அடித்தல் அபராதமாகுமென்று அச்செய்கையைத் தடுத்து அத்திருவெண்காட்டடிகளை அழைத்துக்கொண்டுபோய் அவர் திருமேனியைத்தடவி, மகிழ்ச்சியைத் தருவதாகிய பாற்சோறும் பதார்த்தங்களும் நன்மணமுள்ள நெய்யும் கொம்புத்தேனும் ஆகிய இவைகளை ஒன்றாகக் கலந்துண்பித்து, குளிர்ச்சியுள்ள சந்தனத்தைப்பூசி வணங்கி, அயலான்செய்த தீங்கைக்கூறுதலும், நீங்களிருவரும் அவரவர்கள் செய்கைக்குத் தக்க பயனடைந்தீர்கள் எனத்திருவாய் மலர்ந்தருளினர். அதன்பிறகு.—எ - று.

"பத்தர்சித்தர்கள் பரமஞானியர் - சித்தங்கலங்கிடத் தீவினைமூண்டிடும்." என்னும் பெரியோர் வாக்கின்படி மெய்ஞ்ஞானியரை இம்சித்தல் பேரபராதமாகலின், "போற்றும் பெரியோரிவர்தமைநீ புடைத்தல் பொல்லாது."

என்றும், அத்தீயோனியற்றிய கொடுஞ்செய்கையால் வருந்திய திருவெண்காட டடிகளின் திருமேனியயர்வுதீரத் தடவிக்கொடுத்தாரென்பார், "உடற்றடவி." என்றும், அடியார்க்குத் திருவமுதூட்டத்தொடங்கில் அவர் திருவடிகளை முன் புவிளக்கி, அதன்பின் பரிகலந்திருத்தி, அப்பரிகலத்தில் அறுசுவையுடன் கல ந்த கறிவகைகளுடனே அன்னத்தைப் பரிமாறியுண்பித்து அவர்கள் திருவமு துசெய்தருளிய பிறகு, அவர் திருமேனியிற் சந்தனம் பூசி உபசரிக்க வேண்டி யது முறைமையாகலின், " உடற்றடவி மகிழ்பாலன்னங் கறிநறுநெய் - கோற் றேனிவைகள் கலந்தூட்டிக் குளிர்ச்சாந்தணிந்து பணிந்து." என்றும், மெய்ஞ் ஞானியர் விருப்பு வெறுப்பற்றவராகலின், தமது திருமேனியை வருத்தினோ னிடத்து வெறுப்பும் உபசரித்தோனிடத்து விருப்புமின்றி "நீரவரவர்க்குத் தக் கதடைந்தீரென்றார்," என்றும் கூறினர் அடியாரை அமுதுசெய்விக்கும் முறை மை இத்தன்மைத்தென்பதை, "கொண்டுவந்து மனைப்புகுந்து குலாவுபாதம் விளக்கியே - மண்டுகாதலி னாதனத்திடை வைத்தருச்சனை செய்தபி - னுண்டி நாலு விதத்திலாறு சுவைத்திறத்தினி லொப்பிலா - வண்டர் நாயகர் தொண்ட ரிச்சையி லமுதுசெய்ய வளித்துளார்." என்னும் அருண்மொழித்தேவ ரமுத வாக்கானும், பெரியோர்கள் மனம் விருப்பு வெறுப்பற்றதென்பதை, "ஓடும் பொன்னு முறவும் பகையுமோர் - கேடுஞ் செல்வமுங் கீர்த்தியு நிந்தையும் - வீடுங் கானமும் வேற்ற நோக்குதல் - கூடுந் தன்மை கொளுமன நன்மனம்." என்னும் சிவப்பிரகாசசுவாமிகள் திருவாக்கானுந் தெளிக. (கக௨)

பிரியா வரனை விடைகொடுபோய்ப் பெருங்கா ளத்தி மலை நோ க்கி, வரியார் சுரும்பர் வரியிசைக்கு மலர்க்கா வாலங் காட்டம்மைச், சூரியார் வணங்கி மணங்கமழு முயர்பூங் கான நெடுஞ்சாரற், பெரி யோர் தவங்கள் புரிவனவுங் காண்பான் கருதிப் பெயர்ந்தணைந்தார்.

(இ - ள்.) தம்மைவிட்டுப் பிரியாதவராகிய ஏகாம்பரநாதரிடத்தில் விடை பெற்றுக்கொண்டு மீண்டு, பெருமைமிக்க காளத்திமலையைப்பார்த்தவண்ணமே வந்து, கீற்றுகளுடைய வண்டுகள் இசைபாடுகின்ற புட்பச்சோலைகளணிநிறைந்த திருவாலங்காட்டிலே காளிக்காக நடனமாடினவராகிய இரத்தினசபாபதியைப் பணிந்துகொண்டு, காளத்தியைக்கிட்டி நன்மணம் வீசும் உன்னதமுள்ள புட்ப வனங்கணிறைந்த நீண்ட சாரலிலே, பெரியோர்கள் தவப்புரிந்துகொண் டிருப் பவற்றையும் தரிசிக்கும் வண்ணம் திருவுள்ளங்கொண்டு அத்திருவாலங்காட்டி னின்றும் மீண்டுவந்தனர்.—எ - று.

காஞ்சியினின்றும் மீண்டு காளத்திக்குச் செல்வதற்குத் திருவுளங்கொ ண்ட திருவெண்காட்டடிகள் இடையிலுள்ள திருவாலங்காட்டையடைந்து இர த்தினசபாபதியைத் தரிசித்துக்கொண்டு காளத்தியையடைந்தனரென்றபடி. இ டையில் திருவாலங்காட்டில் ஊர்த்ததாண்டவத்தைத் தரிசித்தபோது,"வீடு நமக் குத் திருவாலங் காடு விமலர்தந்த - வோடு நமக்குண்டு வற்றாத பாத்திரமோங்கு

செல்வ - நாடு நமக்குண்டு கேட்டதெல் லாந்தா நன்னெஞ்சமே - யீடு நமக்குச் சொலவே யொருவரு மிங்கில்லையே." என்னும் திருவிருத்தமுதலாகபபலதிரு விருத்தங்கள் திருவாய் மலர்ந்தனரெனக் கூறுவர், ஆயின் தற்காலம் இருத்திரு விருத்தம் ஒன்று நீங்க ஏனையவை வழங்காமையின் இறந்தனவாகக்கொள்ளல் வேண்டும். காளிக்காக நடனமாடினரென்பதை, "வீரங் - கொடுசெதறியு மாகா ளிகோபந்தவிர - வெடுத்த நடத்தியல்பு போற்றி." என்னும் நக்கீரதேவநாயனா ரருளிய போற்றிக்கலி வெண்பாவானு முணர்க. (௧௧௬)

தொண்டர் திரண்டோ டிப்பணியத் தொழுது வீதிச்சினகரத் தைக், கண்டு வணங்கிக் கரங்கூப்பிக் கள்ளக் கொல்லா வுள்ளத்தார், மண்டும் பேரன் பளவறியா வண்ணம் பயிலுங் கண்ணப்பர், பண் டைப் பணியை நினைந்துருகிப் பல்கா லொல்கிப் பணிந்தனரால்.

(இ - ள்) வஞ்சமடையா நெஞ்சினராகிய திருவெண்காட்டடிகள், திருக் காளத்தியைச் சமீபித்தவளவில், அத்தலத்தின்கணுள்ள அடியார்கள் ஒருங்கு கூடிச்சென்று திருவெண்காட்டடிகளைப பணியத் தாமும் அவர்களைப் பணிந்து, மாடவீதியிற் சென்று திருக்கோயிலைத் தரிசித்து நிலமுறப் பணிந்து தமது திரு கரங்களையுஞ் சிரமேற் கூப்பி மிக விசேடித்த தமது பேரன்பின் அளவு இத்து ணைத்தென்று அறியப்படாதபடி ஒழுகுகின்ற கண்ணப்பநாயனாருடைய பூர்வி கத்தொண்டைச் சிந்தித்து மனமுருகிப் பலமுறை குழைந்து வணங்கினார் — எ - று.

திருக்காளத்திக்குச் சென்ற திருவெண்காட்டடிகள் அங்குத் தம்மை எதிர்கொண்டழைக்கவந்த திருவடியார்களுடன் மாடவீதிக்கெழுந்தருளித் திரு வாலயத்தை நோக்கியவளவில் நிலமுறப்பணிந்து திருக்கரங்களைச் சிரமேற்கூப் பிச் செல்கின்றபோது, கண்ணப்பநாயனார் பண்டியற்றிய பேரன்பின் எல்லை யற்ற தொண்டைச் சிந்தித்து மன வுருக்கமுற்றுச் சரீரங்குழைந்து பலகாற் பணிந்தனரென்றபடி கண்ணப்ப நாயனாருடைய திருத்தொண்டு பேரன்பின் எல்லையற்ற தொண்டென்பதை, "கண்ணப்ப னொப்பதோ ரன்பின்மை கண் டபி - னென்னப்ப னென்னொப்பி லென்னையுமாட் கொண்டருளி-வண்ணப் பணித்தென்னை வாவென்ற வான்கருணைச் - சுண்ணப்பொன் னீற்றற்கே சென்றூதாய் கோத்தும்பீ." என்னும் மணிவாசகப்பிரான் மலர்வாக்கானும், "ஆடுற வடியேன் புதுக்குடந் தனிநீரன்பன்வாய்ப் புனலுணக் காமோ-கூடை யின் மலர்பிற் றையிற்றரு மலரோ கூறுமென் கவியவன் மொழியோ - நாடரு மொருநீ யிறையெனும் வழக்கை ஞானசம்பந்தனாற் றிட்ட - வேடுவா செய்ய வென்காத் திருக்கு மீசனே மாசிலா மணியே." என்னும் சிவப்பிரகாச சுவாமி கள் திருவாக்கானும், திருவெண்காட்டடிகள் அக்காளத்திக் கெழுந் தருளித் தரிசித்தபோது திருவாய்மலர்ந்தருளிய, "வாளான் மகவரிந் தூட்டவல்லேனல் லன் மாதுசொன்ன - சூளா லிளமை துறக்கவில் லேனல்லன் றொண்டுசெய்து

நாளாறிற் கண்ணிடந் தப்பவல் லேனல்ல னினிச் சென் - றுளாவ தெப்படி யோதிருக் காளத்தி யப்பனுக்கே." என்னும் திருவிருத்தத்தானும் தெளிக. ஆல் - அசை, (கக௫)

பணிந்து திருக்காளத்திமலைப் பரஞ்சோதியையும் பணிந்து பணிந், தணிந்து பரஞ்சோதித்திருநின் றன்பென் புருகுமின்பு ளர், திணிந்த படிவக் கொடுமுடிக டிசைக டோறு மிசையுமவை, துணிந்து கருணைத் திறம்பெறுவார் சூழப் போந்தார் வாழ்வுறவே.

(இ - ள்.) அவ்வாறுவணங்கிய திருவெண்காட்டடிகள் திருக்காளத்தி யெ ன்னும் வரைக்கணெழுந்தருளிய பரஞ்சோதியாகும் சிவபெருமானையும் பன் முறை வணங்கி வணங்கி, அப்பரஞ்சோதியாருடைய திருமுன்சமீபித்துநின்று மெய்யன்பினாலே என்பும் உருகத்தக்க இன்பமுடையவராகி, திண்ணிதாகிய வடிவத்தோடு கூடிய கொடுமுடிகள் திக்குகளெங்கும்பொருந்தியிருப்பவைகளை நிச்சயித்துணர்ந்து திருவருளின்றன்மையடைபவராய் மெய்ஞ்ஞான வாழ்வு பொருந்துமாறு வலமாகவந்தருளினர்.—எ - று.

எனவே, திருவெண்காட்டடிகள் திருக்காளத்திவரைக்கணடைந்து சிவ பிரானைத் தரிசித்துக்கொண்டு, அங்கு நின்றும் மீண்டு அவ்வரையை வலமாக வந்தனரென்பதாம். இத்தலத்தில் தவஞ்செய்துகொண்டிருந்த வசிட்ட முனி வருக்காகச் சிவபிரான் திருவுளமிரங்கி ஐந்தலையரவ உருவத்தோடு பரசிவலிங்க மாய் மேற்குத் திருமுகமாகிச் சோதிமயமாகத் தரிசனந்தந்தனனென்பதும், பஞ் சபூதத்தலங்களுள் இது தேயுத்தலமென்பதும் புராணசரிதமாகலின், "பரஞ் சோதியையும் பணிந்து பணிந்து." என்றும், "பரஞ்சோதித்திருநின்று." என் றும் கூறினர். மேற்கூறியவாறு சோதியுருவாய்த் தரிசனந் தந்தனரென்பதை, "அருமணிச் சுடிகை யைவா யாடர வுருவத்தோடு - பரசிவ லிங்கமாகிப் படு புன லிறைவன் றிக்குத் - திருமுகமாய கத்துத் திமிரமுங் கெடவி ளங்கி - விரிசுடர்க் கனலி தன்முன் மின்மினி யாக நின்றான்." என்னும் சீகாளத்தி புராணத் திருவிருத்தத்தானு முணர்க. (கக௬)

போதும் போதின் மணிநாகம் புடையி லாட விசைநோக்கி
நாதர்க் கிடுதண் டிடைத்தீப நணிய வாகுங் கதிக்காளற்
கேத மில்லா வுறவேயோ வென்பார் முன்போம் பலயானை
சீத மதியோன் விழாவினுக்குத் திருமுன் படாப் போமென்பார்.

(இ - ள்.) அழகிய அவ்வரையின் பக்கத்திற்செல்லும்போது, காளத்தி நாதர்க்கேற்றியிருக்கும் தூங்காவிளக்கு அசைந்துகொண்டிருக்கும் புகையைப் பார்த்து, இத்தீபம் இங்கு சாமீபபதவியை யடைந்த காளனென்னும் பாம்புக் குக் குற்றமற்ற உறவுதானோ' என்றுரைப்பார், தமக்கு முன்னே செல்லுகின்ற பல யானைகளும், குளிர்ந்த சந்திரசூடராகிய காளத்திநாதர்க்குரிய திருவிழாத்

தரிசனத்திற்காக அவர் திருமுன்பு நெருங்கும்படி போகின்றனவென்றுமைப் பார்.—எ-று.

பஞ்சபூதத்தலங்களுள் காளத்தி வாயுத்தலமாகலானும், அவ் வாலயத்தின் கர்ப்பக்கிருகத்தில் காளத்திநாதர்க்கருகாக ஏற்றியிருக்கும் தூங்காவிளக்குக்குக் காற்று வாருவ யின்மையானும், அவ் விளக்குக் சதா அசைந்துகொண்டிருத்தலானும், அத் தலத்திற் சாமீபபதவி படைந்த காளன் என்னும் சர்ப்பத்திற்கு இரை காற்றாகலானும், "மணிநாகம்புடையிலாடலிசைநோக்கி நாதர்க்கிடு தண்டுடைத் தீப நணியவாகுங் கதிக்காளற் கேதமில்லாவறவேயோ." என்றும், சிவபிரான் திருவிழாக்கொள்ளுங்கால் அவர் திருமுன் கொடிகுடை ஆலவட்டம் பலவகை வாத்தியங்களுடன் செல்வதுடன், இவைகட்குமுன்பாகயானை செல்வதியல்பாகலின், அங்குச் செல்லும் யானைகளைக் கண்டபோது, "சீதமதியோன் விழாவினுக்குத் திருமுன்படரப்போம்." என்றும் கூறினர். சர்ப்பத்திற் காகாரம் காற்றாயிருந்தும், திருமுன் ஏற்றிய தூங்காவிளக்குக்கும் அச் சர்ப்பத்திற்கும் உள்ள நேசத்தால் அவ் வாகாரத்தையும் அவ் விளக்கின்வசமாக விட்டிருத்தலாலன்றோ சதா அவ்விளக்கு அசைந்துக்கொண்டிருக்கின்றதென்பதும், அன்பின் வயப்பட்டோர் தமக்குப் புலப்பட்ட யாவும் அன்புடையவைகளாகவே பாவிப்பாரென்பதும்கருத்து. (கக௬)

ஐயன் றிருமே னியினடங்கு மத்தீ யுறுவோ வெனநினைவா, ரெய்யுஞ் சிலவேட் டுவர்திண்ணார்க் கெண்ணு முறவோ பண்ணைமைந்த, செய்ய கனிவாய்க் குறமகளிர் சிவஞ்சேர் கன்னி மார் நேர்வார், தூய்ய கீரர் தமிழிசையோர் சுரும்பின் பாட லாமென்பார்.

(இ-ள்.) அன்றியும் இத்தீபம் சிவபிரான் திருமேனியின்க ணடங்கியுள்ள அத்தகைய தீக்கூறவாகுமோவென்று கருதுவார், காளத்திநாதர் மிருகங்களை எய்யத்தக்க வில்லேந்திய வேடராகிய திண்ணரென்னும் இயற் பெயருடைய கண்ணப்பநாயனார்க்கு மதிக்கத்தக்க உறவோ என்றும், இசை யமைந்த சிவந்த கொவ்வைக்கனிபோன்ற அதரத்தையுடைய குறமகளிர்கள் சிவசாரணம்பெற்ற சத்த கன்னியர்கட்கு ஒப்பாவார்கள் என்றும், தூய்மையராகிய நக்கீரதேவர் திருவாய்மலர்ந்த தமிழ்ப்பாக்களின் இசைதானோ ஒப்பற்ற வண்டுகளின் கீதங்களாகுமென்றும் கூறுவர்.—எ-று.

சிவபெருமான் அழல்வண்ணராகலின், "ஐயன் றிருமேனியினடங்கு மத்தீயுறவோ." என்றும், அப்பெருமான் அருளடைந்த அடியார்கள் பல ரிருக்கவும், அத்தலத்திற் கதியடைந்த ஏனையரிருக்கவும் அவர்களொருவரும் அப்பெருமானருகிலின்றிக் கண்ணப்ப ரொருவர்மாத்திர மிருத்தலின், "எய்யுஞ் சிலவேட்டுவர் திண்ணார்க்கெண்ணு முறவோ." என்றும், குறமகளிர் சிவஞ்சேர் கன்னியார் நேர்வார்." என்றும், நக்கீரர் காளத்திக்குச் செய்த துதிகள் மிக இனிமையாயிருத்தலின் "கீரர்தமிழிசையோர் சுரும்பின்பாடலாம்." என்

றும் கூறினர். சிவபெருமான் தீவண்ணரென்பதை, "திருநாம மைந்தெழுத் துஞ் செப்பா ராகிற் றீவண்ணர் திறமொருகாற் பேசா ராகி-லொருநாளுந் திருக்கோயில் சூழா ராகி லுணபதன்முன் மலர்பறித்திட் டுண்ணு ராகி - லருநோய்கள் கெடவெண்ணீ றணியா ராகி லளியற்றார் பிறந்தவாறேதோவென்னிற் - பெருநோய்கண் மிகநலியப் பெயர்த்துஞ் செத்துப் பிறப்பதற்கே தொழிலாகி யிறக்கின் றாரே." என்னும் ஆளுடைய வரசுகளி னருள்வாக்கானும், கண்ணப்பநாயனர் காளத்திநாதர்க் கருகி லிருக்கப்பெற்றெனரென்பதை, "பேறினி யிதன்மே லுண்டோ பிரான்றிருக் கண்ணில் வந்த - வூறுகண் டஞ்சித் தங்க ணிடந்தப்ப வுதவுங் கையை - யேறுயர்த் தவர்தங் கையாற் பிடித்துக்கொண் டென் வலத்தின் - மாறிலாய் நிற்க வென்று மன்னுபே ரருள் புரிந்தார்." என்னும் அருண்மொழித்தேவரமுதவாக்கானும், நக்கீரரருளியது இனிமைவாய்ந்தஞான வந்தாதியென்பதை, "மங்கைமாரிவர் தங்கள் வளநகர்ச் - சங்க மேயவு தமிழ்ப பெரு நாவலன் - றிங்கள் வேணிதன் றென்கயிலாயமுற் - றங்கு ஞானவந்தாதிய றைந்ததும்." என்றும், "சென்று வானுயர் தென்கயி லாயம்யா-மென்று காண்குவ மென்னுங் கருத்தொடு - நின்று ஞானவந் தாதி நியமமா-மன்ற நாடொறு மங்கைய ரோதுவார்." என்றும் வரும் சீகாளத்திபுராணத் திருவிருத்தங்களானு முணர்க இவ் வந்தாதியையே கைலைபாதி காளத்திபாதியந்தாதி என்பர். கன்னியர் நேர்வார் என்பதற்குச் சத்தமாதாக்க ளொப்பாரென் றுரைப்பதுடன், இத்தலத்தின் முத்தியடைந்த மாணிக்கவல்லியின் புத்திரிகளாகிய கன்னியா ரிருவரையும் நேர்வர் எனினுமாம். கன்னியரிருவரித் தலத்தில் முத்தியடைந்தனரென்பதை, வையக முழுது முள்ள மாமணி யொளிக்கும் பச்சைத்-துய்யநன் மரகதத்தின் சோதியுள் ளவைக்குமேலாம் - பொய்யில்கா ரணமாய்த் தோன்றும் புகலரும் வடிவை நோக்கித்-தையல ரிருவ ருந்தாழ்ந் தெழுந்தெரிளி தன்முன் னின்றார்." என்றும், "நின்றிடு மணங்க ளைா திருமலனருளினலே-தன்றனி யொளியினூடே தயங்கிடத் தானுட் கொண்டான்-பொன்றிகழ் மணிமார புள்ள பங்கயன் முதலோர் போற்றக - கன்றணி காதலெந்தம் மன்னை கன்மக ளணைவன்றே." என்றும் வரும் சீகாளத்தி புராணத் திருவிருத்தங்களாற் றெளிக. சத்தமாதாக்களாவார் - அபிராமி மகேஸ்வரி கெளமாரி நாராயணி வராகி இந்திராணி காளி என்பவர்களாம். (௧௧௦)

தவமாற் றும ரற்றுமவர் தம்மைச் சிவகோ சரியரென்
றுவமா னத்தா னினைந்துருகி யொளிகூர் தென்றி சைக்கயிலைத்
தவமா மலையைச் சூழ்போந்து தொடர்ந்து படர்ந்த தவத்தவரோ
டவமா றியலாக் கதியளிக்கு மையன் றிருமுன் னடைந்தனரால்.

(இ-ள்.) அதன்பின் திருவெண்காட்டடிகள் அக்கிரிச்சாரலிற் றவம்புரிதலை விடாமற் செய்துகொண்டிருக்கும் தவசிகளைப்பார்த்து, இவர்கள் சிவகோசரியார் போன்றவர்களென்று வமித்துச் சிந்தித்து மனமுருக்கமுற்று, விளக்கமிக்க தென்கைலையென்னும் மேன்மையோடு சிறப்புற்ற அவ் வலை

யை வலமாகவந்து, தம்மைப் பின்தொடர்ந்துவந்த அத்தகைய தவசியர்களுட னே அவமார்க்கம்பொருந்தாத முத்தியின்பம் பாலிக்கும் திருக்காளத்தி நாதரது சந்நிதிக் கெதிரிற் சேர்ந்தனர்.—எ-று.

சிவகோசரியார் திருக்காளத்திநாதருக்கு ஆகமவிதி தவறாது பூசித்துச் சிறப்பெய்தியவராகலின், விதி தவறாது தவம்புரியும் தவசிகளைத் திருவெண் காட்டடிகள் நோக்கியபோது, இவர்கள் சிவகோசரியாருக் கொத்தவர்களெனச் சிந்தித்து மனமுருகினர் என்பார், "தவமாற்றமலாற்றுமவர்தம்மைச் சிவகோ சரியாரென் - றவமானத்தா னினைந்துருகி." என்றும், திருக்காளத்தியில் தவ ஞ்செய்துகொண்டிருந்த வசிட்டமுனிவருக் கனுக்கிரகிக்கும் நிமித்தம் சிவபெ ருமா னெழுந்தருளி, அம் முனிவர் வேண்டுகோட் கிணங்கி அத் தலத்திற் றானே சிவலிங்கவுருவா யமர்ந்தருளிய துணர்ந்த உமாதேவியார்பிரிவாற்றாமை யால், தமது மூத்தபிள்ளையார் இளையபிள்ளையாரென்னும் இருவருடனே வீர பத்திரக்கடவுள் வைரவக்கடவுள் ஐயனார் நந்திதேவர் உருத்திரகணங்கள் கண நாதர்கள் என்னும் இவர்களும் பின்றொடர்ந்து வருமாறு அக்காளத்தியை ச்சேர்ந்து ஞானப்பூங்கோதையென்னும் திருநாமத்துடன் எழுந்தருளியகாரண த்தால், கைலைவரையானது மேருவரையுடன் கூடி அத் தலத்தை யடைந்து தனக்கு வடக்கே அம்மேருவரை தங்கும்படிசெய்து, தான் சந்நிதிக்குக் கீழ்த்தி சையில் தங்கியது அவ்வேதுவினாலே அன்றுமுதல் அதற்குத் தென்கைலை என் னும் திருநாமம் வழங்கத் தொடங்கிற்றென்பது புராண சரித்திரமாகலின், "ஒளிகூர்தென்றிசைக் கயிலைத்தவமாலை." என்றும், அவமார்க்கம் செல்லாதவர் களுக் கருள்வது முத்தின்பயிமாகலின், "அவமாறியலாக்கதி." என்றும் கூறி னார். சிவகோசரியார் சிவாகமவிதிதவறாது பூசிப்பவரென்பதை, "எய்தியசீ ராகமத்தி லியம்பியபூ சனைக்கேற்பக் - கொய்தமலரும்புனலு முதலானகொண் டணைந்தார் — மைதழையுங் கண்டத்து மலைமருந்தை வழிபாடு - செய்துவருந் தவமுடைய முனிவர்சிவ கோசரியார்." என்னும் அருண்மொழித்தேவ ரமுத வாக்கானும், "ஈசனார்தம் மிணையடித் தாமரைப் பூசை செய்தொழி லாப்பூண்டு செய்திடு - மாசை மேல்கொண் டறமனத் தான்சிவ-கோசனென்னுங் குணப் பெருங் குன்றனன்." என்னும் சீகாளத்திபுராணத் திருவிருத்தத்தானும், "நாட ரிய சத்தியோ சாதத்தும் வாமத்து நன்றும கோரத்தினு-நவைபற்ற புருடத்து மாகமமொ ரைவ்வைந்து நல்கியீ சானத்திலே, பீடுதரு மெட்டுமுறை தந்தவற் றிடைநீசொல் பெருமைபெறு மருமை விதியிற்-பேசரிய பூசைசிவ கோசரியெ னப்புரிதல் பெற்றிலேன் மற்றடி யனேன், வேடுவர் குலத்தலைவன் மெய்யன்பு பூண்டிலேன் வேட்டொருவர் மாட்டருளினன், மீக்கொளொரு புடையொப்பு நோக்கிவைத் தனைசாற்றின் வேண்டல்வேண் டாமை யிலையா, லாடுநின்பால் வேறு பாடொன்றி லாமையா லபிடேக மாடி யருளே - யறிவுற்றெ னக்கை மலர் செறிவுற் றமர்ந்தவிறை யபிடேக மாடி யருளே." என்னும் சிவப்பிரகாச சுவாமிகள் திருவாக்கானும், திருக்காளத்திக்குத் தென்கைலை என்னும் திரு நாமமுண்டென்பதை, "தோடவிழ் கடுக்கை வேய்ந்த சுடர்மணிச் சுடிகையை

வா - யாடா வுருவத் தண்ணற் கயிலத்திர திசையின் வெள்ளிக் - கோடுயர் வரை நின் றன்று குருமணி யருவி சூடி - நீடிய குடுமி மேரு நின்றிடுங் கதன் வடக்கே." எனவும், "அன்றுதொட் டுலக மேத்து மண்ணலங் கனிந்துக் காடு - மன்றமென் கைலை யென்னும் வான்பெயர் பெற்ற தம்ம - பொன்றவி லதன்சி றப்புப் பொருபுல னாவ வேந்து - நின்றதன் னுயுள் சாறு நிகழ்த்தினு மூலத்தற் பாற்றே." எனவும் வரும் சீகாளத்திபுராணத் திருவிருத்தங்களானும் தெளிக. (கக௮)

குளிர்கூ ரருவித் தென்கயிலைக் கோமாற் கில்ல மெனப்பாடி,
யொளியார் திருமுன் விடைகொடுபோ யொற்றி யூர்மேற் பற்
றினராய்த், தனியா லயங்கள் பலபோற்றித் தண்டா மரைக்காட்
டொடுமாட, வெளிமா மலைகள் கலைஞான வேலை நிலவப் பதிபோ
ந்தார்.

(இ-ள்.) குளிர்ச்சிமிக்க அருவிநீர்பொழியும் தென்கைலை என்னும் திருக்காளத்திநாதருக்கு, "இல்லம்" என்னும் முதலையுடைய திருப்பாடலைத் திருவாய்மலர்ந்தருளி, பரஞ்சோதியாகிய அத் திருக்காளத்திநாதர் சந்நிதிக்கெதிரில் விடை பெற்றுச்சென்று திருவொற்றியூரென்னும் தலத்தைச் சேர்வதற்கு நிச்சயித்தவராகி, இடையிலேயுள்ள மேன்மையமைந்த திருவாலயங்கள் பலவற்றையும் துதித்துக் குளிர்ச்சியுள்ள தாமரைமலர்களாகிய காட்டினோடு மாடங்களாகிய சிறப்புற்ற வெள்ளிமலைகளும் கலைஞானமென்னும் கடலும் விளங்குகின்ற அத்தலத்திற் சென்றார்.—எ-று.

இல்லம் என்னும் முதலையுடைய பாடலாவது—"இல்லந்துறந்து பசி வந்த போதங் கிரந்துநின்று - பல்லுங் கறையற்று வெள்வாயு மாயொன்றிற் பற்றுமின்றிச் - சொல்லும் பொருளு மிழந்து சுகானந்தத் துகைகத்திலே - யல்லும் பகலு மிருத்திடு தென்கயி லாயத்தனே" என்பதே என்றும், இப் பாடல் அதற்குக் கூறியதன்று கைலாயத்திற்கே கூறியதென வுரைத்து, ஈற்றடியை "அல்லும்பகலு மிருப்பதென் றோகயி லாயத்தனே." என மாற்றியும் கூறுவதுண்டு. ஆயினும் திருக்காளத்திக்கு, 'பத்தும புகுந்து பிறந்து வளர்ந்து பட்டாடை சுற்றி - முத்தும் பவளமும் பூண்டோடி யாடி முடிந்தபின்பு - செத்துக்கிடக்கும் பிணத்தருகே யினிச் சாம்பிணங்கள் - கததுங் கணக்கென்ன காண் கயிலாபுரிக்காளத்தியே." என்றும், "பொன்னுற் பிரயோசனம் பொன்படைத்தாற்குண்டு பொன்படைத்தோன் - றன்னுற் பிரயோசனம் பொன்னுக்கங்கே துண்டத் தன்மையைப்போ - லுன்னுற் பிரயோசனம் வேணதெல் லாமுண்டுனைப்பணியு-மென்னுற்பிரயோசனமேதுண்டு காளத்தியீச்சுரனே." என்றும் இவைபோன்ற சிற்சில பாக்கள் திருவாய்மலர்ந்தனரென்று வழங்குகின்றார். காளத்தியினின்றும் மீண்ட திருவெண்காட்டடிகள் இடையிலுள்ள தலங்களைத்தரிசித்துக்கொண்டு திருவொற்றியூரையடைந்து, அங்குள்ள தாமரைகளென்

னும் காடுகளையும் மாடங்களென்னும் வெள்ளிமலைகளையும் கலைஞானமென்னும் கடலையும் கண்டனரென்றபடி. வெள்ளி எனற்பாலது எதுகை நோக்கி வெளி யென நின்றது.

அடியார் திரளவ் வயினோக்கி யடிக ளடித்தா மரைபோற்றி
விடியா விருளை விடிவிக்கும் வீதி மதிற்கோ புரம்பணிந்து
பொடியா டியவொண் டிருமேனிப் புனித னுதைப் புகழ்பாடி
நடியா நிற்கு நாதாந்த ஞானப் பொருளை நணுகினரால்.

(இ-ள்.) திருவெண்காட்டடிகள் அத்தலத்தின்கணுள்ள அடியார் கூட்டத்தைத் தரிசித்துத் தியாகேசப் பெருமானுடைய திருவடித்தாமரைகளைத் துதித்து, ஒழியாத இருளாகிய அஞ்ஞான இருளை ஒழிப்பிக்கும் மாடவீதிகளையும் திருமதில்களையும் கோபுரத்தையும் வணங்கி, திருவெண்ணீறு பூசியிருக்கும் வெள்ளிய திருமேனியையுடைய தியாகேசப்பெருமானது மேம்பாடுற்ற கீர்த்தியைத் துதித்து, நடனமாடுகின்ற நாதாந்தத்தில் விளங்கும் மெய்ஞ்ஞானப் பொருளாகிய தியாகேசப்பெருமான் திருமுன் வந்தனர்.—எ-று

அத்தலத்தின்கணுள்ள மாடவீதியையும் மதிலையும் கோபுரத்தையும் தரிசித்தோர்க்கு உடனே அஞ்ஞானம் நிவர்த்தியாதலாலும், அவைகளின் விளக்கம் இரவென்பதில்லாது பிரகாசிக்கின்றதாலும், "விடியா விருளை விடிவிக்கும் வீதி மதிற்கோபுரம்." என்றும், சிவபெருமான் திருமேனி முழுவதும் திருவெண்ணீறணிந்து மிளிர்வதால், "பொடியாடிய வொண்டிருமேனி". என்றும், தத்துவங்களெவற்றினும் மேம்பட்ட நாததத்துவத்தையுங் கடந்துநின்று ஞானானந்தத்தாண்டவம் புரிபவராகலின், "நடியா நிற்கு நாதாந்த ஞானப்பொருள்" என்றும் கூறினர். அத்தலத்தின்கணுள்ள வீதிமதில் கோபுரம் என்னுமிவைகளே அஞ்ஞானத்தைப் போக்குதற்குரியன வென்பதை, "வாவியெலாந் தீர்த்த மணலெல்லாம் வெண்ணீறு-காவணங்களெல்லாங் கணநாதர் - பூவுலகில் - லீது சிவலோக மென்றென்றே மெய்த்தவத்தோ - ரோதுந் திருவொற்றி யூர்." என்னும் திருவெண்காட்டடிகள் திருவாக்கானும், திருமேனி முழுவதும் திருவெண்ணீறணிந்துள்ளார் சிவபிரானென்பதை, "மெய்யெலாம் வெண்ணீறு சண்ணித்த மேனியான்றாடொழாதே - யுய்யலாமென்றெண்ணி யுறிதூக்கி யுழிதந்தென் னுள்ளம் விட்டுக் — கொய்யுலா மலர்ச்சோலைக் குயில்கூவ மயிலாலுமாரூரரைக்-கையினாற் றொழாதொழிந்து கனியிருக்கக் காய்கவர்ந்த கள்வனேனே." என்னும் ஆளுடைய வாசுகளி னருள்வாக்கானும், நாததத்துவத்தையுங் கடந்து நின்று ஞானானந்தத் தாண்டவம் புரிபவரென்பதை, "அண்டமுமாய்ப் பிண்டமுமா யளவி லாத வாருயிருக் கோருயிரா யமர்ந்தா யாகிற் - கண்டவரார் கேட்டவரா ருன்னை யுன்னைக் காண்புதலா லென்னறிவாற் காணப்போமோ - வண்ளப மணிமார்பன் புதல்வனோடு மனைவியொடுங் குடியிருந்து வணங்கிப்போற்

றும் - புண்டரிக புரத்தினறு தாந்த மோன போதாந்த நடம்புரியும் புனித வாழ்வே." என்னும் தாயுமானவர் திருவாக்காறு மூணர்க. (கஉ0)

குருவாய் வந்தென் குறைதீர்த்த குன்றே குன்றக் கொழுமணியே, பெருவாழ் வாகி யெனைக்கலந்து பிரியா திருக்கும் பெருந்தேனே, யுருவா யருவா யுருவருவா யுரையா டியமூன் றையுமொருவி, வருவாய் தருவா யென்னுயிர்வாய் மருவாய் மருவாய் மருவாயே.

(இ - ள்.) ஆசிரியராகி எழுந்தருளி அடியேனுடைய குறைபாடுகளை யொழித்தருளிய அருண்மலையே! திருக்கைலை என்னும் வரையின்கண் விளங்கும் கொழுவிய மாணிக்கமே! அழியாத வாழ்வாகி அடியேனுடன்கூடி நீங்காதிருக்கும் பெருமையமைந்த தேனே! உருவமாகவும் அருவமாகவும் உருவருவமாகவும் விளங்கி, இங்குக்கூறிய இம்மூன்றையும் நீங்கியும் வருபவரே! அடியேனுடைய உயிரினிடத்துக் கற்பகதருவைப் போன்றும் மணம் வாய்ந்த மருவைப் போன்றும் கலப்பீராக.—எ-று.

பெருமானதாற்றலையும் பெருமிதத்தையும் அளந்தறிதற்கேலாவாகலின் மானிடர்க்குரிய அருமையான பொருள்களையே அவருக்குவமித்தல் முறைமையாகலின், மாணிக்கம் என்றும் தேனே என்றும் துதித்ததுடன், அவரது திருவருளை மலையெனவும் துதித்தனர். உருவம் அருவம் உருவாருவம் என்னும் முப்பாற்கும் அப்பாற்பட்டவராகலின், "உருவாயருவா யுருவருவா யுரையாடிய மூன்றையுமொருவிவருவாய்." என்றும, முன்பு மருதவாணரென்னும் திருநாமத்துடன் என்னுடன்கூடிக் கலந்து பிரியாதிருந்தீரேனும், இப்போது அவ்வாறின்றி அடியேன் வேண்டியவற்றை யுண்ணின்று பாலிக்கும் தருவைப்போன்றும் மருவும் அதன் மணமும் எவ்வாறு வேறுபடாதோ அதுபோன்றும் தேவரீர் வேறு அடியேனுயிர் வேறு என்றதபடி உரிர்க்குள்ளுயிரா யமர்ந்தருளவேண்டுமென்பார், "தருவாயென் னுயிர்வாப் மருவாய் மருவாய் மருவாய்." என்றும் கூறினர். ஆயின், உயிர்க்குயிராய் விளங்குதல் போன்றிராது விளக்கமாகிவிளங்கும்படி பாலிககவேண்டுமெனப் பிரார்த்திததபடி. மருவாய் மருவாய் மருவாய் என்பதற்கு மருவுவீராக மருவுவீராக மருவுவீராக எனமுக்காற் கூறினரென்றுரைக்கினுமாம். அககால் முக்காற்கு மேற்கூற விதியின்மையின் அவ்வளவினிறுத்தினறெனக் கொள்ளல்வேண்டும். (கஉக)

போற்றி போற்றி நாயேனைப் பொருளாய்க் கொண்ட வருள் போற்றி, யாற்றின வலிகூர் முகங்கோடி யடக்குஞ் சடையா யடி போற்றி, தேற்றி யினியா யினுமுனைப்போற் செய்வாய் மெய்வா யருள்போற்றி, நீற்றி னுள்ளே பவளவொளி நிகழுந்திகழ்வே யருள் போற்றி.

(இ-ள்.) நாய்போன்ற அடியேனையும் ஓர்பொருளாய்த் திருவுளங்கொண்டு அடிமை கொண்ட தேவரீர் திருவருள் துதிக்கப்படுவது துதிக்கப்படுவது துதிக்கப்படுவது. கங்கையாற்றினுடைய வல்லபமிக்க கோடிமுகங்களையும் அடக்கிய சடைமுடியை யுடையவரே! தேவரீர் திருவடி துதிக்கப்படுவது இனியேனும் அடியேனைத் தெளிவுறுத்தித் தேவரீரைப் பேற்செய்வீராக. உண்மை நிலையாகிய தேவரீர் திருவருள் துதிக்கப்படுவது. திருவெண்ணீற்றினுள்ளே பவளம்போன்ற செவ்வொளிவிளங்கும் விளக்கமே! தேவரீர் திருவருள் துதிக்கப்படுவது.—எ-று.

அடிமை கொள்ளுதற்குரிய இலக்கணமமையாமல் நாயினுங் கீழ்ப்பட்டிருக்கும் எனையும் ஆண்டருளிற்றாகலின் தேவரீர் திருவருள் துதிக்கப்படுவது என்பார், "போற்றி போற்றி நாயேனைப் பொருளாய்க் கொண்ட வருள்போற்றி." என்றும், உலகெங்கும் பலமுகங்களாகப் பரவிய கங்கையைத் துளியாகச் சுருக்கிச் சடையிலடக்கினராகலின், "ஆற்றின் வலிகூர் முகங்கோடி யடக்குஞ் சடையாய்." என்றும், இன்றுவரையிற் பிறப்பிறப்பிற் சுழலுமாறுவிட்டிருந்தது போன்றிராமல் சிவசாரூபமடையச் செய்வீரென்பார், "தேற்றி யினியாயினு முனைப்போற் செய்வாய்." என்றும், சிவபெருமான் தமது பவளம்போன்ற நிறமுள்ள திருமேனியின்மீது திருவெண்ணீறணிந்திருத்தலின், "நீற்றினுள்ளே பவளவொளி நிகழுந்திகழ்வே." என்றும் கூறினர். அடிமைகொள்ளுதற்குரிய அடியார்க்கமையவேண்டிய இலக்கணங்கள் - பொதுவிலக்கணம் - சிறப்பிலக்கணம் என இருவகைப்படும். அவ்விரண்டுள் பொது விலக்கணமாவன - கொல்லாமை புலாலுண்ணாமை கள்ளாமை கள்ளுண்ணாமை பிறர்மனைநயவாமை வனைவின்மகளிர்நயவாமை இரக்கம் வாய்மை பொறை அடக்கம் கொடை தாய்தந்தை முதலிய பெரியோரை வழிபடுதல் என்னும் இவைமுதலியவாம். இவையே பொது விலக்கண மென்பதை, "கொல்லாமற் கொன்றதைத் தின்னாமற் குத்திரங் கோள்களவு-கல்லாமற் கைதவரோடிணங் காமற் கனவினும்பொய்-சொல்லாமற் சொற்களைக் கேளாமற் றோகையர் மாயையிலே - செல்லாமற் செல்வந்தருவாய் சிதம்பர தேசிகனே."என்னும் திருவெண்காட்டடிகள் திருவாக்கானுமறிக. சிறப்பிலக்கணம்-புறத்திலக்கணம் உடலிலக்கணம் அகத்திலக்கணம் எனமூவகைப்படும். அவற்றுள், புறத்திலக்கணம் பத்து உடலிலக்கணம் பத்து அகத்திலக்கணம் மூன்று. ஆகக்கூடிய இலக்கணங்கள் இருபத்துமூன்றும். இவற்றை, "செய்ய மேனிச் சிவனடி யார்க்கய-லெய்தக் காணு மிலக்கணம் பத்துள-மெய்யிலெய்து மிலக்கண மெய்ம்மைசா-லையி ரண்டகத் துள்ளனமூன்றரோ." எனவும், "அலக்க ணீக்கு மரனடி யார்க்கென - விலக்கணங்க ளிருபத்து மூன்றுள பலப்படுத்து முதற்படு பத்தையும் - புலப்படுத்தி நுமக்குப் புகலுவாம்," எனவும், புறத்திலக்கணங்கள் - திருவெண்ணீறு உருத்திராக்கம் என்னும் இவைகளைத் தரித்தல் – குருவைவழிபடல் - சிவபிரானைத் துதித்தல் - சிவநாமங்களை உச்சரித்தல் - சிவபிரானைப் பூசித்தல் - சிவதருமங்களைப் புரிதல் - சிவபுராணங்களைச் சிரவணித்தல் - சிவாலயங்களைத் தரிசித்தல் - சிவனடியாரிடத்தன்றிய்

புசியாமை - சிவனடியார்க்கீதல் என்பவைகளே. இதனை, வாசப்பூதி யுருத்திர மாமணி — பூசிப் பூணல் குரவரைப் பூசித்த - லாசைப் பாட்டி னரனைப் புகழுத லீசர்க் குள்ளன நாம மியம்புதல்." எனவும், "எந்தையீச னருச்சனையோம்புத-றந்தி ரச்சிவ தன்மம் புரிகுதன் - முந்தை யோன்கதை கேட்டன் முறைமை யாற் - புந்தி கூர்ந்தா னாலயம் போற்றுதல்." எனவும், "ஒத்த பத்த ரிடத்தல தோரிடந் — துய்த்த னித்தலத் தொண்டரிற் றொண்டராய்ச் - சித்த மன்புற வீதன்முன் செப்பிய - பத்து மீங்கிவை காணப் படுதிரால்." எனவும், உடலிலக்கணங்கள் - சிவபெருமான் புகழைப் பேசுந்தோறும் சிந்திக்குந் தோறும் கண்டம் விம்முதல் - நாத்துடித்தல் - சரீரம் நடுங்குதல் - உரோமஞ் சிலிர்த்தல் குறுவேர்வுறுதல் - காத்தழுதழுத்தல் - ஆனந்தக்கண்ணீர் சொரிதல் - வாய்விட்டழுதல் - பரவசமாய்த்தன்னை அயர்த்தல் என்னும் இவைகளாம். இதனை, "தொண்டர் மெய்யிற்றுலங்கு மிலக்கண-முண்டொர் பத்தென் றுரைத்த துரைக்குதுங் - குண்டை யூர்தி சிவத்தியல் கூறுங்காற் - கண்டமுற்றொரு விம்மிதங் காட்டுதல்." எனவும், "எத்து மெந்தை யியற்கை யுணர்தொறு - நாத்து டித்தெழும் பாமை நகைப்புறம் - பூத்த முத்தந் துடித்தல்வி பூதிகொண் - டார்த்தணிந் ததன் னங்கங் குலுங்குதல்." எனவும், "மயிர்ப்பு றம்புள கித்தல் வான்முறை-வியர்த்த றன்வச மன்றி விளம்புநாப் - பெயர்த்தி டாமைபா னந்தப் பெருங்கணீ-ரயற்ப டுத்துதல் வாய்விட் டழுதலே." எனவும், "பரவ சத்தின னாகிப் படர்சடை - யானுளப்படத் தன்னை யயர்க்குதல் - விரவு பத்தும் விடுத்துரைத் தோமிவை - வரமு னித்தலை வீர்மனக் கொள்விரால்." எனவும், அகத்திலக்கணங்கள் - திருவைந்தெழுத்தை மானதமாகச் செபித்தல் - மானதபூசை-சிவபிரானைத் தன்னுடன் பிரிவறக்காண்டல், என்னுமிவைகளாம். இதனை, "உளத் திலக்கண மூன்றென் றுரைத்தன-மளக்கி னஞ்செழுத் துன்ன லகப்பட-வளர்க்கு மானத பூசனை மைக்கடுக்-களத்த னைத்தனை யொன்றெனக் காண்குதல்." எனவும் வரும் உபதேசகாண்டத் திருவிருத்தங்களானுந் தெளிக. கங்கை பல முகங்களாகப் பரவிவந்ததென்பதையும் அதைச் சிவபிரான் திருமுடியிலடக்கினரென்பதையும், "ஆயிர நூறுகோடி யணிமுகம் படைத்தியாண்டும் — பாயிரு ணீத்தமாகிப் பரவலு மதுகண்டஞ்சி-மாயனு மயனும் வானோர் மன்னனும் பிறரும்போற்றி - மீயுயர் கயிலை நண்ணி விமலனை யடைந்து தாழ்ந்தார்." எனவும், "என்றலு நதிக டோற்ற மியம்பியெவ் வுலகுஞ் சூழ்போய் - நின்றவந் நீத்தந் தன்னை நினைத்தவ னழைத்துநாத-னென் றுதன் வேணி மேலொருரோமத்தினும்ப ருய்ப்ப - மன்றலங் கமலத் தோனு மாலுமிந் திரனுஞ் சொல்வார்." எனவும் வரும் கந்தபுராணத் திருவிருத்தங்களானும், சிவபிரான திருமேனி பவள நிறமுடைத்தென்பதை, வனபவள வாய்திறந்து வானவர்க்குந் தானவனே யென்கின்றாளாற் - சினபவளத் திண்டோண்மேற் சேர்ந்திலங்கு வெண்ணீற்றனென்கின்றா-ளனபவள மேகலையோடப்பாலைக் கப்பாலானென்கின்றாளாற் கனபவளஞ் சிந்துங் கழிப்பாலைச் சேர்வானைக் கண்டாள் கொல்லோ." என்னும் ஆளுடைய வரசுகளி னருள்வாக்கானு முணர்க. போற்றி போற்றப்படுவது. அல்லது வாழிய என்பது வாழியென நின்றாற்போல, போற்றிய

போற்றிய என்னும், வியங்கோள்வினைமுற்று ஈறுகெட்டுப் போற்றி என நின்றது எனினுமாம். போற்றிய எனவருவதை, "எந்தாய் போற்றி யெமைப்புரக்கு மிறைவா போற்றி யெவ்வுலகுந் - தந்தாய் போற்றி யென்பசைக்குந் தாராய் போற்றி தமியனெதிர் - வந்தாய் போற்றி யுயிர்க்குயிராய் வருவாய்போற்றி தொண்டருளச் - சிந்தா குலந்தீர்த் தருள்புரியுஞ் சிவனே போற்றி போற்றியவே." என்னும் உபதேச காண்டத் திருவிருத்தத்தானுந் தெளிக. (௧௨௨)

என்றென் றருளின் றிறம்போற்றி யெல்லா வுள்ளங் கனிந்திளைப்ப
மன்றுளாடி யெமக்கருளு மணிமா ணிக்கப் பதம்பணிந்து
நின்று போந்து வலஞ்சூழ்ந்து நிகழ்ந்து மகிழ்ந்தங் கிருக்கின்றார்
தென்றல் வந்து சுந்தரரைத் திருவா ரூருக் கழைத்தவூர்.

(இ-ள்.) இவ்வண்ணம் பற்பலவிதங்களாகத் திருவருளின்றன்மையைத் துதித்துத் திருவுள்ளமுழுவது முருகிச் சோர்வடைய, அம்பலத்திற் றாண்டவம் புரிந்து எங்கட்குத் திருவருள்பாலிக்கின்ற மாணிக்கமென்னும் மணிபோன்ற தியாகேசப் பெருமானுடைய திருவடிகளை வணங்கி, திருமுன் வெகுநேரம்நின்றுகொண்டிருந்து அங்கு நின்றும் மீண்டு திருவாலயத்தை மும்முறை வலம்வந்து விளக்கமுற்றுக் களிப்படைந்து, தென்றற்காற்று வந்து சுந்தரமூர்த்தி சுவாமிகளைத் திருவாரூருக்கு அழைத்த ஊராகிய அத்திருவொற்றியூரில் வீற்றிருக்கின்றனர்,—எ-று.

தியாகேசப் பெருமான் திருநடனமாடுதலாலும், தம்மிடத்துவந்த புலவரிருவருக்கும் மாணிக்கம் பரிசாக அளித்தமையாலும், இவையிரண்டையும் விளக்குவான், "மன்றுளாடி யெமக்கருளு மணிமாணிக்கம்," என்றும், சுந்தரமூர்த்திசுவாமிகள் திருவொற்றியூரில் வீற்றிருந்தருளுங்கால் தென்றற்காற்று வீசத்தக்க வசந்த காலம் வந்தமையின் சுந்தரமூர்த்தி சுவாமிகட்குத் திருவாரூர் வீதிவிடங்கப் பெருமானுடைய உற்சவம் ஞாபகத்திற்குவர உடனேதிருவாரூர்க்குச் சென்றனராகலின், "தென்றல்வந்து சுந்தரரைத் திருவாரூருக் கழைத்தவூர்," என்றுங்கூறினர். தியாகேசப்பெருமான் தம்மிடத்துவந்த புலவரிருவர்க்குமாணிக்கமணி யீந்தன ரென்பதை, "அரசனுக் கென்றுவைத்த வாதன மொன்றுங்கொண்டே - பரமர்முன் வைத்த லோடுங் கவிஞரு மதனைப்பார்த்தார் - திரமுறவிஃதேவேண்டு மெமக்கெனச் செப்புங்காலை – வரமுட னனையார்கையில்வள்ளலீந் தேமறைந்தான்." என்னும் திருவொற்றியூர்ப் புராணத் திருவிருத்தத்தானும், தென்றல் வந்து சுந்தரரைத் திருவாரூருக் கழைத்ததென்றதை, "பொங்கு தமிழ்ப் பொதியமலைப் பிறந்துபூஞ் சந்தனத்தின் - கொங்கணைந்து குளிர்சாரலிடைவளர்ந்த கொழுந்தென்றல் - லங்கணையத் திருவாரூ ரணிவீதி யழகரவர் - மங்கலநாள் வசந்தமெதிர் கொண்டருளும் வகைநினைந்தார்." என்னும் அருண்மொழித் தேவாமுதவாக்கானு மறிக, (௧௨௩)

றுலயனு லியற்றாத மணிச்சங் கிலிக்குத் தூதுபோய்
பனு மிருகா ணடந்தார்க்கு விருந்தாய் வந்த வெண்காடர்
றுணியகட் கணிகையற்காற் கமலச் சிலம்பி ளுலிமலியும்
பனு ரொற்றி யூர்பற்றிப் பதிகொண் டிருந்தார் படிபோற்ற.

(இ-ள்.) தேவதச்சனாலும் பிரமனாலும் சிருட்டிக்கப்படாத அழகமைந்தசங் கிலிநாச்சியாருக்காகத் தூதுசென்று, அற்புதமாகிய இரண்டு முறை நடந்தவரா மாணிக்கத் தியாகேசருக்குப் புதிய அடியாராய்வந்த திருவெண்காட்டடிகள், பல்மீன்கள் வெட்கமடைந்த கண்களைப்படைத்த கணிகையர்களின் பாதங்க ளாகிய தாமரையிலணிந்துள்ள சிலம்பின் சத்தம் விசேடிக்கின்றதும் மூத்திப் யளைப் பாலிக்குந் தன்மையுடையதுமாகிய திருவொற்றியூரைத் தமக்கிருப்பிட ரகக் கடைப்பிடித்து உலகத்தார் துதிக்கும்படி வீற்றிருந்தனர்.—எ-று

சிவபிரான் சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்காகத் திருவாரூர்ப் பரவை நாச்சி யாரிடத்தும் திருவொற்றியூர்ச் சங்கிலிநாச்சியாரிடத்தும் இருமுறை தூது நடந் தாராகலின், "தூதுபோய்வியனு மிருகானடந்தார்க்கு" என்றனர். இதனை 'தண்மல ரும்பொழிற் றென்கமலே சர்க்குச் சாத்துகின்ற வொண்மலர் சொ ன்மலர்க் கொவ்வாது போஜீமற் றோர்புலவன் - பண்மலர் சாத்திப் பணிகொ ண்— வர்பச்சை மால்சிவந்த-கண்மலர் சாத்தியுங் காண்பரிதான கழன்மலரே." என்னும் குமரகுருபர சுவாமிகள் திருவாக்கானும், "படியிலா நின்பாட்டி லாரூர னிவிருப்பன் பரமனென்ப - தடியனே னறிந்தனன்வான் றொழுமீசனினைத் தடுத்தாட் கொண்டு மன்றித் - தொடியுலா மென்கைமட மாதர்பா னினக்காகத் தூதுசென்று - மிடியிலா மனைதொறு மிரந்திட்டு முழன்றமையால் விளங்கு மாறே." என்னும் சிவப்பிரகாச சுவாமிகள் திருவாக்கானுந்தெளிக. இருகாற் றூது சென்றமை, சங்கிலி நாச்சியார்க்காகவே கொள்ளினுமாம். (௧௨௪)

வேறு.

இருநில மடந்தை பெண்ண வெந்த்ரவா சிரியச் செய்யு
ளொருபது மொன்று மொற்றி யூர்த்தொகை யெனப்பே ரிட்டுத்
திருவிசைப் பாவாப் பாடித் தெளியொளி யுளம்வி ளங்கப்
பெருநிலை யுடையா ரின்பப் பேறெலாம் பெற்று ளாரே.

(இ-ள்.) "இருநிலமடந்தை." என்று முதல் தொங்கிய ஆசிரியப்பாக்கள் பதினொன்றையும் திருவொற்றியூர்த்தொகை என்னும் திருநாமம் சூட்டித் திரு விசைப்பாவாகப் பாடியருளி, தெளிவோடு கூடிய ஒளிமயமான அறிவுவிளக்க மடையும்படி ஞானநிலைமையுடையவராகிய அத்திருவெண்காட்டடிகள் பேரின் பப் பேறுகளெவற்றையும் பெற்றுக்கொண்டனர்.—எ-று.

இத்திருவிசைப்பாவை ஒற்றியூர்த்தொகை என்றும் ஒருபா ஒருபஃதென் றுங் கூறுவர். இத்திருவிசைப்பாவினுள், முதலாசிரியப்பாவிலே சிவபெருமா

னுடைய நிஷ்களசொரூபத்தையும், இரண்டாவது ஆசிரியப்பாவிலே சகள சொரூபத்தையும், மூன்றாவது ஆசிரியப்பாவிலே, அப்பெருமானுடைய வீரட்டங்களையும் அவரின் வேறன்மையின் அவற்றால் அவர்க்கோர்புகழ்ச்சியின்றென்பதையும், நான்காவது ஆசிரியப்பாவிலே, அப்பெருமானிடத்தே பிரமன் முதற் பிபீலிகைவரையிலுள்ள சர்வான்மாக்களும் தோற்றமும் ஒடுக்கமுமுறுதலின் அவ்வாறான தோற்றம் ஒடுக்கம் என்னும் இரண்டினிலைமையும் தேவரீர் திருவருள் பெற்றோரே யுணர்வரென்பதையும் ஐந்தாவது, ஆசிரியப்பாவிலே, அப்பெருமான் அன்பர்கட்கணிமையாயிருத்தலும் வன்பர்கட்குச் சேய்மையாயிருத்தலும் உணர்ந்தவர்கட்கே இவ்வுடலி லபிமானம் விடுமென்பதையும், ஆறாவது ஆசிரியப்பாவிலே, அப்பெருமானுடைய திருக்கோல மொவ்வொன்றும் அவரே இறைவரென்றுணர்த்து மென்பதையும், ஏழாவது ஆசிரியப்பாவிலே அப்பெருமான் அணுவுக்கணுவாயும் மகத்துக்கு மகத்தாயும் விளங்கலின் அவரது பெருமை கூறுவோர் மாட்டாமையாற் சுருங்கினல்லது வேறு வகையாற் சுருங்காவென்பதையும், எட்டாவது ஆசிரியப்பாவிலே, சரீரமென்னும்கடலில்வீழ்ந்து கரைகாணாதுழலுவோர் அப்பெருமானுடைய திருவடி யென்னும் புணையைப் பற்றின் முத்திக்கரையை யடைவரென்பதையும், ஒன்பதாவது ஆசிரியப்பாவிலே, அப்பெருமானே திருவருள் சுரந்து ஆன்மாக்களின் பந்தபாசங்களைக் களையினல்லது வேறுவகையாற் பந்த பாசங்கணீங்காவாகலின் சுவையொளியூறோசை நாற்றமென்னும் ஐந்தினையும் அப்பெருமான் திருவடிக்கே யற்பித மாக்கினேனென்பதையும், பத்தாவது ஆசிரியப்பாவிலே, அப்பெருமானைத் துதித்தலிவ்விதமென்பதையும் விளக்கியருளினர். இவ்வாசிரியப்பாக்கள் பதினொன்றென இந்நூலாசிரியர் கூறியிருப்பினும் இப்போது வழங்குவன இப்பத்தேயாம். இவ்வாறடைவுபட இத்திருவொற்றியூர்த் தொகையைத் திருவெண்காட்டடிகள் திருவாய் மலர்ந்தவளவில் அவருக்குப் பேரின்ப நிலைமை யெய்திற்றென்பார், "தெளியொளியுளம் விளங்கப் பெருநிலை யுடையாரின்பப் பேறெலாம் பெற்றுளார்" எனக்கூறினர். இவ்வொற்றியூர்த் தொகைக்கு ஒருபா ஒருபஃதென்னும் பெயரும் வழங்கிவந்திருத்தலின், இந்நூலாசிரியர் காலத்தும் பதினொன்றாகவே யிருந்தமைகொண்டு, "ஒருபது மொன்று மொற்றியூர்த்தொகை." எனக் கூறியிருத்தல் வேண்டுமென்றும், அவர் காலத்திற்குப்பிறகு ஓராசியப்பா மறைந்து விட்டதென்றும் கூறுவாருமுளர்.

பெற்றவர் திருநீ றூடித் திருநீற்றின் பெற்றி முற்றுங்
கற்றவர் புரங்கண் மூன்றுங் கற்றவர் கருத்துட் கொண்டு
செற்றவ ரடிகள் பாடித் தினந்தொறு நியம மாற்ற
லுற்றன ருற்ற வாற்றி னுண்மையிங் கியம்ப லுற்றேன்.

(இ-ள்.) இப்படி பேரின்ப நிலைமையெய்திய திருவெண்காட்டடிகள் திருவெண்ணீற்றை யுத்தூளனமாகத் தரித்துக்கொண்டு; திருவெண்ணீற்றின்மேன்மை யெவற்றையும் உணர்ந்தவர்களாகித் திரிபுரங்கள் மூன்றையும் மூன்றுலகங்களினும் செலுத்தத் தேர்ந்தவர்களாகிய அசுரர்களின் எண்ணத்

தைத் திருவுள்ளங்கொண்டருளி, அப்புரங்களைத் தகித்தருளிய தியாகேசப்பெரு மானுடைய திருவடிகளைத் துதித்து, நாள்தோறும் தமது நியமங்களைப் புரியத் தொடங்கினர், அவ்வாறு செய்யத்துணிந்த மார்க்கத்தின் நிச்சயத்தை இவ்விடத்திற் கூறத்தொடங்கினேன்.—எ—று.

திரிபுரங்களையுடைய அசுரர்கள் சிவபத்தியின் மேம்பாடுடையவர்களாகியும், தமதாற்றலுக்கு மேற்பட்ட தருக்குடையவர்களாகி இருந்தமை யுணர்ந்த சிவபெருமான், அவர்களுடைய தருக்கை யழிக்கத் திருவுளங்கொண்டு திருமாலை யழைத்து அவ்வசுரர்களின் சிவபத்திநிலைமையைக்கெடுக்கச் செய்த பிறகு அத்திரு புரங்களைத் தகித்தருளினராகலின், "திருநீற்றின்பெற்றி முற்றுங்கற்றவர், புரங்கண் மூன்றுங் கற்றவர் கருத்துட்கொண்டு செற்றவர்." என்றனர். இதனை, "மாயன் மாயையி னிருங்கடற் படிந்தெழா வாளெயிற் றசுரர்க்கன் - றேய கண்களுந் திண்டிறற் புயங்களு மிடந்துடித் தனவன்றோ - சேயி ழைக்குல மங்கையர் மங்கலங் கழன்றன சிறைக்கீக - மாய்கொடிஞ்சிறை பிணங்கிவீழ்ந் தெழுவன மூன்றிலங் கணமல்லாம்." எனவும், "அருப்ப வெண்ணிறத் துப்பிடைப் பெருங்கன லடுத்தென வணிமூரி-லுருத்த செந்தழற் கொழுந்துறவெண்ணிறத் தடலையி னொழிந்தற்ற-திருந்து மாணிதிச் செல்வரா யிரப்பவர்க் களித்துருத் தியோர்தம்-பெருத்த செல்வநீத் தொழிந்தென மடிந்தவப் பெருநகர்ப் புரமூன்றும்." எனவும்வரும் உபதேசகாண்டத் திருவிருத்தங்களானு முணர்க. (கஉ௬)

நம்மிடை மருத நாத னற்குரு வாகி வந்து
தம்பொரு டனக்குத் தந்த தண்ணளிப் பெருமையாலே
யம்பொனஞ் செழுத்தி னாலு மருமிய மங்கள் செய்வார்
சம்புவை யொழியாப் பூசைத் தன்மையு மவற்றாற் செய்வார்.

(இ-ள்.) நமது திருவிடை மருதநாதர் சிறந்த ஆசிரியராகத் திருவுருக்கொண்டெழுந்தருளி, தமது ஞானமாகிய உண்மைப்பொருளைத் தமக்குப் பாலித்தளித்த திருவருளின் பெருமிதத்தினால், அழகிய பொன்போன்ற சிறப்புவாய்ந்த திருவைந்தெழுத்துக்களாலும் அருமையான நியமங்களைச் செய்பவராய், சிவபிரானை இடைவிடாது பூசிக்குந் தன்மையினையும் அத்திருவைந்தெழுத்துக்களாற்றனே இயற்றுவர்.—எ-று.

சிவபெருமானே ஆசிரியராகத் திருவுருக்கொள்வதென்பது, நூற்றுணிபாகலின், நம்மிடைமருத நாதனற்குருவாகிவந்து." என்றும், சிவ பெருமானுடைய ஞானமே அழியாச் செல்வமாகலானும், அத்தகைய செல்வத்தையே ஞானோப தேசத்தால் அவர் தமக்குப் பாலித்தனராகலானும், "தம்பொருடமக்குத் தந்த." என்றும், அவரவ்வாறு புரிந்தது அவரது திருவருட்பெருமிதத்தாலே யாகலின், "தண்ணளிப் பெருமையால்." என்றும், பொன்னனது எவ்வாறு ஏனைய பொருள்களெவற்றினும் மேம்பாடுற்றதோ அது போன்று திருவைந் தெழுத்தே ஏனைய மந்திரங்க ளெவற்றினும் மேம்பா

டுற்றதாகலின், "அம்பொனஞ்செழுத்து." என்றும், அத்திருவைந்தெழுத்தாற் றானே சிவபிரானை மானதமாகப் பூசித்துவந்தாராகலின், "சம்புவை யொழியாப் பூசைத் தன்மையமவற்றாற் செய்வார்" என்றும் கூறினர். சிவபெருமானே ஆசிரியராக வடிவங்கொண்டு வந்தருளுவரென்பதை, "மறைமுடி யதனில் விள ங்கிடு மொளியே மனிதனைப் போல்வந்த தெனுமென் - சிறைதவிர்த்தாண்ட சிவப்பிரகாச தேசிகன் றன்னைமற் றவன்ற - னிறையருள் பெற்ற பழனிமா முனியை நெஞ்சினு ளிருத்தியே பணிவாம்" என்னும் சிதம்பரசுவாமிகள் திருவாக்கானும், சிவபெருமான் ஞானத்தின் புகழே அழியாச் செல்வமென்பதை, "இருள்சே ரிருவினையுஞ் சேரா விறைவன் - பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு." என்னும் திருக்குறளானும், திருவைந்தெழுத்தே ஏனைய மந்திரங்களெவற்றினும் மேம்பட்டதென்பதை, "மனிதரிலுயர்ந்தோ ராதி மறையவர் தேவர் தம்மிற் - பனிதரு திங்கள் வேணிப் பகவனே யுயர்ந்தோன் வேட் டோர்க்-கினிதருள் விரதந் தம்மு ளதிகமாமிந்து வூராம் - புனிதமந் திரங்க டம்முட் போதவைந் தெழுத்து மேலாம்." என்னும் திருவிளையாடற்புராணத் திருவிருத்தத்தானும், திருவைந்தெழுத்தச்சரிப்புடன் செய்துவந்த மானதபூசை இத்தன்மைத்தென்பதை "உள்ளம் பெருங்கோயி லூனுடம் பாலயம் - வள்ளற் பிரானார்க்கு வாய்கோபுரவாயிற்-றெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கங் - கள்ளப் புலனைந்துங்காளா மணிவிளக்கே." என்னும் திருமந்திரத்தானுந் தெளிக. (கஉஎ)

கிளர்ந்தகெற் பத்தி னுள்ளுங் கெற்பகோ ளன்[illegible]டத
கொளுங்கெற்ப நிலயத் துள்ளுங் கேவலஞ் சகலங் [illegible]
வளந்தறி சகலந் தானே யதீதம்போன் றதீத மன்றும்
வளங்களுங் கண்டு நீங்கி மண்டொளி கொண்டு நிற்பார்.

(இ-ள்.) விளக்கமுற்ற வயிற்றினிடத்தும் அவ்வயிற்றின்கணுள்ள கருப்பாசயப்பையினிடத்தும் அக்கருப்பாசயப்பைகொண்டிருக்கும் கருத்தங்கும்நிலையினிடத்தும் கேவலம் சகலமென்னும்அவத்தைகளும் விசேடப்பட, அறிவினால் அளந்தறியப்படுகின்ற சகலாவத்தையே ஏனைய அவத்தைகளெவற்றிற்கும் அதீதப்பட்டதுபோன்று விளங்கி அதீதப்படாததாகிய வளப்பங்களையும் நோக்கி விலகி மேம்பாடுற்ற ஞானவொளிபெற்று விளங்குவார்.—எ-று.

எனவே ஆன்மவடிவானது ஓர் மாதாவின் வயிற்றிற்செல்லும்போதும், அவ்வாறுசென்று கருப்பாசயப்பையிற் புகும்போதும், அவ்வாறு புகுந்து அங்குள்ள ஓர் பிண்டத்திற்றங்கும்போதும், கேவலம்சகலமென்னும் மறப்பு நினைப்புகள் விசேடப்பட்டுக்கொண்டே வருதலால், ஞப்தியென்னும் சகலாவத்தையாகிய நினைப்பே எவைக்கும் அதீதப்பட்டு விளங்குவது போன்று தோற்றும் தோற்றம் முதலாகிய விளைவுகளெவற்றையும் தான் சாட்சியாக நின்று நோக்கி, அச்சகல கேவலங்கள் எஞ்ஞான்றும் தாக்காத ஞானவொளியுடையராய் விளங்கி

னர் என்பதாம். மறப்பு நினைப்பென்னும் இரண்டும் மாறிமாறி வருவனவாக லின் இவ்விரண்டுங் கடந்த நனவிற் சுழுத்தி நிலையே அப்பொருளை யுணரும் மெய்ஞ்ஞானவொளியா மென்றுணர்ந்து விளங்கினரென்பார், "அளந்தறி சகலந்தானே யதீதம்போன் றநீ்க்கமன்றும் - வளங்களுங் கண்டுநீங்கி மண்டொளி கொண்டு நிற்பார்." என்றனர். மேற்கூறிய நிலையே உண்மைநிலையென்பதை 'கேவலத்துங் காணக்கிடையான் கிளர்ந்தெழுந்த-வாவல் சகலத்துமணுகான்' என்னும் சித்தாந்த தரிசனத்திருக்குறளானும்," "கேவல சகல மென்னக்கிளைத்தெழு மாயைதன்னைக் - கேவல ஞானத்தாலே கிழித்தறி வாகிநிற்பாய் - மூவலம் புரிந்தமாந்தர்புண்ணிய தீர்த்தமாதி - யாவலாய்த் தானமாதி யாகமாதிய விதாமால்" எனவும், "நினைவழிப்பி னதன்பின்னே நினையாமை யெழுமத்தை-நினைவறியா வறிவுருநா மென்றவற்றி னயனிற்பாய் - மனிதாறி யாவிந்தமாருத சுகோதயத்தைத் – தனியிருந்து காண்டியாற் சகங்கடந்த தவத்தோயே." எனவும் வரும் சுருதிசார விளக்கத் திருவிருத்தங்களானும்" "வினவிற் பாத்தையறிவுறுதற் கவத்தைபுலன் வினைமாறியே - நனவிற் சுழுத்திநிலை வரினப்பொருட்டிகழு நலனுகவே." என்னும் சசிவர்னபோதத் திருவிருத்தத்தானுந்தெளிக. ()

**அவத்தைக டணந்த வன்றி யையனுக் காக்கை யாக்கிச்**
**சிவத்தொழி லொவ்வெ ழுத்தாற் சிவலிங்க வடிவ மாகிப்**
**பவப்பெரும் பிணித ணிப்பார் பரவுயிர் தமக்கு ளாக்கி**
**யவர்க்குள வுடலந் தாமே யாயின ரொற்றி யூரர்.**

(இ-ள்.) அவத்தைகள் எவற்றையும் நீங்கினதேயல்லாமல் தமது திருமேனியையும் சிவபிரானுக்கர்ப்பித்து, சிவத்தின் கிரியைக்கிடமாகிய ஓங்காரத்தாற் சிவலிங்க சொரூபமாகி, பிறவியென்னும் மகத்தாகிய நோயை நிவாரணிப்பவராகிய திருவெண்காட்டடிகளின் ஆன்மாவை, திருவொற்றியூர்த்தியாகேசப் பெருமான் தமக்குள்ளேயிருத்திக்கொண்டு, அத்திருவெண்காட்டடிகட்குவேண்டிய சரீரம் தாமாகவே விளங்கினார்.—எ-று.

தத்துவங்களெவற்றையும் தனித்தனி நீக்கிச் சாட்சிமாத்திரமான ஞானவொளியாய் நின்ற தமது திருமேனியையும் தியாகேசப்பெருமானுக் கர்ப்பித்து ஓங்காரமாகிய பிரணவத்தினாலே சிவலிங்கவுருவுற்றுவிளங்கிய திருவெண்காட்டடிகளான்மாவைத் திருவொற்றியூர்த் தியாகேசப்பெருமான் தமக்குள் அடங்கும்படி செய்துகொண்டு, அவ்வான்மாவுக்குரிய சரீரமும் தாமாகவே தோன்றினர் என்பது கருத்து எனவே, தத்துவங்களை நியதிகளைந்தபோது அவ்வாறு களைந்தவருடைய ஆன்மா ஒளிமயமாய் விளங்குமென்பதும், அவ்வாறு சிவலிங்கவுருவானபோது அவ்விலிங்கம் பரார்த்தலிங்கத்தில் ஒடுங்குவதும், அவ்வாறொடுங்கியபோது அப்பரார்த்தலிங்கமே அவ்வான்ம லிங்கத்திற்குத் திருமேனியாவதும் முறைமையென்பதை விளக்கியபடி. என்னை, முத்தியடையுங்கால் சரீரம் அடைகின்ற சித்திகள் மூவகையாம். அவை - உருவச்சித்தி அருவச்சித்தி உருவருவச்சித்தி என்பவைகளே. இவற்றுள், ஆளுடைய நம்பிகளும் கழறிற்

றறிவார்நாயனாரும் திருமேனியுடன் திருக்கைலைக் கெழுந்தருளியது உருவச் சித்தியெனவும், ஆளுடையவடிகள் திருமேனி சிற்சபையிற் பரமாகாயமாகக் கலந்து நின்றது அருவச்சித்தியெனவும், ஆளுடைய வரசுகள் சிவலிங்கத்துட் கலந்தது உருவருவச்சித்தியெனவும் கூறுப. திருவெண்காட்டடிகளடைந்ததும் இவ்வுருவச் சித்தியேயாமென்றுணர்க. முத்தியடைவோர் திருமேனி மேற் கூறிய மூவகைச் சித்திகளடைவ தியல்பென்பதையும், இம்மூன்றனுள் ஏதே னுஞ் சித்தியடைய வேண்டுமென்பதையும், "முத்தியிலுந் தேகமிசை மூவித மாஞ் சித்திபெற்றோ - ரத்தனைபே ரென்றுரைப்ப தெந்தாய் பராபரமே." என வும், "தேகம்யா தேனுமொரு சித்திபெறச் சீவன்முத்தி - யாகுநெறி நல்லநெறி யையா பராபரமே." "எனவும், "உலகநெறி போற்சடல மோயவுயிர் முத்தி - யிலகுமெனல் பந்த வியல்பே பராபரமே." எனவும் வரும் தாயுமானசுவாமிகள் திருவாக்கானு முணர்க. (௧௨௯)

அவருயிர் தமக்கில் லாக்கி யாண்டவாண் டகையார் நிற்ப
வுவரிவாய் மணற்ப ரப்பி லொளிவெளி யிடத்திற் போந்து
கவலுறாச் சிறார்கள் சூழக் கண்டவர் தன்மை யாகிப்
பலர்விளை யாட லோடும் பாடலும பயில லுற்றார்.

(இ - ள்.) அத்திருவெண்காட்டடிகளின் ஆன்மாவைத் தமக்கு இருப்பிட மாக்கிக்கொண்டு அவரையடிமைகொண்ட தியாகேசப்பெருமான் இவ்வாறிரு க்க, திருவெண்காட்டடிகள் உடலின்கணுள்ள மணற்பரப்பிலே விளக்கமுள்ள வெளியான இடத்திற்கெழுந்தருளி, அவ்விடத்திலே கலக்கமற்ற ஆண்மகார் கள் சூழ்ந்திருப்பதை நோக்கி, தாமும் அவர்கள் தன்மையைப் பெற்றவராய் அம்மகார்கள் ஆடுகின்ற விசேடமான விளையாடல்களோடு பாடலும் பயிலத் தொடங்கினர்—எ-று.

திருவெண்காட்டடிக ளான்மாவைச் சிவலிங்கமாக்கி அச்சிவலிங்கத்துள் தியாகேசப்பெருமான் வீற்றிருத்தலின், "அவருயிர் தமக்கில்லாக்கி யாண்ட வாண்டகையார்." என்றும், திருவொற்றியூரின்கணுள்ள கடற்கரையில் வெண் மணல்களைப் பரப்பிச் சிறுபிள்ளைகள் விளையாடிக்கொண்டிருக்குமிடத்திற் றிரு வெண்காட்டடிகள் சென்று, அவர்களுடன் விளையாடவும் அவர்களைப்போற் பாடல்கள் பாடவும் தொடங்கினரென்பார், "உவரிவாய் மணற்பரப்பி லொளி வெளியிடத்திற் போந்து - கவலுறாச் சிறார்கள் சூழக் கண்டவர் தன்மையா கிப் – பலர்விளையாடலோடும் பாடலும் பயில லுற்றார்." என்றும் கூறினர். பெரியோர்கட் கியல்பாகவே பாலர் உன்மத்தர் பசாசர் என்னு மிவர்களைப் போன்றிருக்கும் தன்மையுண்டென்பது நூற்றுணிபாகலின், தாம் சென்ற ஆண்டு விளையாடிக்கொண்டிருந்த சிறுவர்களை நோக்கி அவ்வாறே தாமும் விளையாடவும்பாடவும் தொடங்கினர் என்றபடி. பெரியோர்கட் கித்தன்மையுண் டென்பதை, "அடிமுடியு நடுவு மற்ற பரவெளிமேற்கொண்டா லத்துவிதவான ந்த சித்த முண்டா மது - குடிமுழுதும் பிழைக்குமொரு குறைவு மில்லை

யெடுத்த கோலமெல்லா நன்ருகுங் குறைவுநிறை வறவே-விடியுமுத யம்போல் வருளுதயம் பெற்ற வித்தகரோ டெங்கூடி விளையாட லாகும்-படிமுழுதும் விண் முழுதுந் தந்தாலுங் களியாப் பாலருட னுன்மத்தர் பசாசர்குணம் வருமே." எனவும், "பாலரொடு பேயர்பித்தர் பான்மையென நிற்பதுவே - சிலபிகு ஞானியர்தஞ் செய்கை பராபரமே." எனவும் வரும் தாயுமானசுவாமிகள் திரு வாக்கானும் தெளிக. அம் மூன்றனுள்ளும் பாலரென நிற்பதுவே முதன்மை யென்பதுப்து அவ்வரிசையானுணர்க. (கரு௦)

குறுமகா ரணிச்கு ழாங்கள் குளிர்மணப் புளினப் பாங்க
ருறுதிமெய் தளர்ந்து பின்ன ரொன்றும்வெண் காடர் தம்மை
மறுதரம் புதைத்துந் தொக்க வலப்புறம் பரந்து நிற்பார்
மறுகுழிப் படுத்த பின்னு மன்னவர் விலகி நிற்பார்.

(இ-ள்.) சிறுமகார்களின் அழகிய கூட்டங்களோடு குளிர்ந்த மணமு டைய அம்மணற்குன்றினிடத்து, திடமான தமது திருமேனியை மறைத்து மீண்டும் வெளிவந்த திருவெண்காட்டடிகளை, மீண்டும் புதைத்தும், அதற்குச் சமீபித்த வலப்பாகத்திற் பரவி யிருப்பார், மறுகுழியிற் புதைத்தபிறகும் நிலை பெறுள்ள அத் திருவெண்காட்டடிகள் அக் குழியினின்றும் வெளிக்கொண்டு நிற்பார்.—எ-று.

இக் கடற்கரைக்கணுள்ள மணற்குன்று சிறுவர்களின் கூட்டத்தையும் குளிர்ந்த மணத்தையும் தன்னிடத்திற் கொண்டிருத்தலின், "குறுமகா ரணிக் குழாங்கள் குளிர்மணப் புளினப் பாங்கர்." என்றும், திருவெண்காட்டடிகள் முதன்முறை தாமே அம் மணற்குன்றின்கண் மறைந்து வெளிப்பட்டனர் என் பார், "உறுதி மெய்தளர்ந்து பின்னரொன்றும் வெண்காடர் தம்மை." என்றும், அதுகண்ட சிறுவர்கள் அதுபோலவே திருவெண்காட்டடிகளை மீண்டும் மீண் டும் அம் மணலிற் புதைக்குந்தோறும் முதன்முறை போன்றே வெளிப்பட்டிரு ந்தனரென்பார், "மறுதரம் புதைத்துந் தொக்க வலப்புறம் பரந்து நிற்பார் - மறுகுழிப்படுத்த பின்னு மன்னவர் விலகிநிற்பார்." என்றுங் கூறினார். எனவே அப் பிள்ளைகட்கு விளையாடல்காட்டும் நிமித்தமாகவும் பின்னர்க் கடை முறை யில் அவர்களாற்றனே தாம் சிவலிங்க வடிவெய்தத் திருவுள்ளங் கொண்ட மையானும் இவ்வாறு விளையாடத் தொடங்கினரென்பதாம். (கருக)

பன்முறை யித்தன் மைத்தாம் படிபடி மணலிற் காட்டி
முன்னிய பட்டி னத்துமுனைத்தவ வடிவந்தானே
செந்நெறி யிலிங்க மாகிச் செழுமண றனின்மு ளைத்தார்
புன்னெறிச் சிறர்க ளோடிப் புரத்துளார்க்குரைத்தா ரன்றே.

(இ-ள்.) அனந்தமுறை இவ்வண்ணம் அதிசய முண்டாகுமாறு அக் கட ற்கரையின் கணுள்ள மணற்பரப்பிலே விளையாடல்காட்டி, யாவரும் சிந்

'தித்த பட்டினத்துப்பிள்ளையாரென்னும் மேலாயதவவுருவமே செவ்விபமார்க்கத்தைப் பாலிக்கும் சிவலிங்கவுருவமாகிச் செழுவிப அக்கடற்கரைமணலிற்றோன்றினர் அத்தகைய திருவெண்காட்டடிகளைச் சேரத்தக்க மார்க்கம் வாய்ந்த அச்சிறுவர்கள் வேகமாய்ச்சென்று அவ்வூரின்கணுள்ளார்க்குக் கூறினர்.—எ - று.

அக்கடற்கரை மணலின்கண் இவ்வாறு அநேகமுறை மறைந்துமறைந்து வெளிப்பட்டனராகலின், "பன்முறை யித்தன்மைத் தாம் படிபடிமணலிற் காட்டி." என்றும், பட்டினத்துப்பிள்ளையாரென்னும் திருநாமந்தாங்கிய திருமேனியே அம்மணலினிடத்துச் சிவலிங்கவுருவாகத் தோன்றியதென்பார், "முன்னிய பட்டினத்து முனைத்தவ வடிவந்தானே - செந்நெறியி லிங்கமாகிச் செழுமணறனின் முளைத்தார்." என்றும், இதுகண்ட சிறுவர்களச்சமுற்று அங்குநில்லாமலோடி ஊராருக்குரைத்தனரென்பார், "சிறார்களோடிப் புரத்துளார்க்குரைத்தார்." என்றும் கூறினர். சிவலிங்கார்ச்சனையே சர்வான்மாக்கட்கும் செவ்விதாகிய முத்திநெறியைப் பாலிப்பதாகலின், "செந் நெறியிலிங்கம்." என்றாரெனினுமாம். (கஈ௨)

ஒற்றியூ ருழியுள் ளாரு மற்றுள புரியு ளாரும்
பற்றியூர்ந் தடைந்து கண்டார் பட்டினக் கடவு ளாரை
வெற்றியூர் மூன்றுஞ் செற்ற விமலரே யிவரா மென்றார்.
பெற்றியூ ரதிச யத்தின் பெருமையா ருரைசெய் வாரே.

(இ-ள்.) திருவொற்றியூரின்கணுள்ளாரும் மற்றும்அதைச்சூழ்ந்திருக்கின்ற ஊர்களிலுள்ளாரும், பட்டினத்துப் பிள்ளையாரென்னும் திருவெண்காட்டடிகளைத் தரிசிக்கவேண்டுமென்பதைக் கடைப்பிடியாகப் பிடித்து வாகனங்களிலேறிச் சேர்ந்து தரிசித்தார்கள். திரிபுரங்கள் மூன்றையும் தகித்தருளிய வெற்றியுடைய சிவபிரானே இத்திருவெண்காட்டடிகளாகும் என்றுரைத்தார்கள். இத்தன்மையான அத்திருவொற்றியூரில் விளைந்த அதிசயத்தின் பெருமித்தத்தை உரைக்கவல்லார் யார்?—எ - று.

திருவொற்றியூரின்க ணுள்ளார்க்கும் அவ்வூரினருகிற் சூழ்ந்துள்ள ஏனைய ஊர்களிலுள்ளார்க்கும் இச்செய்தி எட்டிவிட்டமையின், அவ்வூரின்கணுள்ளார் கால்நடையாகவும், ஏனைய ஊர்களிலுள்ளார் வாகனங்களின்மீதூர்ந்தும் வந்து தரிசித்தார்களென்பார், "ஒற்றியூருழி யுள்ளாரு மற்றுள புரியுளாரும்-பற்றியூர்ந் தடைந்துகண்டார் பட்டினக்கடவுளாரை," என்றும் திருமேனியுடன் மணற்குள் மறைந்து சிவலிங்கமாக விளங்குதல் சிவவர்க்கத்திற் சேர்ந்தார்க் கியலாதாகலின், அவர் திரிபுரதகனராகிய சிவபிரானே எனநிச்சயித்தார்களென்பார், "வெற்றியூர் மூன்றுஞ் செற்றவிமலரேயிவராமென்றார்." என்றும், இத்தகைய அற்புதம் அத்திருவெண்காட்டடிகட்கு ஏனையதலங்களிற் சித்தியாது இத்திருவொற்றியூரிற் சித்தித்தலால், பெற்றியூ ரதிசயத்தின் பெருமையாருரை செய்வார். ,,என்றும் கூறினர். இத்தலம் அத்தகைய சிறப்புடைத்தென்பதை, " கண்டங் கரியதாங் கண்மூன் றுடையதா மண்டத்தைப் போல வழகியதாந்

'கொண்ட-ருடலுருகத் தித்திக்கு மோங்கு புக ழொற்றிக் கடலருகே நிற்குங் கரும்பு'' எனவும், ''ஒவிழுந்து சிப்பாயு மொன்பதுவாய்ப் புண்ணுக்-கிடுமருந்தை யானறிந்து கொண்டேன் - கடு வருந்துந்-தேவாதி தேவன் றிருவொற்றி யூர்த்தெருவிற்-போவா ரடியிற் பொடி.'' எனவும் வாவியெல்லாந் தீர்த்த மண்ணெல்லாம் வெண்ணீறு-காவனங்களெல்லாங் கணநாதர்-பூவுலகி-லீது சிவலோக மென்றென்றே மெய்த்தவத்தோ-ரோதுந் திருவொற்றியூர்.'' எனவும்வருந்திருவெண்காட்டடிகள் திருவாக்கானுந்தெளிக (கூகூ)

மலர்மழை பொழிந்த வெங்கும் வானதுந் துமிமு ழங்க
நலமலி கணங்கள் சூழ நாகநாட் டரம்பை மார்கள்
பலநடம் பயிலப் பூவிற் பாவையா ரடியர் பாட
விலகிய விதழி மாலை யீசனுக் கணிந்தா ரன்றே.

(இ-ள். இவ்வாறு நிகழ்ந்தவளவில் எவ்விடத்தும் புட்ப வருஷங்கள் வருஷித்தன தேவதுந்துபி கோஷிக்கவும், நன்மை விசேடித்த சிவகணங்கள் புடைசூழவும் தேவலோகத்துள்ள அரமகளிர்கள் பலவகையான நடனமாடவும், நிலவுலகத்திலே மகளிர்களும் அடியார்களும் துதிக்கவும், அங்கு வந்தவர்களனைவரும் சிவபெருமானாக விளங்கிய திருவெண்காட்டடிகட்குப் பிரகாசமுள்ள கொன்றை மலர்மாலையைத் தரித்தார்கள்:—எ-று

திருவெண்காட்டடிகள் சிவலிங்கவுருவாக விளங்கியவுடனே வானுலகும் மண்ணுலகும் களிப்பெய்தினவாகலின், தேவருலகத்துள்ள அரமகளிர்கள் தேவதுந்துபி முழங்கவும் சிவகணங்கள் சூழவும் புட்பவருஷங்கள் பொழியவும் ஆனந்தமேலீட்டால் நடனமாடினார்களெனவும், அவ்வாறே நிலவுலகத்தினும் மெய்யன்புவாய்ந்த மகளிர்களும் ஆடவர்களும் தோத்திரஞ் செய்து சிவமாக விளங்கிய திருவெண்காட்டடிகட்குக் கொன்றை மலர்மாலை யணிந்தனரெனவும் கூறினர் இதனானன்றே, ''உன்னு கின்றனை யுனைம னோர் பெரியனென் றுணருமா செயவுன்பான் - மன்னு மீசனே பந்தம்வீ டளிப்பவன் மற்றைய ரறிந் தென்று-மன்ன வன்றிருப் பொன்னடி கரியதா வநந்தவஞ் செய் நெஞ்சே - பின்னோ முன்னவ னுறகறிந் திறைஞ்சுமா பெருமைசெய் குவனேமோ, எனச் சாந்த லிங்கசுவாமிகளும் திருவாய்மலர்ந் திருக்கின்றனர்,

புகுவார் வார்த்தை நாத்தகவாப் புவனத் துள்ளு மந்தரத்து
மகிழுந் தேவ ருலகுள்ளு மணிநீர் வேலி ஞாலத்துந் [தார்
தகுவோர் கேளா விவர்பேறு தமக்கும் வருமோ வெனக்களித்
தகையா நீறப் புரமூன்று மெரித்தார் பெருமை நவில்வார்யார்.

(இ-ள்.) திருவெண்காட்டடிகளைத் தரிசித்துச் செல்வோர்களின் சொற்களை, சொல்லுவோர் நாவின் தகைமையினாலே, பாதாளலோகத்தினும்

ஆகாயத்தினும் மகிழ்ச்சியுற்றிருக்கும் தேவலோகத்தினும், அழகிய கடனீரை யே வேலியாகவுடைய நிலவுலகத்தினும் தகுதியுடையோர்கள் கேள்வியுற்று, இத் திருவெண்காட்டடிக ளடைந்த முத்திப்பேறு தங்களுக்கும் கிடைக்குமோ என்று மகிழ்ந்தார்கள். திரிபுரங்களும் நீறாகும்படி சிரித்தெரித்த சிவபிரானு டைய புகழை எவர் கூறுவர்.—எ-று.

ஓர்செய்தியைக் கேள்வியுற்றபோது, அச்செய்திக்குரியார் தன்மை யையும், அதைக் கூறினோருடைய தன்மையையும் உணர்ந்தபிறகே அதை நிச்சயமாகக் கொள்ளவேண்டுமாகலின், "புகுவார்வார்த்தை நாத்தகவாக்கே ட்டு." என்றும், சொர்க்கம மத்தியம் பாதலம் என்னும் மூன்றுமே திரிலோ கங்களாயினும், சொர்க்கத்திற்கும் மத்தியத்திற்கும் இடையே அந்தர வாசிக ளாகச் சிலரிருத்தலின் அவர்களும் இச் செய்தியைக் கேள்வியுற்றனரென்பார், "புவனத்துள்ளு மந்தரத்து-மகிழ்ந்தேவருலகுள்ளு மணிநீர்வேலி ஞாலத்தும்." என்றும் மேற்சொன்ன உலகங்களிலுள்ளாரனைவரும் இச் செய்தியைக் கேள் வியுற்றாரேனும் அவருள் தகுதியமைந்தார் மாத்திரமே இப்பேறு நமக்கும் வருமோ எனக் கருதிக் களித்தாரென்பார், "தகுவோரிவர் பேறு தமக்கும்வரு மோ வெனக்களித்தார்," என்றும், இவ்வளவு அற்புதங்களும் சிவபிரான் திரு வருளாலே விளைந்ததாகலின், "நகைபாநீறப் புரமூன்று மெரித்தார் பெருமை நவில்வாரியார்." என்றும் கூறினர். கேள்வியுற்ற செய்தியை, அச்செய்திக் குரியார் தன்மையையும் அதனை யுரைத்தோர் தன்மையையும் உணர்ந்த பிறகே நிச்சயித்தல் வேண்டுமென்பதை, "எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினு மப்பொருண் - மெய்ப்பொருள் காண்ப தறிவு." என்னும் திருக்குறளானு முணர்க. (௧௬)

திருவம் பலமே முதலாய சிவத்தா னங்கள் பணிந்தனவு
மருவும் பொழுது திருவிசைப்பா வழுத்துந் திறமு மொற்றியூ
ரருளின் றிறத்தார் சிவலிங்க மான வாறும் பூம்புகார்
விரவுங் குலத்தா ரறிந்தோகை வெள்ளத் தழுந்தா மிதந்தெழுந்தார்

(இ-ள்.) இத் திருவெண்காட்டடிகள் இதற்கு முந்தி, சிதம்பரம் முத லிய சிவக்ஷேத்திரங்களை வணங்கினமையும், அவ் வத்தலங்களை யடையும்போ து ஆங்காங்குத் திருவிசைப்பா திருவாய்மலர்ந்தருளும் வல்லபத்தையும், திரு வொற்றியூரில் வந்து தியாகேசப்பெருமான் திருவருள் வல்லபத்தாற் சிவ லிங்கவுருவானதையும், காவிரிப்பூம்பட்டினத்திற் கலந்துள்ள இவ் வடிகளின் மரபாருணர்ந்து, உவகைப்பிரவாகத்தின் மூழ்கி மிதந்தவர்களா யெழுந்தார் கள்.—எ-று.

எனவே, திருவெண்காட்டடிகள் தமது அவதாரப்பட்டினமாகிய காவிரி ப்பூம் பட்டினத்தினின்றும் தமக்குரிய பெருஞ்செல்வத்தையும் உறவினர் நேயர் முதலியவரையும் காற்சோற்றிற் கண்டு கைவிட்டவராய்க் கடுந்துறவு பூண்டு வெளிப்பட்டதுமுதல், இவர் இத்தேயத்துள்ளார், இச் செயல்புரிகின்

றனர் என்பது முதலிய யாதொன்றும் அறியாராகிய இவ்வடிகளின் மரபினர் யாவரும், இவர் திருவொற்றியூர்க் கெழுந்தருளிச் சிவலிங்கவுரு வெய்திய பின்னர், சிதம்பரமுதலிய சிவதலயாத்திரை செய்துவந்ததும், ஆங்காங்கு திருவிசைப்பாக்கள் திருவாய்மலர்ந்துவந்ததும், இறுதியாகத் திருவொற்றியூரை யடைந்து சிவலிங்கவுருவெய்தியதும் கேள்வி யுற்ற அளவில் அடங்கா மகிழ்ச் சியுற்றுப் பரவசப்பட்டவராய்த் தெளிந்தனரென்பார், "பூம்புகார்விரவுங் குலத் தார்கிளைஞரை வெள்ளத்தழுந்தா மிதக்கெழுந்தார்." என்றனர். பெருந்துக் கத்திலும் பெருமகிழ்ச்சியேனும் ஒருவர்க்கெய்தின் அவர்கள் பரவசப்பட்டவர் களைப் பெருமூர்ச்சை யுறுத லியல்பாகலின், "வெள்ளத்தழுந்தா மிதக்கெழுந் தார்" எனினுமாம். (௧௮௬)

அழுவார் தொழுவார் சென்னியின்மே லங்கைத் தலவஞ் சலி முகிழ்ப்பார், வழுவா நமது குலத்தெய்வம் வருமோ காண வினி யென்பார், முழுவான் மதியின் கொழுந்தருளப் பெறுமோ வென்ன மொழிகின்றார், பொழுதோ டிவண்விட்டவ்விடம்போய்ப்பணிவோ மென்பார் புண்ணியரே.

(இ-ள்.) அங்ஙனமுணரும் புண்ணியம் புரிந்தோராகிய சிலர் அழுவார்கள், சிலர் திசைநோக்கிப் பணிவார்கள், சிலர் தங்கள் சிரங்களின்மீது கரங்களைக் குவித்து அஞ்சலிபுரிவார்கள். சிலர் முறைபிறழாத நமது மரபி லவதரித்த தெய் வம் நாம் தரிசிக்கும்படி இனி வருமோ என்பார்கள். சிலர் அவருடைய ஒளியு ள்ள பூரண சந்திரன்போன்ற திருமுகமாத்திரமேனும் இவ்விடத்தில் எழுந்த ருளும்படி பெறுவோமோ என்றுரைக்கின்றார்கள், சிலர் இன்றைக்கே இவ்வி டம்விட்டு விரைந்துகொண்டு அத் திருவொற்றியூர்க்குச்சென்று வணங்குவோமெ ன்பார்கள்.—எ-று.

அங்ஙனமுணர்ந்துள்ள இவ் வடிகளின் மரபினர் முதலிய யாவரும் இச் செய்தியைக் கேள்வியுற்றபோதினும், அவருட் புண்ணியம் வாய்ந்துள்ள உத்தமர்க்கே இவ்வாறான ஆசையும் அன்பும் அபிமானமும் தோன்றிற்றென் பார், "என்பார்புண்ணியா." என்றனர். எனவே, ஆணவத்தடிப்பின் மேம் பட்டோர்க்கு அஞ்ஞானமென்றும் நீங்காதாகலின், அத்தகையோர்க்குக் கட வுளின் மெய்ப்புகழும் ஞானியர் சரிதமும் விருப்பமா யிராதென்பது கருத்து. இதனை, "வீணுரை கரும்புமீசன் மெய்யுரை வேம்பு மாக்குந் - தாணுவை யிறைஞ்ச லொட்டா தையலை யிறைஞ்சப்பண்ணு - நாணற விரத்தல் செய்யு நல்லவர்க் கீதல் செய்யா - வாணவ மலத்தின் செய்தி யிவ்வண மறிந்து கொள்ளே." என்னும் பதிபசுபாசவிளக்கத் திருவிருத்தத்தானும் தெளிக. அன்றியும், இப்புண்ணியர்கட்குள் வயோதிகப்பருவமுற்ற சிலர், ஐயோ! நமக்கு இவ்வாறு வாய்க்குமோவென் றழுதார்களென்றும், வேறு சிலர் நமக்கு இப்பேறு வாய்க்காவிடினும் அவரெய்திய திசையைநோக்கித் தியானித்துத் தொழுவோமாயின் அதற்குரிய புண்ணியமேனும் வாய்க்காதா என் றெண் ணித் தொழுதார்களென்றும், இன்னும் சிலர் சாஷ்டாங்கமாகப் பணியவும்

சத்தியற்ற நாமென் செய்வோம் இருந்தபடியே சிரமேற்காங்குவிக்கத்தான் கூடு மென்றெண்ணி அஞ்சலியஸ்த ராஞர்களென்றும், பெண்பாலாரா யுள்ளாரிற் சிலர், தாம் தனியே செல்லுதற்கு அருகர்களல்லராகலின், நமது குலதெய்வ மாகிய திருவெண்காட்டடிகள் இனியொருக்கால் நாம் காணும்படி எழுந்தருளு வரோ என்றுரென்றும், இன்னும் சிலர், அவர் திருமேனிகொண் டெழுந்தரு ளாவிடினும் அவருடைய முகமதியேனும் கண்டெழுந்தருளப் பெறுவமோ என்றுரென்றும், அவ்வாடவர்கள் மகளிர்களென்னும் இருவகுப்பினருள்ளும் வயது முதிரப்பெறுத வாலிபர்கள் யாவரும் இப்போதே இவ்விடம்விட்டு வெளிக்கொண்டு அவ்விடத்தடைந்து வணங்குவோம் என்றுர்களென்றும் கூறின ரெனினுமாம். (௧௩௭)

சொன்ன வண்ணங் கிளைகளொடுந் துழனி யார்ப்ப வப்பதியோ
ரன்ன பெரியோர் போனநெறி யவனி தலமேற் பலர்படர்வா
ரின்ன வாற்று லொற்றியூ ரிடத்தி லடைந்தார் சிவபெருமான்
றன்னைப் பணிந்திச் சிவபெருமான் றனையும் பணியா நிற்கின்றார்.

(இ-ள்.) மேற்கூறியவாறு அந்நகரத்தார் உறவினரோடும் செல்லும் கோஷ்டமானது ஆரவாரித்தலால், அத்தகைய பெரியோர் சென்ற வழியாக, நில வுலகத்துள்ள பலரும் செல்வார்கள். இம்மாதிரியாகத் திருவொற்றியூரென்னும் தலத்திற் சேர்ந்தவர்களாய்த் தியாகேசப்பெருமானை வணங்கிக்கொண்டு, சிவ லிங்கவுருவெய்திய திருவெண்காட்டடிகளாகிய சிவபெருமானையும் வணங்கி, எதிரிலே நின்றார்கள்.—எ-று.

சென்று வணங்கி வருவோமென நிச்சயித்த புண்ணியர்களனைவரும் அவ்வாறு புண்ணியம் வாய்த்த தங்கள் தங்கள் உறவினர்களோடும் களிப்புமீக் கூர்ந்து ஆரவாரித்துச் சென்றார்களென்பார், "கிளைகளொடுந் துழனியார்ப்ப." என்றும், அவர்கள் செல்லும்போது இடையிலுள்ள நகரத்தார் யாவரும் பின் றொடர்ந்தார்களென்பார், "அன்னபெரியோர்போன நெறியவனித்தலமேற் பலர்படர்வார்." என்றும்கூறினர்.

போற்றி போற்றி நின்னிரண்டு பூமென் கமலப் பதம்போற்றி
தேற்ற மருவும் பரநாதச் சிலம்பு போற்றி நலம்பயிலன்
மாற்ற-வரிய புலியதளின் மருங்குல் போற்றி நெருங்கரவந்
தோற்று முதர பந்தமுந்திச் சுழியும் போற்றி யெழில் போற்றி.

(இ-ள்.) அழகும் மேன்மையும் வாய்ந்த தாமரைமலர்போன்ற தேவரீரு டைய இரண்டு திருவடிகளும் துதிக்கப்படுவது. துதிக்கப்படுவது. துதிக்கப்படு வது. தெளிவமைந்த மேம்பாடுற்ற ஒலிவாய்ந்த சிலம்பு துதிக்கப்படுவது. நன் மைவிளங்குதல் மாற்றுதற்கரிதாகிய புலித்தோலணிந்த இடை துதிக்கப்படுவது. நெருங்கிய சர்ப்பங்கள் விளங்குகிற உதரபந்தனமும் அதன் கீழுள்ள நாபிச்சுழி யும் துதிக்கப்படுவது, அவற்றினழகும் துதிக்கப்படுவது.—எ-று.

பாநாதச் சிலம்பு என்பதற்கு மேலான ஒளிவடிவாயுள்ள வேதம்என்னும் சிலம்பு எனினுமாம். என்னை, வேதத்திற்கு எழுதாக்கிளவி எனத்திருநாமம் வாய்த்திருத்தலின். வேதமே சிலம்பாமென்பதை, "வேதகிண்கிணி சிலம்புசூழ் ந்தடிகளின் மிழற்ற - வோதரும் பத மூளரியூ றருண்மது வொழுகப்-போதவீ னந்த மதுநுகர்ந் தலர்முகம் பொலியப் - பாதபங்கய முபநிடப் பாதுகை சூட." என்னும் திருவிளையாடற் புராணத் திருவிருத்தத்தானுமறிக புலித்தோலான தன்னை யணிந்தோர்க்கு நன்மைபயப்பதும் அந்நன்மை மாறுபடாததுமாகலின் "நலம்பயிலன்மாற்றவரியபுலியதள்" என்றனர். புலித்தோல் சிவபிரானிடையி லணிந்துள்ளாரென்பதை, "அட்ட வேங்கைபீருரிவைகீண்டசைத்தகோவணமு மொட்டவீக்கிய புலியத ளநடுங்கையு மிடத்தோ - ளிட்ட யோகபட்டிகையும் பொன்னிடையிடை கட்டப - பட்ட கஃறுலி வேத்திரப் படைக்கையும் படைத்து," என்னும் திருவிளையாடற்புராணத் திருவிருத்தத் தானுமறிக.

புரிநூன் மார்பும் வெண்ணீறும் புயமீ ரைந்தும் புடைபோற்றி
வரியா ரரவம் வச்சிரம்வாள் மழுவோ டபயம் வலம்போற்றி
யரவார் பாசக் கயிறுமணி யனலங் குசத்தா ளிடம்போற்றி
கரவா திருக்குந் திருநீல கண்டம் போற்றி யொளிபோற்றி.

(இ-ள்) முப்புரியாக முறுக்கிய பூணுநூலணிந்த திருமார்பும் திருவெண்ணீறும் தசபுயங்களும் இருபாரிசங்களும் துதிக்கப்படுவது. வரிகளையுடைய அரவகங்கணமும் வச்சிராயுதமும் வாளும் மழுவும் அபயகரமும் பொருந்திய வலப்பாகம் துதிக்கபபடுவது. சர்ப்பகங்கணம் பாசகயிறு மணி அனல் அங்குசம் எந்திய உமாதேவியின் இடப்பாகம் துதிக்கப்படுவது, மறையாதிருக்கின்ற திருநீல கண்டம் துதிக்கப்படுவது' எ-று.

சிவபிரானைத் துதிப்போர் அவரிடப் பாகத்துள்ள உமாதேவியையம் ஒருங்குசேர்த்து அர்த்தநாரீசமூர்த்தமாகத் துதிப்பதும், அவ்வாறு துதிக்கின் ஞேர் கேசாதிபாதமாகவும் பாதாதிகேசமாகவும்துதிப்பதும்முறைமையாகலின் அர்த்தநாரீசமூர்த்தத்தைப் பாதாதிகேசமாகத் துதித்த துதி இஃதென்றுணர்க. இவ்வாறு துதித்தல் முறைமையென்பதை, "தோலுந்துகிலுங் குழையுஞ் சுருடோடும் - பால்வெள்ளை நீறும் பசுஞ்சாந்தும் பைங்கிளியுஞ் - சூலமுந் தொக்க வளையுமுடைத் தொன்மைக் - கோலமே நோக்கிக் குளிர்ந் தூதாய்கோத்தும்பீ." என்னும் மணிவாசகப்பிரான் மலர்வாக்கானும், "வலந்தான் கழலிடம் பாடகம் பாம்பு வலமிடமே - கலந்தான் வலநீறிடஞ் சாந்தெரி வலம் பந்திடமென் - பலந்தார் வலமிட மாடகம் வேல்வல மாழியிடஞ் - சலந்தாழ் சடைவலந் தண்ணங் குழலிடஞ் சங்கரற்கே." என்னும் சேரமான் பெருமாணயனார் திருவாக்கானும், சிவபிரானுக்குத் தசபுயங்களுளவென்பதை, "திகட சக்கரச் செம்முக மைந்துளான் - சகட சக்கரத் தாமரை நாயக - னகட சக்கரவின்மணியாவுறை விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்." என்னும் கந்தபுராணக் காப்புச்

செய்யுளானுமறிக. பூணுநூலென்பது ஒவ்வோர் புரிக்கு ஒன்பதிழைகளாக முறுக்கி அவ்வாருகிய மூன்றுபுரிகளை ஒருங்குசேர்த்தணிவதாகலின், "புரிநூல" என்றனர். இஃதிவ்வாறு முறுக்கி யணிவது முறைமை யென்பதை "ஒன்பதுகொண்டமூன்று புரிநுண்ஞாண்" என்னும் நக்கீரதேவநாயனார் திருவாக்கானுந் தெளிக. (௧௬௦)

நடுவு குடபாற் றென்றிக்கு நடக்கும் வடக்குக் கிழக்கிவற்றி
னடைவு படிகம் பொன்கருமை யரத்தம் பாலா முகம்போற்றி
முடிவி லாத முகங்கடொறு முக்கட் கமல மலர்போற்றி
சடையு முடியும் பொன்னிதழித் தாமத்தொடையுந் தனிபோற்றி.

(இ-ள்.) நடுவு மேற்றிசை தென்றிசை உலகத்தில் வழங்கும் வடதிசை கீழ்த்திசை என்னும் இத்திக்குகளில், முறையாகப் படிகநிறம்பொன்னிறம்கருநிறம் செந்நிறம் பானிறமாக விளங்கும் பஞ்ச முகங்களும் துதிக்கப்படுவன. அழிவற்ற அம்முகங்களிலெல்லாம் திரிநயனங்களாகிய தாமரைமலர்கள் துதிக்கப்படுவன. சடையும் திருமுடியும் பொன்போன்ற கொன்றை மலர்களாகிய மகத்துவமுள்ள மாலிகையும் தனித்தனி துதிக்கப்படுவது.—எ-று.

சிவபிரானுக்குரிய பஞ்சமுகங்களுள் கிழக்கிலுள்ளது தற்புருடமுகமென்றும், தெற்கிலுள்ளது அகோரமுகமென்றும், மேற்கிலுள்ளது சத்தியோசாத முகமென்றும், வடக்கிலுள்ளது வாமதேவமுகமென்றும், நடுவிலுள்ளது ஈசான முகமென்றும், இம்முகங்கட்கு முறையே பொன்மை கருமை வெண்மைசெம்மை படிகம் என்னும் பஞ்சவர்ணங்களுடைத்தென்றும், சிவாகமங்கள்கோஷித்தலின், "நடுவு குடபாற்றென்றிக்கு நடக்கும் வடக்குக்கிழக்கிவற்றி - னடைவு படிகம் பொன்கருமை யரத்தம் பாலமுகம்போற்றி." எனக்கூறினர். சிவபிரானுக்கு இத்தகைய பஞ்சமுகங்களுளவென்பதை, "தூய கண்மூன்றினோடு சுடரும்பொன் வதனநான்கும் - பாயுமான் மழுவினோடு பகர்வர தாபயங்கண்-மேய திண் புயங்களுநான்கு மிளிருமின் னனையதேசு - மாயதற் புருடனெம்மைக்குணதிசை யதனிற் காக்க" எனவும், "கறைகெழு மழுவுமானு மபயமுங் கண்ணினும - மறைதரு தொடையுஞ்செய்ய வங்கைகளுநான்குமேந்திப் - பொறைகொளுன் முகத்துமுக்கட் பொன்னிறமேனியோடு - மறைபுகழ் வாமதேவன் வடதிசை யதனிற் காக்க." "அங்குசங் கபாலஞ்சூல மணிவர தாபயங்கள்-சங்குமான் பாசமக்கந் தமருகங் கரங்களேந்தித் - திங்களிற் றவளமேனி திருமுகமைந்தும் பெற்ற - வெங்களீ சானதேவ னிருவிசும் பெங்குங்காக்க." எனவும் வரும் சிவகவசத் திருவிருத்தங்களாற் றெளிக. (௧௬௧)

சிவமொன் றாய சதாசிவமைந் தாகித் தெளிவு கூர்வோர்க்குப்
பவமாற் றவரு மகேசனெனப் பரவு முருவத் தைந்தாகி

**யவமாற் றியமெய்க் கடவுளுட ளுகும் பொருளே யடிபோற்றி**
**கவலா தெம்மைக் காக்கவருங் கருணை நிதியே யடிபோற்றி**

(இ-ள்) சிவம் என்னும் ஒன்றாயிருந்தும், சதாசிவ னீறாகிய பஞ்சமூர்த்திகளாகவும், தெளிவின் மேம்பட்டோர்க்குப் பிறவியைத் தவிர்க்க வருகின்ற மகேசமென்று துதிக்கத்தக்க அச்சதாசிவத்திலே ஐந்துருவமாகவும், ஆன்மாக்களின் துயரைப் போக்கியருளும் உண்மைக் கடவுளுடனொன்றாகும் வஸ்துவே! தேவரீர் திருவடி துதிக்கப்படுவது. கவலையுறாமல் எங்களைப்பரிபாலிக்க எழுந்தருளுகின்ற அருள்வைப்பே! தேவரீர் திருவடி துதிக்கப்படுவது.—எ-று.

ஏகமாய் நின்ற சிவபிரானே சிருட்டிக்கையில் பிரமனாகவும், திதிக்கையில் திருமாலாகவும, சங்கரிக்கையில் உருத்திரனாகவும், திரோபவிக்கையில் மகேச்சுரனாகவும், அனுக்கிரகிக்கையில் சதாசிவனாகவும்விளங்கலின், "சிவமொன்றாய சதாசிவமைந்தாகி." என்றும், அச் சதாசிவ மூர்த்தமாக விளங்குகையில், சுத்தவித்தை-ஈச்சுரம-சாதாக்கியம்-சத்தி-சிவம் என்னும் பஞ்சகலைகளாகிய உருவங்களுடைமையின், "மகேசமெனப்பரவு முருவத் தைந்தாகி' என்றும். இத்துதி அத்தகைய சிவத்துடன் கலந்த' திருவெண்காட்டடிகளுடையதாகலின், "அவமாற்றியமெய்க்கடவுளுடனாகும் பொருளே யடிபோற்றி." என்றும், அவ்வடிகள் தமது மாபிலவதரித்தனரொன்னும் உரிமை தோன்ற, "கவலாதெம்மைக் காக்கவருங் கருணைநிதியேயடிபோற்றி." என்றும் கூறினர். ஏகமாய் நின்ற சிவபிரானே பஞ்சமூர்த்திகளாயின னென்பதை, "அயன்றனை யாதியாக வரலுரு வென்பதென்னை - பயந்திடுஞ் சத்தியாதிபதிதலாற்படைப்பு மூல - முயன்றன ரிவரை யாயின் முன்னவ னென்னை முற்று - நயந்திடு மவனிவர்க்குநண்ணுவ னேதாரொ வொன்றுமே." எனவும், சுத்த வித்தை முதலிய கலைகளுடைமையை, "வித்தையோ டீசர் சாதாக் கியஞ்சத்தி சிவங்களைந்துஞ், சுத்ததத்-துவஞ்சி வன்றன் சுதந்தர வடிவ மாகு - நித்தமென்றுரைப்பர் காலநீங்கிய நிலைமை யாலே - வைத்திலர் முற்பிற்பாடு வருவித்தார் கருமத்தாலே" எனவும் வரும் சிவஞானசித்தித் திருவிருத்தங்களானும், "ஏகமான வுருவான நீயருளி னலநேகவுருவாகியே - யெந்தநா ளகில கோடி சிருட்டிசெய விசையு நாள்வரைய நாண்முதலாகநா ளதுவரைக்கு முன்னடிமை கூடவே ஜனன மானதோ - வனந்தமுண்டுநல் ஜனனமீ திதனு ளறிய வேண்டுவன வறியலா, மோக மாதிருபாசமானதை யறிந்துவிட் டெனையு முனையுமே - முழுதுணர்ந்துபர மான வின்பவெள மூழ்க வேண்டுமிது வின்றியே, தேகமேநழுவி நானுமே நழுவின் பின்னையுய்யும்வகையுள்ளதோ - தெரிவதற்கரிய பிரமமேயமல சிற்சுகோதய விலாசமே" என்னும் தாயுமானசுவாமிகள் திருவாக்கானும் தெளிக (கசஉ)

**என்று போற்றி மாபூசை யியற்றிப் பணிகள் பலபுரிந்து**
**மன்றல் கமழு மவ்வூரில் வசித்தார் சிலவ ரிவர்க்காக**

நன்றி பெருகு மிஞ்சியிசை நகரமதனி னினிதமர்ந்தார்
குன்றாச் செல்வ மிருமைக்கும் பெற்றார் சற்றுங் குறைவிலரே.

(இ-ள்.) என்று இவ்வாறாகத் துதித்து அத் திருவெண்காட் டடிகளாகிய சிவலிங்கப்பெருமானுக்கு விசேட பூசை செய்து அங்கியற்றவேண்டிய திருப்பணிகள் பலவற்றையு மியற்றி, அத் திருவெண்காட்டடிகட்காக மணங் கமழ்கின்ற அத் திருவொற்றியூரில் வசித்துக்கொண்டிருந்தார்கள். இன்னும் சிலர் நன்மை விசேடித்த மதில்களமைந்த அருகிலுள்ள நகரத்தில் இனிமையுடன் வசித்திருந்தார்கள். இவ் விரு வகுப்பினரும் இம்மை மறுமை என்னும் இரண்டிற்கும் குறையாத பாக்கியம் அடைந்தார்கள். அதனால் கொஞ்சமும் குறைவு பாடற்றவர்களானார்கள்—எ-று.

காவிரிப்பூம் பட்டினத்திருந்து வந்தவர்களாகிய திருவெண்காட்டடிகளின் மரபினர், தியாகேசப்பெருமானையும் திருவெண்காட்டடிகளையும் துதித்து முடிந்தபின், திருவெண்காட்டடிக ளாலயத்திற்குரிய திருப்பணிகள் பலவற்றையும் புரிந்து, அவ்வூரிலேயும் அதற்கடுத்த நகரத்திலேயும் வசித்திருந்தார்கள். இவ்வாறு அவ்வடிகட்கேற்ற திருப்பணிகளியற்றி முடித்தமையின் அவ் விருவகுப்பினரும் இம்மை மறுமைப் பயன்களை எய்தப் பெற்றவர்களாய்க் குறைவற்றவர்களானார்கள் என்றபடி.

வேறு

அருளாகி லிங்க மானவன்பர்தங் கதைகேட்போர்க்
கிருளருஞ் செல்வ மல்கு மென்றுநன் னலங்க ளோங்கும்
பெருமையு மறிவு மென்றும் பிறங்கிய கதியு மாகுந்
திருமகள்கலைம கள்கை சேர்வதுந் திண்ண மாமே.

(இ-ள்.) யாவர்க்கும் திருவருள்பாலிக்கும் சிவலிங்கவுருவடைந்த திருவெண்காட்டடிகள் சரித்தையை, சிரவணிப்போர்க்கு, அஞ்ஞானம் நீங்கும், மெய்ஞ்ஞானச்செல்வம் ஓங்கும், எப்போதும் நன்மைப்பயன்களே வாய்க்கும், மேம்பாடும் உண்மையறிவும் எக்காலமும் விளக்கமுற்ற முத்தியின்பம் உண்டாகும். இலக்குமி சரஸ்வதி என்னும் இவ் விருவாருளும் கைகூடுவதும் நிச்சயமாகும்.—எ-று.

எனவே திருவெண்காட்டடிகளின் திவ்ய சரிதையைச் சிரவணிப்போர்க்கு, முதலில் அஞ்ஞானநீக்கமும், அதனால் மெய்ஞ்ஞானோதயமும், அம்மெய்ஞ்ஞானோதயத்திற்கு இடையூறின்றி நன்மைப்பயன்களும், அந் நன்மைப்பயன்களிலே விருப்பமேலிட் டழுந்தாதபடி உண்மையறிவும், கடைசியாக முத்தியின்பமுமாகிய பரசுகானுபவமும், கல்வி செல்வமென்னும் இருவகையான இகசானுபவமும் விளையுமென்பதாம், சிவசரிதமும் சிவனடியார் சரிதமு மொன்

ருகலின், சிவசரிதச் சிரவணிகட்குக் கூறியுள்ள இகபர சுகானுபவங்களையே இச் சரிதத்தைச் சிரவணிப்போர்க்கும் பயனாகக் கூறினர். சிவசரிதச் சிரவணிகட்குரிய பயன்களு மிவ்வாறென்பதை, "திங்களணிதிருவால வாயெம்மண்ணல் திருவிளையாட் டிவையன்பு செய்து கேட்போர்-சங்கநிதிப் பதுமநிதிச் செல்வ மோங்கித் தகைமையுறு மகட்பெறுவர் பகையை வெல்வர் - மங்கலநன் மணம்பெறுவர் பிணிவந் தெய்தார் வாணாளு நனிபெறுவர் வானு டெய்திப் - புங்கவரா யங்குள்ள போக மூழ்கிப் புண்ணியராய்ச் சிவனடிக்கீழ் நண்ணி வாழ்வார்." என்னும் திருவிளையாடற்புராணத் திருவிருத்தத்தானுந் தெளிக. (கசச)

துறவறச்சருக்கம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் - ௩௩௬.

---

பட்டணத்துப்பிள்ளையார் புராணம்.

முற்றுப்பெற்றது.

திருநக்ஷத்திரக் குறிப்பு

நேரிசை வெண்பா.

மண்ணுலகை பொன்னுலகை மாதாவை நீத்தருள
உண்ணுமுடி யோற்றி யுயர்பதியில்—பண்ணாது
நாடிலிங்க மாய்ப்பட்டி னத்தடிக ளானதினம்
ஆடியுத்தி ராடநா ளாம்

சென்னைக் கிறிஸ்டியன் காலேஜ் தமிழ்ப்பண்டிதரும்
உரையாசிரியரும் சைவப்பிரசாரகருமாகிய
ஏக்காடு. இரத்தினவேலுமுதலியாரவர்களியற்றியது.

உ

சிவமயம்.

# முகவுரை

" நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்
வானின் றமையா தொழுக்கு "

எனத் திருவள்ளுவநாயனார் திருவாய்மலர்ந்தவாறு என்றும் வற்றாக் காவிரியென்னும் ஜீவநதியால் நீர்வருவாயுடைமையின் நீர்நாடென்றும், அதனால் விளையும் வளப்பங்கள் யாவுமுடைமையின் வளநாடென்றும் எவராலும் புகழப்பெற்று, ஔவைப்பிராட்டியாரமுதவாக்கினால், "சோறுடைத்து" என்றோதப்பெற்ற சோழநாட்டின்கண்ணுள்ள காவிரிப்பூம்பட்டினத்தில் அளகையர்கோன் அவதாரராய்த் திருவுருக்கொண்ட திருவெண்காட்டடிகளின் திவ்ய சரிதத்தை, இற்றைக்குச் சற்றேறக்குறைய ஐந்நூறு வருடங்கட்கு முன்னரே, சிதம்பரத்தில் வசித்திருந்த சைவாதீனத் தம்பிரானொருவர் அத் தலவாசிகளாகிய பல பெரியோர்களின் வேண்டுகோட் கிணங்கி, கர்ணபரம்பரையாகத் தாமுணர்ந்துள்ள வரையில் ஞாபகப்படுத்தி ஒருவாறு தொகுத்து மூந்நூற்றுமுப்பத்தாறு செய்யுட்களால் பூம்புகார்ச்சருக்கம் ஆட்கொண்டசருக்கம் துறவறச்சருக்கம் என்னும் மூன்று சருக்கங்களடங்கிய புராண மொன்றியற்றினர். அப்புராணம் அன்றுமுதலின்றுகாறும் இந்நாட்டினும் அத்திருவெண்காட்டடிகளின் அவதார நாடாகிய தென்னாட்டினும் மற்றெந்நாட்டிலும் விசேட மதிப்பாகவே வழங்கிவருகின்றது. இஃதிங்ஙனமாக, அப் புராணத்தை, மகாகனம்பொருந்திய இயற்றமிழாசிரியர் விசாகப்பெருமாளையரவர்கள் முதன்முறை செவ்வனே அச்சிட்டு வெளிப்படுத்தினர். அப் பதிப்பு செலவாய் வெகுவருடங்களானபிறகு, கல்விசாலாச்சிலர் அதை அச்சிடத் தொடங்கிச் செய்யுட்குரிய எழுத்து அசை சீர் தளைமுதலியவற்றைச் சற்றுங் கவனியாமலும் பொருணோக்கமில்லாமலும் பலவாறு ஆபாசப்படுத்தி அச்சிட்டுப் பரவுவித்தார்கள். பிரதமப் பதிப்பு கிடைக்காமையின் இப் பதிப்பை வாங்கத் தொடங்கினோருட் கல்வி சான்றோரும் அச் செய்யுட்களின் பிழைபாடுகளைத் திருத்திப் பொருள்கொள்வ தருமையாயிருந்ததென்னின், ஏனையோர் அச் செய்யுட்களின் பொருளுணரா தலமந்திருந்தார்களென் றறையவும் வேண்டுமோ? இவ்வாறு தெருமாலுறுவாறு திருத்தித் தெளிவான பொழிப்புரையொன் றெழுதி யச்சிட்டு வெளிப்படுத்தின் மிக்க பேருபகாரமாகுமென் றெம்மைப் பலவாண்டுகளாகப் பலர் பன்முறை கேட்டுக்கொண்டதோடு, இப்போது இப்புராண வுரைப்பதிப்புக்குத் தலைவராகிய ம௱௱-ஸ்ரீ. குமாரவேலாயுதமுதலியாரும் யாம் தடுத்துரைத்தற் கேலாதவர்களைக் கொண் டெமக் குரைப்பித்துக் கேட்டுக்கொண்டதால், மேற்குறித்த முதற்பதிப்பையும் அதற்கும் முந்திய ஏட்டுப்பிரதியையும் சேகரித்து, அவற்

றன்றுங்கனைப்பழுதாலும் பராமரிக்கைக் குறைவாலும் எழுத்துப்பிழைகளாலும் நேர்ந்திருந்த வழுஉக்களைத் திருத்தி, எமது சிற்றறிவிற் கெட்டியவரையில் ஓர் பொழிப்புரையெழுதி, அதற்குரிய விசேடணங்களும் உதாரணங்களும் விளக்கி, ஷை குமரவேலாயுதமுதலியாருக்குக் கொடுக்க, அவர் அச்சிட்டுச் சஞ்சிகைரூபமாய் வெளிப்படுத்தினர்.

இங்ஙனமாக, பெரியோர் பாடல்களிற் பிற்காலத்து நேர்ந்த பிழைபாடுகளைத் திருத்திப் பிரபலப்படுத்துவதே பெரும புண்ணியமென்றும், நல்லோர் பாடலை நாசமாக்கி நவீனப்பாடல் சேர்த்தல் நலமல்லவென்றும் கருதி மனங்கரையாராகிய ஓர் புலவர் அப்புராணபாடல்களுட் சிலவற்றை, நீக்கியும், சிலவற்றைத் திருத்தியும், நூதனப் பாடல்கள் பலவற்றைச் சேர்த்தும், பதவுரையெழுதி, இலக்கணக்குறிப்பு விசேடணம் உதாரணமென்னும் இவற்றுடன் அச்சிட்டுச்சஞ்சிகை ரூபமாய் வெளிப்படுத்தத் தொடங்கி இற்றைக்கு இரண்டு சஞ்சிகைகள் வெளிப்படுத்தினர். எமது அபிப்பிராயமாவது சிறந்த மகானாகிய திருவெண்காட்டடிகளைக் குறித்த புராணம் செய்யுள்ரூபமாயிருத்தலாலும், அச்செய்யுட்களுள் பலவகைப் பிழைபொதிந்த பதப்புடையதாயிருத்தலானும், இச்செய்யுட்களை அவ்வப்பா இனங்கட்குரிய எழுத்து சீர் தளை எதுகை மோனை என்னும் இவைகள் பிழைபறத் திருத்தி, அப்புராணாசிரியரின் கருத்து வாசிப்போர்க்கு நன்கு விளங்கச்செய்தற் கேற்ற பொழிப்புரை எழுதி, அதற்கு விசேடணங்களும் உதாரணங்களும் விரித்துக் காட்டவேண்டுமென்பதே. அவ்வபிப்பிராயத்தை எமது புன்புலமைக்குப் பொருந்தியவாறு பூர்த்திசெய்தேம். எம்மினும் மிக்க அறிவுடையோர் இதன்கண்ணுள்ள பிழைகளைப் பொறுத்தல் கடமையாகலானும் எம்மையொத்தோரும் எம்மினிழிந்தோரும் எம்மைக்குறை கூறுராலாகலானும், இதிற் பிழை கூறுவாரிலரென்பதுந்தேற்றமே. முடிவாகக் கூறுமிடத்து, முன்னோர்களாகிய சிறந்த வித்வசிரோமணிகளா லங்கீகரித்த தச்சிட்டு வெளிப்படுத்தப்பட்டு வழங்கிவந்த (திருவெண்காட்டடிகள் புராணச்செய்யுட்கள் முழுமைக்கும் உரை வேண்டுவோர், இப் பதிப்பின்றி அப்பதிப்பினையடையார்) இதனை நன்குணர்ந்து பழமை பாராட்டும் பண்பாளரியாவரும் இப்பதிப்பையே நன்கு மதித்துக் கடைப்பிடியாகக்கொண்டு வாங்கி வாசித்துப் பயனடைவார்களென்று நம்புகின்றேம்.

இங்ஙனம்,

தி. வடிவேலு.

அன்பர்களே!

சஞ்சிகை ரூபமாக வெளியிட்ட முதற்பதிப்பு முற்றுஞ் செலவாய்விட்டமையாலும், பலர் இன்னும் பிரதிகள்வேண்டுமென விரும்புவதாலும், திருப்பாதிரிப்புலியூர் ஞானியார்மடம் ஸ்ரீலஸ்ரீ. சிவஷண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய ஸ்வாமிகளும் இப்புராணத்தை இரண்டாமுறை அச்சிட்டால் பலருக்கும் உபயோகப்படும், பெரும் உபகாரமாயிருக்கும் என்று உத்தரவு அளித்தமையாலும், இவ்விரண்டாம்பதிப்பு பதிப்பிக்கலாயிற்று. இதில் 75 - ரூபாய் சிதம்பர நடராஜப் பெருமான் காலை சந்திக்கட்டளைக்கு உபயோகமாக கொடுக்கப்பட்டன.

S. R. குமாரவேலாயுத முதலியார்.